# வருடாந்த செயலாற்றல்

# அறிக்கை – 2013

**விவசாயத் திணைக்களம்**

**பேராதனை**

**இலங்கை**

**பதிப்பு**

விவசாயத் திணைக்களம்
பேராதனை
இலங்கை
2014

இலங்கை, பேராதனை விவசாயத் திணைக்கள முன்னேற்ற கண்காணிப்பு மதிப்பீட்டுப் பிரிவினால் இவ்வறிக்கை தொகுக்கப்பட்டு விவசாய வெளியீட்டுப் பிரிவில் அச்சிடப்பட்டது.

சிறிய பந்திகளை விமர்சிக்கவும், மதீப்பீடு செய்யவும், மேற்கோள் காட்டுவதையும் தவிர ஏனைய உரிமைகள் யாவும் ஆக்கியோருடையதே. விவசாயப் பணிப்பாளர் நாயகத்திடம் முன் அனுமதியின்றி இவ்வறிக்கையின் எப்பகுதியையும் மீள் பிரசுரிக்கவோ, அல்லது நிழற்படப் பிரதியெடுக்கவோ அல்லது இலத்திரனியல் முறையாக சேமிக்கவோ கூடாது. வர்த்தக நோக்கமற்ற விடயங்களுக்கான அனுமதி சரியான காரணமின்றி நிராகரிக்கப்படமாட்டது. இலங்கை விவசாயத் திணைக்களம், வர்த்தக நோக்கமற்ற விடயங்களுக்கு இவ்வறிக்கையைப் பயன்படுத்துவதற்குக் கட்டணம் அறவிடுவதில்லை. விவசாய ஆராய்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது என நாம் நம்புகின்றோம்.

## தூர நோக்கு

தேசத்தின் சுபீட்சத்துக்காக விவசாயத்தில் உன்னத நிலையை அடைதல்

## பணிக்கூற்று

மேம்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்து பரவலாக்குவது தொடர்பான சேவைகளை விவசாயிகளை முன்நிலைப்படுத்தி அதன் சகல பங்குதாரர்களுக்கும் பெற்றுக் கொடுப்பதன் மூலம் தேசத்தின் உணவுப் பாதுகாப்பையும் போஷணைப் பாதுகாப்பையும் உத்தரவாதப்படுத்திய நிலைபேறானதும் சமநிலையானதுமான விவசாய அபிவிருத்தியை எய்துதல்.

# பணிப்பாளர் சபை -2014

கலாநிதி. R.R.A.விஜேகோன் (பணிப்பாளர் நாயகம்)

திரு. W.G.M.G.தயாவன்ச (மேலதிக பணிப்பாளர் நாயகம், அபிவிருத்தி)

கலாநிதி. E.M.தசநாயக்க (மேலதிக பணிப்பாளர் நாயகம், ஆராய்ச்சி)

திருமதி. H.P.D.M.சரத்சந்திர (மேலதிக பணிப்பாளர் நாயகம், நிர்வாகம்)

திரு. T.H.C.S பெரேரா (பணிப்பாளர், சமூக பொருளியல் பொருளாதார திட்டமிடல் நிலையம்)

திரு. D.J.L சுனில் கோவின்ன (பணிப்பாளர், விதை மற்றும் நடுகைப் பொருள் நிலையம்)

திரு. K.B.வகுன்தெனிய (பணிப்பாளர், பூங்கனியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம்)

கலாநிதி. W.M.A.D.B.விக்ரமசிங்ஹ (பணிப்பாளர், இயற்கை வள முகாமைத்துவ நிலையம்)

திரு. S.Wஅபேகேசர (பணிப்பாளர், நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம்)

கலாநிதி. W.M.W.வீரகோன் (பணிப்பாளர், வயற்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம்)

திரு R.S விஜேசேகர (பணிப்பாளர், விரிவாக்கற் பயிற்சி நிலையம்)

கலாநிதி. H.M.S.ஹீன்கெந்த (பணிப்பாளர், பழப்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம்)

திரு. W.A.G சிசிர குமார (பணிப்பாளர், தகவல் தொடர்பாடல் நிலையம்)

திரு. பராக்கிரம பிரேமரத்ன (பிரதம கணக்காளர்)

திரு. M.H.M.A பண்டார (பிரதம பொறியியலாளர்)

திரு. உபாலி ரணவக்க (பணிப்பாளர், நிருவாகம்)

**ஆலோசகர்**

திரு. W.G.M.G.தயாவன்ச

**ஒருங்கிணைப்பாளர்**

P.C பீரிஸ்

**சரிபார்த்தவர்**

R. சிவநேசன்

**பக்க வடிவமைப்பு**

A. தேவமலர்

**மொழி பெயர்ப்பாளர்கள்**

P. பெரியசாமி

R. சிவநேசன்

குமுதினி சந்திரகாந்தன்

சுகந்தனி செந்தில்குமரன்

சுதாஷினி சஞ்சீபன்

S. ரினூஸ்

N. ரவிச்சந்திரன்

**முகப்பு வடிவம்**

கட்புல, செவிப்புல நிலையம்

# பொருளடக்கம்

முன்னுரை........................................................................................................................................vi
1.1 வயற் பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் (FCRDI), மஹாஇலுப்பள்ளம.............................................1
1.1.1 தானிய அவரைகள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (GLORDC), அங்குனுகொலபலஸ்ஸ ............................................................................................... 18
1.1.2 பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (சுயுசுனுஊ)இ அரலகன்வில .......................... 28
1.1.3 பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் (RARDC), கிளிநொச்சி ................................ 34
1.2 பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ர்ழுசுனுஐ)இ கன்னொறுவை........................ 38
1.2.1 உணவு ஆராய்ச்சி பிரிவு (FRU), கன்னொறுவை............................................................................. 66
1.2.2 பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் (RARDC), பண்டாரவளை ............................ 71
1.2.3 பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (RARDC), மாக்காந்துறை ................... 78
1.2.4 விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (யுசுனுஊ)இ சீதாஎலிய ..................................................... 87
1.2.5 விவசாய ஆராய்ச்சி நிலையம் (யுசுளு)இ - தெலிஜ்ஜவில ................................................................ 96
1.2.6 விவசாய ஆராய்ச்சி நிலையம் (யுசுளு) – கிராந்துருக்கோட்டை ......................................................... 102
1.3 பழ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (FRDI), ஹொரண ........................................................ 106
1.3.1 பழப்பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (FCRDS), கன்னொறுவை ................................ 125
1.3.2 தாவர வைரசு சுட்டியிடல் நிலையம் (PVIC), ஹோமாகம................................................................ 131
1.4 நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (சுசுனுஐ)இ பத்தலகொட ............................................. 140
1.4.1 பிராந்திய நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (RRRDC), போம்புவளை.................................... 165
1.5 இயற்கைவள முகாமைத்துவ நிலையம் (NRMC), பேராதனை ............................................................... 173
2.1 விதை அத்தாட்சிப்படுத்தல் மற்றும் தாவரப் பாதுகாப்பு நிலையம் (SCPPC), கன்னொறுவை................. 188
2.1.2 தாவரப் பாதுகாப்புச் சேவை (PPS), கன்னொறுவை.......................................................................... 211
2.1.3 பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலகம் (ROP) பேராதனை .......................................................... 217
2.1.4 தாவரப் பிறப்புரிமை மூலவள நிலையம் (PGRC), கன்னொறுவை ........................................................ 230
2.2 தேசிய தாவரத் தடுப்புக்காப்புச் சேவை (ரேஙளு)இ கட்டுநாயக்க ............................................................ 237
2.3 விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையம் (SPMDC), பேராதனை ....................................... 244
2.4 சமூக பொருளாதார திட்டமிடல் நிலையம் (SEPC), பேராதனை ............................................................ 260
3.1 விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிலையம் (ETC), பேராதனை ................................................................... 266
3.2 தகவல் மற்றும் தொடர்பாடல் நிலையம் (ICC), பேராதனை.................................................................. 293
4.1 நிர்வாகப் பிரிவு பேராதனை................................................................................................................ 305
4.2 பொறியியல் பிரிவு – பேராதனை ......................................................................................................... 312
4.2.1 பண்ணை இயந்திரமயமாக்கல் ஆராய்ச்சி நிலையம் (குஆசுஊ)இ மகாஇலுப்பள்ளம.......................... 318
4.3 நிதிப் பிரிவு பேராதனை ..................................................................................................................... 322
4.4 முன்னேற்றக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலகு (PMEU), பேராதனை ......................................... 326
5.காலநிலை அறிக்கை ..............................................................................................................................333
6. வெளியீடுகளும் வெளிப்படுத்தல்களும்.................................................................................................346
7. விவசாயத் திணைக்கள சிரேட அலுவலர்கள் (2013.12.31 இற்கு ஏற்ப)................................................... 356
8.தொழில்ல்நுட்ப அலுவலர்களின் தகைமைகள (2013.12.31 இன்படி)...........................................................379
9. அலுவலர் விபரம் (2013.12.31 இன்படி) ..............................................................................................380

# முன்னுரை

இலங்கையின் விவசாயத் துறையின் அபிவிருத்தியை தலையாய கடமையாகக் கொண்டு 100 வருடங்களுக்கும் மேலான பெருமை வாய்ந்த வரலாற்றுடன் இயங்கி வருகின்ற ஒரு முக்கிய நிறுவனம் விவசாயத் திணைக்களம் ஆகும்.

இவ்வருடாந்த செயலாற்றல் அறிக்கையானது விவசாயத் திணைக்களத்தின் 10 தொழில்நுட்ப பிரிவுகள் மற்றும் மூன்று உதவிச் சேவைப் பிரிவுகள் ஆகியவற்றால் 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை வெளிப்படுத்துகின்றது. இவ்வறிக்கையில் காணப்படுகின்ற தகவல் கொள்கை வகுப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சட்டம் இயற்றுபவர்கள் போன்றோருக்குத் தமது எதிர்காலத் திட்டமிடலை மேற்கொள்ளவற்கு பெரிதும் உதவி புரியும்.

விவசாயத் திணைக்களமானது 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 3,977 மில்லியன் ரூபாய்களை மொத்த நிதி ஒதுக்கீடாகப் பெற்றிருந்தது. இதில் 450 மில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமான தொகையானது விதைக் கொள்வனவு, விதை உற்பத்தி மற்றும் பண்ணைகளின் அபிவிருத்தி ஆகியவற்றுக்கு நேரடியாகச் செலவிடப்பட்டது. ஆண்டு தோறும் தொடர்ச்சியான உற்பத்தி, வெள்ளைப் பொலித்தீன் கூடார விவசாயம், விவசாயத்தை இலாபரமானதாக மாற்றுதல், சூழல் நேய உயர் தொழில்நுட்ப இளம் சந்ததியினரைக் கவரும் விவசாயம் ஆகியவற்றை அடையும் நோக்குடன் பசுமைப் புரட்சியில் இருந்து வெண்மைப் பரட்சியினுள் முன்னேறுவதற்காக தற்போது விவசாயத் திணைக்களம் காலடி பதித்துள்ளது. இந்நோக்கங்களை அடையும் பயணத்தில் 3 புதிய நெல் வர்க்கங்கள், மற்றும் 4 புதிய மரக்கறி வர்க்கங்கள் என்பன 2013 ஆம் ஆண்டுப் பகுதியில் விருத்தி செய்யப்பட்டன. அத்துடன் 2012 உடன் ஒப்பிடுகையில் மறுவயற்பயிர்கள் மற்றும் மரக்கறிகள் ஆகியவற்றில் அத்தாட்சிப்படுத்திய விதையுற்பத்தி முறையே 16% மற்றும் 50% என்ற அளவில் அதிகரித்திருந்தது.

விவசாய சமூகத்தினரிடையே புதிய தொழில்நுட்பங்களின் பரிமாற்றத்தை, மேம்படுத்துவதற்காக 4 புதிய விவசாய சேவை நிலையங்கள் (Krushi Seva Piyasa) நிர்மாணிக்கப்பட்டன. அதே வேளை பேராதனையிலும் பட்டாத்தவிலும் பெண் விவசாய முயற்சியாண்மையாளர்களை ஊக்குவிக்கவும், உள்ளூர் உணவு வகைகளின் நுகர்ச்சியை மேம்படுத்தவதற்குமாக இரண்டு தேசிய உணவு விற்பனை நிலையங்கள் (Hela Bojun Alewi Piyasa) நிர்மாணிக்கப்பட்டன.

'தேசத்திற்கு மகுடம்' கண்காட்சியில் 2013 ஆம் ஆண்டில் விவசாயத் திணைக்களம் சிறந்த கண்காட்சிக்கான விருதினை வென்றெடுத்தது.

விவசாயத் திணைக்களத்தில் கடந்த வருடங்களாக நிலவி வந்த அலுவலர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் 2013 ஆம் ஆண்டில் மிக அதிகளவிலான எண்ணிக்கையிலானோரை நியமித்தமை முக்கியமான ஒரு அடைவாகும்.

விவசாயத் திணைக்களம் பெருமையுடன் குறிப்பிட்டுக் கூறக்கூடிய மேற்படி முன்னேற்றம் மற்றும் அடைவுகளை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பையும் உறுதுணையையும் நல்கிய திணைக்களத்தின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் இவ்வறிக்கையை முழு நிறைவுடன் வெளியிடுவதற்கு பங்களிப்புச் செய்த முன்னேற்றக் கண்காணிப்புப் பிரிவின் அலுவர்கள் மற்றும் மொழிப் பெயர்ப்பு, செவ்வையாக்கம், தொகுப்பு வடிவமைப்பு மற்றும் வெளியிடுதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.



கலாநிதி. ஆர்.ஆர்.ஏ விஜேகோன்
விவசாயப் பணிப்பாளர் நாயகம்

# 1.1 வயற் பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் (குஊசுனுஐ) இமஹா இலுப்பள்ளம

மஹாஇலுப்பள்ளமை வயற் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனமும், அதன் துணை நிறுவனங்களும் வர்க்கங்களை அபிவிருத்தி செய்வதற்கும், அதனோடு தொடர்புடைய தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்வதற்கும், இவற்றை தனது பங்காளிகளிடையே ஆரம்பப் பிரச்சாரம் செய்வதற்கும் பொறுப்பாக உள்ளது. அத்துடன் தனது பொறுப்பின் கீழுள்ள பயிர்களின் போதியளவான கரு விதைகளையும் உற்பத்தி செய்கின்றது. வயற் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் பிராந்திய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நெல், பழங்கள், மரக்கறிகள் ஆகியவற்றின் உற்பத்தித்திறனையும் ஊக்குவித்து வருகின்றது. உலர் வலயத்தின் அனைத்து உணவுப் பயிர்களினதும் உள்ளூர் இனங்களின் கருவளங்களை அதே இடத்தில் பாதுகாப்பதும், பயன்படுத்துவதும் இந்நிறுவனத்தின் கடமைகளில் ஒன்றாகும்.

வயற் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் தனது பிரதான ஆராய்ச்சி நிறுவனத்தை மஹாஇலுப்பள்ளமையில் கொண்டுள்ளதோடு, அங்குணகொலபெலஸ்ஸயில் உள்ள அவரைத் தானியப் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம், அரலகன்விலை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் அமைந்துள்ள பிராந்திய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனங்கள், திருநெல்வேலி, வவுனியா, கரடியனாறு, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவற்றையும உள்ளடக்கியுள்ளது.

## பாதீடு

**அட்டவணை 1.1.1: வருடாந்தப் பாதீடு ~ 2013 (ரூபா)**

| செலவுத் தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு % |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 26,014,207 | 22,341,567 | 86 |
| மீண்டு வரும் செலவு | 30,963,654 | 30,341,903 | 98 |
| **திட்டங்கள்** | | | |
| மிளகாய், சோளம், வெங்காயம் ஆகியவற்றி கலப்பின வர்க்கங்களை விருத்தி செய்தல் | 65,000,000 | 39,720,469 | 61 |
| தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டம் | | | |
| I. வெங்காயம் | 1,000,000 | 920,310 | 92 |
| II. மிளகாய் | 1,000,000 | 965744 | 97 |
| III. நீர் முகாமைத்துவம் | 1,928,000 | 1,533,930 | 80 |
| IV. மரக்கறிகள் | 200,000 | 167,097 | 84 |
| KOPIA | 3,131,000 | 1,113,759 | 36 |
| **மொத்தம்** | **129,236,861** | **97,104,779** | **75** |

## முன்னேற்றங்கள்

### பயிர் அபிவிருத்தி

#### சுவை சரக்குப் பயிர்கள்

**மிளகாய்**

**மிளகாய் கலப்பின் அபிவிருத்தித் திட்டம்**

- **தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனைக்கான $F_1$ கலப்பினங்கள்**

  பதினெட்டு (18) உண்ணாட்டு $F_1$ கலப்புகள் பரிசோதிக்கப்பட்டதோடு, அதில் ஆறு $F_1$ கலப்புகள் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனைக்காகத் தெரிவு செய்யப்பட்டன.

- **புதிய $F_1$ கலப்பினங்கள்**

  இருபது (20) $F_1$ கலப்புகள் மேற்கொள்ளப்பட்டதோடு, வெளிக்கள மதிப்பீட்டிற்காக விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

- **பெற்றோர் வம்சாவழிகள் அபிவிருத்தி செய்தல்**

  சிறந்த பயிராக்கவியற் பண்புகளுடன் நூற்றி ஐம்பது (150) மகட் தாவரங்கள் $F_4$ பரம்பரை வரை விருத்தி செய்யப்பட்டதோடு, சிறந்த பயிராக்கவியற் பண்புகளைக் கொண்ட 24 மகட் தாவரங்கள் $F_2$ பரம்பரை வரை விருத்தி செய்யப்பட்டன.

- **ஆண் மலட்டுத் தன்மை கொண்ட வம்சாவழிகளை விருத்தி செய்தல்**

  ஆண் மலட்டுத் தாவரங்களுடன் கலப்புகள் மேற்கொள்ளப்பட்டதோடு, ஐந்து நம்பிக்கை தரும் கலப்பின பெற்றோர்கள் பெறப்பட்டு முதலாவது பிற்கலப்பும் பூர்த்தி செய்யப்பட்டது.

- **வெளிநாட்டு மிளகாய் கலப்பினங்களை மதிப்பீடு செய்தல்**

  இருபத்தி ஐந்து (25) வெளிநாட்டு மிளகாய் கலப்பின வர்க்கங்கள் மதிப்பீடு செய்யப்பட்டதோடு, ஐந்து வெளிநாட்டு மிளகாய் கலப்பினங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியனவாக இனங் காணப்பட்டன.

**மிளகாய் திறந்த மகரந்தச் சேர்க்கையடையும் வர்க்க அபிவிருத்தித் திட்டம்**

- **மிளகாயின் திறந்த மகரந்தச் சேர்க்கையடையும் வர்க்கங்களின் உற்பத்தி**

  **F1 பரம்பரை**

  30 புதிய $F_1$ கலப்புகள் (தனி, இரட்டை, மூன்று வழி கலப்புகள்) மேற்கொள்ளப்பட்டு, வெளிக்கள ஆய்வுகளிற்காக விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன.
  இலைச்சுருளலைத் தாங்கி வளரும் பண்புகளை இடமாற்றுவதற்காக முளைய மீட்புடன் எட்டு $F_1$ கலப்புகள் கொச்சியுடன் மேற்கொள்ளப் பட்டன. வைரசுவைத் தாங்கி வளரும் பண்புகளை எம்.ஐ 1 வர்க்கத்தினுள் அறிமுகப்படுத்துவதற்காக வரணிய வர்க்கத்துடன் கலப்பு, பிற் கலப்பு என்பன மேற்கொள்ளப்பட்டன. ஆய்வுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றன.

  **$F_2$ பரம்பரை**

  சிறந்த பயிராக்கவியல் பண்புகளுடன் தெரிவு செய்யப்பட்ட பதினெழு (17) குடித்தொகைகள் வெளிக்களத்திற்காக மேம்படுத்தப்பட்டன.

- **வரணிய வர்க்கத்தைத் தூயதாக்கல், தெரிவு செய்தல், மதிப்பீடு செய்தல்**
  வரணிய பச்சை மிளகாய் வகையின் தனிமைப்படுத்தப்பட்ட குடித்தொகையிலிருந்து தாவரங்கள் தெரிவு செய்யப்பட்டன. தூய்மையாக்கல் திட்டத்திற்காக அறுபது தாவரங்கள் தெரிவு செய்யப்பட்டன.

- **உள்ளூர் மிளகாய் இனங்களைப் பராமரித்தலும், மதிப்பீடு செய்தலும்**
  விரும்பிய பண்புகளைக் கொண்ட யாழ்ப்பாணத் தெரிவு, ஹேனே மிளகாய் என்பன தெரிவு செய்யப்பட்டு, அதில் காணப்பட்ட வித்தியாசமான இயல்புகளைக் கொண்டவை அகற்றப்பட்டன.

- **MI 02 வர்க்கத்தைத் தூய்மைப்படுத்தல்**
  வித்தியாசமான பண்புகளைக் கொண்டவை அகற்றப்பட்டு, MI 02 இன் வர்க்கத் தூய்மையைப் பராமரிப்பதற்காக ஒத்த பண்புகளைக் கொண்ட தாவரங்கள் தெரிவு செய்யப்பட்டன.

- **நம்பிக்கையூட்டும் மிளகாய் இனங்கள்**
  செத்தல் மிளகாயிற்கும், பச்சை மிளகாய் உற்பத்திக்கும் உகந்த நம்பிக்கையூட்டும் வர்க்கமான பீ சி 1 இளம் பச்சை நிறமான, குறுகிய கூம்பு வடிவானதுடன், அதிகளவு காரத் தன்மை கொண்டது. இவ்வர்க்கம் ஒரு ஹெக்டயரிற்கு 15 தொன் பச்சை மிளகாய் விளைச்சலைத்த தரவல்லது. இது வர்க்க வெளியீட்டு குழுவிற்குச் சமர்பிக்கப்படவுள்ளது.

## வெங்காயம்

- வர்க்க மேம்பாட்டுத் திட்டத்தில் தம்புள்ள தெரிவை விட சிறந்த ஒரு வர்க்கம் இனங் காணப்பட்டது. இதன் முடிவுகளை உறுதி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- வெங்காயத்தின் வர்க்க அபிவிருத்தியில் குமிழ்களைக் களஞ்சியப்படுத்தி வைக்கும் தன்மை மிக முக்கியமானதொரு காரணியாகும். மதிப்பீடு செய்யப்பட்ட 18 வம்சாவழிகளில் நான்கு பெரிய வெங்காய் சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கமான தம்புள்ளை தெரிவை விட சிறந்த களஞ்சியப்படுத்தி வைக்கும் தன்மையைக் காட்டின.

- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை, வர்க்க இசைவாக்கப் பரிசோதனை ஆகியன மேற்கொள்ளப்பட்ட தோடு, இசைவாக்கமுள்ள வர்க்கங்கள் இனங் காணப்பட்டன.

- கலப்புப் பிறப்பாக்கத் திட்டத்தில் $F_2$ பரம்பரையைச் சேர்ந்த 10 இனங்கள் $F_3$ பரம்பரைக்கு முன்னேற்றப்பட்டன. இரண்டு புதிய $F_1$ பரம்பரைகள் விருத்தி செய்யப்பட்டன.

- இரசாயன முறைகளின் மூலம் வெங்காய விகாரிகளின் மாறற்றகவுகளில் பல்லினத்தன்மை ஊக்குவிப்பட்டது.

- விவசாயிகளிற்கு அறிமுகப்படுத்த முன்னர் வெளிநாட்டு வர்க்கங்களை ஆராய்ச்சி நிலைமைகளின் கீழ் அவற்றைப் பரிசோதித்துப் பார்த்தல் வேண்டும். 2013 சிறுபோகத்தின் போது மதிப்பீடு செய்யப்பட்ட எட்டு வெளிநாட்டு பெரிய வெங்காய வர்க்கங்களில் 02 வர்க்கங்கள் தம்புள்ளை தெரிவு வர்க்கத்தைப் போன்ற விளைச்சலைக் காட்டின.

- சின்ன வெங்காயத்தில் 17 வம்சாவழிகள் வர்க்க மதிப்பீட்டு, தெரிவு செய்தல் திட்டத்தில் 4 வம்சாவழிகளின் விளைச்சலானது சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கங்களான வேதாளன், தின்னவேலி சிவப்பு ஆகியவற்றை விட அதிகமானதாகும். முடிவுகளை உறுதி செய்வதற்காக பரிசோதனையை மீண்டும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

- விதைகளை உற்பத்தி செய்யக் கூடிய சின்ன வெங்காய வர்க்கமொன்றை அபிவிருத்தி செய்வது காலத்தின் தேவையாகும். விதைகளை உற்பத்தி செய்யும் வெங்காய வம்சாவழியொன்று அதன் விதை உற்பத்தி வல்லமையை அறிந்து கொள்வதற்காக கட்டுப்பாட்டு வர்க்கமான வேதாளனுடன் மதிப்பீடு செய்யப்பட்டது.

- இசைவாக்கமுள்ள வர்க்கங்களை இனங் காண்பதற்காக தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

- வெங்காயப் பயிர்ச்செய்கையில் மண்ணிற் காணப்படும் உவர்த்தன்மை மிகவும் ஆபத்தானதோடு, உலர் வலயத்தில் வெள்ள நீர்ப்பாசனத்துடன் இது விருத்தியடையலாம். இது விளைச்சல் குறைவதற்கு வழிகோலும். நெல் வயல்களில் உவர்த்தன்மையைக் குறைப்பதற்காக பகுதியாக எரியூட்டப்பட்ட உமி பயன்படுத்தப்படுகின்றது. எனவே தம்புள்ளை தெரிவு வெங்காய வர்க்கத்தின் குமிழ், விதை உற்பத்தியில் பகுதியாக எரியூட்டப்பட்ட உமிக்கரியின் தாக்கத்தினை ஆராய்வதற்காக பாத்திகளின் பல்வேறு ஆழங்களிற்கு இடப்பட்டது. இப்பரிசோதனை 2013 சிறுபோகத்தில் ஆரம்பிக்கப்பட்டதோடு, 2015 சிறுபோகம் வரை தொடரப்படவுள்ளது.

- குறிப்பிட்டதொரு ஒளிக் காலப் பகுதியில் காணப்படும் சிவப்பு : சேய்மைச் சிவப்பு ஆகியவற்றின் விகிதத்திலேயே வெங்காயத்தில் குமிழ்கள் உருவாகும் வீதம் தங்கியுள்ளது. எனவே குமிழ், விதை உற்பத்தியில் தெளிவான ஒளி ஊடு புக விடும் பொலித்தீனை விட நிற பொலித்தீன்களின் பயனுறுதியை அறிவதற்கான பரிசோதனையொன்று 2013 சிறுபோகத்தில் ஆரம்பிக்கப்பட்டதோடு, இது 2014 / 15 கால போகம் வரை தொடரப்படவுள்ளது.

## வன் தானியங்கள்

### சோளம்

- திறந்த மகரந்தச் சேர்க்கை அடையும் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு இந்தோனேசிய வர்க்கமான ஸ்ரீகன்திகுனிங் “MIOPV1”, விவசாயிகளின் தோட்டத்தில் ஒரு ஹெக்டயரில் 4 - 5 தொன் விளைச்சலைக் கொடுத்தது. இவ் விளைச்சல் ஒப்பிடப்பீட்டு வர்க்கமான ருவன் உடன் ஒப்பிடக் கூடியதாக உள்ளது.

- மெக்சிகோவிலுள்ள சர்வதேச சோள, கோதுமை அபிவிருத்தி நிலையத்திலிருந்து ஆறு கலப்பின சோள வர்க்கங்கள் பெறப்பட்டன. ஒப்பிடப்பட்ட வர்த்தக கலப்பினங்களுடன் ஒப்பிடக் கூடிய விளைச்சலைக் (6 - 7 தொன்/ஹெ) கொடுத்தன. தெரிவு செய்யப்பட்ட கலப்பினங்களின் F1 விதை உற்பத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- இந்தியாவிலுள்ள சர்வதேச சோள, கோதுமை அபிவிருத்தி நிலையத்திலிருந்து பதினான்கு பரிசோதனை கலப்பின சோள வர்க்கங்கள் பெறப்பட்டன. இவை மஹாஇலுப்பள்ளமை, அங்குனகொலபெலஸ்ஸ ஆகிய இரண்டு இடங்களில் மதிப்பீடு செய்யப்பட்டன. மூன்று நம்பிக்கையூட்டும் கலப்பினங்கள் 5.5 - 6.5 தொன்/ஹெ விளைச்சலைக் கொடுத்தன.

- சர்வதேச சோள, கோதுமை அபிவிருத்தி நிலையத்திலிருந்து பெறப்பட்ட புதிய உள்ளக விருத்தி இனங்களிலிருந்து தொன்னூற்றி நான்கு (94) சோள தனிக் கலப்புகள் விருத்தி செய்யப்பட்டன. இந்த தனிக் கலப்புகள் விளைச்சல் பரிசோதனையில் மதிப்பீடு செய்யப்படவுள்ளன.

- ஒன்பது (09) வெளிநாட்டு (தனியார் நிறுவனங்களினால் இறக்குமதி செய்யப்பட்டவை) சோளக் கலப்பினங்கள்,

இரண்டு சுவீட் கோன் கலப்பினங்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன. PAC 296, PAC 293, பிக்கிங் F4452, P4181, DK 9955, DK 9901, DK 6818 ஆகியவற்றின் மதிப்பீடு அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டன.

### குரக்கன்

- நான்கு (04) நம்பிக்கையூட்டும் குரக்கன் சேகரிப்புகள் வர்க்க இசைவாக்கப் பரிசோதனையின் கீழ் பரிசோதிக்கப்பட்டன. இதன் முடிவுகள் வேறுபடுத்தக் கூடிய, சீரான, நிலைபேறான பரிசோதனைக்குச் (DUST) சமர்பிக்கப்பட்டன.

- முன்னேற்றமடைந்த விளைச்சல் பரிசோதனை யில் எட்டு (08) நம்பிக்கையூட்டும் குரக்கன் சேகரிப்புகள் மதிப்பீடு செய்யப்பட்டன. இச்சேகரிப்புகள் 3.4 - 3.8 தொன் / ஹெ விளைச்சலைக் கொடுத்தன.

### இறுங்கு

- முன்னேற்றமடைந்த விளைச்சல் பரிசோதனை யில் ஆறு (06) நம்பிக்கையூட்டும் இறுங்கு சேகரிப்புகள் மதிப்பீடு செய்யப்பட்டன. இச்சேகரிப்புகள் 3.5 - 4.0 தொன் / ஹெ விளைச்சலைக் கொடுத்தன.

### தினை

- முன்னேற்றமடைந்த விளைச்சல் பரிசோதனை யில் ஆறு (06) தினை சேகரிப்புகள் மதிப்பீடு செய்யப்பட்டன. இச்சேகரிப்புகள் 2.0 - 2.5 தொன் / ஹெ விளைச்சலைக் கொடுத்தன.

## அவரைத் தானியங்கள்

### பாசிப்பயறு

- விரும்பிய பண்புகளைக் கொண்ட பதினொரு (11) $F_1$ பாசிப்பயறு குடித்தொகைகள் வெளிக்களத்தில் ஸ்தாபிக்கப்பட்டன.

- $F_1$, $F_2$ பரம்பரைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இருபத்தியொரு (21) $F_2$ பரம்பரைகளும், ஒன்பது $F_3$ பரம்பரைகளும் பரம்பரை முன்னேற்றத்திற்காக தொகையான குடித்தொகையாக வெளிக்களத்தில் ஸ்தாபிக்கப்பட்டன.

- 2 தொ/ஹெ விளைச்சல் ஆற்றலைக் கொண்ட ஐந்து (05) நம்பிக்கையூட்டும் வம்சாவழிகள் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனையில் பரிசோதிக்கப்பட்டன.

- உயர் விளைச்சலைத் தரும் இரண்டு (02) வம்சாவழிகள் (MIMB 901, MIMB 904) வர்க்க இசைவாக்கப் பரிசோதனையில் விவசாயிகளின் தோட்டங்களில் பரிசோதிக்கப்பட்டன.

- உயர் விளைச்சலைத் தரும் MIMB 113 என்னும் வம்சாவழி வேறுபடுத்தக் கூடிய, சீரான, நிலைபேறான பரிசோதனைக்குச் (DUST) சமர்பிக்கப்பட்டது.

### கௌபீ

- கலப்புகள் மேற்கொள்ளப்பட்டு, எட்டு (08) $F_1$ குடித்தொகைகள் பெறப்பட்டன. வர்க்கங்களின் பண்புகளை விருத்தி செய்வதற்காக இக்கலப்புகள் மேறகொள்ளப்பட்டன.

- $F_1$ முதல் F4 வரையான ஏழு (07) கௌபீ குடித்தொகைகள் பரம்பரை விருத்திக்காக வெளிக்களத்தில் ஸ்தாபிக்கப்பட்டன.

- மானாவாரி நிலைமையின் கீழ் ஐந்து நம்பிக்கையூட்டும் கௌபீ மரபினங்கள் / வர்க்கங்கள் தெரிவு செய்யப்பட்டன.
- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனையின் கீழ் ஐந்து கௌபீ மரபினங்கள், 3 நியம மரபினங்களுடன் மதிப்பீடு செய்யப்பட்டன.

### உழுந்து

- சிறந்த பண்புகளுடன் இனங் காணப்பட்ட ஒன்பது (09) $F_1$ குடித்தொகைகள் வெளிக்களத்தில் ஸ்தாபிக்கப்பட்டன.
- ஐந்து (05) $F_1$ குடித்தொகைகள் பரம்பரை விருத்திக்காக வெளிக்களத்தில் ஸ்தாபிக்கப்பட்டன.

## எண்ணெய் வித்துப் பயிர்கள்

### சோயா அவரை

- சோயா அவரையின் எட்டு (08) F1 குடித்தொகைகள் பெரிய வெண்ணெய் நிறமான விதை, உயர் விளைச்சல் (> 6.5 தொன் / ஹெ) குறுகிய காலத்தில் முதிர்ச்சியடைதல் (85 - 90 நாட்கள், நுனி வளரா வகை, உயர் நைதரசன் பதிக்கும் வல்லமை, உதிர்வதை சகித்து வளரல், சாய்ந்து விழுவதை சகித்து வளரல் ஆகியவற்றிற்காக மதிப்பீடு செய்யப்பட்டன.
- ஆசிய மரக்கறி ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்திலிருந்து பெறப்பட்ட 07 சோயா அவரை மூலவுயிருருக்கள் எதிர்கால கலப்பின இனவிருத்தித் திட்டத்திற்கான சிறந்த பெற்றோர்களிற்காக மதிப்பீடு செய்யப்பட்டன.
- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனையில் நியம வர்க்கமான பீபி 1 உடன் ஐந்து (05) மரக்கறி சோயா அவரை வம்சாவழிகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

## மரக்கறிகள்

### வெண்டி

- இரண்டு (02) வெண்டி வம்சாவழிகளான OKS 1, OKS 3 ஆகியன எதிர்வரும் வர்க்க இசைவாக்கப் பரிசோதனைக்காக இனங் காணப்பட்டன.
- எதிர்கால இனவிருத்தி நிகழ்ச்சிகளிற்காக மூன்று (03) வெண்டி வம்சாவழிகள் உகந்த பெற்றோர் வம்சாவழிகளான இனங் காணப்பட்டன.
- ஆறு (06) புதிய F1 கலப்புகள் உருவாக்கப்பட்டு, விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன.
- உள்நாட்டு நிலைமைகளின் கீழ் இசைவாக்கம், பொதுவான பீடை, நோய்களினால் பாதிக்கப்படும் தன்மை என்பனவற்றிற்காக மூன்று (03) வெளிநாட்டு வெண்டி கலப்பினங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

## பழங்கள்

### திராட்சை

- வித்தியாசமான பயிற்றுவிக்கும் கட்டமைப்புகள் மதிப்பீடு செய்யப்பட்டன. பிரெஞ்ச் எம்ஜ, இஸ்ரேல் புளு ஆகியனவே அனைத்து கட்டமைப்புகளிலும் சிறப்பாக வளர்ந்தன.
- திராட்சைகளை பயிற்றுவிப்பதற்கான தூண்களிற்கான இலாபகரமான மாற்றுக்களாக கிளிறிசிடியா, பூவரசு, இப்பில் - இப்பில் மரத் தண்டுகள் பரிசோதிக்கப்பட்டன.
- திராட்சை மூலவுயிருருக்களின் பதினாறு (16) வர்க்கங்கள் பராமரிக்கப்பட்டன. அடிப்படை நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்த அதேவேளை சிபாரிசு செய்யப்பட்ட திராட்சை

வர்க்கங்கள் தாய்த் தாவரங்களாகவும் பராமரிக்கப்பட்டன.

### மா

- எதிர்கால பயிர் இனவிருத்தித் திட்டத்திற்காக இருபத்தியாறு வெளிநாட்டு வர்க்கங்களும், ஆறு உள்நாட்டு வர்க்கங்களும் பராமரிக்கப்பட்டன. இவற்றோடு ஆப்பொட்டின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட நூறு மா நாற்றுக்கள் இந்நிலையத்தில் நடப்பட்டன.

### விளா

- சிறந்த பண்புகளுடன் கூடிய விளைச்சலைத் தரும் குலவகைகளை இனங் காண்பதற்காக இலங்கையின் உலர் வலயத்திலிருந்து எட்டு விளா சேகரிப்புகள் பெறப்பட்டன.

### வத்தகை

- எட்டு வெளிநாட்டு வர்க்கங்கள் பரிசோதிக்கப்பட்டதோடு, ஒரு வர்க்கம் உலர் வலயத்தில் பயிரிடுவதற்குப் பொருத்தமான வர்க்கமாகத் தெரிவு செய்யப்பட்டது.

## பயிராக்கவியல்

- “எப்சிம் ஒரைசா” பயிர் மாதிரி நெற் பயிரிற்கென அளவுருவாக்கம் செய்யப்பட்டு, செல்லுபடியாக்கப்பட்டது. சோளம், பாசிப்பயறு ஆகியனவற்றிற்கு அளவுருவாக்கம் செய்யப்பட்டு, செல்லுபடியாக்கப்படவுள்ளது.
- ஒரு சுற்றாடல் சாய்வு வீதத்தில் ஒரு வெப்பநிலை வேறுபாட்டிற்கான சோளப் பயிரின் தூண்டற்பேறு ஆய்வு செய்யப்பட்டது. வளர்ச்சியிலும், விளைச்சலிலும் புள்ளிவிபரவியல் ரீதியில் குறிப்பிடத்தக்கத் துண்டற்பேற்றுப் போக்கினைக் காட்டியது. ருவன் சோள வர்க்கத்தின் வளர்ச்சிக்கும், விளைச்சலிற்கும் உகந்த வெப்பநிலை இனங் காணப்பட்டது.
- பாசிப்பயற்றை குன்டசாலையிலும், மஹா இலுப்பள்ளமையிலும் செய்கைபண்ணிய போது தோற்றவியல், வளர்ச்சி, விளைச்சல் ஆகியனவற்றில் குறிப்பிடத்தக்க வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. இவ்விரண்டு இடங்களிலும் நிலவிய வெப்பநிலை வேறுபாடுகளின் காரணமாக இவ்வாறான வேறுபாடுகள் ஏற்பட்டிருக்கலாம்.
- தொடர்ச்சியாக மூன்று போகங்களிற்கு ஆழமாக உழல், கிளிறிசிடியாவினால் பத்திரக் கலவையிடல், கூட்டெரு இடல் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த தாக்கங்கள் மிளகாயில் பரிசோதிக்கப்பட்டன. ஆழமாக உழல் முதலாவது போகத்தில் மாத்திரமே குறிப்பிடத்தக்க தாக்கினைக் காட்டியது. 5 தொன்/ஹெ என்னும் அளவில் கிளிறிசிடியாவை பத்திரக் கலவையாகவும், 10 தொன்/ஹெ என்னும் அளவில் கூட்டெருவையும் அதே இடத்தில் தொடர்ச்சியாக மூன்று போகங்களிற்கு இட்ட போது தாக்கம் சாதகமானதாகக் காணப்பட்டது.
- பிந்திய காலபோகத்தில் பருவமற்ற காலப் பகுதியில் பெரிய வெங்காய தாய்க் குமிழ் உற்பத்திக்கான சாத்திய வள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. இப்பரிசோதனை மஹாஇலுப்பள்ளமை ($DL_{1b}$), கற்பிட்டி ($DL_3$), விலாச்சிய ($DL_{1f}$), மொரகொல்லாகம ($DL_{1b}$), மாஹோ ($IL_3$), பதவிய ($DL_{1e}$), முத்துக்கண்டிய ($DL_{1b}$), வீரவில ($DL_5$) ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டது. விலாச்சிய, பதவிய, முத்துக்கண்டிய, வீரவில ஆகிய இடங்களில் கடும் மழையின் காரணமாக இப்பரிசோதனை மிக அதிகளவிற் பாதிக்கப்பட்டது. மஹாஇலுப்பள்ளமை, மாஹோ ஆகிய இடங்கள் பருவமற்ற காலங்களில் பயிரிடுவதற்கு உகந்த பிரதேசங்கள் ஆகும். எனினும் வழமையான பருவத்தில் அறுவடை செய்யப்படும் குமிழ்களுடன் ஒப்பிடும் போது குமிழ்கள்

சிறியனவாகவே காணப்பட்டன. இப்பரிசோதனை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவுள்ளது.

- எம் I கிறீன் மிளகாய் வர்க்கத்திற்காக 'SPAD" மானியையும், இலை நிற அட்டவணையையும் அளவீடு செய்வதற்காக ஒரு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. சிபாரிசு செய்யப்பட்ட நைதரசன் அளவான 150 கி.கி/ஹெ என்னும் அளவே மிளகாயிற்கு உகந்த நைதரசன் அளவாகும் எனக் கண்டு பிடிக்கப்பட்டது. எம் ஐ கிறீன் வர்க்கத்திற்கு நடுகை செய்த பின் 3 - 4 வாரங்களிற்கு SPAD மானியின் வாசிப்பை 42 இற்கும் அதிகமானதாகப் பராமரித்தல் வேண்டும். 5 - 12 வாரங்களிற்கு இந்த வாசிப்பு 56 ஐ அதிகமானதாக இருத்தல் வேண்டும். வளர்ச்சிப் பருவம் முழுவதும் இலை நிற அட்டவணைப் பெறுமானம் 4 ஐ விட அதிகமானதாக பராமரித்தல் வேண்டும். இம்முடிவுகளை உறுதி செய்வதற்காக இப்பரிசோதனையை தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டும்.

- அதிகளவான அடர்த்தியில் நடல் (75 x 15 ச.மீ), சிபாரிசு செய்யப்பட்ட நடுகை இடைவெளி (60 x 30 ச.மீ) என்பனவற்றோடு, 200 கி.கி/ஹெ, 150 கி.கி/ஹெ ஆகிய நைதரசன் அளவுகளின் கீழ் இந்தோனோசியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட மூன்று (03) திறந்த மகரந்தச் சேர்க்கையடையும் சோள வர்க்கங்களுடன், வெளிநாட்டு கலப்பினமான பசிபிக் 999 சுப்பர், உள்நாட்டு கலப்பினமான சம்பத், திறந்த அயன் மகரந்தச் சேர்க்கையடையும் ருவன் ஆகியன பரிசோதிக்கப்பட்டன. வர்க்கங்களிற்கிடையே குறிப்பிடத்தக்களவில் விளைச்சல் வேறுபாடுகள் காணப்பட்டன. பசுபிக் உடன் ஒப்பிடும் போது ஸ்ரீகன்திகுனிங், சுக்குமாரகே (இந்தோனேசிய வர்க்கங்கள்) என்பன குறிப்பிடத்தக்களவில் குறைந்த விளைச்சலைப் பதிவு செய்தன. ஆனால் இவ்விளைச்சல் ருவன், சம்பத் ஆகியவற்றோடு ஒப்பிடக் கூடியதாகக் காணப்பட்டது. தற்போதைய சிபாரிசுடன் ஒப்பிடும் போது அதிக அடர்த்தியில் நடப்பட்ட பயிரில், உயர் பசளை மட்டத்தில் உயர் விளைச்சல் (>22%) பெறப்பட்டது.

- பரசூட் தட்டுகளையும், மத்தியளவான நாற்று மேடைத் தட்டுகளையும் (128 துளைகள் / தட்டு) பயன்படுத்தி மிளகாய், குரக்கன் ஆகியவற்றிற்கு ஒரு மாற்று நாற்று மேடைத் தொழில்நுட்பம் பரிசோதிக்கப்பட்டது. இவை யாவும் வழமையான நில நாற்று மேடைகளுடன் ஒப்பிடப்பட்டன. மிளகாயில் மத்தியளவான தட்டு, நில நாற்று மேடை ஆகியவற்றிற்கிடையே குறிப்பிடத்தக்களவான வித்தியாசங்கள் எதுவும் அவதானிக்கப் படவில்லை. ஆனால் குரக்கனில் இவை எவற்றிற்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் எதுவும் அவதானிக்கப்பட வில்லை. ஒரு இலாபகரமான மாற்று நாற்று மேடைத் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வதற்காக இப்பரிசோதனை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவுள்ளது.

- ஆண் தாவரங்களில் குஞ்சம் உருவாகல் (Tasselling), பெண் தாவரங்களில் பட்டு உருவாகல் (Silking) ஆகியன மேற்பொருந்தக் கூடியவாறு சோளத்தில் பூக்கும் நேரவிசைவாக்கம் ஆராயப்பட்டது. குஞ்சம் உருவாகல், பட்டு உருவாகல் ஆகிய இரண்டிலுமே வளரும் வெப்ப அலகு நாட்களின் (Growing Degree Days (GDD) செல்வாக்குக் காணப்பட்டது. பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட இடத்தில் ஆண் தாவரங்களை நட்டு 7 நாட்கள் இடைவெளியில் பெண் தாவரங்கள் நடப்பட்டன. சுற்றாடல் நிலைமைகள் குஞ்சம் உருவாகுவதிலும், பட்டு உருவாகுவதிலும் செல்வாக்குச் செலுத்துவதால் ஒரு முடிவிற்கு வர முன்னர் பல இடங்களில் ஆய்வினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

- விதைக் குமிழ்களை முழே$_3$ இல் பரிகரிப்பதன் மூலம் வெங்காயத்தில் உற்பத்தி செய்யப்படும் உண்மை விதைகளின் அளவை அதிகரிக்கும் நோக்குடன் ஒரு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. 10 வீத முழே$_3$ கரைசலில் குமிழ்களை அமிழ்த்திய போது விதை விளைச்சல் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இப்பரிசோதனை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட உள்ளது.

- இலங்கையின் தாழ் நாட்டு உலர் வலயத்தில் சிறு போகத்தின் போது மண் ஈரப்பதன் அளவுகளினால பாதிக்கப்படும் பாசிப்பயறு பிறப்புரிமை வகைகளைத் தெரிவு செய்வதற்காக ஒரு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. ஆஜஆட 901 என்னும் பாசிப்பயறு பிறப்புரிமை வகை வறட்சியைத் தாங்கி வளரும் ஒரு பிறப்புரிமை வகையாக இனங் காணப்பட்டது. வர்க்கம் ஆரியானது மத்தியளவில் வறட்சியைத் தாங்கி வளரும் வர்க்கமாக இனங் காணப்பட்டது. இதேவேளை எம்ஜ 6 வறட்சியினால் பாதிக்கப்படும் ஒரு பிறப்புரிமை வகையாக இனங் காணப்பட்டது. முடிவுகளை மேலும் சரி பார்த்து உறுதி செய்வதற்காக இப்பரிசோதனையை மீண்டும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

- உயர்த்தப்பட்ட பாத்திகளுடன் காற்றூட்ட நிலமைகளில் வாழும் நெல்லிற்கான வர்க்கத் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டன. பிஜி 10 - 2907 என்னும் வர்க்கம் உயர் விளைச்சலாக 3.17 தொ/ஹெ. ஐத் தந்தது. உயர்ந்தளவான மகரந்த வளம் (100% வளமானது) ஏஆர் 08 - 513 இல் பதிவு செய்யப்பட்டது.

- நெல், சோயா, சோளம் ஆகியவற்றின் மகரந்த மணிகளின் மலட்டுத் தன்மையில் விதான மட்ட வெப்பநிலையின் தாக்கம் ஆராயப்பட்டது. குடலைப் பருவத்தில் தாவர விதான மட்டத்தில் 37.80 செ.கி வெப்ப நிலையிலும், 45 வீத சாரீரப்பதனுடனும் மகரந்த மணிகள் பகுதியாக (80%) மலடாகக் காணப்படும். சோயா வர்க்கங்களை முன்னரே நடும் போது எம்ஜஎஸ்பி 1 சோயா வர்க்கத்திலும், சோள வம்சாவழியான சிஎம்எல் 348 ஆகியன உச்ச அளவான மகரந்த மலட்டுத் தன்மையைப் பதிவு செய்தன.

- பத்தலகொடையிலுள்ள நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்கப் பரிசோதனை நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

## பயிர்ப் பாதுகாப்பு

### தாவர நோயியல்

- இலங்கையில் சோளப் பயிர்ச்செய்கையில் மடல் வெளிறல் பிரதானமான ஒரு நோயாகும். இலங்கை நிலைமைகளின் கீழ் சோள மடல் வெளிறல் நோய்க்கு எதிர்ப்புத்தன்மை கொண்ட சோள வர்க்கத்தினை தெரிவு செய்யும் தொழில்நுட்பத்தை விருத்தி செய்வது முக்கியமானதாகும். பயன்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்களில் மடல்களில் வன்வித்திகளை உட்புகுத்தல் சிறந்த விளைவுகளைக் காட்டியது. இது 04 நாட்களினுள் அறிகுறிகளைக் காட்டியதோடு, 11 நாட்களில் நோய் முழுமையாகத் தொற்றியது. இப்பரிசோதனை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவுள்ளது.

- பாசிப்பயறு மஞ்சட் சித்திர வடிவ நோய்க்காக (MYMV) நாற்பத்தியிரண்டு (42) பாசிப்பயறு மூலவுயிருருக்கள் தெரிவு செய்யப்பட்டன. 42 மூலவுயிருருக்களில் 25 அதிகளவில் பாதிக்கப்படக் கூடியனவாகும், 5 பாதிக்கப்படக் கூடியனவாகும், 3 மத்திய அளவில் பாதிக்கப்படக் கூடியனவாகும், 2 மத்தியளவில் எதிர்ப்புத் தன்மை கொண்டனவாகும், 7 எதிர்ப்புத்தன்மை

கொண்டனவாகும். பரிசோதனை தொடர்ந்தும் மேற்கொள்ளப் படவுள்ளது.

- மஞ்சட் சித்திர வடிவ நோய்க்கென இருபத்தி ஆறு (26) உழுந்து மூலவுயிருருக்கள் தெரிவு செய்யப்பட்டன. பரிசோதிக்கப்பட்ட இருபத்தி ஆறு மூலவுயிருருக்களில் 2 அதிகளவில் பாதிக்கப்படக் கூடியனவாகும். 2 மத்தியளவில் பாதிக்கப்படக் கூடியனவாகும், 4 மத்தியளவில் எதிர்ப்புத் தன்மை கொண்டனவாகும், 6 எதிர்ப்புத் தன்மை கொண்டனவாகும். பரிசோதனை தொடர்ந்தும் மேற்கொள்ளப் படவுள்ளது.

- சோதனை வர்க்கங்களுடன் இரண்டு கௌபீ வம்சாவழிகள் அந்திரக்நோசு, தூள் பூஞ்சண நோய் ஆகியனவற்றிற்காகத் தேர்வு செய்யப்பட்டன. ஐரி 98 கே - 205 - 8 அந்திரக்நோசினால் பாதிக்கப்படுவதோடு, தூள் பூஞ்சண நோய்க்கு எதிர்ப்புத் தன்மை கொண்டதாகும். ஐரி 97 கே - 499 - 39 அந்திரக்நோசிற்கு மத்தியளவு எதிர்ப்புத் தன்மை கொண்டுள்ளதோடு, தூள் பூஞ்சண நோய்க்கு எதிர்ப்புத் தன்மை கொண்டதாகும். பரிசோதனை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவுள்ளது.

- சோதனை வர்க்கங்களுடன் இரண்டு சோயா அவரை வம்சாவழிகள் சோயா அவரை சித்திர வடிவ வைரசு நோய்க்காகப் பரிசோதிக்கப் பட்டன. நிலவும் காலநிலைமைகளின் கீழ் இரண்டு புதிய மரபினங்கள் சோயா அவரை சித்திர வடிவ நோய்க்கு எதிர்ப்புத் தன்மையைக் காட்டின.

- புதிய பங்கசுநாசினியான அசொக்சிட்ரொபின் 250 கிராம் / லீற்றர் எஸ்.சீ சீ (Azoxystrobin 250g/l SC) திராட்சையின் கீழ்ப் பூஞ்சண நோயை பயனுறுதியாகக் கட்டுப்படுத்தியது. விளைவுகளை உறுதி செய்வதற்காக இப்பரிசோதனையை முன்னோடி அடிப்படையில் மீளவும் மேற்கொள்ள வேண்டும்.

- மிளகாயில் ஏற்படும் பிரதான நோய்களில் நைதரசன் மட்டங்களின் செல்வாக்கினை இனங் காண்பதற்காக ஒரு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன் முடிவுகளில் மிளகாய் பயிர்ச்செய்கையில் நோய்களைக் குறைப்பதற்கு திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட நைதரசன் அளவே (150 நைதரசன் கிகி / ஹெ) உகந்தது எனக் காட்டின. நைதரசனின் அளவை அதிகரிக்கும் போது நோய்த் தாக்கமும் அதிகரித்தது.

- மிளகாய் பயிர்ச்செய்கையில் நோய்களை முகாமைத்துவம் செய்வதற்கு பயனுறுதியான நைதரசன் பசளையை இனங் காண்பதற்கான ஒரு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மூன்று வித்தியாசமான பசளைகள் (கல்சியம் நைட்ரேற், அலபர்ட் கலவை, அமோனியம் சல்பேற்று) திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்டவைகளுடன் பயன்படுத்தப்பட்டன. ஏனைய பரிகரணங்களுடன் ஒப்பிடும் போது குறைந்தளவான நோய்த் தாக்கம் கல்சியம் நைட்ரேட் இடப்பட்ட துண்டங்களிலேயே அவதானிக்கப்பட்டது.

- அந்திரக்நோசு, ஊதாப் புள்ளி நோய் என்பனவே பெரிய வெங்காயத்தினைப் பாதிக்கும் பிரதானமான நோயாகும். பதின்மூன்று வெங்காய வம்சாவழிகள் அந்திரக்நோசு, ஊதாப்புள்ளி நோய்களிற்காக மதிப்பீடு செய்யப்பட்டன. இவற்றில் எந்தவொரு வர்க்கமும் அந்திரக்நோசு, ஊதாப் புள்ளி நோய் ஆகியவற்றிற்கு எதிர்ப்புத் தன்மை கொண்டனவாகக் காணப்படவில்லை.

- இலங்கையில் வெண்டிச் செய்கைக்குப் பிரதான தடையாக விளங்குவது மஞ்சள் சித்திர வடிவ வைரசு நோயாகும். பதின்மூன்று வெளிநாட்டு வெண்டி வர்க்கங்கள் / வம்சாவழிகள் மஞ்சள் சித்திர வடிவ நோய்க்காக மதிப்பீடு செய்யப்பட்டன. ஒரு வெளிநாட்டு வர்க்கம் வைரசு நோய்களிற்கு எதிர்ப்புத் தன்மையைக் காட்டியது.

- ஐந்து வெளிநாட்டு வர்க்கங்கள்/ வம்சாவழிகள் அந்திரக்நோசு, ஊதாப் புள்ளி நோய் ஆகியனவற்றிற்காக பருமில்லாத காலங்களில் மதிப்பீடு செய்யப்பட்டன. ஒரு வர்க்கம் ஊதாப்புள்ளி நோய்க்கு மத்திய அளவில் எதிர்ப்புத் தன்மை கொண்டதாக இனங் காணப்பட்டது.

- இலைச்சுருளல் வைரசுவிற்காக ஏழு கொச்சி / நை மிரிஸ் குலவகைகள் மதிப்பீடு செய்யப்பட்டன. ஒரு சேகரிப்பு வைரசு நோய்க்கு எதிர்ப்புத்தன்மை உள்ளதாக இனங் காணப்பட்டது.

- பெரிய வெங்காயத்தில் அந்திரக்நோசு நோயிற்காக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டது. பரிசோதிக்கப்பட்ட பங்கசு நாசினிகளில் அசொக்சிட்ரொபின் 250 கிராம் / லீற்றர் எஸ்.சீ (Azoxystrobin 250g/l SC) பெரிய வெங்காயத்தில் அந்திரக்நோசு நோயைக் கட்டுப்படுத்துவதில் பயனுறுதியானதாகக் கண்டு பிடிக்கப்பட்டது. பரிசோதனை மீண்டும் மேற்கொள்ளப்படவுள்ளது.

## பூச்சியியல்

- நைதரசனின் வித்தியாசமான மட்டங்களும் / ஆதாரங்களும் இலைச் சுருளல் தாக்கத்திற் கொண்டுள்ள தொடர்பினை அறிவதற்காக ஒரு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. ஏனைய பரிகரணங்களுடன் ஒப்பிடும் போது கல்சியம் நைட்ரேட், திரவப் பசளைகள் ஆகியன பயன்படுத்தப்பட்டத் துண்டங்களில் இலைச் சுருளல் தாக்கத்தின் தீவிரம் குறைவாகக் காணப்பட்டது.

- உள்நாட்டு சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கமான தம்புள்ளை தெரிவுடன் இருபது (20) வெங்காய வம்சாவழிகள் பீடைகளின் தாக்கத்திற்காக தெரிவு செய்யப்பட்டன. அனைத்து வர்க்கங்கள் / வம்சாவழிகள் பனிப்பூச்சிகளினால் பாதிக்கப் பட்டன. இப்போகத்தின் போது வெங்காய மயிர்க்கொட்டியின் தாக்கம் அவதானிக்கப் படவில்லை.

- சுற்றாடல் ரீதியில் நிலைத்திருக்கக் கூடிய பெருமளவான இரசாயனங்களைப் பயன்படுத்தி மண் தடைகளை ஏற்படுத்துவதே கறையான்களைக் கட்டுப்படுத்துவதற்குத் தற்போதுள்ள முறையாகும். கறையான்களைக் கட்டுப்படுத்த மேலதிக இரை முறையொன்று பரிசோதிக்கப்பட்டது.

- புருகிட் வண்டுகளினால் பாதிக்கப்படும் தன்மையைக் / எதிர்ப்புத்தன்மையைக் கண்டு பிடிப்பதற்காக பத்து (10) பாசிப்பயறு வர்க்கங்களில் ஆய்வு கூடப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. உள்நாட்டில் சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கமான எம் ஐ 6 உடன், கொரியாவிலிருந்து பெறப்பட்ட ஐந்து வர்க்கங்கள் (EOUL, J41, DAHYEON, SOHYEON, JANGAHU) ஆசிய மரக்கறி ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்திடமிருந்து பெறப்பட்ட 04 வர்க்கங்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன. மூன்று பாசிப்பயறு மரபினங்கள் (MIMB 933, MIMB 934, MIMB 940) புருகிட் வண்டுகளின் தாக்கத்திற்கு எதிர்ப்புத் தன்மை கொண்டனவாக இனங் காணப்பட்டன.

- உள்நாட்டு கலப்பின வர்க்கமான சம்பத்துடன் பத்து (10) வெளிநாட்டு சோள வர்க்கங்கள் பூச்சிப் பீடைகளின் தாக்கத்திற்காக தெரிவு செய்யப்பட்டன. அனைத்து வெளிநாட்டு கலப்பினங்களும் தண்டு துளைப் புழுவினால் சேதப்படுத்தப்பட்டன. இப்பருவத்தின் போது எந்தவொரு கலப்பின வர்க்கமும் அழுக்கணவன்களினால் பாதிக்கப்படவில்லை.

- மூன்று புதிய பீடைகளான குமிழ் சிற்றுண்ணி (*Rhizoglyphus spp.*), மலர் சாபர் வண்டு (*Oxycetonia versicolor*), கிழங்கு அந்து (*Phthormaea operculella*) ஆகியன

வெங்காயப் பயிர்ச்செய்கையில் இனங் காணப்பட்டன.

## களை முகாமைத்துவம்

- சோளத்தில் களைகளைக் கட்டுப்படுத்து வதற்கு ஹலோசல்பியுரொன் - மீதைல் 75% டபிள்யு ஜி (Halosulfuron-methyl 75% WG), நிக்கோசல்பியுரொன் (Nicosulfuron) இன் மூன்று வடிவங்கள் ஆகியனவற்றின் வினைத்திறனை அறிந்து கொள்வதற்காக ஒரு பரிசோதனை நடாத்தப்பட்டது. நிக்கோசல்பியுரோனின் மூன்று வடிவங்கள் அதாவது நிக்கோசல்பியுரோன் 240% எஸ்எல், நிக்கோசல்பியுரோன் 4% எஸ்சீ, நிக்கோசல்பியுரோன் 75% டபிள்யு டி ஜி ஆகியவற்றை முறையே 200 மிலீ/ஹெ, 1250 மிலீ/ஹெ, 50 கி/ஹெ அளவில் சோளத்தில் வெற்றிகரமாகக் களைகளைக் கட்டுப்படுத்த முளைத்தலிற்குப் பிந்திய களைநாசினிகளாகப் பயன்படுத்தலாம் என முடிவுகள் வெளிப்படுத்தி உள்ளன.

- ஒக்சிபுளுரோபென் 480 கி / லீ எஸ்சீ, வெங்காயத்தில் களைகளைக் கட்டுப்படுத்தும் பயனுறுதியை அறிந்து கொள்வதற்காக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. புதிய வடிவம் தற்போது சிபாரிசு செய்யப்பட்டுள்ள ஒக்சிபுளுரோபென் 240 கி / லீ ஈ.சி ஐ விடச் சிறப்பாகக் களைகளைக் கட்டுப்படுத்துவது அவதானிக்கப்பட்டது. இதனை முளைத்தலிற்கு முந்திய களைநாசினியாக 300 மிலீ/ஹெ என்னும் அளவிற் பயன்படுத்த முடியும்.

## மண் வளம்

- மறுவயற் பயிர்களிடையே அதிகளவான இரசாயன உரம் சோளத்திற்கே இடப்படுகின்றது. எனவே தேவையை அடிப்படையாகக் கொண்ட நைதரசன் பசளை முகாமைத்துவ உபாயம் பயிரின் நைதரசன் பசளைப் பாவனை வினைத்திறனை அதிகரிக்கலாம். இலை நிற அட்டவணையின் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டது. இதில் சோளத்தின் நைதரசன் தேவையை அறிந்து கொள்வதற்கு இலை நிற அட்டவணையைப் பயன்படுத்த முடியும் எனக் காட்டியது. இது நைதரசன் இழக்கப்படுவதைக் குறைக்கும்.

- வெங்காயச் செய்கையில் யூறியாவே அதிகளவிற் பயன்படுத்தப்படும் நைதரசன் பசளையாகும். எனினும், யூறியாவின் பசளைப் பாவனை வினைத்திறன் குறைவானதாகும். வெங்காயத்தில் யூறியா, அமோனியம் சல்பேற்று ஆகியனவற்றின் பசளைப் பாவனை வினைத்திறனை அறிந்து கொள்வதற்காக ஒரு பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டது. யூறியாவுடன் ஒப்பிடும் போது அமோனியம் சல்பேற்றே அதிகளவான பசளைப் பாவனை வினைத்திறனைக் கொண்டிருந்தது. இம் முடிவுகளை உறுதி செய்வதற்காக பரிசோதனை மீண்டும் மேற்கொள்ளப்பட் உள்ளது.

- சோளத்திற்கு முச்சுப்பர் பொசுபேற்றிற்குப் பதிலாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட எப்பாவலை தனி சுப்பர் பொசுபேற்றைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை அறிந்து கொள்வதற்காக அடுத்தடுத்த வெளிக்களப் பரிசோதனைகள் ஒரு தொடராக மேற்கொள்ளப்பட்டன. மேற்கொள்ளப்பட்டப் பரிசோதனையில் சோளப் பயிர் எவ்விதமான குறிப்பிடத்தக்கத் தூண்டற்பேற்றினையும் பசளைகளுக்குக் காட்டவில்லை. இப்பரிசோதனை மீண்டும் மேற்கொள்ளப் படவுள்ளது.

## நீர் முகாமைத்துவம்

- இலங்கையில் பயிரிடப்படும் கலப்பினச் சோளத்தின் நீர்ப்பாசனத்திற்கு எவ்விதமான சிபாரிசுகளும் இல்லை. எனவே செங்கபில

மண்ணில் சோளத்தின் ஒவ்வொரு வளர்ச்சிப் பருவத்திற்கும் அவசியமான நீர் தேவையைக் கண்டு பிடிப்பதற்காக ஒரு வெளிக்களப் பரிசோதனை நடாத்தப்பட்டது. ஐந்து வித்தியாசமான நீர்ப்பாசன நீர் (IW) / திறண் தட்டு ஆவியாதல் (CPE) விகிதங்கள் தெரிவு செய்யப்பட்டு, கலப்பின சோளத்தின் (வர்க்கம் பெசிபிக் 999 சுப்பர்) வித்தியாசமான வளர்ச்சிப் பருவங்களில் (1^வது, 2^வது, 3^வது மாத காலம்) பிரயோகிக்கப்பட்டன. உச்ச அளவான தானிய விளைச்சல் (9.3 தொ/ஹெ) மூன்று கட்டங்களிலும் முறையே 0.85, 1.15, 1.15 விகிதங்களிலேயேப் பெறப்பட்டது. வளர்ச்சிப் பருவங்களின் முதலாவது, மூன்றாவது மாதங்களுடன் ஒப்பிடும் போது இரண்டாவது மாதத்தில் நீரை மட்டுப்படுத்துவது மிகவும் இக்கட்டானது என்பது அவதானிக்கப்பட்டது. எனவே செங்கபில மண்ணில் பயிரிடப்படும் கலப்பினச் சோளத்திற்கு மூன்று வளர்ச்சிக் கட்டங்களிலும் நீர்ப்பாசன நீர் (IW) / திறண் தட்டு ஆவியாதல் (CPE) இன் சிறந்த விகிதம் 0.7, 1.15, 1.15 ஆகும்.

- பாசிப்பயறில் வன் வித்துகள் காணப்படுவது பிரதானமான ஒரு பிரச்சினை ஆகும். மண்ணின் ஈரப்பதன் மட்டம் வன் வித்துக்கள் உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை ஹர்ச வர்க்கத்தின் கடந்த கால அனுபவங்கள் காட்டின. எனவே வித்தியாசமான வர்க்கங்களில் குறைந்தளவில் வன் வித்துக்கள் உருவாகுவதற்கு உகந்த மண் ஈரப்பதன் மட்டத்தை அறிந்து கொள்வதற்காக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டது. எம்ஐ 6 இல் குறைந்தளவான வன் வித்துக்களே காணப்பட்டன. மண்ணின் ஈரப்பதன் வேறுபாடுகள் எம்ஐ 6 இல் வன் வித்துகள் உருவாகுவதில் எவ்விதமான செல்வாக்கையும் செலுத்தவில்லை.

- மிளகாயில் நீர்ப்பாசன பசளைப்பாசனத்திற்கு நிரூபிக்கப்பட்ட சிபாரிசுகள் எதுவும் விவசாயத் திணைக்களத்திடம் இல்லை. 2013 இல் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் ஒவ்வொரு தடவை நீர்ப்பாசனம் செய்யும் போதும் பசளைப்பாசனம் மூலம் செங்கபில மண்ணில் கையால் பசளை இடுவதுடன் ஒப்பிடுகையில் பச்சை மிளகாயின் விளைச்சலை 22 வீதமும், நீர்ப் பாவனை வினைத்திறனை 25 வீதமும் அதிகரிக்க முடியும் எனக் கண்டு பிடிக்கப்பட்டது. முடிவுகளை உறுதி செய்வதற்காக இப்பரிசோதனை மீளவும் மேற்கொள்ளப்பட உள்ளது.

- நீர்ப் பாவனை வினைத்திறனை அதிகரித்து, உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கு தூவற் பாசனத் தொகுதிகளின் தளக்கோலத்தினைத் திட்டமிடல் மிக முக்கியமானதாகும். செங்கபில மண்ணில் வெங்காயப் பயிரின் வளர்ச்சி, விளைச்சல் என்பனவற்றில் தூவற் பாசன முறைகளின் வித்தியாசமான தளக்கோலங்களின் செல்வாக்கினை மதிப்பீடு செய்யும் நோக்கத்துடன் 2013 இல் பரிசோதனை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. செங்கபில மண்ணில் வெங்காயப் பயிர்ச்செய்கையில் உபகரணங்களி ற்கான செலவையும், நுகரப்படும் நீரின் அளவையும் குறைப்பதற்கு, ஒன்றன் மீது ஒன்று 40% மேவக் கூடியவாறு தூவற் பாசனத் தளக்கோலத்தினைத் திட்டமிட முடியும் என்பதை முடிவுகள் காட்டின. முடிவுகளை உறுதி செய்வதற்காக இப்பரிசோதனை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட உள்ளது.

- உலர் வலயத்தில் மேட்டு நில மட் காப்பிற்கு மட்காப்பு மண் அணைகளே மிகவும் நடைமுறைச் சாத்தியமுள்ளவை ஆகும். எனினும் இதிலும் பல தடைகள் உள்ளன. உலர் வலயத்தில் மேலதிக நீர்ப்பாசன வசதிகளைக் கொண்ட மானாவாரி மேட்டு நிலங்களில் மட்காப்பு மண் அணைகள் முறையாகத் தொழிற்படாமைக்கான காரணங்களை

மதிப்பீடு செய்வதற்காக நீண்ட கால ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. இப்பரிசோதனை ஒரு நீண்ட கால ஆய்வாக தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவுள்ளது.

## உயிரியற் தொழில்நுட்பம்

- மிளகாய் இலைச்சுருளலிற்கு எதிர்ப்புத் தன்மை / சகிப்புத் தன்மை கொண்ட ஆதாரங்களை (வம்சாவழிகள் / வர்க்கங்கள்) இனங் கண்டு, உறுதி செய்தல்.
  - பத்து உள்நாட்டு மிளகாய் குலவகைகள் வெளிக்களத்தில் தெரிவு செய்யப்பட்ட தோடு, இரண்டு குலவகைகள் மிளகாய் இலைச் சுருளல் சிக்கலைத் தாங்கி வளரக் கூடியனவாக உருவவியல் அடிப்படையில் இனங் காணப்பட்டுள்ளன. இதனை உறுதி செய்வதற்காக இந்த ஆய்வு மூலக்கூற்று தொழில்நுட்பத்துடன் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட உள்ளது.

- மிளகாயில் பரந்த கலப்பினவிருத்தி ஊடாக நோய் எதிர்ப்புப் பண்புகளை உட்புகுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
  - மிளகாயிற்கான முளைய மீட்புத் தொழில்நுட்பம் அபிவிருத்தி செய்யப்பட்டது.

- மூலக்கூற்று அடையாளப்படுத்திகளைப் பயன்படுத்தி QPM சோள வம்சாவழிகள் / வர்க்கங்களை அபிவிருத்தி செய்தல்
  - வம்சாவழிகளைத் தனிமைப்படுத்த F1 குடித்தொகை மகரந்தச் சேர்க்கை செய்யப்பட்டதோடு, முதலாவது பின்முகக் கலப்பு வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது.

- விதை வளர்ப்பின் ஊடாக முக்கியமான திராட்சை வர்க்கங்களை இனப்பெருக்கம் செய்தல்
  - விதை வளர்ப்புகளின் ஊடாக முக்கியமான திராட்சை வாக்கங்களை பாரியளவில் இனப்பெருக்கம் செய்தல். குழாய் நிலைமைகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்டதோடு, வளர்ப்பு ஆரம்ப நிலை முன்னேற்றமடைந்து வருகின்றது.

- விகாரி நுட்பங்களின் ஊடாக புதிய பெரிய வெங்காய வம்சாவழிகளை அபிவிருத்தி செய்தல்
  - வியந்தமடையாத கலங்களை உருவாகுவ தற்காக வித்தியாசமான நெறிமுறைகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

- மிளகாய் இலைச்சுருளல் வைரசுவிற்கான மரபணு திருத்திய எதிர்ப்புத் தன்மையை விருத்தி செய்வதற்கான தொடர்முறை பாகங்கள் இனங் காணப்பட்டுள்ளன.

## விதை உற்பத்தி

### இனவிருத்தியாளர், அத்தாட்சிப்படுத்திய ஃ வர்த்தக விதை உற்பத்தி

வயற் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் பின்வரும் அளவிலான அத்தாட்சிப்படுத்திய / வர்த்தக விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, விதை, நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கும், ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களிற்கும் வழங்கப்பட்டன (அட்டவணை 1.1.2).

**அட்டவணை 1.1.2: 2013 இல் உற்பத்தி செய்யப்பட்ட இனவிருத்தியாளர், அத்தாட்சிப்படுத்திய, வர்த்தக விதைகள்**

| பயிர் | வர்க்கம் | இனவிருத்தியாளர் விதை உற்பத்தி (கி.கி) | அத்தாட்சிப்படுத்திய/வர்த்தக விதை உற்பத்தி (கி.கி) |
|---|---|---|---|
| சோளம் | ருவன் | 39.0 | - |
| | பத்ரா | 39.0 | - |
| குரக்கன் | ராவனா | 29.0 | - |
| | ஓஷத | 29.0 | - |
| மிளகாய் | எம்.ஐ பச்சை | 3.5 | 52.0 |
| | கல்கிரியாகமை தெரிவு | 2.0 | 23.0 |
| | எம்.ஐ 2 | 3.5 | 35.0 |
| | கே.ஏ 2 | 1.0 | - |
| | எம்.ஐ.சி.எச் 3 | 5.00 | 200.0 |
| பாசிப்பயறு | ஆரி | 27.0 | 33.0 |
| | எம்.ஐ 5 | 31.5 | 21.0 |
| | எம்.ஐ 6 | 49.0 | 14.0 |
| பெரிய வெங்காயம் | தம்புளை தெரிவு உண்மை விதைகள் | 8.5 | 6.5 |
| உழுந்து | எம்.ஐ 1 | 34.0 | - |
| | அநுராத | 38.0 | 79.0 |
| சோயா அவரை | பீ.பி 1 | 175.0 | 55.0 |
| | எம்.ஐ.எஸ்.பி. 1 | 80.0 | 70.0 |
| கௌபீ | தவள | 5.5 | 20 |
| | எம்ஜசிபீ 1 | 57.0 | - |
| | எம்ஜ 35 | 10.0 | 46 |
| | வருணி | 46.0 | - |
| | பொம்பே | 24.6 | - |
| வெண்டி | ஹரித்த | - | - |
| | எம்ஜ 7 | 5.8 | - |
| பாகல் | எம்சி 43 | 7.0 | - |
| தக்காளி | கேசி 1 | 0.25 | - |
| புடோல் | எம்ஜ கட்டை | 1.9 | - |
| முருங்கை | குட்டை இனம் | - | 8.0 |

## தொழில்நுட்பப் பரம்பல்

- வளவாளர்களாக வயற் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் விஞ்ஞானிகள் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குபற்றினர்
  - வயற் பயிர்கள் உற்பத்தித் தொடர்பாக அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் களிற்கென நூற்றிற்கும் அதிகமான பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டன.
  - ஆறு தாவர சிகிச்சை முகாம்கள் நடாத்தப்பட்டன.
  - ஒரு தேசிய கண்காட்சியில் பங்குபற்றியது.
  - விவாயிகள் வாரத்தில் பங்குபற்றியமை
  - விரிவாக்க அலுவலர்களுடன் 250 இற்கும் அதிகமான வெளிக்கள விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- நிறுவனத்திற்கு விஜயம் செய்தவர்களிற்கும், தொலைபேசி ஊடாகவும் 600 வாடிக்கையாளர்களிற்கு தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டன.
- தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பாக சுமார் 14,000 துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன.
- விவசாயிகளிற்கும், ஏனைய நிறுவனங் களிற்கும் இலவசமாக விநியோகிக்கப்பட்ட நடுகைப் பொருட்கள்.

  விதை பொருட்கள்: 55 கிலோ கிராம் (மிளகாய், பெரிய வெங்காயம், உழுந்து, சோளம், இறுங்கு, கௌபீ, சோயா அவரை, குரக்கன், நிலக்கடலை, சூரிய காந்தி, வெண்டி, தக்காளி, பாகல், தினை, சாமை, முருங்கை)

## தொலை காட்சி / வானொலி நிகழ்ச்சிகள்

- 2013 இல் வயற் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் விஞ்ஞானிகளின் பங்களிப்புடன் ஏழு வானொலி நிகழ்ச்சிகளும், மூன்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.

## செய்தித்தாள் கட்டுரைகள்

- 2013 இல் வயற் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் விஞ்ஞானிகளின் பங்களிப்புடன் ஆறு செய்தித் தாள் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன.

## அபிவிருத்தித் திட்டங்கள்

மிளகாய், சோளம், வெங்காயம் என்பனவற்றின் கலப்பினங்கள், திறந்த மகரந்தச் சேர்க்கையடையும் வர்க்கங்கள் என்பனவற்றை அபிவிருத்தி செய்வதற்கான பயிர் அபிவிருத்தித் திட்டத்திற்கு உதவும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் உப திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகள் திட்டமிடப்பட்டு, ஆரம்பிக்கப்பட்டன.

- கட்டுப்படுத்தப்பட்ட சுற்றாடல் நிலைமைகளின் கீழ் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக சுற்றாடல் கட்டுப்படுத்தப்பட்ட பெரியளவான தாவர இல்லம் ஒன்றை நிர்மாணித்தல்.
- வறட்சிக்கான வர்க்கங்களைத் தெரிவு செய்வதற்கான கூடாரங்களை நிர்மாணித்தல்.
- ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக மழை யிலிருந்து பாதுகாப்பதற்கான இல்லங்களை நிர்மாணித்தல்.
- வெப்ப மாறல் அறைகளை நிர்மாணித்தல்.
- தற்போதுள்ள நீர்ப்பாசனத் தொகுதிகளை புனருத்தாரணம் செய்தல் / மேம்படுத்தல் ஆகியவற்றின் ஊடாக நீர்ப்பாசன

- வசதிகளை வலுவூட்டலும், நுண் நீர்ப்பாசன முறைகளை அறிமுகப்படுத்தலும்.
- தற்போதுள்ள ஆய்வுகூடங்கள், தாவர இல்லங்கள், களஞ்சிய வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்தல்.
- பெரியளவிலான 02 பெரிய குளிரூட்டப்பட்ட அறைகளை ஸ்தாபித்தல்.
- வெளிக்கள நடவடிக்கைகளை பொருத்தமான முறையில் இயந்திரமயமாக்குவதற்கு வெளிக்கள இயந்திரங்களை கொள்வனவு செய்தல்.
- ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்.
- சுற்று வேலிகளை பலப்படுத்துதல்.

## 2014 ற்கான திட்டங்கள்

### ஆராய்ச்சி

- மறு வயற் பயிர்களின் பயிர் மேம்பாடும், வர்க்க அபிவிருத்தியும்
- மறு வயற் பயிர்களில் காலநிலை மாற்றங்களின் தாக்கங்கள்
- மறு வயற் பயிர்களிற்கான நோய், பீடை முகாமைத்துவ உபாயங்களை அபிவிருத்தி செய்தல்
- மறு வயற் பயிர்களிற்கான நீர் பாவனை வினைத்திறனையும், போசணை பாவனை வினைத்திறனையும் ஊக்குவித்தல்.

### இனவிருத்தியாளர் விதை உற்பத்தி

- சிபாரிசு செய்யப்பட்ட மறு வயற் பயிர்களினதும், தக்காளி, வெண்டி, பாகல் ஆகியவற்றினதும் இனவிருத்தியாளர் விதை உற்பத்தி.
- வெங்காயத்தின் சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கத்தின் (தம்புளை தெரிவு) இனவிருத்தியாளர் தாய்க் குமிழ், விதை உற்பத்தி.

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பணிப்பாளர் | 01 |
| மேலதிகப் பணிப்பாளர் | 01 |
| பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) | 01 |
| ஆராய்ச்சி அலுவலர்கள் | 25 |
| விவசாய அலுவலர்கள் | 01 |
| விவசாயப் பொருளியலாளர் | 01 |
| நிகழ்ச்சி உதவியாளர் (விவசாயம்) | 03 |
| ஆராய்ச்சி உதவியாளர்கள் | 19 |
| விவசாயப் போதனாசிரியர்கள் | 05 |
| ஆராய்ச்சி உப உதவியாளர்கள் | 09 |
| தொழில்நுட்ப உதவியாளர்கள் | 02 |
| அரச முகாமைத்துவ உதவிச் சேவை அலுவலர்கள் | 14 |
| பண்ணை சுத்திகரிப்பாளர் | 01 |
| அலுவலக உதவியாளர்கள் | 02 |
| சாரதிகள் | 08 |
| தாவர ஒட்டுனர்கள் | 01 |
| களஞ்சிய உதவியாளர்கள் | 02 |
| சுற்றுலா விடுதிக் காப்பாளர் | 01 |
| உழவு இயந்திர இயக்குநர் | 04 |
| காவலாளிகள் | 30 |
| தொழிலாளர்கள் (நிரந்தரம்) | 119 |
| தொழிலாளர்கள் (ஒப்பந்தம்) | 204 |
| **மொத்தம்** | **454** |

# 1.1.1 தானிய அவரைகள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (GLORDC), அங்குனுகொலபலஸ்ஸ

தானிய அவரைகள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமானது தென் பகுதி உலர் வலயத்தில் அமைந்துள்ள ஒரு முக்கிய விவசாய ஆராய்ச்சி நிலையம் ஆகும். இந்நிலையமானது தானிய அவரைகள், எண்ணெய் வித்துப் பயிர்கள் மற்றும் பிரதேச ரீதியில் முக்கியத்துவமுடைய மரக்கறிகள் மற்றும் பழப்பயிர்களின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் முக்கிய கவனம் செலுத்துகின்றது. உற்பத்தி தொடர்பிலான தொழில்நுட்பப் பரம்பலை மேம்படுத்துவது இந்நிலையத்தின் மற்றுமொரு முக்கிய பொறுப்பாகும். தேசிய மற்றும் பிராந்திய தேவைகளைப் கருத்திற் கொண்டு பயிர், மண்-நீர் முகாமைத்துவம் ஆகிய முக்கிய துறைகள் சார்ந்ததாக அனைத்து முக்கிய நிகழ்ச்சிகளும் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றது. இவற்றிக்கு மேலதிகமாக இனவிருத்தியாளர் விதையுற்பத்தி மற்றும் அடிப்படை நடுகைப் பொருட்களின் உற்பத்தி ஆகியவற்றில் ஈடுப்படுவதுடன் பிரதேசங்களுக்குப் பிரத்தியேக மான பசளை சிபாரிசுகளை மேற்கொள்ளுதல் மற்றும் கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் மற்றும் ஈடுபாடுடையவர்கள் ஆகியோருக்கு தொழில்நுட்பத் தகவல்களைப் பரப்புதல் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றது.

## பாதீடு

**அட்டவணை 1.1.1.1: வருடாந்தப் பாதீடு 2013, (ரூபா)**

| செலவுத் தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு % |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 7,959,500 | 7,511,164 | 94 |
| நடைமுறைச் செலவு | 22,671,600 | 20,945,365 | 92 |
| **செயற்திட்டங்கள் (NARP)** | | | |
| • நடுத்தர காலத்தையும், பெரிய விதையையும் உயர் விளைச்சலையும் உடைய நிலக்கடலை வர்க்க விருத்தி | 268,700 | 264,700 | 99 |
| • தெரிவு செய்யப்பட்ட கடுகு வம்சாவழிகளில் இசைவாக்கப் பரிசோதனை. | 562,400 | 560,525 | 100 |
| • தண்டு மற்றும் வேர் அழுகல் நோய்க்கான சகிப்புத் தன்மையுடையதும் வெள்ளை விதைகளையுடையதும் உயர் விளைச்சலை தருகின்றதுமான எள்ளு வர்க்கங்களின் விருத்தி. | 410,500 | 404,500 | 99 |
| • வறட்சியைத் தாங்கி வளரும் கௌபி வர்க்கங்களின் மேம்பாடு | 538,000 | 532,335 | 99 |
| • கௌபி மற்றும் பாசிப்பயறு ஆகிய பயிர்களுக்கு வினைத் திறனுடைய நீர் முகாமைத்துவ பொதி ஒன்றின் விருத்தி | 840,000 | 839,736 | 100 |

| | | | |
|---|---|---|---|
| • கௌபி செய்கையில் வைரசு நோய்களை அடையாளம் காணல் மற்றும் கட்டுப்பாட்டு பொதி ஒன்றின் விருத்தி | 492,500 | 492,000 | 100 |
| • நிலக்கடலை விளைச்சலில் களைகளின் தாக்கம் மற்றும் பயிர் - களை போட்டிக் காலம் பற்றிய கற்கை | 196,100 | 192,453 | 98 |
| • விதைகளற்ற திராட்சை வர்க்கங்களை விருத்தி செய்வதற்காக மூலவுயிருருச் சேகரிப்பு பாதுகாப்பு மற்றும் மதிப்பீடு | 1,317,400 | 1,317,275 | 75 |
| 1000 மில்லியன் செயற்றிட்டம் | 21,505,000 | 15,316,080 | 75 |
| **மொத்தம்** | **57,112,500** | **48,726,931** | **85** |

## முன்னேற்றம்

### ஆராய்ச்சி

#### பயிராக்கவியல்

- தென் பகுதி உலர்வலயத்தில் உள்ள ($DL_{1b}$, $DL_5$) மானாவரி விவசாயத் தொகுதிகளின் இயல்புகள் பற்றி அறிவதற்குரிய ஆய்வு ஒன்று வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இங்கு OFC செய்கையானது சிறிய அளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதோடு கௌபீ மற்றும் நிலக்கடலை மிகவும் பிரபல்யமான OFC க்களாக காணப்படுகின்றன. இங்குள்ள விவசாயிகள் தென்னை மற்றும் வாழை ஆகிய பயிர்களுக்கே அதிக முன்னுரிமை வழங்குகின்றனர். பெரும்பாலானோர் காலநில மாற்றங்கள் பற்றி அறிந்திருந்தாலும் மண்ணீரப்பதன் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பின்தங்கியவர்களாகவே காணப்படுகின்றனர். விவசாயிகள் புதுப்புது தொழில் நுட்பங்களை அறிவதற்கு ஆவலுடையவர்களாக இருப்பினும் பாரம்பரிய மானாவரிச் செய்கையின் காரணமாக இவற்றை நடைமுறைப்படுத்துவது குறைவாகவே காணப்படுகின்றது.
- $DL_{1b}$, விவசாய சூழலியல் பிரதேசங்களில் பாசிப்பயறுச் செய்கையில் றைசோபியா உட்புகுத்தலானது DOA இன் P மற்றும் K பசளைச் சிபாரிசுகளுடன் அதிகளவிலான எண்ணிக்கையில் வேர்முடிச்சுக்களை குறிப்பிடத்தக்களவில் கொண்டிருந்தாலும் உழுந்தின் விளைச்சலில் எவ்விதமான குறிப்பிடத்தக்க வேறுபாட்டையும் காணப்பிக்க வில்லை.
- பாசிப்பயறு, மினேரி மற்றும் மரக்கறிச் சோயா அவரை ஆகிய OFC க்கள் மூன்றாவது பருவத்தில் (சிறுபோகத்தின் பின்பு உடனடியாக நடப்பட்டவை) சிறப்பான அடைவுகளைத் கொண்டிருந்தாலும் பயிர் முதிர்ச்சியடைவதற்கு 60 நாட்களிலும் அதிக காலம் எடுத்தது.

### தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கச் சோதனை (NCVT)

#### கௌபி

நியமச் சோதனை வர்க்கங்களாக MICPI, வருணி மற்றும் பொம்பே ஆகியவற்றுடன் நான்கு புதிய வருகைகள் மதிப்பிடப்பட்டன.

#### பாசிப்பயறு

$MI_5$, $MI_6$ ஆகிய நியம வர்க்கங்களுடன் 5 புதிய வருகைகள் மதிப்பிடப்பட்டன.

#### சோளம்

- நியம சோதனை வர்க்கமான ரூவானுடன் 3 OPV வருகைகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- சிறந்த கலப்பினமான NK 40 மற்றும் பசுபிக் 984 ஆகியவற்றுடன் இந்திய சர்வதேச கலப்பினங்கள் மற்றும் CYMMYT ஆகியவற்றின் 14 வருகைகள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- சிறந்த உள்ளகக் கலப்பின சோள வம்சாவழிகளான CML - 451 மற்றும் CML 171 என்பவை பெருக்கமடையச் செய்யப்பட்டன.

## பயிர் மேம்பாடு

### எண்ணெய்ப் பயிர்கள்

#### நிலக்கடலை:~

- நடுத்தர பருமன் மற்றும் நடுத்தர வயதுடைய சிறந்த வர்க்கங்கள் (ICGV - 87187, ICGV - 86590 மற்றும் ICGV - 01276) விருத்தி செய்யப்பட்டு உத்தியோகபூர்வ விடுவித்தலுக் காக வர்க்க விடுவிப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- பெரிய விதைகளையுடைய 4 மாத வயதுடைய நான்கு (ICGV - 05200, ICGV - 06189, ICGV 06216 மற்றும் ICGV - 05198) பெரிய விதைகளையுடைய 3 1/2 மாத வயதைக் கொண்ட இரண்டு (ICGV - 06214, மற்றும் ICGV - 00073) நடுத்தர பருமனையுடைய 3 1/2 மாத வயதைக் கொண்ட மூன்று (ICGV - 00068, ICGV 04195 மற்றும் ICGV - 00073) ஆகிய சிறந்த நிலக்கடலை வம்சாவழிகள் NCVT க்காக இனங்காணப்பட்டுள்ளன.

#### கடுகு

- மூன்று சிறந்த கடுகு வம்சாவழிகள் விவசாயிகளின் வயல்களில் பரீசோதிக்கப்பட்டு, விடுவிப்புக் குழுவிற்கு பிரேரிப்பதற்காக C 241 மற்றும் புத்தள தெரிவு ஆகியவை அடையாளங் காணப்பட்டுள்ளன.

#### எள்ளு

- NCVT இல் மேலதிக மதிப்பீட்டுக்காக வெள்ளை நிற (ANKWS 22 மற்றும் ANKWS 38) மற்றும் கறுப்பு நிற (ANKWS 9) விதைகளையுடைய சிறந்த எள்ளு வம்சாவழிகள் அடையாளங் காணப்பட்டுள்ளன
- விளைச்சல் சோதனைகளுக்காக 30 குலவகைகள் மதிப்பீடு செய்யப்பட்டு ஆறு வம்சாவழிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

#### சோயா அவரை

- விளைச்சல் சோதனைகளுக்காக 14 சோயாஅவரை வம்சாவழிகள் தரமுயர்த்தப் பட்டுள்ளன.

#### சூரியகாந்தி

- இரண்டு சூரியகாந்தி கலப்பினங்கள் (ஹயோலிக் 41 மற்றும் S 40) கள நிலமைகளின்கீழ் மதிப்பீடு செய்யப்பட்டு இலங்கையில் செய்கை பண்ணுவதற்குப் பொருத்தமானவை என இனங்காணப் பட்டுள்ளன.

### தானிய அவரைகள்

#### பாசிப்பயறு

- நாற்பத்து ஐந்து குலவகைகள் மதிப்பீடு செய்யப்பட்டு 6 வம்சாவழிகள் PYT க்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.
- கலப்பின விருத்தி மற்றும் முன்னேற்றம் - நான்கு இனங்கலப்புகள் மேற்கொள்ளப் பட்டன. $F_1$, $F_5$ சந்ததிகள் முன்னேற்றப்பட்டன. ($F_1$ - $F_5$)

- தெரிவு செய்யப்பட்ட ஆறு பாசிப்பயறு வம்சாவழிகள் முதற்கட்ட விளைச்சல் பரிசோதனைகளில் (PYT) மதிப்பீடு செய்யப்பட்டன.
- தெரிவு செய்யப்பட்ட ஆறு பாசிப்பயறு வம்சாவழிகள் பாரிய விளைச்சல் பரிசோதனைகளில் (MYT) மதிப்பிடப்பட்டன.
- விகார குடித்தொகைகளில் ($M_2$) இருந்து தெரிவு செய்யப்பட்ட தானியங்கள் முன்னேற்றப்பட்டுள்ளன.

### கௌபி

- CP 105 மற்றும் CP 128 ஆகிய கௌபி குலவகைகள் PYT க்கு ஒப்பீட்டளவில் வறட்சியைத் தாங்கக்கூடியவை என அடையாளம் காணப்பட்டுள்ளன.
- வர்க்க விடுவிப்புக் குழுவுக்குப் (VRC) பிரேரிப்பதற்காக CVA-11 மற்றும் CVA 14 ஆகிய சிறந்த கௌபி வம்சாவழிகள் ஒப்பீட்டளவில் உயர் விளைச்சல் உடையவை என அடையாளம் காணப்பட்டுள்ளன.

### கொள்ளு

- ANK கறுப்பு மற்றும் ANK 3 ஆகிய இரண்டு சிறந்த கொள்ளு வம்சாவழிகளும் ஒப்பீட்டளவில் உயர் விளைச்சல் உடையனவாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன் இவை வர்க்க விடுவிப்புக்காக விதந்துரைக்கப்பட்டள்ளன.

## மரக்கறிகள்

### பூசணி

- ANKP - 0075, ANKP - 0069, ANKP- 0070, ANKP- 0045 மற்றும் ANKP - 0074 ஆகியன சிறந்த வம்சாவழிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.
- எட்டு உள்ளகக் கலப்பின வம்சாவழிகள் 70% தூய்மையுடன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

### வெண்டி

- ANKO - 00001, ANKO - 00022 மற்றும் ANKO - 00016 ஆகியன NCVT க்காக அடையாளங் காணப்பட்டுள்ளன.
- கலப்பினவிருத்தி வம்சாவழிகள் ஆறு மேலதிக மதிப்பீட்டுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

### தும்பை

- உயர் விளைச்சல் மற்றும் பெரிய பருமனுடைய பழ வர்க்கங்களைப் பெறுவதற்காக கலப்பின வர்க்க விருத்தி நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.
- மேலதிக மதிப்பீட்டுக்காக வயல்களில் 16 கலப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.
- வெளியகப் பாதுகாத்தலுக்காக 04 மூலவுயிருருக்கள் பராமரிக்கப்படுகின்றன.
- விசால் மற்றும் கேசர ஆகிய தும்பைத் தாய்தாவர தொகுதிகள் வயல்களில் பராமரிக்கப்படுகின்றன.

### பெரிய வெங்காயம்

- விவசாயிகளுக்கு நாற்றுக்களை வழங்குவதற்காக 150 நாற்று மேடைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மேலும் 150 நாற்று மேடைகள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக GLORDC யில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

### ருகுணு மிளகாய்

- ருகுணு மிளகாய் குடித்தொகைகள் அவற்றின் பூர்வீக இயல்புகளுடன் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## பூங்கனியியல்

### விளா

- இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்து 64 விளா மரக் குலவகைகள் சேகரிக்கப்பட்டு ஒட்டப்பட்டுள்ளன.

### வில்வம்

- இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்து 15 விம்வம் குலவகைகள் சேகரிக்கப்பட்டு ஒட்டப்பட்டுள்ளன.

### மா

- GLORDC அங்குணகொலபலஸ்ஸவில் உள்ள வயதான மா மரங்கள் வன் கத்தரித்தல் மேற்கொள்ளப்பட்டு துளிர்க்கச் செய்தல் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### வாழை

- கோழிக்கூடு (2), சீனிக்கதலி (4), மற்றும் புளி வாழை (3) ஆகிய ஒன்பது சிறந்த வாழை குலவகைகளில் மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டது.
- “நதி” மற்றும் “அக்ரா” ஆகிய வாழை வர்க்கங்களின் தாய்த் தாவரத் தோட்டம் வெற்றிகரமாகப் பராமரிக்கப்பட்டது.

### பப்பாசி

- பப்பாசி வளையப்புள்ளி வைரஸ் நோய் நிகழ்ச்சிக்கான (PRSV) வர்க்க விருத்திக்காக 12 வம்சாவழிகள் அடையாளம் காணப்பட்டன. (சந்ததி 3)

### திராட்சை

- வித்துக்களற்ற நான்கு திராட்சைக் குலவகைகள் மற்றும் வித்துக்களை உடைய நான்கு திராட்சை வர்க்கங்களைக் கொண்டு ஓர் வயற் பரிசோதனை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது

## மண் விஞ்ஞானம்

- நெற் செய்கையில் நைதரசன் பதித்தல் மற்றும் P கரைசலடைதல் ஆகியவற்றுக்காக இரண்டு உள்ளூர் உயர் வளமாக்கிகள் மதிப்பிடப்பட்டுள்ளன. நைதரசன் மற்றும் P அற்ற நிலமைகளுடன் ஒப்பீடுகையில் இரு பக்ரீரியாக்களும் சிறப்பாகச் செயலாற்றின. இருந்தும் இவற்றின் பங்களிப்பானது 50% அசேதன வளமாக்கித் தேவையைச் சிறைவேற்றுவதற்குப் போதுமானதாக அமையவில்லை.
- நெற் பயிருக்காக இரண்டு உள்ளூர் திரவப் பசளைகள் (Golf மற்றும் SMC express) மதிப்பிடப்பட்டன. பரிசோதனைக் காலத்தின் போது நெல்லின் விளைச்சலில் எதுவித தாக்கமும் காண்பிக்கப்படவில்லை
- தென்பகுதி உலர் வலயத்தில் இருந்து 100 மண் மாதிரிகள் சேகரிக்கப்ட்டு அவை மா மற்றும் நுண் மூலகங்களுக்காகப் பகுப்பாய்வு செய்யப்பட்டன.
- GLORDC யின் பிரதேச எல்லைக்குள் உப்பு தேங்கியுள்ள இடங்கள் அடையாளங் காணப்பட்டன. மேற்படி பாதிக்கப்பட்ட இடங்களுக்கு மீளவளமாக்கல் பொதி அறிமுகப்படுத்தப்பட்டது.

  மண் பரிசோதனை நிகழ்ச்சி தொடர்கின்றது

## நீர் முகாமைத்துவம்

- பிரதேசத்திற்குரிய நீர் பற்றுதல் வளையி விருத்தி செய்யப்பட்டது. ஆறு நாட்கள் நீர்ப்பாசன இடைவெளி மிகவும் சிறந்ததாகக் காணப்பட்டது. மிளகாய்ச் செய்கையில் பசளைப் பாசனத்தின் மூலம் பிரிக்கப்பட்ட பசளைப் பிரயோகமானது விளைச்சலை இரு மடங்காக்கியதை பசளைப் பாசன கற்கைகள் தெளிவுபடுத்தின
- நீர்ப் பற்றாக்குறை தகைப்பு நிலமைகளில் கறுப்பு பொலித்தின் மூடுபடையானது ஏனைய பரிகரணங்களுடன் ஒப்பிடுகையில்

மிகவும் சிறந்த அடைவுகளைக் காணப்பித்தது.

## உணவு விஞ்ஞானம்

### பாசிப்பயறு

- பாசிப்பயறின் 4 விடுவிக்கப்பட்டுள்ள வர்க்கங்கள் மற்றும் 7 சிறந்த வம்சாவழிகளின் போசணை உள்ளடக்கம் (பண்படாத கொழுப்பு, ஈரப்பதன் மற்றும் கனியுப்புக்கள்) மதிப்பிடப்பட்டது. மேற்படி வர்க்கங்களுள் "ஆரி" அதிகளவில் கனிப்பொருள் உள்ளடக்கத்தைக் கொண்டிருந்தது. உயர் கொழுப்பு உள்ளடக்கமானது ஆரி, ஹர்ச மற்றும் MI - 06 ஆகியவற்றில் கண்டறியப்பட்டது.

### நிலக்கடலை

- மூன்று நடுத்தரப் பருமனுடைய சிறந்த நிலக்கடலை வம்சாவழிகள் மற்றும் மூன்று விடுவிக்கப்பட்ட நிலக்கடலை வர்க்கங்கள் ஆகியவற்றின் போசணை நிலமை (பண்படாத கொழுப்பு, ஈரப்பதன் மற்றும் கனியுப்புக்கள்) மதிப்பிடப்பட்டது. CGV - 01276 எனும் வர்க்கத்தின் கனிப்பொருள் உள்ளடக்கமானது ஏனையவற்றில் இருந்து குறிப்பிடத்தக்க வேறுபாட்டைக் காண்பித்தது, கொழுப்பு உள்ளடக்கமானது அனைத்து வர்க்கங்களி லும் ஒப்பிடக்கூடிய அளவில் காணப்பட்டது.

### வாழை

பொறிமுறை மூலங்களின் உதவியுடன் புளி வாழையில் இருந்து இனிப்பை (Nectar) பிரித்தெடுக்கும் முறையானது வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.

### தாவர நோயியல்

- பாசிப்பயறு மஞ்சள் சித்திரசு வடிவ வைரஸ் தாக்கம் பற்றி (MYMV) அறிவதற்காக வயல் நிலமைகளில் MI - 5, MI - 6 ஆகிய வர்க்கங்கள் அடங்கலாக 13 குலவகைகள் தேர்வு செய்யப்பட்டன. இவற்றுள் 12 பிறப்புரிமை அமைப்புக்கள் எதிர்ப்புத் தனமையுடையனவாகக் காணப்பட்டன. அவை:- MB- 4, MB - 27, MB - 28, MB - 34, MB - 35,MB - 49, MB - 52, MB - 55, MB - 61, MB - 66, மற்றும் MB - 71 என்பன ஆகும்.
- வைரசுக்கு எதிராகத் தெரிவு செய்யப்பட்ட 80 கௌபிக் குலவகைகளில் 50 வம்சாவழிகள் உயர் எதிர்பபுத் தன்மையைக் காண்பித்தன. 27 பிறப்புரிமை அமைப்புக்கள் எதிர்ப்புத்தன்மை தன்மையும், ஒரு பதிவு ஓரளவான தொற்றுதலுக்குட்படும் தன்மையையும் காண்பித்தன. மேற்படி பரிசோதனை வயல் நிலமைகளில் மேற்கொள்ளப்பட்டது.
- பொலித்தீன் மற்றும் வலை மூடுபடைகளுடன் தூவல் நீர்ப்பாசன முறையின் பிரயோகமானது மிளகாயில் இலைச் சுருளல் தொற்றுகைக்குட்பட்ட தாவரங்களின் நூற்று வீதத்தை குறிப்பிடத்தக்க அளவில் குறைந்தது. அதிகளவில் நோய்த் தாக்கம் சால் நீர்ப்பாசன முறையில் பதிவாகியது.

### பூச்சியியல்

- பாசிப்பயறில் மஞ்சள் சித்தர வடிவ வைரஸ் தொற்றினைக் குறைப்பதில் பாசிப்பயறு நடுகைக்கு ஒரு வாரத்திற்கு முன்பாக 3 வார வயதுடைய குரக்கன் நாற்றுக்களின் நடுகை தியோமெத் தொக்சான் 70% WS பரிகரணம், மஞ்சள் ஒட்டுத் தன்மையுடைய பொறிகளின் நிர்மாணம் மற்றும் மறிகோல்ட் பயிரை விரட்டும் பயிராக நடுதல் என்பன வினைத்திறனாகச் செயற்பட்டன.
- கௌபியில் Callosobruchus maculates இனைக் கட்டுப்படுத்துவதில் நீருடன் வேம்பு விதைப் பிளித்தெடுப்பு (40g / l/ நீர் எனும் வீதத்தில்) அல்லது நீருடன் வேப்பெண்ணெய் (3ml / l/ நீர் எனும் வீதம்)

ஆகியவற்றின் பிரயோகமானது வினைத்திறனாகச் செயற்பட்டன.

- உயர் அடர்த்தி பொலி எதிலினால் (HDPE) உருவாக்கப்பட்ட 100 மைக்குறோன் மூன்று படையடைய பை மற்றும் சாதாரண பொலித்தின் பை என்பன Bruchid தொற்றுகளற்ற அவரைகளின் உத்தம வளி இறுக்க நிலை சேமிப்புக்கு (சுய வாழ்வு காலம் 6 மாதங்களை உடையது) மிகவும் சிறந்தனவாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

### களை விஞ்ஞானம்

- நிலக்கடலை நடுகைபண்ணப்பட்டதில் இருந்து 3 - 8 வார காலப் பகுதியானது களைகளற்ற அவதி கால எல்லை என்பதை களைக் கட்டுப்பாட்டுக் கற்கைகள் தெளிவுபடுத்தின.

## ARS, வீரவில ($DL_5$)

### நிலக்கடலை

- நிலக்கடலைச் செய்கையில் 10 நாட்கள் நீர்ப்பாசன இடை வெளியானது மிகச் சிறந்த செலவு வினைத்திறனுடைய நீர்ப்பாசன இடை வெளியாகக் கருதப்படுகின்றது.

### பெரிய வெங்காயம் மற்றும் சின்ன வெங்காயம்

- செப்பரம்பர், ஒக்ரோபர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நடுகை பண்ணும் போது அந்திரக்னோசு மற்றும் குமிழ் அழுகல் போன்ற பங்கசு நோய்த் தொற்று அதிகமாக ஏற்படுவதால் மேற்கூறிய காலப்பகுதி நடுகைக்குப் பொருத்தமற்றதாகக் காணப்படுகின்றது.

### விதை மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தி

- இவ்வருடம் 750 தும்பை தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டன.

**அட்டவணை 1.1.1.2 2013 ஆம் காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட விதை.**

| பயிர் | வர்க்கம் | விதைகள் | | | நடுகைப் பொருள் | |
|---|---|---|---|---|---|---|
| | | இனவிருத்தியாளர் (Kg) | வர்த்தக விதை (Kg) | நுகர்வு விதை (Kg) | உற்பத்தி செய்யப்பட்ட எண்ணிக்கை | வழங்கிய எண்ணிக்கை |
| நிலக்கடலை | டிகிரி | 60 | | | | |
| | இந்தி | 106 | | | | |
| | வளவ | 22 | 2865 | - | | |
| | திஸ்ஸ | 90 | | | | |
| | ANKG 1 | 22 | | | | |
| எள்ளு | உமா | 3.5 | | | | |
| | மாலி | 1.5 | 215 | | | |
| கௌபி | | - | 70 | - | | |
| சோயாஅவரை | | - | - | 188 | | |
| நெல் | | - | 16138 | 7488 | | |
| குரக்கன் | | - | 214 | 112 | | |
| சோளம் | | - | - | 73 விதைகள்<br>575 (உடன் பொத்திகள்) | | |
| மண்டறின் | | - | - | - | 10,000 | 1,300 |
| மாதுளை | | - | - | - | 15,000 | 10,000 |
| அதிகவிலான TC இனம் பெருக்கத்திற்குரிய வாழை | | - | - | - | - | 2,300 |

## தொழில்நுட்பப் பரிமாற்றம் மற்றும் பயிற்சி

**பின்வரும் வானொலி நிகழ்ச்சிகள் தொடரப்பட்டன.**

- ஆராய்ச்சி - GLORDC இன் சேவைகள் மற்றும் அபிவிருத்தி.
- ருகுணு ஜுவத்தவில் உள்ளுர் சோள வர்க்கங்களுக்கு எதிராக இறக்குமதி செய்யப்பட்ட கலப்பினச் சோளம்.
- குரக்கன் செய்கை தொடர்பான தொழில்நுட்பப் பரம்பல்.
- அம்பாந்தோட்டை மாவட்டத்தில் விவசாயிகளுக் காக வெங்காயச் செய்கை.
- பீடை நாசினிகளின் பாதுகாப்பான கையாளுகை தொடர்பிலான 3 வானொலி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- விவசாயத் திணைக்களத்தினால் 2013இல் விடுவிக்கப்பட்ட வர்க்கங்கள்.

### வழங்கப்பட்ட சேவைகள்

- மண் பரிசோதனை அடிப்படையிலான பசளைச் சிபாரிசு - 24 மண் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.
- பண்ணையாளர்களுக்கான ஆலோசனை சேவைகள்.
- பயிர்ச் சிகிச்சைகள்.

### வெளிநாட்டுப் பயிற்சிகள்

- அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான தானிய அவரை, எண்ணெய்பயிர், மற்றும் நீர்ப்பாசன முறைகளின் புரிந்தணர்வுப் பயன்பாட்டுத் தொழில்நுட்பம் - சீனா.
- மண் -நீர் முகாமைத்துவம் IAEA - ஒஸ்றியா.
- ஆசியப் பிராந்தியத்திற்கான நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உணவு பதப்படுத்தல் நிறுவனங்களுக்கான கொள்கை அளவீடு தொடர்பிலான பயிற்சிப் பட்டறை.
- பயிர்த் தாவரங்களில் விகாரப் பிறப்பாக்கம் தொடர்பிலான புதிய அணுகு முறை - IAEA - RCA சீனா.

## 2014 ற்கான திட்டம்

### நிலக்கடலை

- பாரம்பரிய மற்றும் விகார இனவிருத்தி ஊடாக வர்க்க விருத்தி.
- நோய் பீடை தாக்கங்களுக்கு எதிர்ப்புடைய வர்க்க தெரிவு.
- அதிக மற்றும் நடுத்தர வயதுடைய நிலக்கடலை வர்க்கங்களுக்கான NCVT மற்றும் நிலக்கடலை வர்கங்களுக்கான வர்க்க இசைவாக்கச் சோதனை (VAT).
- நிலக்கடலை வர்க்கங்களில் இனவிருத்தியாளர் விதையுற்பத்தி - திஸ்ஸ, இந்தி, வளவ, மற்றும் ANKG – 1.
- சிறந்த நிலக்கடலை வம்சாவழிகளில் விதைப் பெருக்கம்.

### எள்ளு

- விளைச்சல், பீடை மற்றும் நோய் சகிப்புத் தன்மை ஆகியன தொடர்பிலான வர்க்கத் தேர்வு.
- பாரம்பரிய மற்றும் விகார இனவிருத்தியூடான வர்க்க மேம்பாடு.
- எள்ளுப் பயிரில் இனவிருத்தியாளர் விதை உற்பத்தி - உமா மற்றும் மாலி.

### கடுகு

- சிறந்த கடுகு வம்சாவழிகளில் விதைப் பெருக்கம்.

### சோயாஅவரை

- சோயா அவரையில் கலப்பினப் பிறப்பாக்க நிகழ்ச்சி.

### பாசிப்பயறு

- வர்க்க மேம்பாட்டு நிகழ்ச்சி.
- விரைவாக முதிர்ச்சியடைந்து உயர் விளைச்சலைத் தரக்கூடிய பாசிப்பயறு வர்க்கங்களின் PYT ஊடான விருத்தி.
- உயர் விளைச்சல் மற்றும் உயர் தரமுடையதும், ஏனைய பயிராக்கவியல் இயல்புகளைக் கொண்டதுமான வர்க்க விருத்திக்குரிய MYT.
- தூண்டப்பட்ட விகாரத் தொழில் நுட்பத்தினூடாக வறட்சியைத் தாங்கக்கூடிய பாசிப்பயறு வர்க்கங்களின் விருத்தி.
- NCVT மற்றும் ஏனைய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்குரிய சிறந்த வம்சாவழிகளில் விதைப் பெருக்கம்.

### கௌபி

- நோய் பீடைச் சகிப்புத் தன்மை மற்றும் விளைச்சல் ஆகியவற்றுக்குரிய வர்க்கத் தேர்வு.
- பாரம்பரிய தாவர இனவிருத்தி தொழில்நுட்பத்தின் மூலம் வறட்சியைத் தாங்கக் கூடிய கௌபி வர்க்கங்களின் விருத்தி.
- வர்க்க விருத்தி நிகழ்ச்சிகள்.
- குறுகிய கால வயதுடைய கௌபி வம்சாவழிகளில் NCVT சோதனைகள்.
- விதைப் பெருக்கம்.

### பயிராக்கவியல்

- $DL_{1b}$ விவசாயச் சூழலியல் வலயத்தில் பாசிப்பயறில் உட்புகுத்திகளின் தாக்கம்.
- மூன்றாம் பருவ செய்கைக்குரிய OFC களின் மதிப்பீடு.

### மண் விஞ்ஞானம்

- நிலக்கடலை மற்றும் பெரிய வெங்காயத்தில் தாவரப் போசணைகளின் துலங்கல் தொடர்பிலான கற்கைகள்.
- மண் வள நிலமை மதிப்பீடு.

### நீர் முகாமைத்துவம்

- மிளகாய் மற்றும் பாசிப்பயறு ஆகிய பயிர்களுக்குரிய வினைத்திறனுடைய நீர் முகாமைத்துவ நுட்பங்களை இனங்காணல்.

### நோயியல்

- பியுசாரியம் வாடலுக்குரிய [Fusarium pxysporiumf - sp cubense (foc)] எதிர்ப்பு / சகிப்புத் தன்மையுடைய வாழைகளின் ஆய்வுகூட விகாரப் பிறப்பாக்கம்.
- கௌபியில் வைரஸ் நோய்கள், மிளகாயில் இலைச் சுருளல் சிக்கல் மற்றும் வெங்காயத்தில் குமிழ் அழுகல் ஆகியவை தொடர்பிலான முகாமைத்துவம்.
- வாழைகளில் பியுசாரியம் வாடல் சகிப்புத் தன்மைக்கான விருத்தி.

### பூச்சியியல்

- கௌபியில் முக்கிய வயற் பீடைகளின் முகாமைத்துவம்.
- அவரைகள் மற்றும் தானியங்களில் வளி இறுக்கமான சேமிப்பு நிலமைகளை அறிமுகம் செய்தல்.

### களை விஞ்ஞானம்

- நிலக்கடலையில் களை முகாமைத்துவம்.

### உணவு விஞ்ஞானத் தொழில்நுட்பம்

- வாழை, நிலக்கடலை மற்றும் பாசிப்பயறு ஆகியவற்றின் போசணை உள்ளடக்க மதிப்பீடு.
- நிலக்கடலையை அவித்து உண்பதற்குரிய பொருத்தமான அறுவடைப் பருவத்தை தீர்மானித்தல்.

### மரக்கறிகள்

- அயன் மகரந்தச் சேர்க்கை வெண்டி வம்சாவழிகளில் NCVT.
- YMVV க்கு எதிர்புடைய வெண்டி வம்சாவழிகளின் தெரிவு.
- தெரிவு செய்யப்பட்ட பூசணி வம்சாவழிகளில் குடித்தொகை மேம்பாடு.
- தெரிவு செய்யப்பட்ட கலப்பினப் பிறப்பாக்க வம்சாவழிகளின் மதிப்பீடு.
- தற்போது காணப்படுகின்ற மூலவுயிருருக் களின் பராமரிப்பு.
- நடுகைப் பொருட்களின் உற்பத்தி.
- றுகுணு மிளகாய், தும்பை, வெண்டி மற்றும் பூசணி ஆகியவற்றில் வர்க்க விருத்தி.

### பழங்கள்

- விளா மற்றும் வெலிப் பழமரங்களுக்குரிய வயல் பரம்பரை அலகு வங்கிகளின் மதிப்பீடு.
- வாழை குலவகைகளின் மதிப்பீடு.
- $DL_{1b}$ நிலமைகளில் தெரிவு செய்யப்பட்ட ஹுன் நாரத்தை குலவகைகளின் NCVT மதிப்பீடு.
- விளா மரத்தில் வேறுபட்ட ஒட்டுதல் முறைகள் மற்றும் நாற்றுமேடை நிலமைகளுக்கான மதிப்பீடு.
- மா வில் அதி அடர்த்தி நடுகை மற்றும் வெளி விதான பந்துக் கத்தரித்தல் பற்றிய கற்கை.

## அலுவலர் பட்டியல்

### GLORDC, அங்குணகொலபெலஸ்ஸ

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| மேலதிகப் பணிப்பாளர் | 01 |
| பிரதிப் பணிப்பாளர் | 01 |
| ஆராய்ச்சி அலுவலர் | 14 |
| திட்ட உதவியாளர் | 01 |
| அபிவிருத்தி அலுவலர் | 03 |
| பண்ணை முகாமையாளர் | 01 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 10 |
| விவசாயப் போதனாசிரியர் | 05 |
| ஆராய்ச்சி உப உதவியாளர் | 05 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | 05 |
| K.K.S | 01 |
| சுற்றுலா விடுதிக் காப்பாளர் | 01 |
| உழவு இயந்திர இயக்குநர் | 02 |
| சாரதி | 07 |
| காவலாளி | 13 |
| தொழிலாளி (நிரந்தரம்) | 40 |
| தொழிலாளி (அமையம்) | 156 |
| **மொத்தம்** | **269** |

### ARS, வீரவில

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| ஆராய்ச்சி அலுவலர் பொறுப்பதிகாரி | 01 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 02 |
| உழவு இயந்திர இயக்குநர் | 01 |
| சாரதி | 01 |
| காவலாளி | 03 |
| தொழிலாளி (நிரந்தரம்) | 10 |
| தொழிலாளி (அமையம்) | 08 |
| **மொத்தம்** | **26** |

## 1.1.2 பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (சுயுசுனுஊ)இ அரலகன்வில

வயற் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின்கீழ் வருகின்ற அரலகன்வில பிராந்திய விவசாய மற்றும் அபிவிருத்தி நிலையமானது வயற் பயிர்களின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளில் கவனம் செலுத்துகின்றது. அத்துடன் மகாவலி B,C,D, மற்றும் G பகுதிகள், கிழக்கு மாகாணம், பொலநறுவையின் மாகாண இடைப் பிரதேசங்கள் ஆகியன அடங்கலாக தனது பிரதேசப் பகுதிகளின் நெல், மரக்கறி மற்றும் பழப் பயிர்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய விவசாயத் தொழில் நுட்ப தேவைகளை வழங்குவதையும் மேலதிக கடமைகளாகக் கொண்டுள்ளது. பயிராக்கவியல், பூச்சியல், தாவர நோயியல், தாவர இனவிருத்தி, மண்நீர் முகாமைத்துவம் மற்றும் பூங்கனியியல் ஆகிய துறைகளில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளை நெறிப்படுத்துவத னூடாகத் தேசிய ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை இந்நிலையமானது தமது பிராந்திய நிகழ்வுகளுக்கு மேலதிமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது.

### பாதீடு

**அட்டவணை 1.1.2.1: வருடாந்தப் பாதீடு – 2013 (ரூபா)**

| செலவுத் தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு% |
|---|---|---|---|
| நடைமுறைச் செலவு | 11,910,000 | 9,983,889 | 84 |
| மூலதனச் செலவு | 7,767,000 | 5,605,138 | 72 |
| **செயற்திட்டங்கள்** | | | |
| 100 மில்லியன் விதையுற்பத்தி நிகழ்ச்சி | 7,895,000 | 3,238.450 | 41 |
| பப்பாசி இனவிருத்தியாளர் விதை நிகழ்ச்சி | 105,000 | - | 0 |
| வாழை (NARP) | 50,000 | 45,000 | 90 |
| நீர் முகாமைத்துவம் (NARP) | 960,000 | 863,438 | 90 |
| **மொத்தம்** | **28,687,000** | **19,735,916** | **69** |

## முன்னேற்றம்

### வர்க்க மேம்பாடு

#### நெல்

- அரலகன்விலவில் NCRVT நிகழ்ச்சியின் கீழ் 4-4.5 மாத ஏழு வம்சாவழிகள் 3.5 மாத 18 வம் சாவழிகள், 3 மாத நான்கு வம்சாவழிகள் மற்றும் 2.5 மாத முதிர்ச்சி வகுப்பைச் சேர்ந்த 5 வம்சாவழிகளும் சோதனை வர்க்கத்துடன் விளைச்சலுக்காகச் சோதிக்கப்பட்டன

#### சின்னவெங்காயம்

- சின்ன வெங்காயத்தின் 7.9 குலவகைகள் அவற்றின் உருபவியல் மற்றும் தர இயப்புகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்டன. குறுகிய கால வயதுடைய 9 குலவகைகள் (< 60 நாட்கள்) மற்றும் 22 பூக்கும் வகை (7.5% பூத்தல்) ஆகிய குலவகைகள் MYT க்காகத் தெரிவு செய்யப்பட்டன இரு சிறந்த சின்ன வெங்காய வம்சாவழிகள் (ACA 16 மற்றும் ACA 66) உயர்தரமுடைய உயர் விளைச்சலை (சராசரி 13 தென் / ஹெக்) NCVT இல் கொடுத்தது.
- ஆண் மலட்டுத் தன்மையை உறுதிப்படுத்து வதற்காக அனைத்து சின்ன வெங்காய வம்சாவழிகளும் தன் மகாந்தச் சேர்க்கைக்காக அனுமதிக்கப்பட்டன. இதன் போது அனைத்து சின்ன வெங்காய வம்சாவழிகளும் தன்மகரந்தச் சேர்க்கையின் கீழ் வளமுடையதாகக் காணப்பட்டன. மேலதிக உறுதிப்பாட்டுச் சோதனைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
- சின்னவெங்காயத்தில் கலப்பின வித்து உருவாக்கத்திற்காக மகரந்தமணி கொல்லியின் விருத்தி
- வேறுபட்ட செறிவுகளை உடைய ஜிபறலிக்கமிலம் மகரந்தமணி கொல்லியாகப் பயன்படுத்தப்பட்டது. தரவுப் பகுப்பாய்வுகள் நடைமுறையில் உள்ளன.
- சின்ன வெங்காயத்தில் அயன் மகரந்தச் சேர்கையுடைய வம்சாவழிகள் மற்றும் 13 கலப்பின வம்சாவழிகள் ஆகியவற்றில் இருந்து விதைகள் சேகரிக்கப்பட்டன.

### பூங்கனியியல் பயிர்கள்

#### மா~

- சிறந்த இயல்புகளையுடைய 58 மா குலவகைகள் பராமரிக்கப்பட்டு மதிப்பிடப்பட்டன பண்பறி மற்றும் அளவறி விளைச்சல் தரவுகள் சேகரிக்கப்பட்டன. ACC 116 மற்றும் 28 ஆகிய இரண்டும் உயர் பிறிக்ஸ் பெறுமானத்தைக் (21.0) காட்டியதுடன் ACC 27 அதி பருமனுடைய பழத்தைக் (330g) கொடுத்தது தரவுச் சேகரிப்பு நடைமுறைப்படுத்தப் படுகின்றது.
- கறுத்தக் கொழும்பான் மற்றும் வெள்ளைக் கொழும்பான் ஆகிய வர்க்கங்களில் பூத்தல் மற்றும் அரும்பு விருத்தி ஆகிய இயல்புகள் தொடர்பில் கற்கைகள் இடம் பெற்றன. ஆகஸ்ட் இரண்டாவது வாரத்தில் பூத்தல் ஆரம்பமாகியதுடன் வெள்ளைக் கொழும்பான் மற்றும் கறுத்தக் கொழும்பான் ஆகியவற்றில் முறையே 61% மற்றும் 30% என்ற அளவுகளில் பூக்கள் தோன்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது

#### வாழை

NCVT நிகழ்ச்சியின் கீழ் 7 சீனிக்கதலி வாழைக் குலவகைகள் மதிப்பிடப்பட்டன. HCK 143 PGRCI மற்றும் MRS ஆகிய குலவகைகள் 8Kg இலும் அதிக நிறையுடைய குலைகளைத் தோற்றுவித்தன பரிசோதனைகள் தொடர்கின்றன.

### பப்பாசி

ரத்னா வர்க்கத்தில் இனவிருத்தியாளர் விதை உற்பத்திக்காக பப்பாசித் தோட்டம் ஒன்று தாபிக்கப் பட்டது. இத்தோட்டமானது விதை அத்தட்சிப் படுத்தல் சேவையின் கீழ் (SCS) பதிவு செய்யப் பட்டது.

## NCVT

### வற்றாளை

சோதனை வர்க்கங்களுடன் ஒப்பிடுகையில் மலேசியன் வர்க்கங்கள் உயர் விளைச்சலைக் கொடுத்தன.

### கத்தரி

சோதனை வர்க்கங்களுடன் ஒப்பிடும் போது 4 குலவகைகள் உயர் விளைச்சலைக் காட்டின.

### பாகல்

T16 குலவகையானது சோதிக்கப்பட்ட ஏனைய குலவகைகளுடன் ஒப்பிடுகையில் உயர் விளைச்சலைக் (10.5 தொன்/ஹெக்) கொடுத்தது.

### கெக்கரி

குலவகை H18 ஆனது ஏனைய குலவகைகளுடன் ஒப்பிடும் போது குறிப்பிடத்தக்க விளைச்சலைக் (27.7 தொன் /ஹெக் ) கொடுத்தது.

## குறைந்த பாவனையுடைய பயிர்கள்

### சுண்டங்கத்தரி

பிந்து வர்க்கத்தில் அண்ணளவாக 60 தாவரங்கள் கள கருமூல வங்கியாகப் பராமரிக்கப்பட்டது.

### தும்பை

- தற்போது களக் கருமூல வங்கியில் உள்ள 42 குலவகைகளுடன் 4 புதிய குலவகைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்துடன் தர இயல்புகள் மற்றும் வெப்பச் சகிப்புத் தன்மை ஆகியவற்றுக்காக அவை மதிப்பீடு செய்யப் பட்டன. மதிப்பீடு தொடரப்படுகின்றது.
- பங்காளதேசில் இருந்து பெறப்பட்ட குலவகைகள் உள்ளூர் பெற்றோருடன் கலக்கப் பட்டன. இதில் F1 விதைகள் பெறப்பட்டன கற்கை தொடரப்படவுள்ளது.

## தாவர நோயியல்

- இலங்கையில் சின்ன வெங்காயச் செய்கையில் பங்கசினால் ஏற்படுகினற் குமிழ் அழுகல் நோயானது பாரிய ஒரு அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது. நடுகையின் போது 15 தொன் / ஹெக் - 20 தொன் / ஹெக் என்று அளவில் அல்லது நடுகைக்கு 2 வாரங்களுக்கு முன்பு 10 தொன் / ஹெக் என்ற அளவிலான மாட்டுச் சாணப் பிரயோகமானது சின்ன வெங்காயத்தில் பங்கசு குமிழ் அழுகலைக் கட்டுப்படுத்துவதில் சிறந்து விளங்குவதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.
- வெவ்வேறு பிரதேசங்களிக்குரிய நோய்த் தாக்கங்களுக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய பொருத்தமான சின்ன வெங்காய வர்க்கங்கள் இனங்காணப் பட்டன. வேதாளம் மற்றும் ACA 16 ஆகியன அரலகன்விலவுக்கும் TVS கிளிநொச்சிக்கும் சிறந்த வர்க்கங்களாக இனங்காணப்பட்டுள்ளன
- சின்ன வெங்காய பங்கசுக் குமிழ் அழுகல் நோயைக் கட்டுப்படுத்துவதில் குமிழ் பரிகரணக் கால அளவின் தாக்கம் மற்றும் வினைத்திறனான பங்கசுநாசினி ஆகியவை தொடர்பாலான ஆராய்ச்சிகள் அரலகவில் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நடைமுறையில் உள்ளன.

## மண்விஞ்ஞானம்

### உள்ளக, நீண்டகால இரசாயனப் பசளை மற்றும் சேதனப் பசளை பிரயோகம்

பசுந்தாட் பசளைப் பிரயோகமானது கல்சியமல்லாத கபில மண்ணின் இயல்புகளில் சாதகமான தாக்கங்களைக் கொண்டிருப்பதை பரிசோதனை முடிவுகள் தெளிவுபடுத்தின ( சேதனப் பசளை> 3 %)

### வெளியக, நீண்டகால இரசாயன மற்றும் சேதன வளமாக்கிப் பிரயோகம்

நெல் விளைச்சலில் பயிர் மீதிகளுடன் பசுந்தாட் பசளைப் பாவனையானது சாதகமான பெறுபேற்றைக் காட்டுவதாக பரிசோதனை முடிவுகள் தெளிவு படுத்தின. (விளைச்சல் > 4.5தொன் / ஹெக்).

### நீர்ப் பற்றாக்குறை சூழலில் பாசிப்பயறின் வேர்க் கட்டமைப்பு இயல்புகளின் பங்களிப்பு

ஆறு பாசிப்பயறு நடுகை வர்க்கங்கள் வேர் தொட்டிகளில் செய்கை பண்ணப்பட்டன. மண்ணை தேடி வளரல் மற்றும் நீரை அகத்துறிஞ்சல் ஆகியன தொடர்பில் வேர் கட்டமைப்பு அவதானிக்கப்பட்டது.

### பாசிப்பயறின் வேர்க் கோணத்தில் பிறப்புரிமை அமைப்பு வேறுபாடு

ஆறு பாசிப்பயறு வர்க்கங்களின் வேர்க் கோணத்தில் பிறப்புரிமை அமைப்பின் வேறுபாடு அவதானிக்கப் பட்டது. மண் அமைப்பில் வேரின் ஆளுகை மற்றும் நீர் உருஞ்சும் வினைத்திறன் ஆகியவற்றில் வேரின் கோணமானது பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

### மகாவாலி வலயம் 'B" நெல்வயல் மண்ணில் மா மற்றும் நுண் மூலகங்களின் இருக்கை

நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களை உள்ளடக்கியதாக மா ( P,K) மற்றும் நுண் ( Mg, Zn,Mn, Cu, Fe, Mo, ) மூலகங்களுக்குரிய பகுப்பாய்வு மேற்கொள்ளப் பட்டது இதன் போது P,K மற்றும் Zn ஆகியன பற்றாக்குறைவாகவும் Fe மேலதிகமாகவும் காணப்படுவது அவதானிக்கப்பட்டது.

### நீர் முகாமைத்துவம்

- NCB மண்ணில் வெங்காயச் செய்கையில் வினைத்திறனான நீர் முகாமைத்துவம் தொடர்பிலான பரிசோதனை ஒன்று இடம் பெற்றது. மூன்று நாள் நீர்ப்பாசன இடைவெளி வெற்றிகரமாகப் பயன் படுத்த முடியும் என முடிவுகள் காட்டின.
- சின்ன வெங்காயச் செய்கையில் துவல் நீர்ப் பாசனத்திற்குரிய மேல் பொருத்துகை (Overlapping) வீதம் பற்றிய கற்கையில், 60% மேல் பொருத்துகை வீதம் சிறப்பானதாக தெளிவுபடுத்தப்பட்டது. பரிசோதனைகள் தொடர்கின்றன.

## விதை மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தி

**அட்டவணை 1.1.2.2 விதை மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தி (2013)**

| பயிர் | வர்க்கம் | விதை நடுகைப் பொருள் உற்பத்தி |
|---|---|---|
| கௌபீ | தவள | 85Kg இனவிருத்தியாளர் விதை |
| ரகன் தாவரங்கள் | | 25 சட்டித் விநியோகிக்கப்பட்டன. |
| வாழை | சீனி மற்றும் புளி | விவசாயிகளுக்கு 100 தாவரங்கள் விநியோகம் |
| தும்பை | | 487 சாடிக் கொடிகள் விநியோகம் |

| | | |
|---|---|---|
| சுண்டங் கத்தரி | பிந்து | விவசாயிகளுக்கு 120g விதைகள் விநியோகிக்கப்பட்டன. அத்துடன் 1000 (2g) விதைப் பொதிகள் விவசாயிகள் வாரத்தில் விநியோகிக்கப்பட்டன. |

## செயற்திட்டங்கள் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகள்

- 2013 இல் சிவப்பு வெங்காய இணைப்பு நிகழ்ச்சி
- பல்கலைக் கழக மாணவர்களுக்குரிய ஆராயச்சிகள் மீதான மேற்பார்வை
- இரஜரட்டைப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் தமது பட்டப்படிப்பிற்குரிய ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

## தொழில் நுட்ப அறிவைப் பரப்புதல்

### கையேடுகள்

- வெங்காயம்: தமிழ் மற்றும் சிங்கள மொழி முலகங்களில் சின்ன வெங்காய நோய்கள் எனும் கையேடு தயாரிக்கப்பட்டது.

### வயல் விழாக்கள் மற்றும் பயிற்சிகள்

- பயிற்சி நிகழ்ச்சிகள் AO க்கள் (மகாவலி) AI FS, (மகாவலி) விவசாயிகள், மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோருக்காக பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- பயிர்ச் சிகிச்சை : வளவளார்கனாக விஷயம் செய்து பண்ணையாளர்களின் வயலில் உள்ள பிரச்சனைகளுக்கு தொழில்நுட்பத் தீர்வுகள் வழங்கப்பட்டன.
- சின்ன வெங்காயச் செய்கையில் பண்ணை யாளர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

### சேவைகள்

- மண் பரிசோதனை : 820 மண் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அதன்படி சிபாரிசுகளும் வழக்கப்பட்டன.

## 2014ற்கான திட்டம் வர்க்க மேம்பாடு

### வர்க்க மேம்பாடு

#### வெங்காயம்

- மூலவுயிருரு இயல்பாக்கம் மற்றும் வர்க்க மேம்பாடு.
- சின்ன வெங்காயத்தில் நோய் மற்றும் பீடை ஏதிர்ப்புடைய வர்க்க மேம்பாடு.
- சின்ன வெங்காயத்தில் குழியவுரு ஆண் மலட்டுத் தன்மை வம்சாவழியின் ( CMC) விருத்தி.

#### தும்பை

- தெரிவு, கலப்பினப் பிறப்பாக்கம், NCVT மற்றும் நடுகைப்பொருள் உற்பத்தி.

#### கண்டங்கத்தரி

- இனவிருத்த்தியாளர் விதை உற்பத்தி.

### பூங்கனியியல்

#### மா~

- மூலவுயிருரு மதிப்பீடு.
- பதிய வளர்ச்சி அவத்தையில் இருந்து பூத்தல் அவத்தைக்கு மாற்றமடையும் போது காலநிலைக் காரணிகளின் தாக்கம் (வெப்பநிலை).
- மாவிலைத் தத்திகளின் கட்டுபாடு மற்றும் முகாமைத்துவம்.

### கொய்யா

- விரைவான பெருக்கம்

### ரகன் பழம்

- கொடியினை கத்தரித்தலும் பயிற்றுவித்தலும்.
- ஒய்வு காலங்களில் பூத்தலைத் தூண்டுதல்.

## தாவரநோயியல்

### சின்னவெங்காயம்

- சின்ன வெங்காயத்தில் நோய் முகாமைத்துவம்.
- விவசாயப் பிரதேசங்களில் விவசாய இராசாயங்களின் பாவனையின் சமுக மற்றும் தொழில்நுட்ப விளைவுகள்.
- சின்ன வெங்காயச் செய்கையில் பீடை மற்றும் நோய்ச் செறிவை மதிப்பிடல்.
- வேறுபட்ட சேமிப்பு முறைகளின் மதிப்பீடு.

## நீர் முகாமைத்துவம்

- கல்வெவ மண் தொடருக்குரிய பயிர் பொருத்தத் தன்மை வரைபடம் (விடய ஆய்வு).
- இலங்கையில் நெல் மற்றும் சோள உற்பத்தியில் காலநிலை மாற்றத்தின் தாக்கம்.
- இலங்கையில் சோள உற்பத்தியில் காலநிலை மாற்றத்தின் தாக்கம் ஒரு பயிர் மாதிரி அணுகுமுறை.NCB மண்ணில் பொருளாதார பெறுமதிடைய பயிர்களுடன் சேர்த்து மண் பாதுகாப்பு அணைகளின் மதிப்பீடு.

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| மேலதிக பணிப்பாளர் (ஆராய்ச்சி) | 01 |
| ஆராய்ச்சி அலுவலர் (SLAgS) | 05 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 06 |
| விவசாய போதனாசிரியர் | 01 |
| பதில் நிர்வாக உத்தியோகத்தர் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | 02 |
| களஞ்சிய காப்பாளர் (MA) | 01 |
| ஆராய்ச்சி உப உதவியாளர் | 05 |
| தொழில்நுட்ப உதவியாளர் | 02 |
| சாரதி | 06 |
| மின்னியலாளர் | 01 |
| காவலாளி | 13 |
| உழவு இயந்திர இயக்குநர் | 03 |
| தச்சன் | 02 |
| கொல்லர் | 01 |
| சுற்றுலா விடுதி காப்பாளர் | 01 |
| தாவர ஒட்டுனர் | 01 |
| தொழிலாளி | 30 |
| தொழிலாளி (அமையம்) | 50 |
| **மொத்தம்** | **132** |

## 1.1.3 பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் (RARDC), கிளிநொச்சி

பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் - கிளிநொச்சி, திருநெல்வேலி மற்றும் முல்லைத்தீவு (மீள்புனரமைக்கப் படுகின்றது) ஆகிய இடங்களில் அமைந்துள்ள அதன் இணை நிலையங்கள் ஆகியவை வடபகுதியில் உள்ள பண்ணையாளர்களின் தேவைகளை நிறைவேற்றுதல் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றை முக்கிய கடமையாகக் கொண்டு செயற்படுகின்றன. முல்லைத்தீவு அனுசரணை ஆராய்ச்சி நிலையமானது ஒட்டிசுட்டான் எனும் இடத்தில் அமைந்துள்ளது. கிளிநொச்சி RARDC ஆனது மகா இலுப்பள்ளமை FCRDI இன் கண்காணிப்பின் கீழ் வருகின்றது. RARDC கிளிநொச்சி, வவுனியா மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் அமைந்துள்ள அதன் இணை நிலையங்களில் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

### பாதீடு

**பல்வேறு செலவுத் தலைப்புகளில் இடம் பெற்ற ஒதுக்கீடுகளின் செலவு விபரங்கள் அட்டவணை 1.1.3.1 இல் தரப்பட்டுள்ளது.**

**அட்டவணை 1.1.3.1: வருடாந்தப் பாதீடு 2013 (ரூபாயில்)**

| செலவுத் தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு % |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 854,498 | 72,238 | 8 |
| நடைமுறைச் செலவு | 2,953,500 | 2,336,487 | 79 |
| **மொத்தம்** | **4,505,998** | **2,647,184** | **59** |

### முன்னேற்றம்

#### பயிர் மேம்பாடு

#### NCVRT மற்றும் VAT

மூன்று 3½, 4 மாத வயதுடைய நெல் வர்க்கங்களில் NCVRT நிகழ்ச்சிகள் பரந்தன் மற்றும் முருங்கன் ஆகிய இடங்களில் மானாவாரியாகவும் நீர்ப்பாசனத்துடனும் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் மன்னார், மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்குப் பொருத்தமான நெல் வர்க்கங்களை இனங்காணப்பதற்குரிய VAT நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

#### தாவரப் பாதுகாப்பு

***மிளகாய்***

மிளகாயில் பனிப்பூச்சிக் குடித்தொகையை முகாமைத்துவம் செய்வதற்குரிய பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. பனை ஓலைகளைக் கொண்டு வேலி அமைக்கும் போது பனிப்பூச்சிகளின் குடித்தொகை குறைவடைந்து

காணப்பட்டதுடன் மிளகாயில் விளைச்சலும் அதிகரித்தது. அதேபோல் மிளகாயுடன் பாகற்காய் ஊடுபயிர்ச் செய்கையானது பனிப்பூச்சிகளின் குடித்தொகையைக் குறைப்பதில் வெற்றிகரமாகக் காணப்பட்டது.

### பாசிப்பயறு

எல்லைப் பயிர் நடுகை மூலம் பாசிப் பயறில் காய் துளைப்பானின் தாக்கத்தை முகாமைத்துவம் செய்யும் பரிசோதனை ஒன்று மேற் கொள்ளப்பட்டது. இங்கு எல்லைப் பயிராக நடுகை செய்யப்பட்ட ஆமணக்கானது பாசிப்பயறில் காய்துளைப்பானைக் கட்டுபடுத்துவதில் வெற்றிகரமாக செயற்பட்டது.

### கத்தரி

கிளிநொச்சி RARDC யில் காய் மற்றும் தண்டு துளைப்பானுக்கு எதிரான (Leucinodes orbanalis) பூச்சி நாசினி ஒன்றின் வினைத்திறன் பரிசோதிக்கப்பட்டது. கத்தரியில் காய் மற்றும் தண்டு துளைப்பானின் சேதத்தைக் கட்டுப்படுத்துவதில் ஸ்பினோரோராம் (Spinotorum) எனும் பூச்சி நாசினி சிறப்பான செயற்பாட்டைக் காட்டியது.

### நெல்

நெற் பயிரில் இலை மடிச்சுக் கட்டியைக் கட்டுப்படுத்துதற்கு எருக்கலை இலைகள் (Calotropis) பயன்படுத்தப்பட்டு ஓர் அவதானிப்புக் கற்கை மேற்கொள்ளப்பட்டது. எருக்கலை இலைகளில் பூச்சி கொல்லும் தன்மையுடைய பதார்த்தங்கள் காணப்படுவதை கற்கையின் முடிவுகள் தெளிவுபடுத்தின.

## களை முகாமைத்துவம்

- பெரும்போக உலர் விதைப்பு நெற் செய்கையில் ஒக்சிபுளோபென் (Oxy flouerfen) 240g /l EC (Goal 2 x L) எனும் முளைத்தலுக்கு முன்னரான களை நாசினி பாவிக்கப்பட்டு அவதானிப்புக் கற்கை ஒன்று மேற்கொள்ளப் பட்டது. இது சிறந்த பெறுபேறுகளைக் காட்டியது.
- Tiobencarb 400 g / l + புறப்பனில் 200g / l EC (சற்றுநில்) மற்றும் பிறிற்றில்க்ளர் (Pretilachlor) 300 g / l + பைறிவென் சொக்ஸிம் 20g / l EC சொலிற்றோ (Solito) ஆகியவை Cyperus iria எனும் புல்லினைக் கட்டுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பெறுபேற்றைக் காட்டியதுடன் நெற்பயிரில் ஏதுவித நச்சுத் தன்மையான தாக்கத்தையும் காண்பிக்கவில்லை.
- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட களைநாசினித் தெரிவு பரிசோதனைகளின் கீழ் (NCHST) உலர் விதைப்பு நெற் செய்கையின் போது 23 களை நாசினிகளின் களைக் கட்டுப்பாட்டுத் திறனை மீள் மதிப்பீடு செய்வதற்காக பரிசோதனை ஒன்று இடம் பெற்றது.

## மண் - நீர் முகாமைத்துவம்

### மண் மாதிரிகளின் பரிசோதனை

- வடமாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் உள்ள உவர்த் தன்மையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து 500 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டன. பரிசோதனை அறிக்கைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

### இரணைமடுவின் கீழ்வரும் பிரதேசங்களில் பயிர் பல்வகைமைக்குரிய மண்ணின் நிலைபேறான தன்மை பற்றிய கற்கை

- மேற்படி கற்கையின் கீழ் 103 மண்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டன.

### பழப் பயிர்களின் மூலவுயிருருக்களைப் பராமரித்தல்

- மா, பலா, வாழை, திராட்சை மற்றும் மாதுளை ஆகிய பழப் பயிர்களின்

மூலவுயிருருக்கள் கிளிநொச்சி RARDC யில் பேணப்பட்டன.

### அடிப்படை விதை உற்பத்தி

**அட்டவணை 1.1.3.2 அடிப்படை விதை உற்பத்தி ~ 2013**

| பயிர் | வர்க்கம் | தொகை |
|---|---|---|
| பாகல் | தின்னவேலி வெள்ளை | 06Kg |
| புடோல் | தின்னவேலி நீளம் | 02Kg |
| கத்தரி | தின்னவேலி ஊதா | 03Kg |
| மிளகாய் | KA - 2 | 03Kg |
| தக்காளி | KC - 1 | 100Kg |

### தொழில்நுட்பப் பரம்பல்

நெல் மற்றும் OFC ஆகியவற்றில், வயல் விழாக்கள், மற்றும் செய்துகாட்டல்கள் போன்ற நிகழ்ச்சிகளை கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகள், பல்கலைகழக மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் போன்றோருக்காக நடாத்தியது. பின்வரும் செயற்பாடுகளும் நடாத்தப்பட்டன.

- ஆறு வயற் செய்து காட்டல்கள்: நெல், மிளகாய், வெங்காயம், பாசிப்பயறு, நிலக்கடலை, அத்துடன் களை முகாமைத்துவம்
- வயல் விழாக்கள் - 03
- முல்லைத்தீவு மாவட்டத்தில் 64 பயிர்ச் சிகிச்சை முகாம்கள்
- கண்காட்சிகள் - 02
- 145 தொழில்நுட்ப ஆலோசனை சேவைகள்
- 2500 - துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப் பட்டுள்ளன.

### வானொலி / தொலைகாட்சி நிகழ்ச்சிகள்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையின் ஊடாக (தென்றல்) ஆறு வானொலி நிழ்ச்சிகள் ஒலிப்பரப்பட்டுள்ளன. இவை பொதுவாகச் செய்கை பண்ணப்படுகின்ற பயிர்கள், பீடைக் கட்டுபாடு மற்றும் களை முகாமைத்துவம் ஆகியவை பற்றிதாகும்.

### செய்திப் பத்திரிகைக் கட்டுரைகள்

களை நெல் முகாமைத்துவம், மா மூலவுயிருருப் பாதுகாப்பு மற்றும் சூழல் நோய் பீடைநாசினிகள் தொடர்பான 3 செய்தித் தாள் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன.

### ஏனைய செயற்றிட்டங்கள் / சேவைகள்

- பயிர்ப் பல்வகைமை தொடர்பான செயற்றிட்டம் - IIDP
- மிளகாயில் கலப்பின விருத்தி செயற்றிட்டம்
- பசுமைச் செயற்றிட்டம் - சேவா லங்கா
- FAO - சிறந்த மண் - நீர் முகாமைத்துவத்தின் ஊடாக இலங்கையின் வட மாகாணத்தில் உள்ள விவசாய நிலங்களில் உற்பத்தியை ஊக்குவித்தல்

### அபிவிருத்தி நடவடிக்கைகள்

- EnDRIP - செயற்றிட்டத்தின் கீழ் சுற்றுலா விடுதி ஒன்று, தரம் IV உடைய 2 விடுதிகள் ஊழியர் விடுதிகள் 2, பெரிய நீர்த்தாங்கி ஒன்று, உலர்த்து தரை மற்றும் உள்ளக வேலி அமைத்தல் ஆகியன RARDC கிளிநொச்சியில் மீள நீர்மாணிக்கப்பட்டுள்ளன.
- மண் ஆய்வு கூட கட்டடம் திருத்தி அமைக்கப்பட்டு அடிப்படை தேவைக்குரிய கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன. FAO செயற்றிட்டத்தின் கீழ் கள வாகனம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. சேவாலங்கா அமைப்பின் மூலம் தாவர

நோயியல் ஆய்வு கூட உபகரணங்கள் பெறப்பட்டன.

## 2014 ற்கான திட்டம்

- குரக்கனில் தண்டு துளைப்பானுக்குரிய எதிர்ப்பினங்களின் மதிப்பீடு.
- மிளகாய் பனிப்பூச்சி மற்றும் நெல் மடிச்சுக் கட்டி ஆகியவற்றுக்கு எதிரான தாவரப் பீடைநாசினிகளின் வினைத் திறன்.
- வட பிராந்தியத்தில் காணப்படுகின்ற களைக் குடித்தொகைகள் பற்றிய கற்கை.
- நெல்லில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற முக்கிய பீடைகளின் குடித்தொகை.
- மிளகாயில் நெமற்றோட்டுத் தாக்கத்தை முகாமைத்துவம் செய்வதற்குப் பொருத்தமான தொழில்நுட்ப விருத்தி.
- மரக்கறிகள் மற்றும் மறுவயற்பயிர்களில் வர்க்க விருத்தி.
- இழைய வளர்ப்பு வாழை உற்பத்தி.
- தக்காளி விதை உற்பத்தியில் கத்தரித்தல் தரம் மற்றும் அளவுகளின் தாக்கம் பற்றிய கற்கை.
- வட பிராந்தியத்தில் உள்ள வயல்களில் வளியூட்ட நிலமைகளில் நெல் வர்க்கங்களின் செயலாற்றுகை பற்றிய கற்கை.
- பாரம்பரிய நெல் வர்க்கங்களின் தூய்மையாக்கம்.
- மூலவுயிருருப் பராமரிப்பு.
- Cyperus iria வில் களை எதிர்ப்புத் தன்மை விருத்தி.
- பாகல் (TV வெள்ளை), புடோல் (TV நீளம்), தக்காளி (KCI) ஆகியவற்றில் இனவிருத்தியாளர் விதை உற்பத்தி.

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) | 01 |
| ஆராய்ச்சி அலுவலர் - பொறுப்பதிகாரி | 03 |
| விவசாயப் போதனாசிரியர் | 03 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 03 |
| முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| காவலாளி | 05 |
| தொழிலாளி | 36 |
| சாரதி | 03 |
| உழவு இயந்திரம் செலுத்துநர் | 03 |
| **மொத்தம்** | **61** |

# 1.2 பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ர்ழுசுனுஐ)இ கன்னொறுவை

பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமானது (HORDI) ஆராய்ச்சி மற்றும் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக தேசிய ரீதியில் பூங்கனியியல் பயிருற்பத்தியை மேம்படுத்தும் இலக்கினை ஒப்படைக்கப் பெற்றுள்ளது. மரக்கறி, பழவகை, கிழங்குப் பயிர்கள், காளான் மற்றும் அலங்காரப் பயிர்கள் இந்நிறுவனத்தின் பொறுப்புக்குட்பட்ட பயிர்களாகும். இந்நிறுவனத்தின் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்க ளானது பூங்கனியியல் பயிர் வர்க்கங்களின் விருத்தி, தாவரப் போசணை முகாமைத்துவம் மற்றும் நோய் பீடை முகாமைத்துவம் என்பவற்றை உள்ளடக்கிய மேம்படுத்திய பயிர் முகாமைத்துவ நுட்பங்கள் என்பனவற்றின் மீது பிரதானமாக கருத்தூன்றுகிறது. அறுவடைக்குப் பின்னான மற்றும் உணவு பதனிடும் முறைகள், நடுகைப் பொருள் உற்பத்தி மற்றும் வீட்டுத் தோட்டம் என்பவற்றிலும் இந்நிறுவனத்தின் கருத்தூன்ற லிருக்கும். பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துக்கு (HORDI) வழங்கப்பட் டுள்ள அதிகாரமானது உயருற்பத்தியுடைய, சூழல் நேயமான, நிலைத்திருக்கக்கூடிய, பொருளாதார உறுதிப்பாடுடைய மற்றும் சமூக சமனிலைத் தன்மையான பூங்கனியியல் பயிர்களின் மீது கேள்வியினால் திசைப்படுத்தப்பட்ட ஆராய்ச்சி களை மேற்கொள்வதாகும். மேற்குறிப்பிடப்பட்ட வற்றுக்கு மேலதிகமாக இந்நிறுவனமானது விவசாயிகள், கீழ்நிலைப் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா மாணவர்களின் பயிற்சி நடவடிக்கை களிலும் ஈடுபடுகின்றது. விவசாய சமூகத்துக்கு புதிய தொழிநுட்பங்களை பரம்பலடையச் செய்ய வென விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதும் இந்நிறுவனத்தினால் மேற்கொள்ளப் படுகின்ற மேலும் சில நடவடிக்கைகள் ஆகும்.

## பாதீடு

**அட்டவணை 1.2.1 – வருடாந்தப் பாதீடு – 2013 (ரூ)**

| செலவுத் தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு % |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 57,015,000 | 26,794,760 | 47 |
| மீண்டுவரும் செலவு | 67,401,816 | 61,345,379 | 91 |
| **செயற்றிட்டம்** | | | |
| தேசிய விவசாயத் ஆராய்ச்சி திட்டம் (NARP) | 11,466,400 | 10,761,945 | 94 |
| NARP (பழம் மற்றும் மரக்கறிகளின் கலப்பின விதையுற்பத்தி) | 4,103,860 | 3,939,71 | 96 |
| பிரபல்யமான பாரம்பரிய மரக்கறிகளின் விதைக் கிடைப்பு தன்மையை அதிகரித்தல் | 1,878,463 | 15,27,552 | 81 |
| அரிசி ஏற்றுமதி செயற்றிட்டம் | | | |
| சர்வதேச விவசாயத்துக்கான கொரிய செயற்றிட்டம் | 1,00,000 | 970,384 | 97 |
| (மரக்கறிச் செய்கை) KOPIA - 12 | 3,137,500 | 2,297,282 | 73 |
| சர்வதேச விவசாயத்துக்கான கொரிய செயற்றிட்டம் (பசளை முகாமைத்துவம்) FERTILIZER - 13 | 2,510,000 | 2,796,437 | 111 |

| | | | |
|---|---|---|---|
| தாவர பரம்பரையியல் வளத்திற்கான ஒருங்கிணைந்த முகாமைத்துவ தொகுதிகள் | 1,927,180 | 1,436,045 | 75 |
| இழைய வளர்ப்பு | 25,000,000 | 25,000,000 | 100 |
| NSF | 1,632,500 | 882,208 | 54 |
| **மொத்தம்** | **177,072,719** | **137,751,708** | **78** |

## முன்னேற்றம்

### செயற்றிட்டங்கள்

### (NARP) மரக்கறிகளின் கலப்பின விதை உற்பத்தி

உயர்தரமான மரக்கறி மற்றும் பழ கலப்பினங்களின் விருத்தி, சிபாரிசுக்கமைவான வர்க்கங்களின் பெற்றோர்க் குலகைகளைப் பேணல், கலப்பின விதையுற்பத்தி ஆகியன இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட பிரதான செயற்பாடுகள் ஆகும். மரக்கறிப் பயிர்களான தக்காளி, கத்தரி, பீர்க்கு, கறிமிளகாய், கெக்கரி, பயற்றை மற்றும் பாகல் ஆகியவற்றுக்கே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டம் (NARP)

இச்செயற்றிட்டத்தின் பிரதான இலக்கு மரக்கறி, பழம் மற்றும் மலர்த் தாவரங்களின் புதிய வர்க்கங்களை விருத்தி செய்வதாகும். பூங்கனியியல் பயிர்களின் உற்பத்தித் திறனை மேம்பாடு செய்யவென தற்போதுள்ள உருளைக் கிழங்கு விதையுற்பத்திக்குரிய தொழிநுட்பத்தை மேம்படுத்தல், நோய் பீடை முகாமைத்துவத்துக் குரிய பொதிகளை விருத்தி செய்தல் பொருத்த மான பயிராக்கவியல் மற்றும் போசணை முகாமைத்துவத்துக்குரிய பொதிகளை விருத்தி செய்தல் என்பனவும் மேலதிகமான செயற்பாடுகளாகும்.

### சர்வதேச விவசாயத்திற்க்குரிய கொரிய செயற்றிட்டம் (KOPIA)

#### மரக்கறி பயிர்ச் செய்கை தொழிநுட்பம்

விவசாயிகள் தற்போது பெறுகின்ற விளைச்சலுக்கும் பயிர் வர்க்கங்களின் சாத்தியமான விளைச்சலுக்குமிடையே நிலவுகின்ற இடைவெளியை நிரப்புவதற்கு உயர் விளைச்சலைப் பெறுகின்ற நாடுகளின் சிறந்த தொழிநுட்பங்களினது பிரயோக ரீதியாக செய்து காட்டல்கள் பயனுள்ளதாகும். உள்நாட்டு விஞ்ஞானிகள் மற்றும் விவசாயிகளுக்கு அறிவனைப் பரம்பலடையச் செய்தல் இவ்விடைவெளி குறைப்பட ஒரு வழியாக அமையும்.

KOPIA செயற்றிட்டமானது மேம்படுத்திய மரக்கறி உற்பத்தித் தொழிநுட்பங்களினது பிரயோக ரீதியான செய்து காட்டல் மற்றும் பரீட்சிப்பு நடவடிக்கைகள் என்பவற்றுடன் உள்நாட்டில் செய்கை பண்ணப்பட பொருத்தமான கொரிய நாட்டு மரக்கறிகளை அடையாளம் காணல் என்பவற்றில் முனைப்பாக உள்ளது. இவற்றுடன் மரக்கறி உற்பத்தி மற்றும் தொழிநுட்பம் என்பவற்றில் மனிதவள கொள்திறன் மேம்பாடு, மரக்கறி உற்பத்தியுடன் தொடர்பான ஆராய்ச்சிகளில் இலங்கை - கொரியா இடையிலான இணைச் செயற்பாடு களை வலுவூட்டல் என்பன இத்திட்டத்தினது ஏனைய பிற நோக்கங்களாகும்.

### பசளை முகாமைத்துவம் (KOPIA)

பொருளாதார ரீதியில் பயனுறுதியுடையதும், பாதுகாப்பானதும் சூழல் நேயமானதுமான பசளைப் பிரயோகம் தொடர்பான பிரயோக ரீதியான செய்து காட்டல்களை விவசாயிகளுக்கு வழங்கும் அடிப்படையில் KOPIA பசளை

முகாமைத்துவ செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. மண்ணில் மீதமாயுள்ள தாவரப் போசணையைப் பயன்படுத்தும் கொள்கை மற்றும் அவசியமற்ற விதத்தில் பசளை உள்ளீடு பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் ஆகியன இச்செயற்றிட்டத்தின் மூலம் வெளிக்கொணர முனையும் இரு பிரதான விடயங்கள் ஆகும். இத்திட்டமானது பிரதான மூலகங்களின் பாவனையை மாத்திரமன்றி நுண்மூலகங்களின் பாவனையின் முக்கியத்துவத்தையும் அழுத்தமாக வெளிப்படுத்தும். இவற்றுடன் இத்திட்டமானது மனிதவள கொள்திறன் மற்றும் இரு நாடுகளுக்குமிடையிலான கூட்டு ஒத்துழைப்பினை அதிகரித்தல் என்பவற்றை வலுவூட்டுவதிலும் கருத்தூன்றும்.

## இழைய வளர்ப்பு

வாழை, அன்னாசி, விதை உருளைக்கிழங்கு, ஸ்டோபெரி மற்றும் அலங்காரத் தாரவங்கள் ஆகிய பூங்கனியியல் பயிர்களினூடைய நடுகைப் பொருட்களுக்கான பெருகி வரும் கிராக்கியினை ஈடு செய்யவென "இழைய வளர்ப்பு நுட்பத்திற் கூடாக பொருளாதார முக்கியத்துவமுடைய பயிர்களின் தரமான நடுகைப் பொருட்களின் உற்பத்தி" எனும் செயற்றிட்டமானது 2011ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இச் செயற்றிட்டத்தின் கீழ் உற்பத்தியினை பத்து மடங்கினால் அதிகரிக்ககூடியளவு இழைய வளர்ப்பு ஆய்வு கூடங்கள் வசதியளிக்கப்பட்டதுடன் நவீன மயப்படுத்தப்பட்டன.

ஏனைய உட்கட்டுமான வசதிகளான வலையில்லங்கள், பொலித்தீன் கூடாரங்கள் என்பனவும் விருத்தி செய்யப்பட்டன.

## மரக்கறிப் பிரிவு

மரக்கறிகளின் வர்க்க விருத்தி மற்றும் உற்பத்தியுடன் தொடர்புடைய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் மரக்கறி ஆராய்ச்சிப் பிரிவு ஈடுபடுகின்றது. பாரம்பரியமான இனவிருத்தி நுட்பங்களினூடாக மேம்படுத்தப்பட்ட திறந்த மகரந்தச் சேர்க்கையடையும் மற்றும் முதலாம் சந்ததி கலப்பின மரக்கறி வர்க்கங்களின் விருத்தியே இப்பிரிவினது பிரதான செயற்பாடாகும். 2012 / 2013 ம் ஆண்டுகளில் பெற்ற தனித்துவமான அடைவுகள் சில கீழே தரப்படுகின்றன.

## போஞ்சி வர்க்க விருத்தி

ஒரு கொடிப் போஞ்சி வர்க்கமானது வர்க்க விடுவிப்புக் குழுவிடம் (VRC) முன்வைக்கப் பட்டது. இவ்வர்க்கம் கன்னொறுவை பில் (Gannoruwa BIL) எனப் பெயரிடப்பட்டு விடுவிக்கப்பட்டது. இரு வர்க்கங்களான Cora pole மற்றும் KTB என்பன 2013ம் ஆண்டு தேசிய ஒருங்கிணைந்த வர்க்கச் சோதனையின் போது (NCVT) உயர் விளைச்சலைத் தந்தது.

## பாகல் வர்க்க விருத்தி

இரண்டு புதிய முதலாம் சந்ததி ($F_1$) கலப்பினங்கள் மிகச் சிறந்த தரமுடையனவாக அடையாளப்படுத்தப்பட்டன. இவ்வர்க்கங்களின் மதிப்பீட்டு நடவடிக்கைகள் NCVT மற்றும் VAT இனூடாக நடாத்தப்பட்டன.

## கத்தரி வர்க்க விருத்தி

விருப்பத்திற்குரிய பழப்பண்புகளுடன் பக்ரீரியா வாடல் நோய்க்கு எதிர்ப்பு / சகிப்புத் தன்மையுடைய உயர் விளைச்சல் தரக்கூடிய வர்க்கங்களை உற்பத்தி செய்வதை இலக்காக கொண்டு முழு முயற்சியுடனான கத்தரியின் வர்க்க இனவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. மூன்று வெளித் தெரியும் செயற்பாடுடைய பெற்றோர் வம்சாவழி தெரிவு செய்யப்பட்டதுடன் அவற்றுக்கிடையில் 16 புதிய முதலாம் சந்ததி குறுக்குக் கலப்புகளும் மேற்கொள்ளப்பட்டன. NCVT சோதனையின் போது இரண்டு புதிய முதலாம் சந்ததி கலப்பின கத்தரி வர்க்கங்கள் (EGH 8 மற்றும் EGH 9) வெளித் தெரியும் செயற்பாடுடையனவாக அடையாளம் காணப்பட்டன.

### கெக்கரி வர்க்க விருத்தி

2013ம் ஒரு முதலாம் சந்ததி கலப்பின வர்க்கமான HORDI வைட் (HORDI - White) ஆனது நாடு தழுவிய ரீதியிலான பயிர்ச் செய்கைக்கென வர்க்க விடுவிப்புக் குழுவினால் விடுவிப்புச் செய்யப்பட்டது. $R_2$, $M_2$ மற்றும் $H_2$ என்பன புதிய இனவிருத்தி வம்சாவழிகளான விருத்தி செய்யப்பட்டதுடன் உறுதிப்பாட்டுக் கற்கைகளுக்கென தெரிவு செய்யப்பட்டன.

### இலைமரக்கறி

2013ல் ஒரு புதிய பச்சை அமராந்தசு கீரை வர்க்கமான HORDI தம்பல் (HORDI - Thampal) ஆனது நாடு தழுவிய ரீதியிலான பயிர்ச் செய்கைக்கென வர்க்க விடுவிப்புக் குழுவினால் விடுவிப்புச் செய்யப்பட்டது.

### பீர்க்கு வர்க்க விருத்தி

ஒரு திறந்த மகரந்தச் சேர்க்கையடையும் வர்க்கமும் ஒரு முதலாம் சந்ததி கலப்பின வர்க்கமும் வர்க்க விடுதலைக் கமிட்டியின் கூட்டத்தின் போது முன்வைக்கப்பட்டன. அதில் திறந்த மகரந்தச் சேர்க்கையடையும் வர்க்கம் விடுவிப்புச் செய்யப்பட்டது. முதலாம் சந்ததி கலப்பின வர்க்கமானது எதிர்வரும் ஆண்டில் விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் அறிக்கையுடன் விடுவிப்புச் செய்யப்படும். HL முதலாம் சந்ததி மற்றும் TD வம்சாவழி என்பன உயர் விளைச்சல் தந்தன.

### கொடிப் பயற்றை வர்க்க விருத்தி

இலங்கையில் பிராந்திய ரீதியான / நாடு பூராகவும் பயிரிடத்தக்கதான சிறந்த தரமும், காறை அழுகல் நோய்க்கு எதிர்புடையதும் விரைவாக உயர் விளைச்சல் தருவதுமான கொடிப் பயற்றை வர்க்கங்களின் விருத்தியை இவ்வாராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் இலக்காகக் கொண்டது. உயர் விளைச்சல், காறை அழுகல் நோய்க்கு எதிர்ப்பு மற்றும் சிறந்த தரம் என்பவற்றை கொண்ட வெளித் தெரியும் செயற்பாடுடைய இரண்டு வம்சாவழிகளான 39 - 9 மற்றும் 39 - 12 ஆகியன மேலதிக சோதனைகளுக்காத் தெரிவு செய்யப்பட்டன. இவற்றுள் குறைந்தது ஒரு வர்க்கமேனும் 2014ல் விடுவிக்கப்பட முடியும். உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட ஏனைய 4 வம்சாவழிகள் உறுதிப்பாட்டுக் கற்கைகளுக்கென தெரிவு செய்யப்பட்டன.

### தக்காளி வர்க்க விருத்தி

உயர் தரம் பக்ரீரியா வாடலுக்கு எதிர்ப்பு / சகிப்புமுடைய முதலாம் சந்ததி கலப்பின வர்க்கங்களை உற்பத்தி செய்யும் நோக்குடன் இந் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

2013ல் சிறுபோகத்தில் 33 மூலவுயிருருக்கள் மதிப்பிடப்பட்டதுடன் முதலாம் சந்ததி கலப்பின உற்பத்திக்கென 89 குறுக்குக் கலப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்ட 11 வர்க்கங்கள் சோதனையிடப்பட்டதுடன் அவற்றுள் இரண்டு மிகச் சிறந்தனவாக காணப்பட்டன.

### சிறகவரை வர்க்க விருத்தி

NCVT சோதனையில் வெளித்தெரியும் செயற்பாடுடைய வம்சாவழியான WBMP ஆனது இரண்டாவது உயர் விளைச்சலைத் தந்தது இதன் விளைச்சல் ஒப்பீட்டு வர்க்கமான SLS - 44 இன் விளைச்சலை விடவும் குறிப்பிட்டுக் கூறக்கூடியளவு உயர்வில் அமைந்திருந்தது.

### பாரம்பரிய மரக்கறி வர்க்கங்களினது விதையுற்பத்தி

இச்செயயற்றட்டத்தின் கீழ் 800 கிலோகிராம் இற்கும் அதிகமானளவு பாரம்பரிய மரக்கறி வர்க்கங்களின் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன. (சுண்டங்கத்தரி, பேரங்கத்தரி, கெக்கரி, பூசணி, வெண்டிக்காய் மற்றும் பல....)

### கொரிய மரக்கறிப் பயிர்ச் செய்கைச் செயற்றிட்டம்

உள்ளூர்க் காலநிலை நிபந்தனைகளின் கீழ் கொரிய மரக்கறிகளான சலாதுக் கெக்கரி, வெள்ளை முள்ளங்கி, சீனக் கோவா மற்றும்

கீரைகள் என்பன அவற்றின் இசைவாக்கத் திறனை கற்கவென பெரிய அளவுகளில் பயிரிடப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டன. இரண்டு சீனக் கோவா வர்க்கங்களான CR yeoreument மற்றும் woori, இரண்டு கெக்கரி வர்க்கங்களான Gangryoksamchuk மற்றும் Jangrok heukjinju, மூன்று வெள்ளை முள்ளங்கி வர்க்கங்களான yeongdong, supergilijo மற்றும் mafjinmatdonamu, மற்றும் இரண்டு கீரை வர்க்கங்களான Cheongchima மற்றும் Hanbatjeokchima, என்பன இடைநாட்டு நிபந்தனைகளின் கீழ் இசைவாக்கப்பட முடியுமென கண்டறியப்பட்டது.

### பழங்கள் மற்றும் இழையவளர்ப்புப் பிரிவு

பழப்பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கவென பழப்பயிர்களுக்கான உள்ளக வளர்ப்புக்குரிய அவசியமான ஆரம்ப நெறிமுறைகளின் விருத்தி மற்றும் பழப்பயிர் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை இப்பிரிவு செயற்படுத்துகிறது. உயர்தரம், மற்றும் உயிர் விளைச்சலுடன் நோய் பீடைகளுக்கு எதிர்ப்பு / சகிப்புடைய பழ வர்க்கங்களின் விருத்தியில் ஆராய்ச்சி முயற்சிகளின் பிரதான கருத்தூன்றல் உள்ளது. பழப்பயிர்களின் உற்பத்தித் திறன் மேம்பாட்டுக்குரிய பயிராக்கவியல் பொதிகளின் விருத்தியிலும் இப்பிரிவு அழுத்தமாக செயற்படுகிறது. அபிவிருத்தி நடவடிக்கைகளுள் நடுகைப் பொருட்களின் உற்பத்தி, உட்கட்டுமான அபிவிருத்தியினூடாக ஆராய்ச்சிப் பண்ணைகளின் உற்பத்திக் கொள்திறனை அதிகரித்தல் என்பன உள்ளடங்குகின்றன. இவற்றுடன் பல்வேறுபட்ட முறைமைகளில் தொழிநுட்பப் பரம்பல் நடவடிக்கைகளும் தொடராய் இடம் பெற்றவண்ணமுள்ளன.

#### வாழை

வேறுபட்ட கோழிக்குட்டு வர்க்கங்கள் வேறுபட்ட பாரம்பரிய வகைக்கு வேறுபட்ட துலங்கலைக் காட்டின. சிபாரிசுக்கமைவான வர்க்கமான "ஆக்ரா" உள்ளக வளர்ப்பு பெருக்க முறைகளுக்கு துலங்கலைக் காட்டவில்லை. வர்க்கம் ஆக்ரா வினுடைய பெருக்க வீதத்தை அதிகரிப்பதற்கு பரிசோதனைகள் தொடரப்படு கின்றன.

#### திராட்சை

விதையற்ற தொம்சன் வர்க்கமானது வெற்றிகரமாக பெருக்கப்பட முடியும். ஆறு மாதத்துக்குட்பட்ட காலப்பகுதியினுள் ஒரு சிறிய தாவரப் பகுதியிலிருந்து (Ex-Plant) 300 வரையிலான நடுகைப் பொருட்கள் (Plantlets) உற்பத்தி செய்யப்பட்டன.

#### வாழை மற்றும் அன்னாசியில் நடுகைப் பொருள் உற்பத்தி

**அட்டவணை 1.2.2 இழையவளர்ப்புத் தாவரங்களின் தற்போதைய நிலை**

| பயிர் | வர்க்கம் | தாவரங்கள் | |
|---|---|---|---|
| | | உள்ளக வளர்ப்பு | தாவர இல்லம் |
| வாழை | அம்பன் | 15,000 | 22,00 |
| | கோழி குட்டு | 10,000 | 1,250 |
| அன்னாசி | மொறிசியஸ் | 25,000 | 6,500 |

## செயற்றிட்டங்கள்

விவசாயத் திணைக்களத்தின் விசேட செயற்றிட்ட ங்களினால் நிதியீட்டம் செய்யப்படுகின்ற இழைய வளர்ப்பு நடுகைப் பொருட்கள் உற்பத்திச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஏறத்தாழ 4000 வளர்ப்பூடக கலங்களை பேணத்தக்க வகையில் ஆய்வுகூட வசதிகள் விரிவுப்படுத்தப்பட்டன.

## விரிவாக்க வேலைகள்

- ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் ஆலோசனைச் சேவைகள் (33 நபர்களுக்கு)
- விரிவுரைகள் - பல்கலைகழக மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான 6 விரிவுரைகள்
- ஆலோசனைச் சேவைகள் - 58 பேருக்கு
- மேற்பார்வை செய்யப்பட்ட செயற்றிட்டம் - 01 நிறைவு பெற்றது (ஒரு திறந்த பல்கலைக் கழக மாணவருடன்) உள்ளக வளர்ப்பு முறை பெருக்கத்துக்கான வாழை மற்றும் அன்னாசிக்குரிய செலவு குறைந்த வளர்ப்பூடகம்
- கண்காட்சிப் பொருட்கள் வழங்கி பொலநறுவை மற்றும் வாரியப்பொல கண்காட்சிகளில் பங்கு பற்றியமை

## பூச்சியியல் பிரிவு

### செயற்றிட்டம் ~ 1

**சித்திரசு பயிர்களில் நோய் பீடைக் கட்டுப்பாட்டுக்கான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவப் பொதிகளின் விருத்தி (NARP செயற்றிட்டம்)**

- இச்செயற்றிட்டம் 2011ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. வர்க்கங்களின் பிரித்தெடுப்பு, பழைய நச்சுத்தன்மை வாய்ந்த இரசாயனங்களை புதிய சூழல் நேயமான இரசாயனங்களினால் மாற்றீடு செய்வதற்கான தாவரப் பீடைநாசினிகள், பூச்சி நாசினிகள், பங்கசுநாசினிகளின் சோதனையிடல் என்பன மேற்கொள்ளப் பட்டன.

### அடைவுகள்

சித்திரசுவில் குத்தியுறுஞ்சும் பீடைகளை வினைத்திறனாகக் கட்டுப்படுத்த இரு பூச்சி நாசினிகள் (அபமக்டின் மற்றும் குளோதியனிடின்) சிறந்தவையாக காணப்பட்டன. நான்கு சிற்றுண்ணி நாசினிகள் 2012/ 2013 பெரும்போகத்தில் போது பரீட்சிக்கப்பட்டன. இந்நான்கு சிற்றுண்ணி நாசினிகளுமே (நிசோரான் 10% WP, நிசோரான் 5% EC, அபமக்டின் 3.6 EN , பென்பைரொக்சி மேட் 5% EC) தற்போது சிபாரிசுக்கமைவாகவுள்ள சிற்றுண்ணி நாசினிகளுக்குச் சமானமான வினைத்திறனுடையவை என அடையாளம் காணப்பட்டது. கந்தகம் சித்திரசு துருச்சிற்றுண்ணியைக் கட்டுப்படுத்தப் பயன்படும். பெறுபேறுகளை உறுதிப்படுத்திக் கொள்ளவெனஇப்பரீட்சிப்புக்கள் 2014ல் மீளவும் நடாத்தப்படும்

### செயற்றிட்டம் ~ 2

**விசேடமாக வைரசு நோய்களை கருத்திற் கொண்டு பூசணிப் பயிர்களில் நோய் பீடைக் கட்டுப்பாட்டுக்கான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவப் பொதிகளின் விருத்தி (NARP செயற்றிட்டம்)**

- 2010ம் ஆண்டிலிருந்து உலர் வலயத்தில் செய்கைப் பண்ணப்படும் பூசணிப் பயிரில் ஒரு வித மஞ்சளாதல் நோய் பயிரை பாதிப்பதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. எனவே விசேடமாக மஞ்சளாதல் நோயைக் கட்டுப்படுத்துவதை கருத்திற் கொண்டு பூசணிப் பயிர்களில் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவப் பொதிகளின் விருத்தி 2011ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

### அடைவுகள்

இரசாயனங்கள், ஒளித்தெறிப்பு பொலித்தீன் மூடுபடை என்பவை உள்ளடங்கலாக பலமுறை களை ஒன்றிணைத்து ஒரு IPM பொதி விருத்தி செய்யப்பட்டது. புதிய IPM பொதிகளின் இசைவாக்கத்திறன் விவசாயிகளின் கள நிலைமை களின் கீழ் உலர் வலயத்தில் பரீட்சிக்கப்பட்டன. மொறகொல்லாகம மற்றும் பாதெனிய ஆகிய இடங்களில் மூன்று விவசாயிகளின் களங்களில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்புகள் வெற்றிகர மானதாக அமைந்திருந்தன.

## செயற்றிட்டம் – 3

### வற்றாளைக் கிழங்கு நீள்மூஞ்சு வண்டு (Cylas formicarius) கட்டுப்பாட்டுக்கான முகாமைத்துவப் பொதியினை அடையாளம் காணல்.

- வற்றாளைச் செய்கையில் குறிப்பிடத்தக் களவு விளைச்சல் இழப்பை ஏற்படுத்தும் பிரதான பூச்சிப் பூடையாக அமைந்திருப்பது வற்றாளைக் கிழங்கு நீள்மூஞ்சு வண்டாகும் (Cylas formicarius) இப்பீடையைக் கட்டுப்படுத்தவென பூச்சி நாசினிகள் பரீட்சிக்கப்பட்டன.

### அடைவுகள்

தயோமெதொக்சாம், குளோரன்தரனலிபுரோல் மற்றும் முன்னரே கலக்கப்பட்ட தயோமெதொக்சாம், + குளோரன்தரனலிபுரோல் இணைவு என்பன 2012 / 2013 பெரும்போகத்தில் வினைத்திறனாக அமைந்திருந்தன.

## செயற்றிட்டம் – 4

### விளைச்சல் செயலாற்றுகை மற்றும் நோய் பீடை எதிர்ப்புத்தன்மை என்பவற்றுக்காக வெளிநாட்டுக்குரிய பீர்க்கு வர்க்கங்களின் மதிப்பீடு

- வெளிநாட்டுக்குரிய மற்றும் உள்ளூர்க் கலப்பின பீர்க்கு வர்க்கங்களின் நோய் பீடைகளுக்கெதிரான செயலாற்றுகை மதிப்பிப்பட்டதுடன் LA 33 மற்றும் NAGA ஆகியவர்க்கங்களுடன் ஒப்பிடப்பட்டன.

### அடைவுகள்

கீழ்வரும் வர்க்கங்கள் விதை உற்பத்தி / இறக்குமதிக்கென சிபாரிசு செய்யப்பட்டன. LD 33 x TD, NRGH 22, OPEX TROPICAL LUFFA, OPEX 3134, SHALANI, OPEX 3144, ORDINARY.

## செயற்றிட்டம் – 5

### கத்தரி காய்தண்டு துளைப்பான் (Leueinodes orbanalis) இற்கு குறைவான நச்சுத்தன்மையுடைய புதிய பூச்சி நாசினிகளின் கொல்திறன் பிரித்தெடுப்பு

- கத்தரியில் காய்தண்டு துளைப்பான் (Leueinodes orbanalis) ஒரு தீவிரமான பீடையாகும். சிபாரிசுக் களைவான பூச்சிநாசினிகளின் வினைத்திறனின்மை காரணமாக மனிதனுக்கும் சுற்றாலுக்கும் குறைவான நச்சுத்தன்மையுடைய புதிய பூச்சி நாசினிகள் பிரித்தெடுப்புச் செய்யப்பட்டன.

### அடைவுகள்

ஸ்பைனோதோரம் 25% WG, 0.4 கிராம் / லீற்றர் புளுபெந்தியாமைட் 20% WG, 1 கிராம் / லீற்றர் ஸ்பைனோதோரம் 25% WG, 0.3 கிராம் / லீற்றர் மற்றும் புளுபெந்தியாமைட் 20% WG, 0.5 கிராம்/ லீற்றர் என்பன இணக்கமுடையனவாக காணப் பட்டன.

## தாவர நோயியல் மற்றும் காளான் ஆராய்ச்சிப் பிரிவு

### பக்ரீரியா வாடல் நோய்க்கு எதிர்புடைய வெளிநாட்டு கலப்பினங்களின் தேர்வு

AVRDC இனால் விருத்தி செய்யப்பட்ட ஆரம்ப நெறிமுறைகளைப் பயன்படுத்தி Ralstonia solanaccarum இனால் ஏற்படுத்தப்படும் பக்ரீரியா வாடலுக்கான எதிர்ப்புத்தன்மையை உடைய வற்றைத் தேர்வு செய்ய வெவ்வேறு நாடுகளில் இருந்து இறக்குமதியான 27 தக்காளி, 27 கறிமிளகாய் மற்றும் 7 கத்தரிக் கலப்பினங்கள் தேர்வுச் சோதனைக்குட்படுத்தப்பட்டன. எல்லா வர்க்கங்களும் பக்ரீரியா வாடலுக்கு நடுத்தரமான எதிர்ப்பினைக் காட்டியிருந்தன. விளைச்சல் செயலாற்றுகை மற்றும் இசைவாக்கத்திறன் சோதனைகளுக்கென இவை முன்மொழியப் பட்டன.

### ELISA பரிசோதனை மூலம் வெளிநாட்டுக்குரிய கலப்பின விதைகளில் வைரசுக்கான விதைச் சுகாதாரப் பரிசோதனை

வெளிநாட்டுக்குரிய பூசணிவிதைகளின் மாதிரிகள் 74 CGMMV வைரசுக்கென சோதிக்கப்பட்டன. அவற்றுள் ஒரேயொரு பீர்க்கு விதை மாதிரி வைரசுக்கு நேரான விளைவைக் காட்டியதுடன் அது மேலதிக மதிப்பீடுகளுக்காக எடுத்துக் கொள்ளப்படவில்லை. தக்காளி (மூன்று மாதிரிகள்) விதைகள் TSWV வைரசுக்கென சோதனையிடப்பட்டன. எல்லா மாதிரிகளும் இவ்வைரசுவிலிருந்தும் தூய்மையானவையாக காணப்பட்டன.

### விதை உருளைக்கிழங்குத் தொகுதிகளின் பரீட்சிப்பும் ஆய்வு கூட சோதனைகளும்

- நெதர்லாந்து, ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி மற்றும் பிரான்சு ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதியான விதை உருளைக் கிழங்குத் தொகுதிகள் 73 தடுப்புக்காப்புச் செய்யப்பட வேண்டிய நோயாக்கிகளிலிருந்து தூய்மை யானவையா என பரீட்சிக்கப்பட்டு ஆய்வு கூடப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப் பட்டன.

Geotrichum candidum இனால் ஏற்படுத்தப்படும் வலைப் பொருக்கு, கறுப்புப் பொருக்கு, இறப்பர் அழுகல் மற்றும் Streptomyces இனங்களினால் ஏற்படுத்தப்படும் பொதுப் பொருக்கு என்ன இவ்விதை உருளைக்கிழங்குத் தொகுதிகளில் அனுமதிக்கப்பட்ட அளவுகளில் பொதுவாக அவதானிக்கப்பட்டன. இவ்விதை உருளைக கிழங்குத் தொகுதிகள் யாவும் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ள நோயாக்கிகளினது அனுமதிக்கப் பட்ட அளவிலும் மிகக் குறைவான நிலையில் காணப்பட்டமையினால் விவசாயிகளின் களங் களில் பயிர்ச் செய்கைக்கென அனுமதிக்கப் பட்டன.

### பயிர்களின் நோய் முகாமைத்துவத்தில் நோய் அடையாளம் காணல் மற்றும் ஆலோசனைச் சேவைகள்.

தாவர நோயியல் பிரிவினால் வழங்கப்பட்ட பயிர்களின் நோய் முகாமைத்துவத்தில் நோய் அடையாளம் காணல் மற்றும் ஆலோசனைச் சேவையானது 2013ம் ஆண்டிலும் தொடரப்பட்டது. விவசாயிகளிடமிருந்தும் தனியார் பண்ணைகளிலிமிருந்து கிடைக்கப்பெற்ற 900 இற்கும் அதிகமான பழப்பயிர், மரக்கறிப்பயிர், கிழங்குப்பயிர், சுவைச்சரக்குப்பயிர், அலங்காரத் தாவரங்கள் மற்றும் ஏனைய களப்பயிர் மாதிரிகள் ஆகியன பக்ரீரியா, பங்கசு, வைரசு மற்றும் பைற்றோப்பிளாசுமா நோய்களுக்கென உரிய ஆய்வுகூட முறையில் சோதனைக்குட் படுத்தப்பட்டன. நோயேற்பட்ட தாவர மாதிரிகளில் நோயேற்படுத்தும் காரணிகள் அடையாளம் காணப்பட்டு உரிய நபர்களுக்கு முகாமைத்து நடவடிக்கைகள் தொடர்பில் பொருத்தமான ஆலோசனைச் சேவைகளும் வழங்கப்பட்டன. பூசணி மற்றும் கறிமிளகாயில் புதிய பைற்றோப் பிளாசுமா நோய்கள் அடையாளம் காணப்பட்டன.

### மரக்கறிகளில் வளர்ச்சி மேம்பாட்டுக்கும் பீடைக் கட்டுப்பாட்டுக்குமான இயற்கைப் பொலிமர்கள்

விவசாயத் திணைக்களம், HORDI மற்றும் இலங்கை அணுச் சக்தி அதிகார சபை என்பன இணைந்து பீடைக் கட்டுப்பாட்டுக்கான இரசாயனப் பீடை நாசினிகளுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடியதும், மரக்கறிகளில் வளர்ச்சித் தூண்டியாக செயற்படுவதுமான இயற்கைப் பொலிமர் சேர்வைகளின் உற்பத்திக்கான தொழிநுட்பத்தை விருத்தி செய்தன. ஒரு வர்த்தக ரீதியான உற்பத்தியான "கைற்றோ பவர்" (Chito power) ஆனது 6ம் திகதி புரட்டாதி மாதம் 2013ம் ஆண்டு சேவைக் காலப் பயிற்சி நிலையத்தில் அறிமுகப்படுத்தப் பட்டது.

### அந்திரக்னோசு நோய்க்கு எதிர்புடைய போஞ்சி வர்க்கங்களை (Phascolus Vulgaris .l) விரைவாக இனங்காண்பதற்குரிய வர்க்கத் தேர்வு நுட்பத்தின் விருத்தி

இலங்கையில் பல்வேறு பகுதிகளிலும் போஞ்சியில் அந்திரக்னோசுவினது தீவிர தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது. பயிரிழப்பை இழிவாக்கி அந்திரக்னோசு நோய்க்கு எதிர்புடைய வர்க்கங்களை விரைவாகவும், நம்பகமாகவும் தேர்வு செய்ய வர்க்கப் பிரித்தெடுப்பு முறையினது விருத்தி ஒரு முக்கியமான ஆராய்ச்சித் தேவைப்பாடாக உள்ளது. காய்களிலிருந்து வெளியேறும் சாறானது வித்திகளின் விருத்தியாக்கத்திலும், C. Lindermuthianum இன் வித்திகளின் விருத்தியாக்க வீதத்திலும் ஊக்குவிப்பு செய்கின்றது. காய்களிலிருந்து வெளியேறும் சாறானது வர்க்கங்களின் தொற்றும் தன்மை / எதிர்ப்புத்தன்மையை ஒப்பிட போஞ்சி மூலவுயிருருவின் உள்ளக வளர்ப்புச் சோதனைகளின் போது பயன்படுத்தப்பட முடியும்.

### கெக்கரியில் தூள்பூஞ்சண நோய்க்கு (Erisiphe இனங்கள்) எதிராக புதிய பங்கசு நாசினிகளின் உயிரியல் கொல்திறன் மதிப்பீடு

எட்டுப் புதிய பங்கசு நாசினிகளின் வேறுபட்ட திடநிலைகள் மதிப்பிடப்பட்டதுடன் அவை சிபாரிசுக்கமைவான பங்கசு நாசினிகளுடன் ஒப்பிடப்பட்டன. அவை கெக்கரியில் தூள்பூஞ்சண நோயைக் கட்டுப்படுத்த வினைத்திறனாகப் பயன்படுத்தப்பட முடியும்.

### பூசணிக்குடும்பப் பயிர்களில் கீழ்ப்பூஞ்சண நோய்க்கெதிராக பதிவுகள் காலாவதியான பங்கசு நாசினிகளின் உயிரியல் கொல்திறனை மீளவும் பரீட்சித்தல்

ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்த ஏழு பங்கசு நாசினிகள் பூசணிக்குடும்பப் பயிர்களில் கீழ்ப்பூஞ்சண நோய்க்கெதிராக மீளவும் பரீட்சிக்கப்பட்டன. பங்கசு நாசினிகளான மங்கோசெப் 64% + மெடாலக்சில் 8% WP, மங்கோசெப் 80% WP, (மூன்று மூலங்களில் இருந்து), கப்டான் 50% WP, (இரண்டு மூலங்களில் இருந்து), மற்றும் மனெப் 80 (w/w) ஆகியன பூசணிக் குடும்பப் பயிர்களில் கீழ்ப்பூஞ்சண நோய்க்கெதிராக இன்னமும் வினைத்திறனாக செயற்படுகின்றமை கண்டறியப் பட்டது. ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்த எட்டு பங்கசு நாசினிகள் தூள்ப்பூஞ்சண நோய்க் கட்டுப்பாட்டுக்கென மீளவும் பரீட்சிக்கப்பட்டன. சல்பர் 80% WG, காபென்டசிம் 50% WP, (இரண்டு மூலங்களில் இருந்து), உள்ளடங்கலாக இவ் எட்டு பங்கசு நாசினிகளும் வெண்டியில் தூள்ப்பூஞ்சண நோய்க் கட்டுப்பாட்டில் இன்னமும் வினைத்திறனாக செயற்படுகின்றமை கண்டறியப்பட்டது.

### Phomopsis asparagi இனால் ஏற்படுத்தப்படும் சாத்தாவாரி தண்டு வெளிறல் நோயினது முதல் அறிக்கையும் பங்கசு நாசினிகளுடாகஅதன் முகாமைத்துவமும்.

இலங்கையின் வடமேல் பிராந்தியங்களில் 2012 / 2013 பெரும்போக காலத்தில் சாத்தாவாரி (Asparagus officinalis) யில் கடுமையான தண்டு வெளிறல் நிலை காணப்பட்டது. இந்நோயை ஏற்படுத்தும் பங்கசானது Phomopsis aspargi யென உருவவியல் பண்புகளின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டது.

### Rhinocladium corticolum இனால் மாவில் ஏற்படுத்தப்படும் கறுப்புப் பட்டி நோயினது முதல் அறிக்கையும் அதன் முகாமைத்துவமும்

இலங்கையில் வடமேல் மாகாணத்தில் வாரியப்பொல பகுதியில் மாமரங்களில் பெரிய, கடுங்கறுப்பு நிற, ஒழுங்கற்ற, வளைய வடிவான மேற்பரப்புக்குரிய தொற்றுப்பகுதிகள் மரப் பட்டைகள், சிறுகிளைகளில் அவதானிக்கப்பட்ட துடன் அது வகுப்பு அஸ்கோமை சிட்டிசுக்குரிய Rhinocladium corticolum எனும் பங்கசுவினால் ஏற்படுத்தப்படும் கறுப்புப் பட்டி நோய் (கறப்புத் தண்டு நோய்) என அடையாளம் காணப்பட்டது. மேற்பரப்புக்குரிய பங்கசு வளர்ச்சியை உராய்ந்து நீக்கிய பின்னர் பாதிக்கப்பட்ட தண்டுப்பகுதிகளை செம்பு ஒட்சிகுளோரைட்டு கரைசலானால் (20 - 30 கிராம் / லீற்றர் நீர்) பரிகரிப்பதன் மூலம் இந்நோயானது வினைத்திறனாக முகாமைத்துவம் செய்யப்பட முடியும்.

### இலங்கையில் குக்கர்பிற்றேசியே மரக்கறிகளுடன் இணைந்ததான பிகோமோ வைரசினது மூலக்கூற்று அடையாளம் காணலும் பண்புப்படுத்தலும்

இலங்கையின் பல்வேறு விவசாயச் சூழலியல் வலயங்களிலும் பிரபல்மாகச் செய்கை பண்ணப்படும் மரக்கறிகளுள் பூசணிக் குடும்பப் பயிர்களும் அடங்ககின்றன. பூசணிப் பயிர்களின் விளைச்சல் மற்றும் பழத்தரம் என்பவற்றைக் குறைப்பதில் பெரும்பங்கு வைரசு நோய்களு டையதாகும். இலங்கையில் குக்கர்பிற்றே குடும்ப பயிர்களில் தாக்கமேற்படுத்தும் பல வைரசுக்கள் முன்பு ELISA முறை மூலம் கண்டுபிடிக்கப் பட்டன. இவற்றுடன் பகலில் கடுமையான இலைச்சுருளல் அடையாளங்களைக் கொண்டிருந்த நோய் நிலை வெண் ஈயினால் பரப்பப்படுகின்றது. பிகோமோ வைரசுக்குத் தனித்துவமான PCR அசே பாவிப்பிலிருந்து நோய்த்தாக்கத்துக்குட்பட்ட பாகல், பீர்க்கு, பூசணி, கெக்கரி, புடோல் போன்றன வைரசு அறிகுறிகளைக் காட்டியதுடன் அவற்றுடன் பிகோமோ வைரசுவின் இருக்கையும் வெளிப்படுத்தப்பட்டது. இலங்கையில் இதுவே குக்கர்பிற்றே குடும்பப் பயிர்களுடன் பிகோமோ வைரசுவின் இருக்கை தொடர்பான முதலாவது அறிக்கையிடலாகும், பிகோமோ - பாகல் - இலங்கை - வைரசு (Begumo - Bittergourd) இனது புரத உறை பரம்பரையலகுகளினுடைய உப்பு மூலத்தொடர் ஒப்பீடு மற்றும் பைலோஜெனடிக் பகுப்பாய்வுகளிலிருந்து இதன் நியுக்கிரியோனட்டுக்களானது தக்காளி - இலைச்சுருளல் நியுடெல்லி வைரசு - பாகல் (ToLCNDV - BG) உடன் 97% ஒத்திசைந்திருந்துடன் இது ToLCNDV - BG இனுடைய ஒரு மாறலுக்குரியது என்பதையும் சுட்டிக் காட்டியது.

### இலங்கையில் பூங்கனியியல் பயிர்களுடன் தொடர்பாயுள்ள பைற்றோபிளாஸ்மாவினுடைய குணங்குறியியலும் மூலக்கூற்று கண்டறிதலும்

பூங்கனியியல் பயிர்களின் களத் தரவுச் சேகரிப்புக்களிலிருந்து, கத்தரி, பப்பாசி, கறிமிளகாய் மற்றும் மிளகாய் தாவரங்கள் பைற்றோப் பிளாசுமாவுடன் தொடர்புடையதான குணங்குறிகளை வெளிப்படுத்தியமை அவதானிக்கப்பட்டது. பைற்றோப்பிளாசுமா பிறைமர்களினது உருப்பெருக்கப்பட்ட அவதானிப் புக்களிலிருந்து, கத்தரியில் காணப்படுகின்ற சிற்றிலை நோய், பப்பாசியுடன் இணைந்ததான பின்னோக்கிப்படல் நோய், மிளகாய் /

கறிமிளகாயுடன் இணைந்து காணப்படும் ரொசெட்டே நோய் என்பன பைற்றோப் பிளாசுமாவினால் ஏற்படுத்தப்படுகின்றமை தெளிவாகியது. இதுவே இலங்கையில் மிளகாயில் காணப்படுகின்ற ரொசொட்டே நோய் பைற்றோபிளாசுமாவினால் ஏற்படுத்தப்படுவதாக பதிவு செய்யப்பட்ட முதல் அறிக்கையாகும்.

### உருளைக் கிழங்கில் தூள்ப் பொருக்கினை ஏற்படுத்தும் Sponguspora subterranean f sp. subterranea வினது மூலக்கூற்று கண்டறிதலும், விதை உருளைக் கிழங்கில் சுகாதாரப் பரிசோதனைக்கான விரைவான மூலக்கூற்றுக் கண்டறிதல் முறைமையின் விருத்தியும்

இலங்கையில் பங்கசுவினால் ஏற்படுத்தப்படுகின்ற தூள்ப் பொருக்கு விதை உருளைக்கிழங்கில் தடுப்புக் காப்பு முக்கியத்துவமுடைய ஒரு நோய். இது உருளைக் கிழங்கு செய்கை பண்ணும் பல பாகங்களிலிருந்தும் அறிக்கையிடப்பட்டிருந்தது. இந்நோயினுடைய முகாமைத்துவத்தில் நோயாக்கிகளில்லாத ஆரோக்கியமான நடுகைப் பொருட்களை மண்ணில் / ஆதாரமொன்றில் வளர்ப்பது ஒரு பிரதான முன்தேவைப்பாடாக வுள்ளது. வெற்றுக் கண்ணால் அவதானித்தல், நுணுக்குக்காட்டியினூடாக அவதானித்தல். பாய்மவியல் நுட்பங்கள் என்பன இந்நோயாக்கியை அடையாளம் கண்டறிதலில் போதுமானதாக அமைந்து விடுவதில்லை இக்கற்கை மூலம் விருத்தி செய்யப்பட்ட மூலக்கூறு அடையாளம் காணும் முறைமையானது விதை உருளைக்கிழங்கில் தூள் பொருக்கு நோயை ஏற்படுத்தும் Spongospora subterranea f. sp. இனது விரைவானதும் நம்பமானதுமான அடையாளம் காணலுக்கு விதைச் சுகாதாரச் சோதனைகளின் போது தொடராய் பயன்படுத்தப்பட முடியும். பாதிக்கப்பட்ட கிழங்கு, வேர் வீக்கங்கங்கள் மற்றும் தொற்றலடைந்த அடிப்பதார்தங்கள் என்பவற்றிலிருந்தான DNA ஆனது 434bp எனுமளவில் தொடர்ச்சியான விரியலாக்கங்களை வழங்குகின்ற அதேவேளையில் இதனுடன் தொடர்புடையதான எதிர்மறைக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகளிலிருந்து எதுவிதமான விரியலாக் கங்களும், பெறப்படவில்லை.

### சுதேச காளான் வர்க்கத்தினது பயிர்ச் செய்கைத் தொழிநுட்பம்

கண்டி, கலியல்பிட்டிய வில் மண் மற்றும் மரந்தூள் கலவையில் பெறப்படட அசேதன காளான் வர்க்கத்தினது கனியுடலங்காளானது உண்ணக்கூடிய Boletus இனங்கள் என அடையாளம் காணப்பட்டது. தாய்வித்தி மற்றும் வர்த்தக ரீதியான வித்திகள் என்பன நெல் தானிய அடிப்பொருளில் வெற்றிகரமான முறையில் 13 நாட்களில் பெறப்பட்டன. விவசாயத் திணைக்களத்தின் சிபாரிசுக்கமைவான கூட்டெருப் பைகளில் 26 - 28$^{0}$ செல்சியல் எனும் வெப்பநிலையில் 35 நாட்களில் இச் சுதேச காளானின் பூஞ்சண இழைகள் வெற்றிகரமான முறையில் வளர்ந்தன. சிறியளவான ஊசிமுனையளவு கனியுடலங்களானது பைகள் திறக்கப்பட்டு 10 நாட்களின் பின்னர் தோன்றின.

### வளர்ப்புக்குரிய பைகளில் அடைகாப்பதற்கு பயிர்ச் செய்கை அறையின் பாவனை

காளான் செய்கைக்குத் தேவையான நிலப் பாவனையின் அளவை இழிவாக்கவும் சிற்றுண்ணித் தாக்கத்தைக் கட்டுப்புடுத்திய வண்ணம் தொடர்ச்சியான விளைச்சலைப் பெறவும் இருவகையான பயிராக்கல் தொகுதிகள் பயன்படுத்தப்பட முடியும். இம்முறை மனிதவலு சேமிப்பு, தொடர்ச்சியான விளைச்சல், மற்றும் இலகுவில் சிற்றுண்ணித் தாக்கம் கட்டுப்படுத்தப் படல் என்பவற்றை வழங்குகின்றது.

### விவசாய இரசாயனவியல் பிரிவு

இப்பரிவினது பிரதான பணிகளாக மண்வளம், தாவரப் போசணை முகாமைத்துவம் மற்றும் சேதன விவசாயம் என்பவற்றில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதாகும். இவற்றுக்கு மேலதிகமாக

மண் சோதனையின் அடிப்படையிலான பசளைப் பிரயோகம் தொடர்பில் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் மண், தாவர, நீர், அசேதனப் பசளைகள், சேதன பசளைகள் என்பவற்றின் மாதிரிகளின் பகுப்பாய்விலும் ஈடுப்படுகின்றது.

இப்பிரிவினால் மண், பசளைகளும் அவற்றின் முகாமைத்துவமும் மற்றும் சேதன விவசாயம் ஆகியவற்றில் பயிற்சி நிகழ்ச்சிகளும் நடாத்தப்படுகின்றன.

### சேதன மரக்கறிப் பயிர்களினது போசணை முகாமைத்துவம்

சேதன விவசாயத்தில் மரக்கறிப் பயிர்களின் வளர்ச்சி மற்றும் விளைச்சலில் பகுதிகளாகப் பிரித்து பிரயோகிக்கப்படும் சேதனப் பசளைகளின் விளைவானது ஒரே தடவையில் சேதனப் பசளைப் பிரயோகத்தை மேற்கொள்ளும்போது கிடைக்கும் விளைச்சளை ஒத்தளவான விளைச்சளை தர இயலுமானதாக இருக்குமென காட்டியது. இதனால் பகுதிகளாகப் பிரித்துப் பசளைப் பிரயோகம் மேற்கொள்வதனால் பிரயோகிக்கப்படும் பசளையின் அளவைக் குறைத்துக் கொள்ளலாம்.

### கூட்டெருவின் தொடர்ச்சியான பாவனை

கூட்டெருவைத் தனியாகப் பிரயோகிக்கும் போது (16 / கெக்ரயர்) கிடைக்கும் விளைச்சலிலும் கூட்டெரு + NPK இணைந்து பயன்படுத்தப்படும் போது (28.5 / கெக்ரயர்) மொத்த மரக்கறி விளைச்சலானது உயர்வாக காணப்பட்டது. 13 ஆண்டுகளாக தனியே அசேதன இரசாயனப் பசளைப் பிரயோகம் மாத்திரம் மேற்கொண்ட போது மிகக் குறைவான விளைச்சல் (8.4 தொன் / கெக்ரயர்) பெறப்பட்டது. சேதனப் பசளைகளையும் அசேதனப் பசளைகளையும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்துவது தாவரப் போசணைகளை வழங்குவது மாத்திரமன்றி மண்ணின் நிலைமைகளையும் மேம்படுத்து கின்றது.

### மரக்கறி உற்பத்தியில் உயிர்க் கரியின் பாவனை

கருக்கிய உமியை மாட்டெருவுடன் கலந்து இடுவதிலும் பார்க்க கோழியெருவுடன் கலந்து இடுவதனால் ஏறத்தாழ 14 வீத விளைச்சல் அதிகரிப்பு பெறப்பட முடியும் என மரக்கறிச் செய்கையில் சேதன விவசாய முறைகளில் சேதனப் பசளைகளுடன் உயிர்க்கரியை இணைந்துப் பாவிப்பதன் விளைவு காட்டியது. இதே சேதனப் பசளைகளுடன் கருக்கிய தென்னம் உரிமட்டைகளை கலந்து இடுவதிலும் பார்க்க கருக்கிய உமியை கலந்து இடுவது ஒப்பீட்டளவில் சிறந்த செயலாற்றுகையை காட்டியது. இப் பரிசோதனைகளானது பல போகங்களுக்கு தொடர்ப்படும்.

சிபாரிசுக்கமைவான சேதனப் பசளைகளுடன் கருக்கிய உமியைக் கலந்திடுவதனையும் கருக்கிய கிளிரிசிடியாவை கலந்திடுவதையும் ஒப்பிடுகையில் தக்காளியின் விளைச்சலானது கருக்கிய கிளிரிசிடியாவை கலந்திடும் போது 30 சதவீத விளைச்சல் அதிகரிப்பு பெறப்பட்டது. பெறுபேறுகளிலிருந்து மாட்டெருவுடன் கருக்கிய உமியைக் கலந்திடும் போது 41 சதவீத விளைச்சல் அதிகரிப்பு பெறப்படுகின்ற அதே வேளை அசேதனப் பசளைக்கான பரிகரிப்பின் போது கருக்கிய உமியுடனான அசேதனப் பசளைச் சேர்மானம் மேற்குறிப்பிட்டவாறான விளைச்சல் அதிகரிப்பினைக் காணப்பிக்க வில்லை.

### ஈரவலயத்தில் வருடாந்த பயிரிடல் தொகுதிகளில் வாழைக்கான பொட்டாசியமும் அதன் முகாமைத்துவமும்

சிறப்பான பொட்டாசியத்தின் தொடர்ச்சியான பிரயோக அளவு, பழத்தின் தரம், மற்றும் மண்ணில் பொட்டாசியத்தின் நிலை என்பவற்றுக்கு வாழை காட்டும் துலங்கலை கண்டறிய பரிசோதனைகள் நடத்தப்பட்டன. ஆரம்பக்கட்ட பெறுபேறுகளின்படி பொட்டாசியப் பசளையின் பிரயோக அளவினை அதிகரிப்பதன் மூலம் ஈரவலயத்தில் வாழையின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட முடியும் எனப் புலனாகியது. இக்கற்கையானது முன்னேற்ற கரமாக உள்ளது.

### மரக்கறி உற்பத்தியில் நனோ – நைதரசன் பசளையினது பாதிப்பு.

மரக்கறிகளில் நூறு சதவீதம் அசேதனப் பசளை இடுவதனால் பெறப்படக்கூடிய விளைச்சலானது நனோ - நைதரசன் பசளை 75 சதவீதம் இடுவதன் மூலம் (3 தடவைகளில் பிரித்து இடல்) பெற்றுக் கொள்ள முடியுமாயிருக்கும். எவ்வாறாயிருப்பினும் சிபாரிசுக்கமைவான அளவின் 50 சதவீதத்திலும் குறைவான அளவில் நனோ - நைதரசன் பசளை இடப்படும் போது குறிப்பிடத்தக்களவு விளைச்சல் குறைவு ஏற்படுகின்றது. இக்கற்கையானது மேலும் தொடரப்படும்.

### மரக்கறிகளில் நுண்போசணை மூலகங்களுக்கான துலங்கலைக் கற்றல்

நுண்போசணை வழங்கல் மற்றும் உயர் அசேதனப் பசளைகளின் வழங்கல் நிலமைகளின் போது விளைச்சல் மற்றும் போசணை மூலகங்களின் அகத்துறிஞ்சல் தொடர்பில் வெவ்வேறு விவசாயக் காலநிலை வலயங்களில் கறிமிளகாய், உருளைக்கிழங்கு மற்றும் பூசணி ஆகியபயிர்களில் சோதிக்கப்பட்டது. கறிமிளகாய் மற்றும் உருளைக் கிழங்கு என்பவற்றுக்கு சேதனப் பசளைப் பிரயோகத்தின் மூலம் எதுவிதமான தெளிவான மாற்றங்களுமில்லை. எனினும் பூசணியானது சேதனப் பசளைப் பிரயோகத்துக்கு உயர் விளைச்சல் தந்தது. கறிமிளகாய் மற்றும் பூசணிக்கு நுண் மூலகங்கள் மற்றும் துணையான போசணை மூலகங்களை வழங்குவதன் காரணமாக குறிப்பிடத்தக்க விளைச்சல் அதிகரிப்பேதும் அவதானிக்கப் படவில்லை. எனினும் உருளைக் கிழங்கானது துணையான போசணை மூலகங்களுக்குத் துலங்கலைக் காட்டியது. இம் மூன்று பயிர்களின் இலைகளிலும் போசணை மூலகங்கள் போதுமளவில் காணப்பட்டன.

### மரக்கறிகளில் வித்தியாசமான பசளைப் பிரயோக நடவடிக்கையின் தாக்கம்

KOPIA செயற்றிட்டத்தின் கீழ் மரக்கறிகளில் வித்தியாசமான பசளைப் பிரயோக நடவடிக்கை களின் வினைத்திறன் சோதித்தறியப்பட்டது. கொரிய பசளைப் சிபாரிசுகளும் விவசாயத் திணைக்களப் பசளைச் சிபாரிசுகளும் தக்காளிப் பயிரில் விவசாயிகளின் செயற்முறைகளின் கீழ் விவசாயிகளின் களங்களில் பரீட்சிக்கப்பட்டது. கொரிய சிபாரிசுக்கமைய பசளைப் பிரயோகம் உயர்வாக காணப்பட்ட போதும் விளைச்சலில் எதுவித மேம்பாடும் இருக்கவில்லை. விவாயிகள் உயரளவான பசளைப் பிரயோகம் மேற்கொண் டிருந்த போதிலும் விவசாயத் திணைக்கள சிபாரிசுக்கமைவான (20.7 தொன் / கெக்ரயர்) பசளைப் பிரயோகத்திலும், விவசாயிகளின் செய்முறைக்கமைவான (21.2 தொன் / கெக்ரயர்) பசளைப் பிரயோகத்தின் போதும் ஒரே மாதிரியான விளைச்சலே பெறப்பட்டது.

### மரக்கறிப் பயிர்களினால் போசணை அகற்றப்படல்

மரக்கறிப் பயிர்களின் போசணைத் தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்யவென இக்கற்கை மேற்கொள்ளப்பட்டது. ஐந்து கத்தரி வர்க்கங்கள், ஆறு தக்காளி வர்க்கங்கள் பதினைந்து பாகல் வர்க்கங்கள், எட்டு கெக்கரி வர்க்கங்கள் மற்றும் ஐந்து கறிமிளகாய் வர்க்கங்கள் என்பவற்றினால் ஏற்படுத்தப்படும் போசணை வெளியேற்றங்கள் தீர்மானிக்கப் பட்டன. கிடைக்கப் பெற்ற பெறுபேறுகளிலிருந்து தக்காளி மற்றும் கத்தரிப் பயிர்கள் உயரளவு பொட்டாசியத்தை உள்ளெடுத்ததுடன் அதற்கடு த்தப்படியாக இவ்விரு பயிர்களும் நைதரசனை உள்ளெடுத்தன. கத்தரியில் பொசுபரசுவுடன் ஒப்பிடுகையில் கல்சியததின் உள்ளெடுக்கை அதிகமாகவிருக்கையில் தக்காளியில் கல்சியத்தின் உள்ளெடுக்கை உயர்வாயிருந்தது. இக்கற்கை முன்னேற்றகரமாகவுள்ளது.

### இலங்கையில் பாவனையிலுள்ள மும்மைச்சுப்பர் பொசுபேற்று (TSP) மற்றும் மியூரியேற்றுப் பொட்டாசு (MOP) ஆகியவற்றில் சுவட்டு உலோகங்களின் நிலை தொடர்பான கற்கை.

வெவ்வேறு நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொசுபரசு மற்றும் பொட்டாசியம் பசளைககளில் சுவட்டு உலோகங்களின் (இரும்பு, செம்பு, மங்கனீசு, நாகம், கட்மியம், குரோமியம், ஈயம் மற்றும் ஆசனிக்கு) உள்ளடக்கம் தீர்மானிக்கப் பட்டது. பெறுபேறுகளிலிருந்து பொசுபரசு பசளைகளானது சுவட்டு உலோகங்களான இரும்பு, செம்பு, மங்கனீசு, நாகம். கட்மியம், ஈயம், ஆசனிக்கு மற்றும் குரோமியம் என்பவற்றை குறிப்பிடும் படியான அளவுகளில் கொண்டிருந்தது. TSP யில் அபாயத்துக்குரிய மூலகங்களான ஈயம், கட்மியம், குரோமியம் மற்றும் ஆசனிக்கு என்பவற்றின் மட்டம் முறையே 16.4 - 98.6 ppm, 1.6 -18.1 ppm, 31.0 - 406.2 ppm, மற்றும் 0.28 - 10.2 ppm, எனும் வீச்சினுள் அமைந்திருந்தது. எனினும் MOP யில் இவற்றின் வீச்சு (ஈயம் - 18.8 - 41.6 ppm) பொசுபரசு பசளைகளுடன் ஒப்பிடுகையில் குறைந்தளவில் அமைந்திருந்தன. இக்கற்கை மேலும் தொடர்படும்.

### இலங்கையில் வித்தியாசமான பயிர்ச் செய்கைத் தொகுதிகளில் மண் வளம் தொடர்பான மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம்

இலங்கையின் எல்லா மாவட்டங்களும் உள்ளடங்கும் வண்ணம் தெரிவு செய்யப்பட்ட கமநல கேந்திர நிலையப் பிரிவுகளில் வித்தியாசமான பயிர்ச் செய்கைத் தொகுதிகளில் மண் வளத்துடன் தொடர்பான அளவு கோல்களை மதிப்பிடவென இக்கற்கை மேற்கொள்ளப்பட்டது. மாதிரிகளின் சேகரிப்பும் பிரதான மூலகங்களுக்கான பகுப்பாய்வும் பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் கண்டி, கேகாலை, மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களுக்கான துணையான மற்றும் நுண்மூலகங்களுக்கான பகுப்பாய்வு பூரணப்படுத்தப்பட்டுள்ளன. ஏனைய மாவட்டங்களுடைய மாதிரிகளின் பகுப்பாய்வும் முன்னேற்ற கரமாகவுள்ளது.

## மண் நுண்ணுயிரியல்

### மரக்கறிப் பயிர்களுடன் தொடர்புடையதான நைதரசன் பதிக்கும் நுண்ணங்கித் தொகுதிகளின் வேறாக்கம்

இக்கற்கையானது நைதரசன் பதிக்கும் பக்ரீரியாக்களைப் பிரித்தெடுக்கவாகும். இப் பக்ரீரியாக்களின் வினைத்திறனும் சோதித்தறியப் பட்டது. ஐந்து வித்தியாசமான பக்ரீரியாத் தொகுதிகள் வேறுபிரித்தெடுக்கப்பட்டதுடன் அவை கறிமிளகாயில் பரீட்சிக்கப்பட்டன. பெபேறுகளில் இருந்து கறிமிளகாயின் வளர்ச்சியில் வேறு பிரித்தெடுக்கப்பட்ட பக்ரீரியாத் தொகுதிகள நேர்விளைவுகளைக் காட்டியமை புலனாகியது. இக்கற்கையானது ஏனைய மரக்கறிகளின் மீதும் தொடரப்படும்.

### மூன்று வகையான முகாமைத்துவ நிபந்தனைகளின் கீழ் கறிமிளகாயில் நுண்ணுயிரினவியல் பல்வகைமை

இரசாயன மற்றும் சேதனப் பசளைப் பிரயோகங்களுடைய பல்வகைமை மதிப்பிடப் பட்டது. தாவர வளர்ச்சியானது சிபாரிசுக்கமை வான கூட்டெரு இடப்பட்ட பரிகரிப்பிலும், எதுவிதமான பசளைகளும் இடப்படாத பரிகரிப்பிலும், சார்பளவில் தாழ்வாக காணப்பட்டது. எனினும் நுண்ணுயிரினவியல் பல்வகைமையானது பசளைகள் எதுவும் இடப்படாத பரிகரிப்பிலும் தனியே கூட்டெரு இடப்பட்ட பரிகரிப்பலும் உயர்வாக காணப்பட்டது. இக்கற்கையானது தொடரப்படும்.

## கிழங்குப் பயிர்கள், அலங்காரத் தாவரங்கள் மற்றும் வீட்டுத் தோட்டப் பிரிவு

### கிழங்குப் பயிர்கள்

#### வற்றாளை

- தெரிவு செய்யப்பட்ட வர்க்கமான “மலேசியன்” சிறந்த தரம், கவர்ச்சிகரமான செந்நிற தோல், வெண்ணிற சதைப்பகுதி மற்றும் குறுகிய வயது என்பவற்றுடன் உயர் விளைச்சல் (25 - 35 தொன் / ெக்கரயர்) தந்தது.

- பதினொரு உப்புச் சகிப்புக்குரிய CIP வம்சாவழிகளுள், 199076 - 1, 199062 440262 - 1 மற்றும் 440183 ஆகிய வம்சாவழிகள் வர்க்கப் தேர்வுச் சோதனைகளின் போது உயர் விளைச்சல் தந்தன. இவற்றுள் உவர் பகுதிகளுக்கு மிகப் பொருத்தமான, வெளித்தெரியும் செயற்பாடுடைய வம்சாவழிகளைத் தெரிவதற்கு இவை மீண்டும் திகழ்கின்ற விளைச்சல் சோதனைகளில் மதிப்பீடு செய்யப்படும்.

#### மரவள்ளி

ஒரு பதிய வர்க்கமான “பொல்பிதிகம்” சிறந்த தரத்துடன் உயர் விளைச்சல் தந்தது (மஞ்சள் நிற சதைப்பகுதி)

#### நடுகைப் பொருள் உற்பத்தியும் பகிர்ந்தளிப்பும்

சிபாரிசு செய்யப்பட்ட கிழங்குப் பயிர் வர்க்ககளின் 45000 இற்கும் மேற்பட்ட அடிப்படை நடுகைப் பொருட்களானது நாடுமுழுவதும் வேறுபட்ட இலக்குப் பயனாளிகளுக்கு வேண்டு கோளுக்கு இணங்க பகிர்ந்தளிக்கப்பட்டது.

எல்லா வகையான கிழங்குப் பயிர்களினதும் மூலவுயிருருக்கள் எதிர்காலப் பாவனையின் நிமித்தம் பேணப்பட்டன.

### வீட்டுத் தோட்டம் மற்றும் மலரியல்

உள்நாட்டுக்குரிய சுதேச அலங்காரத் தாவரப் பெறுமதியுடைய தாவரங்களின் சேகரிப்பு, பேணுதல் மற்றும் மேம்பாடு மேற்கொள்ளப் பட்டது. இரு புதிய காட்டு அலங்காரத் தாவரங்கள் மற்றும் 4 வெளிநாட்டுக்குரிய ஜேர்பரா கலப்பினங்கள் சேகரிப்புக்குள் சேர்க்கப் பட்டன.

- வீட்டுத் தோட்டத்திற்குள் இசைவாக்கப்படுத்த ப்படக்கூடிய குறை பயன்பாடுடைய பயிர் வர்க்கங்களின் சேகரிப்பு, பேணுதல் மற்றும் மதிப்பீடு குறை பயன்பாடுடையனவும் வீட்டுத் தோட்டத்தில் உயர்ந்தளவில் இசைவாக்கப் படக் கூடியதுமான பயிர் வர்க்கங்களான மிளகாய், வெண்டி, சிறகவரை, இலைமரக்கறிகள், குழாயுரு லீக்ஸ், கத்தரி, வற்றாளை, கிழங்கு வகை மற்றும் பழ பயிர்கள் என்பன பேணப்பட்டதுடன் போக காலத்தில் வீட்டுத் தோட்ட நிலமைகளின் கீழ் சோதிக்கப்பட்டன.

- மூன்று மிளகாய் வர்க்கங்கள், முள்ளற்ற வட்டுக்காய் வர்க்கம், துளசி மூலிகைச் செடி மற்றும் ஒரு சிறகவரை வர்க்கம் உள்ளடங்கலாக ஆறு புதிய பயிர்கள் வீட்டுத் தோட்டச் சேகரிப்புக்குள் சேர்க்கப்பட்டன.

- விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமுகமாக இரண்டு பச்சையாக உண்ணக்கூடிய கெக்கரி வர்க்க மாதிரிகள் பாதுகாக்கப்பட் இல்லங்களில் மதிப்பிடப்படுகின்ற ஒரு ஆராய்ச்சி நடாத்தப்பட்டது.

## கிழங்குப் பயிர்கள், வீட்டுத் தோட்டம் மற்றும் மலரியல் : செயற்றிட்டங்கள்

### தாவரக் கருமூலவளங்களின் ஒருங்கிணைந்த முகாமைத்துவத் தொகுதி செயற்றிட்டம்

தாவரக் கருமூலவளங்களின் ஒருங்கிணைந்த முகாமைத்துவத் தொகுதி செயற்றிட்டம் எனும் செயற்றிட்டத்தின் கீழ் இதுவரையில் ஏறத்தாழ நாற்பது இராவள்ளி சந்ததிகள் (Dioscorea alata, Dioscorea esculenta, Dioscorea bulbifera, Dioscorea rotundata, மற்றும் Dioscorea oppositifolia வைச் சேர்ந்த) நாட்டின் பல்வேறு பாகங்களிலும் நடாத்தப்பட்ட தேடுதலின் பின்னர் சேகரித்தெடுக்கப்பட்டன. இவ்வனைத்து சந்ததிகளும் பெருக்கப்படவும் பாதுகாக்கப்படவுமென பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், கன்னொறுவை மற்றும் விவசாய ஆராய்ச்சி நிலையம் தலிஜ்ஜவில ஆகிய நிலையங்களில் தாபிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இச்சந்ததிகள் பெருக்கப்படவும் பாதுகாக்கப்படவுமென விவசாயிகளின் களங்களிலும் கூட தாபிக்கப்பட்டுள்ளன. இச் செயற்றிட்டத்தின் கீழ் இச்சந்ததிகளைச் சரியாக அடையாளம் காணவும், இரட்டித்த கணக்கெடுப்பை தவிர்க்கவும் உருவவியல் பண்புகளைப் பயன்படுத்தி பண்புப்படுத்தும் நடவடிக்கை இவ்வாண்டு முதல் நடாத்தப்பட்ட வண்ணமுள்ளது. திருப்பதிகரமான தனிச்சிறப்புத் தகவல்களைக் கொண்ட உயர் விளைச்சலையும் ஆழமற்ற வேர்த் தொகுதிகளையும் கொண்ட கிழங்குவகைகளை அடையாளப்படுத்தலுடன் கிழங்குப் பயிர்களானது பிரபல்யப் படுத்தப்பட முடியும். ஆதலால், இந்த இராசவள்ளிச் சந்ததிகளின் விளைச்சல் சாத்தியம், தரம், விருப்பத்திற்குரிய பயிராக்கவியல் பண்புகள் மற்றும் சிறப்பான தனிப்பண்புகள் என்பனவும் மேற்கொள்ளப்பட்டன.

### தாவரக் கருமூலவளங்களின் ஒருங்கிணைந்த முகாமைத்துவ தொகுதிகள்

இச்செயற்றிட்டத்தின் கீழ் வீட்டுத் தோட்டத்திற்குப் பொருத்தமான பத்து பயிர் வர்க்கங்கள் சேகரிக்கப்பட்டன. இச்சந்ததிகள் யாவும் பெருக்கப்படவும் பாதுகாக்கப்படவுமென வீட்டுத் தோட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில் சேகரிக்கப்பட்ட சந்ததிகளினது பண்புப்படுத்தல் தொடரப்படும்.

### $CO_2$ செறிவூட்டல் செயற்றிட்டம்

ஒரு கலப்பின தக்காளி வர்க்கமான “செரிஸ்” (Ceres) இச்செயற்றிட்டத்தின் கீழ் சோதிக்கப்பட்டது. $CO_2$ செறிவூட்டப்பட்ட பயிரானது கட்டுப்பாட்டு (வளிமண்டல $CO_2$ செறிவு) டன் ஒப்பிடுகையில் உயர் விளைச்சலைத் தந்தது.

### இலங்கையில் பொலித்தீன் கூடார நிபந்தனைகளின் கீழ் செர்ரி தக்காளி வர்க்கத்தினுடைய மதிப்பீடு

நான்கு செர்ரி தக்காளி வர்க்கங்கள் HORDI இலுள்ள பொலித்தீன் கூடாரங்களில் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் இது 2014 ம் ஆண்டிலும் தொடர்ப்படும்.

### பாரம்பரியமான மரக்கறி வர்க்கங்களின் விதைக் கிடைப்புத் தன்மையை அதிகரித்தல் செயற்றிட்டம்

ஏழு பாரம்பரியமான மரக்கறி வர்க்கங்கள் (எத்தல வெண்டி, வீட்டுத் தோட்ட வெண்டி, கறிமிளகாய் வர்க்கம், நெத்தலிச் சிறகவரை, சிவப்புச்சிறகவரை மற்றும் அலங்க போன்றன) பெருக்கப்பட்டதுடன் பண்புப்படுத்தப்பட்டன.

### விரிவாக்கம், பொருளியல் மற்றும் தரவு முகாமைத்துவ பிரிவு

இப்பிரிவானது பூங்கனியியல் பயிர்களின் தொழிநுட்ப இடமாற்றத்தை ஒருங்கமைத்தல் / பரப்புதல் செயற்றிட்ட அறிக்கை தயாரிப்பில் உதவுதல், மற்றும் HORDI இன் பொருளியல்

நோக்கும் தரவு முகாமைத்துவமும் என்பவற்றுக்குப் பொறுப்பானதாகும்.

### பயிற்சி நிகழ்ச்சிகள்

இவ்வாண்டில் இப்பிரிவானது விழிப்புணர்வு மற்றும் தொழிநுட்ப இடமாற்றல் நிகழ்ச்சிகளை பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள், பாடசாலைகள், விவசாயிகள் மற்றும் விவசாயச் சங்கங்கள் என்பவற்றுக்கு நடாத்தியுள்ளது.

**அட்டவணை 1.2.3 – 2013ல் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு மற்றும் தொழிநுட்ப இடமாற்ற நிகழ்ச்சிகள்**

| வகை | பங்குபற்றுவோரின் எண்ணிக்கை |
|---|---|
| கிழங்குப் பல்கலைக்கழகம் | 36 |
| யாழ்ப்பாண பல்கலைக்கழகம் | 47 |
| திறந்த பல்கலைக்கழகம் - தாவரவியல் திணைக்களம் | 46 |
| ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்- ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | 37 |
| ரஜரட்ட பல்கலைக்கழகம்- பிரயோக விஞ்ஞான பீடம் | 40 |
| வயம்ப பல்கலைக்கழகம் | 41 |
| கொழும்பு பல்கலைக்கழகம்- புவியியல் திணைக்களம் | 34 |
| கொழும்பு பல்கலைக்கழகம் - சுதேச மருத்துவ திணைக்களம் | 150 |
| பேராதனைப் பல்கலைக்கழகம் - தாவரவியல் திணைக்களம் | 36 |
| ஜயவர்த்தன பல்கலைக்கழகம் - சமூக புள்ளிவிபரவியல் திணைக்களம் | 30 |
| விவசாயப் பாடசாலை - வவுனியா மற்றும் பெல்வெஹர | 73 |
| உயர் தொழிநுட்பவியல் நிறுவனம் - நய்வல | 42 |
| **நிறுவனங்களும் சமூகங்களும்** | |
| விவசாய - விலங்கு சர்வதேச நிகழ்ச்சி - 2013 ஒன்று கூடல் நிலையம் SLFI கொழும்பு | 11 |
| விசிட் லங்கா தனியார் நிறுவனம் - பிரான்ஸ் கண்பார்வை இழந்தவர்களுக்கான இலங்கைத் தேசிய அமைப்பு - கண்டி | 42 |
| இலங்கை கதபிம அதிகார சபை - பயிற்றுனருக்கான பயிற்சி | 30 |
| கிளிநொச்சியில் விவசாய முகாம் - 3 நாள் நிகழ்ச்சி | 05 |
| விவசாயிகள், முயற்சியாண்மையாளர்களுக்கான பயிற்சி | 200 |
| பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி | 349 |
| விவசாயிகள், முயற்சியாண்மையாளர்களுக்கான பயிற்சி | 166 |
| பங்கேற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை | 143 |
| பங்கேற்ற பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை | 7250 |

- பயிற்சி நிகழ்ச்சிகளின் போது வளவாளர்களினால் பின்வரும் தலைப்புக்கள் கலந்துரையாப்பட்டன.

- களமட்டப் பரிசோதனைகளை வடிவமைத்தல், நாற்று மேடை தயாரிப்பு, பூங்கனியியல் பயிர்களின் பொதுவான பீடைகள், நோய்கள், வீட்டுத் தோட்ட முகாமைத்துவம், நோய்களை அடையாளம் காணல், இழைய வளர்ப்பு நுட்பம், காளான் வளர்ப்பு, அறுவடையின் பின்னான மற்றும் உணவுத் தொழில்நுட்பம், சேதன விவசாயம்.

- புதிதாக வேலைகமர்ததப்பட்ட ஆராய்ச்சி உதவியார்களுக்கான இரு வார கால சேவைக்காலப் பயிற்சி 2013.06.17 தொடக்கம் 2013.06.26 மற்றும் 2013.07.08 தொடக்கம் 2013.07.19 வரை ர்ழுசுனுஐ ல் நடாத்தப்பட்டது. ஒவ்வொரு அணியும் 40 ஆராய்ச்சி உதவியாளர்களை உள்ளடக்கியிருந்தது.

- இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையினரால் ஒப்படைக்கப்பட்ட இரு மாணவர்களுக்கு தொழிநுட்ப இடமாற்றம் மற்றும் தொழிநுட்பத் துண்டுப் பிரசுரம் தயாரிப்பு என்பவற்றில் ஆறு மாத காலப் பிரயோகப் பயிற்சி வழங்கப்பட்டது.

## தொழிநுட்ப பரவலாக்கல் நடவடிக்கைகள்

- பூங்கனியியல் பயிர்கள் தொடர்பிலான பிரச்சினைகள் 55 இற்கு எழுத்து மூலமாக பதிலளிக்கப்பட்டது.

- தொலைபேசியூடான 62 விசாரணைகளுக்கு தொழிநுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

- விரிவாக்கற் பிரிவுக்கு வருகை தந்த 138 பேருக்கு தொழிநுட்பத் தகவல்கள் வழங்கப்பட்டன.

- பதாதைகள் மற்றும் தொழிநுட்பத் தகவல்களை வழங்க நாடுதழுவிய ரீதியில் பல்வேறு நிறுவனங்களும் நடாத்திய கண்காட்சிகளுக்கு ஒத்தாசை வழங்கப் பட்டது.

## தொழிநுட்பப் பிரசுரங்கள்

- புதிய தொழிநுட்பத் துண்டுப் பிரசுரங்கள் நான்கின் தயாரிப்பு:-

- கட்டை முருங்கை (Moringa oleifera), தேனீ வளர்ப்பு, பப்பாசி விதை உற்பத்தி மற்றும் மரக்கறிகளின் நுகர்ச்சியினை மேம்படுத்து வதற்கான வழிகளும் முறைகளும்

- 4337 எண்ணிக்கையான தொழிநுட்பப் பிரசுரங்களும், ஏழு தொழிநுட்பப் பிரசுர தொகுதிகளும் (இல 1 - 131 வரையான துண்டுப் பிரசுரங்கள்) விற்பனை செய்யப்பட்டன.

## ஊடக நிகழ்ச்சிகள்

- மவுண்ட்லவெனியா சுற்றுலா விடுதியிலிருந்து கலாநிதி புபிலிஸ் சில்வா வினால் வீட்டுத் தோட்டத்தில் “மரக்கறிகளின் நுகர்ச்சியை மேம்படுத்தல்” எனும் சலனப்பட நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. இது ஒளிப்பரப்பப்படும்.

- வானொலி நிகழ்ச்சிகள் இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத் தாபனம் - 02
  - வீட்டுத் தோட்டத்தில் வளர்க்கப்படும் பழங்கள் மற்றும் மரக்கறிகளிது பயன்பாடும் பெறுமதி சேர்ப்பும்
  - வீட்டுத் தோட்டத்தில் மிகச்சிறிய பொலித்தீன் கூடாரங்களை அறிமுகப்படுத்துவதனால் வீட்டுத் தோட்ட உற்பத்தியை அதிகரித்தல்

### தரவுத்தள முகாமைத்துவப் பிரிவு

இப்பிரிவானது கீழ்வரும் விடயப் பரப்புக்களில் தரவு, தகவல்களை வழங்குதல் மற்றும் தயாரித்தலில் ஒத்துழைப்பு வழங்குகிறது.

- நிதிக் கொடுக்கல் வாங்கல்களை உரிய நேரத்திலும் துல்லியமாகவும் பதிவு செய்தல்
- HORDI இன் வருடாந்த கணக்கறிக்கைக் கூற்றுக்கு தேவையான எல்லா கூறுகளை யும் தயாரித்தல்
- மற்றைய எல்லா உள்ளக, வெளியக கணக்கீட்டு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் வழங்குதல்
- சட்ட மற்றும் முகாமைத்துவ எல்லைகளுக் குள் நாடப்படும் நோக்கங்களுக்கான நிதி மற்றும் வளங்களை பகிர்ந்தளித்தலும் கட்டுப்படுத்தலும்
- HORDI இனுடைய பாதீட்டு மதிப்பீடு தயாரிப்பதில் ஒத்துழைத்தல் செயற்றிடங்கள் மற்றும் சாதாரண செலவினத் தலைப்புக் களின் மாதாந்த, வருடாந்த சாரம்சங்களின் தயாரிப்பு.( NARP, கலப்பினம், KOPIA, NSF, போன்றன)
- HORDI இனுடைய தரவுத்தளத்தைக் கையாளுதல்.

    NASTEC

    COSTI

    INFIRM

    வருமான அறிக்கைகள்

    மனித வள தரவுத் தளம்

### விவசாய அருங்காட்சியகம்

விவசாய அருங்காட்சியகமானது எல்லா அலுவலக நாட்களிலும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 4.15 மணி வரையும் திறந்திருப்பதுடன் வேண்டுகோள் விடுவிக்கப்படு மிடத்து அரச விடுமுறை நாட்களிலும் திறக்கப்படும். காட்சிப் பொருட்களானது பாரம்பரியமான விவசாயக் கருவிகளும் பொறிகளும் மற்றும் பாரம்பரிய களஞ்சிய கட்டமைப்பு மாதிரிகள் என்பவற்றை உள்ளடக்கு கின்றது.

- 34786 பாடசாலை மாணவர்கள், 2521 ஆசிரியர்கள், 2860 விவசாயிகள் 913 பொதுச் சேவைப் பணியாளர்கள், 673 பல்கலைக்கழக மாணவர்கள், 19 வெளிநாட்டவர்கள், 3188 நாட்டம் கொண்ட நபர்கள் 2013ம் ஆண்டுக் காலப் பகுதியில் வருகை தந்தனர்
- 2145 எண்ணிக்கையான “கமத் பாசாவ” துண்டுப் பிரசுரங்கள் விற்க்கப்பட்டன.
- 208 தொலைபேசி அழைப்புக்களுக்குப் பதிலளித்து தொழிநுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

### மத்திய நூலகம்

இலங்கையின் பிரதான விவசாய நூலகமான இது தன்னகத்தே புதிய, பழைய வெளியீடுகள் உள்நாட்டு வெளிநாட்டு சஞ்சிகைகள், புத்தகங்கள் என்பவற்றைக் கொண்டிருப்பதுடன் CD - Rom மற்றும் CAB மூலம் அவசியமான சார்பிலக்கியங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளையும் கொண்டது.

- 251 இற்கும் அதிகமான வெளிநாட்டுக்குரியதும் குறித்தவொரு காலப்பகுதியில் வெளியிடப்படுவதுமான நூல்கள் ஆண்டு பூராகவும் பூரணத்துவமான பிரதிகளாக பெறப்ட்டன. இவற்றுடன் வருடந்தோறும் சேவையைப் பெறும் கட்டமான 5750 ஸ்ரெலிங் பவுண்கள் பொதுநலவாய விவசாய சர்வதேச நிறுவனத்துக்கு (CABI) இந்நூலகத்தினால் செலுத்துப்பட்டுள்ளது.
- தகவல்களைப் பெறவென 1000 இற்கும் மேற்பட்ட பயனாளர்கள் நூலகத்துக்கு வந்தார்கள். வழமையான வாசகர் சேவை

மற்றும் நூலகங்களுக்கிடையான இரவல் வழங்கும் திட்டங்கள் என்பவற்றுக்கூடாக ஏறத்தாழ 850 புத்தகங்கள் வாசகர்சாலை உறுப்பினர்கள் மத்தியில் சுழற்சி முறையில் பரிமாற்றப்பட்டுள்ளன.

- ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஏறத்தாழ 60 பெறுமதி வாய்ந்த தேடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. CARP இன் உதவியினூடாக ஏற்த்தாழ 42 தேடல்களும் நடாத்தப்பட்டன. திணைக்கள ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கென பாவனையாளர் கருத்தரங்கொன்றும் நடாத்தப்பட்டது.

- இணைய வசதியைப் பயன்படுத்தி ஏறத்தாழ 200 ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் தகவல்களைப் பெற்றுள்ளனர். இவர்களுக்கு AGRIS - CD நவீன தகவல்களைப் பெறுவதில் உதவியாக அமைந்தது. இலங்கையின் நவீன விவசாயத் தகவல்களான இலங்கை விவசாயத் திணைக்கள விருடாந்த சஞ்சிகை மற்றும் அயண மண்டல விவசாயவியலாளர் சஞ்சிகைகளின் கட்டுரைகளை WEB - AGRIS வலைத்தளத்திற்கு தரவேற்றுவதில் நாம் வெற்றி கண்டுள்ளோம் அதனுடன் விவசாய தரவுகளை தேசிய விவசாய நூல் விபரணம் - 2012 க்கு தரவேற்றவும் இயலுமாயிந்தோம்.

- AGRIS - NET இன் பக்க உள்ளடக்கச் சேவையானது (SDCP) தொடரப்பட்டதுடன் 150 மேற்பட்ட பக்க உள்ளடக்கங்களானது திணைக்கள பாவனையாளர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டது. மத்திய நூலகமனது 2012ல் அயண மண்டல விவசாய வியலாளர் பிரசுரத்தினை (மலர் 160) உள்நாட்டவருக்கும் வெளிநாட்டுவருக்கும் பகிர்ந்தளித்துடன் PURNA வுக்கு உள்ளீடாக 1000 இங்கு மேற்ப்பட்ட கட்டுரைகளையும் 3200 புத்தகங்களையும் வழங்கியது.

## தொழில்நுட்ப இடமாற்ற நடவடிக்கைகளும் அபிவிருத்தியும்

### மரக்கறிப் பிரிவு

#### இனவிருத்தியாளர் விதை உற்பத்தி

**அட்டவணை 1.2.4 இனவிருத்தியாளர் விதை உற்பத்தி 2013 ல்**

| பயிர் | வர்க்கம் | அளவு (கிலோ கிராம்) | பொறுப்பான அலுவலர் |
|---|---|---|---|
| மரக்கறி கௌபி | சேன | 28.5 | P. மாலதி |
| நீள பயற்றை | ஹவரிமே | 18 | P. மாலதி |
| | செடி பொலன் | 5.6 | P. மாலதி |
| முள்ளங்கி | பிரளு | 2.2 | P. மாலதி |
| கத்தரி | பாதாகொட | 3.5 | கலாநிதி ஹேமால் பொன்சேகா |
| | HS2 (பெற்றோர்) | 670கிராம் | கலாநிதி ஹேமால் பொன்சேகா |
| | 5132 (பெற்றோர்) | 250கிராம் | கலாநிதி ஹேமால் பொன்சேகா |
| | 8104 (பெற்றோர்) | 13கிராம் | கலாநிதி ஹேமால் பொன்சேகா |
| கறிமிளகாய் | புல்னோஸ் (மாத்தளை PADA இன் வேண்டுகோளிற்கிணங்க) | 750 கிராம் | கலாநிதி ஹேமால் பொன்சேகா |

| | | | |
|---|---|---|---|
| தக்காளி | திலினி | 736 கிராம் | கலாநிதி ஹேமால் பொன்சேகா |
| | HT2123 | 557 கிராம் | கலாநிதி ஹேமால் பொன்சேகா |
| கெக்கரி | சம்பியன் | 980 கிராம் | நிர்மலா பரராஜ சிங்கம் |
| | கல்பிட்டி வெள்ளை | 1.3 கி.கிராம் | நிர்மலா பரராஜ சிங்கம் |
| பாகல் | மாத்தளை கிறீன் | 7 கி.கிராம் | நிர்மலா பரராஜ சிங்கம் |
| பீர்க்கு | LA33 | 2.8 கி.கிராம் | கலாநிதி H. ஆரியரத்ன |
| போஞ்சி | கன்னொறுவை கிறீன் | 40.85கி.கிராம் | கலாநிதி H. ஆரியரத்ன |
| சிறகவரை | கிருஸ்ணா | 32 கி.கிராம் | கலாநிதி H. ஆரியரத்ன |
| | SLS - 44 | 4.25 கி.கிராம் | - |
| இலைமரக்கறிகள் | வல்லாரை, பொன்னாங்காணி கங்குன், மிஞ்சி, கொரியன் வல்லாரை | 1085 கி.கிராம் நடுகைப் பொருட்கள் | - |

## பழங்கள் மற்றும் இழைய வளர்ப்பு பிரிவு

- ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் ஆலோசனைச் சேவைகள் (35 நபர்கள்)
- விரிவுரைகள் - 06 விரிவுரைகள் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள்
- ஆலோசனை சேவைகள் - 58 நபர்கள்
- மேற்பார்வை செய்யப்பட்ட செயற்றிட்டங்கள் - 01 நிறைவு பெற்றது (திறந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர்) உள்ளக வளர்ப்பு பெருக்கததிற்கு வாழை மற்றும் அன்னாசிக்கான செலவு குறைந்த வளர்ப்பூடகம்
- பொலநறுவை மற்றும் வாரியப் பொல வில் நடைபெற்ற கண்காட்சிகளுக்கு காட்சிப் பொருட்கள் வழங்கியமையோடு பங்கேற்பும் மேற்கொள்ளப்பட்டது.

## பூச்சியியல் பிரிவு

### ஆலோசனைச் சேவைகள்

- விவசாயிகனால் ஆய்வு கூடங்களுக்குக் கொண்டு வரப்பட்ட 110 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. தொலை பேசியூடாக விசாரிக்கப்பட்ட 50 பீடைப்பிரச்சினைகளுக்கு விடையளிக்கப் பட்டதுடன் கட்டுப்பாட்டு முறைமை தொடர்பிலும் ஆலோசனை வழங்கப்பட்டது.
- 186 நபர்கள் தேனீ வளர்ப்புப் பூங்காவுக்கு விஜயம் செய்திருந்ததுடன் தேனீ வளர்ப்பு தொடர்பில் ஆலோசனை வழங்கப்பட்டனர்.
- களப்பிரச்சனைகளைக் கண்டறியவென விவசாயிகளின் களங்கள் 20 இற்கு விஜயம் மேற்கொள்ளப்பட்டதுடன் கட்டுப்பாட்டு முறைமைகளுக்கான ஆலோசனைச் சேவையும் வழங்கப்பட்டது.
- 34 பயிற்சி நிகழ்ச்சிகளில் வளவாளர்களாக பங்கேற்புச் செய்யப்பட்டது.
- வெளி நாட்டுக்குரிய வர்க்கங்களின் மதிப்பீடு நோக்கங்களுக்காக 50 கள விஜயங்களில் பங்கேற்கப்பட்டது.

## தாவர நோயியல் மற்றும் காளான் பிரிவு

### பயிற்சி நடவடிக்கைகள்

- சிப்பிக் காளான் வளர்ப்பதற்கென 1324 பேர் பயிற்றுவிக்கப்பட்டனர். சிறியளவிலான காளான் உற்பத்தியாளராகப் பதிவு செய்வதற்கென 113 சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.
- வைக்கோல் காளான் வளர்ப்பதற்கு 23 பேருக்குப் பயிற்சியளிக்கப்பட்டதுடன் 88 பேருக்கு காளான் விதையுற்பத்தி மேற்கொள்ளப் பயிற்சியளிக்கப்பட்டது.
- HORDI இற்கு விஜயம் செய்த 443 விவசாயிகளுக்கும், தொலைபேசியூடாக 612 பேருக்கும் கடிதமூலமாக 71 விவசாயிகளுக்கும் ஆலோசனைச் சேவைகள் வழங்கப் பட்டன.
- 24 க.பொ.த (சா.த) மாணவர்களுக்கு அவர்களுக்கான "கெவல செயற்றிட்டம்" மூலமாக காளான் வளர்ப்புத் தொழிநுட்பப் பரம்பலமையச் செய்யப்பட்டது.
- யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின் மூன்று மாணவர்கள் காளான் வளர்ப்பு மற்றும் காளான் விதையுற்பத்தி தொடர்பில் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- திறந்த பல்கலைகழக விவசாய டிப்ளோமா மாணவர் ஒருவருக்கும் அம்பாறை விவசாயக் கல்லூரி மாணவர் ஒருவருக்கும் அவர்களது செயற்றிட்ட நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.
- காளான் வளர்ப்பு மற்றும் காளான் விதையுற்பத்தி தொடர்பில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பிரயோகப் பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் AgEDIS இல் இருந்து அனுப்பப்பட்ட 43 பேர்: விவசாயத் திணைக்கள அலுவலர்கள் 309 பேர், IFAD இலிருந்து அனுப்பப்பட்ட 95 பேர் (கம்பல மற்றும் கேகாலை) பண்டாரகம வெடத்த நிலையத்திலிருந்து அனுப்பப்பட்ட 58 பேர், MASL இலிருந்து 24 பேர் மற்றும் திவிநெகும நிகழ்ச்சித் திட்டத்தின் கீழுள்ள 199 பேர் ஆகியோருக்குப் பயிற்சியளிக்கப் பட்டது.

### நடுகைப் பொருட்களின் பகிர்ந்தளிப்பு

சிப்பிக் காளான் மற்றும் வைக்கோல் காளான் வளர்ப்பினை விவசாயிகள் மத்தியில் வலுவூட்ட வென வைக்கோல் காளானின் 72 தாய்வித்தி மற்றும் 46 வர்த்தக வித்தியும் 07 பைக்கற்றுக்கள் சிப்பிக் காளான் வித்திகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

### ஏனைய நடவடிக்கைகள்

#### வெளிநாட்டுப் பயிற்சிகள் / பயிற்சிப் பட்டறைகளில் 2013ம் ஆண்டில் பங்கேற்பு

- செல்வி W.A.G வீரரத்ன / ஆராய்ச்சி உத்தியோகத்தர் "ஜப்பானில் தாவர நோய்" எனும் JICA வினுடைய இருபக்க இணைந்த பயிற்சி நிகழ்ச்சிகள் புரட்டாதி 2013ம் ஆண்டு 29ம் திகதி தொடக்கம் ஐப்பசி 12ம் திகதி வரையில் பங்கேற்பு
- கலாநிதி W.A.R.T விக்கிரமஆராய்ச்சி / ஆராய்ச்சி உத்தியோகத்தர் 2013ம் ஆண்டு ஐப்பசி 20 -25 திகதியில் தாய்வான் வாழை ஆராய்ச்சி நிறுவகத்தில் நடைபெற்ற Fusarium Oxyporium f.sp cubense களுடைய உடற்கல மாறல்களின் எதிர்ப்பினை தெரிந்தெடுத்தலுக்காக ஆரம்பநெறி முறைகளின் (Protocols) தரநிர்ணையப் படுத்தும் பயிற்சியில் பங்கேற்பு
- கலாநிதி A.M.K.I எரியகம / ஆராய்ச்சி உத்தியோகத்தர் - 2013ல் ஆவணி 26 இலிருந்து புரட்டாதி 13 வரையில் சர்வதேச விவசாயத்துக்கான கொரியத் திட்டத்தின் (KOPIA) கொரிய கிராமிய நிருவாகத்தினால் (RDA) ஒருங்கமைக்கப்பட்ட காளானின் இனவிருத்தி மற்றும் பயிர்ச் செய்கைக்கான பயிற்சியில் பங்கேற்பு

## விவசாய இரசாயனப் பிரிவு

### பகுப்பாய்வு சேவை

2013ம் ஆண்டுக் காலப்பகுதியில் 87 மண் மாதிரிகள், மண் சோதனை நிகழ்ச்சிகளின் கீழும், 24 நீர் மாதிரிகள் வெவ்வேறான குழுக்களிடமிருந்தும், 28 தாவர மாதிரிகள் விவசாயிகளிடமிருந்தும், மற்றும் 84 கூட்டெரு மாதிரிகள் என்பனவும் பகுப்பாய்வுக்குட்படுத்தப் பட்டதுடன் இவற்றுடன் தொடர்பான அறிக்கைகளும் கையளிக்கப்பட்டன. நுண் மூலகங்கள் தொடர்பான பிரச்சினை மற்றும் ஏனைய பிரச்சினைகளுடன் 2013ல் கிடைக்கப்பெற்ற மாதிரிகளின் எண்ணிக்கை யானது கடந்த ஆண்டையும் விட அதிகரித்துக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இப்பகுப் பாய்வுச் சேவைகளினால் இவ்வாண்டில் பெறப்பட்ட வருமானம் ரூபா 73,905.00 ஆகும்.

### மாணவர்களினுடைய செயற்றிட்டம்:-

ரஜரட்டை பல்கலைக்கழக இரு கீழ்நிலைப் பட்டதாரி மாணவர்களும், திறந்த பல்கலைக்கழக ஒரு கீழ்நிலைப் பட்டதாரி மாணவரும் தமது இறுதியாண்டுச் செயற்றிட்டத்தினைப் பூர்த்தி செய்திருந்தனர்.

## கிழங்குப் பயிர்கள் ஆராய்ச்சிப் பிரிவு

- சேவைக்காலப் பயிற்சி நிலையம், மகாஇலுப்பளம வில் 23.04.2013 அன்று விவசாயப் போதனாசிரியர்களுக்கும், HORDI கன்னொறுவவில் புதிதாக பணிக்கமர்த்தப்பட்ட ஆராய்ச்சி உதவியாளர்களுக்கு 28.06.2013 அன்றும், மாத்தளை மாவட்ட விவசாயப் போதனாசிரியர்களுக்கு சேவைக்காலப் பயிற்சி நிலையம் கன்னொறுவவில 12.11.2013 அன்றும் ”கிழங்குப் பயிர்ச் செய்கையின் பல்வேறு தோற்றப்பாடுகள்” எனும் தலைப்பில் நான்கு பயிற்சி நிகழ்ச்சிகளும் உடபலாத, கம்பொல பிரதேச செயலகத்தில் 24.09.2013 அன்று “ஏற்றுமதிச் சந்தைக்கான தானியா பயிர்ச் செய்கை” எனும் தலைப்பில் விவசாயிகளுக்கான பயிற்சியும், HORDI கன்னொறுவவில் “கிழங்குப் பயிர்களின் தரமான நடுகைப்பொருட்களை உற்பத்தி செய்தல்” எனும் தலைப்பில் நிகவரடடிய வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட ஆசிரியர்களுக்கு 11.10.2013 அன்று பயிற்சி நிகழ்ச்சியும் நடாத்தப்பட்டது. பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்களுக்கு தொழிநுட்பத் துண்டுப் பிரசுரங்களும் (எல்லா நிகழ்ச்சிகளிலுமிருந்தும் சுமார் 200 பங்கபற்றுனர்களுக்கு) பகிர்ந்தளிக்கப்பட்டன. இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்த்தின் நான்கு மாணவர்களுக்கு கிழங்குப் பயிர்ச் செய்கை தொடர்பில் பயிற்சியளிக்கப் பட்டது.

- வீட்டுத் தோட்டம்

  வீட்டுத் தோட்ட வடிவமைப்பும் விருத்தியும் எனும் தலைப்பில் நாற்பது பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன. பல்வேறுப்பட்ட நிறுவனங்கள், வேண்டுகோள் விடுத்திருந்த நபர்கள் உள்ளடங்களாக 944 பங்கேங்பாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். இவர்களுக்கு வீட்டுத் தோட்டம் தொடர்பான தொழிநுட்பத் துண்டுப் பிரசுரங்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஏழு வர்க்கங்களையும் 217 தாவரங்களையும் கொண்ட 448 விதைப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. பொலித்தீன் கூடாரங்களுக்குள் மரக்கறிப் பயிர்ச் செய்கை எனும் தலைப்பில் இரு பயிற்சி நிகழ்ச்சிகள் 18 பங்கேற்பாளர்களுக்கு நடாத்தப்பட்டது.

- வீட்டுத் தோட்டம் தொடர்பில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியும், நாற்று மேடை முகாமைத்துவம் தொடர்பில் ஒரு வானொலி நிகழ்ச்சியும் 2013ம் ஆண்டில் நடாத்தப் பட்டன.

- ஏனைய தொடர்பாடல் நடவடிக்கைகளான விவசாயிகளின் களங்களைப் பரீட்சித்து சிறப்பான பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் தொடர்பில் ஆலோசனை வழங்குதல் கடித மூலமாகவோ அல்லது தொலைபேசியூ டாகவோ விவசாயிகளின் விசாரணை

களுக்குப் பதிலளித்தல் என்பன மேற்கொள்ளப்பட்டன. (250 பயனாளிகளுக்கு)

## ஊடக நிகழ்ச்சிகள்

### வானொலி நிகழ்ச்சி

சரியான பசளைப் பாவனை - கந்துரட்ட சேவை

## 2014ம் ஆண்டுக்கான திட்டம்

### மரக்கறிப் பிரிவு

- கத்தரி, தக்காளி, கறிமிளகாய், பாகல் மற்றும் பீர்க்கு என்பவற்றின் கலப்பின வர்க்கங்களின் விருத்தி
- போஞ்சி, பயற்றை சிறகவரை போன்றவற்றின் திறந்த மகரந்தச் சேர்க்கையடையும் வர்க்கங்களின் விருத்தி
- பாரம்பரியமான மரக்கறிப் பயிர்களின் விதையுற்பத்தி
- தக்காளி, கத்தரி, பயற்றை, பீர்க்கு, பாகல் மற்றும் சிறகவரை என்பவற்றின் இனவிருத்தியாளர் விதையுற்பத்தி
- ஏற்கனவே வர்க்க விடுதலை செய்யப்பட்ட முதலாம் சந்ததி கலப்பின வர்க்கங்களினது பெற்றோர் வம்சாவழிகளின் விதையுற்பத்தி (எதிர்வருகின்ற ஆண்டில் மட்டும்)
- கலப்பின விதையுற்பத்தியின் வினைத்திறனை தூண்டவும், பொருத்தமான முகாமைத்துவப் பொதிகளினை விருத்தி செய்யவும் தந்திரோபாயமான மற்றும் அடிப்படையான ஆராய்ச்சிகள் நடாத்துதல்

### பூச்சியியல் பிரிவு

- வாழை நீள்முள்சுவண்டுக்கெதரான பூச்சி நாசினிகளின் தேர்வு.
- ஆக்கக் காரணி அறியப்படாத நாட்டப்பட்ட சிறுநீரக நோய் (CKDU) க்கும் விவசாய உள்ளீடுகள், (பசளைகள் பீடை நாசினிகள் போன்றன) குடிநீர் / உணவின் தரம் என்பவற்றுக்கிடையிலான தொடர்புடைய மையை கண்டறிதல்.
- தற்போதிருக்கின்ற காலநிலை நிபந்தனைக ளுடன் தொடர்புடையதாக பூசணியில் வைரசுக்களைக் காவும் பூச்சிக் குடித்தொகை இயக்கவியலைக் கற்றல். அழுக்கணவன், வெண்ஈ, தாவரத் தத்திகள் மற்றும் பனிப்பூச்சி ஆகியன பீர்க்கு, பாகல் புடோல் போன்ற பயிர்களில்.
- மரக்கறிகளில் வேர்முடிச்சு நெமற்றோடு வினை அடையாளம் காணல் மற்றும் முகாமைத்துவத்துக்கான அவதான ரீதியான கற்கை.
- கத்தரியில் காய் தண்டு துளைப்பானின் முகாமைத்துவத்துக்குரிய ஒட்டுண்ணியான Trathalaflavobitalis இன் பெருக்கத்திற்கான நுட்பத்தின் விருத்தி.
- பூசணிப் பயிர்களின் கொப்புள ஈ, Lasiopteafalcata, மற்றும் துடுப்புக் கால் மூட்டுப்பூச்சி Leptoglossus இனங்கள் என்பவற்றின் கட்டுப்பாட்டுக்குப் பயன்படும் காபறில் இற்கு மாற்றீடாக பயன்படுத்தக் கூடிய பூச்சிநாசினிகளின் தேர்வு.
- பூசணிப் பயிரில் அவுலக்கப்போறா வண்டு களைக் கட்டுப்படுத்தப் பாவனையிலுள்ள காபறில் இற்கு மாற்றீடாகப் பயன்படுத்தக் கூடிய பூச்சி நாசினிகளின் தேர்வு.
- சேதன விவசாயக் களங்களிலும் வீட்டுத் தோட்டத்திலும் கோவாவைத் தாக்கும் பீடைகளுக்கெதிராக தாவரப் பீடை நாசினிகளின் களமட்ட மதிப்பீடு.
- பப்பாசி வெண்மூட்டுப் பூச்சியை உயிரியல் ரீதியாக கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணியான Acerophagus papaya இன் விடுவிப்புக்குப் பின்னரான வினைத்திறன் மற்றும் குடித்தொகையினுடைய பரம்பல் தொடர்பான களத் தரவுச் சேகரிப்பு.

- பொதுவான மரக்கறிப் பீடைகள், அவற்றின் இயற்கை எதிரிகள் மற்றும் மகரந்தச் சேர்க்கை செய்யும் பூச்சிகள் என்பவற்றின் மீது தெரிவு செய்யப்பட்ட பூச்சிநாசினிகளின் நச்சுத்தன்மை மட்டம்:- இலங்கையில் பிரதான மரக்கறிப் பீடைகளின் முகாமைத்துவத்துக்கென வினைத்திறனானதும் சூழல் நேயமானதுமான தந்திரோபாயங்களின் வடிவமைப்பு.
- பப்பாசி வெண்முட்டுப் பூச்சிக்குரிய ஒட்டுண்ணியான Acerophagus papyae இனது விடுவிப்புக்குப் பின்னாரான வினைத்திறன் தொடர்பான களத் தரவுச் சேகரிப்பு

## விவசாய இரசாயனவியல் பிரிவு

- சேதன விவசாயத்தில் பயிர் உணவு முகாமைத்துவம்
- வாழையில் பொட்டாசியத்தினது முகாமைத் துவம்
- அன்னாசியில் பசளை முகாமைத்துவம்
- இலங்கையில் வித்தியாசமான பயிர்ச் செய்கைக் கோலங்களில் மண் வள மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்
- மரக்கறிகளின் விளைச்சலில் நனோ பசளைகளின் பாதிப்பு
- மரக்கறிப் பயிர்கள் நுண்போசணை மூலகங்களுக்கு காட்டும் துலங்கல் தொடர்பான கற்கை
- மண் பரிசோதனையின் அடிப்படையிலான பசளைச் சிபாரிசுகளின் பிரயோகச் செய்து காட்டல்கள்
- வித்தியாசமான மண்வகையில் பொசுபரசுவினுடைய எஞ்சியிருத்தல் விளைவு
- இலங்கையில் நெல் பயிரிடப்படும் பகுதிகளில் கட்மியத்தினது உள்ளடக்கம் தொடர்பான கற்கை
- மரக்கறிப் பயிர்களுக்கு பசளையுடன் இணைந்ததான கட்மியத்தின் உயிர்க்கிடைப்புத் திறன்
- இலங்கையின் இடைநாட்டு இடைவலயத்தில் சேகரிக்கப்பட்ட மண் மற்றும் மரக்கறிகளில் சுவட்டு உலோக உள்ளடக்கம்
- வித்தியாசமான பசளைப் பதார்த்தங்களில் சுவட்டு உலோக உள்ளடக்கம்
- தக்காளிக்கான PGPR இன் அடையாளம் காணலும் வேறு பிரித்தெடுப்பும்
- நைதரசன் பதிக்கும் நுண்ணங்கிச் சிக்கலின் பிரித்தெடுப்பும், மரக்கறிகளுக்கு நைதரசன் பிரதியீட்டு மூலமாக இவற்றின் வினைத்திறனும்
- பசிலசு மெகாதிரியம் (Bacillus megatherium) இனைப் பாவித்து பொசுபரசு நிரம்ப பெற்ற கூட்டெரு தயாரிப்பு
- கறிமிளகாய் வேர்வலயத்தில் நன்மை செய்யும் நுண்ணங்கித் தொகுதிகளை அடையாளம் காணல்

## தாவர நோயியல் மற்றும் காளான் பிரிவு

- பக்ரீரியா வாடலுக்கெதிராக மரக்கறிகளில வெளிநாட்டுக்குரிய கலப்பினங்கள், இனவிருத்திக் வம்சாவழிகளின் தேர்வு
- மரக்கறிகளில் விதையுடன் இணைந்த வைரசுகளுக்குகெதிரான வெளிநாட்டுக்குரிய கலப்பினங்களின் தேர்வு
- கள நிலமைகளின் கீழ் மரக்கறிகளில் பிரதான நோய்களுக்கெதிராக வெளிநாட்டுக் குரிய கலப்பினங்களின் தேர்வு
- சேதன விவசாயத்தில் கறிமிளகாய் மற்றும் வல்லாரைக்கு ரைக்கோ டேர்மா திடநிலைகள் மற்றும் வேப்பம் விதை நீர் வடித்தெடுப்பு (NSWE) என்பவற்றின் பிரயோகத்துடனான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ பொதியின் விருத்தி

- பொலித்தீன் கூடாரங்களினுள் குடைமிளகாய் மற்றும் கேர்கின் பயிர்ச் செய்கையில் ரைக்கோடேர்மா உயரளவில் கொண்ட கூட்டெரு, இயற்கைப் பொலிமர்கள், வேப்பம் விதை நீர் வடித்தெடுப்பு என்பவற்றின் பாவனையுடனான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவப் பொதியின் விருத்தி
- தக்காளி மற்றும் வத்தகையில் விதையுடன் இணைந்த பக்ரீரியா நோய்களின் கண்டுபிடிப்பு
- ஏர்வீனியா இனங்களினால் கறிமிளகாயில் ஏற்படுத்தப்படும் தண்டுக் காய்ப்பு நோய் தொடர்பான கற்கை

### நோய்களின் இனங்காணலும் ஆலோசனைச் சேவைகளும்

- விதையற்ற திராட்சை வர்க்கங்களின் பழப் பருமனை அதிகரித்தலும், திராட்சையில் நோய் பீடை முகாமைத்துவம்
- சித்திரசுப் பயிர்களில் நோய் பீடை கட்டுப்பாட்டுகளை ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ பொதிகளின் விருத்தி
- பூசணிப் பயிரில் வைரசு நோய்க் கட்டுப்பாட்டுக்கான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ பொதிகளின் விருத்தி
- முற்கூற்று மற்றும் பிற்கூற்று வெளிறல் களுக்குகெதிரான பங்கசு நாசினித் திடநிலைகளின் மதிப்பீடு
- குக்குபிற்றே பயிர்களில் கீழ்ப்பூஞ்சண நோய்களுக்குகெதிரான பங்கசு நாசினித் திடநிலைகளின் மதிப்பீடு
- பதிவுகள் காலாவதியான பங்கசு நாசினிகளின் மீள் - பரிசோதனை
- பிரதானமான தக்காளி வைரசுக்களின் மூலக்கூற்று நிலைக் கண்டறிதலும் பண்புப்படுத்தலும்
- பிரதானமான கறிமிளகாய் வைரசுக்களின் மூலக்கூற்று நிலைக் கண்டறிதலும் பண்புப்படுத்தலும்
- பூங்கனியியல் பயிர்களில் பைற்றோப் பிளாசுமா நோய்களின் மூலக்கூற்று நிலைக் கண்டறிதலும் பண்புப்படுத்தலும் எதிர்ப்பின வர்க்கங்களினூடாக அவற்றின் முகாமைத்துவமும்
- மரக்கறிகளின் எதிர்ப்புத் தன்மைக்குரிய இயல்புகளுடன் இறுக்கமாக இணைந்துள்ள மூலக்கூற்றுச் சுட்டிகளின் இனங்காணல்
- வாழையில் பனாமா நோயை ஏற்படுத்தும் Fusarium oxyporium cubense இலிருந்து தூய்மையான வாழை உறிஞ்சிகளை சுட்டிக்காட்ட உறுத்துணர்ச்சியுள்ள மூலக் கூற்று நிலைக் கண்டறிதல் முறைமையினது விருத்தி
- கறிமிளகாய் மற்றும் மிளகாய் என்பவற்றில் அந்திரக்னோசு நோயை ஏற்படுத்தும் Colletrotrium இனங்களின் பல்வகைமை மற்றும் அவற்றின் குறுக்குதொற்றல் நிலை
- pleurotuw ostreatus இன் விளைச்சலை ஊக்குவிக்க அடிப்பதார்த்தின் மேம்பாடு
- பின்வருவனவற்றுக்கு கொரிய தொழிநுட்பங் களின் பிரயோகத் தன்மை:-
- கனடேர்மா காளான்
- சிடாகே காளான் வளர்ப்பு
- காளானின் இனவிருத்தியாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி உயர் விளைச்சல் மற்றும் சிறந்த தரம் உடைய புதிய காளான் வர்க்கத்தினது விருத்தி
- சுதேச வான்வகை காளான் வர்க்கங்களின் களத் தரவு சேகரிப்பு
- பால் காளான் வளர்ப்புக்கான ஆரம்ப நெறிமுறைகளுடைய விருத்தி

## கிழங்குப் பயிர் ஆராய்ச்சிப் பிரிவு

- மரவள்ளி, வற்றாளை என்பவற்றினது வர்க்க விருத்தி நிழ்ச்சிகளின் தொடரல்
- ஐந்து அமைவிடங்களில் தெரிவு செய்யப்பட்ட மரவள்ளி வர்க்கங்களின் NCVT நிகழ்ச்சியொன்று
- நான்கு அமைவிடங்களில் தெரிவு செய்யப்பட்ட வற்றாளை வர்க்கங்களின் VAT நிகழ்ச்சியொன்று
- வற்றாளை வர்க்கங்களின் உயர் உப்புச் சகிப்பு CIP வம்சாவழி மற்றும் உயர் உலர் பொருள் உள்ளடக்கம் என்பவற்றுக்கான வர்க்க மதிப்பீடு
- தெரிவு செய்யப்பட்ட வற்றாளை வர்க்கங்களின் அறுவடைக்குரிய நேரம் தொடர்பான பரீட்சிப்பு
- பல்வேறுப்பட்ட விண்ணப்பக்காரருக்கும் பகிர்ந்தளிக்கவென சிபாரிசுக்கமைவான வற்றாளை, மரவள்ளி, தானியா, சேம்பு, இராசவள்ளி மற்றும் இன்னல வர்க்கங்களின் அடிப்படை நடுகைப் பொருட்கள் உற்பத்தி
- எல்லாக் கிழங்குப் பயிரக்களினதும் மூலவுருருக்களினது பேணுகை.
- பிரயோகச் செய்து காட்டல்களைத் தாபித்தல், கரு அலகுகள், பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல் போன்றன மூலம் கிழங்குப் பயிர்களின் புதிய வர்க்கங்கள் மற்றம் உற்பத்திக்கான செயற்பாடுகளின் தொகுதி என்பவற்றை பரம்பலடையச் செய்தல்
- மாதிரி வீட்டுத் தோட்டத்தை HORDI ல் பேணுதல்
- வீட்டுத் தோட்டத்திற்குள் இசைவாக்கப்படக் கூடியதும் குறை நுகர்ச்சியுடையனவுமான பயிர் வர்க்கங்களின் சேகரிப்பு, பேணல் மற்றும் மதிப்பீடு
- வீட்டுத் தோட்ட வடிவமைப்பு மற்றும் விருத்தி தொடர்பான பயிற்சிப் பட்டறைகள்
- ஒரு பரீட்சார்ந்த உற்பத்தியாக அலங்காரத் தாவரப் பெறுமதிக்கான சாத்தியவளம் கொண்ட உள்நாட்டுக்குரிய மற்றும் சுதேச தாவரங்களின் மேம்பாடு
- தக்காளி கலப்பின வர்க்கங்களுக்கான $CO_2$ செறிவூட்டல் செயற்றிட்டம்
- இரு தக்காளி வர்க்கங்களுடன் குழாயிரு லீக்ஸ் இனது இடைப் பயிர்ச் செய்கை
- இலங்கையில் பொலித்தீன் கூடார நிபந்தனைகளின் கீழ் செர்ரி தக்காளி வர்க்கங்களினுடைய மதிப்பீடு
- சலிசிலிக் அமிலப் பாவனையுடன் தக்காளியின் வளர்ச்சி மற்றும் வீரியம் தொடர்பான மதிப்பீடு
- சுண்டங்கத்தரியினுடைய வேர்விட்ட தண்டுத் துண்டங்களின் ஒப்பீடு
- சுண்டங்கத்தரியினுடைய தண்டுத் துண்டங்கள் மற்றும் நாற்றுக்களின் ஒப்பீடு
- தானியா வர்க்கமான இசுறு வினுடைய இனப்பெருக்கம் தொடர்பான கற்கை
- "தாவர பரம்பரையியல் வளங்களுக்கான ஒருங்கிணைந்த முகாமைத்துவத் தொகுதிகள்" எனும் செற்றிட்டங்களின் கீழ் இராசவள்ளி மூதாதையரின் சேகரிப்பு, பாதுகாப்பு பண்புப்படுத்தல் மற்றும் மதிப்பீடு
- "தாவர பரம்பரையியல் வளக்கங்களுக்காக ஒருங்கிணைந்த முகாமைத்துவ தொகுதிகள்" எனும் செயற்றிட்டத்தின் கீழ் குறை நுகர்ச்சியுடையனவும், வீட்டுத் தோட்டத்திற் குள் இசைவாக்கப்படக் கூடியவுமான பயிர் வர்க்கங்களின் சேகரிப்பு, பாதுகாப்பு, பண்புப்படுத்தல் மற்றும் மதிப்பீடு

**விரிவாக்கம், பொருளியல் மற்றும் தரவு முகாமைத்துவ பிரிவு**

- வேண்டுகோள் விடுக்கப்படுமிடத்து தொழிநுட்பத் துண்டுப் பிரசுரம் தயாரிப்பில் ஒத்துழைப்பு வழங்குதல்
- தொழிநுட்பத் துண்டுப் பிரசுரங்களை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்புச் செய்தல்
- விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் ஒத்துழைப்பு வழங்கல்
- வீட்டுத் தோட்டத்தில் உற்பத்திதிறனை அதிகரிக்க சிறியளவிலான பொலித்தீன் கூடாரங்களை தாபித்தல்
- புதிதாக பணிக்கர்த்தப்பட்ட ஆராய்ச்சி உதவியாளர்களின் 3ம் அணிக்கு பூங்கனியியல் பயிர்கள் தொடர்பான இருவார சேவைக் காலப் பயிற்சி நிகழ்ச்சியை ஒருங்கமைத்தல்
- உயர் கல்வி நிறுவனத்தின் நபர்களுக்கு HORDI வளவாளர்களின் ஆலோசனைச் சேவையூடாக தொழிநுட்ப ஒத்துழைப்பு வழங்குதல்
- தரவு முகாமைத்துவத்திற்கான பொறுப்பினைத் தொடரல்

**அலுவலர் பட்டியல்**

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பணிப்பாளர் (பதில்) | 01 |
| மேலதிக பணிப்பாளர் (பதில்) | 02 |
| ஆராய்ச்சி அலவலர் | 19 |
| விவசாய உத்தியோகத்தர் | 01 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 02 |
| சிரேஷ்ட நூலகவியலாளர் | 02 |
| நிகழ்ச்சி திட்ட உதவியாளர் (விவசாயம்) | 08 |
| பொது முகாமைத்துவ உதவியாளர் | 13 |
| பண்ணை எழுதுவினைஞர் | 03 |
| விவசாயப் போதனாசிரியர் | 30 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 21 |
| ஆராய்ச்சி உப உதவியாளர் | 10 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 05 |
| காரியாலய சிறுவேலை சிற்றூழியர் | 01 |
| சாரதி | 08 |
| களஞ்சியவாளர் | 01 |
| பழுது பார்ப்பவர் | 01 |
| இயந்திர இயக்குநர் | 01 |
| தச்சன் | 01 |
| உருக்கி இணைப்பவர் | 01 |
| மின்னியலாளர் | 01 |
| மின் வேலையாளர் | 01 |
| புற்தரை சமனாக்கி இயக்குநர் / புல் வெட்டுபவர் | 01 |
| தரை சமனாக்கி இயக்குநர் உழவியந்திரம் | 02 |
| நீர்ப்பம்பி இயக்குபவர் | 02 |
| தேனீ பிரயோகச் செய்து காட்டுபவர் | 01 |
| தாவர ஒட்டு வேலையாளர் | 03 |
| சுற்றுலா விடுதி பேணுபவர் | 01 |
| காவலாளி | 24 |
| துப்பரவு தொழிலாளி | 01 |
| திறனற்ற தொழிலாளி | 85 |
| **மொத்தம்** | **252** |

## 1.2.1 உணவு ஆராய்ச்சி பிரிவு (FRU), கன்னொறுவை

உணவு ஆராய்ச்சிப் பிரிவானது பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்தின் (HORDI) நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்றது. இப்பிரிவினால் பொறுபேற்கப்பட்ட பிரதான இலக்குகள் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் மீதான ஆராய்ச்சிகள் பயிர் முன்னேற்ற நிகழ்ச்சிகளிலிருந்து பெறப்பட்ட மாதிரிகளிலிருந்து உற்பத்தி பொருள் அபிவிருத்தியும், தரமதிப்பீடும் தொழில்நுட்ப இடமாற்ற செயற்பாடுகளை நடாத்துதல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. உணவு ஆராய்ச்சிப் பிரிவானது தொழில்நுட்ப அபிவிருத்தி இடமாற்றம், உணவு இயந்திரங்களின் பயன்பாடு தொடர்பாக DOA ன் ஏனைய பயிர் ஆராய்ச்சி நிறுவனங்கள் மாகாண விவசாயத் தொகுதி, ஏனைய அரச, அரச சார்பற்ற அமைப்புக்கள் தனியார் பிரிவு என்பவற்றுடன் ஒருங்கிணைந்த நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளது. அத்துடன் இப்பிரிவானது பட்டப்படிப்பு மாணவர்கள், பட்டப்பின் கற்கை மாணவர்களிற்கு பல்வேறுபட்ட அறுவடைக்குப் பின்னான, பதப்படுத்தல் தொழில்நுட்பங்களில் தமது ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு தேவையான வசதிகளையும், வழிகாட்டல்களை யும் வழங்குகின்றது.

### பாதீடு

வேறுபட்ட செலவு விடயங்களின் கீழ் வருடாந்த ஒதுக்கீடுகளும், செலவுகளும் அட்டவணை 1.2.1.1 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.2.1.1 வருடாந்தப் பாதீடு -2013 (ரூ)**

| செலவுத் தலைப்பு | ஒதுக்கீடு | செலவீனம் | செலவீன வீதம் |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 580,000 | 380,017 | 45 |
| மீண்டுவரும் செலவு | 2,183,600 | 208,3105 | 95 |
| **நிகழ்ச்சித்திட்டம் -1** | | | |
| தக்காளியில் அறுவடைக்குப் பின்னான கையாளுகை கையேட்டின் தயாரிப்பு | 955,000 | 374,693 | 95 |
| **நிகழ்ச்சித்திட்டம் -2** | | | |
| உணவு பதப்படுத்தல் பயிற்சியின் மூலம் கிராமிய விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்தல் | 7,459,800 | 1,478,686 | 20 |
| **மொத்தம்** | **11,448,400** | **4,316,501** | **38** |

## முன்னேற்றம்

### அடைவுகள்

- மாவிலும் 'Embul' இன வாழையிலும் அத்திரக்னோசு, தண்டுநுனி அழுகல் ஆகியவை விவசாயத் திணைக்களத்தின் சிபாரிசின் இரண்டு மடங்கு பொட்டாசியத்தை மண்ணிற்கு பிரயோகிக்கும் போது குறைவடைந்தது. இதே போன்ற மேற்குறிப்பிட்ட பரிகரிப்பானது பப்பாசியில் மிகக் குறைந்த அறுவடைக்குப் பின்னான நோய்களை வெளிக்காட்டியது.

- விவசாயத் திணைக்களத்தின் சிபாரிசின் இரண்டு மடங்கு பொட்டாசியத்தை மண்ணிற்குப் பிரயோகிக்கும் போது கொடித் தோடையின் தரமானது மொத்த கரையும் திண்மம், பிறிக்ஸ் பெறுமானம் என்பவற்றின் அதிகரிப்பு மூலமும் அமிலத் தன்மை குறைவடைதல் மூலமும் மேம்படுத்தப்பட்டது.

- விவசாயத் திணைக்களத்தின் சிபாரிசின் இரண்டு மடங்கு பொட்டாசியத்தை மண்ணிற்குப் பிரயோகிக்கும்போது அன்னாசியில் $12^{o}c$ வெப்பநிலையில் கடல் மூலமான கொண்டு செல்லலின் போது ஏற்படுத்தப்படும் உட்புறமான கபில நிறமாதல் குறைக்கப்பட்டது.

- கரம்பொலவிற்கு (Carambola) பச்சை கலந்த மஞ்சள் பருவத்தில் 0.5% அசெற்றிக்கமிலத்தாலும் 1% சித்தரிக்கமிலத்தாலும் இரசாயன முற்பரிகரணம் மேற்கொள்ளல் இழிவுப் பதப்படுத்தலிற்குப் பொருத்தமானது. பழங்கள் மரக்கறிகளின் இழிவுப் பதப்படுத்தலிற்கு “உச்ச புதியதன்மை” (Peak fresh) பொதியாக்கல் பதார்த்தங்கள் அறிமுகப்படுத்தப்படலாம்.

- கண்டுப்படிப்புகளும், உற்பத்திப் பொருள் அபிவிருத்தியும்

- உயர் போஷணையைக் கொண்ட உள்ளூர் உணவுகளான ரொட்டி, பிட்டு என்பவற்றின் தயாரிப்பிற்கு சோளம், குரக்கன், சோயாமா கலவையைப் பயன்படுத்தல், இவ்வுணவுப் பொருட்கள் விற்றமின் A, கல்சியம் இரும்பு, புரதம் ஆகியவற்றை உயர் செறிவில் கொண்டிருந்தது.

- “கெக்கரியைப்” பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட அப்பிரிக்கொட் (Apricot) ஜெல் இனை ஒத்த ஜெல் ஆனது வெதுப்பக, கேக் கைத்தொழிலில் பயன்படுத்தப்பட்டது.

- ரொம் இஜெசி (Tom EJC) மாவிலிருந்து ஓர் உற்பத்திப் பொருள் அபிவிருத்தி செய்யப்பட்டது.

- ரொபி, உடனடிப் படிப்பானம், சட்னி, ஜாம், பிட்டு, ரொட்டி கஞ்சி போன்றவை ஒரு வகையான சுரைக்காயிலிருந்து (Calabsah guard) உற்பத்தி செய்யப்பட்டன.

- டிராகன் பழத்திலிருந்து ஜாம், உடனடிப் பழப்பானம், பழப்பானம் ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டன.

- வில்வம் பழ ரொபி, சட்னி ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டன.

### அபிவிருத்திச் செயற்பாடுகள்

- கொரிய அரசாங்கத்தினால் நிதியுதவி வழங்கப்பட்ட “பயிற்சி நிலையமொன்றை விருத்தி செய்வதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்தல்” எனும் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஓர் சிறிய அளவிலான பயிற்சி நிலையம் உணவு ஆராய்ச்சிப் பிரிவு வளாகத்தினுள் விருத்தி செய்யப்பட்டது. இப்பயிற்சி நிலையத்தில் சிறியளவிலான, இடைத்தர அளவிலான பதப்படுத்துபவர்களிற்கும், விவசாயிகளிற்கும் உணவு பதப்படுத்தல் பயிற்சிகள் நடாத்தப்பட்டன.

- பிளாஸ்ரிக் கூடைகள் (339 எண்ணிக்கை) கடதாசிப் பெட்டிகள் (600 எண்ணிக்கை), ரிபிரக்ரோமணி (05 எண்ணிக்கை), சாறு கலக்கி (01 எண்ணிக்கை), ஆகியவை பதப்படுத்துபவர்களிற்கு 50% மானியத்துடன் விநியோகிக்கப்பட்டது.

- பழங்கள், மரக்கறிகளின் அறுவடைக்குப் பின்னான இழப்புக்களை குறைப்பதற்கு மொத்த வியாபாரிகள், கொண்டு செல்பவர்கள், சேகரிப்பாளர்கள், சில்லறை வியாபாரிகள் ஆகியோரிற்கு பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

- தக்காளிக்காக அறுவடைக்கு பின்னான கையாளுதல் எனும் பிரசுரமானது தக்காளிக்கான அறுவடைக்குப் பின்னான பிரசுரம் தயாரிப்பு எனும் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

- உணவு பதப்படுத்தல், அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பம் போன்ற பிரிவுகள் பற்றி அறிமுகப்படுத்துவதற்கு பல்ஊடக வெளிப்படுத்துகைகளைக் கொண்ட விழிப்பு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு, செயன்முறை அமர்வுகளும் நடாத்தப்பட்டன. சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

- கேட்போர் கூடத்திற்காக கூரை வேலை, நுண்ணுயிரியல் ஆய்வுகூடத்திற்கான நில வேலைகள் வெற்றிகரமாகப் பூர்த்தியாக்கப்பட்டன.

- பல்கலைக்கழக மாணவர்களிற்கான பயிற்சி - றுகுண, பேராதனை ஸ்ரீ ஜயவர்த்தனபுர ஆகிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 7 மாணவர்களும், 02 முதுமானி மாணவர்களும் தமது 3 - 4 மாத ஆராய்ச்சி கட்டுரைகளை FRU இல் பூர்த்தி செய்தனர்.

- ஏழு டிப்ளோமா மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். HARDI தொழில்நுட்பக் கல்லூரியைச் மூன்று மாணவர்களும், கண்டி தொழில்நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த ஆறு மாணவர்களும் தமது 03 - 06 மாத கைத்தொழில் பயிற்சிக் காலத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்தனர்.

- இளைஞர்கள் விவகாரம், திறன் விருத்தி அமைச்சினால் நடாத்தப்பட்ட “தேசத்தின் மகுடம்” விவசாய வாரம் ”பழப்பயிர்களின் போக்கு” வாணிப சிகிச்சை ஆகியவற்றிலும் கேகாலை பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட இளைஞர்கள் விவசாய தொழில்முயற்சியாண்மை விருத்தி எனும் பயிற்சி பட்டறையிலும் உயிர்ப்பாக பங்கபற்றியது. மகாவலி அதிகார சபைக்கான சிறந்த விவசாய நடவடிக்கைகள் (GAP) மற்றும் பாடசாலைகள், ஏனைய அரச அங்கங்களால் நடாத்தப்பட்ட ஏனைய கண்காட்சிகள் வெற்றிகரமாக வெளிப்படுத்தப்பட்டு மக்களிற்கு அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பம் மற்றும் உணவு பதப்படுத்தல் பிரிவு பற்றி விழிப்புணர்வேற்பட்டது.

## தொழில்நுட்பப் பரிமாற்றம்

- உணவு ஆராய்ச்சிப் பிரிவு ஆய்வுகூடப் பரிசோதனை வசதிகளை தொடர்ந்து வழங்ககின்றது. இவ்வருடத்தில் உடனடிப் பரிமாற்ற பானங்கள், சட்னிகள், கோடியல்கள், ஜாம்கள், நீரகற்றப்பட்ட மரக்கறிகள், களிகள் (Pastes) கொறிப்புணவுகள், பிரெஞ்ச் பொரியல் ஆகியவற்றின் பல மாதிரிகள் தனியார் பிரிவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு, இவ்வுற்பத்திப் பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்துவதற்குப் பரிசோதிக்கப்பட்டன.

- முந்நூற்று முப்பது மரக்கறி மாதிரிகள், முப்பத்தொன்பது பழ மாதிரிகள், இனவிருத்தியாளரிற்கான பதினெட்டு வற்றாளை மாதிரிகள் அறுபது வாசனைத் திரவிய தூள்கள் (Spice powders) பதினெட்டு மாவுவகைகள் எழுபதைந்து பதப்படுத்தப்பட்ட பழ மரக்கறி உணவுகள் ஏழு பால் உற்பத்திப் பொருட்கள் பன்னிரண்டு

கொறிப்புணவுகள், ஏழு சோயா உற்பத்திப் பொருட்கள் ஆறு பாணிகள் மற்றும் தேன் மாதிரிகள் ஆகியவற்றிற்கான அறிக்கைகள் விநியோகிக்கப்பட்டு உணவு பதப்படுத்தல் நிகழ்ச்சிகளிற்கான முப்பதிரண்டு பயிற்சிச் சான்றிதழ்களும் விநியோகிக்கப்பட்டன.

- விவசாய வர்த்தக அபிவிருத்தியும், தகவல் சேவையும் (AGEDIS) நிதியுதவி வழங்கிய பயிற்சி - பழங்கள் மரக்கறிகளின் பதப்படுத்தல் அரிசி அடிப்படையிலான உற்பத்திப் பொருட்கள் ஆகியவை பற்றி தனியார் பிரிவின் பங்குபற்றலுடன் இரு பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

- தனியார் பிரிவு அமைப்புக்கள் விதாதா (Vidatha) நிலையங்கள் விவசாய அமைச்சு, வர்த்தக அமைப்பு கைத்தொழில் திணைக்களம், ஆசிரியர் பயிற்சி நிலையங்கள், பாடசாலைகள், விவசாயப் போதனாசிரியர்கள், டிப்ளோமா மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரிற்கு பழங்கள், மரக்கறிகளின் அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பம் மற்றும் பதப்படுத்தல் பற்றி பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

- உணவு ஆராய்ச்சி பிரிவு பிரதேசத்தினுள்ளும், ஏனைய நிறுவனங்க ளிலும் அறுவடைக்கு முன்னான மற்றும் பின்னான தொழில்நுட்பம் பற்றி 10 (310 தனிநபர்கள்) நிகழ்ச்சிகள், பொதியாக்கல் பற்றி 14 (375 தனிநபர்கள்) நிகழ்ச்சிகள் அரிசி சம்பந்தமான உற்பத்திகள் பற்றி 11 (25 தனிநபர்கள்) நிகழ்ச்சிகளும் பழங்கள் மற்றும் மரக்கறிகளின் பதப்படுத்தல் பற்றி 131 (1125 தனிநபர்கள்) நிகழ்ச்சிகளும் பால் அடிப்படையிலான உற்பத்திகள் பற்றி 37 நிகழ்ச்சிகளும், இனிப்புகள் பற்றி ஒரு நிகழ்ச்சியும் கொறிப்புணவு மற்றும் களிகள் (Pastes) பற்றி 22 நிகழ்ச்சியும், சோயா அவரை அடிப்படையிலான உணவு உற்பத்தி 25உம், பேக்கரி உற்பத்தி தொடர்பில் மூன்றும் நடாத்தப்பட்டன. அத்துடன் ஏனைய நிறுவனங்களிற்கான பயிற்சிகளும் நடாத்தப்பட்டன. விவசாயப் பாடசாலைகளைச் சேர்ந்த 125 மாணவர்கள் அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பம் மற்றும் உணவு பதப்படுத்தல் சம்பந்தமாக பயிற்றுவிக்கப் பட்டனர். நான்கு பல்கலைகழக மாணவ குழுக்கள் (39 எண்ணிக்கை) அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பம், தரப்பரிசோதனை மற்றும் உணவு பதப்படுத்தல் முறைகள் பற்றி பயிற்றுவிக்கப்பட்டனர். மூன்று எண்ணிக்கையான விதாதா (Vidatha) நிகழ்ச்சிகளும் உணவு பதப்படுத்தல் பற்றி நடாத்தப்பட்டன.

- பதினான்கு குழுக்களாக (445 பேர்) பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் போதனாசிரியர்கள் (விவசாயம் மற்றும் மனையியல் பிரிவுகள்)அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பம் மற்றும் உணவு பதப்படுத்தல் சம்பந்தமாக பயிற்றுவிக்கப்பட்டனர்.

## 2014 இற்கான திட்டம்

- டொம் (EJC) வர்க்கத்தினை பயன்படுத்தி பாதுகாக்கப்பட்ட மா உற்பத்திகளை விருத்தி செய்தல்
- டிராகன் பழ உற்பத்திகளை தயாரித்தல்
- உள்ளூர் உணவுத் தயாரிப்புக்களிற்காக சோள, குரக்கன், சோயா மாக்கலவையைப் விருத்தி செய்தல்
- Calabash guard (ஒரு வகை சுரைக்காய்) ஐ பயன்படுத்தி உற்பத்தி விருத்தி செய்தல்
- பச்சை மிளகாய்க்கான உற்பத்தி விருத்தி (தகரத்தில் அடைத்தல், பச்சை மிளகாய் களி, சோஸ், தூள் “கிம்ஷி” நொதிக்கப்பட்ட உற்பத்தி)
- உணவு பதப்படுத்தலில் சோள மாப்பொருளிற்குப் பதிலாக மரவள்ளி (Manihot esculenta) மாவை அறிமுகப்படுத்தல்

- பிஸ்கட் தயாரிப்பிற்கான பொருத்தமான மரவள்ளி (Manihot esculenta) வர்க்கத்தினை இனங்காணல்
- பூசணியைப் பயன்படுத்தி போஷணைமிக்க பானங்கள் மற்றும் குக்கீஸ் தயாரித்தல்.
- சோயா அடிப்படையிலான உணவுற்பத்திகளை விருத்தி செய்தல்
- பசுப்பாலுடன் சோயாபாலை சேர்த்து உற்பத்திகளை விருத்தி செய்தல்

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| தலைவர் | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் | 03 |
| விவசாயப் போதனாசியர்கள் | 03 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 02 |
| நிகழ்ச்சிதிட்ட உதவியாளர் | 01 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 |
| பொது முகாமைத்துவ உதவியாளர் | 02 |
| ஆய்வுகூட உப உதவியாளர் | 03 |
| சாரதி | 02 |
| மின்சார வேலைகள் செய்பவர் | 01 |
| இயந்திர இயக்குநர் | 01 |
| தொழிலாளி | 03 |
| தொழிலாளி (ஒப்பந்தம்) | 09 |
| காவலாளி | 02 |
| **மொத்தம்** | **33** |

## 1.2.2 பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் (RARDC), பண்டாரவளை

கடல் மட்டத்தில் இருந்து 1400m உயரத்தில் மலை நாட்டு இடைவலயத்தில் அமைந்துள்ள பண்டாரவளை RARDC யானது சப்ரகமுவ மாகாணத்தின் பலாங்கொடைப் பிரதேசம் மற்றும் ஊவா பிராந்தியத்தியங்களில் செய்கை பண்ணப்படுகின்ற விவசாய உற்பத்திகளின் விளைச்சல் மற்றும் தரம் ஆகியவற்றின் விருத்தி தொடர்பில் பொருத்தமான தொழில் நுட்பகளை உருவாக்குவதை பிரதான பொறுப்பாகக் கொண்டுள்ளது. இந்நிலையத்தின் ஆளுகைக்கு உட்பட்ட விவசாயச் சூழலியல் வலயங்களாக $IU_2$, $IM_2$, $IM_3$, $WM_3$, $IL_2$, மற்றும் $WM_3$, என்பன அடங்குகின்றன. இந்நிலையத்தின் தொழிற்பாடுகள் கன்னொறுவையில் உள்ள HORDI மற்றும் அதன் இணை நிலையமான ரகங்கலை ஆகியவற்றின் கண்காணிப்புடன் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக உருளைக்கிழங்கு, பழப்பயிர்கள், மலர்ப் பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் விநியோகம் அடங்கலாக பல்வேறு விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சிகள் மற்றும் தொழில் நுட்பப் பரம்பல் நிகழ்ச்சிகள் ஆகியவற்றிலும் பங்கு கொள்கின்றது.

### பாதீடு

வெவ்வேறு செலவுத் தலைப்புகளின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத் தொகைக்குரிய செலவு விபரங்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.2.2.1 வருடாந்தப் பாதீடு ~2013 (ரூபாய்)**

| செலவுத் தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு வீதம் % |
|---|---|---|---|
| நடைமுறைச் செலவு | 11,743,573 | 11,250,053 | 96 |
| மூலதனச் செலவு | 28,183,000 | 2,557,849 | 09 |
| **செயற்றிட்டங்கள் - RARDC பண்டாரவளை** | | | |
| NARP - போஞ்சி | 400,000 | 393,639 | 98 |
| NARP - உருளைக்கிழங்கு | 533,900 | 464,541 | 87 |
| NARP - சித்திரசு | 175,000 | 149,187 | 85 |
| NARP - வாழை | 50,000 | 51,912 | 104 |
| NARP - சித்திரசு IPM | 50,000 | 49,645 | 99 |
| கலப்பினத் தக்காளி | 150,000 | 149,356 | 100 |
| KOPIA - மரக்கறிகள் | 200,000 | 194,181 | 97 |
| KOPIA - மண் | 446,800 | 293,033 | 66 |

| | | | |
|---|---|---|---|
| பழக் கிராம அபிவிருத்தி | 500,000 | 431,746 | 86 |
| இழையவளர்ப்பு | 9,500,000 | 3,560,341 | 37 |
| NARP - பூங்கனியியல் | 1,227,100 | 1,214,855 | 99 |
| **செயற்றிட்டங்கள் - ARS ரகங்கல** | | | |
| பழக் கிராம அபிவிருத்தி | 500,000 | 498,532 | 99 |
| NARP - சித்திரசு | 100,000 | 92,614 | 93 |
| NARP - போஞ்சி | 200,000 | 195,658 | 98 |
| **மொத்தம்** | **53,959,373** | **21,547,142** | **40** |

## முன்னேற்றம்

### பயிர் மேம்பாடு

- பதினைந்து உன்னத கொடி போஞ்சி வம்சாவழிகள் உயர்தர விளைச்சல் பரிசோதனையில் மதிப்பிடப்பட்டன. அத்துடன் 5 மேலான வம்சாவழிகள் NCVT க்காகத் தெரிவு செய்யப்பட்டன.

- சிறந்த செயற்றிறனுடைய 2 முள்ளங்கி (Supwergiljo, meotjinmatdongum) இரண்டு கோவா (Woori, Yerocummat) இரண்டு சலாது (Cheongchima, Hanbatjeokchima) ஆகிய கொரியாவை பூர்வீகமாகக் கொண்ட வர்க்கங்கள் விவசாயிகளின் வயல்களில் பெரிய அளவிலான செய்து காட்டல்களுக்காகத் தெரிவு செய்யப் பட்டுள்ளன.

- கத்தரியில் வர்க்க மேம்பாடு நிகழ்ச்சிகளுக்காக 93 உள்ளூர் கத்தரிக் குலவகைகள் சேகரிக்கப்பட்டன.

- செய்கை பண்ணக்கூடிய 31 வர்க்கங்களைக் கொண்ட பழத் தோட்டம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. இதில் பின்வரும் குறைந்த பயன்பாடுடைய பழப் பயிர்கள் உள்ளன: நெல்லி, சபோடில்லா, வெல்வெட் புளி, செறிமோயா வெளியநோடா, மெசான, நோஸ் அப்பிள், கறம்பா என்பனவாகும்.

- புதிய கரட் வம்சாவழிகள் RGC 1301 ஆனது உள்ளூர் கரட் வர்க்கமான புதிய கரோடாவுடன் சேர்த்து விதைப் பெருக்கத் துண்டங்களில் விளைச்சல் பரிசோதனைகளை மேற்கொள்ளவத ற்காக தாபிக்கப்பட்டுள்ளன.

### பயிராக்கவியல்

- இலங்கைக் கரட்ற்கு மிகப் பொருத்தமான அறுவடைப் பருவமாக விதைத்த பின் 65 - 70 நாட்கள் பரிசோதனை மூலமாக அறியப்பட்டுள்ளது.

- உருளைக் கிழங்கில் விதை உற்பத்திக்குரிய சிறந்த நடுகைப் பொருளாக சிறிய பருமனுடைய கிழங்குகள் (5 - 20mm) திறந்த வயல்களுக்கும் பொலித்தின் கூடாரங்களுக்கும் பொருத்த மானவை என இனங்காணப் பட்டுள்ளன. இலகுவான பயிராக்கவியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் சீரான பயிர்ச் செய்கை ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கு சிறிய பருமனுடைய உருளைக்கிழங்குகளை நடுகைக்கு முன்பு மற்றும் மணல் நாற்று மேடைகளை முகாமைத்துவம் செய்ய முன்பும் தரப்படுத்தலுக்கு உட்படுத்துதல் வேண்டும்.

- சேதனப் பயிர்ச் செய்கையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற கோவாச் செய்கையின் போது அங்குரப் பகுதியில் பிரயோகிப்பதற்குப் பொருத்தமான சேதனப்

பசளை ஒன்று அடையாளங் காணப்பட்டுள்ளது.

## தாவரப் பாதுகாப்பு

- தக்காளி மற்றும் உருளைக்கிழங்கில் ஏற்படுகின்ற பிற்கூற்று வெளிறலைக் கட்டுப்படுத்துவதற்கு ஓர் புதிய இடத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பங்கசு நாசினி புருசினாம் (500g /l SC) சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

- சித்திரசுக்களில் ஏற்படுகின்ற இளஞ்சிவப்பு நிற தண்டு நோயின் விருத்தியைப் பரிசோதிக்க மழைக் காலம் ஆரம்பிக்க 2 -3 வாரங்களுக்கு முந்திய நிலையில் *(Tehuconazole 250 g/l EC)* விசிறலை மேற்கொள்ள முடியும்.

- Xanthomonas campestris (கோவாவில் கறுப்பழுகலை ஏற்படுத்தும் நோயாக்கி) எனும் பக்ரீரியாவின் விருத்தியைக் கட்டுப்படுத்துவதில் கசுகாமைசின் (20 g/l EC) எனும் இரசாயனம் வெற்றிகரமாகச் செயற்படுவதை ஆய்வு கூடப் பரிசோதனைகள் தெளிவுப்படுத்தின.

- கோவாவில் ஏற்படுகின்ற குண்டாந்தடியுரு நோய்க் காரணியைக் கட்டுப்படுத்துவதில் புளுவாசினாம் எனும் (500g 1l SC) இரசாயனம் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட முடியும். (முதற்கட்ட சோதனைகள்).

- மீண்டும் மீண்டும் பல தடவை பிரயோகிக்கப்பட்ட குளோரோதலோனில் பாவனையைத் தொடர்ந்து பிரயோகிக்கப்பட்ட பைரகுளோஸ்ரொபின் அல்லது ரெபியுகொனசோல் பாவனையானது போஞ்சி நோய்களை கட்டுப்படுத்துவதில் சிறந்து விளங்கியது. அத்துடன் இது பங்கசு நாசினிகளுக்கான எதிர்ப்புத் தன்மை விருத்தியையும் குறைத்தது.

- கொடி போஞ்சியில் துரு நோய், கோண இலைப்புள்ளி மற்றும் அந்திரக்னோஸ் ஆகியவற்றைக் வினைத்திறனாகக் கட்டுப்படுத்து வதில் புளோரிபோல் எனும் பங்கசு நாசினி சிறப்புடன் செயற்பட்டது.

- காலாவதியான பங்கசு நாசினிகளின் (குளோரோதலோனில், மங்கோசெப், மற்றும் புறப்பினெப்) பதிதலானது மீள் பரீட்சிக்கப்பட்டது. அத்துடன் தக்காளியில் ஏற்படும் பிற்கூற்று வெளிறல் நோய்கது எதிராகச் சிறந்த பெறுபேறுகளைக் காண்பித்தது.

- பெப்ரவரி மாதத்தில் நடுகை பண்ணப்பட்ட கொடி போஞ்சியில் வெண்ஈ, குடித்தொகையானது குறைவாகக் காணப்பட்ட அதேவேளை மே மாதத்தில் நடுகை பண்ணப்பட்ட பயிர்களில், மிக அதிகமாகக் காணப்பட்டது.

- தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள சிற்றுண்ணி கொல்லிகளுக்கு எதிர்ப்புடைய சிற்றுண்ணிக் குடித்தொகைகள் உருவாகலாம் என ஆரம்பக் கற்கைகள் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

- ஒளியைத் தெறிப்படையச் செய்யும் பத்திரக் கலவைகள் தக்காளிச் செய்கையில் அழுக்கணவன் குடித்தொகையை வெற்றிகரமாகக் குறைத்தது. அத்துடன் அதிக பூங்கொத்துக்களை உருவாக்கி உயர் விளைச்சலைக் கொடுத்ததுடன் பழங்களில் உயர் TSS ஐயும் உருவாக்கியது.

- பியுபெனுரோன் 5% EC மற்றும் அசெற்றாமிபிறிட் 200SP ஆகியன முறையே கோவாவில் டையமன் பக்மொத் மற்றும் கொடி போஞ்சியில் வெண்ஈ, பனிப்பூச்சி ஆகியவற்றைக் கட்டுப்புடுத்துவதற்காக சிபாரிசு செய்யப்பட்டுள்ளன.

## பூங்கனியியல்

- பிபிலை இனிப்புத் தோடையில் ஒட்டுத் தாவரங்களை உருவாக்குவதற்கு, வன்மையான எலுமிச்சை தண்டுத்

துண்டங்கள் பயன்படுத்தப்பட முடியும் என்பதை பரிசோதனைப் பெறுபேறுகள் தெளிவுப்படுத்தின.

- வர்த்தகச் செய்கைக்காக 3 ஜப்பானிய மண்டரின் வர்க்கங்கள் 2013 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்டுள்ளன.

## இழைய வளர்ப்பு

- பேரிக்காயில் ஆய்வு கூட நிலமைகளில் வேர் கொள்ளச் செய்தல் மற்றும் தாபனம் என்பன வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. வேர் கொள்ளலைத் தூண்டுவதற்குரிய மேலதிக கற்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- வெவ்வேறு Explant களினூடாக ஜேர்பராவில் ஆய்வுகூட இனப்பெருக்கத்திற்கு பொருத்தமான நெறி முறை ஒன்று அறிமுகப்படுத்தப்படு வதற்காக ஓர் பரிசோதனை நடாத்தப்பட்டது. முளைய அரும்புகளின் மூலம் வெற்றிகரமான வளர்ப்பு முறை நிறைவேற்றப்பட்டுள்ளது.
- ஜேர்பராவில் 6 ppm BAP பிரயோகம் மூலம் ஆய்வு கூட நிலையில் தண்டுறுஞ்சிகளின் உற்பத்தி அதிகரிக்கப்படுகின்றது.

## மலரியல்

- உயர் தரமுடைய வெட்டு ரோசா உற்பத்திக்கு 11 தாவரங்கள் / $m^2$ (30 x 30cm) எனும் அடர்த்தி பொருத்தமாதாகக் காணப்படுகின்றது.
- ஜேர்பராவில் இலைகளை அகற்றுதலானது பூத்தோன்றலில் குறிப்பிடத்தக்க விளைவை ஏற்படுத்தவில்லை.
- பகற்காலத்தை சீராக்குவதன் மூலம் கிறிசாந்திமத்தில் பூத்தலானது ஒழுங்கமைக்கப்பட முடியும். பொருத்தமான செயற்கை ஒளி வழங்கல் காலத்தைக் கண்டு பிடிப்பதற்குரிய பரிசோதனைகள் தொடரப் படுகின்றன.
- கிறிசாந்திமத்தில் ஜிபரலிக் அமிலப் பிரயோகமானது பூத்தோன்றலில் குறிப்பிடத்தக்க விளைவை ஏற்படுத்துகின்றது.

## மண் விஞ்ஞானம்

- விதை உற்பத்தி உருளைக்கிழங்கில் N, P மற்றும் K என்பன கிழங்கின் நிறை, தாவரம் ஒன்றில் உள்ள கிழங்குகளின் எண்ணிக்கை, கிழங்கின் தரம் மற்றும் ஏனைய விதைத் தர இயல்புகள் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் காட்டியது.
- மண்ணற்ற ஊடகங்களைக் கொண்ட பாதுகாப்பான கூடாரங்கள் மற்றும் மண்ணினுள் சாதாரண நிலமைகளின் கீழான Go விதை உருளைக்கிழங்கு உற்பத்திக்குரிய பொருத்த மான பசளை முகாமைத்துவ தந்திரோபாயங்கள் இனங்காணப்பட்டுள்ளன.
- பச்சை இல்லப் பயிர்களுக்கான உற்பத்திச் செலவைக் குறைக்கும் நோக்குடன் புதிய பசளை முகாமைத்துவ நுட்பங்கள் (அல்பேட் கரைசலுக்குப் பதிலீடாக) விருத்தி செய்யப்பட் டுள்ளன.
- உருளைக்கிழங்கில் முன் - அடிப்படை விதை உற்பத்திக்குரிய எளிய கட்டமைப்பு ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## சேவைகள்:-

### இனவிருத்தியாளர் விதை உற்பத்தி

- பண்டாரவளை பச்சை (100Kg), கெப்பிரிப்பொல நீலம் (52.5Kg), பலாங்கொடை நீலம் (150Kg) ஆகிய கொடி போஞ்சி வர்க்கங்கள் மற்றும் வேட் (Wade) எனும் செடி போஞ்சி (3.7Kg) வர்க்கம் மற்றும் பத்தியா ($P_3$ - HT 2123 : 1007g மற்றும் $P_4$ - திலின் : 508g) ஆகிய தக்காளி வர்க்கங்களில் பெற்றோர் விதைப்

பொருட்களும் DOA - SCS அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகளாக உற்பத்தி செய்யப்பட்டன.

## நடுகைப் பொருள் உற்பத்தி

- இனிப்புத் தோடை 4400 (பிபிலை இனிப்பு, ஆரோக்கியா மற்றும் சிசில), 2100 மண்டரின் (இந்து மற்றும் மது), 500 ரகன்கல மண்டறின், 300 யாப்பானியத் தோடை, 100 கறோம்போலா, 100 கொய்யா, 80 ஆனைக் கொய்யா, 50 மாதுளை, ஸ்ரோபரி 1897, ஜேர்பரா 935, அந்தூரியம் 99 மற்றும் கிறிசாந்தியம் 21 எனும் அளவுகளில் பண்டாரவெலை RARDC இல் நடுகைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன.
- ரகன்கல ARS இல் 6000 பிபிலை இனிப்பு மற்றும் 1100 ரகன்கல ஜமநாறன் ஒட்டுத் தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

## மண் பரிசோதனை அடிப்படையிலான பசளைச் சிபாரிசு நிகழ்ச்சி

விவசாயிகளின் 197 மண் மாதிரிகள் மற்றும் 50 ஆராய்ச்சி வயல்களின் மண் மாதிரிகள் ஆகியவற்றின் பரிசோதனைகளின் அடிப்படையி லான பசளைச் சிபாரிசுகள் வழங்கப்பட்டன.

## தொழில்நுட்பப் பரம்பல் செயற்பாடுகள்

- ஊவா மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில் இடம் பெற்ற பல்வேறு தொழில்நுட்பப் பயிற்சிகள் (பருவத்திற்கு முந்தியவை) மற்றும் PTWG ஒன்று கூடல்கள் 04 ஆகியவற்றில் RARDCஅலுவலர்கள் கலந்து கொண்டனர்.
- பண்ணைச் சமூகம், பல்கலைகழகங்கள், பாடசாலைகள் மற்றும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த 3000ற்கும் மேற்பட்டோருக்கு பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. இப்பயிற்சி நிகழ்ச்சிகள் பல்வேறு விவசாயச் செயற்பாடுகள் சார்ந்ததாக அமைந்திருந்தன. அவை பீடை நாசினிகளின் பாதுகாப்பான பயன்பாடு, முறையான பசளை முகாமைத்துவம், அத்துடன் சூழல் மற்றும் சுகாதாரத்தில் தவறான பசளைப் பாவனையின் தாக்கம் என்பனவாகும்.
- மரக்கறிகள், பழங்கள், மலர்ப் பயிர்கள் மற்றும் உருளைக்கிழங்கு ஆகிய பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு நோய் பீடைகளின் முகாமைத்துவம் தொடர்பில் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

## 2014 ம் ற்கான திட்டம்

### மரக்கறிகள்:-

- புதிய மரக்கறி வர்க்கங்களின் விருத்தி (கொடிபோஞ்சி, செடிபோஞ்சி, கத்தரி, கறிமிளகாய், கரட் மற்றும் உருளைக்கிழங்கு).
- வெளிநாட்டு மரக்கறி வர்க்கங்களின் மதிப்பீடு (முள்ளங்கி, சீனா கோவா, சலாது, தக்காளி மற்றும் குடைமிளகாய்).
- இனவிருத்தியாளர் விதை உற்பத்தி (கொடிபோஞ்சி: பண்டாரவளை பச்சை, கெப்பிரிப் பொல நில், பலாங்கொட நில், செடி போஞ்சி: வேட் மற்றும் லங்காக் கரட்)
- பெற்றோர் விதையுற்பத்தி - தக்காளி வர்க்கம் - பத்தியா
- தக்காளி மற்றும் குடை மிளகாய் ஆகியவற்றில் அறுவடைக்குப் பின்னான இழப்புகளைக் குறைப்பதற்குரிய தொழில்நுட்ப விருத்தி
- புதிய கரட் (RGC 1301) வம்சாவழியில் நடுகை இடைவெளி மற்றும் பசளைப் பிரயோகம் தொடர்பிலான பரிசோதனை

## உருளைக்கிழங்கு

- விதை உருளைக்கிழங்கில் உறங்கு நிலையைக் கலைக்கும் நுட்பங்கள் மற்றும் புதிய சேமித்தல் முறை தொடர்பான விருத்தி நிகழ்ச்சி
- புதிய நடுகைப் பொருட்களை இனங்காணல் மற்றும் உற்பத்தித் தொகுதிகள் (போசணைப் படல நுட்பம்)

## பூங்கனியியல்

- அப்பிள் மரங்களில் விளைச்சல் மற்றும் தரமான பழ உற்பத்தி ஆகியவற்றை அதிகரிப்பதற்குரிய மரங்களைப் பயிற்றுவிக்கும் தொகுதிகளின் மதிப்பீடு
- அப்பிள், பீச் மற்றும் நெக்ரறிள் ஆகியவற்றில் UCIZ பிரதேசங்களுக்குரிய வர்க்க மதிப்பீடு

## பயிர்ப் பாதுகாப்பு

- உருளைக் கிழங்கு, மலர்ப் பயிர்கள், பழப் பயிர்கள் மற்றும் மரக்கறிப் பயிர்களில் நோய் மற்றும் பூச்சிப் பீடைகளுக்குரிய பங்கசு மற்றும் பூச்சி நாசினிகளின் தேர்வு.
- போஞ்சியில் வேர் அழுகல் நோயின் முகாமைத்துவம்.
- கறிமிளகாயில் நோய்களின் தாக்கத்தில் நடுகை இடைவெளியில் பாதிப்பு.
- கிறிசாந்திமம் நடுகை வர்க்கங்களில் வெள்ளைத் துரு நோயின் தாக்கம் (Puccinia horiana).
- பிற்கூற்று வெளிறல் நோய்க்குரிய சில எதிர்வு கூறல் மாதிரிகளின் முதற்கட்ட மதிப்பீடு.
- போஞ்சியில் இலை நோய்களுக்குரிய பங்கசு நாசினி விசிறல் அட்டவணையின் விருத்தி.
- கோவா இலை நோய்கள் மற்றும் நுண் தாவரங்கள் (Microflora) ஆகியவற்றில் சேதனப் பிழிந்தெடுப்புகளின் பிரயோகத்தின் தாக்கம் பற்றிய மதிப்பீடு.
- சிறிய அளவிலான களஞ்சியங்களில் உருளைக் கிழங்கு அந்துக்கு (Phthhorimaea operculella zeller) எதிராக இயற்கை வெருட்டிகளின் மதிப்பீடு.
- பதுளை மாவட்டத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட சில AI பிரதேசங்களில் நெற் செய்கையில் வேர் முடிச்சு நெமற்றோடுகள் பற்றிய (Meloidogyne graminicola) ஆய்வு.
- கொய்யாவில் வேர் நெமற்றோட்டுக்களைக் (Meloidogyne spp.) கட்டுப்படுத்துவதில் மண் சீராக்கிகளின் தாக்கம் பற்றிய கற்கை.
- பாதுகாப்பான சூழல்கள் மற்றும் திறந்த வயல் நிலமைகளில் செய்கை பண்ணப்பட்ட மரக்கறிப் பயிர்களில் தற்போது காணப்படுகின்ற சிற்றுண்ணி கொல்லிகளின் செயற்றிறன் பற்றிய மதிப்பீடு.
- கொடிபோஞ்சியில் வெண்ஈ குடித்தொகைகளின் (Bemisia tabaci) தாக்கம் பற்றிய கற்கை.
- சித்திரசுப் பீடை மற்றும் நோய்களுக்கான IPM செய்து காட்டல்கள்.
- திறந்த வெளிகளில் செய்கை பண்ணப்படுகின்ற ரோஜா வர்க்களைத் தாக்குகின்ற சிற்றுண்ணி (Tetramyches urticae) களுக்கு எதிரான தேர்வு.
- ரோஜாவின் செதில் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் பூச்சி நாசினிப் பிரயோக முறைகளின் மதிப்பீடு.

ரகன்கல ARS இல் பாதுகாப்புக் கூடாரங்களில் செய்கை பண்ணப்பட்ட குடைமிளகாய் மற்றும் உருளைக் கிழங்குப் பயிர்களில் பக்ரீரியா வாடலைக் கட்டுப்படுத்துதல்.

### மலரியல்

- ரோஜாச் செய்கையில் வினைத்திறனான பத்திரக்கலவைப் பொருட்கள் மற்றும் பொருத்தமான கத்தரித்தல் மற்றும் பயிற்றுவித்தல் முறைகளைக் கண்டறிதல்.
- ரோஜா, ஜெரபரா மற்றும் கிறிசாந்திமம் ஆகியவற்றிற்குரிய பரிகரணங்களின் மதிப்பீடு.

### இழைய வளர்ப்பு

- பல்மடிய விகாரம் மற்றும் வித்து வளர்ப்பு ஆகியவற்றின் மூலம் புதிய ஜேர்பரா வம்சாவழிகளின் விருத்தி
- லைசியாந்தசில் உடற்கல வளர்ப்பு வேறுபாடுகள் பற்றிய கற்கை.
- ஆய்வுகூட நிலமைகளில் உருளைக் கிழங்கு வளர்ப்பில் MS ஊடகங்களுக்கு பதிலாக செலவு குறைந்த மாற்று வழிகள் பற்றிய கற்கை.

### மண் விஞ்ஞானம்

- சித்திரசுக்களில் நடுகைப் பொருள் உற்பத்திக்குரிய பசளைத் தேவைகளை அடையாளம் காணுதல்.
- விதை உருளைக்கிழங்கு உற்பத்திக்குரிய N, P, K பசளைச் சிபாரிசுகளின் விருத்தி.
- பொலித்தின் கூடாரங்களில் Go உற்பத்திக்கு உரிய போசணை முகாமைத்துவப் பொதியின் விருத்தி.
- நீருடக வளர்ப்பு மற்றும் வளியூடக வளர்ப்பு ஆகியவற்றிற்குரிய முழுமையாகக் கரையக் கூடிய போசணைக் கலவை ஒன்றின் விருத்தி.
- மேல் நாட்டு மரக்கறிகளில் தேயிலைக் கழிவுக் கூட்டெரு மற்றும் வேறுபட்ட பசளையிடல் முறைகள் பற்றிய சோதனை.
- UCIZ பிரதேச மண்ணுக்கு சுண்ணாம்புத் தேவையை மதிப்பிடுவதற்குரிய ஓர் விரைவான முறையை கண்டறிதல்.
- UCIZ பிரதேசங்களில் கைவிடப்பட்ட நிலங்களின் மண் வளத் தன்மையை மேம்படுத்துவதற்கு சிறந்த பசுந்தாட் பசளைகளைத் தெரிவு செய்தல்.

### அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| ஆராய்ச்சி அலுவலர் | 13 |
| பொருளியல் உதவியாளர் | 01 |
| நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | 06 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 02 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 09 |
| விவசாயப் போதனாசிரியர் | 03 |
| ஆராய்ச்சி உப உதவியாளர் | 02 |
| நிருவாக உத்தியோகத்தர் | 01 |
| பொது முகாமைத்துவ உதவியாளர் | 09 |
| KKS | 02 |
| சாரதி | 04 |
| உழவு இயந்திர இயக்குநர் | 02 |
| தாவர ஒட்டுனர் | 01 |
| மேசன் | 01 |
| தச்சன் | 01 |
| காவலாளி | 10 |
| சுற்றுலா விடுதிக் காப்பாளர் | 01 |
| நிரந்தர தொழிலாளி | 26 |
| தொழிலாளி (அமையம்) | 63 |
| **மொத்தம்** | **157** |

## 1.2.3 பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (RARDC), மாக்காந்துறை

தெங்குப் பயிர்ச் செய்கை நிலங்களில் பயிருற்பத்தித் திறனை பேண்தகு மட்டத்தில் பேணவென தெங்கை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச் செய்கைத் தொகுதிகளுக்குரிய தொழில்நுட்பங்களை விருத்தி செய்யவும் ஒருங்கிணைக்கவுமென பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (RARDC) மாகாந்துரவில் 1985ம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இது $IL_{1a}$ எனும் விவசாயச் சூழலியல் வலயத்தைச் சேர்ந்ததாய் அமைந்திருப்பதுடன் ஏறத்தாழ 1960 மில்லி மீற்றர் வருடாந்தச் சராசரி மழைவீழ்ச்சியையும் சராசரி வருடாந்த உயர் வெப்பநிலையாக ஏறத்தாழ $31.7^{o}c$ ஐயும் சராசரி வருடாந்த இழிவு வெப்பநிலையாக ஏறத்தாழ $23^{o}c$ ஐயும் கொண்டது. வண்டல் மண்ணை மேற்பரப்பில் ஒரு படையாக கொண்ட செம்மஞ்சல் பொட்சொலிக் மண் இப்பகுதியின் மண் வகையாகும்.

RARDC, மாகாந்துரவும் அதன் இசைவாக்க ஆராய்ச்சி நிலையங்களான தப்போவ, இங்கினிமிட்டிய மற்றும் வாரியப்பொல ஆகியன குருனாகல், புத்தளம் மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களினது ஆராய்ச்சித் தேவைப்பாடு களைப் பூர்த்தி செய்கின்றது. பழங்கள், மரக்கறிகள், கிழங்குப் பயிர்கள், மலரியல், காளான் மற்றும் கூட்டெரு உற்பத்தி என்பவற்றுக்குரிய தொழிநுட்ப விருத்திக்கு பொறுப்புணர்ச்சியுடையதாக RARDC, மாக்காந்துர அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. பயிர் வர்க்கங்களை மேம்படுத்தல், பயிர்ப் பெருக்க முறைகளின் விருத்தி, பழங்கள் மற்றும் மரக்கறிகளினுடைய கிடைப்புத் தன்மையை அதிகரித்தல், மண் வளத்தினை மேம்பாடு செய்தல், பயிர்ப் பாதுகாப்பியல் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல், இரசாயனங்களில் இழிவளவில் தங்கியிருப்பதுடன் சிறந்த பயிர் நலத்தினை உறுதி செய்தல் மற்றும் உற்பத்தி மேம்பாடு செய்தல் ஆகியவற்றில் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் கருத்தூன்றிய வண்ணமுள்ளன.

## பாதீடு

அட்டவணை 1.2.3.1 இல் வெவ்வேறு செலவுத் தலைப்புகளுக்குரிய பாதீட்டு ஒதுக்கம் மற்றும் செலவினங்கள் வழங்கப்படுகின்றன.

**அட்டவணை 1.2.3.1 வருடாந்தப் பாதீடு - 2013(ரூ)**

| செலவுத்தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு % |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 6,391,320 | 6,042,364 | 95 |
| மீண்டுவரும் செலவு | 3,126,400 | 1,574,164 | 50 |
| NARP - உள்ளூர் பூசணி விருத்தி | 889,800 | 880,000 | 99 |
| NARP - அந்தூரியம் | 1,300,000 | 1,290,000 | 99 |
| NARP - வாழை | 50,000 | 49,690 | 99 |
| NARP - அன்னாசி | 216,500 | 128,377 | 59 |
| இழைய வளர்ப்புச் செயற்றிட்டம் | 1,760,000 | 1,550,000 | 88 |
| பழ கிராம விருத்தி - மாதுளை | 600,000 | 534,000 | 89 |
| பழ கிராம விருத்தி அன்னாசி | 3,000,000 | 280,000 | 93 |
| கலப்பின மரக்கறி வர்க்கங்களின் விருத்தி | 275,000 | 249,981 | 91 |
| பிரபல்யமான பாரம்பரிய மரக்கறி வர்க்கங்களின் கிடைப்புத் தன்மை அதிகரித்தல் | 131,000 | 139,850 | 100 |
| காளான் KOPIA செயற்றிட்டம் | 1,400,000 | 522,105 | 37 |
| கூட்டெரு உற்பத்தியும் பாவனை மேம்பாடும் | 4,470,000 | 4,330,058 | 97 |
| **மொத்தம்** | **23,610,020** | **20,081,594** | **85** |

## முன்னேற்றம்

### பழ இனவிருத்தியும் மற்றும் இழையவளர்ப்பு

- அன்னாசி கலப்புப் பிறப்பாக்க நிகழ்ச்சித் திட்டம் - கலப்பின அன்னாசிக் குலவகைகள் மொறிசியஸ் அன்னாசி வர்க்கத்துடன் பின்முக கலப்புச் செய்யப்பட்டன. மேலதிக மேம்பாடுகள் மேற்கொள்ளப்படும்.
- அன்னாசியினுடைய மூலவுயிருருச் சேகரிப்பு மற்றும் மதிப்பீடு - தொடர்ந்த வண்ணமுள்ளது.
- அன்னாசியை மூன்று வரிசைகளில் நடுகை செய்யும் முறையினது விளைதிறன் மதிப்பீடு - பரீட்சிப்புக்காக களத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.
- அன்னாசி பழப்பருமன் பெரிதாவதில் வளர்ச்சிச் சீராக்கிகளைப் பயன்படுத்துவதன்

பாதிப்புக்கள் பற்றிய கற்கை - பரீட்சிப்புக்காக களத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

- இழையவளர்ப்பு நுட்பத்தினால் வாழை மற்றும் அன்னாசியினுடைய நடுகைப் பொருட்களின் உற்பத்தி - 40,000 மொறிசியஸ் வர்க்க அன்னாசி நடுகைப் பொருட்கள் உள்ளக வளர்ப்பு முறை மூலம் உற்பத்தி செய்யப்பட்டன.
- புதிய அந்தூரிய வர்க்கங்களின் நுண்முறைப் பெருக்கத்திற்கான நியதித் தொகுதிகளின் விருத்தி - வளர்ப்புக்கள் தற்போது பெருக்க அவத்தையிலுள்ளது.

### பழ இனவிருத்தியும் பயிராக்கவியலும்

- மாதுளையினுடைய கலப்புப் பிறப்பாக்க நிகழ்ச்சித் திட்டம் - விருப்பத்திற்குரிய பழப் பண்புகள் முதலாம் சந்ததி (A x D மற்றும் C x D) கலப்பினத்தில் காணப்பட்டன. தரவுச் சேகரிப்பு முன்னேற்றத்திலுள்ளது.
- கல்பிட்டிய சிவப்பு மாதுளைப் பேதங்களினுடைய மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம் - முதலாவது பழ அறுவடை மற்றும் பழத்தின் தரத்திற்கான பண்புகள் பெறப்பட்டுள்ளன. ஆராய்ச்சி தொடர்ந்த வண்ணமுள்ளது.
- வாழையில் மூலவுயிருருச் சேகரிப்பு, மதிப்பீடு மற்றும் பண்புப்படுத்தல் - விருப்பத்திற்குரிய பழப் பண்புகள் ஒரு அம்புல் தெரிவு வர்க்கத்தில் காணப்பட்டன. மதிப்பீடும் தரவுச் சேகரிப்பும் தொடர்ந்த வண்ணமுளள்ளன.
- மாதுளையில் (வர்க்கம் நிமாலி) PGR இனைப் பயன்படுத்தி தண்டுத் துண்டங்களின் வேர்விடலை மேம்படுத்தல் - IBA - 500ppm + போரேக்1% எனும் சேர்க்கையானது உயர் வேர்விடலை தந்ததாக பதிவு செய்தது.
- தேசிய ஒருங்கிணைந்த வர்க்கச் சோதனை - சீனிக் கதலி வாழை = இரண்டாம் அறுவடைத் தரவுச் சேகரிப்பு முன்னேற்றத்தில் உள்ளது.

### மரக்கறி

- உள்ளூர்ப் பூசணியினது சேகரிப்பும் மதிப்பீடும் - களத்தில் 20 மூலவுயிருருக்கள் மதிப்பிடப்பட்டன. 2 வம்சாவழிகள் கலப்பின விருத்திக்குரிய பெற்றோர்க் வம்சாவழிகளெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மற்றைய 3 வர்க்கங்கள் தூய்மையாக்கத்துக்கென தெரியப்பட்டன.
- தேசிய ஒருங்கிணைந்த வர்க்க இசைவாக்க சோதனை (NCVAT) பூசணி = ருகுண வர்க்கத்தைக் காட்டிலும் வம்சாவழி - B மற்றும் விலச்சி என்பன சிறந்த செயலாற்றலைக் காட்டியதுடன் அர்ஜுன வுடன் ஒப்பிடக்கூடியவாறு அமைந்திருந்தன. வர்க்க இசைவாக்கச் சோதனை 2014ம் ஆண்டு சிறுபோகத்திலும் நடாத்தப்படும்
- வாரியப்பொல இசைவாக்க ஆராய்ச்சி அலகில் (ARU) பூசணிக்கான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ (IPM) பொதியினது மதிப்பீடு அர்ஜுண (வர்த்தக ரீதியான) வைக் காட்டிலும் வம்சாவழி B விலச்சி, மொறகொல்லாம ஆகியன உயர் விளைச்சலைத் தந்தன. எனினும் HORDI - PU - 1 அதிக எண்ணிக்கையான பழங்களைக் கொண்டிருந்ததுடன் குறைந்த நோய் பீடைத்தாக்கம் ஏற்பட்டமையும் அவதானிக்கப் பட்டன.
- தேசிய ஒருங்கிணைந்த இசைவாக்க வர்க்கச் சோதனை (NCVT) பயற்றை, கறிமிளகாய், கத்தரி, தக்காளி, சிறகவரை மற்றும் கெக்கரி:- சிறகவரை NCVT இல் WBMN மற்றும்WBMP ஆகியன SLS 44 இனை விட 5 - 6 நாட்கள் முந்தியதாகவும் விளைச்சல் அதிகமாகவும் காணப்பட்டது.

- விலச்சி - பூசணி வர்க்கத்தினது தூய்மை யாக்கத்தினுடான விதை உற்பத்தி - 1.25 கிலோகிராம்
- மஸ் பயற்றை வர்க்கத்தினது விதையுற்பத்தி - 8.5 கிலோ கிராம்
- TA - 2 பாகல் வர்க்த்தினது இனவிருத்தி யாளர் விதையுற்பத்தி - 3.65 கிலோகிராம்
- தின்னவேலி பாகல் வர்க்கத்தினது இனவிருத்தியாளர் விதையுற்பத்தி - 2.3 கிலோகிராம்

### மலரியல் :-

- Anthurium andraeanum இனது பரம்பரையியல் மூலவளங்களினது வெளியக பாதுகாத்தலும் பயன்பபாடும்:- 2013 வர்க்க விடுவிப்புக் குழுவினது கூட்டத்தின் போது நான்கு வர்க்கங்கள் (M30,M36, M5,M7) விடுவிக்கப்பட்டன.
- Idda வர்க்கத்தினது தெரிந்தெடுத்தல் நிகழ்ச்சித் திட்டம்:- 2013ல் ஒரு வர்க்கம் விடுவிப்புச் செய்யப்பட்டது.

### மண் விஞ்ஞானம்

- அன்னாசி உற்பத்தித் திறன் மீது வினைத்திறனான போசணை முகாமைத்துவம் - களப் பரீசிப்பு தாபிக்கபட்டதுடன் 40 மண் மற்றும் தாவர மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன.
- கற்பிட்டியில் பழங்கள் மற்றும் மரக்கறிகளுக்கான பசளைப் பாவனை தொடர்பில் களத் தரவுச் சேகரிப்பு-கிடைக்கக்கூடியதாயுள்ள பொசுபரசு, பரிமாற்றப்பட்டக்கூடிய பொட்டாசியம், அமில காரத் தன்மை, மின் கடத்தாறு, சேதனப் பொருள், பார உலோகங்கள் (கட்மியம், ஈயம்) என்பவற்றைப் பரிசீலிப்பதற்கென 22 மண் மற்றும் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டன.

### கூட்டெரு

- கூட்டெருவுடன் தொடர்புடையதான 326 மாதிரிகள் அவற்றினது தர மட்டத்தினை மதிப்பிடவென பகுப்பாய்வு செய்யப்பட்டன.
- கூட்டெரு உற்பத்தி - 273 மெற்றிக் தொன் உற்பத்தி செய்யப்பட்டு 5 கிலோகிராம் கொண்ட 33876 பைகள் விநியோகிக்கப் பட்டன.
- இரண்டு ஒருங்கிணைந்த தாவரப் போசணைத் தொகுதி (IPNS) பிரயோகச் செய்து காட்டல்கள் தாபிக்கப்பட்டன.
- 1/4 ஏக்கர் பசுந்தாட் பசளைப் பயிராக்கம் மேற்கொள்ளப்பட்டது.

### பூச்சியியல்

- அன்னாமுன்னா, கொய்யா, மற்றும் மாதுளையில் பீடை அடையாளங் காணலும் முகாமைத்துவமும்:- கொரன சிவப்பு கொரன ரோசி மற்றும் சிவப்பு ஜயன்ட் ஆகியன மிகவும் பீடைத் தாக்கமடையும் வர்க்கங்களாக அடையாளம் காணப்பட்டன. கொரன இனிப்பு, புபுது மற்றும் லங்கா ஜயன்ட் ஆகியன குறைந்தளவு பீடைத் தாக்கமடையும் வர்க்கங்களாக அடையாளம் காணப்பட்டன. தாக்கமேற்படுத்தும் காரணி ஒரு பட்டையுண்ணும் மயிர்க் கொட்டியென யூகிக்கப்பட்டது.
- மாவில் செதிற் பூச்சியினது அமைவிட இருக்கை மற்றும் தற்காலிக பரம்பலினை கண்காணித்தல் - பூக்கும் பருவத்தில் இதன் குடித்தொகை உயர்வாக காணப்பட்டது.
- செதிற் பூச்சியைக் கட்டுப்படுத்துவதில் தெரிவு செய்யப்பட்ட சேதனப் பிரித்தெடுப்புக்களினது மதிப்பீடு - வீட்டுத் தோட்டத்தில் செதிற் பூச்சியை கட்டுபடுத்த வேப்பம் விதைப் பிரித்தெடுப்பு வினைத்திறனாகப் பயன்படுத்தப்பட முடியும்.

## நோயியல்

- மரக்கறிப் பயிர்களில் நோய்கட்டுப்பாட்டுக்கு ரைக்கோடேமா மற்றும் கூட்டெரு வடிதிரவம் என்பவற்றினது பாவனை- பரிசோதனை யானது களத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

- சிப்பிக் காளான் வளர்க்கும் கூடாரத்திற்கான புதிய கூரைப் பொருட்கள் - கூரைக்குரிய பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு ள்ளன.

- கனோடேமா காளான் வளர்ப்புக்கான பொதி விருத்தி - பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

- புதிய காளான் வர்க்கத்தினது அறிமுகம் - வித்தி உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

## கிழங்குப் பயிர்கள்

- வேரைத் தூண்டும் ஓமோன்களைப் பிரயோகித்து அளவறி மற்றும் மண்பறி ரீதியாக மரவள்ளியினது உற்பத்தித் திறன் மேம்பாடு - களப் பரீட்சிப்பு அறிக்கையிடப்பட்டுள்ளது.

- வற்றாளைச் செய்கையில் பசளைப் பிரயோகக் கற்கைகள்:- விளைச்சல் செயலாற்றுகை மீளப் பெறப்படல் மற்றும் வற்றாளைச் செய்கையில் சுண்ணாம்பு பிரயோகம் என்பன வெற்றிகரமாக அமைந்திருந்தன. 23 தொன் / கெக்ரேயர் விளைச்சல் பெறப்படக்கூடியதாய் அமைந்திருந்தது.

- மரவள்ளி நடுகைப் பொருட்கள் ஆண்டு பூராகவும் கிடைக்கக்கூடியதாயிருத்தல் மற்றும் செலவின வினைத்திறன் என்பவற்றை மேம்பாடு செய்வதற்கான தொழிநுட்ப பிறப்பாக்கம் - களப் பரீட்சிப்பு முன்னேற்றத்தில் உள்ளது. (07 மாதங்கள்)

## விதை மற்றும் நடுகைப் பொருட்களின் உற்பத்தி

**அட்டவணை 1.2.3.2 விதை மற்றும் நடுகைப் பொருட்கள் உற்பத்தி ~ 2013**

| தாவரப் பெயர் | விற்கப்பட்ட தாவரங்களின் எண்ணிக்கை |
|---|---|
| டிராகன் பழம் | 1300 |
| வாழை | 260 |
| அந்தூரியம் | 380 |
| காளான் | 50 |

## தொழிநுட்பப் பரம்பல்

**அட்டவணை 1.2.3.3 தொழிநுட்பப் பரம்பல்**

| நிகழ்ச்சி தலைப்பு | துண்டுப் பிரசுரம | வயல் விழா | மண் பரிசோதனை | கண்காட்சி |
|---|---|---|---|---|
| கூட்டெரு | 135.086 | - | - | 03 |
| மண் | - | - | 326 | - |
| காளான் | 2,000 | - | - | 01 |
| நோயியல் | - | - | - | - |
| அன்னாசி | 2500 | - | - | 02 |
| மாதுளை | 2,200 | - | - | - |
| மலரியல் | 2500 | - | - | 01 |

**அட்டவணை 1.2.3.4 பயிற்சி நிகழ்ச்சிகள்**

| நிக்ழ்ச்சித் தலைப்பு | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அன்னாசி | 13 | 520 |
| வாழை | 7 | 400 |
| டிராகன் பழம் | 10 | 200 |
| மரக்கறி | 30 | 1700 |
| வீட்டுத்தோட்டம் | 20 | 2000 |
| கிழங்குப் பயிர் | 06 | 300 |
| மலரியல் | 25 | 1200 |
| காளான் | 15 | 300 |
| கூட்டெரு | 86 | 4623 |

**அட்டவணை 1.2.3.5 ஆலோசனை சேவைகள்**

| பிரிவு | 2013ம் ஆண்டில் ஆலோசனைச் சேவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| கூட்டெரு | 115 |
| காளான் | 210 |
| அன்னாசி | 32 |
| மலரியல் | 02 |
| வீட்டுத்தேட்டம் | 14 |
| கிழங்குப் பயிர் | 17 |
| டிராகன் பழம் | 20 |
| வாழை | 15 |
| நோயியல் | 40 |
| பூச்சியியல் | 20 |
| மரக்கறி | 25 |

## 2014ம் ஆண்டுக்கான திட்டம்

### பழ இனவிருத்தி மற்றும் இழைய வளர்ப்பு

- அன்னாசியில் கலப்புப் பிறப்பாக்க நிகழ்ச்சித் திட்டம்
- அன்னாசியினது மூலவுயிருருச் சேகரிப்பு மற்றும் மதிப்பீடு
- அன்னாசி மூன்று வரிசையில் பயிரிடலின் வினைத்திறனை மதிப்பீடு செய்தல்
- அன்னாசியின் பழப் பருமன் அதிகரிப்பில் தாவர வளர்ச்சிக் சீராக்கிகளைப் பயன்படுத்துவதன் தாக்கம் பற்றிய கற்கை
- இழைய வளர்ப்புத் தொழில்நுட்பத்தினூடு அன்னாசி மற்றும் வாழையினது நடுகைப் பொருட்கள் உற்பத்தி
- புதிய அந்தூரியம் வர்க்கங்களினது நுண்முறைப் பெருக்கத்திற்கான ஆரம்ப நெறிமுறை (protocol) விருத்தி

### பழப்பயிர் இனவிருத்தி மற்றும் பயிராக்கவியல்

- மாதுளையின் கலப்பின விருத்தி நிகழ்ச்சித் திட்டம்
- கல்பிட்டி சிவப்பு மாதுளை வர்க்கத்தினது மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்
- மாதுளை (வர்க்கம் - நிமாலி) யில் PGR இனைப் பயன்படுத்தி தண்டுத் துண்டங்கள் வேர்விடலை மேம்பாடு செய்தல்
- டிராகன் பழத்தினது (Hylocereus spp.) அறுவடைப் போகத்தினை கையாளல்
- மாவினது பூத்தலை உச்சப்படுத்த பக்லோபியுற்றசோல் (Baclobutrazol) பயன்பாடு
- பப்பாசி கலப்பின வர்க்கத்தினது தேசிய ஒருங்கிணைந்த வர்க்கச் சோதனை
- மீள இளமையளித்தல் மூலமாக மா வினது உற்பத்தித் திறனை மேம்படுத்தல்

### மரக்கறி

- தெரிவு செய்யப்பட்ட மூலவுயிருருக்களினது தூய்மையாக்கம் - தற்கலப்பு நுட்பத்தின் மூலம் 5 மூலவுயிருருக்கள் தூய்மை யாக்கப்படும்.
- விலச்சி மற்றும் வம்சாவழி B பூசணி வர்க்கங்களின் தூய்மையாக்கத்தினூடான விதையுற்பத்தி - விலச்சி - 5 கிலோகிராம், வம்சாவழி B - 3 கிலோகிராம்
- தேசிய ஒருங்கிணைந்த வர்க்க இசைவாக்கச் சோதனை (NCVAT) யும் மொறகொல்லாகம மற்றும் விலச்சி பகுதிகளில் வர்க்க இசைவாக்கச் சோதனை
- புடோல் வர்க்கத்தினது இனவிருத்தியாளர் விதையுற்பத்தி - TA - 2 வர்க்கம் - 10 கிலோ கிராம்
- பாகல் வர்க்கத்தினது இனவிருத்தியாளர் விதையுற்பத்தி - தின்னவேலி வர்க்கம் - 3 கிலோ கிராம்
- கெக்கரி வர்க்கத்தினது இனவிருத்தியாளர் விதையுற்பத்தி - LY - 58 வர்க்கம் - 1 கிலோ கிராம்
- பயற்றை, கறிமிளகாய், கத்தரி, தக்காளி, சிறகவரை மற்றும் கெக்கரி ஆகிய பயிர்களுக்கான தேசிய ஒருங்கிணைந்த வர்க்கச் சோதனை (NCVT)
- வளர்ச்சிச் சீராக்கி களப் பரிசோதனை COMcat - Row (இறக்குமதி செய்யப்பட்ட கறிமிளகாய் வர்க்க மதிப்பீடு, பீர்க்கு)

### நோயியில் மற்றும் காளான்

- மரக்கறியில் நோய்களைக் கட்டுப்படுத்த ரைக்கோடேமா மற்றும் கூட்டெரு வடித்தெடுப்பு என்பவற்றின் பயன்பாடு
- சிப்பிக் காளான் வளர்ப்புக் கூடாரத்திற்கு புதிய கூரைப் பதார்த்தம்
- கனோடேமா காளான் வளர்ப்புக்குரிய பொதியினுடைய விருத்தி
- புதிய காளான் வர்க்கத்தினது அறிமுகம்

### மலரியல்

- பாரம்பரிய இனவிருத்தி மூலம் பரீட்சார்ந்த வர்க்கங்களினது விருத்தி - (அந்தூரியம் மற்றும் இத்த (Idda)

### கிழங்குப் பயிர்கள்

- மரவள்ளி நடுகைப் பொருட்கள் ஆண்டு பூராகவும் கிடைக்கக்கூடிய தன்மை மற்றும் செலவின வினைத்திறன் என்பவற்றை மேம்பாடு செய்யும் தொழில்நுட்ப பிறப்பாக்கம்

### பூச்சியியல்

- கொய்யா, மாதுளை மற்றும் அன்னமுன்னா ஆகியவற்றில் பீடை அடையாளம் காணலும் முகாமைத்துவமும்
- மாவில் செதில் பூச்சியினைக் கட்டுப்படுத்த சிபாரிசு செய்யப்பட்ட பூச்சிநாசினிகளின் (பூச்சிகளுக்கான வளர்ச்சிச் சீராக்கிகளுடன்) மதிப்பீடு
- செதிற் பூச்சிக்கான இரைகௌவி மற்றும் ஒட்டுண்ணிகளை அடையாளம் காணல்
- அன்னாசி வெண்முட்டுப்பூச்சிக்கு அசிட்டாமெப்றிட் 200 எஸ், பீ (Acetamiprid - 200sp) இனது பரீட்சார்த்த மட்ட சோதனை
- அன்னாசி வெண்முட்டுப்பூச்சிக்கு பூச்சி நாசினி தேர்வுச் சோதனைகள்
- அக ஒட்டுண்ணிக்குரிய பங்கசினை வேறுபரித்தெடுத்தல்

### மண் விஞ்ஞானம்

- மண்புழுக் கூட்டெருத் தயாரிப்பும் பயிர் உற்பத்தித் திறன் மேம்பாட்டுக்கு அதன் பாவனையும்
- வினைத்திறனான பசளை முகாமைத்துவம் தொடர்பில் ஒரு துண்டுப்பிரசுரம் உருவாக்குதல்
- அன்னாசி உற்பத்தித் திறனில் வினைத்திறனான போசணை முகாமைத்துவம்
- கற்பிட்டியில் பழங்கள் மற்றும் மரக்கறிகளுக்கான பசளைப் பயன்பாடு தொடர்பில் களத் தரவுச் சேகரிப்பு

### கூட்டெரு

- கூட்டெரு உற்பத்தி - 300 மெற்றிக் தொன்
- 5 கிலோ கிராம் அளவுடைய உட்புகுத்திகளைக் கொண்ட பொதிகளின் விநியோகம் - 40,000
- ஒருங்கிணைந்த தாவரப் போசணைத் தொகுதியினது (IPNS) பிரயோக ரீதியான செய்து காட்டல்கள் இரண்டு
- ஐந்து கண்காட்சிகளை நடாத்துதல், 500, 000 துண்டுப் பிரசுரங்களை பகிர்ந்தளித்தல், 10,000 பயிலுநர்களுக்குப் பயிற்சியளித்தல்
- 400 கூட்டெரு, நீர் மற்றும் மண் மாதிரிகளை பகுப்பாய்வு செய்தல்

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பிரதிப்பணிப்பாளர்(ஆராய்ச்சி) | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 07 |
| விவசாயக் கண்காணிப்பு அலுவலர் | 02 |
| நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | 02 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 05 |
| விவசாயப் போதனாசிரியர் | 18 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 10 |
| பண்ணை முகாமையாளர் | 01 |
| பண்ணை எழுதுவினைஞர் | 02 |
| ஆராய்ச்சி உப உதவியாளர் | 01 |
| சாரதி | 04 |
| காரியாலய கடமை சிற்றூழியர் | 01 |
| காவலாளி | 11 |
| நாற்று மேடையாளர் | 01 |
| உழவியந்திர இயக்குநர் | 02 |
| துப்பரவுத் தொழிலாளி | 01 |
| புல் வெட்டி இயக்குநர் | 01 |
| திறனற்ற தொழிலாளி (தரம் 1) | 33 |
| தொழிலாளி (ஒப்பந்தம்) | 60 |
| **மொத்தம்** | **163** |

## 1.2.4 விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (யுசுனுஊ)இ சீதாஎலிய

உருளைக் கிழங்குப் பயிருக்கே இந்நிலையம் முக்கியத்துவம் கொடுக்கின்றது. இதனை அடுத்து மரக்கறிகள், வெப்பவலய பழப் பயிர்கள். மற்றும் சில மலரியல் பயிர்கள் ஆகியவற்றுக்கும் முக்கியத்துவம் வழங்குகின்றது. உயர் விளைவைத் தருகின்ற வர்க்கங்களின் விருத்தி, அறிமுகம் மற்றும் தெரிவு ஆகியவற்றைக் கொண்டதாக பயிர் மேம்பாடு நிகழ்ச்சிகள் அமைகின்றன. நோய் பீடை, மற்றும் போசணை ஆகியவற்றின் பராமரிப்புக்கான சிறந்த பயிராக்கவியல் நடவடிக்கைகளைப் பயன்படுத்துதல் மேம்படுத்தப்பட்ட பயிராக்கவியல் பொதிகளின் விருத்தி ஆகியவற்றினூடாக பயிர் உற்பத்தியானது அதிகரிக்கப்படுகின்றது. மேலும் சில அலங்காரத் தாவரங்கள் மற்றும் ஸ்ரோபரி ஆகியவற்றின் தாவர நடுகைப் பொருட்கள், மற்றும் விதை உருளைக் கிழங்கு போன்றவற்றின் தரம் மற்றும் உற்பத்தி அளவுகளை உயர்த்துகின்ற தேசிய நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. சில வெளிநாட்டு மரக்கறிகள் மற்றும் உருளைக் கிழங்கு ஆகியவற்றின் விதை உற்பத்தி தொடர்பில் உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட நுட்பங்களின் மேலதிக மேம்பாட்டுக்குரிய ஆய்வுகளும் இடம் பெறுகின்றன.

### பாதீடு

**அட்டவணை 1.2.4.1 வருடாந்தப் பாதீடு -2013 (ரூபாய்)**

| செலவுத் தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு % |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 2,006,300 | 1,649,845 | 52 |
| நடைமுறைச் செலவு | 7,329,859 | 6,466,881 | 88 |
| **செயற்றிட்டங்கள்** | | | |
| விதை உருளைக் கிழங்கு உற்பத்தியை மேம்படுத்தல் (NARP) | 1,183,500 | 992,869 | 89 |
| உள்ளூர் நிலமைகளுக்குரிய புதிய உருளைக் கிழங்கு வர்க்கங்களின் விருத்தி (NARP) | 197,500 | 197,452 | 100 |
| சித்திரசு வர்க்கங்களின் மதிப்பீடு | 100,000 | 99,758 | 100 |
| இழைய வளர்ப்பு | 9,500,000 | 7,132,304 | 99 |
| IFAD | 212,550 | 212,296 | 100 |
| மரக்கறிச் செய்கை நுட்பம் (KOPIA) | 100,000 | 99,796 | 100 |
| மண்வள முகாமைத்துவம் (KOPIA) | 236,000 | 158,313 | 67 |
| காளான் (KOPIA) | 1,228,095 | 45,388 | 4 |
| உருளைக் கிழங்கு (KOPIA) | 2,450,751 | 2,450,751 | 100 |
| **மொத்தம்** | **24,544,555** | **17,847,287** | **79** |

## முன்னேற்றம்

### ஆராய்ச்சி

### பயிராக்கவியல்

- நுவரெலியா மாவட்டத்தில் 2013 ஆம் ஆண்டு சிறுபோகத்தின் போது 10 வர்த்தக உருளைக் கிழங்கு வர்க்கங்கள் மதிப்பிடப்பட்டன. அத்துடன் "லெப்பேர்லா" மற்றும் "டெஸ்றனி" ஆகிய வர்க்கங்கள் சிறுபோகத்தின் போது LCWZ பிரதேச நிலமைகளின் கீழ் சிறந்த பெறுபேறுகளைக் காட்டியன.

- நீர்வளர்ப்புத் தொகுதியில் உருளைக் கிழங்கின் வெவ்வேறு நடுகைப் பொருட்களின் செயற்றிறன் தொடர்பான கற்கை ஒன்று இடம் பெற்றது. இதன் போது சிறிய பருமனுடைய நடுகைப் பொருட்கள் உயர் விளைச்சலைத் தந்தன.

- உருளைக் கிழங்கு விதை உற்பத்தியில் நடுகை வரிசைகளுக்குள்ளன இடைவெளி யின் தாக்கம் பண்ணை முகாமைத்துவ நிலமைகளின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டது. பரிசோதனை மீண்டும் தொடர்படவுள்ளது.

- உருளைக் கிழங்கின் நடுகைப் பொருளாக முகிழத் (கிழங்குத்) துண்டங்கள் பயன்படுத்தப்பட்டு அவற்றின் பெறுபேறுகள் அறியப்பட்ட போது 60g நிறையுடைய முகிழத் துண்டங்கள், 60g உடைய முழு உருளைக் கிழங்கின் (28mm - 55mm பருமன் உடையவை) பெறுபேற்றை LCWZ பிரதேச நிலமைகளின் கொடுத்தது.

### தாவர இனவிருத்தி

- உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட 04 உருளைக் கிழங்கு வம்சாவழிகள் (m - 18, 19, 01 - 12 - 10 மற்றும் 01. - 09 - 05) ஆராய்ச்சி நிலமைகளின் கீழ் NCVT இல் மதிப்பிடப்பட்டது. இதில் 03 வம்சாவழிகள் (m - 19, 01 - 12 - 10 மற்றும் 01. - 09 - 05) சிறந்த விளைச்சலைக் காட்டின. அத்துடன் பரிசோதனைகள் மீண்டும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. நுவரெலியாவில் உள்ள விதை உருளைக் கிழங்குப் பண்ணையானது பெறுபேற்றை மேலும் உறுதிப்படுத்தவுள்ளது.

- உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட 05 உருளைக் கிழங்கு வம்சாவழிகள் (01 - 11 - 01, 99 - 25 , 01 - 10 – 01, 01 - 08 - 15 மற்றும் A - 17) 2013 / 2014 பெரும் போக காலப்பகுதியில் ஆராய்ச்சி நிலமைகளின் கீழ் NCVT இல் தாபிக்கப்பட்டன.

- விளைச்சல் மற்றும் முகிழங்களின் இயல்புகளின் அடிப்படையில் பாரம்பரியமற்ற பிரதேசங்களுக்காக (யாழ்ப்பாணம் மற்றும் கற்பிட்டி) வெப்ப சகிப்புடைய வர்க்கங்களை விருத்தி செய்வதற்கு 107 வம்சாவழிகளில் இருந்து உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட 32 உருளைக்கிழங்கு வம்சாவழிகள் அடையாளங் காணப்பட்டன.

- உயர் விளைச்சலைத் தருகின்ற வர்க்கங்களை விருத்தி செய்வதற்காக 78 வம்சாவழிகளில் இருந்து உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட 33 வம்சாவழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

- AMYT இன் கீழ் உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட 09 வம்சாவழிகள் மதிப்பிடப் பட்டன.

- MYT இன் கீழ் உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட 09 வம்சாவழிகள் மதிப்பிடப் பட்டன.

- வெப்ப சகிப்பு வர்க்கங்களைக் கண்டறிவதற்காக கற்பிட்டி, மற்றும் தின்னவேலி ஆராய்ச்சி நிலையம் ஆகிய இடங்களில், உள்ளூரில் விருத்தி செய்யப்பட்டதும் ஏற்கனவே இனங்காணப் பட்டதுமான 32 உருளைக் கிழங்கு வம்சாவழிகள் தாபிக்கப்பட்டுள்ளன.

- 15 வம்சாவழிகளில் இருந்து பெறபட்ட 7 இறக்குமதி செய்யப்பட்ட உருளைக் கிழங்கு வம்சாவழிகள் மேலதிக மதிப்பீட்டுக்காக தெரிவு செய்யப்பட்டன.

## இழையவளர்ப்பு

- பேரிக்காயில் ஆய்வுகூட ஸ்தாபனம் மற்றும் பெருக்கம் ஆகியவற்றுக்கான நெறிமுறை ஒன்று விருத்தி செய்யப்பட்டது.
- இலங்கையின் மேல் நாட்டுப் பகுதியின் பல்வேறு பிரதேசங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட கிறனோலாக்களில் இருந்து பல்வேறு குடித்தொகைகள் அடையாளங் காணப்பட்டன.
- கிறிசாந்திமம் மற்றும் ஸ்ரற்றிசி ஆகியவற்றின் நுண் இனம்பெருக்கத்திற்காக நெறிமுறை ஒன்று விருத்தி செய்யப்பட்டது.

## பூச்சியியல்

- வைரசுத் தொற்றலுக்குட்பட்ட கரு வெட்டுப் புழுக் குடம்பிக் கரைசலானது (8g / L) கரு வெட்டுப் புழுவைக் கட்டுப்படுத்துவதற்கான சிறந்த உயிரியல் கட்டுப்பாட்டு பதார்த்தமாக அடையாளங் காணப்பட்டது. இதன் போது இறப்பு வீதம் 48.3% ஆகப் பதிவு செய்யப்பட்டது.
- இயற்கை உயிரியல் கட்டுப்பாட்டு பதார்த்தமான 5631- இலக்க Diglypus iseae ஆனது 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வயல் மற்றும் பொலித்தீன் கூடார நிலமை களில் Liromyza huidobrensis ஐக் கட்டுப் படுத்துவதற்காக விடுவிக்கப்பட்டுள்ளது.
- சூழல் நேயப் பாதுகாப்புடைய பூச்சி நாசினியான விராக்கா 40WG (தியாமெத்தொக்ஸான் 20%+ குளோரன்றனிலிபுறோல் 20%) ஆனது வெட்டுப்புழு, PTM, அழுக்கணவன் மற்றும் பனிப்பூச்சி (உருளைக் கிழங்கு பீடைச் சிக்கல்) ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற் காக சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.
- வெண்குடம்பிப் புழுக்களைக் கட்டுப்படுத்து வதில் Bacillus thuringiensis (BT) இனது “வேறாக்கம் 2” குளோரோபைறிபொஸ்க்கு இணையாச் செயற்பட்டது.

## நோயியல்

- உருளைக் கிழங்கு பிற்கூற்று வெளிறலுக்கு எதிராக அமிஸ்ரர் (1.00 ml / l எனும் அளவிலும்) மற்றும் பிலிக்கோசெப் (1.00 ml / l எனும் அளவிலும்) ஆகிய புதிய பங்கசுநாசினிகள் தேர்வு செய்யப்பட்டன. 2012 / 2013 பெரும்போக காலப்பகுதியில் அமிஸ்ர பங்கசு நாசினியானது மேற்குறிப்பிட்ட அளவுகளில் வயல் நிலமைகளின் கீழ் உருளைக் கிழங்கு பிற்கூற்று வெளிறல் நோயைக் கட்டுப்படுத்துவதில் வெற்றிகரமாகச் செயற்பட்டது.
- அசோக்சிஸ்ரொபின் 25% SC எனும் பங்கசு நாசினி ஓர் புதிய மூலத்தில் இருந்து பெறப்பட்டு வயல் நிலமைகளின் அதன் செயற்றிறன் பரீட்சிக்கப்பட்டது. (பரீட்சார்த்த அளவுப் பரிசோதனை) இது 2013 சிறுபோகத்தின் போது வயல் நிலமைகளின் கீழ் உருளைக் கிழங்கில் பிற்கூற்று வெளிறல் நோயைக் கட்டுப்படுத்துவதில் சிறப்பாகச் செயற்பட்டது.
- புதிய மூலம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட அசோக்ஸிரோபின் 25% SC ஆனது விவசாயிகளின் வயல்களில் அதன் செயற்றினை அறிவதற்காகப் பரீட்சிக்கப் பட்டது. (இது ஒரு முன்னோடி அளவுப் பரிசோதனை) விவசாயிகளின் வயல்களில் உருளைக் கிழங்கில் பிற்கூற்று வெளிறலைக் கட்டுப்படுத்துவதில் இது வினைத்திறனுடன் செயற்பட்டது (2013 சிறுபோகம்)

- உருளைக் கிழங்கில் விளைச்சல் மற்றும் பிற்கூற்று வெளிறல் சகிப்புத் தன்மை ஆகியவற்றுக்காக 15 புதிய வர்த்தக ரீதியிலான வர்க்கங்கள் பரிசோதிக்கப்பட்டன. (2012 / 2013 பெரும்போகம்) இதன் போது சேர்வேன், வெலானோவா YP - 04 - 80 மற்றும் YP - 04 - 88 உருளைக் கிழங்கு வர்க்கங்கள் மேலதிக மதிப்பீட்டுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

- விசிறல் நிலமைகளின் கீழ் 10 புதிய வர்த்தக ரீதியிலான உருளைக் கிழங்கு வர்க்கங்கள் பரிசோதிக்கப்பட்ட போது அவை பிற்கூற்று வெளிறலுக்கு சகிப்புத் தன்மையுடையனவாகக் காணப்பட்டன. இவற்றுள் YP - 04 - 88 உருளைக் கிழங்கு வர்க்கமானது பிற்கூற்று வெளிறலுக்குரிய சகிப்புத் தன்மை மற்றும் விளைச்சல் ஆகியவற்றுக்குரிய மேலதிக மதிப்பீட்டுக்காத் தெரிவு செய்யப்பட்டடுள்ளது. (2013 சிறுபோகம்)

- விசிறல் நிலமைகளின் கீழ் 19 மற்றும் 99 - 99 ஆகிய புதிய உருளைக் கிழங்கு இனவிருத்தி வம்சாவழிகள் உயர் விளைச்சலையும், பிற்கூற்று வெளிறலுக்குரிய சகிப்புத் தன்மையும் காட்டியது. இந்த வம்சாவழிகள் மேலதிக மதிப்பீட்டுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

- சுக்கினி இல் கீழ்ப்பூஞ்சண நோய்க்கு எதிராக ஓர் புதிய பங்கசு நாசினியாக கலிகீறீன் 2.5g/l எனும் அளவில் தேர்வுக்குட்படுத்தப்பட்டது. மேற்கூறிய அளவுகளில் சுக்கினியில் கீழ்ப்பூஞ்சண நோயைக் கட்டுப்படுத்துவதற்காக சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. (2013 சிறுபோகம்)

- கோவாவில் கறுப்பழுகல் நோயைக் கட்டுப்படுத்த கோவா விதைகளை சுடு நீரில் பரிகரணம் செய்யும் முறை ஒன்று கற்கைக்கு உட்படுத்தப்பட்டது.

- உருளைக் கிழங்குகளில் ஏற்படுகின்ற தூள் பொருக்கு நோய்த் தாக்கத்திற்கு எதிராக 26 உருளைக்கிழங்கு வம்சாவழிகள் மற்றும் வர்க்கங்கள் தேர்வுக்குட்படுத்தப்பட்டன. இவற்றில் எதுவும் எதிர்ப்புத் தன்மையைக் கொண்டிருக்கவில்லை.

### மண் விஞ்ஞானம்

சிறு உருளைக்கிழங்கு உற்பத்திக்காக வர்த்தரீயில் சந்தையில் கிடைக்கின்ற அல்டேட் கரைசலுடன் ஒப்பிடுவதற்காக DOA ஆல் உருவாக்கப்பட்ட நான்கு போசணைக் கரைசல்களைக் கொண்டு ஓர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனை முடிவுகளின் படி உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட போசணைக் கரைசல்கள் நீரியல் வளர்ப்புத் தொகுதிகளில் சிறப்பாக செயற்பட்டதை அறியமுடிந்தது.

### மரக்கறிகள்

இரு உள்ளூர் கரட் வர்க்கங்கள், இரண்டு கோவா வர்க்கங்கள், மற்றும் இரு பூக்கோவா வர்க்கங்கள் ஆகியன UCWZ நிலமைகளின் கீழ் உயர் விளைச்சல் உடையனவாகவும் நோய் பீடைத் தாக்கங்களுக்கு எதிர்ப்புத் தன்மை / சகிப்புத் தன்மை உடையனவாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

## அபிவிருத்திச் செயற்பாடுகள்

### பயிரராக்கவியல்

- சிறு உருளைக்கிழங்கு விதை உற்பத்தி காற்று வளர்ப்பு, நீர் வளர்ப்பு மற்றும் மண் வளர்ப்பு ஆகிய தொகுதிகளைப் பயன்படுத்தி 0.67 மில்லியன் முன் அடிப்படை Go விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன Go பொலித்தீன் கூடாரங்கள் சேதமடைந்ததன் காரணமாக காற்றூடக வளர்ப்பு விதை உற்பத்தியானது ஜூன் மாதம் 14 ஆம் திகதியின் பின்பு நிறுத்தப்பட்டது.

- நீர் வளர்ப்புப் பிரிவானது நிர்மாணிக்கப் பட்டுள்ளது. அத்துடன் Go விதை உற்பத்தியானது செப்ரம்பரில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.
- 4,53,700 முன் அடிப்படை விதைகள் Go விவசாயிகளுக்கு $G_1$ விதை கிழங்கு உற்பத்திக்காக வழங்கப்பட்டன.
- பருவமல்லாத காலங்களில் விதை உற்பத்தி செய்வதற்காக 100 சிறிய அளவிலான பண்ணையாளர்களுக்கு 50,000 முன் அடிப்படை விதைகள் வழங்கப்பட்டன. இதில் 30% வெற்றியளித்துள்ளது மேலும் 50,000 ஆராய்ச்சி நோக்கப் பரிசோதனைகளுக்காக வழங்கப்பட்டன.
- நுவரெலியா மாவட்டப் பணிப்பாளர், IFAD செயற்றிட்ட தலைவர்கள் மற்றும் பதுளை, நுவரெலியா PDOA ஆகியோருடன் இணைந்து Go வைப் பயன்படுத்தி விதை உற்பத்தி செய்வதற்காக ஓர் கூட்டுறவு அமைப்பு மற்றும் சிறிய பண்ணையாளர் அமைப்புக்கள் பல ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- நீர் வளர்ப்பு, வளி வளர்ப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி Go விதை உற்பத்திக்குரிய தொழில்நுட்பமானது விதைகள் மற்றும் நடுகைப் பொருள் உற்பத்திப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- விதைகள் மற்றும் நடுகைப் பொருள் உற்பத்திப் பிரிவுக்கு வளி வளர்ப்பு மற்றும் நீர் வளர்ப்புப் பிரிவின் நிர்மாணத்திற்குரிய தொழில் நுட்பம் வழங்கப்பட்டுள்ளது.

## இனவிருத்தி

- லங்கா பந்துருவ முள்ளங்கியில் இனவிருத்தியாளர் விதை உற்பத்தி செய்வதற்காக 2500 சதுர அடி பரப்பளவுடைய புதிய பொலித்தீன் கூடாரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
- உருளைக்கிழங்கு வர்க்க மேம்பாட்டு நிகழ்ச்சி: பெரிய அளவிலான செய்துகாட்டல், கோல்டன் ஸ்ரார் (Golden star) முதற் பருவ உற்பத்தியானது வெற்றிகரமாக அமைந்தது. ஆனால் இரண்டாவது பெருக்கத்தில் ஏற்பட்ட பின்னடைவு தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

## இழைய வளர்ப்பு

- முறைசார் விதை உருளைக் கிழங்கு உற்பத்தி நிகழ்ச்சிக்காக 19560 ஆய்வுகூட முறை உற்பத்தியிலான கிறனோலா வர்க்கத்தின் தாவரத் துண்டங்கள் வழங்கப்பட்டன. மேலும் 2,310 கிறனோலா, 130 கோல்டன் ஸ்ரார், 107 ராஜா, மற்றும் 107 மெசிறி ஆகிய வர்க்கங்களின் ஆய்வுகூட தாவர உற்பத்திகள் முறைசாரா முறையிலான உருளைக்கிழங்கு விதை உற்பத்திக்கு வழங்கப்பட்டன.
- பரிசோதனை நோக்கங்களுக்காக 522 கிறனோலா, 12 டெசிறி மற்றும் 12 ராசா வர்க்கங்களின் ஆய்வுகூட தாவர உற்பத்திகள் வழங்கப்பட்டன.
- தனியார் விதை உருளைக்கிழங்கு உற்பத்திக் கம்பனி ஒன்றுக்கு கிறனோலா, வர்க்கத்தின் ஆய்வுகூட தாவர உற்பத்திகள் 12 வழங்கப்பட்டன.
- தனியார் பண்ணையாளர்களுக்கு ஆய்வுகூட உற்பத்தி ஸ்ரோபரி தாவரத் துண்டங்கள் 3388 மற்றும் ஆய்வுகூட நிலமைகளில் பெற்ற தாவர நடுகைத் துண்டங்கள் 2634 உம் வழங்கப்பட்டன.
- ஆராய்ச்சி நிலையங்களில் ஓடிகளில் உற்பத்திக்காக ஆய்வுகூட நிலமைகளில் உற்பத்தி செய்யப்பட்ட 306 ஸ்ரோபரி தாவர நடுகைத் துண்டங்கள் (Plant lets) பயன்படுத்தப்பட்டன.

- ஆய்வுகூட நிலமைகளில் 2473 பேபீஸ் பிறத், 637 மடோனா லில்லி, 370 ஜேர்பரா. 506 லிமோனியம் மற்றும் 78 கிறிசாந்தியம் ஆகியவற்றின் தாவர நடுகைப் பொருட்கள் செய்கையாளர்களின் தேவையை நிறைவேற்றுவதற்காக உற்பத்தி செய்யப் பட்டன.

### பூச்சியியல்

அரச விதை உருளைக்கிழங்குப் பண்ணைகளில் இருந்து பெறப்பட்ட 656 மாதிரிகள் PCN ற்காகப் பரிசோதிக்கப்பட்டன.

### நோயியல்

- பக்ரீரியா வாடலுக்குரிய 650 மண் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன.
- நோய்களை இனங்காணப்பதற்காக 39 தாவர மாதிரிகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு சிபாரிசுக்களும் வழங்கப்பட்டன.
- வெவ்வேறு விதை உற்பத்தி அவத்தைகளில் இருந்து சேகரிக்கப்பட்ட 30 உருளைக்கிழங்கு தாவர மாதிரிகள் PLRV, PVY, PVX, PVS, PVM மற்றும் PVA ஆகியவற்றுக்காகச் சுட்டியிடப்பட்டன. அவத்தைகளாவன: ஆய்வுகூட நிலமைகள், RSCC முன் அடிப்படை, அடிப்படை விதை உருளைக்கிழங்கு மற்றும் விவசாயிகளின் வயல் குடித்தொகை என்பன ஆகும்.

### மண் விஞ்ஞானம்

- மண் மாதிரிகளின் பரிசோதனை (pH - 345, EC - 106, பொசுபரஸ் (P) - 60 மற்றும் பொட்டாசியம் (K) - 58 ]

### பயிற்சிகள்

- இலங்கையில் சிறிய அளவிலான செயற்றிட்ட உருவாக்கம், கண்காணிப்பு மதிப்பீடு - DZLiSPP அலுவலர்களுக்காக தொழிசார் விருத்தி, பயிற்சி, மற்றும் கற்கைத் தரிசன நிகழ்ச்சி” தாய்லாந்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஒரு அலுவலர் கலந்து கொண்டார்.
- கொரியாவில் இடம் பெற்ற “விதை உருளைக்கிழங்கு உற்பத்தித் தொழில் நுட்பம்” எனும் பயிற்சி நிகழ்ச்சியில் ஒரு அலுவலர் கலந்து கொண்டார்.
- புதிதாக நியமனம் வழங்கப்பட்ட 3 ஆராய்ச்சி உத்தியோகத்தர்கர்கள் கன்னொறுவை, சேவைக்காலப் பயிற்சி நிலையம் மற்றும் SLIDA ஆகிய இடங்களில் சேவை உள்ளீர்ப்புப் பயிற்சி யைப் பெற்றுக் கொண்டனர்.
- பூச்சியியல், பயிராக்கவியல், மற்றும் இளையவளர்ப்பு ஆகியவற்றுடன் தொடர் புடைய துறைகளில் B.Sc கற்றை நெறிகுரிய 7 மாணவர்கள் தங்களது இறுதி ஆண்டுக்குரிய விசேடத்துவமடைதல் செயற்றிட்டங்களை இங்கு நிறைவேற்றினர்.
- உருளைக்கிழங்குச் செய்கை, முகாமைத்துவம், விதை உருளைக்கிழங்கு உற்பத்தி, இயைவளர்ப்பு, பூங்கனியியல், ஸ்ரோரிச் செய்கை, பாதுகாப்பு விவசாயம், நோய் - பீடை முகாமைத்துவம், மேல் நாட்டு மரக்கறிச் செய்கை, வீட்டுத் தோட்டம் மற்றும் மண் பாதுகாப்பு ஆகியன தொடர்பில் 277 பல்கலைக்கழக மாணவர்கள், 322 விவசாயக் கற்கைநெறி மாணவர்கள், 457 பாடசாலை மாணவர்கள், விவசாயத்துடன் தொடர்புடைய 670 அலுவலர்கள், மற்றும் 150 விவசாயிகள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

## 2014 ற்கான திட்டம்

### பயிராக்கவியல்

- விளைச்சல் மற்றும் இசைவாக்கம் ஆகியவற்றுக்காக வர்த்தக உருளைக் கிழங்கு வர்க்கங்களின் மதிப்பீடு.

- உருளைக்கிழங்கு முன் அடிப்படை விதைகளில் முளை கொள்ளல் மீது பல்வேறு இரசானப் பதார்த்தங்களின் தாக்கம் தொடர்பான மதிப்பீடு.
- விதை உருளைக்கிழங்கு விளைச்சல், விருத்தி மற்றும் முளைத்தலில் Go விதை உருளைக்கிழங்கு சிறிய முகிழ்ங்களின் நிறையின் தாக்கத்தை மதிப்பிடல்.

### தாவர இனவிருத்தி

- உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட 4 உருளைக்கிழங்கு வம்சாவழிகளை நுவரெலிய மற்றும் பதுளை மாவட்டங்களில் NCVT மற்றும் VAT நிகழ்ச்சிகளின் கீழ் மதிப்பிடல்.
- உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட 5 உருளைக்கிழங்கு வம்சாவழிகளை சீதாஎலிய, பண்டாரவளை ஆராய்ச்சி நிலையம், மற்றும் அரச விதை உருளைக்கிழங்குப் பண்ணைகள் ஆகிய வற்றில் NCVT நிகழ்ச்சிகளின் கீழ் மதிப்பிடல்.
- பண்டாரவளை, கல்பிட்டி மற்றும் திருநெல்வேலி ஆராய்ச்சி நிலையம் ஆகிய இடங்களில் வெப்பத்தைத் தாங்கி வளரக்கூடிய வர்க்கங்களை இனங்காணப் பதற்காக உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட 32 உருளைக்கிழங்கு வம்சாவழிகளின் மதிப்பீடு.
- உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட 12 உருளைக்கிழங்கு வம்சாவழிகளை AMYT நிகழ்ச்சிகளின் கீழ் மதிப்பிடல்.
- விருப்புடைய இயல்புகள் மற்றும் பெற்றோர் வம்சாவழிகள் ஆகியவற்றைத் தெரிவு செய்வதற்காக CIP மூலவுயிருருக்களின் மதிப்பீடு.
- உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட 35 உருளைக்கிழங்கு வம்சாவழிகளை OYT நிகழ்ச்சிகளின் கீழ் மதிப்பிடல்.
- இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு வர்க்கங்களில் சில தெரிவு செய்யப்பட்டு அவை இலங்கை நிலமைகளின் கீழ் எவ்வாறான அடைவுகளைக் கொண்டுள்ளன என்பது பற்றி அறிவதற்கான கற்கை.
- தற்போதுள்ள கிறனோலா சூழல் குடித்தொகைகளை வயல் நிலமைகளில் மதிப்பிடல்
- லங்கா போல் முள்ளங்கி வர்த்தகத்தில் இனவிருத்தியாளர் விதை உற்பத்தி
- பீற்றூட் விதை உற்பத்திக்குரிய தொழில் நுட்ப மேம்பாடு

### இழையவளர்ப்பு

- ஆய்வுகூட தாவரங்களை வன்மையாக்கு வதற்கு கொரியன் தொழில் நுட்பத்தின் இசைவாக்கம்.
- தூண்டப்பட்ட விகாரங்களின் மூலம் மலர்ப் பயிர்களில் புதிய வர்க்கங்களின் விருத்தி.
- பேரிக்காயில் வேர் தோன்றச் செய்தல் மற்றும் சூழல் நிலமைகளுக்கு வழக்கப்படுத்தல்.
- உருளைக்கிழங்கில் நுண் முகிழ உற்பத்தித் தொழில் நுட்பத்தின் மேம்பாடு.

### பூச்சியியல்

- நுவரெலியாவில் உள்ள அரச விதை உருளைக்கிழங்குப் பண்ணைகளில் PCN குடித்தொகைகளில் மதிப்பீடு.
- கருவெட்டுப் புழுவின் உயிரியல் கட்டுப்பாடு.
- Liromyza huidobrensis இற்குரிய பரசிரொய்ட் Diglyphusiseae பெரிய அளவிலான வளரப்பு.

- வயல்கள் மற்றும் சேமிப்பு இடங்கள் ஆகியவற்றில் உருளைக்கிழங்கு முகிழ அந்து (PTM) முகாமைத்துவத்திற்குரிய பெரோமோனை அடிப்படையாகக் கொண்ட தொழில் நுட்பத்தின் வினைத்திறன் பற்றிய கற்கை.
- சேமிப்பின் போது உருளைக்கிழங்கு முகிழ் அந்தினைக் (PTM) கட்டுப்படுத்துவதற்கு பிரிமிபொஸ் மீதைல் 2% துகளின் மதிப்பீடு.
- உருளைக்கிழங்கில் உறுஞ்சும் வகைப் பீடைகளுக்கு எதிராக புதிய பீடை நாசினி ஒன்றை மதிப்பிடல்.
- கோவா மயிர்க் கொட்டிச் சிக்கலுக்கு எதிராக புதிய பீடை நாசினிகளின் மதிப்பீடு.

**நோயியல்**

- உருளைக்கிழங்கு பிற்கூற்று வெளிறலுக்கு எதிரான பங்கசு நாசினி தேர்வு.
- பிற்கூற்று வெளிறலுக்கு எதிராக புதிய இனவிருத்தி வம்சாவழிகள் மற்றும் புதிய வர்த்தக உருளைக்கிழங்கு வர்க்கங்களின் தேர்வு.
- உருளைக்கிழங்கில் நுண் பொருக்கு நோய்க்கு எதிரான புதிய உருளைக்கிழங்கு வர்க்கங்களின் தேர்வு.
- நுவரெலியாவில் உள்ள அரச விதை உருளைக்கிழங்குப் பண்ணைகளில் பக்ரீரிய வாடல் நோயைக் கண்காணித்தல்.

**மண்விஞ்ஞானம்**

- நீரியல் வளர்ப்புத் தொகுதிக்குப் பொருத்தமான பல்வேறு போசணைச் சூத்திரங்களைப் பரிசோதித்தல்.
- கோல்ட்டன் ஸ்ரார் வர்க்க உருளைக்கிழங்கின் விளைச்சலில் பல்வேறு செறிவுகளையுடைய திரவப் போசணைச் கரைசல்களைப் பரிசோதித்தல்.
- பீற்றூட் கிழங்குச் செய்கைக்குரிய பல்வேறு பசளைச் சூத்திரங்களை பரிசோதித்தல்.
- உருளைக்கிழங்கு விளைச்சலில் பல்வேறு பசளைச் சூத்திரங்களை பரிசோதித்தல்.
- மண் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு.

**மரக்கறிகள்**

- வெளி நாடுகளில் இருந்து அறிமுகம் செய்யப்பட்ட கரட், லீக்ஸ், கோவா, பூகோவா போன்ற மரக்கறிப் பயிர்களின் இசைவாக்க மதிப்பீடு.
- பாதுகாக்கப்பட்ட பயிர்ச் செய்கை முறையில் குடை மிளகாய் ஐஸ்பேர்க் சலாது, பூக்கோவா, பச்சடிப் பூசணி, மற்றும் உருளைக்கிழங்குப் பயிர்களின் கற்கை.

**காளான்**

- காளான் செய்கைப் பிரிவின் நிர்மாணம் மற்றும் ஆய்வுகூட காளான் வித்தி உற்பத்தி.
- உயர் விளைச்சலைத் தரக்கூடிய காளான் வித்தி அடிப்படை மற்றும் மேம்படுத்தப்பட்ட வளர்ப்பூடகம் ஆகியவற்றின் விருத்தி.
- சிப்பிக் காளான் மற்றும் செற்றேக் காளான் போன்றவற்றில் புதிய வர்க்கங்களின் அறிமுகம்.

**பழங்கள்**

- சித்திரஸ், பேரிக்காய் மற்றும் பேரிக்காய் ஆகியவற்றில் வர்க்க மதிப்பீடு.

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பிரதிப் பணிப்பாளர் ஆராய்ச்சி | 01 |
| ஆராய்ச்சி அலுவலர் | 06 |
| நிர்வாக உத்தியோத்தர் | 01 |
| விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர் | 01 |
| நிகழ்ச்சி திட்ட உதவியாளர் | 01 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 06 |
| விவசாயப் போதனாசிரியர் | 01 |
| பொது முகாமைத்துவ உதவியாளர் | 04 |
| பண்ணை எழுவினைஞர் | 01 |
| சாரதி | 03 |
| ஆராய்ச்சி உப உதவியாளர் | 02 |
| வயல் இயந்திர (மண்) இயக்குநர் | 01 |
| நாற்று மேடை பராமரிப்பாளர் | 01 |
| காவலாளி | 06 |
| தொழிலாளி | 14 |
| தொழிலாளி (அமையம்) | 34 |
| **மொத்தம்** | **83** |

## 1.2.5 விவசாய ஆராய்ச்சி நிலையம் (யுசுளு)இ - தெலிஜ்ஜவில

விவசாய ஆராய்ச்சி நிலையம் - தெலிஜ்ஜவிலவானது HORDI கன்னொறுவையின் நிர்வாகத்தின் கீழ் செயற்படுகிறது. இது மரக்கறிப்பயிர், பழப்பயிர், கிழங்குப் பயிர், காளான் மற்றும் மலர்செய்கை என்பவற்றின் உற்பத்தித் திறனை அதிகரித்தல் தொடர்பான தொழில்நுட்ப விருத்தி மற்றும் பரம்பல் என்பவற்றில் பிரதான கவனம் செலுத்துகின்றது. குறிப்பாக இலங்கையின் தென் பிராந்தியத்தில் பயிர் உற்பத்தியில் நிலைபேற்றை உறுதி செய்வதற்காக நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தலும் விநியோகித்தலும், விரிவாக்க அலுவலர்கள் மற்றும் விவசாயிகளிற்கு பயிற்சி மற்றும் கல்வி என்பவற்றை வழங்குதல் போன்றவற்றில் மேலதிக கவனம் செலுத்தப்படுகிறது.

### பாதீடு

**அட்டவணை 1.2.5.1 வருடாந்தப் பாதீடு 2013 (ரூபா)**

| செலவுத்தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு வீதம் |
|---|---|---|---|
| மீண்டு வரும் செலவு | 5,754,600 | 5,488,554 | 95 |
| மூலதனச் செலவு | 1,755,640 | 1,068,842 | 61 |
| **கருத்திட்டம்** | | | |
| NARP வாழையில் பியூசாரியம் வாடலிற்கான ஆய்வுகூட விகாரிகள் | 479,910 | 472,004 | 98 |
| NARP (காளான்) நிகழ்ச்சி திட்டம் | 417,300 | 402,007 | 96 |
| KOPIA காளான் கருத்திட்டம் | 1,432,778 | 39,131 | 0 |
| இழைய வளர்ப்பு மூலமான முக்கிய பயிர்களின் தரமான நடுகைப் பொருள் உற்பத்தி ஊக்குவிப்பு | 1,500,000 | 1,493,847 | 99 |
| கலப்பின மரக்கறிப் பயிர் விருத்திக் கருத்திட்டம் | 375,000 | 332,000 | 89 |
| **மொத்தம்** | **11,715,228** | **9,296,385** | **79** |

## முன்னேற்றம்

### ஆராய்ச்சி

#### பிறப்புரிமையியலும் தாவர இனவிருத்தியும்

**பயற்றை**

- அம்பாறை மாவட்டத்தில் இருந்து ஆறு மரக்கறிக் கௌபி குலவகைகள் சேகரிக்கப்பட்டன.
- விக்னா செஸ்குயுபெடலிஸ் (Vigna sesquopedalis) (பயற்றை) இன் ஓர் சிபார்சு செய்யப்பட்ட வர்க்கத்துடன் வம்சாவழிகள் NCVT இன் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டன.
- பொருத்தமான பயற்றை / மரக்கறிக் கௌபி வம்சாவழிகளை அடையாளம் காணப்பதற்காக மூலவுயிருருத் தெரிவுக்குட்படுத்தப்பட்டதுடன் ஆறு குலவகைகள் மேலதிக மதிப்பீட்டிற்காத் தெரிவு செய்யப்பட்டன.

**கத்தரி**

- NCVT யின் கீழ் இரண்டு வர்க்கங்களுடன் மூன்று வம்சாவழிகள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்து ஆறு கத்தரி குலவகைகள் சேகரிக்கப்பட்டன.

**மிளகாய்**

தென் மாகாணத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட நாற்பது பாரம்பரிய மிளகாய் குலவகைகள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் ஐந்து சிறப்பான வம்சாவழிகள் மேலதிக மதிப்பீட்டிற்காகத் தெரிவு செய்யப்பட்டன.

**வற்றாளை**

வற்றாளைக் வம்சாவழியின் இசைவாக்கமானது நில்வள பிராந்தியத்தின் இரண்டு விவசாயிகளின் வயல்களில் பரீட்சிக்கப்பட்டதுடன் சிறந்தது தெரிவு செய்யப்பட்டது.

#### பூங்கனியியல்

**வாழை**

பயிர் உற்பத்தி திறனின் அதிகரிப்பிற்காக ஆண்டுப் பயிர்ச் செய்கை முறைமையின் கீழ் வாழைக்கான பொட்டாசியத்தின் கிடைப்பனவு மற்றும் அதன் முக்கியத்துவம் என்பன அளவிடப்பட்டன.

#### நோயியல் மற்றும் நுண்ணுயிரியல் உயிர்த் தொழில்நுட்பம்

**காளான்**

- புளுரோட்டஸ் (Pluerotus) காளானின் வளர்ச்சி மற்றும் விளைவு என்பவற்றில் கரி, சீமைக்கிழுவை மற்றும் வேப்பமிலைத் தூள் என்பவற்றின் தாக்கம் இனங்காணப்பட்டது.
- புளுரோட்டஸ் காளானின் புரதம், கொழுப்பு, கனிப்பொருள் மற்றும் உலர் பொருள் என்பன ஆரம்பகட்டப் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

**இழைய வளர்ப்பு**

**வாழையின் பணாமா வாடலிற்கான Fusarium oxysporium fsp cubense (FOC) எதிர்ப்பு / சகிப்புத் தன்மைக்கான ஆய்வுகூட விகாரங்கள் (NARP)**

- 4mg / l BAP மற்றும் 2mg / l IAA என்பவற்றுடனான மாற்றியமைக்கப்பட்ட முரசிகே மற்றும் ஸ்கூக் (MS) ஊடகத்தில் அரும்புகளின் உள்ளகப் பெருக்கம் மேற்கொள்ளப்பட்டது.
- அக்ரா வாழை பேதத்தின் அரும்பு முனைகளின் வளர்ப்பிற்கு விகாரத்தை ஏற்படுத்தும் இரசாயன விகாரியான எதைல்

மெதேன் சல்பேற் (EMS) இல் பொருத்தமான அளவைக் கண்டறிவதற்கு மூன்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

- (CLMs) ஐ உருவாக்குவதற்காக துரித பெருக்கமுடைய பிரிஇழையமானது மாற்றி யமைக்கப்பட்ட (MS) ஊடகம் + 22.3 mg / l BAP + 0.17mg /l IAA + 3% சுக்குரோசு + 3% ஜெல்றைட் 10mg /l அப்சோபிக்கமிலம் என்பவற்றில் தூண்டப்பட்டது.

## கருத்திட்டங்கள்

### இழைய வளர்ப்புத் தொழில்நுட்பத்தினூடாக பிரதான பயிர்களின் தரமான நடுகைப் பொருள் விருத்தி

- இழைய வளர்ப்பை அடிப்படையாகக் கொண்ட நடுகைப் பொருட்களின் உற்பத்தியானது இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன், தற்போது சிபார்சு செய்யப்பட்ட எல்லா வாழை வர்க்கங்களினதும் அய்வுகூட வளர்ப்பானது பெருக்கப்பட்டவண்ணமுள்ளன.
- மொறிசியஸ் (Mauritius) அன்னாசி வர்க்கத்தின் ஆய்வுகூடப் பெருக்கமானது ஆரம்பிக்கப்பட்டது.
- தெரிவு செய்யப்பட்ட மலர்ப் பயிர்களான ஒக்கிட், கைசேபிலா இனம், மற்றும் செவ்வந்தி (கிரிசாந்தியமம்) என்பவற்றில் நடுகைப் பொருள் உற்பத்தியானது மேற்கொள்ளப்பட்டது.
- இழைய வளர்ப்பு மூலம் உருவாக்கப்பட்ட தாவரங்களை பராமரிப்பதற்காக 46m$^2$ பரப்பளவுடைய முழுமையாக பாதுகாக்கப் பட்ட பொலித்தீன் கூடாரம் நிர்மாணிக்கப் பட்டது.
- இழைய வளர்ப்புத் தாவரங்களை வலிமைப்படுத்துவதற்காக 14m$^2$ பரப்பளவு டைய தாவர பெருக்கக் கூடாரம் நிர்மாணிப்பட்டது.
- அந்தூரியத்தின் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக 54m$^2$ அளவுடைய நிழல் இல்லம் ஒன்று திருத்தியமைக்கப் பட்டது.
- அந்தூரியப் பயிர்ச் செய்கைக்காக நிழல் இல்லங்களின் வசதியமைப்புகள் விருத்தி செய்யப்பட்டன.
- இழைய வளர்ப்பு ஆய்வுகூடத்தின் வசதிகள் விருத்தி செய்யப்பட்டன.

### கலப்பினப் பிறப்பாக்க மரக்கறி வர்க்கங்களின் விருத்தி

பாகல் (150g) மற்றும் கெக்கரி (250g) என்பவற்றின் பெற்றோர்த் தாவரங்களின் விதைகள் முதலாவது போகத்தில் உற்பத்தி செய்யப்பட்டதுடன் இரண்டாம் போகத்திற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### NARP காளான்

சிப்பிக் காளான் (Oyster) வளர்ப்பிற்காக செலவுத் திறன் கொண்ட கூட்டுக் கலவை இனங்காணப்பட்டது.

### KOPIA முதலீட்டுக் காளான் கருத்திட்டம்

இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட சிப்பிக் காளானின் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைளை நடைமுறைப்படுத்துவதற்கான தந்திரோபாயங்கள் வரையப்பட்டன.

### மரக்கறி விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் (OPV)

மரக்கறி விதை உற்பத்தி (OPV) அண்ணளவாக 0.5 கெக்டர்

#### ஏனைய நடவடிக்கைகள்

- பரப்பளவு 1.5 ஏக்கரைக் கொண்ட ஆய்வுக்கான வயலின் ஆரம்பகட்ட அபிவிருத்திப் பணிகள் தொடங்கப்பட்டன.

- மரக்கறிக்கான செய்துக் காட்டல் துண்டம் அமைக்கப்பட்டது.

- மாத்தறை, காலி, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி மற்றும் கம்பகா மாவட்டங்களில் உள்ள 1000 பங்கேற்பாளர்களுக்கான காளான் பயிற்சி நிகழ்ச்சிகள் 15 மேற்கொள்ளப் பட்டன.

- சிறிய அளவிலான இழைய வளர்ப்பு ஆய்வு கூடங்களை அமைப்பதற்கான பயிற்சி மூன்று பேருக்கு வழங்கப்பட்டதுடன் ஓர் ஆய்வு கூடம் வாழையின் இழைய வளர்ப்பிற்காக ஏலவே அமைக்கப்பட்டுள்ளது.

- ஐந்து வாழைப் பயிர் செய்கைப் பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் மூன்று அன்னாசிப் பயிர்ச் யெ்கைப் பயிற்சி நிகழ்ச்சிகள் என்பன முறையே 100 மற்றும் 25 பயனாளிகளிற்காக நடாத்தப்பட்டன.

- ஓர் காளான் பயிர்ச் செய்கை அலகு கட்டப்பட்டுள்ளது.

- மூலிகைத் தாவரத் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

- நடுகைப் பொருள் மற்றும் கூட்டெரு உற்பத்தி

  அன்னாசி - 5840

  வாழை - 3500

  கூட்டெரு – 8 தொன்

  காளான் வித்தி - 185 பைகள்

  வாழை ஆய்வுகூட வளர்ப்புகள் - 35

### பங்குபற்றிய மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள்

சார்க் நாடுகளில் உற்பத்தித் திறன் மற்றும் பண்ணை வருமானம் என்பவற்றை உயர்த்துவதற்காக “பல்லினப் பயிர்ச் செய்கைப் புதுமையை பிரபல்யப்படுத்தல்” என்ற தொனிப் பொருளில் விவசாயத் திணைக்களம் மற்றும் சார்க் நிலையம் என்பவற்றால் PGRC கன்னொறுவைவில் மாநாடு நிகழ்த்தப்பட்டது.

## 2014ம் ஆண்டிற்கான திட்டம்

### தாவர இனவிருத்தி

- மரக்கறிக் கௌபியின் விளைவு மற்றும் ஏனைய பயிராக்கவியல் இயல்புகளிற்கான குலவகைகளின் மதிப்பீடு

- மரக்கறிக் கௌபி மற்றும் பயற்றை என்பவற்றின் மூலவுயிருருக்களின் வருடம்பூரான உற்பத்திக்கான விளைவு மதிப்பீடு

- தாழ் நாட்டில் கத்தரியின் மூலவுயிருருச் சேகரிப்பு, இயல்பறிதல், முகாமைத்துவம், மதிப்பீடு மற்றும் தெரிவு

- தாழ்நாட்டில் உள்ளூர் பாரம்பரிய மரக்கறிகளின் மூலவுயிருருச் சேகரிப்பு இயல்பறிதல், மதிப்பீடு மற்றும் தெரிவு

- நெமற்றோட்டுத் தாக்கத்தைச் சகிக்கின்ற உயர் விளைவு தரும் இன்னல வர்க்கத்தின் மூலவுயிருருச் சேகரிப்பு, இயல்பறிதல், மதிப்பீடு மற்றும் தெரிவு

- நில்வள பிராந்தியத்தின் நான்கு இடங்களில் வற்றாளையின் உவர் தன்மைக்கான தாங்குதிறன் பற்றிய வற்றாளை வம்சாவழிகளின் இசைவாக்கப் பரிசோதனை

### பூங்கனியியல்

- பயிர் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான வருடாந்தப் பயிரிடுதல் முறையின் கீழான வாழைச் செய்கையில் பொட்டாசியம் தொடர்ச்சியாகக் கிடைக்கும் தன்மை மற்றும் முகாமைத்துவம் (HORDI இன் கூட்டிணைவு)

- அன்னாசி வெண்மூட்டுப் பூச்சியின் ஒருங்கிணைந்த முகாமைத்துவம்

### நோயியல் மற்றும் நுண்ணுயிரியல் உயிர்த் தொழில்நுட்பம்

- சில தெரிவு செய்யப்பட்ட குடைக் காளான்களின் போசணை உள்ளடக்கம் மற்றும் ஒட்சியேற்ற நிரோதிகளின் இயல்புகள் என்பவற்றை இனங்காணல்
- காளான் சார் உற்பத்திகளின் அபிவிருத்தி
- முறையே பக்ரீயாவாடல், மிளகாய் இலைச்சுருள் சிக்கல் மற்றும் பிரதான நோய் பூச்சித் தாக்கம் என்பவற்றிகாக கத்தரி, மிளகாய் மற்றும் இன்னல என்பவற்றின் மூலவுயிருருக்களின் மதிப்பீடு

## உயிர்த் தொழில்நுட்பம் மற்றும் இழைய வளர்ப்பு

### பியூசாரியம் வாடல் எதிர்ப்பு / சகிப்புக்கான வாழையின் ஆய்வுகூட வளர்ப்பு விகாரிகள்

- அங்குர நுனிகளின் பெருக்கம், அங்குர நுனி வளர்ப்பின் கதிர் வீச்சு
- கதிர் வீச்சுக்கு உட்பட்ட அங்குர நுனிகளின் உள்ளக வளர்ப்புப் பெருக்கம்
- CLM ஐப் பயன்படுத்தி தோல் வளர்ப்பின் உருவாக்கம்
- முளையக் கரைசல் வளர்ப்பு (ECS) உருவாக்கம்

### இழைய வளர்ப்புத் தொழில்நுட்பத்தின் மூலமான முக்கிய பயிர்களின் தரமான நடுகைப் பொருள் விருத்தி

- வாழை, அன்னாசி மற்றும் சில தெரிவு செய்யப்பட்ட மலரியல் பயிர்களின் குறைந்த செலவுடைய நுண் இனப்பெருக்கத்திற்கான செயல் ஒழுங்கு களை இனங்காணல்
- மூன்று விருப்பத்திற்குரிய இயல்புகளிற்காக தருவிக்கப்பட்ட மற்றும் உள்ளூர் சித்திரஸ் தாவரங்களை மதிப்பீடு செய்தல்
- பழப்பயிர்களிற்கு புத்துயிர் அளித்தல் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம்
- பாடாசலைச் சிறுவர்கள் மற்றும் விவசாயிகளிற்கான விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்
- தனியார் ஆய்வு கூடங்களிற்கு தொடக்க நடுகைப் பொருட்களாக வாழை மற்றும் ஒக்கிட் என்பவற்றின் ஆய்வுகூட வளர்ப்புகளை விநியோகித்தல்
- இழைய வளர்ப்பு வசதிகளை விருத்தி செய்தல்
- நடுகைப் பொருட்கள் மற்றும் கூட்டெரு உற்பத்தி

  அன்னாசி - 5000

  வாழை - 3500

  கூட்டெரு - 8 தொன்

  காளான் வித்தி 300 பைகள்

### ஏனையவை

- KOPIA காளான் கருத்திட்டம்
- ஒரு கெக்டர் வரையிலான மரக்கறி விதை உற்பத்தி (OPV)

பூரணமான ஆய்வுக்கள அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசன வசதிகளின் முன்னேற்றம்

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 02 |
| விவசாய உத்தியோகத்தர் | 01 |
| நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | 03 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 02 |
| விவசாயப் போதனாசிரியர் | 06 |
| ஆராய்ச்சி உப உதவியாளர் | 01 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 02 |
| பண்ணை எழுதுவினைஞர் | 02 |
| அலுவலக உதவியாளர் | 01 |
| களஞ்சியக் காரர் | 01 |
| சாரதி | 02 |
| காவலாளி | 05 |
| தொழிலாளி | 05 |
| சுகாதாரத் தொழிலாளி | 01 |
| ஒப்பந்தத் தொழிலாளர் | 31 |
| **மொத்தம்** | **67** |

## 1.2.6 விவசாய ஆராய்ச்சி நிலையம் (யுசூஞ) – கிராந்துருக்கோட்டை

விவசாய ஆராய்ச்சி நிலையம், கிராந்துருக் கோட்டடையானது 1980ம் ஆண்டு இலங்கையின் மகாவலி அதிகாரசபையால் நிறுவப்பட்டது. இந்நிலையமானது 1984ம் ஆண்டு விவசாயத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டதுடன் விவசாயத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளிற்குப் பொறுப்பாக விளங்குகிறது. மேலும் இந்நிலையமானது விவசாயச் சூழலியல் வலயம் IL 2 இற்குரிய மகாவலி வலயம் 'C' இல் விவசாய சமூகத்தினரின் வயல் சார்ந்து எழுகின்ற பயிர் உற்பத்தி சம்பந்தமான பிரச்சினைகளிற்கு தீர்வு வழங்குகின்ற பொறுப்புக்கும் உரியதாகக் காணப்படுகின்றது. இந்நிலையமானது 2000ம் ஆண்டு வரை FCRDI இன் நிர்வாகத்தின்கீழ் செயற்பட்டதுடன் அதன் பின்னர் HORDI கன்னொறுவையுடன் இணைக்கப்பட்டது.

இந்நிலையமானது மரக்கறி, பழங்கள், மற்றும் கிழங்குகள் என்பவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் கருத்தூன்றுகிறது. ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளிற்கு மேலதிகமாக மகாவலி 'C' வலயத்தில் உள்ள விவசாய சமூகத்தினருக்கு விவசாயிகள், அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள் போன்றோரிற்கும் பிற நிறுவனங்களின் நபர்களிற்கும் ஒழுங்குப்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்சிகளினூடாக சேவை புரிகிறது.

### பாதீடு

வெவ்வேறு தலைப்பு / வாக்குக்களின் கீழும் கருத்திட்டங்களின் கீழும் 2013ம் ஆண்டு காலப்பகுதியில் பெறப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் ஏற்பட்ட செலவுகள் என்பன அட்டவணையில் தரப்படுகின்றன.

**அட்டவணை 1.2.6.1 வருடாந்தப் பாதீடு –2013 (ரூபாய்)**

| செலவுத்தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு வீதம் |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 2,165,000 | 674,945 | 31 |
| மீண்டுவரும் செலவு | 4,996,525 | 4,987,005 | 100 |
| மரக்கறி உயர் கலப்பு விதை உற்பத்தி | 350,000 | 349,259 | 100 |
| எலுமிச்சை மதிப்பிட்டு நிகழ்ச்சி திட்டம் (NARP கருத்திட்டம்) | 100,000 | 97,962 | 98 |
| பாரம்பரிய மரக்கறி விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் | 220,000 | 207,465 | 94 |
| பழ உற்பத்திக் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 400,000 | 386,429 | 97 |
| NCVT வாழை (NARP கருத்திட்டம்) | 50,000 | 50,000 | 100 |
| விவசாயிகள் நம்பிக்கை நிதியம் (விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்) | 680,000 | 611,380 | 90 |
| **மொத்தம்** | **8,961,525** | **7,364,495** | **82** |

## முன்னேற்றம்

### ஆராய்ச்சி

#### பழங்கள்

- உள்ளூர் மற்றும் அறிமுகம் செய்யப்பட்ட தோடை வர்க்கங்களின் வர்க்க மதிப்பீட்டின் தொடர்ச்சி

#### வர்க்கங்கள்

- உள்ளூர் - 07 வர்க்கங்கள் (அரோஜியா, பிபில சுவீட், MKD, ரகங்கல தெரிவு, HOCR 23, HOCR 25, HOCR 29)
- அறிமுகம் செய்யப்பட்டது. - 08 வர்க்கங்கள் ஜப்பானிலிருந்து (NCN, MYG, OTA, NAN, OUT, YSD, SRD, KYM)
- வாழையின் NCVT பரிசோதனை; வர்க்கங்களின் எண்ணிக்கை - 07 (HOSE 21, PGRC 2, PGRC 1, பரகும் HOSE 13, HCK143, MKS)
- தர்ப்பூசணிமற்றும் பப்பாசி என்பவற்றின் தருவிக்கப்பட்ட வர்க்கங்களின் மதிப்பீடு
- மேலதிக ஆராய்ச்சி நடவடிக்கைகளிற்காக 4 கெக்டர் பரப்பளவு கலப்புப் பழப்பயிர்த் தோட்டம் அமைக்கப்பட்டது

#### மரக்கறிகள்

- பின்வரும் மரக்கறி பயிர்களிற்கு NCVT பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

**அட்டவணை 1.2.6.2 மரக்கறி பயிர்களில் மேற்கொள்ளப்பட்ட NCVT**

| பயிர்கள் | பெரும்போகம் 2012 / 13 | சிறுபோகம் 2013 |
|---|---|---|
| கத்தரி | 05 வர்க்கங்கள் | 06 வர்க்கங்கள் |
| பயற்றை | 07 வர்க்கங்கள் | 05 வர்க்கங்கள் |
| கறிமிளகாய் | 05 வர்க்கங்கள் | - |
| தக்காளி | 06 வர்க்கங்கள் | - |
| சிறகவரை | - | 04 வர்க்கங்கள் |

- SAARC பூசணி வர்க்கங்களின் மதிப்பீடு - 2013 சிறுபோகத்தில் நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.
- 2013 சிறுபோகத்தில் 16 வர்க்களிற்கான ஆரம்ப விளைச்சல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

#### நெல் (NCRVT)

- பெரும்போகம் 2012 / 13 மற்றும் சிறுபேகம் 2013 காலபோகங்களில் 2 1/2 மாதம், 3 மாதம், 3 1/2 மாதம், 4 மாதம், மற்றும் 4 1/2 மாதம் வயதுக்கூட்ட நெற்களில் NCRVT மேற்கொள்ளப்பட்டது.

#### மறுவயற்பயிர்கள் / கிழங்குப் பயிர்கள்

- மறுவயற்பயிர் மற்றும் கிழங்குப் பயிர்களிற்கான NCVT மேற்கொள்ளப் பட்டது. 2012 / 2013 பெரும்போகத்தில் ஆறு பரிசோதனைகளும் 2013 சிறுபோகத்தில் ஆறு பரிசோதனைகளும் வற்றாளைக்காக மேற்கொள்ளப்பட்டன.

### விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்

#### இனவிருத்தியாளர் விதை உற்பத்தி ~ கத்தரி

- அமந்தா பெண் பெற்றோர் தாவரங்கள் 0.04 கெக்டரில் 2013 இல் பயிரிடப்பட்டதுடன் 13 கி.கி இனவிருத்தியாளர் விதை உற்பத்தி செய்யப்பட்டது.

### விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்

2012 / 2013 பெரும்போக காலப்பகுதியில் 18291 கி.கி Bg360, 4275கி.கி சுவந்தல், 1990 கி.கி பச்சைப் பெருமாள் நெல் சேமிப்பிற்காக உற்பத்தி செய்யப்பட்டன.

- 2013 சிறுபோகத்தில் AT 306, 1956 கி.கி விதை நெல்லாக அரிசி பிஸ்கட் உற்பத்தி நிகழ்ச்சியின் கீழ் உற்பத்தி செய்யப்பட்டது.

#### சோயாவின் (Pb1) பதிவு செய்யப்பட்ட விதை உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம்

- 1409 கி.கி சோயா விதை(Pb1) 2012 / 2013 பெரும்போக காலப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டது.

## நடுகைப் பொருட்கள் உற்பத்தி

**அட்டவணை 1.2.6.3 : 2013 ம் ஆண்டு காலப்பகுதியில் நடுகைப் பொருள் உற்பத்தி**

| பயிர் | வர்க்கங்கள் | உற்பத்தி |
|---|---|---|
| வாழை | கதலி கந்துல மற்றும் ஏனையவை | 95 குட்டிகள் |
| மரவள்ளி | கிரிக்காவடி மற்றும் யாழ்ப்பாணத் தெரிவு | 110 மீற்றர் தண்டு |
| வற்றாளை | கன்னொறுவை வெள்ளை ரணபீம அமா மற்றும் தவள | 17 கி.கி தண்டுத் துண்டங்கள் |
| பப்பாசி | ரத்னா | 228 பொதியிடப்பட்ட தாவரங்கள் |
| அம்பரல்லா | | 13 தாவரங்கள் |

## தொழில்நுட்பப் பரம்பல்

பல விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் இந்நிலையத்தினால் 2013ம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. குறித்த ஆண்டு காலப்பகுதியில் 328 இற்கும் மேற்பட்ட பாடசாலைச் சிறுவர்கள், மற்றும் விவசாயிகள் அரச அலுவலர்கள் போன்றோர் இந்நிலையத்திற்கு வருகை தந்ததுடன் தகவல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுள்ளனர்.

## 2014ம் ஆண்டிற்கான திட்டம்

- தெரிவு செய்யப்பட்ட மரக்கறிப் பயிர்களின் NCVTபரிசோதனை
- நெல்லிற்கான NCVT பரிசோதனை
- நெல்லிற்கான ஆரம்ப விளைவுப் பரிசோதனை (PYT)
- தெரிவு செய்யப்பட்ட கிழங்குப் பயிர் மற்றும் மறுவயற்பயிர்களிற்கானNCVT
- கிழங்குப் பயிர்கள், பழப்பயிர்கள், மரக்கறிப் பயிர்கள், மற்றும் மறுவயற்பயிர்கள் என்பவற்றின் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் உற்பத்தி
- வாழைக்கான NCVT பரிசோதனை
- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட களைநாசினி தெரிவுப் பரிசோதனை
- தருவிக்கப்பட்ட தோடைப் பயிர்களின் இனப்பெருக்கம்
- விருப்பத்திற்குரிய இயல்புகளிற்காக தருவிக்கப்பட்ட மா வின் மூலவுயிருரு மதிப்பீடு

குறை பயன்பாட்டுப் பழத் தோட்டத்தின் புனரமைப்பு

- கத்தரியின் இனவிருத்தியாளர் விதை உற்பத்தி
- உள்ளூரில் தெரிவு செய்யப்பட்ட சுண்டங்கத்தரி பேதங்களின் சேகரிப்பு பண்பறிதல் மற்றும் மதிப்பீடு.
- கறிமிளகாயின் (லங்கா மஞ்சள் வக்ஸ்) தூய்மையாக்கல்.
- சிவப்பு வெண்டி மற்றும் மகாவலிப் பயிற்றை ஆகிய பாரம்பரிய மரக்கறிப் பயிர்களின் விதைகளின் கிடைக்கும் தன்மையை அதிகரித்தல்.
- பசளி, சிறகவரை, பீர்க்கு போன்ற அயன்மகரந்தச் சேர்க்கைக்குரிய சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கங்களின் விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்.
- விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்.
- பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் விவசாயிகளிற்கான விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பிரதிப் பணிப்பாளர் | 01 |
| ஆராய்ச்சி அலுவலர் | 02 |
| விவசாயப் போதனாசிரியர் | 02 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 03 |
| தொழில்நுட்ப உதவியாளர் | 01 |
| ஆராய்ச்சி உப உதவியாளர் | 02 |
| முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| பண்ணை எழுதுவினைஞர் | 01 |
| உழவு இயந்திர இயக்குநர் | 02 |
| திருத்துநர் III | 01 |
| களஞ்சியகாரர் | 01 |
| தச்சன் | 01 |
| சுற்றுலா விடுதிக் காப்பாளர் | 01 |
| காவலாளி | 07 |
| சாரதி | 01 |
| தொழிலாளர் (தரம் III) | 22 |
| தொழிலாளர் (ஒப்பந்தம்) | 25 |
| **மொத்தம்** | **72** |

# 1.3 பழ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (FRDI), ஹொரண

நாட்டிலுள்ள பழப்பயிர்களின் தரம், உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் என்பவற்றை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான தொழிநுட்பங் களை விருத்தி செய்தலே பழ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் ஹொரானவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரமாகும். FRDI ஆனது தாழ்நாட்டு ஈரவலயப் பகுதிகளுக்கு (LCWZ) இசைவாக்கமடைந்த பயிர்களுக்கு விசேட கவனத்தை செலுத்தும் அதே வேளை இணை ஆராய்ச்சி நிலையங்கள், நிறுவனங்கள் அலகுகள், பண்ணைகள் என்பவற்றுக்குத் தலைமைத்துவமும் வழங்குகிறது. நடுகைப் பொருட்களின் உற்பத்தி, தாவரப் பெருக்க நுட்பங்கள், சேதன முறைப் பழப் பயிர்ச் செய்கை, தாவரப் போசணை, தாவரப் பாதுகாப்பியல் மேம்படுத்திய பயிர் முகாமைத்துவ நடவடிக்கைகள், உயர் விளைச்சலும் சிறந்த தரமும் உடைய பழப்பயிர் வர்க்கங்களின் விருத்தி போன்றவற்றில் தற்போதுள்ள ஆராய்ச்சி நிகழ்ச்சத் திட்டங்கள் பிரத்தியேகமாக கருத்தூன்றியுள்ளன. தாழ்நாட்டு ஈரவலய (LCWZ) நிபந்தனைகளுக்கு இசைவாக்கமடைந்துள்ள மரக்கறிகளின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கை களிலும், இப்பகுதி விவசாயிகளின் தேவைப்பாடு களைப் பூர்த்தி செய்வதற்கெனவும் இந்நிறுவனம் வேலையாற்றுகிறது

## பாதீடு

**அட்டவணை 1.3.1.: வருடாந்தப் பாதீடு 2013 (ரூபா)**

| செலவுத் தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு % |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 121,131,840 | 2,005,302 | 17 |
| மீண்டுவரும் செலவு | 22,434,450 | 14,990,899 | 67 |
| வாழையில் பொட்டாசிய முகாமைத்துவம் (NSF செயற்றிட்டம்) | 100,000 | 93,944 | 94 |
| பழப் பயிர்களினது உற்பத்தி திறன் மேம்பாட்டுக்காக பூத்தலை தூண்டுதல் | 1000,000 | 989,085 | 99 |
| பழக் கிராமங்களின் விருத்தி | 30,000,000 | 28,815,298 | 96 |
| கலப்பின் விதையுற்பத்தி - (வெண்டி) | 200,000 | 187,815 | 94 |
| வெவ்வேறு விவசாயக் காலநிலை வலயங்களில் வெளித்தெரியும் வாழை குலவகைகளின் மதிப்பீடு (NARP) | 100,000 | 88,966 | 89 |

| | | | |
|---|---|---|---|
| உயர் விளைச்சல், சிறந்த தரமுடைய சித்திரசு (இனிப்புதோடை மற்றும் மண்டரின்) வர்க்கங்களின் விருத்தி (NARP) | 15,55,200 | 1,401,738 | 90 |
| வர்த்தகச் செய்கைகளுக்கென வெளித் தெரியும் செயற்பாடுடைய தூரியன் வர்க்கங்களின் விருத்தி (NARP) | 270,000 | 267,363 | 99 |
| இலங்கையில் பெருமளவில் கொய்யா பயிரிடப்படும் இடங்களில் வேர் முடிச்சு நெமற்றோடு ( meloidogyne spp) வினது உயிரியல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான கற்கை (NARP) | 1,180,000 | 841,679 | 71 |
| தற்போதுள்ள மூலவுயிருருக்களைப் பயன்டுத்தி உயர் விளைச்சல் சிறந்த தரமுடைய மா வர்க்கங்களின் விருத்தி (NARP) | 889,800 | 737,883 | 83 |
| உயர் விளைச்சல், சிறந்த தரமுடைய பப்பாசி வர்க்கங்களின் விருத்தி (NARP) | | | |
| அன்னாசி உற்பத்தித்திறனை மேம்படுத்த ஒரு வினைத்திறன் மிக்க போசணை முகாமைத்துவ பொதியினை விருத்தி செய்தல் | 181,500 | 134,230 | 74 |
| பழமரங்களின் கத்தரித்தலும் புனருத்தாபனம் செய்தலும் | 3,000,000 | 25,55,344 | 85 |
| இழைய வளர்ப்புத் தொழிநுட்பத்தினூடு முக்கியமான பயிர்களின் தரமான நடுகைப் பொருட்களின் உற்பத்தி | 2,270,000 | 2,130,837 | 94 |
| **மொத்தம்** | **75,663,290** | **55,584,974** | **73** |

## முன்னேற்றம்

### பயிர் மேம்பாடு

**வேர்விடாத / நலிவாக வேர்விடுகின்ற பயிர்களுக்கான வினைத்திறனான பதிவைத்தல் நுட்பத்தினது விருத்தி**

சாத்திய வளமுள்ள பழப்பயிர்களுள் முள் அன்னமுன்னா (Annona muricata) மங்குஸ்தான் (Garcinia mangostana) ஸ்ரோபரி கொய்யா (Psidiam Catteianum) ஆகியன சாடிகளுள் வளர்ப்பதற்கு மிகவும் பொருத்தமானவை ஆகும். இந்நுட்பம் நகர்ப்புற பூங்கனியியலில் ஒரு புதிய திருப்பமாகவும் அமைந்துள்ளது.

ஆணிவேருடையதும் ஒட்டுதல் நுட்பத்தினால் அமைந்ததுமான தாவரங்களை விடவும் இடமாறிப் பிறந்த வேருடைய பதிவைத்தல் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட தாவரங்கள் சாடிகளில் வளர்ப்பதற்கு மிகவும் பொருத்தமானவையாக அமைகின்றன. எவ்வாறிருப்பினும் இப்பழமரங்கள் காற்றுப் பதிவைத்தலுக்கு சிறந்த துலங்களைக் காண்பிப்பதில்லை. இதனால் வேர் தோன்றல்

வினைத்திறனை அதிகரிக்கச் செய்யவென உள் நுழைக்கப்பட்ட வேர்ப் பகுதியுடன் கூடிய காற்று பதிவைத்தலானது நிறைவேற்றப்படுகின்றது பரீட்சிக்கப்பட்ட இம்மூன்று பயிர் வகைகளிலும் முள் அன்னமுன்னாவின் வேர் விடல் விருத்தியானது 42% வெற்றியளிப்புடனிருக் கையில் ஏனைய இரு பயிர்களும் எதுவித துலங்கலையும் காண்பிக்கவில்லை இந் நுட்பத்தினை மேலும் நிவர்த்தி செய்து கொண்டு இக்கற்கையானது மீளவும் மேற்கொள்ளப்படும்.

### விளைச்சல் மற்றும் தரப் பண்புகளுக்கென வெளித் தெரியும் செயற்பாடுடைய முள் அன்னமுன்னா (A. muricata ) வின் குலவகைகளை விவசாயிகளின் களத்தில் மதிப்பீடு செய்தல்.

மேலதிக மதிப்பீடுகளுக்கென தெரிவு செய்யப்பட்ட முள் அன்னமுன்னா மூதாதையரின் சந்ததி உயர் தரப் பழப் பண்புகளுக்கென விவசாயிகளின் இரண்டு களங்களில் தாபிக்கப்படடுள்ளன.

### கலப்பின பப்பாசியினது மதிப்பீடு.

### (கலப்பின விதையுற்பத்திச் செயற்றிட்டத்தினால் நிதியீட்டப்பட்டது)

முன்னதாகவே முதிர்ச்சியடைந்து விரைவான பெறுபேறுகளைத் தருவதனால் வர்த்தக பூங்கனியியலில் பப்பாசியானது முக்கியமான தொரு இடத்தினை வகிக்கின்றது. தற்போதைய நிலையில் பெரும்பாலான வர்த்தகப் பப்பாசிக் செய்கையானது வெளிநாட்டுக்குரிய (Exotic) கலப்பினங்களையே கொண்டுள்ளது. குறிப்பிடத்த க்களவான அந்நியச் செலாவணியைப் பயன்படுத்தியே மொத்த விதைத் தேவையும் இறக்குமதி செய்யப்படுகின்றது. பப்பாசியினது உள்ளூர் வர்க்கமொன்றினை மேம்டுத்துவதோ அல்லது கலப்பின பப்பாசியை உருவாக்குவதோ பல ஆண்டுகள் தேவையாயுள்ள ஒரு நிகழ்வாகும். இருப்பினும் பப்பாசியினது மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டமானது இக் காலத்தின் அவசியமுள்ள ஒரு தேவையாகும். FRDI இல் மேற்கொள்ளப்பட்ட இன விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பெறுபேறுகளாக வெளித்தெரியும் செயற்பாடுடைய உயர் விளைச்சல் (50 கிலோகிராம் / மரம் / வருடம் இலும் அதிகமான) உயர் தரமுடைய இரண்டு கலப்பின பப்பாசி வர்க்கங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இக்கலப்பினங்கள் இலங்கையின் ஆறு வெவ்வேறு விவசாயச் சூழலியல் வலயங்களில் மதிப்பிடப்பட்ட வண்ணமுள்ளன. தெரிவு செய்யப்படும் வர்க்கமானது 2014ம் ஆண்டில் வர்க்க விடுதலைக் கமிட்டியிடம் வர்க்க விடுதலைக்கெனவும் அதனைக் தொடந்த பயிர்ச்செய்கைக்குமெனவும் கையளிக்கப்படும்.

### பப்பாசி வர்க்கங்களினது விருத்தி

### NARP பப்பாசி செயற்றிட்டத்தினால் நிதியீட்டம் மேற்கொள்ளப்பட்டது

தற்போதுள்ள பப்பாசி வர்க்கங்களினை மாற்றீடு செய்வதற்குரிய பப்பாசி வர்க்கங்களின் தொடர்ச்சியான மேம்பாடு. சேகரிக்கப்பட்ட முன்னிலையான உள்ளூர் குலவகைகள் தற்போது மூன்றாவது சந்ததி வரையில் முன்னேறியுள்ளது இவற்றுள் எட்டு தனித்தனி மரங்கள் அடுத்த சந்ததி முன்னேற்றத்துக்கென தெரிவு செய்யப்பட்டுள்ளன.

### கொடித்தோடை வர்க்கத்தினது விருத்தி

### (கலப்பின விதையுற்பத்தி செயற்றிட்டத்தினால் நிதியீட்டம் செய்யப்பட்டது)

தொகுப்புக்குரிய / ஒன்று சேர்க்கப்பட்ட கொடித்தோடை வாக்கமொன்றினது விருத்தியானது விதை மூலமான கொடித்தோடை வர்க்கப் பரம்பலுக்கு மிகவும் பொருத்தமானதொரு முறையாகும். வர்த்தக ரீதியான கொடித்தோடை வர்க்கங்களில் வைரசுத் தொற்றலுக்குரிய இடர்பாட்டினை குறைத்து விருப்பத்துகுரிய பழப்பண்புகளை ஒன்று சேர்ப்பதில் இது உதவுகிறது. அதனால் FRDI யில் கொடித்தோடை விருத்தி நிகழ்ச்சித் திட்டமானது ஒன்று சேர்க்கப்பட்ட கொடித்தோடை வர்க்கத்தினது உற்பத்திக்கு அதிக

முயற்சியாண்மையுடன் செயற்படுகின்றது. 2013ம் ஒன்று சேர்க்கப்பட்ட வர்க்கத்தினது மூன்றாம் சந்ததிக்கான விதையுற்பத்தி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

நான்கு கிலோ கிராம் ஒன்று சேர்க்கப்பட்ட வர்க்க விதைகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் இவ் வர்க்கங்கள் வெவ்வேறு விவசாயத் காலநிலை வலயங்களில் மதிப்பிடப்பட்ட வண்ணமிருக்கின்றன.

### மா கலப்பின வர்க்கங்ளினது மதிப்பீடு

### (பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் ( HORDI) கன்னொறுவை ~ கலப்பின விதையுற்பத்தி செயற்றிட்டத்தின் நிதியீட்டம்)

தற்போதுள்ள வர்க்ககளுக்குள் விருப்பத்திற்குரிய தரப் பண்புகளை ஒன்று சேர்க்கும் நோக்குடன் மா கலப்பின விருத்தியானது 2007ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. கறுத்தக் கொழும்பான், வெள்ளைக் கொழும்பான், விலார்ட் மற்றும் நம்டோக்மை ஆகியவற்றை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட ஏழு கலப்பினங்கள் தற்போது திறந்த வெளிக் களங்களில் மதிப்பிடப்படுகின்றன. இந்நாற்றுக்களினது கலப்பின விருத்தித் தன்மை உறுதி செய்யப்பட வேண்டியுள்ளது அவ்வாறல்லாது விடின் இவை களங்களில் பல ஆண்டுகளுக்குப் பேணப்பட வேண்டியிருக்கும். அதனால் PGRC யுடன் இணைந்து கலப்பின விருத்தித் தன்மையை உறுதி செய்வதற்குரிய DNA பகுப்பாய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. DNA பிரித்தெடுப் பினுடைய ஆரம்ப நெறிமுறை (Protocol) பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

### தாவர ஒட்டுண்ணி நெமற்றோடுகளுக்கு எதிர்ப்புடைய / சகிப்புடைய கொய்யா வர்க்கத்தினது விருத்தி.

சந்ததி மேம்பாட்டு நிகழ்ச்சியில் பெறப்பட்ட நூற்றுப்பத்தொன்பது தனித்தனி கொய்யா மரங்கள் ஆறு துண்டங்களில் மதிப்பிடப்பட்டன. புறத்தோற்ற அவதானிப்பு மூலம் பத்து மரங்கள் தெரிவு செய்யப்பட்டன அவை காற்றுப் பதிவைத்தல் மூலம் பெருக்கப்பட்டு பெறுபேறுகளை உறுதி செய்து கொள்ளவென பூச்சியியல் பிரிவிடம் கையளிக்கப்படடுள்ளன.

### உன்னத இயல்புடைகளையுடைய தூரியன் வர்க்கங்களினது தெரிவு

24 சேகரிக்கப்பட்ட குலவகைகள், மூன்று அறிமுக வர்க்கங்கள், மூன்று HORDI க்குரிய உன்னதமான இயல்புகளுடைய வம்சாவழிகள் மற்றும் 36 நாற்று மரங்கள் உள்ளடங்கலாக 68 தூரியன குலவகைகள் சிபாரிசுக்கமைவான தூரியன் வர்க்கங்களுடன் ஒப்பிட்டு மதிப்பிடப்பட்டன. இக் குடித்தொகை யிலிருந்து 12 வெளித்தெரியும் செயற்பாடுடைய வர்க்கங்கள் 2012ம் ஆண்டு வர்க்க விடுவிப்புக் குழுவினரால் முன்மொழியப்பட்டவை ஆகும். இரண்டு வர்க்கங்கள் விடுவிக்கப்பட்டதுடன் மற்றைய இரு வர்க்கங்களும் நிபந்தனைகளுடன் விவசாயி களின் பயிர்செய்கைக்கென அனுமதிக்க ப்பட்டுள்ளது. சிபாரிசுக்கமைவான வர்க்கங்களின் ஒட்டுத் தாவரங்கள் பயிர்ச் செய்கைக்கு கிடைக்கக் கூடியவண்ணம் ஆக்கப்பட்டுள்ளன.

### தூரியன் முதலாம் சந்ததி ($F_1$) கலப்பினங்களின் விருந்தி

கள நிபந்தனைகளின் கீழ் எண்ணூறு தூரியன் கலப்பின தனியன்கள் மதிப்பிடப்பட்ட வண்ணமுள்ளன. இன்னும் 50 முதலாம் சந்ததி ($F_1$) கலப்பினங்களின் தனியன்கள் மதிப்பீடுகளுக் கென தாபிக்கப்படவுள்ளன. இனங்கலப்புக்குரிய பதார்த்தங்களைச் சேகரிப்பதற்கென பூத்தலை தூண்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. உன்னதமான இயல்புகளையுடைய வம்சாவழி களின் இனக்கலப்பு நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

### சித்திரசு இனங்களின் வர்க்க விருத்தி

சேகரிப்பு மற்றும் தேர்ந்தெடுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 14 ஹீன் நாரன் (Citus crenatifolia ) , 32 மண்டரின் ( Citrus reticulata ) எட்டு இனிப்புத் தோடை (Citrus sinensis) 16 பூமெல்லோ (Citrus maxima) ஏழு எலுமிச்சை

(citrus aurantifolia) ஆகியன மதிப்பட்டப்பட்ட வண்ணமுள்ளன. மூன்று உன்னத இயல்புகளுடைய மண்டரின் வர்க்கங்கள் எட்டு வித்தியாசமான விவசாய சூழலியல் வலயங்களில் மதிப்பிடப்பட்டு தெரிவு செய்யப்பட்டுள்ளன. உன்னத இயல்புகளுடைய ஒரு பூமெல்லோ சந்ததி தெரிவு செய்யப்பட்டது. இனிப்பு தோடையின் நான்கு சந்ததி ஒரு மண்டரின் மற்றும் மூன்று வர்க்கங்கள் களத்தில் தாபிக்கப்பட்டுள்ளன.

எட்டு வித்தியாசமான விவசாயச் சூழலியல் வலயங்களில் ஜப்பானிய அறிமுக வெளிநாட்டு வர்க்கங்களான இனிப்புத்தோடை மற்றும் மண்டரினின் எட்டு வர்க்கங்கள் மதிப்பீடு செய்யப்பட்ட வண்ணமுள்ளன. உன்னதமான இயல்புகளுடைய மூன்று வர்க்கங்கள் விவசாயிகளுக்குப் பயிர்ச் செய்கைக்கென விடுவிக்கப்பட முன்மொழியப்பட்டுள்ளன. விகாரத்தினூடான இனவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 2007ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது விகாரிகளுடைய பழத்தரம் தொடர்பான தரவுகள், வளர்ச்சி அளவு கோல்கள். (நஸ்நாரன் மற்றும் HOCR -24) என்பன சேகரிக்கப்பட்ட வண்ண முள்ளன. 50 கலப்பினங்கள் மதிப்பீடுகளுக்கென ஓட்டப்பட்டுள்ளன. கலப்பின விருத்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்ந்த வண்ணமுள்ளது.

### ஈரவலயத்தில் காணப்படுகின்ற மாவினது தற்போதுள்ள மூலவுயிரிருவிலிருந்து உயர் விளைச்சல், சிறந்த தரம் கொண்ட வர்க்கங்களினது விருத்தி (NARP இனால் நிதியீட்டம்)

2011ம் ஆண்டு FRDI இல் உன்னதமான இயல்புகளுடைய மா குலவகைகளினது சேகரிப்பும் தேர்ந்தெடுப்பும் ஆரம்பிக்கப்பட்டது விவசாயிகளிடமிருந்தும் ஏனைய அரச பண்ணைகளிலிருந்தும் சேகரிக்கப்பட்ட 79 வித்தியாசமான குலவகைகள் 2.5 ஏக்கர் விஸ்தீரணத்தில் மா பரம்பரையலடு கள வங்கியில் RCBD வடிவமைப்பில் தற்போது தாபிக்கப்பட்டுள்ளன. இச்சந்ததிகளானது, ஈரவலயத்தில் சிறந்த செயலற்றுகையை காண்பித்த மா வர்க்கங்கள், வெவ்வேறு செயற்றிட்டங்களினூடாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட மா வர்க்கங்கள் என்பவற்றிலிருந்து சேகரிக்கப்பட்டன. இவற்றின் வளர்ச்சிக்குரிய அளவுகோல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் பரம்பரையலகு வங்கியினது வரைபடமாக்கல் முன்னேற்றத்திலுள்ளது. முன்னதாக சேகரிக்கப் பட்ட சந்ததிகளில் இருந்து உன்னதமான இயல்புகளுடைய ஒரு குலவகை அடையாளம் காணப்பட்டுள்ளது. இச் சந்ததியானது 17 பிரிக்ஸ் (Brix) பெறுமானம், 450 கிராம் சராசரிப் பழநிறை, 4.3 எனும் சதை / விதை விகிதம் மற்றும் மத்திய நிலையான அந்திரக்னோசு எதிர்ப்பு என்பவற்றைக் கொண்டுள்ளது. வல்பிட்டவில் இன்னும ஐந்து குலவகைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட குலவகைகளின் பெருக்கமானது முன்னேற்றத்தில் உள்ளது.

### வாழையினது மூலவுயிருரு மதிப்பீடு

பின் கெசெல் (Bin) (குழு - 03) அம்பொன், கப்பல் (குழு - 02), சுவந்தல், பூவாலு, சீனிக் கெசெல் (குழு - 01) ஆகியவற்றினது தேசிய ஒருங்கிணைந்த வர்க்கச் சோதனை (NCVT) நடாத்தப்பட்ட வண்ணமுள்ளது. தொன்னூறு மற்றும் எழுபது சதவீதமான தாவரங்கள் முறையே முதலாம் மற்றும் இரண்டாம் அறுவடைகளை தந்துள்ளன. பரிசோதனையானது தொடர்ந்த வண்ணமுள்ளது.

### விளைச்சல் மற்றும் தரம் என்பவற்றுக்கென ஆனைக்கொய்யா குலவகைகளின் மதிப்பீடு

FRDI இல் தாபிக்கப்பட்ட 24 ஆனைக்கொய்யா குலவகைகளுடன் நான்கு உன்னதமான இயல்புகளுடைய குலவகைகள் அடையாளம் காணப்பட்டன. எனினும் அடையாளம் காணப்படாத நோயினால் பாதிக்கப்பட்ட தாவரங்கள் ஹோமகம PVIC இல் பரீட்சிக்கப்பட்டன. தாவரப் பரிசோதனைகள் நிறைவுற்றுள்ளன.

### குறை நுகர்ச்சியுடைய பழப்பயிர்களின் மூலவுயிருருச் சேகரிப்பு, பாதுகாப்பு பண்புப்படுத்தல் மற்றும் மதிப்பீடு.

இந்திகழ்ச்சித்திட்டம் 2002ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. வேறுபட்ட 200 வகையான பழப்பயிர்க் குலவகைகள் சந்ததிகள் பரப்பரை அலகு கள வங்கியின் 3.7 கெக்ரயர் விஸ்தீரணத்தில் தாபிக்கப்பட்டுள்ளன. இப்பரம்பரையலகு கள வங்கியானது வில்வம் (24) சித்திரசு (47) லாவுல் (05) லொவி (04) பலா (32) வெரலு (17) உக்குரஸ்ஸ (22) கொறுக்கா (33) கடுகுடா (13) தூரியன் (35) சப்போடில்லா (17) அன்னமுன்னா (14) ஜம்பு (26) ஸ்ரோபெரி கொய்யா (07) மற்றும் கொய்யா (07) ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. பண்புப்படுத்தல், மதிப்பீடு என்பன பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமான உன்னதமான வர்க்கங்களை அடையாளம் காணவென தொடர்ந்த வண்ணமுள்ளன. 2012ம் ஆண்டில் இப் பரம்பரையலகு கள வங்கிக்கு பலா (13) கடுகுடா (08) என்பன சேர்க்கப்பட்டன.

### சப்போடில்லா (Manilkara zapota) குலவகைகளின் மதிப்பீடு

2007ம் ஆண்டு 17 குலவகைகளை உள்ளடக்கியவாறு FRDI பண்ணையிலிருந்து சேகரிக்கப்பட்ட மூலப் பொருட்களுடன் இம்மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டது. இவ் வெல்லாச் சந்ததிகளிலும் பழப்பருமன் மற்றும் வடிவம், பழத்தின் தரம், விளைச்சல் வளர்ச்சி செயலாற்றல் என்பன மதிப்பிடப்பட்டன. மிக உன்னத சந்ததிகளான HoS-2 HoS -12 மற்றும் HoS -13 என்பன அலுவலக ரீதியான வெளியீட்டுக்கு முன்மொழியப்பட்டன. இவற்றுள் HoS-12 HoS -13 ஆகியன 2012ல் பயிர்ச்செய்கைக்கென விடுவிப்பு செய்யபட்டன.

### வெரலு (Eleaocripus serratus) வின் பூவின் உயிரியல், பூத்தல் பழமுண்டாதல் நடத்தை பற்றிய கற்கை.

FRDI ஹொரனவிலுள்ள பரம்பரையலகு கள வங்கியில் இக்கற்கை மேற்கொள்ளப்பட்டது. எட்டு வித்தியாசமான குலவகைகள் இக்கற்றைக்கென தெரிவு செய்யப்பட்டன. பூவானது முதிர்ந்த இலைக் கணுவில் இருந்து தோன்றியது. பருமன், வடிவம், நிறம் எண்ணிக்கை என வேறுபட்ட கூறுகளில் மாறுபாடு காணப்பட்டது. ஒரு சிறு பூவானது பூரண பூவாக அமைந்திருந்தது. வெளிச்சுற்றில் இளம் பச்சை நிறமான சுயாதீனமாக ஒழுங்குபடுத்தப்பட்ட 4/5 புல்லிகளும் இரண்டாம் சுற்றில் 4/5 சுயாதீனமாக ஒழுங்குபடுத்தப்பட்ட அல்லிகள் சோணையுடைய விளிம்புகளைக் கொண்டுள்ளன. மூன்றாம் சுற்றில் 25-30 எண்ணிக்கையுடாக வெளிறிய வெண்மைநிற ஆணகங்களைக் கொண்டது. ஒரு சூலகம் காணப்படுகிறது. வெரலு ஆண்டுக்கு இரு தடவை பூக்கும் அதாவது ஈர வலயத்தில் தை - தொடக்கம் பங்குனி வரையும் அதே போன்று ஆடி தொடக்கம் ஐப்பசி வரையும் பூக்கும். பூக்கும் போகத்தில் பூக்களானது மூன்று நிலைகளில் தோன்றும் பூத்தலிற்குரிய பழமுண்டாவதற்குரிய வெவ்வேறு நிலைகளுக்கு எடுக்கும் காலம் தொடர்பில் அவதானிப்பு பெறப்பட்டுள்ளது.

### உக்குரஸ்ஸ வினது கண்டறிதல் சேகரித்தல், பதுகாத்தல் மற்றும் பண்புப்படுத்தல்

FRDI இனது பரம்பரையலகு கள வங்கியில் இருபத்தியிரண்டு உக்குரஸ்ஸ குலவகைகள் சேகரிக்கப்பட்டு தாபிக்கப்பட்டுள்ளன. உயர் விளைச்சல் மற்றும் சிறந்த தர சந்ததிகளை அடையாளம் கண்டு தெரிவு செய்து சிபாரிசு செய்யவென பண்புபடுத்தலும் மதிப்பீடும் தொடர்ந்த வண்ணமுள்ளன. குலவகை இல 09 பழம் பிளக்கும் அறிகுறிகளை காட்டியது. அதற்கு போரோன் பிரயோகிக்கப்பட்டது. குலவகை இலக்கம்-07 இலைகளில் சிற்றுண்ணித் தாக்கத்தைக் காட்டியது. எவ்வாறாயினும் இச் குலவகை ஆண்டு பூராகவும் பழங்களைத் தரக்கூடிய சிறந்த தரமுடையதாக அமைந்துள்ளது.

## லாவுலவின் மதிப்பீடு

குறிப்பிடத்தக்களவு பாரம்பரிய மாறல்கள் இப்பயிரில் அமையப் பெற்றிருப்பினும் இதுவொரு குறை நுகர்ச்சியுடையதும் அதிகளவில் கையாளப்படாததுமான பழப்பயிர் என்பது வெளிப்படையாகும். இதன் காரணமாக 2004 ம் ஆண்டு SL / USA செயற்றிட்டத்தினூடு பழ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் லாவுலின் மூலவுயிருருச் சேகரிப்பு, மதிப்பீடு மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஐந்து லாவுல் குலவகைகள் சேகரிக்கப்பட்டு தாபிக்கப்பட்டுள்ளன. மதிப்பீட்டின் ஒரு வெளிப்பாடாக மூன்று உயர் விளைச்சலுடைய லாவுல் குலவகைகள் அடையாளம் காணப்பட்டன. மதிப்பிடப்பட்ட ஐந்து லாவுல் குலவகைகள் அடையாளம் காணப்பட்டன. மதிப்பிடப்பட்ட ஐந்து லாவுல் குலவகைகளுள் HOLav - 4 மற்றும் HOLav - 5 என்பன உயர் விளைச்சலைத் தரக்கூடியனவா யிருந்தன. HOLav - 1 குறைந்தளவு பழங்களை கொண்டிருப்பினும் உயர் விளைச்சலைத் தரக்கூடியதாயிருந்தது. HOLav - 1 ஆனது ஒப்பீட்டளவில் பெரியதும் நீண்டதுமான பழமாகும். இதனது விதைப் பாரம் குறைந்ததாகும். அத்துடன் HOLav - 4 மற்றும் HOLav - 5 ஆகியன நடுத்தர அளவுடைய பழங்களைத் தந்தன. மதிப்பீடானது தொடர்ந்தவண்ணமுள்ளது.

## தற்போதுள்ள மூலவுயிருருவில் இருந்து பலாவின் (Artocoropus heterophillus) உன்னத இயல்புடைய குலவகைகளைத் தெரிவு செய்தல்

FRDI, ஹொரனவில் சேகரிக்கப்பட்ட மூலப்பதார்த்தங்களைக் கொண்டு பரிசோதனை யானது ஆரம்பிக்கப்பட்டது. பரம்பரையலகு வங்கியானது நான்கு சிபாரிசுக்கமைவான வர்க்கங்கள் உள்ளடங்கலாக 36 வித்தியாசமான குலவகைகளை RCBD கட்டமைப்பில் 1.5 எக்கரயர் பரப்பளவில் உள்ளடக்கியள்ளது. வளர்ச்சி அளவுகோல்களின் மதிப்பீடு நிறைவுற்றுள்ளதுடன் பழத்தின் தரம் தொடர்பான மதிப்பீடுகள் நடைபெற்ற வள்ளமுள்ளன.

## செம்படக் (பலாவை ஒத்தது) வினது (Aotocerepus integer) பண்புப் படுத்தலும் மதிப்பீடும்

FRDI, கொரனவிலுள்ள பரம்பரையலகு கள வங்கியின் பலாவினது பிரிவில் ஒட்டு மேற்கொள்ளப்பட்ட செம்படக் மரங்கள் RCBD வடிவமைப்பில் 2003 ம் ஆண்டு தாபிக்கப்பட்து. எதிர்கால ஆராய்ச்சி நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்படவும் பாதுகாக்கப்படவுமென சர்வதேச தாவர பாரம்பரிய வளங்கள் நிறுவனத்தினது (IPGRI) பலாவுக்குரிய குறிகாட்டியினை பாவித்து பதிய மற்றும் இனப்பெருக்க அவத்தைகள் பண்புப்படுத்தப்பட்டன. இதன் பண்புகள் பெருமளவில் பலாவை ஒத்தது. எனினும் விதிவிலக்காக இலை, பழம், பழத்தின் தரம் என்பவற்றின் சில பண்புகள் வித்தியாசப்பட்டுக் காணப்படுகின்றன. முதிர்ந்த பழங்கள் கரையக்கூடிய மொத்தத் திண்மங்களின் (Brix) பெறுமானமும் நல்ல நறுமணமும் கொண்டன. ஏனைய காலநிலை வலயங்களில் இவற்றை மதிப்பிடவென ஒட்டுத் தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்ட வண்ணமுள்ளன.

## வெண்டியின் கலப்பின பெற்றோர் வம்சாவழி (OK - $H_1$) இனது பேணல்

பெற்றோர் வம்சாவழியான OK - H, $OK_2$ (பெண்), OK - is (ஆண்), ஆகியன பேணப்பட்டன. இரு பெற்றோர் வம்சாவழியான $OK_2$ (1150 கிராம்) மற்றும் OK - is (1750 கிராம்) ஆகியவற்றின் விதையுற்பத்தி செய்யப்பட்டு கன்னொறுவை விதை மற்றும் நடுகைப் பொருள் பிரிவிடம் கையளிக்கப்பட்டது.

## வரணிய பச்சை மிளகாய் வர்க்கத்தினது விதையுற்பத்தியும் தூய்மை பேணலும்

புறந்தள்ளப்பட்ட விலகல் வகை - வர்க்கம் தூய்மைப்படுத்தப்பட்டதுடன் வர்க்க இசைவாக்கச்

சோதனைகள் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் ஹொரன மற்றும் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் வல்பிட்ட ஆகிய நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டது. வர்க்க இசைவாக்கச் சோதனைகள் தொடர்கின்றன.

### வற்றாளைக்கான தேசிய ஒருங்கிணைந்த வர்க்கச் சோதனை

FRDI ஹொரன களத்தில் களப் பரீட்சிப்புக்கள் நடாத்தப்பட்டன. 2013 சிறு போகத்தில் தரவுச் சேகரிப்பு நடாத்தப்பட்டதுடன் NCVT பரிசோதனை நிறைவு செய்யப்பட்டுள்ளது. தரவுகள் கன்னொறுவை, பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

### பூசணிக்குரிய தேசிய ஒருங்கிணைந்த வர்க்கச் சோதனை

FRDI ஹொரன களத்தில் களப் பரீட்சிப்புக்கள் நடாத்தப்பட்டன. 2012 / 2013 பெரும் போகத்தில் தரவுச் சேகரிப்பு நடாத்தப்பட்டதுடன் NCVT பரிசோதனை நிறைவு செய்யப்பட்டுள்ளது. தரவுகள் கன்னொறுவை, பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

## பயிர்ப் பாதுகாப்பு

### பங்கசு நாசினிகள், சேதன மற்றும் இரசாயன சேர்வைகள் மூலம் கொய்யாவில் அந்திரக்னோசு நோயினுடைய கட்டுப்பாடு

கொய்யாவில் அந்திரக்னோசு நோயை கட்டுப்படுத்த வெவ்வேறு செறிவுகளையுடைய இரசாயனங்கள் பரீட்சிக்கப்பட்டன. அவற்றுள் அமோனியம் இரு காபனேற்றின் (10,000pp) பரிகரிப்பானது பாவிக்கப்பட்டவற்றுள் மிகச் சிறந்ததாக அமைந்திருந்தது. (ஏனைய இரசாயனங்களாக சோடியம் பென்சோவேற்று, சோடியம் மெற்றாபை சல்பைட்டு, அசற்றல்டிகைட்டு, பென்சல்டிகைட்டு, சினமல்டிகைட்டு என்பன அமைந்திருந்தன.)

### சேதன, அசேதன சேர்வைகளினால் பப்பாசியில் அச்திரக்னோசு நோயின் கட்டுப்பாடு

உள்ளக வளர்ப்புக்குரிய பரிசோதனைகளில் சோடியம் மெற்றாபைசல்பைட்டு (1500ppm) ஆனது மிகவும் வினைத்திறனுடையதாக அமைந்திருந்தது.

### சேதன, அசேதன சேர்வைகளினால் மாவில் அச்திரக்னோசு நோயின் கட்டுப்பாடு

வெவ்வேறு செறிவுடைய இரசாயனங்கள் பரிகரிக்கப்பட்டவற்றுள்“ சினமல்டிகைட்டு (5ppm) ஆனது (Colletrotrichum gleosporioids) இனால் ஏற்படுத்தப்படும் அந்திரக்னோசு நோய்க்கெதிராக சிறந்த பெறுபேறுகளக் காட்டியது.

ஏனைய இரசாயனங்களாக சோடியம் இருகாபனேற்று, பொற்றாசியம் சோபேற்று சோடியம் புரொப்பியோனேற்று மற்றும் வனிலீன் ஆகியன அமைந்திருந்தன)

### இலங்கையில் கொய்யாவில் வேர்முடிச்சு நெமற்றோடுவின் உயிரியலும் முகாமைத்துவமும்

கொய்யா (Psidium guajava) ஒரு அயனமண்டல பழமரமாக இருக்கின்ற அதேவேளையில் இது இலங்கையில் வர்த்தக ரீதியான ஒரு பழப்பயிராக மாற்றம் பெற்றுள்ளது. கொய்யாச் செய்கையில் வேர்முடிச்சு நெமற்றோடுவின் (Meloidogyne spp) தாக்கமானது பிரதான பிரச்சினையாக காணப்படுகிறது. இச் செயற்றிட்டமானது இந்நோய்க் காரணியினுடைய பரம்பல், தீவிரத்தன்மை, இனத்தை அடையாளம் காணல் அடையாளம் காணப்பட்ட இனங்களினது உயிரியல் மற்றும் தாவரத்தின் எதிர்ப்புத் தன்மையை உள்ளடக்கியவாறான முகாமைத்துவ நடவடிக்கைகள் என்பவற்றை கண்டறிய ஆரம்பிக்கப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் பாதிப்புக்கள் காணப்படுகின்ற பிரதேசங்களில் தீவிரத்தன்மை மற்றும் பரம்பல் என்பவற்றைக் காட்டும் வரைபடம்

ஒன்றை அமைப்பதற்கான களத் தரவுச் சேகரிப்பொன்று திட்டமிடப்பட்டுள்ளது. புத்தளம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட களத்தரவுச் சேகரிப்புக்கு அமைய (கல்பிட்டிய பகுதி) வர்த்தக ரீதியான கொய்யாச் செய்கை மேற்கொள்ளப்படும் எல்லாத் தோட்டங்களுமே வேர்முடிச்சு நெமற்றோடுவினால் பாதிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. நெமற்றோடுவின் தாக்கத்தினால் இறந்த தாவரங்களின் சதவீதமானது 5 - 22 வீதம் எனும் வீச்சுனுள் காணப்பட்டது. 100 கிராம் மண்ணில் 192 - 361 வரையான எண்ணிகையை ஜுவனைல் கணக்கெடுப்பு காட்டியது. வேர் மாதிரிகளும் வேர்முடிச்சு நெமற்றோடுவினால் உயர்ந்தளவில் பாதிக்கபட்டிருந்தமை FRDI இன் ஆராய்ச்சிக் களங்களில் ஜுவனைல் கணக்கெடுப்பானது சராசரியாக 4 -133 எனும் வீச்சுனுள் அமைந்து காணப்பட்டது. இந்நெமற்றோடுவினது உயிரியலைக் கற்கவென கொய்யாமரங்கள் செயற்கையாக தொற்றலடையச் செய்யப்பட்டன. செயற்றிட்டமானது தொடரப்படும்.

### கொய்யாவில் வேர்முடிச்சு நெமற்றோடுவுக்கு ஒட்டுக் கட்டையின் சகிப்புத் தன்மை தொடர்பான கற்கை

தெரிந்தெடுக்கப்பட்ட தனியன்களிலிருந்து காற்றுப்பதி மூலம் உற்பத்தி செய்யப்பட்ட கொய்யா மரங்கள் Meloidogyne spp மூலம் தொற்றுக்குள்ளாக்கப்பட்டன. பின் இவை வேர்முடிச்சுகளுக்கென 8 - 10 வாரங்களின் பின்பு மதிப்பீடு செய்யப்பட்டன. எல்லாத் தாவரங்களிலும் வேர்முடிச்சு மிக உயர்வாக காணப்பட்டதுடன் வேர்முடிச்சு நெமற்றோடுவினால் மிக இலகுவில் தாக்கமடையக் கூடியனவாகவும் காணப்பட்டது.

### ஒட்டுண்ணி வேர்முடிச்சு நெமற்றோடுவின் தாக்கத்திற்கெதிராக மண் சீராக்கிகளின் மதிப்பீடு

கிருமி நீக்கப்பட்ட மண் கொண்ட வளர்ப்புச் சாடிகளுக்கு வேறுபட்ட வீதத்தில் கோழியெரு, ஆட்டெரு, கருக்கிய உமி (ஒவ்வொன்றிலும் 1,2,3 மற்றும் 4 வீதம் நிறை / நிறை அடிப்படையில்) கலக்கப்பபட்டு கொய்யா நாற்றுக்கள் நடப்பட்டன. வேர் முடிச்சு நெமற்றோடுவினது வெளித்தோற்ற அறிகுறிகள் கோழியெரு மற்றும் ஆட்டெரு உயர் வீதத்தில் இடப்பட்ட (4 மற்றும் 5 வீதம்) தாவரங்களில் எதுவித பரிகரிப்புகளும் மேற்கொள்ளபடாத கட்டுப்பாட்டுப் பரிசோதனையுடன் ஒப்பிடுகையில் குறைந்தளவாக காணப்பட்டது. தொற்றுக்குள்ளாக்கப்பட்டு 5 மாதங்களின் பின் எல்லாத் தாவரங்களிலுமே வேர்முடிச்சு சுட்டி மிக உயர்வாக காணப்பட்டது.

### வாழைத் தண்டு / கிழங்கு நின்முஞ்சு வண்டுக்கெதிராக மணியுரு பூச்சி நாசினிகளின் மதிப்பீடு

பொறிகளில் சோதிக்கப்பட்ட மணியுருவான பூச்சிநாசினிகளுள் தயோக்கிலம் ஐதரசன் ஒக்சலேட் (எவிசெக்ட்) வேர்டகோ 40 டப்ளியு, ஜீ மற்றும் டயசினோன் 50 ஜீ, ஆர் என்பன வாழை நீள்முஞ்சு வண்டுக்கெதிராக வினைத்திறனாக காணப்பட்டன. காபோபியுரானிற்கு ஒரு மாற்றீடாக இவற்றை சிபாரிசு செய்வதற்கென இம்மதிப்பீடுகள் தொடரப்படும்

### கொறுக்காவில் வெண்மெழுகு செதிற் பூச்சிக்கெதிராக (Gascuardia brevicanda) சூழல் நேயமான இரசாயனங்களின் மதிப்பீடு

கொடித்தோடை மற்றும் கொறுக்காவில் வெண் மெழுகு செதிற் பூச்சி (Gascuardia brevicanda) ஒரு தீவிர பீடையாக காணப்படுகின்றது. நிறையுடலியானது ஒரு கடின மெழுகு உறையை தன்னைச் சூழ ஏற்படுத்திக் கொண்டு அதனுள் முட்டை, அணங்கு நிலைகள் காணப்படுவதனால் இதனை இரசாயனங்களை மாத்திரம் பயன்படுத்திக் கட்டுப்படுத்துவதென்பது மிகக் கடினமானதாகும். ஆகவே நிறையுடலியானது இரசாயனப் பிரயோகத்திற்கு முன்னர் பொறிமுறை ரீதியில் தாவரத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். சோதிக்கப்பட்ட இரசாயனங்களினுள் தயோமெதொக்சாம் 25 டப்ளியு ஜீ இன் 10 நாட்கள் இடைவெளியிலான இரு முறை பிரயோகம் செதிற் பூச்சிக்குடித்தொகையை

குறிப்பிட்டு கூறக்கூடியளவு குறைத்தது எனினும் இது மேலும் பரிசோதிக்கப்பட வேண்டும்.

## மண் போசணை முகாமைத்துவம்

### மங்குஸ்தீனில் கம்போஜ் மற்றும் சதையத்தில் குழைவு நோய்

கம்போஜ் மற்றும் சதையத்தில் குழைவு நோய் ஆகியன மங்குஸ்தீனில் பழத் தரம் பாதிப்படைகின்ற பிரச்சினைகளாகும். கம்போஜ் நோய் நிலையின் போது பழத்தின் உட்புறம் மற்றும் வெளிப்புறம் மஞ்சள் நிற பால் சுரப்பு ஏற்படுகின்றது. இப்பாலானது பழச் சதையின் பிரிவுகளுக்குள் ஊடுருவும் போது சிறந்த சுவையைத் தருகின்றது. ஆனால் சில வேளைகளில் சுதையத்தின் பிரிவுகள் நிறமாற்றமடைந்து குழைந்து கடினமடைந்து விடுகின்றன. இந்நிலைமைகளை கட்டுப்படுத்தவென பல்வேறு முறைகளில் கல்சியம் மற்றும் போரோன் பிரயோகித்து பரிசோதனைகள் தொடரப்பட்டன. இப்பரிசோதனைகளிலிருந்து 1 வீதம் கல்சியம் நைத்திரேற்று மற்றும் 0.2 வீதம் போரெக்ஸ் ஆகியவற்றை பூத்தலுடன் ஆரம்பித்து 3 தடவைகள் இலைகளுக்கு தெளிப்பதனாலும், டொலமைற்றினை மண்ணுக்குப் பிரயோகித்து மண் அமில காரத் தன்மையை (pH) 5.5 - 6.0 ஆகச் சரிசெய்வதன் மூலமும் இவ்விரு நோய்களினதும் தீவிரத் தன்மை குறிப்பிட்டுக் கூறக் கூடியளவு குறைந்தமை கண்டறியப்பட்டது.

### டிராகன் பழப் பயிருக்கான சேதனப் பசளை

சேதன முறையிலான உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வி மிக உயர்ந்த நிலையில் காணப்படுகிறது. எனினும் டிராகன் பழச் செய்கையில் பொருத்தமான பசளை முகாமைத்துவ முறைகள் எதுவும் இல்லை. மண்புழுக் கூட்டெரு, மண்புழு வடிதிரவம் என்பன உள்ளடங்கலாக வெவ்வேறு வகை சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி வினைத்திறனான ஒரு பசளை முறைமை விருத்தி செய்வதற்கான பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. முதலாம் வருடத்தில் கோழியெருவின் 20 தொன் / ஹெக்டயர் / வருடம் எனுமளவும் அதனைத் தொடர்ந்து வரும் வருடங்களில் 30 தொன் / ஹெக்டயர் / வருடம் எனுமளவும் ஏனைய சேதனப் பரிகரிப்புக்களை விட குறிப்பிட்டுக் கூறக்கூடியளவு உயர் விளைச்சலை பதிவு செய்தது. காய்த்தல், பழம் தோன்றுதல் பருவங்களும் இதே சேதனப் பரிகரிப்புடனேயே நடத்தப்பட்டது. மண்புழு வடி திரவத்தை ஏனைய பசளைகளுடன் சேர்த்து இடுவதனால் குறிப்பிட்டு கூறக்கூடியளவு எதுவிதமான விளைச்சல் அதிகரிப்பும் பெறப்படவில்லை

## பயிர் முகாமைத்துவம்

### வளர்ச்சி மற்றும் விளைச்சல் செயலாற்றுகைகளுக்காக மங்குஸ்தீனின் இரட்டை ஒட்டுக்கட்டை ஒட்டுதலினுடைய மதிப்பீடு

மங்குஸ்தீன் ஆனது (Garcinia mangostana) இலங்கையில் உயர் கேள்வி கொண்ட பழங்களுள் ஒன்றாகும். இது தாழ் மற்றும் இடை நாட்டினுடைய ஈரலிப்பான பிராந்தியங்களில் சில சிறியளவிலான தோட்டங்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதாக காணப்படுகிறது. இதனுடைய தப்பிப் பிழைத்தலுக்கு பிரத்தியேகமான சூழலியல் தேவைப்பாடுகள் அவசியமாயிருப்பதே இதற்குப் பிரதான காரணமாகும். அத்துடன் இணைந்ததாக இவ் விருப்பத்திற்குரிய பழமரத்தின் விரிவான பரம்பலுக்கு ஒரு முக்கிய தடைக்கல்லாக இதனது மிக மந்தமான வளர்ச்சி அமைகிறது. இது பிரதானமாக மந்தமான வளர்ச்சி வீதத்தினாலும் அதனுடனிணைந்த நெடிய பதிய வளர்ச்சிக் காலத்தை வழமையான ஆப்பொட்டு முறை மூலம் 3 - 4 ஆண்டுகளாக குறைக்க முடியுமாயிருப்பினும் விதான விருத்தி நலிவாக இருப்பதும் உற்பத்தித் திறன் குறைவாக காணப்படுதும் பிரதான இடர்பாடுகளாக அடையாளம் காணப்பட்டன.

எனவே, மந்தமான பதிய வளர்ச்சியை தடுக்கும் குறிக்கோளுடன் மங்குஸ்தீனின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்ய ஒட்டுதலுக்கு மேலதிகமான வேர்த்தொகுதியொன்றை வழங்கும் முயற்சி 2004ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் தாவரங்கள் நடப்பட்டு ஒன்பதாவது ஆண்டின் பின்னர், இரட்டை ஒட்டுக்கட்டை ஒட்டு மேற்கொள்ளப்பட்ட தாவரங்கள் உயர்ந்தளவு கிளை வளர்ச்சியுடன் அடர்த்தியாக அமைந்த விதானத்தை கொண்டிருந்ததடன் தனி வேர் ஒட்டுக்கட்டை ஒட்டு மேற்கொள்ளப்பட்ட தாவரங்கள் ஐதாக அமைந்த கிளைகளுடன் நலிவான விதானத்தை கொண்டதாகவும் காட்சி தந்தன. இவ்வொட்டுத் தாவரங்கள் 2013ல் தொடர்ந்து ஆறாவது ஆண்டாகவும் விளைச்சல் தந்தவண்ணமுள்ளன. சராசரியாக ஒட்டுக்கு 118 பழங்கள் தருகின்றன. இது கடந்த பழப் போகத்துடன் ஒப்பிடுகையில் சார்பளவில் உயர்வாகும்.

ஒட்டுதலுக்குப் பின்னரான செயலாற்றுகை மதிப்பிடுகையில், ஒட்டுக் கன்றுகள் சாய்ந்து செல்லும் போக்குடைய பதிய வளர்ச்சயைக் காணப்பித்தன. இது பொதுவாகவே ஒட்டுக் கன்றுகளில் வகைக்குரியதான பண்பாகும். மங்குஸ்தீன் மரம் மற்றும் கிளைகள் கிடையான கிளைவிடும் பண்பை இயல்பாகவே வெளிக்காட்டுகின்றன. ஒட்டுக்கிளையானது இவ்வகை கிடையான கிளைகளிலிருந்தே பெறப்பட்டன. விளைவாக ஒட்டுக் கன்றுகளும் கிடையான கிளை விடலை காண்பித்ததுடன் சாய்ந்து செல்லும் வளர்ச்சிப் போக்கையும் காண்பித்தன. இரட்டை ஒட்டுக் கட்டை ஒட்டு மேற்கொள்ளப்பட்ட தாவரங்களில் இவ்வகை கிடையான கிளை விடலை தடுக்கவென, முதல் 3 - 4 ஆண்டு கால ஆரம்ப வளர்ச்சிப் பருவத்தின் போது இரு தாங்கும் தடிகளை குறுக்காக பயன்படுத்தி ஆதாரம் வழங்கப்பட்டன. அதன் பின்னர் ஒட்டுத் தாவரங்கள் நிலைக்குத்தான வளர்ச்சிப் போக்கை காணப்பித்தன.

### இரட்டை வேர்த் தொகுதியுடைய விதை மூலம் பெருக்கப்படும் மங்குஸ்தீனில் வளர்ச்சி மற்றும் விளைச்சல்

மங்குஸ்தீனின் குறைவான பரம்பலுக்கு அதனுடைய மந்தமான பதிய வளர்ச்சியும் அதனுடன் இணைந்தவாறான 8 - 10 அண்டுகளைக் கொண்ட நீண்ட இளமைக் காலமும் காரணமாக அமைகின்றன. இப்பிரச்சினையை எதிர்கொண்டு அதன் மூலம் உற்பத்தித் திறனை மேம்படுத்தவென விதை மூலம் பெருக்கப்படும் மங்குஸ்தீன் தாவரங்களுக்கு மேலதிகமானதொரு வேர்த் தொகுதியை அறிமுகம் செய்யவென அணையொட்டு நுட்பம் முயற்சிக்கப்பட்டது.

இரண்டாவது பழம் தரும் போகத்தின் போது இரட்டை வேர்த் தொகுதியைக் கொண்ட தாவரங்கள் தனியே விதை மூலம் பெருக்கப்பட்ட தாவரங்களுடன் (கட்டுப்பாடு) வளர்ச்சி மற்றும் விளைச்சல் செயலாற்றுகைக்காக ஒப்பிட்டு மதிப்பீடு செய்யப்பட்டன. தனி வேர்த் தொகுதியைக் கொண்ட விதை மூலம் பெருக்கப்பட்ட மங்குஸ்தீன் தாவரங்களிலும் பார்க்க இரட்டை வேர்த் தொகுதியைக் கொண்ட தாவரங்கள் குறிப்பிட்டுக் கூறக்கூடியளவு அதிகரித்த விதான விருத்தி முதலான மற்றும் துணையான அரும்பு தோன்றுதலின் எண்ணிக்கையில் அதிகரிப்பு என்பவற்றைக் காட்டின.

இரட்டை வேர்த் தொகுதியைக் கொண்ட எல்லா (100%) தாவரங்களும் களத்தில் தாபிக்கப்பட்ட ஆறாவது ஆண்டில் முறையே இரண்டாவது தரம் கனிதருகையை வெளிப்படுத்தியுள்ளன. இவை கனிதரலின் இரண்டாம் வருடத்தின் போது சராசரியாக 56 பழங்களை உற்பத்தி செய்தன. இதனை தனி வேர்த் தொகுதியுடைய தாவரங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வயதுப் பருவத்தில் இவை பழங்கள் எதனையும் உருவாக்கியிருக்க வில்லை. இதிலிருந்து இத்தொழிநுட்பத்தினால் விரைவு படுத்தப்பட்ட விதான விருத்தி ஏறப்படுத்தப்பட்டு விரைவான கனிதரலும் அதற்கூடாக உற்பத்தித் திறன் மேம்பாடும் அடையப் பெற்றுள்ளது.

இத்தொழிநுட்மானது எங்கெல்லாம் விதை மூலம் பெருக்கப்படும் தாவரங்களின் தேவைப்பாடு உள்ளதோ அவ்வகையான இடங்களுக்கு இசைவாக்கப்படுத்தப்பட முடியும்.

### முள் அன்னாமுன்னா கிராமத்தினது தாபிப்பு

முள் அன்னமுன்னா போசணைப் பொருட்களை அதிகளவில் கொண்ட உயர் தரப் பழங்களுள் ஒன்றாகும். ஆனால் இவை பெரும்பாலும் வீட்டுத் தோட்டங்களிலேயே காணப்படுகின்றன. சிறிய மற்றும் நடுத்தர மட்ட பயிரிடல் மிக அரிதாகும். இப்பழச் செய்கையைப் பிரபல்யப்படுத்தும் நோக்கத்துடன் இரத்தினபுரியில் 4 கிராமங்களும் மாத்தறையில் 2 கிராமங்களும் இப்பயிருடன் தாபிக்கப்பட்டன.

### டிராகன் பழத்தில் (Hylorus undatus) கொடியின் வளர்ச்சி, விளைச்சல் மற்றும் பழத்தின் தரம் என்பவற்றின் மீது தண்டு வெட்டுத் துண்டத்தினது நீளம் மற்றும் ஒரு கம்பத்தில் பயிற்றுவிக்கப்படும் தண்டு வெட்டுத் துண்டங்களினது எண்ணிக்கை என்பவற்றினது தாக்கம்

வளர்ச்சி அளவுகோல்களுக்கான (தண்டின் வளர்ச்சி மற்றும் கிளைகளின் எண்ணிக்கை) புள்ளி விபரவியல் ரீதியல் முக்கியத்துவமுடைய பெறுபேறுகள் பெறப்பட்டன. தண்டு வெட்டுத்துண்ட நீளம் மற்றும் ஒரு கம்பத்துக்கான தண்டு வெட்டுத்துண்டங்களின் எண்ணிக்கை என்பவற்றை அதிகரிக்கும் போது முறையே தண்டு வெட்டுத் துண்ட வளர்ச்சி மற்றும் ஒரு கம்பத்துக்கான கிளைகளின் எண்ணிக்கை என்பன அதிகரித்தன. எனினும் எல்லாப் பரிகரிப்பின் போதும் குறைந்த எண்ணிக்கையான பழங்களே விளைவாக கிடைத்தன. உயர் பழ விளைச்சலாக 620 கிராம், 1.9 கிலோகிராம், 1.5 கிலோகிராம் மற்றும் 3.3 கிலோகிராம் என்பன முறையே 2010ம், 2011ம், 2012 மற்றும் 2013ம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டன. இது எந்தவொரு பரிகரிப்புமே குறிப்பிடத்தக்க விளைச்சலைத் தரவில்லையென சுட்டி நிற்கிறது. இதனால் இப்பரிசோதனை மேலும் தொடரப்படவில்லை

### புதிதாக சிபாரிசு செய்யப்பட்ட கொறுக்கா வர்க்கங்களுக்கான இசைவாக்கப் பரிசோதனைகள்

2012ம் ஆண்டில் மூன்று உன்னதமான கொறுக்கா குலவகைகள் (HOG - 03, HOG - 8 மற்றும் HOG - 11) தாழ் நாட்டு ஈர வலயத்திற்கென சிபாரிசு செய்யப்பட்ட இவற்றை மற்றைய இரு விவசாய சூழலியல் வலயங்களான $DL_{1a}$ (அங்குணகொலபெஸ்ஸ) மற்றும் $IL_{1c}$ (மொனராகலை) ஆகியவற்றில் பொருத்தபாட்டு சோதனைகளை நிகழ்த்தவென இக்கற்கை ஆரம்பிக்கப்பட்டது.

### றம்புட்டானின் வளர்ச்சி மற்றும் விளைச்சலில் கத்தரிதலின் உயரம் மற்றும் தாவர அடர்த்தியினது பாதிப்பு

36 மல்வானை விசேட வர்க்க மரங்கள் மூன்று வித்தியாசமான பயிரடர்த்தியிலும் (10மீ x 10மீ சிபாரிசு) 10 மீ x 7.5மீ , 10 மீ x 5மீ) மற்றும் இரு வேறுப்பட்ட கிளை விடும் உயரங்களிலும் [(90 செ.மீ சிபாரிசு)] 300 செ.மீ நடப்பட்டன.

வளர்ச்சிப் பண்புகள், இலையின் பண்புகள், பூவின் பண்புகள் மற்றும் சில பழப்பண்புகள் பதிவு செய்யப்பட்டன. இதுவரையில் தாவர உயரம், விதானத்தின் பரவல் மற்றும் விளைச்சல் என்பவற்றில் குறிப்பிட்டுக் கூறக்கூடியளவில் எதுவிதமான மாற்றங்களுமில்லை. இக்கற்கையானது தொடரப்படுகின்றது.

### விவசாயிகளின் களத்தில் தற்போதுள்ள நாற்றுக்களில் இருந்து றம்புட்டான் வர்க்கங்களின் தெரிவு

பழத் தரப் பண்புகளினடிப்படையில் எட்டு றம்புட்டான் குலவகைகள் தெரிவு செய்யப்பட்டு FRDI ஹொரனைவில் நடப்பட்டன. 2013ம் ஆண்டில் எல்லாச் சந்ததிகளும் விளைச்சல் தந்தன. அவற்றுள் சந்ததி இல 8,9 மற்றும் 10

ஆகியன 34 கிலோகிராம் பழங்கள் / மரம் இலும் அதிக விளைச்சலை தந்தன.

தரத்திற்குரிய பண்புகள் சந்ததி இல 08 மற்றும் மல்வான விசேடம் என்பவற்றுக்கிடையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. எனினும் எதுவிதமான குறிப்பிட்டுக்கூறக்கூடியளவு வித்தியாசங்களும் அவற்றுக்கிடையில் இருக்கவில்லை.

### ஹொரன FRDI விலுள்ள றம்புட்டான் குடித்தொகைகளின் பண்புப்படுத்தல்

ஹொரன FRDI யிலுள்ள றம்புட்டான் குடித்தொகையானது பொருத்தமான பண்புப்படுத்தலினுடாக உயர் விளைச்சல் சிறந்த தரமுடைய வர்க்கங்களின் விருத்திக்கென பயன்படுத்தப்பட முடியும். பழத்தினுடைய சில பண்புகளான பழத்தின் வடிவம், பழத்தோல்நிறம், சதையத்தின் நிறம், சதையத்தின் தடிப்பு, சதையத்தின் சுவை, சதையம் வித்திலிருந்து பிரிந்து வருகின்ற தன்மை, பழமேற்பரப்பிலுள்ள முட்களின் நீளம், முட்களின் அடர்த்தி மற்றும் முழுமையான பழத்தின் தரம் என்பன 56 தாவரங்களுக்குப் பதிவு செய்யப்பட்டன. இவ்வித்தியாசங்களை தெளிவாக அடையாளம் கண்டு கொள்ளவென றம்புட்டான் குலவகைகளினது நிழற்பட வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

### டிரகன் பழப் பயிரின் பூத்தல் மற்றும் கனிதரல் என்பபவற்றில் தாவர வளர்ச்சிச் சீராக்கிகளின் பாதிப்பு

டிராகன் பழப் பயிரின் பூத்தல், விளைச்சல் மற்றும் தரம் என்பவற்றில் தாவர வளர்ச்சிச் சீராக்கிகளின் பாதிப்பு சோதித்தறியப்பட்டது.

டிராகன் விளைச்சல் மற்றும் தரம் ஆகியன தாவர வளர்ச்சி சீராக்கிகளை பிரயோகிப்பதன் மூலம் மேம்படுதப்பட முடியும். எனினும் உள்ளுர் நிபந்தனைகளின் கீழ் போதுமானளவு தாவர வளர்ச்சி சீராக்கிகள் தீர்மானிக்கப்படவில்லை இதனால் இக்கற்கையானது விளைச்சல் மற்றும் தரம் என்பவற்றை அதிகரிக்கக்கூடிய சில தாவர வளர்ச்சிச் சீராக்கிகளின் (PGR) சாத்திய வளத்தை சோதித்தறிய ஆரம்பிக்கப்பட்டது. வளர்ச்சி மற்றும் விளைச்சல் அளவுகோல்களில் எதுவித குறித்துக் கூறக்கூடிய வித்தியாசங்களும் இருக்கவில்லை.

## பழ விருத்திச் செயற்பாடுகள்

### நடுகைப் பொருட்களின் உற்பத்தி மற்றும் ஏனைய நடவடிக்கைகளின் மூலம் பெறப்பட்ட வருமானம்.

2013ம் ஆண்டில் இந்நிலையமானது றம்புட்டான், மா, தூரியன்,பலா, அவகாடோ, காமிரங்காய், சப்போடில்லா, காசினியா, எலுமிச்சை, மங்குஸ்தீன், ஜம்பு, லொவி, அன்னாமுன்னா, கொய்யா, இனிப்புத்தோடை, வில்வம், வெரலு, மண்டரின், கொடித் தோடை, ஸ்ரோபரி, ஆகிய தாவரங்களின் 23,650 அரும்பொட்டப்பட்ட கன்றுகள் 1808 கிளையொட்டப்பட்ட கன்றுகள், 3181 நாற்றுக்கள் என்பவற்றின் விற்பனை மூலமாக மொத்த இலாபமாக ரூபா 4,270, 020.00 இனையும் ஏனைய நடவடிக்கைளின் மூலம் ரூபா 2,507, 180.90 இனையும் பெற்றுக் கொண்டது

### இழைய வளர்ப்பினூடாக முக்கியமான பயிர்களினுடைய தரமான நடுகைப் பொருட்களின் மேம்பாடு எனும் செயற்றிட்டத்தினால் நிதியீட்டம் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

- **வாழையின் நுண்முறை இனப்பெருக்கம்**

வாழை மற்றும் அன்னாசி போன்ற பயிர்களின் தரமான நடுகைப் பொருளுற்பத்திக்கு உலக ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழிநுட்பமே இழையவளர்ப்பாகும். இதனாலேயே இந்நிலையத்தில் பழப்பயிர்களின் நுண்முறைப் பெருக்கம் தொடர்பான ஆராய்ச்சிகளை நடாத்தவும், தரமான நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்குமென இழைய வளர்ப்பு ஆய்வு கூடம் தாபிக்கப்பட்டது.

“இழைய வளர்ப்பு நுட்பத்தினூடு தெரிவு செய்யப்பட்ட பயிர்களினது தரமான நடுகைப் பொருட்கள் உற்பத்தி” எனும் செயற்றிட்டத்தின் கீழ் இழைய வளர்ப்பு ஆய்வு கூட வசதிகள் மேம்பாடு செய்யப்பட்டதுடன் வளர்ப்பு அறைக்கொள்ளளவானது 1500 இலிருந்து 4500 வளர்ப்புக்கள் எனுமளவுக்கு அதிகரிக்கப்பட்டது. இவ்வாண்டில் 7500க்கும் அதிகமான வாழைக் குட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டன. ஏறத்தாழ 1000 வாழைக் குட்டிகள் ஆராய்ச்சி நிலையம் மற்றும் விவசாயிகளின் களங்கள் என்பவற்றில் மதிப்பீடுகளுக்கென தாபிக்கப்பட்டன. முளைவகையில் எதுவிதமான மாறல்களும் அவதானிக்கப்படவில்லை எனவே அம்புல், சீனி, நேத்திரப்பழம் ஆகிய வர்க்கங்களின் நுண்முறைப் பெருக்கத்திற்கென பயன்படுத்தப் பட்ட ஆரம்ப நெறிமுறைகள் (protocol) இவ்வர்க்கங்களின் இனப்பெருக்கத்திற்கென வெற்றிகரமாக பயன்படுத்தப்பட முடியும். 30,000 இற்கும் மேற்பட்ட அன்னாசித் தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அவற்றுள் கிட்டத்தட்ட 3000 தாவரங்கள் மதிப்பீடுகளுக்கென ஆராய்ச்சிக் களங்களில் நடப்பட்டுள்ளன.

### மாவினது முளையக் காப்பு

மா செய்கையின்போது பழம் உதிரல் ஒரு பொதுவான பிரச்சினையாகும். இது மாவினது இனவிருத்திச் செயற்பாடுகளில் பல மட்டுப்படுத்தல்களை ஏற்படுத்துகின்றது. முளையக் காப்பு எனும் நுட்பமானது முதிராத முளையத்தினை போசணை ஊடகங்களில் தொற்றலற்ற நிலைமையிலும் கட்டுப்படுத்தப்பட்ட சுற்றாடல் நிபந்தனைகளின் கீழ் உள்ளக வளர்ப்புச் செய்ய பயன்படுகின்றது. கலப்பின முளையக் காப்பு எனும் நுட்பமானது உதிர்ந்த அல்லது அறுவடை செய்யப்பட்ட முதிராத பழங்களினது முளையத்தை காக்க உதவும் நுட்பமாகும். இதன் காரணமாக உள்ளூர் மா வர்க்கங்களின் முளையக் காப்பிற்கென ஆரம்ப நெறிமுறைகளை விருத்தி செய்வதற்கென ஒரு ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது, கிருமியழித்தல் செயன்முறை நிறைவுப்படுத்தப்பட்டுள்ளது. நிகழ்ச்சித் திட்டம் தொடரப்படும்.

### குறைவான பயன்பாடுடைய பழங்களி லிருந்து (சப்போட்டா, லாவுல் மற்றும் வெரளு) பெறுமதி சேர் உற்பத்திகளினது விருத்தி

மேற்குறிப்பிட்ட பழங்களினது பயன்பாட்டினை அதிகரித்தலை நோக்காகக் கொண்டு அவற்றிற்கென தற்போது கிடைக்கக்கூடிய சமையல் முறைமைகளைக் கையாண்டு பின்வரும் உற்பத்திகள் தயாரிக்கப்பட்டன. சப்போட்டாவிலிருந்து சட்னி, பழப்பாகு (Jam) பால் கலந்த பானம் (Milk shake) மற்றும் குறைதிண்ம உணவுப் பண்டம் (Source) என்பனவும் வெரளுவிலிருந்து சட்னியும் தயாரிக்கப்பட்டது. இவற்றைத் தயாரிக்கும் போது சீனி மற்றும் சித்திரிக் அமில மட்டங்களும் தேவைக்கேற்ப மாற்றியமைக்கப்பட்டன. முதிர்ந்த லாவுளுவை அரிசி மாவுடன் கலந்து ஒரு நொறுக்குத் தீனி (முறுக்கு) தயாரிக்கப்பட்டது. நன்கு முதிர்ந்த லாவுலுவிலிருந்து ஒரு நொறுக்குத் தீனி (உறைப்புத் தீனி) ரொட்டி, பிட்டு, வடை (மசாலா வடை மற்றும் உழுந்து வடை) தயாரிக்கப்பட்டன. பிட்டு, ரொட்டி மசாலா வடை தயாரிக்கும் போது துருவப்பட்ட லாவுலுக்கு அரிசிமாவானது 1 : 1 எனும் விகிதத்தில் கலக்கப்பட்டதுடன் உழுந்து வடை தயாரிக்கும் போது இவற்றுடன் உழுந்துமாவானது 2 : 1 : 1 எனும் விகிதத்திலும் கலக்கப்பட்டன.

### வீட்டுத் தோட்டமொன்றை விருத்தி செய்து பேணலும், பாடசாலை மாணவர்களுக்கும் விவசாயிகளுக்கும் வீட்டுத் தோட்டம் தொடர்பில் அறிவூட்டலும் பயிற்சியளித்தலும்

வீட்டுத் தோட்ட பயன்பாடுகளை பிரயோக ரீதியில் செய்து காட்டவும் பாடசாலை மாணவருக்கு இது தொடர்பில் அறிவூட்டவுமென FRDI ஹொரன வில் 2005ம் ஆண்டு ஒரு வீட்டுத் தோட்டம் தாபிக்கப்பட்டது. 2012ம் ஆண்டில் 2790 பாடசாலை மாணவர்கள், 234 ஆசிரியர்கள் மற்றும் 206 ஏனையவர்கள் இவ்வீட்டுத்

தோட்டத்திற்கு வருகை தந்திருந்ததுடன் வீட்டுத் தோட்டம் தொடர்பில் தமது அறிவினைப் பெருக்கிக் கொண்டனர்.

## பயிற்சி நிகழ்ச்சிகள்

### 2012ம் ஆண்டில் பின்வரும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

- 760 பாடசாலை மாணவர்கள் மற்றும் 16 ஆசிரியர்கள் 14 பாடசாலை களிலிருந்து இந்நிறுவனத்திற்கு வருகை தந்திருந்தனர்.
- 16 பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கான இரண்டு பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- 571 பயிலுனர்களுக்கு பழப்பயிர்ச் செய்கை, வீட்டுத் தோட்டம், இழைய வளர்ப்பு மற்றும் நாற்றுமேடைப் பிரிபாலனம் ஆகிய தலைப்புக்களில் பதினாறு பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

### பிரதான ஊடகம்

FRDI இன் அலுவலர்கள் பழப்பயிர்ச் செய்கை, நோய் பீடைக் கட்டுப்பாடு மற்றும் வீட்டுத் தோட்டம் ஆகிய தலைப்புக்களுடன் தொடர்புடையதான 03 தொலைக்காட்சி மற்றும் 04 வானொலி நிகழ்ச்சிகளில் பங்கு பற்றினார்கள்.

## 2014ம் ஆண்டுக்கான திட்டம்

### பயிர் மேம்பாடு

- பலா (Artocarpus heterophillus) வின் தற்போதிருக்கின்ற மூலவுயிருருவிலிருந்து உன்னதமான குலவகைகளைத் தெரிந்தெடுத்தல்.
- ஈரவலயத்தில் காணப்படுகின்ற மாவினது தற்போதிருக்கின்ற மூலவுயிருருவிலிருந்து உயர்ந்த தரம் மற்றும் உயர் விளைச்சலுடைய வர்க்கத்தினது விருத்தி (NARP இன் நிதியீட்டம்)
- வாழைக்கான தேசிய ஒருங்கிணைந்த வர்க்க இசைவாக்கச் சோதனை (NCVT)
- பயிர் வளர்ச்சிச் சீராக்கிகளின் மூலம் டிராகன் பழத்தில் போகமல்லாத காலங்களில் பூத்தலைத் தூண்டல் தொடர்பான கற்கை
- மில்லவ சுவந்தல் வாழை வர்க்கத்தில் தரம் மற்றும் வைத்திருக்கும் காலம் என்பவற்றில் அறுவடை செய்யப்படும் குலையின் வயதினுடைய பாதிப்பு.
- லாவுலுவின் பல்வேறு வகையான பதிய இனப்பெருக்க முறைகள் தொடர்பான கற்கை
- றம்புட்டானின் சேகரிப்பும் மதிப்பீடும்
- றம்புட்டானின் வளர்ச்சி மற்றும் விளைச்சலில் தாவர அடர்த்தி மற்றும் கத்தரித்தல் உயரத்தினது பாதிப்பு
- பூ மற்றும் பழம் உதிர்வதை தவிர்க்க இரசாயனங்களைப் பாவித்து றம்புட்டானின் உற்பத்தித் திறன் மேம்பாடு
- இரசாயனங்களை பாவித்து றம்புட்டானின் பழங்கள் முதிர்ச்சியடைவதைத் தாமதிக்கச் செய்தல்
- றம்புட்டானின் பழம் கிடைக்கும் தன்மையை குறித்துக் காட்டும் நாட்காட்டியினது விருத்தி
- சிறந்த குலவகைகளுக்கான FRDI யில் தற்போதிருக்கும் றம்புட்டான் குடித் தொகையின் பண்புபடுத்தல்
- புதிதாக சிபாரிசு செய்யப்பட்ட கொறுக்கா (Garcinia guesita) வர்க்கங்களினது இசைவாக்கப் பரிசோதனைகள்
- உன்னதமான இயல்புகளை உடைய உக்குரஸ்ஸ (Flocourtia indica) குலவகைகளின் தெரிவு

- எதிர்கால பாவனைகளுக்கென கொறுக்கா மற்றும் உக்குரஸ்ஸ குலவகைகளின் பேணுகை

- நாடு பூராகவும் மங்குஸ்தீன் கிடைப்புத் தன்மையை சுட்டிக்காட்டும் நாட்காட்டியின் விருத்தி

- கொய்யாவில் தவணை முறையிலமைந்த கத்தரித்தல் செயற்பாடு மூலம் கனிதரலை கையாளல்

- ஜம்பு வினுடைய (Syzygium samaranganse) பழ வளர்ச்சி மற்றும் விளைச்சல் அளவுகோல்களின் மீது ஜிப்பரலிக் அமிலம் ($GA_3$) இன் தாக்கம் தொடர்பான மதிப்பீடு

- முள் அன்னாமுன்னாவின் உயர் அடர்த்தியுடனான நடுகையும் அதனுடன் இணைந்தவாறான பொருத்தமான பயிற்றுவிப்புத் தொகுதிகளின் சாத்தியப்பாடு தொடர்பான கற்கை

- ஜம்புவிற்கு பொருத்தமான விதான முகாமைத்துவ தொகுதிகளின் விருத்தி

- இலந்தை (Ziziphus jujuba) க்கான இனப்பெருக்க நுட்பங்களின் விருத்தி

- வர்த்தக ரீதியான பயிர்ச் செய்கைக்கென உயர் விளைச்சலும் சிறந்த தரமும் உடைய தூரியன் வர்க்கங்களினது விருத்தி
    - உள்ளூர் சந்ததிகளின் சேகரிப்பு, மதிப்பீடு, தெரிவு மற்றும் பண்புப்படுத்தல்
    - வர்த்தக ரீதியான பயிர்ச் செய்கைகளுக்கான தூரியன் கலப்பின விருத்தி
    - கனிதரல் ஆற்றலை மேம்படுத்தவென தூரியன் பூத்தல் நடத்தை மற்றும் மகரந்தமணி வாழ்தகவு தொடர்பான கற்கை
    - தூரியனுக்கான செயற்கை மகரந்தச் சேர்க்கைகான தொழிநுட்ப விருத்தி

- உயர் விளைச்சல் மற்றும் நல்ல தரமுள்ள சித்திரசு வர்க்கங்களின் விருத்தி (மண்டரின், இனிப்புத் தோடை, பூமெல்லோ, எலுமிச்சை)
    - சித்திரசு உள்ளூர் சந்ததிகளினது சேகரிப்பு, மதிப்பீடு, தெரிவு மற்றும் பண்புப்படுத்தல் (மண்டரின், இனிப்புத் தோடை, பூமெல்லோ, எலுமிச்சை)
    - மண்டரின் மற்றும் இனிப்புத் தோடை கலப்பின வர்க்கங்களின் விருத்தி
    - தெரிவு செய்யப்பட்ட சித்தரசு சந்ததிகளின் உயர் விளைச்சல் மற்றும் நல்ல தரம் என்பவற்றுக்கான விகாரிகளின் விருத்தி (நஸ்நாரன், HOCR- 24)
    - அறிமுகம் செய்யப்பட்ட புதிய வெளிநாட்டுக்குரிய (Exotic) மண்டரின் மற்றும் இனிப்புத் தோடை வர்க்கங்களினுடைய மதிப்பீடு
    - இனிப்புத் தோடை மற்றும் மண்டரின் என்பவற்றுக்கு போகமல்லாத காலங்களில் பழ உற்பத்தி செய்யப்படக்கூடிய புதிய விவசாய காலநிலை வலயங்களின் அடையாளம் காணல்

- உயர் விளைச்சலும் நற்தரமுள்ளதுமான வில்வம் வர்க்கங்களின் விருத்தி
    - வில்வம் மூலவுயிருருவின் சேகரிப்பு, மதிப்பீடு மற்றும் தெரிவு
    - வில்வ மரத்தினது மலர் உயிரியல் மற்றும் பூத்தல் நடத்தை தொடர்பான கற்கை

## பயிர் முகாமைத்துவம்

- ஒட்டப்பட்ட தூரியன் மரங்களுக்கான முகாமைத்துவ பொதி விருத்தி

- போகமல்லாத காலங்களில் தூரியனில் மலருண்டாதலை செயற்கை முறையில் தூண்டல்

- றம்புட்டானுக்கு இலாபம் தரக்கூடிய வாறான பயிர் முகாமைத்துவ நடவடிக்கைகளின் விருத்தி
- கொறுக்கா மற்றும் உக்குரஸ்ஸ குலவகைககளை எதிர்காலப் பாவணைகளு க்கெனப் பேணுதல்
- புதிதாக சிபாரிசு செய்யப்பட்ட கொறுக்கா (Garcinia quaesita) வர்க்கங்களின் இசைவாக்கப்படுத்தல் சோதனைகள்
- டிரகன் கொடி வளர்ச்சி, விளைச்சல் மற்றும் தரம் என்பவற்றில் தண்டு வெட்டுத்துண்ட நீளம், மற்றும் ஒரு கம்பத்தில் பயிற்றுவிக்கப்படும் தண்டு வெட்டுத் துண்ட எண்ணிக்கை என்பவற்றின் பாதிப்பு
- வளர்ச்சி மற்றும் விளைச்சல் செயலாற்றுகைகளுக்காக இரட்டை ஒட்டுக் கட்டை ஒட்டு மேற்கொள்ளப்பட்ட தாவரங்களின் மதிப்பீடு
- நாற்றுக்களில் இருந்து உற்பத்தியாக்கப்படும் முள் அன்னமுன்னாவினது விளைச்சலில் மரத்தின் பயிற்றுவிப்பினது தாக்கம்
- கொடித் தோடையில் வித்தியாசமான பயிற்றுவித்தல் தொகுதிகளின் மதிப்பீடு
- பிராந்தியத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ள மா வர்க்கங்களின் பூவுண்டாதலை தூண்ட பக்லோபியுட்டசோல் (Paclobutazole) இன் பாவனை
- வெரளு வித்து முளைத்தல் தொடர்பான கற்கை

### மண் விஞ்ஞானமும் தாவரப் போசணையும்

- வாழை பயிரிடப்படும் மண்ணில் பொற்றாசியத்தின் கிடைப்புத் தன்மை தொடர்பான மதிப்பீடும் வருடாந்த வாழைப் பயிர்ச் செய்கைத் தொகுதிகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்தவென பொற்றாசியத்தின் முகாமைத்துவமும் (ஒருங்கிணைக்கப்பட்டது)
- அன்னாசியினது உற்பத்தித் திறனை மேம்படுத்தவென வினைத்திறனான போசணை முகாமைத்துவப் பொதியொன்றின் விருத்தி (ஒருங்கிணைக்கப்பட்டது)
- வாழையில் அறுவடைக்குப் பின்னாரான பொற்றாசியம் மற்றும் கல்சியம் என்பவற்றின் பிரிகரிப்பு.
- கொடித் தோடைக்கு வித்தியாசமான பசளை உற்பத்திகளின் களப் பரீட்சிப்பு.

### தாவர நோயியல்

- உயிரியல் மற்றும் இரசாயன முறைமைகளினூடாக பெருஞ்சேதம் விளைவிக்கும் வேர் நோய்களினது முகாமைத்துவம்
- பப்பாசியில் அந்திரக்னோசு அடையாளம் காணலும் வேறு பிரித்தறிதலும்
- இரசாயனமல்லாத முறைமைகளைப் பயன்படுத்தி கொய்யாவில் மென்னழுகல் மற்றும் பழ அடி அழுகல் என்பவற்றின் கட்டுப்பாடு

### பூச்சியியல்

- இலங்கையில் கொய்யா பெருமளவில் செய்கை பண்ணப்படும் பிரதேசங்களில் வேர் முடிச்சு நெமற்றோடு (Meloidogyn spp) வின் உயிரியல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான கற்கை (NARP நிதியீட்ட செயற்றிட்டம்)
- வாழை தண்டு கிழங்கு நீள் மூஞ்சுவண்டுகளுக்கெதிராக மணியுருவான பூச்சி நாசினிகளின் பாவனை
- பூச்சி நாசினிகளைப் பயன்படுத்தி வெண் மெழுகு செதிற் பூச்சி (Gascadia brevicauda) இனது கட்டுப்பாடு

- வித்தியாசமான பொறிவகைகளைப் பயன்படுத்தி பழப்பயிர்களில் பழ ஈக்களினை கண்காணித்தல்
- பழப்பயிர்களில் வெண்மூட்டுப் பூச்சிக்கெதிரான (Pseudo cocus spp) தாவரப் பிரித்தெடுப்புகளின் களமட்ட மதிப்பீடு
- பழப்பயிர்களில் தண்டு துளைப்பானின் முகாமைத்துவம் (றம்புட்டான், தூரியன், மா, பலா)
- பழப்பயிர்களில் வெண் மெழுகு செதிற் பூச்சிக்கெதிரான இயற்கை எதிரிகளை அடையாளம் காணல்
- சூரிய சக்தி ஒளிப்பொறிகளைப் பயன்படுத்தி பீடைக் கண்காணிப்பு
- HORDI யுடன் ஒன்றிணைத்து நாடு தழுவிய பழ ஈ முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம்
- பலாப்பழம் துளைப்பானின் தேடியறிதல்

## இழைய வளர்ப்பு

- மாவினது முளையக் காப்பு
- நுண்முறையில் பெருக்கப்பட்ட வாழையினது பாரிய மட்டத்திலான இசைவாக்கப்படுத்தல் சோதனையும் மாறல்களுக்கான மதிப்பீடும்
- நுண்முறையில் பெருக்கப்பட்ட அன்னாசியினது பாரிய மட்டத்திலான இசைவாக்கப்படுத்தல் சோதனையும் மாறல்களுக்கான மதிப்பீடும்
- கொடித்தோடையில் உடற் கல முளைய உற்பத்தியினூடாக சிறு தாவரங்களின் மீள் உற்பத்தி (இழைய வளர்ப்பு மற்றும் விகார இனவிருத்தி என்பவற்றின் ஒன்றிணைந்த நிகழ்ச்சித் திட்டம்)

## அறுவடைக்குப் பின்னான மற்றும் உணவுத் தொழிநுட்பம்

- குறைப் பயன்பாடுடைய பழப் பயிர்களிலிருந்து பெறுமதி சேர் பொருட்களின் விருத்தி (லொவி. ஜம்பு, கரம் போல)
- கொய்யாப் பழத்தினது தரத்தை மேம்படுத்த பொருத்தமான பொதியிடும் பதார்த்தத்தை தெரிந்தெடுத்தல்
- விதை நீக்கப்பட்ட வெரளுப் பாகினது சேமிப்புக்கு பொருத்தமான நிபந்தனைகளை அடையாளம் காணல்

## தாவர இனப்பெருக்க நுட்பங்கள்

- குறைப் பயன்பாடுடைய பழப்பயிர்களினது வித்து முளைத்தல் தன்மையை மேம்படுத்தல் தொடர்பான கற்கை (வெரளு, லொவி, உக்குரஸ்ஸ)
- மங்குஸ்தீனின் விரைவான பதிய வளர்ச்சி நுட்பம் தொடர்பான கற்கை
- தூரியன் விதைகளினது பிளக்கப்பட்ட விதையின் முளைக்கும் தன்மை மற்றும் சேமித்தல் தொடர்பான கற்கை
- தூரியன் ஒட்டுதல் வெற்றியளித்தல் வீதத்தை மேம்படுத்துவதற்கான ஒட்டுதல் நுட்பத்தின் விருத்தி
- அரும்பொட்டப்பட்ட பதிய முறையில் இனப்பெருக்கப்பட்ட பழத் தாவரங்களின் பாரம் குறைந்த (மண்ணற்ற இலகுவான கலவை) பொதியிடும் வளர்ப்பூடக விருத்தி
- முதிர்ந்த மாங்கன்றுகளுக்குரிய வேர்ப்பந் தாக்கம் தொழிநுட்பத்தை மேம்படுத்தல்
- முதிர்ந்த மாங்கன்றுகளின் பன்மை ஒட்டல் நுட்பத்தினை மேம்படுத்தல்
- மொறிசியல் வகை அன்னாசியில் அறுவடைக்கு முன்னான பரிகரிப்புக்களினால் (PGR) பழத்தின் தரம் மற்றும் வைத்திருக்கும்

காலம் என்பவற்றில் ஏற்படுத்தப்படும் பாதிப்புத் தொடர்பான கற்கை

- அன்னாசியில் உயர் அடர்த்தி (மூன்று வரிசையில் பயிரிடும் தொகுதி) பயிராக்கல் முறைமையின் சாத்தியவளம் தொடர்பான கற்கை

## சமூகப் பொருளாதாரம்

- FRDI இற்குரிய 2013ம் ஆண்டுக்கான INFORM அறிக்கை தயாரித்தல்
- பழப்பயிர்களின் சமூகப் பொருளாதார தகவல்களுக்குரிய தரவுத்தள விருத்தி

## அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

- தாபிக்கப்பட்டுள்ள மாதிரி வீட்டுத் தோட்டத்தினை விருத்தி செய்தலும் பேணலும்
- ஹொரனயில் அயனமண்டல பழங்களுக்கான உயிர்ப் பல்வகைமைத் தோட்டம் ஒன்றை தாபித்தல்
- பழக் கிராம நிகழ்ச்சித் திட்டம்

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பணிப்பாளர் | 01 |
| மேலதிகப் பணிப்பாளர் | 01 |
| பிரதிப் பணிப்பாளர் | 01 |
| பொருளியல் உதவியாளர் | 01 |
| நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் | 10 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 09 |
| விவசாயப் போதனாசிரியர்கள் | 12 |
| பொது முகாமைத்துவ உதவியாளர் | 04 |
| சாரதி | 05 |
| களஞ்சியலாளர் | 01 |
| உழவு இயந்திர இயக்குநர் | 02 |
| காவலாளி | 07 |
| தாவர ஒட்டுநர் | 03 |
| தொழிலாளி (நிரந்தரம்) | 29 |
| தொழிலாளி (ஒப்பந்தம்) | 104 |
| **மொத்தம்** | **203** |

## 1.3.1 பழுப்பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (FCRDS), கன்னொறுவை

பழப்பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையமானது பழப்பயிர்களின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை விசேடமாக வர்க்கவிருத்தி, இனவிருத்தித் தொழில்நுட்பம், நாற்று மேடைத் தொழில்நுட்பம் மற்றும் பயிர் முகாமைத்துவம் போன்றவற்றை இப்பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் என்பவற்றை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளுகிறது. அதற்கும் மேலாக இந்நிலையமானது பிரதான பழப்பயிர்களான ரம்புட்டான், ஆனைக்கொய்யா, மா, தூரியன் மற்றும் ஏனைய சாத்தியப்பாடான பழப் பயிர்கள் என்பவற்றில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

இந்நிலையமானது மத்திய மலைநாட்டு ஈரவலயத்திற்குப் பொருத்தமான பயிர்களிற்கு கூடிய முக்கியத்துவம் கொடுக்கின்றது. இவற்றுக்கு மேலாக அலுவலர்கள், பல்கலைகழகங்கள், உயர் டிப்ளோமா மற்றும் ஏனைய மாணவர்கள், விவசாயிகள் மற்றும் ஏனைய பங்காளிகளிற்கான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் சமூகத்திற்கு சேவை செய்கிறது. இந்நிலையமானது சாத்தியப்பாடான பழப்பயிர் வர்க்கங்கள் உள்ளிட்ட அதிக எண்ணிக்கையான (ஆண்டிற்கு 15000 இலும் அதிகம்) நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்யும் பழப்பயிர் நாற்று மேடையைக் கொண்டுள்ளது.

### பாதீடு

**அட்டவணை 1.3.1.1: வருடாந்தப் பாதீடு – 2013 (ரூபாய்)**

| செலவுத்தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு வீதம் |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 1,820,000 | 1,819,237 | 100 |
| மீண்டு வரும் செலவு | 4,484,050 | 3,896,365 | 87 |
| **கருத்திட்டம்** NARP | | | |
| பப்பாசி | 703,000 | 671,985 | 96 |
| தூரியன் | 570,000 | 561,503 | 99 |
| வாழை | 650,000 | 608,442 | 94 |
| **மொத்தம்** | **7,827,050** | **7,557,532** | **96** |

## முன்னேற்றம்

### ஆராய்ச்சி

#### பழ இனவிருத்தி

வருடகாலத்தில் பிரதான பழப்பயிர்களுடன் குறைந்த பயன்பாட்டு பழப்பயிர்களினதும் உயர் விளைவு, சிறந்த தரம் மற்றும் நோய் பூச்சி எதிர்ப்பு /தாங்குதன்மை கொண்ட வர்க்கங்களை இனங்காணல், தெரிவு செய்தல் மற்றும் விருத்தி செய்தல் என்பவற்றை மேற்கொள்ளப்படுகின்றன.

#### வாழை

பியூசாரியம் ஒக்சிஸ்போறம் (Fusorium oxysporum sp cubense) இனால் உருவாகும் பானாமா நோய்க்காக செயற்கையாகத் தூண்டப்பட்ட விகாரிகளான “அம்பொன்” வர்க்க வாழைகள் தெரிவு செய்யப்பட்டன. ஒரு தாவரமானது வயலில் உட்புகுத்தல் செய்யப்பட்டதன் பிற்பாடு அந்நோய்க்கு எதிர்ப்புத் தன்மையைக் காட்டியது. மேலும் இழைய வளர்ப்பு முறை மூலம் இவ் வம்சாவழியை பெருக்கம் செய்தல் ஆரம்பிக்கப்பட்டது. பனாமா நோய்க்குத் தாங்கும் திறனைக் காட்டிய பன்னிரண்டு வாழை குலவகைகள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் அவை சிறந்த தரத்துடன் கூடிய விளைச்சலையும் கொண்டிருந்தன. மூன்று சீனிக்கதலி, ஒரு அம்பொன் மற்றும் ஒரு கப்பல் என்பன மேலதிக மதிப்பீட்டிற்காக தெரிவு செய்யப்பட்டன. வெவ்வேறு இடங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பதினேழு அம்பொன் குலவகைகளில் இருந்து மேன்மையான ஓர் குலவகை தெரிவு செய்யப்பட்டு மேலதிக மதிப்பீட்டிற்காக பெருக்கம் செய்யப்பட்டது. தேர்வு செய்யப்பட்ட வாழைக் குலவகையின் நடத்தைகளைப் பரீட்சிப்பதற்காக 7 இடங்களில் NCVT அமைக்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

#### பப்பாசி

பொருத்தமான பழ இயல்பு, உயர் விளைவு மற்றும் பப்பாசி வளையப் புள்ளி வைரசிற்கு சகிப்புத்தன்மை என்பவற்றைக் கொண்ட பப்பாசி குலவகைகள் கடந்த ஐந்து வருடங்களில் சேகரிக்கப்பட்டன. உள்ளகக் கலப்புக் வம்சாவழிகளை விருத்தி செய்வதற்கான மேலதிக தெரிவுக்காக நான்கு வட்டங்களில் தற்கருக்கட்டல் மற்றும் தேர்வு என்பவற்றின் மூலம் எட்டுக் வம்சாவழிகள் இதிலிருந்து தெரிவு செய்யப்பட்டன.

#### நாரத்தை / தோடை

கடந்த நான்கு வருடங்களில் பதினைந்து அந்நிய மற்றும் உள்ளூர் வர்க்கங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. மூன்று அந்நிய நாரத்தை வர்க்கங்கள் மத்தியமலைநாட்டு ஈரவலயத்திற்கு சிறந்த நடத்தையைக் காட்டியதுடன் வெளியீட்டிற்காகச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. சிறந்த தரமும் கூடிய விளைச்சலும் கொண்ட ஓர் உள்ளூர் தோடை வர்க்கம் மேலதிக மதிப்பீட்டிற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் இவ்வர்க்கத்தின் நடுகைப் பொருள் உற்பத்தி நடைபெற்று வருகிறது.

#### தூரியன்

தர இயல்பு மற்றும் விளைவு என்பவற்றிக்காக அந்நிய மற்றும் உள்ளூர் குலவகைகள் மதிப்பீடு செய்யப்பட்டன. ஐந்து குலவகைகளின் இயல்புபடுத்தல் நடவடிக்கை நிறைவடைந்துள்ளது. ஒரு அந்நிய குலவகையானது தடித்த சதை, நல்ல சுவை, நிறம் மற்றும் தோற்றம் என்பவற்றுடனான உயர் தரப் பழத்தை உருவாக்கியது. மேலதிக பரீட்சித்தல் தொடரப்படுகின்றது.

#### மா

வேறுபட்ட அந்நிய மற்றும் உள்ளூர் குலவகைகளின் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. TOM EJC தாவரங்கள் சிறந்த தரமுள்ள பழங்களை உருவாக்கின. எவ்வாறோ ஏனைய வம்சங்கள் பூக்கவில்லை

### கீழ்ப்பயன்பாட்டுப் பழப்பயிர்கள்

பின்வரும் பயிர்களின் மேன்மை வம்சங்கள் இனங்காணப்பட்டதுடன் அவற்றின் நடத்தைகளை மதிப்பீடு செய்வதற்காக ஐந்து இடங்களில் பல்லிட (Multilocational) பரீட்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது

வில்வம் பழம் (Aegle marmelos) (L) corr

பேர் (Ziziphus mauritiana Ziziphus jujube)

ஜம்பு (Syzygium cumini (L) skeels)

கவர்ணர் பிளம் (Flocourtia inermis)

லொங்கன் (Euphoria longanalam)

மெழுகு அப்பிள் (Syeygium samrangense mere pery)

பிக்னே (Antidesm bunius (L) spenge)

லன்சோன் (Baccaure motleyana)

பின்வரும் பழப் பயிர்களின் உயர் குலவகை இனங்காணப்பட்டது.

அம்லா (Phullaopnthus emblica)

பெரிய பழங்களுடனான உயர் விளைவு

பியூமிலோ (Citrus maxima)

குறைந்தளவான கசப்புச் சுவையுடன் கூடிய கவர்ச்சிகரமான சிவப்பு சதை

(Elaeocarpus spheericus) நில் வெரளு

கவர்ச்சிகரமான நீலநிறப் பழங்கள்

பயிர்ச் செய்கைக்கான சாத்தியப்பாடுகள் பற்றி இனங்காண்பதற்காக உள்ளூர்ப் பழப்பயிர்களான பட்டபம்பற, கிம்புடு (Salacia chiaensis) மற்றும் கிரிகூன் (Scbleichera oleose) என்பவற்றுடன் இரண்டு வெளிநாட்டு பழப்பயிர்களான (Myreciaria cauliflora) மற்றும் அபு (Pouteria calmito) என்பன இனப்பெருக்கஞ் செய்யப்பட்டன. மதிப்பீடு தொடரப்படுகிறது.

## பயிராக்கவியல்

### மா

வேறுப்பட்ட ஒட்டுக்கட்டை மற்றும் ஒட்டுமுளை வர்க்கங்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. மல்வானை மற்றும் கறுத்தக் கொழும்பான் வர்க்கங்களில் தாவரத்தின் உயரத்தில் ஒட்டு முளை வேறுபாட்டைக் காட்டவில்லை. எவ்வாறோ மல்வானை வர்க்கத்தின் தாவர உயரம் மற்றும் விதானம் என்பவற்றைக் கொண்ட வெள்ளைக் கொழும்பான் வர்க்கம் ஒட்டுக்கட்டையாகப் பயன்படுத்தப்பட்ட போது மாற்றமடைந்து இருந்தது. பழங்கள் மற்றும் ஏனைய இயல்புகளிற்காக மதிப்பீடு தொடரப்படுகிறது.

### ட்றகன் பழம்

ஒரு கம்பத்திற்கான தாவரங்களின் எண்ணிக்கை பற்றிய பரீட்சித்தல் தொடரப்பட்டது. விளைவு மற்றும் பயிராக்கவியல் சார் தரவுகள் இரண்டு வருட காலத்தில் சேகரிக்கப்பட்டதுடன் கற்கையானது தொடரப்படுகிறது.

### பலா

பாதர்லோங் வர்க்கத்தின் ஒட்டுதலின் வெற்றியினை அதிகரிப்பதற்காக கற்கை மேற்கொள்ளப்பட்டது. 20mg/l சிற்றோசன் கரைசலின் ஒட்டுக்கட்டைக்கான பிரயோகம், 30 நிமிட விதைப் பரிகரணம் மற்றும் இரண்டு வார இடைவேளைகளினுள் வளரும் நாற்றிற்கு விசிறல் என்பன 80% வெற்றியினை ஒட்டுதலில் காட்டியது.

## அபிவிருத்தி

### பயிற்சி நிகழ்ச்சி

பயிற்சி நிகழ்ச்சியானது பழச் செய்கை, பழப்பயிர்களை கத்தரித்தலும் பயிற்றுவித்தலும், பூத்தலைத் தூண்டல் கொள்கலன்களில் பழப்பயிர்களை வளர்த்தல், மற்றும் நடுகைப் பொருட்கள் உற்பத்தி என்பவற்றில் மேற்கொள்ளப்பட்டது.

விவசாயிகளிற்கான பயிற்சி நிகழ்ச்சிகள்

- 20 வகுப்புக்கள், பங்கு பற்றிய விவசாயிகள் 2400

அலுவலர்களிற்கான பயிற்சி

- 12 வகுப்புக்கள் பங்கு பற்றிய அலுவலர்கள் 750

பல்கலைக்கழக மாணவர்களிற்கான பயிற்சி நிகழ்ச்சி

- 03 நிகழ்ச்சிகள் மாணவர்களின் எண்ணிக்கை 210

### கண்காட்சி

தேசத்திற்கு மகுடம் மற்றும் விவசாயிகள் வாரம் ஆகிய கண்காட்சிகளில் முழுமையாக ஈடுபட்டதுடன் பழப்பயிர்ச் செய்கைக் கொட்டகை அமைக்கப்பட்டதுடன் குறைந்தளவான பயன்பாட்டைக் கொண்ட பழப்பயிர்களின் தோட்டம் இத்திடல்களில் அமைக்கப்பட்டது.

### விரிவாக்க நடவடிக்கைகள்

ஆண்டிற்குரிய காலப்பகுதியில் அலுவலர்கள் பழப்பயிர்ச் செய்கை பற்றிய 06 வானொலி நிகழ்ச்சிகளில் பங்குபற்றியதுடன் 06 கையேடுகள் தயாரிப்பு, 05 பத்திரிகைக் கட்டுரைகள் வெளியீடு மற்றும் பழப்பயிர்ச் செய்கைப் புத்தகத்தின் மீள் பதிப்பு என்பன மேற்கொள்ளப்பட்டன. நிலையத்திற்கு விஜயம் செய்த மற்றும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட அண்ணளவாக 400 வரையான பழப்பயிர்ச் செய்கையாளர்களிற்கு பழப்பயிர்ச் செய்கை மற்றும் நோய் பூச்சி முகாமைத்துவம் என்பவற்றில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

### நடுகைப் பொருள் உற்பத்தி

நிலையத்தின் நாற்று மேடைகளில் பிரதான மற்றும் குறைந்த பயன்பாட்டு பழப்பயிர்களின் அதிகளவான சிபார்சு செய்யப்பட்ட மற்றும் தேர்வு செய்யப்பட்ட வர்க்கங்கள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் பயிரிடுவதற்காக விநியோகக்கப்பட்டது.

**அட்டவணை 1.3.1.2: 2013ம் ஆண்டு காலப் பகுதியில் நடுகைப் பொருள் உற்பத்தி**

| தாவர வகை | உற்பத்தி செய்யப்பட்ட பயிர் எண்ணிக்கை | விநியோகிக்கப்பட்ட பயிர் எண்ணிக்கை |
|---|---|---|
| ஒட்டுத்தாவரம் | 10,510 | 6,782 |
| நாற்று | 4,099 | 1,360 |
| வேர் கொண்ட துண்டங்கள் | 1700 | 984 |

## குறைபயன்பாட்டுப் பழத்தோட்டக் களக் பரம்பரையலகு வங்கி ஸ்தாபிதம்

**அட்டவணை 1.3.1.3: 2013ம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட பழத்தோட்டப் பரம்பரை அலகு வங்கி**

| பழப்பயிர்த் தோட்டக் களம் பரம்பரையலகு வங்கி | ஸ்தாபிக்கப்பட்ட பழப் பயிர்களின் எண்ணிக்கை | குலவகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. மாவட்ட பணிப்பாளர், பொலன்னறுவை | 60 | 29 |
| 2. மறுவயற் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம், மகாஇலுப்பள்ளம | 50 | 165 |
| 3. பிராந்திய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையம் மாக்கந்துறை | 18 | 18 |

| | | |
|---|---|---|
| 4. குருவெல மாதிரிப் பண்ணை, குருவெல | 07 | 20 |
| 5. தெலியவில ஆராய்ச்சி நிலையம் | 20 | 20 |
| 6. கட்புல, செவிப்புல நிலையம், கன்னொறுவை | 12 | 12 |
| 7. சேவைக் காலப் பயிற்சி நிறுவனம் - அங்குணகொலபலச | 17 | 49 |
| 8. தாவர வைரஸ் சுட்டியிடல் நிலையம், கோமாகம | 07 | 14 |
| 9. சேவைக் காலப் பயிற்சி நிறுவனம், மகாஇலுப்பல்லம | 20 | 32 |
| 10. விவசாயப் பூங்கா - பட்டாட்ட | 26 | 52 |
| 11. விவசாய ஆராய்ச்சி நிலையம், கிராந்துருக் கோட்டை | 02 | 06 |
| 12. இலங்கைக் கடற்படை முகாம், தலத்துஓயா | 13 | 17 |
| 13. வடமேல் மாகாண விவசாயத் திணைக்களம் | 20 | 20 |
| 14. விவசாயப் பாடசாலை - குண்டசாலை | 27 | 39 |
| 15. வாரியப் பொல அரச பண்ணை | 28 | 46 |

## 2014 ம் ஆண்டிற்கான திட்டம்

### ஆராய்ச்சி

#### பழ இனவிருத்தி

- உயர் விளைவுடானான நல்ல தரமுடைய பப்பாசி வர்க்கங்களின் விருத்தி
- தூண்டப்பட்ட விகாரத்தின் மூலமாக “பனாமா” எதிர்ப்பு / சகிப்புத் தன்மை கொண்ட உயர் விளைச்சல் மற்றும் சிறந்த தரமான வாழை வர்க்கங்களின் விருத்தி
- “பனாமா” சகிப்புத் தன்மையுடன் கூடிய உயர் விளைவு மற்றும் சிறந்த தரம் கொண்ட வாழை வர்க்கங்களின் தெரிவு
- மத்திய மலைநாட்டு ஈரவலயத்திற்கான உயர் விளைவு மற்றும் சிறந்த தரம் கொண்ட எலுமிச்சை வர்க்கங்களின் தெரிவு
- மத்திய மலைநாட்டு ஈரவலயத்திற்கான ஆனைக்கொய்யா வர்க்கங்களின் தெரிவு
- மூலவுயியிரு மதிப்பீட்டிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சிறந்த அம்பொன் வாழை குலவகையின் ஆரம்ப விளைவு மதிப்பீடு
- பிராந்தியத்திற்கான சிறந்த வர்க்கத்தை தெரிவு செய்வதற்காக சிறந்த வாழை குலவகைகளின் விளைவு மற்றும் தரம் என்பவற்றிக்கான மதிப்பீடு
- மா வின் உள்ளூர் மற்றும் தருவிக்கப்பட்ட மூலவுயிருருக்களின் மதிப்பீடும் சிறந்த குலவகைகளின் தெரிவும்
- சிறந்த குலவகையை வெளியீடு செய்வதற்கு தெரிவு செய்யும் பொருட்டு தூரியன் மூலவுயிருருக்களை மதிப்பீடு செய்தல்
- குறைபயன்பாட்டு பழவர்க்கங்களின் வெளிக்கள மதிப்பீடு
- குறிப்பிடத்தக்க சிறப்பான குறைபயன்பாட்டு பழப்பயிர்க குலவகைகளின் மதிப்பீடு (பேல், பேர், லொங்கன், ஜமுன்)
- குறைபயன்பாடு கொண்ட சாத்தியப்பாடான உள்ளூர்ப் பழப்பயிர்களின் சேகரிப்பும் மதிப்பீடும்

## பயிராக்கவியலும் ஏனைய செயற்பாடுகளும்

- குறைபயன்பாட்டுப் பழப்பயிர் வர்க்கங்களிற்கான பதிய முறை இனப்பெருக்க முறைகளின் மதிப்பீடு

  வக்ஸ் அப்பிள், சிலோன் ஒலிவ்

- சிலோன் ஒலிவ் இன் விதை முளைத்தலுக்குரிய வித்துமேடை ஊடகத்தின் மதிப்பீடு
- பெரிய சாடிகளில் உள்ளூர்ப் பழப்பயிர்களின் மதிப்பீடு
- குறைபயன்பாட்டுப் பழப்பயிர் வர்க்கங்களின் நோய் பூச்சிப் பாதிப்புக்கான கற்றல்
- உள்ளூர்ப் பழப்பயிர்களில் பந்துரு வேர்களின் தாக்கம் பற்றிய கற்கை
- பேர் பயிரின் நடத்தைகள் பற்றிய கற்கை
- பேர் மற்றும் அன்னமுன்னா என்பவற்றின் விரைவான வித்து முளைத்தல், நாற்று வளர்ச்சி, ஒட்டுதல் வெற்றியளித்தல் என்பவற்றை அதிகரிக்கும் முறைகள் பற்றிய கற்கை
- சீதாப்பழம் மற்றும் பேர் பழம் என்பவற்றின் பழப்பயிர்க் கிராமங்களை நிறுவுதல்
- ரம்புட்டானின் விளைவு மற்றும் பழம் விழுதல் என்பவற்றில் இரசாயனங்களின் தாக்கம்
- ஆனைக்கொய்யாவின் பழம் உருவாதல், தாங்கியிருத்தல் மற்றும் விளைவு என்பவற்றில் இரசாயனங்களின் தாக்கம்
- விதையற்ற தொம்சன் திராட்சையின் பழத்தின் பருமனில் “ஜிபரலின்” இன் தாக்கம்
- மாம்பழத்தின் தரத்தினை அதிகரிப்பதற்காக உறையிடுதலில் பயன்படும் வேறுபட்ட பொருட்களின் மதிப்பீடு
- தூரியானின் பழம் உருவாதலை அதிகரித்தல் மற்றும் முதிராத பழங்கள் உதிர்வதைத் தடுத்தல் என்பவற்றிற்காக வேறுபட்ட திரவப் பசளைகளின் பிரயோகத்தின் பரீட்சித்தல்
- ட்றகன் பழப்பயிரின் நடத்தை மற்றும் உற்பத்தித் திறன் என்பவற்றில் வர்க்கங்கள் மற்றும் கொள்கலன்களில் வேறுபட்ட பயிர் எண்ணிக்கை என்பவற்றின் தாக்கம் பற்றிய மதிப்பீடு

## அபிவிருத்தி

நடுகைப் பொருள் உற்பத்தி - ஒட்டுப் பயிர்கள் - 15000

## அலுவலர்கள் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| ஆராய்ச்சி அலுவலர் பொறுப்பதிகாரி | 01 |
| ஆராய்ச்சி அலுவலர் | 02 |
| பண்ணை முகாமையாளர் | 01 |
| விவசாயப் போதனாசிரியர் | 02 |
| நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | 01 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 01 |
| பிரதம அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| பண்ணை எழுது வினைஞர் | 02 |
| அபிவிருத்தி அலுவலர் | 02 |
| ஆராய்ச்சி உப உதவியாளர் | 01 |
| சாரதி | 02 |
| இரும்பு ஒட்டுநர் | 01 |
| உழவுயந்திர இயக்குநர் | 01 |
| தாவர ஒட்டுநர் | 02 |
| காவலாளிகள் | 09 |
| தொழிலாளர் | 11 |
| ஒப்பந்த தொழிலாளர் | 25 |
| **மொத்தம்** | **65** |

## 1.3.2 தாவர வைரசு சுட்டியிடல் நிலையம் (PVIC), ஹோமாகம

ஹோமாகமவிலுள்ள தாவர வைரசு சுட்டியிடல் நிலையமானது ஹொரணவிலுள்ள பழப்பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளரின் நிர்வாகத்தின் கீழ் செயற்படுகிறது. தாவர வைரசுக்களையும் வைரசு போன்ற அங்கிகளையும் கண்டுபிடிப்பதற்காக நடைமுறையிலுள்ள முன்னேற்றகரமான தொழில்நுட்பங்களைப் பிரயோகித்தல், ஆய்வு கூடத்திலும் வெளிக்களத்திலும் வைரசுக்களை யும் பிற அங்கிகளையும் கண்டுபிடித்து சுட்டியிடுவதற்கான சோதனைப் பொருட் தொகுதிகளை (test kits) உருவாக்குதல், தடுப்புக் காப்பு நோக்கங்கள், தொற்று நோய்களைக் கண்டுபிடித்தல், சாத்தியமான நோய்க் கட்டுபாட்டு / முகாமைத்துவ முறைகளை மதிப்பீடு செய்தல், வைரசு தொற்றற்ற அடிப்படை நடுகைப் பொருட்களை விருத்தி செய்தல், வைரசுக் கவச புரத மூலமான எதிர்ப்புத் தன்மையைக் கண்டுபிடித்தல் (பங்கசு, பற்றீரியா, விலாங்குப் புழுக்கள், வைரசுப் போலிகள் மற்றும் பைற்றோபிளாஸ்மா), டயகமவிலுள்ள (Homagama) விவசாய அலகில் மேற்கொள்ளப் படும் தொடர்பான வேலைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பரப்பும் செயற்பாடுகள் போன்றவற்றைத் தனது செயற்பாடுகளாக இந்த நிலையம் கொண்டுள்ளது.

### பாதீடு

**அட்டவணை 1.3.2 வருடாந்தப் பாதீடு – 2013 (ரூபா)**

| செலவுத் தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு % |
|---|---|---|---|
| மீண்டுவரும் செலவு | 3,483,300 | 2,883,820 | 83 |
| மூலதனச் செலவு | 3,600,000 | 3,051,244 | 85 |
| **நிகழ்ச்சித் திட்டங்கள்** | | | |
| NARPP – பப்பாசி வேலைத்திட்டம் | 800,000 | 694,329 | 87 |
| NARPP – பற்றீரியா வேலைத்திட்டம் | 1,477,300 | 1,451,831 | 98 |
| பழக் கிராம அபிவிருத்தி வேலைத் திட்டம் | 900,000 | 689,993 | 77 |
| இழைய வளர்ப்பு வேலைத்திட்டம் | 2,370,000 | 2,343,869 | 99 |
| மஹிந்த ராஜபக்ச விளையாட்டு தொகுதி (விவசாய அலகு) | 10,000,000 | 6,228,628 | 62 |
| **மொத்தம்** | **22,630,600** | **17,343,714** | **77** |

## முன்னேற்றம்

### பாரம்பரிய தாவர வைரசுவியல்

- பப்பாசி பைற்றோபிளாஸ்மாவிற்காக உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட எதிர்ப்புடைய பாயியிற்கான ஆரம்ப நெறிமுறையை உத்தமமாக்கல். பதப்படுத்தப்படாத எதிர்புடைய பாயி உத்தம இணைப்பு ஐதாக்கல் 1 : 200, உத்தம இணைப்பு ஐதாக்கல் 1:500, பதப்படுத்தபடாத எதிர்ப்புடைய பாயி, உத்தம எதிர்ப்புடைய பாயி ஐதாக்கல் 1:200, உத்தம இணைப்பு ஐதாக்கல் 1:500, உத்தம பிரித்தெடுப்பு தாக்கல் கரைசல், பைற்றோபிளாஸ்மாவைத் தூய்மையாக்கும் தாங்கல் கரைசல் இவையனைத்தைப் பார்க்கினும் 1:1 (க/க) என்ற விகிதத்தில் ஆரோக்கியமான தாவர சாற்றுடன் குறுக்கு அகத்துறிஞ்சப்பட்ட எதிர்ப்புடைய பாயி அதிகமான நோய்: ஆரோக்கியம் விகிதத்தைக் கொடுத்தமை இவ்வாய்வின் கண்டுபிடிப்பாகும். எதிர்ப்புடைய பாயியைச் சேர்ப்பதற்கு முன்னர் தொகுதியாக்கல் படிமுறை மேற்கொள்ளப்பட்டது.

- அன்னாசி வாடல் வைரசுவிற்கான (PWV) பல்முளைவகை எதிர்ப்புடைய பாயி உற்பத்தி. இவ்வாய்வில் வைரசு வெற்றிகரமாக சுத்திகரிக்கப்பட்டு ஓர் எதிர்ப்புடைய பாயி உற்பத்தியாக்கப்பட்டது. ஆரம்ப நெறிமுறையை உத்தமாக்கல் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். உள்ளூரில் உற்பத்தியாக்கப்பட்ட எதிர்ப்புடைய பாயி எதிர்கால சுட்டியிடலுக்குப் பயன்படுத்தப்படும்.

- BBTVக்காக உள்ளூரில் உற்பத்தியாக்கப் பட்ட பல்முளைவகை எதிர்ப்புடைய பாயியிற்கான ஆரம்ப நெறிமுறையை உத்தமமாக்கல். நோயுற்ற மற்றும் ஆரோக்கியமான மாதிரிகளுக் கிடையே தெளிவான வேறுபாடு காணப்படவில்லை. எனவே இந்த எதிர்ப்புடைய பாயியின் மீள் உற்பத்தி தொடரப்படும்.

- தாவர வளர்ச்சியை ஊக்குவிக்கும் றைசோபற்றீரியாவைப் (PGPR) பயன்படுத்தி தொகுதி எதிர்ப்பினைத் தூண்டுவதன் மூலம் பப்பாசி வளையப் புள்ளி வைரசுவை (PRSV) கட்டுப்படுத்துவது தொடர்பான ஆய்வு. சந்தேகத்திற்கிடமான மூன்று *Pseudomonas fluorescent* பிரித்தெடுக்கப் பட்டன. வைரசுவை கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் முன்னேடுக்கப்படும்.

- விரைவு நீர்ப்பீடன வடிதாள் பகுப்பாய்வு (Rapid Immuno filter paper assay (RIPA) ஊடாக பப்பாசி வளையப்புள்ளி வைரசுவை ஆய்வுகூட மூலம் கண்டுபிடித்தல். தேவையான பொருளின் நியமத்தைத் தெளிவாக்குதல் முன்னெடுக்கப்படுகிறது.

- பப்பாசியில் ஏற்படும் வைரசு மற்றும் வைரசு போன்ற நோய்களை இனங்காண்தல். மீககதியுல்ல, ஹல்மதுல்ல, தம்புல்ல, சிகிரியா, பண்ணல, வாரியப்பொல கமநல சேவை நிலைய பிரதேசங்கள் மற்றும் புத்தளம் மாவட்டம் ஆகிய இடங்களில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. பண்ணல பிரதேசத்தில் பப்பாசி பைற்றோபிளாஸ்மா தொற்று கண்டறியப் பட்டது. எல்லா இடங்களிலும் பப்பாசி வளையப்புள்ளி வைரசு (PRSV) காணப்பட்டது. பப்பாசி சித்திரவடிவ வைரசுவும் தக்காளி புள்ளி வாடல் வைரசுவும் அறியப்படவில்லை. நாடு முழுவதும் ஓர் புதிய நோய் பரவிக் கொண்டிருப்பதன் காரணத்தினால் விழிப்புணர்வு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- கிரமமான வைரசு சுட்டியிடல். மொத்தம் 970 மாதிரிகள் சுட்டியிடப்பட்டன.

பிரயோகம்: நோய்த் தொற்றற்ற நடுகைப் பொருட்களின் உற்பத்தியை ஊக்குவித்தல், மேற்கொண்டு வைரசு நோய்கள்

பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக நோயாக்கியை சரியாக இனங்காண்தல் மற்றும் விவசாய இரசாயனங்களின் மேலதிக பாவனையைக் குறைத்தல்.

## மூலக்கூற்று வைரசுவியல்

பப்பாசியில் ஏற்படும் வைரசு மற்றும் வைரசு போன்ற நோய்களை இனங்காண்தலும் வெளிக்களத்தில் பயன்படுத்தக்கூடிய உணர்திறன் மிக்க கண்டுபிடிக்கும் உபகரணத் தொகுதியை (Kit) விருத்தி செய்தலும். மீககயுல்ல, ஹல்மதுல்ல, தம்புல்ல, சிகிரியா, பண்ணல மற்றும் வாரியப்பொல கமநல சேவைகள் நிலைய பிரதேசங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பண்ணல பிரதேசத்தில் பப்பாசி பைற்றோபிளாஸ்மா தொற்று அறியப்பட்டது.

- வெள்ளரி பச்சை சித்திரவடிவ வைரசுக்கான (CGMMV) கண்டுபிடிப்பு தொழில்நுட்பங்கள் CGMMV யைக் கண்டுபிடிப்பதற்காக PCR ஐ அடிப்படையாகக் கொண்ட ஆரம்ப நெறிமுறை விருத்தி செய்யப்பட்டது.
- இரட்டிப்பு முறை மூலம் வாழை தடல் சித்திரவடிவ வைரசுவையும் கெக்கரி சித்திரவடிவ வைரசுவையும் (CMV) கண்டுபிடித்தல். பரிசோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.
- உருளைக் கிழங்கு செய்கை பண்ணப்படும் பிரதேசங்களில் குறித்த முன்னோடிகளுடனான (specific primers) பின்முக பிரதியெடுப்பு பொலிமரேசு சங்கிலி தாக்கத்தைப் (RT - PCR) பயன்படுத்தி உருளைக் கிழங்கு வைரசு X (PVX) ஐயும் உருளைக் கிழங்கு இலைச் சுருட்டி வைரசுவையும் (PLRV) கண்டு பிடித்தல். உத்தமமாக்கும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட வைரசுக்களை PCR மூலம் பரிசோதித்தலும் பரம்பரையலகு தொடராக்கல் மூலம் உறுதி செய்தலும்.
- மொத்தம் 356 மாதிரிகள் அடையாளமிடப்பட்டன.
- பிரயோகம்: கிரமமான வைரசு அடையாளப்படுத்துதலுக்காக இத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தலும் குறிப்பாக தனியார் பிரிவுக்கும் தடுப்புக் காப்பு நோக்கங்களுக்காகவும் வைரசு தொற்றற்ற நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தலை ஊக்குவித்தலும்.

## வைரசு தொற்றுநோயியல்

- உள்ளூர் நிலைமைகளின் கீழ் பல்லாண்டுப் பழப்பயிர்களில் ஏற்படும் பூச்சிப் பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு பூச்சி நாசினிகளை மர உட்பாய்ச்சி முறை மூலம் செலுத்துவதை சோதித்தல். பலா, மா, தூரியான் மரங்களில் ஏற்படும் “மரம் துளைக்கும் பூச்சிகள்” மற்றும் “இலைத் தத்திகள்” என்பவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக Fipronil 59g /l SC, Thiomethoxam 25% WG என்பன பரிசோதிக்கப்பட்டன. Fipronil பயன்படுத்திய போது துளைக்கும் பூச்சிகளின் சேதம் கட்டுப்படுத்தப்பட்டது (recovered). இவ்வாய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.
- வெளிக்களத்தில் தண்டுகளைப் பிரித்தெடுத்தல் மூலம் மரவள்ளி சித்திரவடிவ வைரசுவை (CMV) முகாமைத்துவச் செய்தவதற்காக ஓர் பொதியை விருத்தி செய்தல். வெளிக்களத்தில் தண்டுகளைப் பிரித்தெடுத்து சேகரிப்பதன் மூலமாக CMV நோயை முகாமைத்துவம் செய்வதற்கு ஆரம்ப கட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சிறிதளவு தொற்றுக்குட்பட்ட நடுத் தண்டுத் துண்டத்திலிருந்து உற்பத்தியாக்கப்பட்ட தாவரங்கள் ஆரோக்கியமான தாவரங்களை உற்பத்தி செய்தன. இவ்வாய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

- பப்பாசியில் ஏற்படும் பப்பாசி வளையப்புள்ளி வைரசு (PRSV) நோயை முகாமைத்துவம் செய்வதற்காக வேறுபட்ட நுண் போசணை மூலகங்களை அங்குரத் தொகுதிக்கு விசிறும் ஆய்வின் தாக்கம். இவ்வாய்வில், ஆரம்ப நிலையில் செம்பு (Cupper) விசிறும் பரிசோதனையில் PRSV நோய் அறிகுறி வெளிப்பாடு பிற்போடப்பட்டது. ஆனால் பிந்திய நிலைகளில் வித்தியாசமெதுவும் காணப்படவில்லை. முதிர்ந்த மரங்களுக்கு இவ்வாய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

- பப்பாசி வளையப்புள்ளி வைரசு (PRSV) சகிப்புத்தன்மைக்காக MS100 பப்பாசி பேதங்களை வெளிக்களத்தில் மதிப்பீடு செய்தல். இவ்வாய்வுக்காக எடுக்கப்பட்ட அனைத்து பப்பாசி பேதங்களும் PRSV ஆல் தொற்றுக்கு உட்படுத்தப்பட்டன. ஆனால் Ratna மற்றும் Sinta (குறிப்பாக சித்திரவடிவ அறிகுறி) வுடன் ஒப்பிடும் பொது MS100 குறிப்பிடத்தக்களவு குறைவான PRSV அறிகுறியை வெளிப்படுத்தியது. இவ்வாய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

- சிறிய மற்றும் நடுத்தர அளவில் பயிர் வளர்ப்பவர்களுக்கு ஆலோசனை சேவை வைரசு தொற்றை முகாமைத்துவம் செய்வதற்காகவும் அது மேலும் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காகவும் 15 வெளிக்கள பார்வையிடல்களும் 5 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் மேற்கொள்ளப் பட்டன.

## நுண்ணுயிரியல்

- வேறுபட்ட தாவர வேர்த் தொகுதிகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட வேறுபட்ட தாவர வளர்ச்சி ஊக்கி றைசோபற்றீரியாவை (PGPR) அவற்றின் இயல்புகளுக்கமைய அடையாளப்படுத்தல். இவ்வாய்வில் சுற்றாடலுக்குத் தோழமையான வகையில் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு திறன் வாய்ந்த தாவர வளர்ச்சி ஊக்கி றைசோபற்றீரியா (PGPR) பிரித்தெடுக்கப்பட்டது. இவ்வாய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

- உள்ளூர் நிலைமைகளின் கீழ் பல்லாண்டுக்குரிய பழப்பயிர்களில் ஏற்படும் பங்கசு நோய்களைக் (வெண் வேர் அழுகல், அந்திரக்நோசு மற்றும் வேர் அழுகல்) கட்டுப்படுத்துவதற்கு பங்கசு நாசினிகளை மர உட்பாய்ச்சி முறை மூலம் செலுத்துவதைப் பரிசோதித்தல். பங்கசு நாசினிகளான தயோபனேற் மீதையிலினதும் புரொப்பிகொணசோலினதும் வெவ்வேறு செறிவுகளைப் பயன்டுத்தி மாவிலும் பலாவிலும் வினைத்திறனாக களமட்ட உட்பாய்ச்சல் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது.

- தெரிவு செய்யப்பட்ட பழப்பயிர்களில் நோய்களை இனங்காணுதலும் முகாமைத்துவம் செய்தலும். வேறுபட்ட பப்பாசி நோய்களுக்கான நோய்க் காரணிகள் வேறுபட்ட விவசாய சூழல் வலயங்களிலிருந்து இனங்காணப்பட்டன. இவ்வாய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

- கிரமமாக நோய்களை (பங்கசு, பற்றீரியா) சுட்டியிடல் திட்டம். 200 க்கும் மேற்பட்ட மாதிரிகள் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றிற்கான IPM ஐ அடிப்படையாகக் கொண்ட தீர்வுகள் வழங்கப்பட்டன.

பிரயோகம்: நோய்களை இனங்காண்தலும் அவற்றிற்கான கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவ முறைகளை வழங்குதலும்.

## இழைய வளர்ப்பு

- இழைய வளர்ப்பினூடாக பப்பாசித் தாவரங்களை உற்பத்தி செய்வதற்கு ஆரம்ப நெறிமுறை விருத்தி. பெருக்குவதற்காக 300 ஆய்வுகூட - வளர்ப்பு போத்தல்களும் புதிய நிபந்தனையின் கீழ் வேர்கள் இயல்பாக வளர்வதற்காக 50 ஆய்வுகூட - வளர்ப்பு

போத்தல்களும் ஏற்கனவே தயாரிக்கப்படத் தொடங்கிவிட்டன. இது தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

- மறைமுகமான அங்கப் பிறப்பாக்கம் (Orzanogenesis) மூலம் வைரசு எதிர்ப்பு பப்பாசி வர்க்கத்தை உற்பத்தி செய்தல். 200 பப்பாசி ஆய்வுகூட - வளர்ப்பு போத்தல்கள் வளர்க்கப்பட்டு அங்குரத் தொகுதி விருத்தியாக்கம் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. இது தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

- வேறுபட்ட வாழை வர்க்கங்களுக்காக வேறுபட்ட உப வளர்ப்பு நிலைகளை வெளிகளத்தில் மதிப்பிடுதல். மாறுபாடுகளைப் பரீட்சித்து பொருத்தமான உபவளர்ப்பு நிலைகளை இனங்காண்பதற்கு வேறுபட்ட உப வளர்ப்பு நிலைகளிலிருந்து 50 இழைய வளர்ப்பு வாழைத் தாவரங்கள் வெளிக்களத்தில் ஸ்தாபிக்கப்பட்டன. இது தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

- நோய்த் தொற்றற்ற அடிப்படை நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தலும் வெளிக்களத்தில் மதிப்பிடுதலும். வைரசுத் தொற்றற்ற 22,000 இழைய வளர்ப்பு அன்னாசித் தாவரங்களும் 12,000 இழைய வளர்ப்பு வாழைத் தாவரங்களும் உற்பத்தியாக்கப்பட்டன. தாவரங்கள் வெவ்வேறு விவசாயிகளின் தோட்டங்களிலும் அரச தோட்டங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டன.

- இலை வளர்ப்பு மூலமாக MG3 அன்னாசிக்கான விரைவான பெருக்க முறை. மாறுபாடுகளையும் பொருத்தமான தன்மையையும் பரிசோதிப்பதற்காக இலை வளர்ப்பு மூலம் பெறப்பட்ட 1000 MG3 இழைய வளர்ப்பு அன்னாசித் தாவரங்கள் வல்பிற்ற பண்ணையில் ஸ்தாபிக்கப்பட்டன.

- தெரிவு செய்யப்பட்ட அந்தூரியம் பேதங்களை இலை வளர்ப்பு மூலம் நுண் பெருக்கம் செய்தல். “கிரிமட்டிய தெரிவு” மற்றும் “ஸ்பிரிட்” பேதங்களைப் பெருக்குவதற்காகவும் வேருன்றச் செய்வதற்காகவும் 646 ஆய்வுகூட- வளர்ப்புப் போத்தல்களில் வளர்க்கப்பட்டன. புதிய நிபந்தனையின் கீழ் இயல்பாக வளர ஆரம்பித்து விட்டன.

- “பகுதி நுண் ஒட்டுதல்” மூலம் தோடை மற்றும் மண்டரினது சிபார்சு செய்யப்பட்ட வர்க்கங்களைப் பெருக்கவதற்கான முன்மாதிரி செயன்முறை. வெளிக்கள அவதானிப்பிற்காக ஒட்டுத் தாவரங்கள் ஸ்தாபிக்கப்பட்டன.

## தாவர இனவிருத்தி

- மிளகாயிலும் (*Capsicum annum L*) ஏனைய கப்சிக்கம் இனங்களிலும் வெளிக்கள மற்றும் ஆய்வுகூட நிபந்தனைகளின் கீழ் கிடைக்கக்கூடிய வைரசு மற்றும் வைரசு போன்ற நோய்களை இனங்காண்தல். இவ்வாய்வில் CMV மற்றும் CVMV ஆகியன பாயி மூலம் இனங்காணப்பட்டன. TMV, TSWV மற்றும் TMV ஆகியன இன்னும் அறியப்படவில்லை. இவ்வாய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

- கிடைக்கக்கூடிய மூலவுயிருரு (*Capsicum spp)/* பேதங்கள் மற்றும் வர்க்கங்களை வைரசுக்களுக்காகப் பிரித்தெடுத்தலும் எதிர்ப்புத் தன்மை வாய்ந்த அல்லது தாங்கும் தன்மைக்கான மூலகங்களைத் தெரிவு செய்தலும். 102 பாரம்பரிய பேதங்கள் (PGRC, உள்ளூர் மற்றும் மலைநாடு) பரிசோதிக்கப்பட்டன. பிரதிகளும் அநேக ஒத்த தொடர்களும் அறியப்பட்டன. மேலதிக சோதனைக்காக (செயற்கைத் தொற்றாக்கம்) இனங்காணப்பட்ட CMV மற்றும் CVMV க்கு சகிப்புத் தன்மை வாய்ந்த பாரம்பரிய பேதங்களுக்கு உறுதிப்படுத்தல் தேவை. இது மேலும் தொடரப்படும்.

- பயிரிடப்படும் அல்லது பாரம்பரிய வர்க்கங்களுக்கு எதிர்ப்புத் தன்மை அல்லது சகிப்புத் தன்மை வாய்ந்த பயிராக்கவியல்

இயல்புகளை உட்சேர்ப்பதற்கு மிளகாய் இனங்களுக்குள்ளே *(C.anuum, C.chinense* மற்றும் *C. frutescens)* இனத்துக்கிடையிலான திட்டமான கலப்புப் பிறப்பாக்கம் பற்றிய ஆய்வுகள். இனங்களுக்கிடையே திட்டமான கலப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. வெற்றி வீதம் மிகவும் குறைவாக இருந்தது. இது மேலும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

- புதிதாக விருத்தி செய்யப்பட்ட சிறந்த கலப்பின மிளகாய் வர்க்கங்ளுக்காக தேசிய ஒருங்கிணைப்பு வர்க்க சோதனை. வயற் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்துடன் இணைந்த நிகழ்ச்சித் திட்டம் 2013 / 2014 பெரும்போகத்தின் போது மேற்கொள்ளப் படும்.

- உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தைக்காக உயர் விளைச்சல் தரும் நன்கு இசைவாக்கமடைந்த கார மிளகாய் *(Capsicum chinense* அல்லது *Capsium frutescens)* பேதத்தை சிறந்த இயல்புகளுடன் விருத்தி செய்தல். விவசாயிகள் குழுக்களை இனங்காண்தல் நடைபெற்றுக் கொண்டிருக் கிறது. பரிசோதனை முன்னெடுக்கப்படும்.

- அன்னாசியில் பயிர் முன்னேற்ற நிகழ்ச்சித் திட்டம். அன்னாசியில் கலப்புப் பிறப்பாக்கமும் தெரிவும். அநேக கலப்புகள் மேற்கொள்ளப்பட்டன. விதைகள் T/C வளர்ப்பூடகத்தில் வளர்க்கப்பட்டு சில எண்ணிக்கையான நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இது தொடரப்படும்.

- MS 100 ஐப் பயன்படுத்தி பப்பாசி வளையப்புள்ளி வைரசுக்கு (PRSV) சகிப்புத் தன்மை வாய்ந்ததும் நுகர்வோரால் ஏற்றுக் கொள்ளப்படும் தன்மை உடையதுமான பப்பாசி பேதங்களை மதிப்பிடுதல். வெளிக்கள மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது. இப் பரிசோதனை தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

### தொழில்நுட்பப் பரம்பல்

- 05 வானொலி நிகழ்ச்சித் திட்டங்கள், 01 துண்டுப்பிரசுரம், 05 வெளிக்கள தரிசனங்கள் மற்றும் 15 பயிர்ச் சிகிச்சைகள் நடாத்தப்பட்டன.

- நிலையத்திற்கு வருகை தந்திருந்த 110 விவசாயிகள் / செய்கையாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன. இது தவிர 500 க்கும் மேற்பட்ட விவசாயிகள் / செய்கையாளர்களுக்கு தொலைபேசி அழைப்புகள் மூலமாக அறிவுரைகள் வழங்கப்பட்டன.

- ஒரு நகர விவசாய மாதிரியும் ஒரு வீட்டுத் தோட்ட மாதிரியும் நிலையத்தினுள் பராமரிக்கப்படுகின்றன.

- டயகம மகிந்த ராஜபக்ச விளையாட்டுத் தொகுதியில் சுற்றாடல் தோழமையான விவசாய நிகழ்ச்சித் திட்டத்திற்காக அனேக விரிவாக்க நடவடிக்கைகள் நடாத்தப்பட்டன. 16 மாணவ குழுக்கள் வருகை தந்தது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள் கிடைக்கப்பெற்றது.

## 2014ஆம் ஆண்டிற்கான திட்டம்

### பாரம்பரிய தாவர வைரசியல்

- வெள்ளரி சித்திரவடிவ வைரசுவின் (CMV) இலங்கைப் பிரித்தெடுப்புக்கான உயிரியல் குணாதிசயப்படுத்தல்

- உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட எதிர்ப்புடைய பாயியைப் பயன்படுத்தி பாயியியல் மூலம் அன்னாசியில் ஏற்படும் அன்னாசி வாடல் வைரசுவைக் கண்டுபிடிக்கும் வினைத்திறன் மேம்பாடு

- *Pseudomonas fluorescence* ஐப் பயன்படுத்தி தொகுதி எதிர்ப்புத் தன்மையைத் தூண்டுவதன் மூலமாக பப்பாசியில் ஏற்படும் பப்பாசி வளையப் புள்ளி வைரசுவின் (PRSV) கட்டுப்பாடு

- பப்பாசி வளையப்புள்ளி வைரசுவின் (PRSV) இலங்கைப் பிரித்தெடுப்பிற்கான உயிரியல் குணாதிசயப்படுத்தல்.
- பப்பாசியில் ஏற்படும் வைரசு மற்றும் வைரசு போன்ற நோய்களை இனங்காண்தலும் வெளிக்கள மட்டத்தில் உணர்திறன் மிக்க கண்டுபிடிக்கும் உபகரணத் தொகுதியை (Kit) விருத்தி செய்தலும்
- வெள்ளரி பச்சை சித்திரவடிவ வைரசுவிற்காகவும் வாழைக் குருமண் நோய் வைரசுவிற்காகவும் பல்முளைவகை எதிர்ப்புடைய பாயியை உற்பத்தி செய்தல்
- திராட்சையில் வைரசு மற்றும் வைரசு போன்ற நோய்களை இனங்காண்தல்
- வைரசு நோய்களை கிரமமாக சுட்டியிடல் நிகழ்ச்சித் திட்டமும் சோதனை அறிக்கைகளை விநியோகித்தலும்.

## மூலக்கூற்று வைரசுவியல்

- பப்பாசியில் ஏற்படும் வைரசு மற்றும் வைரசு போன்ற நோய்களை இனங்காண்தலும் அவற்றைக் கண்டுபிடிக்கும் தொழில்நுட்பங்களை விருத்தி செய்தலும்.
- PRSV எதிர்ப்புத் தன்மைக்காக புரத உறை பரம்பரை அலகு ஆய்வுகள்.
- சுட்டியிடல் நோக்கங்களுக்காக DNA யை அடிப்படையாகக் கொண்ட கண்டு பிடிக்கும் தொழில்நுட்பங்களை விருத்தி செய்தல்
- இரட்டிப்பாக்கல் முறை மூலம் வாழை வைரசுக்களைக் (BBrMV & CMV) கண்டுபிடித்தல் (தொடர்ச்சி)
- திராட்சையில் வைரசு மற்றும் வைரசு போன்ற நோய்கள்
- உருளைக் கிழங்கு செய்கையில் குறிப்பிட்ட முன்னோடிகளுடன் கூடிய RT - PCR மூலம் PVX ஐயும் PLRV ஐயும் கண்டுபிடித்தல் (தொடர்ச்சி)
- ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட வைரசுக்களை PCR மூலம் பரிசோதித்தலும் பரம்பரை அலகு தொடராக்கம் மூலம் உறுதிப்படுத்தலும் (தொடர்ச்சி)
- வைரசு நோய்களை PCR மூலம் கிரமமாக சுட்டியிடலும் சோதனை அறிக்கைகளை விநியோகித்தலும்.

## வைரசு தொற்று நோயியல்

- வெளிக்களத்தில் தண்டுகளைப் பிரித்தெடுத்தல் மூலமாக மரவள்ளி சித்திரவடிவ வைரசை (CMV) முகாமைத்துவம் செய்வதற்கான பொதியை விருத்தி செய்தல்
- மா மற்றும் பலா பழ மரங்களில் பூச்சிப் பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான மர உட்பாய்ச்சி தொழில்நுட்பத்தின் தொழிற் படும் ஆற்றலை ஆய்வு செய்தல்
- அன்னாசி செடியின் கக்கங்களில் நுளம்பு பெருகுவதை பரிசோதித்தலும் அதன் முகாமைத்துவமும்
- பழ மரங்களில் காவிப் பூச்சிகளை விரட்டுவதற்காக தெரிவு செய்யப்பட்ட இயற்கை மற்றும் செயற்கை ஆவியாகும் சேர்வைகளை பரிசோதித்தல்
- பப்பாசியில் வைரசு நோய் அறிகுறிகளுடன் கூடிய முதிர்ந்த தாவரங்களுக்காக வேறுப்பட்ட நுண்போசணை மூலகங்களை அங்குரத் தொகுதிக்கு விசிறுவதன் மூலம் PRSV நோயை முகாமைத்துவம் செய்தல் மீதான தாக்கத்தை ஆய்வு செய்தல்

## நுண்ணுயிரியல்

- வேறுபட்ட தாவர வேர்த் தொகுதியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட வேறுபட்ட தாவர வளர்ச்சி ஊக்கி றைசோபற்றீரியாவை (PGPR) அவற்றின் இயல்புகளுக்கமைய அடையாளப்படுத்தல்

- உள்ளூர் நிபந்தனைகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பல்லாண்டு பழப் பயிர்களில் மர உட்பாய்ச்சிகளைப் பயன்படுத்தி பங்கசு நோய்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றலை ஆய்வு செய்தல்

- றகன் பழங்களில் (Dragon fruits) ஏற்படும் பற்றீரியா நோய்களை இனங்காண்தலும் அவற்றை முகாமைத்துவம் செய்தலும்

- கிரமமான நோய் சுட்டியிடல் நிகழ்ச்சித் திட்டமும் சோதனை அறிக்கைகளை விநியோகித்தலும்.

## இழைய வளர்ப்பு

- அங்குர நுனி வளர்ப்பினூடாக பப்பாசித் தாவரங்களை உற்பத்தி செய்வதற்கு ஆரம்ப நெறிமுறையை இனங்காண்தல்

- இழைய வளர்ப்பு மற்றும் பரம்பரையலகு மாற்றீடு மூலமாக வைரசு எதிர்ப்பு பப்பாசி வர்க்கத்தை உற்பத்தி செய்வதற்கான செயன்முறை

- இழைய வளர்ப்பு வாழை மற்றும் அன்னாசிக்காக பொருத்தமான உப வளர்ப்புக்களின் வெளிக்கள மதிப்பீடு

- வர்த்தக ரீதியான செய்கைக்காக அன்னாசி மற்றும் வாழை இழைய வளர்ப்பு நடுகைப் பொருட்களின் பொருத்தமான தன்மை

- இலை வளர்ப்பினூடாக அந்தூரியத்தை பெரிய அளவில் விருத்தி செய்வதற்கான திறனை அதிகரித்தல்

- வாழை மற்றும் அன்னாசிக்கான நோயற்ற அடிப்படை நடுகைப் பொருட்களையும் தாய்த் தாவரத்தையும் உற்பத்தி செய்தல்

- சிறிய அளவில் இழைய வளர்ப்பு மூலம் உற்பத்தி செய்கையாளர்களுக்காக இழைய வளர்ப்பு பயிற்சி மற்றும் மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம்

## தாவர இனவிருத்தி

- பிரதான வைரசு நோய்களுக்கெதிராக மிளகாயில் (*Capsicun annum L*) பிறப்புரிமை முன்னேற்றம்

- மிளகாயிலும் (*Capsicun annum L*) ஏனைய கப்சிக்கம் இனங்களிலும் (*Capsicun spp*) வெளிக்கள மட்டத்திலும் ஆய்வுகூட நிபந்தனைகளின் கீழும் தெளிவான வைரசு மற்றும் வைரசு போன்ற நோய்களை இனங்காண்தல்

- பொதுவான மூலவுயிருருவையும் (*Capsicun spp*) பேதங்களையும் வர்க்கங்களையும் வைரசுக்களுக்காக பிரித்தெடுத்தலும் எதிர்ப்புத் தன்மை வாய்ந்த அல்லது சகிப்புத் தன்மை வாய்ந்த மூலங்களைத் தெரிவு செய்தலும்.

- பயிரிடப்படும் அல்லது பாரம்பரிய வர்க்கங்களுக்கு எதிர்ப்புத் தன்மை அல்லது சகிப்புத் தன்மையான பயிராக்கவியல் இயல்புகளை உட்சேர்ப்பதற்கு கப்சிக்கம் இனங்களுக்குள்ளே (*C.annum, C.Chinense* மற்றும் *C. frutescens*) சேர்ப்பதற்கான திட்டமான கலப்புப் பிறப்பாக்கம் பற்றிய ஆய்வுகள்.

- புதிதாக விருத்தி செய்யப்பட்ட சிறந்த கலப்பின மிளகாய்க்காக தேசிய ஒருங்கிணைப்பு வர்க்க சோதனை

- உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தைக்காக உயர் விளைச்சல் தரும் நன்கு இசைவாக்கமடைந்த கார மிளகாய் (*Capsicum chinense or Capsicum frutescens*), பேதத்தை சிறந்த இயல்புகளுடன் பிறப்புரிமை ரீதியில் முன்னேற்றுதல்

- கலப்புப் பிறப்பாக்கம் மற்றும் தெரிவு மூலம் அன்னாசியில் சிறந்த வர்க்கத்தை விருத்தி செய்தல்

- சிறிய அளவிலான செய்கையை ஊக்குவிப்பதற்கு மேல் மாகாணத்திலுள்ள விவசாயிகளிடையே விநியோகிப்பதற்காக 1000 மிளகாய் நாற்றுக்களை சாடிகளில் உற்பத்தி செய்தல்
- வளர்ப்புப் பைகளில் (500 வளர்ப்புப் பைகள்) மிளகாய்ச் செய்கை செய்து காட்டல்கள்

## தொழில்நுட்பப் பரம்பல்

- விவசாய போதனாசிரியர்கள், உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்காக 19 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் முன்மாதிரியான தொழில்நுட்பப் பரிமாற்றமும் மேற்கொள்ளப்படும்.
- 04 பயிர்ச் சிகிச்சை நிகழ்ச்சித் திட்டங்கள், 15 வெளிக்கள பரிசோதனைகள் மற்றும் வயல் விழாக்கள்
- 103 சேதன வீட்டுத் தோட்டங்கள் மற்றும் 150 மட்டுப்படுத்தப்பட்ட இடப்பரப்பு வீட்டுத் தோட்டங்களை விருத்தி செய்தல்
- தற்போதுள்ள பழப்பயிர்களின் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக 12 பயிற்சிகள்
- நிலையத்திற்கு வருகை தந்திருந்த விவசாயிகளின் 250 பீடை மற்றும் நோய்ப் பிரச்சினைகளைக் கையாள்தலும் தொலைபேசி மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்படும் ஆலோசனைகளும் சேவைகளும்
- இழைய வளர்ப்பு வாழை மற்றும் அன்னாசிக்கான வெளிக்கள தரிசிப்புகள்
- 12 செய்தித்தாள் கட்டுரைகளை பிரசுரித்தல், இரண்டு வானொலி மற்றும் தொலைகாட்சி நிகழ்ச்சித் திட்டங்கள்
- PVIC நிலப்பரப்பில் (1.5ஏக்) மரக்கறிச் செய்கையை ஊக்குவித்தலும் 01 நகர விவசாய மற்றும் வீட்டுத் தோட்ட மாதிரிகள்
- டயகம மகிந்த ராஜபக்ச விளையாட்டுத் தொகுதியில் விவசாய நிகழ்ச்சித் திட்டங்கள்

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 05 |
| நிகழ்ச்சிதிட்ட உதவியாளர் | 04 |
| விவசாயப் போதனாசிரியர் | 09 |
| உப ஆய்வுகூட உதவியாளர் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | 04 |
| களஞ்சியவாளர் | 01 |
| சாரதி | 03 |
| தொழிலாளி (நிரந்தரம்) | 02 |
| தொழிலாளி (ஒப்பந்தம்) | 12 |
| தொழிலாளி (திட்டங்கள்) | 06 |
| காவலாளி | 02 |
| **மொத்தம்** | **56** |

## 1.4 நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (சுசுனுஜ)இ பத்தலகொட

தற்போது நாட்டில் நெல் உற்பத்தியானது தன்னிறைவினை அடைந்துள்ளதுடன், உணவுக் காப்பினை உறுதிப்புடுத்துவதற்கு வருடாந்த நெல் உற்பத்தியின் ஸ்த்திரத் தன்மையைப் பராமரிப்பது மிகவும் முக்கிய பொறுப்பாக உள்ளது. தற்போது நிலவுகின்ற மோசமான வானிலை நிலமைகள் மற்றும் உலக வெப்படைதல் காரணமாக மழைவீழ்ச்சிக் கோலத்தில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான மாற்றம் போன்றவை நெல் உற்பத்தியின் ஸ்த்திரத் தன்மையைப் பேணுவதில் முக்கிய தடைகளாக அமைந்துள்ளன. எனவே பல்வேறு நெல் உற்பத்திச் சூழல் தொகுதிகளுக்குப் பொருத்தமான உயர் விளைச்சலைத் தரக்கூடிய நெல் வர்க்கங்களின் விருத்தியை இலக்காகக் கொண்டு நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமானது நிகழ்ச்சிகளை ஒழுங்கமைக்க வேண்டியுள்ளது. இனங்காணப்பட்டுள்ள நெல் வர்க்கங்களுக்குப் பொருத்தமான தொழில் நுட்பங்களின் விருத்தி மற்றும் அவற்றுடன் தொடர்புடைய தொழில்நுட்பங்களின் பரம்பல் போன்றவற்றை ஏனைய முக்கிய குறிக்கோள்களாகக் கொண்டு இயங்குகின்றது

### பாதீடு

**அட்டவணை 1.4.1 வருடாந்தப் பாதீடு – 2013 (ரூபாய்)**

| செலவுத் தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு % |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 42,198,808 | 25,727,569 | 61 |
| நடைமுறைச் செலவு | 36,726,070 | 35.583,753 | 97 |
| **உட்கட்டமைப்பு அபிவிருத்தி** | | | |
| விசேட செயற்றிட்டங்கள் | 6,855,315 | 6,855,315 | 100 |
| **வெளிநாட்டு செயற்றிட்டங்கள்** | | | |
| களை முகாமைத்துவம் | 1,250,000 | 684,708 | 55 |
| கிறீன்சுப்பர் நெல் | 2,150,000 | 641,168 | 30 |
| பல்சூழல் பரிசோதனை | 1,023, 670 | 313,195 | 31 |
| நெல் உற்பத்தி இடைவெளியை அகற்றுதல் | 1,500,000 | 529,428 | 35 |
| SAARC - அவுஸ்திரேலியா | 254,170 | 254,777 | 100 |
| AFACI | 1,300,000 | 408,795 | 31 |
| **உள்ளுர் செயற்றிட்டங்கள்** | | | |
| தாழ்நில ஈரவலயம் | 2,000,000 | 2,000,000 | 100 |
| கலப்பின விதை | 1,500,000 | 1,464,581 | 98 |
| உயிர்ப்பற்ற தகைப்பு | 2,766,500 | 2,354,105 | 85 |
| பசளைப் பயன்பாடு | 2,400,000 | 2,124,225 | 85 |
| களை நெல் | 1,584,800 | 1,457,073 | 92 |
| நீர்ப்பயன்பாடு | 2,386,100 | 2,383,583 | 100 |
| திரவப் பசளை | 212,000 | 92,651 | 44 |
| **மொத்தம்** | **106,101,433** | **82,874,928** | **78** |

## முன்னேற்றம்

### ஆராய்ச்சி

### நெல் வர்க்க மேம்பாட்டு

RRDI இன் வர்க்க மேம்பாட்டு நிகழ்ச்சிகள் வெளியக உற்பத்தி உள்ளீடுகளைக் குறைக்கும் நோக்குடன் நோய் பீடைகளுக்கு பரம்பரை ரீதியில் உயர் எதிர்ப்புடையதும், உயர் விளைச்சல் திறனை உடையதுமான வர்க்கங்களின் விருத்தியில் அதிக அக்கறை செலுத்துக்கின்றது. பரந்த அளவிலான பாரம்பரிய அடிப்படைகளுடன் கூடிய தொன்றுதொட்டுப் பாவனையில் உள்ள புதிய வம்சாவழிகளின் விருத்தியின் மூலம் சிறந்த தானியத் தரம் மற்றும் அநேக உயிர்ப்பான காரணிகளுக்கு எதிர்ப்புத்தன்மையைக் கொண்ட தன்மைகள் பெறப்பட்டதானது 2013இல் அடையப் பெற்ற முக்கிய பெறுதிகள் ஆகும்.

### புதிய நெல் வர்க்கங்கள்

**Bg 370 -**

சில நிபந்தனைகளுடன் 2012 இல் விடுவிக்கப்பட்ட Bg 3R வம்சாவழியானது Bg - 370 என விடுவிக்கப்பட்டுள்ளது. குறுகிய உருளைவடிவ, வெண்ணிற அரிசியை உடைய இந்நெல் வர்க்கமானது 7 தொன் / ஹெக் எனும் நம்பகமான விளைச்சலையுடையது. 95 நாட்களில் முதிர்ச்சியடையும் இவ்வர்க்கமானது முக்கிய பீடை மற்றும் நோய்களுக்கு எதிர்ப்புத்தன்மையைக் கொண்டுள்ளதுடன் சரிந்து விழும் தன்மையும் குறைவானது ஆகும்.

**Bg 96 - 741**

சிவப்பு அரிசியையுடைய 4½ மாத வயதுடைய இந்நெல் வர்க்கமானது தீடீர் வெள்ளப் பெருக்கு நிலமைகளுக்கு ஓரளவு சகிப்புத் தன்டையுடையது. இது மாத்தறை, களுத்துறை, காலி மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் 28 இடங்களில் பரிசோதிக்கப் பட்டது. வெள்ள நிலமைகளின் கீழ் Bg 36 - 741 நெல் வர்க்கமானது 5.4 தொன் / ஹெக் என்ற விளைச்சலைத் தந்தது. இவ் வம்சாவழியானது விதை அத்தாட்சிப்படுத்தும் சேவையினரிடம் DUS தெளிவாக்கத்திற்காக ஒப்படைக்கப் பட்டுள்ளது.

**Bg 4 - 91**

வெள்ளை அரிசியையுடைய 3½ மாத வயதுடைய இந்நெல் வர்க்கமானது உவர்த் தக்மைக்குச் சகிப்புடையது. இவ் வம்சாழியானது விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையினரிடம் DUS தெளிவாக்கத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

### 4½ மாத வயது வகுப்பு

இலங்கையின் மொத்த நெற் செய்கை நிலப்பரப்பில் 8% இனை 4½ மாத வயதுடைய நெல் வர்க்கங்கள் தம்வசப்படுத்துகின்றன. பல்வேறு வகுப்புகளில் இருந்து இனங்காணப்பட்ட தொன்று தொட்டுப் பாவனையில் உள்ள 18 வம்சாவழிகள் விளைச்சல் சோதனைகளில் மதிப்பிடப்பட்டன. இது முக்கிய நோய் பீடைகள், விளைச்சல் மற்றும் தானியத்தின் தரம் ஆகிய இயல்புகளுக்காக இடம் பெற்றது. 09 - 606 மற்றும் 08 - 301 ஆகிய வம்சாவழி இலக்கங்கள் உன்னதமானவையாக இனங்காண ப்பட்டன.

### 3½ மாத வகுப்பு

இலங்கையின் மொத்தமாக நெற் செய்கை இடம் பெறுகின்ற நிலப்பரப்பில் 66% மான இடங்களில் இந்நெல் வர்க்கம் செய்கை பண்ணப்படுகின்றது. விளைச்சல் சோதனைகளில் தொன்று தொட்டுப் பாவனையில் உள்ள வம்சாவழிகள் 18 தெரிவு செய்யப்பட்டன. அவற்றுள் பின்வருவன NCRVT க்காகத் தெரிவு செய்யப்பட்டன. அவையாவன Bg 10 -1399 (Ld 12 - 38 - 1 / Bg 358), Bg 08 - 1258 ( At 307 / IR 64), மற்றும் Bg 10 - 1047 (Bg 1420/ IR 64) என்பனவாகும்.

### மூன்று மாத வயது வகுப்பு

இலங்கையின் வருடாந்த மொத்த நெற் செய்கை நிலப்பரப்பில் 26% இனை 3 மாத வயதுடைய நெல் வர்க்கங்கள் தம்வசப்படுத்தியுள்ளன. PYT நிகழ்ச்சிகளில் Bg 11 -2366, Bg 11 - 2370, Bg 11 - 2364 ஆகிய தொன்று தொட்டுப் பாவனையில் உள்ள வம்சாவழிகள் தெரிவு செய்யப்பட்டன. அத்துடன் Bg 11- 1051 ஆனது MYT இல் உன்னதமான வர்க்கமாக இனங்காணப்பட்டது.

சிறுபோகம் 2013 இலிருந்து NCRVT இல் பரிசோதிப்பதற்காக Bg 10 -3375, Bg 10 - 1083, Bg 10 -1166, Bg 09 - 1851 மற்றும் Bg 09 - 1888 என்பன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

### 2½ மாத வயது வகுப்பு

80 நாட்களில் முதிர்ச்சியடைகின்ற மிகக் குறுகிய வயதுடைய நெல் வர்க்கங்கள் தற்போது மிகவும் முக்கயத்துவம் அடைந்து வருகின்றன. ஏன் எனில் விசேடமாக குறுகிய செய்கைக் காலத்தைக் கொண்ட சிறு போகத்தில் மானாவரி சூழல் தொகுதிக்கு இவை பொருத்தமாகக் காணப்படுவதனால் ஆகும்.

- Bg 12 - 1666, Bg 12 - 1643, 12 - 1697, 12 - 1679, மற்றும் Bg 12 - 1676 ஆகிய நெல் வர்க்கங்கள் PYT இல் மதிப்பிடப்பட்டன. 11 - 2508, 11 - 2537, 10 - 2881, 10 - 2884, மற்றும் 10 - 2891 ஆகியன MYT இல் மதிப்பிடப்பட்டன. தூய்மையாக்கிய விதைகளை வழங்குவதற்காக Bg 10 - 2907 (சிறிய, உருளை வடிவுடைய, சிவப்பு அரிசியை உடையது) எனும் நெல் வர்க்கம் பெருக்கம் செய்யப்பட்டது.

### பாரம்பரிய நெல்

- பாரம்பரிய நெல் வர்க்கங்கள் விவசாயிகளிடையே மிகவும் பிரபல்யம் அடைந்து வருகின்றன. ஆனால் அவை குறைவான விளைச்சல், சரிந்து விழும் தன்மை மற்றும் இலகுவில் நோய் பீடைத் தாக்கத்திற்கு உட்படுகின்றனவை ஆகும். எனவே பாரம்பரிய நடுகை வர்க்கங்கள் மேம்படுத்தலுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
- சுதுறு சம்பா எனும் பாரம்பரிய வர்க்கம் காமா கதிர்வீசல் விகாரத்திற்கு உட்படுத்தப்பட்டு பெறப்பட்ட SW 25 வர்க்கமானது பெருக்கமடையச் செய்யப்பட்டு PYT இல் பரிசோதிக்கப்பட்டது.
- உயர் விளைச்சல் மற்றும் BPH எதிர்ப்புத் தன்மை ஆகிய இயல்புகளுடன் பரந்த அளவிலான கலப்பினப் பிறப்பாக்கம் செய்யப்பட்ட Oryzace nivara இலிருந்து [oryzae sativa (Bg 38)] இரு வம்சாவழிகள் (WH 20 மற்றும் WH 48) பெருக்கமடையச் செய்யப்பட்டன. பாரம்பரிய நடுகை வர்க்கங்கள் 11 தூய்மையாக்கப்பட்டு பெருக்கமடையச் செய்யப்பட்டன.

### தரமான நெல்

- நெல் உற்பத்தியில் தன்னிறைவை அடைந்த பின்பு தானியத் தர மேம்பாட்டில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. மணம், அமைலேசுச் செறிவு, மிருதுவான / நடுத்தரமான ஜெல் உள்ளடக்கம், உயர்ந்த முழு அரிசி விளைச்சல், ஜெலட்டினாக்க வெப்பநிலை, குறைந்த குழிவான பாகம், சிறந்த சுவை மற்றும் சிறப்பான தோற்றம் என்பன சில தானியத் தர இயல்புகளாகும்.
- IRRI இல் பெறப்பட்ட 43 பதிவுகள் பரிசோதிக்கப்பட்டு தொன்று தொட்டுப் பாவனையில் உள்ள வாசனையுடைய 24 வம்சாவழிகள் தெரிவு செய்யப்பட்டன. இவ் அனைத்து வம்சாவழிகளும் 3½ - 4½ மாத வயது வகுப்பைச் சார்ந்தவை ஆகும். ஏழு வம்சாவழிகள் (IR - 71146 - 2 - 1 - 3, IR - 03A477, IR - 03A568, IR - 04A212, IR - 04A381, IR 07A167 மற்றும் IR - 04A395) 7 தொன் / ஹெக் இலும் கூடிய

விளைச்சலைக் கொண்ட சிறந்த வர்க்கங்களாக இனங்காணப்பட்டன.

## கலப்பின நெல்

- உச்ச விளைச்சலை எய்தல் மற்றும் விளைச்சல் இடைவெளி ஆகியவற்றின் இணைப்புப் பால நோக்கங்களை அடைவதற்கு கலப்பின வீரியத்தின் பாவனையானது ஓர் முக்கிய தொழில் நுட்பமாகக் காணப்படுகின்றது. 180 புதிய $F_1$ சேர்க்கைகள் மற்றும் 87 கலப்புகள் புதிய CMS மற்றும் பராமரிப்பு வம்சாவழிகளை விருத்தி செய்வதற்குரிய பின்முகக் கலப்புக்காகத் தெரிவு செய்யப்பட்டன. மேலதிக பரிசோதனைக்குரிய பெற்றோர் வம்சாவழிகளாக 16 சேர்க்கைகள் தெரிவு செய்யப்பட்டன. அத்துடன் சிறந்த வளத் தன்மையுடைய சேர்க்கைகள் $F_1$ விதை உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டதுடன் அவை PYT இல் பரிசோதிக்கப்படவுள்ளன.

- ஆண்மலட்டுத் தன்மை (CMS) வம்சாவழிகள் 50 மற்றும் மீள் நிரப்பு வம்சாவழிகள் 186 ஆகியன பராமரிக்கப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட பெற்றோர் வம்சாவழிகளைப் பயன்படுத்தி புதிய கலப்புகள் இடம் பெற்றன. 27 கலப்பினச் சேர்க்கைகள் PYT இல் பரிசோதிக்கப்பட்டன. IR 68897A/R 160, Bg CMS 4A / R 147 மற்றும் Bg 407 H ஆகியன முறையே 6.78 தொன் / ஹெக், மற்றும் 5.49 தொன் / ஹெக் விளைச்சலை 2012 / 2013 பெரும் போகத்தில் பதிவு செய்தன. கலப்பின நெல் உற்பத்தி நிகழ்ச்சியில் Bg CMS 1A /B. Bg CMS 4A /B மற்றும் Bg CMS 4A /SN 50 ஆகியவற்றின் கரு விதைகள் உள்ளடக்கப்பட்டன.

- Bg 407H மற்றும் Bg CMS 4A /R 147 ஆகியவற்றின் $F_1$ விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன Bg CMS 4A /R 147 வர்க்கத்தின் F விதைகள், கிராந்துருக் கோட்டை (3Kg), பொலநறுவை (2Kg) மற்றும் அம்பலாந்தொட்டை (600g) ஆகிய இடங்களில் உள்ள பண்ணைகளுக்கு வழங்கப்பட்டன.

## உயிர்த் தொழில்நுட்பம்

- Bg 352, Bg 359 மற்றும் Bg 250 ஆகியவற்றின் BLB எதிர்ப்புத்தன்மையை மேம்படுத்தும் நோக்குடன் BLB வழங்கி IRBB60 உடன் சேர்த்து இனங்கலப்புகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வருடத்தில் Bg 250 / IRBB60 வர்க்கத்தின் பின்முகக் கலப்புக் குடித்தொகைகள் தரமுயர்த்தப் பட்டன.

- எரிபந்தம் மற்றும் BLB வழங்கிப் பெற்றோர்களான முறையே ரெலிப் மற்றும் IRBB60 ஆகியவற்றுடன் Bg 94 - 1 மற்றும் பொக்குறு சம்பா ஆகிய வர்க்கங்கள் கலப்புக்கு உட்படுத்தப்பட்டன. $F_1$ விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

- காட்டு நெல் வர்க்கங்களில் காணப்படுகின்ற பொருளாதார ரீதியில் முக்கியத்துவமுடைய இயல்புகளை தொன்று தொட்டுப் பாவனையில் உள்ள நெல் வம்சாவழிகளான $F_1$ o. sativa / o. rhyzomatis ஆகியவற்றில் உள்ளடக்கும் நோக்குடன் பின்முகக் கலப்புக்கு உட்படுத்தப்பட்டன. இதன் போது பெறப்பட்ட முளையங்கள் பாதுகாக்கப் பட்டன. மேலதிக மேம்படுத்தலுக்காக ஓர் தனித் தாவரம் பெறப்பட்டுள்ளது.

- Bg 250 நெல் வர்க்கத்தில் ஆய்வுகூட உடற்கல விருத்தியில் இருந்து சாதகமான விகாரிகளை உருவாக்கும் நோக்கத்திற்காக Bg 250 வர்க்கத்தின் வியத்தமடையாத விதைக் கலங்களில் இருந்து ஓர் உப வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. 2½ மாத வயதுடைய உறுதியான வம்சாவழிகளை தெரிவு செய்வதற்காக மீள் பிறப்பாக்கல் வர்க்கங்கள் வயலில் தேர்வுக்கு

உட்படுத்தப்பட்டன. 15 வம்சாவழிகள் அவற்றின் $G_4$ பரம்பரையில் இருந்து பெறப்பட்டன.

- Bg 300 வர்க்கத்தின் வியத்தமடையாத விதைக் கலங்களில் விகாரம் தூண்டப்பட்டு, உவர்த் தன்மைக்குச் சகிப்புடைய 90 நாள் வயதுடைய வர்க்கங்கள் மீள் பிறப்பாக்கத் தாவரங்களில் இருந்து தேர்வு செய்யப்பட்டன. அவை $G_1$ பரம்பரையில் காணப்படுகின்றன. குட்டையான தாவரங் களைப் பெறுவதற்காக சுவந்தல், குறுலுதுட, கொணவறு, றடால், சுவந்த சம்பா மற்றும் சுதுசீனட்டி ஆகிய பாரம்பரிய வர்க்கங்களின் வியத்தமடையாத விதைத் கலங்கள் விகாரமடையச் செய்யப்பட்டன. அவை தற்பேது சூழலுக்கு இசைவாக்கமடையச் செய்யும் நிலையில் உள்ளன.

- பட்டியிடல் பரம்பரையலகுகள் மற்றும் மூலக்கூற்று குறியீட்டாளர்கள் ஆகியவை குறியீட்டாளர் உதவியுடன் கூடிய இனவிருத்திக்கு அவசியம் ஆகும். பனிப்பூச்சிக்கு எதிர்ப்புத் தன்மை மற்றும் வெள்ள நிலமையைச் சகித்து வாழும் தன்மைகளுக்காக தகனல / சுதுறு சம்பா மற்றும் Bg 300 / கோடா கீனட்டி ஆகிய கலப்புகளில் தனி விதை இறங்கு வரிசை முறை பயன்படுத்தப்பட்டது. $F_2$ மற்றும் $F_3$ ஆகிய பரம்பரை அலகுகள் பரம்பரை அலகுகளைப் பட்டியிடல் மற்றும் மூலக்கூற்று குறியிட்டாளர்களை இனங்காணல் ஆகியவற்றுக்காகத் தரம் உயர்த்தப்பட்டன.

## தானியத் தரம்

### உயர்தர இனவிருத்திப் பொருட்கள் மற்றும் NCRVT பதிவுகளில் இருந்து பெறப்பட்ட பச்சை அரிசி மற்றும் ஓரளவு அவிக்கப்பட்ட நெல்லின் அரிசி ஆகியவற்றின் தானியத் தர இயல்புகள்.

PYT, MYT மற்றும் NCRVT ஆகியவற்றில் இருந்து பெறப்பட்ட அனைத்து வம்சாவழிகளும் அவற்றின் பச்சை அரிசி மற்றும் ஓரளவு அவிக்கப்பட்ட நெல்லின் அரிசி ஆகியவற்றின் தரத்திற்காக மதிப்பிடப்பட்டது. இனவிருத்தி வம்சாவழிப் பதிவுகளின் 156 மாதிரிகளும் பரிசோதிக்கப்பட்டன.

### பாரம்பரிய நெல் வர்க்கங்களின் போசணை ரீதியில் முக்கியத்துவம் உடைய மாப்பொருள் உள்ளடக்கம், சமையல் மற்றும் உண்ணும் தரம்

பௌதீக மற்றும் பௌதீக இரசாயன இயல்புகளுக்காக தெரிவு செய்யப்பட்ட 21 பாரம்பரிய நெல் வர்க்கங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. கபில அரிசி மற்றும் உமியின் அளவுகள் முறையே 77 - 88% மற்றும் 20 - 23% எனும் அளவுகளில் வேறுபட்டுக் காணப்பட்டன. பச்சை அரிசிக்காக நெல் குற்றும் போது முழு அரிசியின் உற்பத்தியானது 55 - 73% வரையில் வேறுபட்டது (குறுலுதுட வர்க்கம் தவிர்ந்த ஏனையவற்றில்). சமைக்கும் போது கனவளவு அதிகரிப்பானது குறுலுதுட மற்றும் மசுறான் தவிர்ந்த ஏனைய அனைத்து வர்க்கங்களிலும் 2.6 மடங்கு அதிகமாகக் காணப்பட்டது. ஜெலட்டினாக்க வெப்பநிலை (GT) ஆனது மதிப்பிடப்பட்ட பெரும்பான்மை யான வர்க்கங்களில் இடைத்தரமுடையதாகக் (GT - 70 - 74$^{o}$c) ஆகக் காணப்பட்டது. மடதவாளு, பொக்காலி, மாவீ, கொனவாறு, இங்கிரிமிட்டிய மற்றும் டுலார் ஆகிய வர்க்கங்கள் குறைவான அமைலேசு உள்ளடக்கம் மற்றும் GT பெறுமானங்களைக் காட்டியது. (55 - 59$^{o}$c) சுதுறு சம்பா தவிர்ந்த

(மிகக் குறைவான அமைலேசு உள்ளடக்கம் (AC) பதிவு செய்யப்பட்டது) ஏனைய பெரும்பாலான வர்க்கங்களில் இடைத்தரமான அமைலேசு உள்ளடக்கம் (AC) அவதானிக்கப்பட்டது. கேரத் பண்டா மற்றும் களு கீனட்டி ஆகியவை உயர் அமைலேசு உள்ளடக்கத்தைப் (AC) பதிவு செய்தது. ஜெல் உள்ளடக்கமானது (GC) ஆய்வுக்கு உட்படுத்திய வர்க்கங்களில் பாரிய வேறுபாட்டைக் காட்டியது. கேரத் பண்டா, வன்னி டகனல, ரதல், கொண்டரவலு, குறுலுகுட, டெவறடிறி, சுலை மற்றும் மசுறான் ஆகிய வர்க்கங்கள் மென்மையான GC வர்க்கங்களாக இனங்காணப் பட்டன.

## நோய் முகாமைத்துவம்

### பக்ரீரிய இலை வாடல் (BLB) நோய்க்குரிய தேர்வு

இரண்டு பருவங்களிலும் (BLB) நோய்க்கு எதிராக மொத்தமாக 403 வம்சாவழிகள் தேர்வு செய்யப்பட்டன. அவற்றுள் பெரும்போகத்தில் 3 வம்சாவழிகளும், சிறுபோகத்தில் 31 வம்சாவழிகளும் எதிர்ப்புத்தன்மை அல்லது ஓரளவு எதிர்ப்புத் தன்மை உடையனவாகக் காணப்பட்டன.

### எரிபந்த நோய்க்கு எதிரான தேர்வு

- எரிபந்த நோய்க்கு எதிராக மொத்தமாக 3899 வம்சாவழிகள் தேர்வுக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றுள் பெரும்போகத்தில் தேர்வு செய்யப்பட்ட 1309 வம்சாவழிகள் மற்றும் சிறுபோகத்தில் தேர்வு செய்யப்பட்ட 1433 வம்சாவழிகள் எரிபந்த நோய்க்கு எதிர்புடையன அல்லது ஓரளவு எதிர்படையனவாக இனங்காணப்பட்டன.
- ஏற்கனவே விடுவிக்கப்பட்ட 14 வர்க்கங்கள் எரிபந்த நோய்க்கு எதிராக தேர்வுகுட்படுத்தப்பட்டன. எரிபந்த நோய்க்குரிய எதிர்ப்புத் தன்மையானது அவை முதல் தடவை விடுவிக்கப்பட்ட போது காணப்பட்ட எதிர்ப்பத் தன்மைக்கு ஒப்பானதாகக் காணப்பட்டது.

### மடல் வெளிறல் நோய்க்கு சிபாரிசு செய்யப்பட்ட பங்கசு நாசினியின் மீள் மதிப்பீடு

ROP யில் இருந்து பெறப்பட்ட சிபாரிசு செய்யப்பட்ட 05 பங்கசு நாசினிகள் நெல் மடல் வெளிறல் நோய்க்கு எதிராக மீள் பரிசோதிக்கப்பட்டது. இவை ஐந்தும் மடல் வெளிறல் நோய்க்கெதிராக சம அளவிலான செயற்றிறனைக் காணப்பித்தன.

### ஆய்வு கூட நிலமைகளில் நெல் நோய்களுக்கு எதிராக சேதன திரவப் பிரித்தெடுப்புக்கள் காணப்பிக்கும் தாக்கம்.

நெல் எரிபந்தம் மற்றும் நெல்லில் மடல் வெளிறல் ஆகிய நோய்களுக்கு எதிராகச் சேதன திரவப் பிரித்தெடுப்புகளின் தாக்கம் பற்றிய கற்கை ஒன்று இடம் பெற்றது. கூட்டெருத் தேநீர் (கூட்டெரு வடிதிரவம்), கப்பெற்றிய தாவரச் சாறு (Croton Caccifer) சீமைக் கிழுவை (Gliricidia sepium) பாவட்டை இலைகள் (Ardathoda vacica) வேப்பம் விதைப் பிரித்தெடுப்பு மற்றும் ரெபியுகோனாசோல் (Tebucanasole) பங்கசு நாசினி ஆகியவை ஆய்வு கூட நிலமை மற்றும் பசுமை இல்ல நிலமைகளின் கீழ் தேர்வுக்கு உட்படுத்தப்பட்டன. ரெபியூகோனாசோல் பங்கசு நாசினி மைசிலியாக்களின் (Mycelia) வளர்ச்சியைக் கட்டுப்படுத்திய அதேவேளை ஏனைய சேதனத் திரவம் பிரித்தெடுப்புக்கள் இருவகைப் பங்கசுக்களிலும் மைசிலியாக்களின் வளர்ச்சியைக் குறிப்பிட்ட அளவில் குறைவடையச் செய்தன.

## பீடை முகாமைத்துவம்

### பீடை எதிர்ப்புக்களின் தேர்வு

கபில நிறத் தாவரத் தத்தி (BPH) மற்றும் கொப்புளஈ (GM) ஆகியவற்றின் தாக்கங்களுக்

குரிய எதிர்ப்புத் தன்மை பற்றிய தேர்வுகள் வயலிலும் பசுமை இல்லங்களிலும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. மொத்தமாக 4124 பதிவுகள் பரிசோதிக்கப்பட்டன. இவற்றுள் GM மற்றும் BPH ற்கு எதிர்ப்புடையனவாக அல்லது ஓரளவு எதிர்ப்புடையனவாக 841 மற்றும் 1761 பதிவுகள் அடையாளம் காணப்பட்டன.

### ஒளிப் பொறியினால் கவரப்பட்ட நெற் பீடைகளின் குடித்தொகை

ஒளிப் பொறி சேகரிப்புகளைப் பயன்படுத்தி நெல் பூச்சிப் பீடைகளின் குடித்தொகையில் காலநிலை வேறுபாடு தொடர்பிலான கற்கை ஒன்று இடம்பெற்றது. கபில நிறத் தாவரத் தத்தி (BPH) மற்றும் பசுமைத் தாவரத் தத்தி ஆகியவற்றின் குடித்தொகைகளை வெப்பநிலை மற்றும் RH ஆகிய இரண்டும் அதிகரித்தன. தண்டு துளைப்பான், கருமுட்டுப் பூச்சி மற்றும் நெல் மூட்டுப் பூச்சி ஆகியவற்றின் குடித்தொகைகள் வெப்பநிலை அதிகரிப்புடன் குறைவடைந்தன.

### புதிய பூச்சி நாசினி மூலக்கூறுகளின் மதிப்பீடு

பியூபுறோ பெசின் (Buprofezin) என்பது வகுப்பு III க்குரிய ஓர் புதிய பூச்சி நாசினி ஆகும். ஒரு லீற்றர் நீரில் 1.5ml எனும் அளவில் BPH ஐக்கட்டுப்படுத்துவதில் இது வினைத்திறனாகச் செய்படுவதை அறிய முடிந்தது.

### சேதன மற்றும் பாரம்பரிய நெற் செய்கைத் தொகுதிகளில் ஆத்திரப் போடக்களின் (மூட்டுக்காலிகளின்) பல்வகைமை

சேதன மற்றும் பாரம்பரிய நெற் செய்கைத் தொகுதிகளில் ஆத்திரப்போடாக்களின் குடித் தொகை பற்றிய கற்கை மேற்கொள்ளப்பட்டது. ஆத்திரப்போடா இனங்களின் பல்வகைமை, இனங்களின் செறிவு மற்றும் அவற்றின் அபரீதம் என்பன பாரம்பரிய தொகுதியுடன் ஒப்பிடுகையில் சேதன நெற் செய்கைத் தொகுதியில் குறிப்பிடத்தக்களவில் அதிகமாகக் காணப்படு வதை கற்கையின் முடிவுகள் தெளிவுபடுத்தின. வருணம் கோலியப்றெறா அதிக பல்வகைமை உடையதாகக் காணப்பட்டது. சேதனத் தொகுதியின் நீர்ச்சூழல் ஆனது அதிகளவில் மூட்டுக் காலிகளைக் கொண்டு காணப்பட்டது. இவை குறிப்பாக உணவுச் சங்கிலியின் முதற்படி நுகரிகளாக அமைந்திருந்தன.

## களை முகாமைத்துவம்

### களை நெல் (Oryza sative Spontanea) குடித்தொகைகளின் விவசாய ~ உருபவியல் வேறுபாடுகள்.

நாட்டில் காணப்படுகின்ற களைநெல் உயிர் வகைகளின் உருவவியல் வேறுபாடு தொடர்பிலான கற்கைகள் இடம் பெற்றன. அதிகளவில் களைநெல் தொற்றுக்குட்பட்ட நெல் வயல்களில் இருந்து கதிர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அவை பாகுப்படுத்தப்பட்டன. அவற்றில் இருந்து 251 வகைகள் இனங்காணப்பட்டன. தானிய இயல்புகளில் அனைத்துச் சாத்தியமான சேர்க்கைகளையும் சேகரிக்கப்பட்ட களைநெல் உருவவகைகள் கொண்டிருப்பதை அவதானிப்புக்கள் தெளிவுபடுத்தின. மேற்படி 251 உருவ வகைகளையும் சீரான நிலமைகளின் கீழ் நடுகை பண்ணப்பட்டதன் பின்பு அவற்றில் பாரிய பல்வகைமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. பெரும்பாலான களை நெல் உருவ வகைகளின் 1000 தானியங்களின் நிறை மற்றும் தானிய நிரம்பல் வீதம் என்பன முறையே 20g மற்றும் 70% ஆகக் காணப்பட்டது. இலங்கையில் காணப்படுகின்ற களை நெல்லானது பல்வேறு பூர்வீகம் மற்றும் மூலங்களில் இருந்து தோற்றம் பெற்றுள்ளன என்பதைச் சான்றுகள் தெளிவு படுத்துகின்றன. அவை சில இடங்களில் உள்ள காட்டு நெல் இனங்கள் மற்றும் ஏனைய இடங்களில் பாரம்பரிய நெல் வர்க்கங்களின் மூலமாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

### நெல்லின் வளர்ச்சி, விருத்தியில் Isachne globosa வின் தாக்கம்

நெல்லின் வளர்ச்சி மற்றும் விருத்தியில் Isachne globosa வின் தாக்கம் பற்றி அறிவதற்குரிய சாடிப் பரிசோதனை ஒன்று இடம் பெற்றது. Isachne globosa வானது நெல்லின் வளர்ச்சி மற்றும் விருத்தி ஆகிய இரண்டிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் காட்டியது.

### நேரடி நெல் விதைப்பு வயல்களில் பஸ்பாலம் இனங்களில் (Papalum spp) சைகலோபொப் ~ பியூரைல் (Cyhalofup - butyl) 10 EC இன் உயிரியல் செயற்றிறன்

நேரடி நெல் விதைப்பு வயல்களில் புற்களின் குறிப்பாக பஸ்பாலம் இனங்களைக் கட்டுப்படுத்துவதில் சைகலோபொப் - பியூரைல் இன் சரியான பாவனை அளவு மற்றும் பாவனைக் காலம் ஆகியவற்றைத் தீர்மானிக்கும் நோக்குடனேயே இக்கற்கை மேற்கொள்ளப் பட்டது. மேற்படி இரசாயனப் பதார்த்தம் 200 - 250g ai / ha எனும் அளவில் பிரயோகித்த போது (1 மற்றும் 3 WAS) வினைத்திறனாகக் கட்டுப்படுத்தியது.

### Murdannia nudiflora வைக் கட்டுப்படுத்துவதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ள களை நாசினிகளின் தேர்வு

Murdannia nudiflora வைக் வினைத்திறனாகக் கட்டுப்படுத்துவதற்குரிய களை நாசினியைத் தெரிவு செய்வதற்ாக ஓர் சாடிப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. 80% ற்கும் அதிகமான வினைத்திறனுடைய கட்டுபாட்டை ஓதோசல் பமியுறோள் + புறோப்பினல் MCPA ஊதோசல் பமியறொன் என்பன கொடுத்தன. அத்துடன் 50 - 80% வினைத்திறனுடைய கட்டுபாட்டை எதொன்க்ஸிசல்பிறோன், சைக்களோசல் பமியுறோன், பீனொக்சிபுறப்பி, எதைல் + எதொன்க்ஸிசல்பிறோன், பென்சல்பறோன் மெதைல் + மெற் சல்பறோன் மெதைல், பிறிரிலக்குளோர் + பிறிபென்கொக்ஸ் பிஸ்பிறிபக் சோடியம் என்பன கொண்டிருந்தன. அதேவேளை 50% வினைத்திறனுடைய கட்டுப்பாட்டை பைநோசல்பமிறோன் எதைல் காட்டியது.

### மண் வள முகாமைத்துவம்

- கடந்த அறு பருவங்களாக நெற் செய்கையில் K முகாமைத்துவம் தொடர்பில் நீண்டகால அடிப்படையிலான கற்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் எவ்விதமான சாதகமான துலங்கல்களும் கிடைக்கப் பெறவில்லை. விளைச்சல் கூட 5 தொன் / ஹெக் அல்லது அதை விட அதிகமாகப் பெறமுடியவில்லை. மண்ணில் உள்ள பரிமாற்றமடையக்கூடிய K உள்ளடக்கங்களில் எதுவும் தானிய விளைச்சலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

- சேதன வளமாக்கிகள் மற்றும் இரசாயனப் பசளைகளின் நீண்ட காலப் பாவனையானது மண் வளத்திலும் பயிர் உற்பத்தியிலும் கொண்டுள்ள தாக்கம் பற்றி அறிவதற்குரிய கற்கை ஒன்று இடம் பெற்றது. சேதன வளமாக்கிகள் மற்றும் அசேதன வளமாக்கிகளின் இணைத்த பாவனையானது அவற்றின் தனித்தனியான பாவனையிலும் பார்க்க சிறப்பாகச் செயற்படுவதை மண் வள மதிப்பீடுகள் தெளிவுபடுத்தின. சேதன வளமாக்கிப் பிரயோகமானது மண்ணின் சேதன வளமாக்கி, K மற்றும் P ஆகியவற்றின் அளவுகளைப் பேணுவதில் உதவி புரிந்தது. மண் வளமானது நீண்ட காலத்திற்கு திடமானதாகப் பேணப்படுவதானது சேதன அல்லது அசேதனப் பசளைகளின் ஒவ்வொரு பருவத்திற்குமான தனித்தனியான பாவனை மூலம் வயல்களில் அவதானிக்கப்பட வில்லை. எனவே மேற்படி ஒவ்வொரு பருவத்துக்குரிய சேதன மற்றும் அசேதன வளமாக்கிகளின் இணைந்த பாவனையானது

மண் வளம் மற்றும் உச்ச விளைச்சல் ஆகியவற்றைப் பேணுவதில் முக்கியமானதாகக் காணப்புடுகின்றது. சேதன வளமாக்கிகளின் பாவனையானது நெற் பயிரில் பார உலோகங்களின் உள்ளெடுத்தலை குறைத்தது.

- பொசுபரசுப் பிரயோகத்தின் நீண்டகாலத் தாக்கத்தை அறிவதற்குரிய நீண்டகால வயற் பரிசோதனை ஒன்று இடம் பெற்றது. 2013 இல் இடம்பெற்ற மேற்படி பரிசோதனை முடிகளின்படி பொசுபரசு வளமாக்கிகளைப் பாவிக்காத போது மண்ணில் கிடைக்கக்கூடிய பொசுபரசின் அளவு குறைவடைவது அவதானிக்கப்பட்டது. எனினும் ஒவ்வொரு பருவத்திலும P பிரயோகிக்கப்பட்ட வயலில் கிடைத்த நெல் விளைச்சலுக்கும் ஒன்று விட்ட பருவங்களில் P பிரயோகித்த வயலில் கிடைத்த விளைச்சலுக்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படவில்லை.

- நனோ, வளமாக்கிகள் மெதுவாக விடுவிக்கப்படும் பசளைகளாகத் தொழிற்பட்டு பசளை வீண்விரயத்தைத் தவிர்க்கின்றது. நனோ தொழில் நுட்ப நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட N மற்றும் K வளமாக்கிகளில் பல்வேறு சூத்திரச் சேர்க்கைகள் பரிசோதிக்கப்பட்டன. நனோ K வளமாக்கிப் பாவனையின் போது குறிப்பிடத்தக்க விளைச்சல் அதிகரிப்பு பெறப்பட்டது. அத்துடன் நனோ N பசளைப் பாவனையானது N வளமாக்கிகளின் பாவனையை (யூறியா) 25% ஆல் குறைந்தது.

- பொருத்தமான சேதனப் பசளை பிரயோகத் தொழில் நுட்பச் சிபாரிசு ஒன்றினை விருத்தி செய்வதற்குரிய கற்கை ஒன்று இடம் பெற்றது. மேற்கட்டுப் பசளை மற்றும் அடிக்கட்டுப் பசளை என இரு தடவைகள் சேதனப் பசளைகளை பிரித்துப் பயன்படுத்தும் போது உள்ள வினைத்திறனானது அவற்றை ஒரு தடைவ பிரயோகிப்பதிலும் பார்க்க சிறப்பாக அமைந்தது.

- சேதன முறை மற்றும் ஒருங்கிணைந்த தாவரப் போசணை முகாமைத்துவத்தின் (IPNS) கீழான நெற் செய்கையில் பல்வேறு வகையிலான சேதன திரவச் சேர்க்கைகள் பரிசோதிக்கப்பட்டன. பரிசோதிக்கப்பட்ட சேர்க்கைகளில் ஜீவ அமிர்தம், பஞ்ச கவ்வியா மற்றும் கூட்டெருத் திரவம் ஆகியன உயர் விளைச்சலைக் கொடுத்து (முறையே 7.1, 5.8 மற்றும் 5.3 தொன் / ஹெக்) சிறப்பாகச் செயற்பட்டன. கூட்டெருத் திரவமானது திரவப் போசணை மூலம், பீடை விரட்டி மற்றும் பிறபொருள் எதிரிகள் எனப் பல்வேறு நோக்குடன் நெற் செய்கையில் பயன்படுத்த முடியும்.

## நீர் முகாமைத்துவம் மற்றும் GIS

### மானா வாரி மற்றும் நீர்ப்பாசன முறையின் கீழ் நெல் வர்க்கங்களின் மதிப்பீடு

- மானாவாரி மற்றும் நீர்ப்பாசன நிலமைகளுக்குரிய சிபாரிசு செய்யப்பட்ட 26 நெல் வர்க்கங்கள் தேர்வுக்குட்படுத்தப் பட்டன. நீர்ப்பாசன நிலமைகளின் கீழ் அனைத்து வர்க்கங்களும் சிறப்பாகச் செயற்பட்டன. அதேவேளை Bg 250 மற்றும் Bg 2907 ஆகிய இரண்டும் மானாவாரி நிலமைகளின் கீழ் சிறப்பாகச் செயற்பட்டன.

### மானாவாரி நெற் செய்கையில் நெல் விதைப்புக்குரிய நேரம்

- சிறுபோக நெற் செய்கையில் நெல் விதைப்புக்குரிய மிகப் பொருத்தமான திகதி ஒன்றை கண்டறிவதற்குரிய வயற் பரிசோதனை மற்றும் APSIM ஒறைசா கணணி மாதிரி ஆகியவற்றைப் பயன்படுத்தி மதிப்பீடு ஒன்று இடம் பெற்றது. மாதிரியை அளவை இட மண், காலநிலை மற்றும்

பயிர்த் தரவுகள் பயன்படுத்தப்பட்டன. அத்துடன் விதைப்பதற்குரிய வெவ்வேறு தினங்களை அறிவிதற்குரிய விபரப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. சிறுபோகத்தில் நெல் விதைப்பதற்கு சிறந்த காலமாக ஏப்பிரல் மாதம் முழுவதும் பொருத்தமானதாகக் காணப்படுகின்றது.

- இலங்கையில் இடைவலயப் பிரதேசங்களில் ஈரளிப்பான பருவங்களில் (பெரும்போகம்) நெல் விதைப்பதற்குரிய பொருத்தமான காலத்தைக் கண்டறிவதற்குரிய மாதிரிப் போலிகளின் முடிவுகளின் படி ஒக்ரேபர் மாதத்தில் முதல் வாரம் Bg 366 ற்கும் ஒக்ரோபர் இரண்டாவது வாரம் Bg 300 ற்கும் ஒக்ரோபர் மூன்றாவது வாரம் Bg 250 ற்கும் பொருத்தமானதாகக் காணப்பட்டது.

### தாழ்நில மானாவாரி நெற் செய்கையின் கீழ் பசளைப் பிரயோக நேரத்தின் மதிப்பீடு

- தாழ்நில மானாவாரி நெற் செய்கைக்குரிய (Bg 300) பொருத்தமான பசளைப் பிரயோக முறையைக் கண்டறிவதற்குரிய பரிசோதனை ஒன்று நடாத்தப்பட்டது. மழை வீழ்ச்சியுடன் பசளைப் பிரயோகம் மேற்கொண்டபோது விளைச்சலில் குறிப்பிடத்தக்க வேறுபாடு எதுவும் ஏற்படவில்லை. இலை நிற அட்டவணையின் அடிப்படையில் பசளைப் பிரயோகம் மேற்கொண்ட போதும் அதே விளைச்சலே கிடைத்தது. பயிர்ச் செய்கைப் பருவத்தில் போது மழை வீழ்ச்சியானது சாதாரணமானதாகவும் நன்றாகப் பகிரப்பட்டதாகவும் காணப்பட்டது.

### குருநாகல் மாவட்டத்தில் உள்ள மானாவாரிச் செய்கை நெல் வயல்களில் நீரின் கிடைப்புத் தன்மை பற்றிய ஆய்வு

- பொருத்தமான முகாமைத்துவப் பொறி மற்றும் பொருத்தமான வர்க்கங்களை அறிமுகப்படுத்துவதற்கு மானாவாரிச் செய்கை வயல்களில் நீரின் கிடைப்புத் தன்மை ஆகியன பற்றி ஆய்வு செய்வது முக்கியமானதாகும். உலர், இடை மற்றும் ஈரவலயம் ஆகிய மூன்று பிரதேசங்களையும் பிரதிநிதித்துவம் செய்யக் கூடிய வகையில் மண் நீர் கிடைப்புத் தன்மையை மதிப்பீடு செய்வதற்கு மாதாந்த மற்றும் வாராந்த அடிப்படையில் காலநிலை நீர் கிடைப்புத் தன்மை பற்றிய கணிப்பீடு ஒன்று இடம் பெற்றது. பெரும் போகம் மற்றும் சிறு போகங்களில் மானாவாரி நெற் செய்கைக்கு மிகவும் பொருத்தமான இடங்கள் மற்றும் செய்கைக் காலம் என்பன அடையாளம் காணப்பட்டதுடன் தகைப்புக் காலமும் பதியப்பட்டது. இடங்களுக்கு உரித்தான மண்வளப் பிரச்சினைகள் கண்டறியப்பட்டது. அடுத்த இரு பருவங்களில் மேற்படி கண்டு பிடிப்புக்கள் விவசாயிகளின் வயல்களில் மதிப்பிடப்படவுள்ளது.

## பயிராக்கவியல்

### தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்கப் பரிசோதனை (NCRVT)

ஒன்பது புதிய நெல் வம்சாவழிகள் நியம சோதனை வர்க்கங்களுடன் 12 இடங்களில் NCRVTஇல் பரிசோதிக்கப்பட்டன. விவசாயிகளின் நெல் வயல்களில் VATT நிகழ்ச்சிகளில் மேலதிக சோதனைக்காக பின்வரும் வம்சாவழிகள் தேர்வு செய்யப்பட்டன.

- Bg 08 - 1258 :- 3 1/2 மாத வெண்ணிற அரிசியை உடைய நாடு வகை நெல். இது Bg 357 மற்றும் Bg 359 ஆகியவற்றிலும் பார்க்க உயர் விளைவுடையது.
- Bg 08 - 1407 :- 3 1/2 மாத வெண்ணிற அரிசியை உடைய சம்பா நெல் வர்க்கம் Bg 358 இலும் பார்க்க உயர் விளைச்சல் உடையது
- Bg 08 - 1909 :- 4மாத வெண்ணிற அரிசியை உடைய நாடு வம்சாவழி Bg 403 இலும் பார்க்க உயர் விளைச்சல் மற்றும் முழு அரிசி விளைவும் உடையது

- 2013 சிறுபோகத்தில் 2 1/2, 3 மற்றும் 3 1/2 மாத முதிர்ச்சி வகுப்பினைச் சேர்ந்த 14 புதிய வம்சாவழிகள் பரிசோதிக்கப்பட்டன.

### வர்க்க இசைவாக்கப் பரிசோதனைச் செய்து காட்டல்கள் (VATT)

At - 09 - 861, At - 08 - 593, Ld - 8 - 6 - 7, At 08 - 1078, Bg 08 - 2398, At - 08 - 617, Bg 05 - 110 மற்றும் Bg 11 - 139 ஆகிய தொன்றுதொட்டுப் பாவனையில் உள்ள 8 புதிய வம்சாவழிகளின் இசைவாக்கச் சோதனைகள் 2012 / 2013 பெரும்போகத்தில் இடம் பெற்றது. பரிசோதிக்கப்பட்ட வம்சாவழிகளில் At - 07 - 800 (3 மாத வம்சாவழி) Bg - 07 - 997 (4 1/2 மாத வம்சாவழி) மற்றும் Bg - 07 -1350 (4 1/2 மாத வம்சாவழி) ஆகியவை உயர் விளைச்சலைத் தந்தன. அத்துடன் இவை நியம சோதனை வர்க்கங்களுடன் ஒப்பிடுகையில் கூடிய இசைவாக்கத் தன்மையைக் கொண்டிருந்ததுடன் LSVATT ற்காக தரம் உயர்த்தப்பட்டன.

### பாரிய அளவிலான வர்க்க இசைவாக்கச் சோதனைச் செய்து காட்டல்கள் (LSVATT)

விவசாயிகளின் வயல்களில் At - 07 800 (3 மாத வெள்ளை நாடு) At - 06 -631 (3 1/2 மாத சிறிய தானியத்தையுடைய வெள்ளைச் சம்பா) மற்றும் Bw - 1621 (3 1/2 மாத சிவப்பு நாடு) ஆகிய தொன்று தொட்டுப் பாவனையில் உள்ள வம்சாவழிகள் பரிசோதிக்கப்பட்டன. பல்வேறு இயல்புகளில் விவசாயிகளின் விரும்பத்தின் அடிப்படையில் மூன்று வம்சாவழிகளும் இசைவாக்கமுடையனவாக உறுதிப்படுத்தப் பட்டன.

### ஆரம்ப மற்றும் இடைவிட்ட வறட்சி தகைப்பு தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட நெல் வர்க்கங்களின் வேர் மற்றும் தண்டு ஆகியவற்றின் உருவவியல் இயல்புகள்

- பதினொரு நெல் வர்க்கங்களில் வறட்சி சகிப்புத் தன்மையுடன் தொடர்புடைய உருவவியல் இயல்புகள் தண்டு மற்றும் வேர்களில் கற்கைக்கு உட்படுத்தப்பட்டன.

- அதிக எண்ணிக்கையுடைய மயிர்களை யுடைய இலை, அதிகளவான தண்டின் உலர் திணிவு, அதிக வேர் நீளம் மற்றும் கனவளவு ஆகியன வறட்சித் தகைப்பின்கீழ் DSN 22 இயல்புபடுத்தப்பட்டதுடன் அதிக சகிப்புத் தன்மையுடைய வம்சாவழிகள் இனங் காணப்பட்டன. மாறாக Bg 357 வர்க்கமானது பரிசோதிக்கப்பட்ட வர்க்கங்களில் மிகவும் இலகுவில் பாதிப்படையக் கூடியதாக அடையாளம் காணப்பட்டது.

### குளிருக்குச் சகிப்புத் தன்மையுடைய நெல் வர்க்கங்கள் மற்றும் வம்சாவழிகளில் பெருக்கம்

- IRRI இலிருந்து குளிருக்கு சகிப்பத் தன்மையுடைய 40 நெல் வம்சாவழிகள் பெறப்பட்டன. 3 பாரம்பரிய வர்க்கங்கள் (கதியால், முடுகிறியல் மற்றும் சுதுவீ) மேல் நாட்டுப் பிரதேசங்களில் பெருக்கமடையச் செய்யப்பட்டன.

- 2013 சிறுபோகத்தில் PL- 16 பெருக்கமடையச் செய்யப்பட்டதுடன் குளிர் சகிப்புத் தன்மை நோக்குடன் எதிர்காலத்தில் தேர்வுக்காகப் பயன்படுத்தப்படவுள்ளது

### விதை உற்பத்தி

- தேசிய விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சிக்காக சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்களில் பின்வரும் அளவுகளில் இனவிருத்தியாளர் விதை உற்பத்தி செய்யப்பட்டது.

**அட்டவணை 1.4.2: 2013 இல் உற்பத்தி செய்யப்பட்ட இனவிருத்தியாளர் விதை அளவுகள்**

| விதை வகுப்பு மற்றும் வர்க்கம் | இனவித்தியாளர் விதை அளவு (kg) | | |
|---|---|---|---|
| | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் |
| **150 - 180 நாட்கள்** | | | |
| Bg 3-5 | 10.0 | | 10.0 |
| Bg 745 | 20.5 | | 20.5 |
| Bg 38 | 10.0 | | 10.0 |
| Bg 407 | 10.0 | | 10.0 |
| **4 மாதம்** | | | |
| Bg 379-2 | 193.5 | 53.3 | 247.0 |
| Bg 450 | 86.0 | 43.0 | 129.0 |
| Bg 403 | 150.5 | 21.5 | 172.0 |
| Bg 454 | 21.5 | | 21.5 |
| Bg 406 | 21.5 | | 21.5 |
| **3 1/2 மாதங்கள்** | | | |
| Bg 94-1 | 164.0 | 143.5 | 307.5 |
| Bg 352 | 164.0 | 184.5 | 348.5 |
| Bg 357 | 123.0 | 102.5 | 225.5 |
| Bg 358 | 184.5 | 215.0 | 399.5 |
| Bg 359 | 164.0 | 122.5 | 286.5 |
| Bg 360 | 143.5 | 123.0 | 266.5 |
| Bg 366 | 220.0 | 240.0 | 460.0 |
| Bg 369 | | 100 | 100 |
| **3 மாதங்கள்** | | | |
| Bg 300 | 120.0 | 180.0 | 300.0 |
| **80 நாட்கள்** | | | |
| Bg 250 | 61.5 | 61.5 | 123 |
| **மொத்தம்** | **1868.0** | **1590.5** | **3458.5** |

- Bg 304 மற்றும் Bg 305 ஆகிய வர்க்கங்கள் பெருக்கமடையச் செய்யப்பட்டதுடன் ஒவ்வொன்றிலும் இருந்து 80kg நெல் உற்பத்தி செய்யப்பட்டது.

- விதை நெல் உற்பத்திக்காக Bg 1165 - 6 எனும் வம்சாவழியில் இருந்து 1435kg விதை உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகள் மற்றும் அழுத்தறம விதைப் பண்ணை ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டன. மேற்படி நெல் வர்க்கமானது ஏற்றுமதித் தரமுடைய அரிசியை உடையதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

- செய்கை பண்ணப்படும் நெல் வர்க்கமான ‘MA2’ ஆனது பிஸ்கட் உற்பத்திக்கு பொருத்தமானதாக உள்ளது. அத்துடன் இதில் 45,960kg விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

- பிரபல்யமான நெல் வர்க்கங்களில் (அடிப்படை, பதிவு செய்யப்பட்டது, மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்டது) 7851.5 kg விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டது.

### விசேட செயற்றிட்டங்கள்

- பின்வரும் சிறிய அளவிலான விசேட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

- பல்சூழல் பரிசோதனை (IRRI இனால் வழங்கப்பட்ட நிதி) இச் செயற்றிட்டத்தின் நோக்கம்: இனவிருத்தி வம்சாவழிகளின் பிரேரிப்பு, முன்னேற்றம் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றின் மூலம் இலகுவான செயன்முறை ஒன்றை உருவாக்குதல் மற்றும் பங்குபற்றும் நாடுகளிடையே மூலவுயிருரு ஊக்குவிப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பனவாகும்.

- உலர் நெல் விதைப்பு (புழுதி விதைப்பு) நெற் செய்கைக்குரிய தொழில்நுட்பப் பொதி ஒன்றை ஏற்படுத்துதல் (IRRI இனால் நிதி வழங்கப்பட்டது) இச் செயற்றிட்டத்தின் நோக்கம்: மேட்டு நிலங்களில் நீர்ப்பாசன நிலமைகளின் கீழ் உலர் நெல் நேரடி விதைப்புக்குப் (IDDS) பொருத்தமான தொழில்நுட்பப் பொதி ஒன்றை விருத்தி செய்வதாகும்.

- பசுமை உயர் நெல் (IRRI இனால் நிதி வழங்கப்பட்டது) இச் செயற்றிட்டத்தின் நோக்கம்: உயர் போசணை வினைத்திறன் மற்றும் தகைப்புக்கு எதிர்ப்புடைய நெற் செய்கை வர்க்கங்களை விருத்தி செய்து தரம் உயர்த்துவது ஆகும்.

- ஆசியாவில் நெல் விளைச்சல் இடைவெளியை இல்லாமல் செய்தல் (IRRI இனால் நிதி வழங்கப்பட்டது)

- APSIM ORYZA வுடன் பயிர் மாதிரி அணுகுமுறை தயார்ப்படுத்தல். (SAS இனால் நிதி வழங்கப்பட்டது.) இச்செயற்திட்டத்தின் நோக்கம் தெற்கு ஆசியாவில் உணவுக் காப்பை தரமுயர்த்துவதற்கு பயிர் செய்கை மாதிரி கொள்ளவை விருத்தி செய்தல் மற்றும் நீர் மூலங்களின் நிலைபேறான பயன்பாட்டை உறுதி செய்தல் என்பன ஆகும்.

- இலங்கையின் முக்கிய உணவு மூலமாகக் காணப்படும் நெல் உற்பத்தியில் தன்னிறைவை அதிகரிப்பதற்குரிய உற்பத்தித் தொழில் நுட்பங்களின் விருத்தி (AFACI - கொரியா வினால் நிதி வழங்கப்பட்டது) இச் செயற்றிட்டத்தின் நோக்கம்: இலங்கையில் உள்ள உவர்த் தன்மையால் பாதிக்கப்பட்டுள்ள நெற் செய்கைப் பிரதேசங்களுக்குரிய நெல் உற்பத்தித் தொழில்நுட்பத்தை விருத்தி செய்தல் ஆகும்.

- தாழ்நில ஈரவலய நெல் உற்பத்தியை அதிகரித்தல் (NARP வினால் நிதி வழங்கப்பட்டது) இலங்கையின் தாழ்நில ஈரவலய நெல் வயல்களில் இரும்பு நஞ்சாக்கம், உவர்த்தன்மை வெள்ள நிலமை, மற்றும் பொக் மண் போன்ற உயிர்ப்புள்ள மற்றும் உயிர்ப்பற்ற தகைப்புகளுக்கு எதிராக நெல் உற்பத்தியை அதிகரிப்பதை முக்கிய நோக்காகக் கொண்டு இச் செயற்றிட்டம் இடம் பெற்றது.

- உயிர்ப்பற்ற தகைப்புகளுக்கெதிரான நெல் வர்க்கங்களின் விருத்தி. அவை: வெள்ள நிலமை, உவர்த் தன்மை, பொக் மண், வறட்சியில் இருந்து தப்பி வாழுதல் /சகிப்புத் தன்மை, மற்றும் இரும்பு நஞ்சாக்கம் என்பனவாகும். (NARP நிதியுதவி வழங்கியது) இச் செயற்றிட்டத்தின் நோக்கம்: நாட்டில் செய்கை பண்ணப்படு கின்ற பிரபல்யமான நெல் வர்க்கங்களுடன் மேற்படி உயிர்ப்பற்ற தகைப்புக்களுக்குரிய எதிர்ப்புத் தன்மையை ஒன்று சேர்த்தல் ஆகும்.

- உயிர்ப்பற்ற தகைப்புகளுக்கு எதிரான நெல் வர்க்கங்களின் விருத்தி: வெள்ள நிலமை, உவர்த்தன்மை வறட்சிக் காப்பு / சகிப்புத் தன்மை மற்றும் இரும்பு நஞ்சாக்கம் (NARP இனால் நிதி வழங்கப்பட்டது) இச் செயற்றிட்டத்தின் நோக்கம்: தற்போது நாட்டில் செய்கை பணணப்படுகின்ற நெல் வர்க்கங்களுடன் மேற்படி உயிர்ப்பற்ற தகைப்புகளுக்குரிய சகிப்புத் தன்மையை ஒன்று சேர்த்தல் ஆகும்.

- விவசாயிகளின் நெல் வயல்களில் வினைத்திறனான பசளைப் பாவனைத் தொழில்நுட்பத்தின் இசைவாக்கத்தைப் பரிசோதித்தல் (NARP இனால் நிதி வழங்கப்பட்டது) RRDI இல் விருத்தி செய்யப்பட்ட வினைத்திறனுடைய பசளைப் பாவனை தொழில் நுட்பத்தின் இசைவாக்கத்தினை விவசாயிகளின் வயல் பரிசோதிப்பதே இச் சோதனையின் நோக்கமாகும்.

- இலங்கையில் ஈரவிதைப்பு நெற் செய்கையில் களைநெல்லில் முக்கியத்துவம் (NARP இனால் நிதி வழங்கப்பட்டது) இச் செயற்றிட்டத்தின் நோக்கம்: ஒருங்கிணைந்த அணுகுமுறை தொழில்நுட்பப் பொதியை வயற் செய்து காட்டல்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் மூலம் விவசாயிகளிடையே பரப்புதலாகும்.

- குருநாகல் மாவட்டத்தில் மானாவாரிச் செய்கைக்குரிய நெல் வயல்களில் நெற் செய்கைக்குரிய உத்தம பயன்பாட்டுக்குரிய நீரின் கிடைப்புத் தன்மையை மதிப்பிடல் (NARP இனால் நிதி வழங்கப்பட்டது) இச் செயற்றிட்டத்தின் நோக்கம்: குருநாகல் மாவட்டத்தில் மானாவாரி நெற் செய்கை நிலங்களில் நீர் கிடைப்புத் தன்மையை மதிப்பிடல் ஆகும்.

## தொழில்நுட்பப் பரம்பல்

- நெற் செய்கைக்குரிய பசளை சிபாரிசு பெறப்பட்டு சூத்திரமிடப்பட்டது. ஈர மற்றும் உலர் வலய நிலமைகளுக்குரிய இலை வர்ண அட்டவணை ஒன்று சிங்களத்தில் தயாரிக்கப்பட்டது. கொழும்பு, இரத்தினபுரி, மாத்தறை, காலி, கேகாலை, மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விரிவாக்கல் உத்தியோகத்தர்களிடையே 700 இலை வர்ண அட்டவணைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. உலர் மற்றும் இடை வலய விரிவாக்கல் உத்தியோகத்தர்களிடையே மேலும் 100 நிற அட்டவணைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

- உப்புச் சகிப்புத்தன்மை வம்சாவழிகளின் இசைவாக்கத்தினை உறுதிப்படுத்துவதற்காக 76 செய்து காட்டல் துண்டங்கள் புத்தளம் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டன. Bg 369 எனும் வர்க்கத்துடன் இரு உப்புச் சகிப்புத் தன்மையுடைய நெல் வம்சாவழிகள் (Bg 5 - 110 மற்றும் Bg 4 - 91)பயன்படுத்தப்பட்டன.

- சேகரிக்கப்பட்ட தகவல்களின் படி 3 1/2 மாத வயது வகுப்புக்குரிய நெல் வர்க்கமான Bg4-91 ஆனது உவர்தன்மைக் குரிய சகிப்புத் தன்மையை அதிகளவில் கொண்டிருந்தமையால் பெரும்பாலான விவசாயிகளால் விரும்பப்பட்டது.

- கொழும்பு, கம்பகா, மாத்தளை, அனுராதபுரம், பொலநறுவை களுத்துறை, நுவரெலியா, பதுளை, காலி, மாத்தறை மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் மற்றும் விரிவாக்கல் அலுவலர்களுக்கு நாற்று நடுதல் மற்றும் வீசி விதைத்தல் முறைகளுக்கான நாற்று மேடை மற்றும் வயல் நிர்மாணம் தொடர்பிலான 24 செய்து காட்டல்கள் நடாத்தப்பட்டன.

- கொழும்பு, களுத்துறை, இரத்தினபுரி, காலி, மாத்தளை மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் உள்ள விரிவாக்கல் அலுவலர்களுக்கு இலை வர்ண அட்டவணையைப் பயன்படுத்தி வினைத் திறனான N பசளை முகாமைத்துவம் தொடர்பில் 6 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

- மாத்தறை மற்றும் பதுளை மாவட்டங்களில் விவசாயிகள் மற்றும் விரிவாக்கல் அலுவலர்களுக்காக புதிய பசளைச் சிபாரிசு தொடர்பில் 6 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் தேசிய பசளைச் செயலக கள அலுவலர்களுக்காக இரு விழிப்புணர்வு நிகழ்ச்சியும் நடாத்தப்பட்டன.

- ஆனமடுவ விவசாயப் பிரிவில் உள்ள விவசாயிகளுக்கு நெல் வயல்களில் மண்ணானது உவர்த்தன்மைக்கு உள்ளாதல் மற்றும் மண்ணில் உவர்தன்மையை அகற்றுதல் ஆகியன தொடர்பில் ஓர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

- விவசாயிகள் மற்றும் விரிவாக்க அலுவலர்களுக்காக களைநெல் மற்றும் களைக் கட்டுப்பாடு தொடர்பில் ஒரு நாள்

வயல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 18 நடாத்தப்பட்டன. (மொத்தமாக 565 பேர் பங்கு பற்றினர்)

- விவசாயிகள், விரிவாக்கல் அலுவலர்கள் பல்கலைகழக மாணவர்கள், மற்றும் விவசாயக் கல்லூரி மாணவர்களுக்கு கலப்பின விதை உற்பத்தி தொடர்பில் 10 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- RRDI இன் நெல் உற்பத்தி தொழில் நுட்ப நிலையமானது அட்டவணை 1.4.3 இல் தரப்பட்டுள்ள பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தியது.

**அட்டவணை 1.4.3 நெல் உற்பத்தித் தொழில் நுட்ப நிலையம் 2013 இல் நடாத்திய பயிற்சி நிகழ்ச்சிகளின் தொகுப்பு**

| நிகழ்ச்சிகளின் வகை | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்கு பற்றியோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| விவசாயிகளுக்கான பயிற்சிகள் (1 நாள்) | 21 | 344 |
| விவசாயிகளுக்கான பயிற்சிகள் (2 / 3 நாட்கள்) | 03 | 114 |
| விவசாயத் தொழில்நுட்ப அலுவலர் பயிற்சிகள் (1 நாள்) | 16 | 547 |
| பாடவிதான அலுவலர் நிகழ்ச்சிகள் (பருவ காலம்) | 03 | 90 |
| தனியார்துறை பயிற்சிகள் (1நாள்) | 03 | 130 |
| பல்கலைக்கழக மற்றும் டிப்ளோமா மாணவர் வருகை | 10 | 357 |
| பாடசாலை மாணவர் வருகைகள் | 9 | 1159 |
| **மொத்தம்** | **65** | **2741** |

- விவசாயிகளால் கொண்டு வரப்பட்ட 21 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. அத்துடன் நோய் பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய பொருத்தமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.
- எட்டு விவசாயிகளின் வயல்கள் பரிசோதிக்கப்பட்டன. அத்துடன் நோய் பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.
- DOA இன் ஏனைய பிரிவுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட 3 பயிற்சி நிகழ்ச்சிகளில் வளவாளர்களாக சில அலுவலர்கள் கலந்து கொண்டனர்.
- RRDI இனுள் நெற் செய்கை தொடர்பில் செய்து காட்டல் துண்டங்கள் ஸ்தாபிக்கப்பட்டன.
- ஒன்பது வானொலி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. (நெல்லில் தற்காலத்தில் காணப்படுகின்ற நோய்கள் தொடர்பில் 2 நிகழ்ச்சிகள், நெற் செய்கைக்குரிய புதிய பசளைச் சிபாரிசு தொடர்பில் நான்கு நிகழ்ச்சிகள், நெற் பீடைகள் மற்றும் நோய்கள் தொடர்பில் 2 நிகழ்ச்சிகள், நெற் செய்கையில் களைக் கட்டுப்பாடு மற்றும் களை நெல் தொடர்பில் 2 நிகழ்ச்சிகள்)
- ரூபாவாகினி தொலைக்காட்சி அலைவரிசையில் 3 ஒளிப்பட நிகழ்ச்சிகள் ஒளிப்பரப்பப்பட்டன. (நெற் செய்கையில் புதிய பசளைச் சிபாரிசு தொடர்பில் இரு நிகழ்ச்சிகள், நெல்லில் கட்மியம் செறிவாக்கம் தொடர்பில் ஒரு ஒளிப்பட நிகழ்ச்சி)

### பங்கு பற்றிய பயிற்சிகள், மாநாடுகள், பயிற்சிப் பட்டறைகள்

RRDI அலுவலர்கள் பின்வரும் பயிற்சிகள், மாநாடுகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் போன்றவற்றில் கலந்து கொண்டனர்

- புது ஆராய்ச்சி அலுவலர்களுக்கு தாவர நோயியல் தொடர்பிலான நிகழ்ச்சி 07 - 08 ஜனவரி 2013 இல், HORDI கன்னொறுவை.
- உரிமைப் பத்திரம் வரைதல் தொடர்பிலான பயிற்சிப் பட்டறை - 28 ஜனவரி 01 பெப்ரவரி 2013 தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் கொழும்பு
- நிலைபேறான பசளைப் பயன்பாடு தொடர்பில் பயிற்சி, 18 பெப்ரவரி 01 மார்ச் 2013, PTC நெதர்லாந்து
- SAARC அவுஸ்திரேலியா செயற்றிட்டம் 3வது பயிற்சி பட்டறை மற்றும் இறுதி மீளாய்வுக் கூட்டம், 10 - 14 மார்ச் 2013, SAARC விவசாய நிலையம் SAC பங்களாதேஷ்
- மூலவளப் பற்றாக்குறையுடைய ஆபிரிக்க மற்றும் ஆசியாவுக்குரிய கிறீன் சுப்பர் நெல் - நிலை II செயற்றிட்டம் ஆரம்பக்கூட்டம், மார்ச் 12 - 13 2013, சன்யா, சீனா: சீன கல்வி விவசாய விஞ்ஞானம்
- பங்குபற்றல் தாவர இனவிருத்தி தொடர்பில் பிராந்திய திறன் விருத்தி பயிற்சி செயற்றிட்டம் - திட்டமிடல் பயிற்சிப் பட்டறை 9-14 மே 2013, ISTI கன்னொறுவை DOA.
- பயிர் மாதிரியிடல் பயிற்சி, STICS 13 - 17 மே, பயிர் விஞ்ஞான பிரிவு, விவசாயப் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை.
- மூலக்கூற்று உயிரியல் தொடர்பில் ஓர் பயிற்சிப் பட்டறை: 10 - 12 ஜுலை 2013, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், கொழும்பு
- நிரந்தர பயிர் சிகிச்சை கையேடு 1 மற்றும் 2: தெரிவு செய்யப்பட்ட தேசிய பயிற்றுவிப்பாளர்களுக்குரிய பயிற்சி - பயிற்சிப் பட்டறை, 3 - 8 ஜுன் 2013 PGRC கன்னொறுவை.
- நிரந்தரப் பயிர்ச் சிகிச்சை தொடர்பிலான பயிற்சிப் பட்டறை. தெரிவு செய்யப்பட்ட தேசிய பயிலுனர்களுக்குரியது. நான்காவது பகுதி, ஜுன் 23-26, 2013, PGRC கன்னொறுவை.
- உபகரணங்களைக் கையாளுதல் தொடர்பிலான பயிற்சி, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், கொழும்பு: ITI.
- காற்றின்றிய நிலமைகளின் கீழ் முளைத்தலுக்குரிய சகிப்புத் தன்மை பரம்பரை அலகுகளை ஒன்று சேர்ப்பதன் மூலம் நேரடி, நெல் விதைப்பு மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் உற்பத்தியை அதிகரித்தல் தொடர்பிலான ஆரம்பத் திட்டமிடல் செயற்றிட்ட ஒன்றுகூடல், 13 - 14 ஆகஸ்ட் 2013 IRRI பிலிப்பைன்ஸ் IRRI.
- ஆசிய உணவு மற்றும் விவசாயக் கூட்டுறவு ஆரம்பிப்பு புதிய பான் - ஏசியன் மற்றும் பிராந்திய செயற்றிட்டம் (AFACI) தொடர்பில் முக்கிய புலன் ஆய்வாளர்களின் ஒன்று கூடல், 09 - 13 செப்ரம்பர், 2013 பேங்கொக், தாய்லாந்து : APO.
- வாழ்வாதாரம், உயிர்ப் பல்வகைமை மற்றும் சூழல் தொகுதி சேவைகள் தொடர்பிலான தேசிய மாநாடு, 26 - 27 செப்ரெம்பர், 2013, இலங்கை நிறுவன மன்றம், கொழும்பு.
- நிரந்தர பயிர்ச் சிகிச்சைக் கையேடு - 3 தெரிவு செய்யப்பட்ட தேசிய பயிற்றுவிப்பாளர்களுக்கரிய பயிற்சி- பயிற்சிப் பட்டறை 28 ஒக்ரோபர் - 02 நொவம்பர் 2013 PGRC கன்னொறுவை.
- வாழ்வாதாரம் மற்றும் காலநிலை மாற்றத்திற்குரிய இசைவாக்கம் ஆகியவற்றுக்கு இலங்கையின் சூழல் தொகுதிகளைப் பயன்படுத்தல் மற்றும்

தாவரப் பல்வகைமையைப் பாதுகாத்தல் ஆகியவை தொடர்பில் ஆரம்பப் பயிற்சி - பயிற்சிப் பட்டறை ஒன்று இடம் பெற்றது (UNEP / GEF) சூழல் மற்றும் மீளப் புதுப்பிக்கக்கூடிய சக்தி வள அமைச்சு, 22 - 23 ஒக்ரோபர் 2013, கண்டி.

- ஆசிய பசுபிக் களை விஞ்ஞான அமைப்பின் 24 வது மாநாடு: 22 - 25 ஒக்ரோபர் 2013, பண்டங், இந்தோனேசியா.
- மூலக்கூற்று உயிரியல் தொழில்நுட்ப பயிற்சி : 4 - 7 நொவெம்பர் 2013, விவசாய உயிர் தொழில்நுட்ப நிலையம், பேராதனை.
- UPOV உடன் இணைந்த தாவரவர்க்கப் பாதுகாப்புத் தொகுதிகளின் நன்மைகள்: 25 - 26 நொவம்பர் 2013, தாவர கருமூலவள நிலையம், PGRC, பேராதனை
- ஏழாவது சர்வதேச நெல் கருமூலவள ஒன்று கூடல் : 5 - 8 நொவம்பர் 2013, மணிலா, பிலிப்பைன்ஸ், IRRI.
- உயிர் தொழில்நுட்ப உரிமையாளர்களுக் குரிய இணைப்புப் பயிற்சிப் பட்டறை: தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குரிய புதுமை அணுகுமுறை, 21 நொவெம்பர் 2013 கொழும்பு: விஞ்ஞானத் தொழில்நுட்பம் மற்றும் புதுப்பித்தல் இணைப்புப் செயலகம்
- SAARC பிராந்தியங்களில் உவர் நில மண்ணை வளமாக்கும் தொகுதிகளுக்குரிய படிமுறைகள் மற்றும் சிறந்த செயன்முறைகள் தொடர்பில் பிராந்திய வல்லுனர்களின் ஆலோசனைக் கூட்டம் 27 - 29 நொவம்பர் 2013, ஹரியானா இந்தியா
- AGRINET பயன்பாட்டாளர்களின் ஒன்றுகூடல் இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகளுக்குரிய நிறுவனம் (CARP) கொழும்பு
- நிரந்தரப் பயிர்ச் சிகிச்சை நிகழ்ச்சி தொடர்பிலான பயிற்சிப் பட்டறை (PCCP), 19-20, டிசம்பர், 2013, கண்டி.

## ஏனைய செயற்பாடுகள்

- பாரம்பரிய நடுகை வர்க்கங்கள் அறிமுக மற்றும் மேம்படுத்தப்பட்ட வம்சாவழிகள் அடங்கலாக 950 நெல் குலவகைகள் ஸ்தாபிக்கப்பட்டன. அத்துடன் விதை மாதிரிகள் RRDI இன் குறுகிய கால மூலவுயிருப் பாதுகாப்புப் பிரிவில் பாதுகாக்கப்பட்டது ஏனைய ஆராய்ச்சி நிலையங்கள், விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழகங்கள், NGO க்கள், மற்றும் ஈடுபாடுடைய ஏனையோரிடையே விதை மாதிரிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.
- விவசாயக் கல்லூரிக மாணவர்கள் 12 பேருக்கு அவர்களது கூட்டுறுப் பயிற்சி நெறியினை மேற்கொள்வதற்குரிய வசதிகள் வழங்கப்பட்டன. அத்துடன் 5 பட்டப் படிப்பு மாணவர்கள் மற்றும் 4 பட்டபின் கற்கை நெறி மாணவர்கள் ஆகியோருக்கு அவர்களது ஆராய்ச்சி செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்குரிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.
- நெல் உற்பத்தித் தொழில்நுட்ப நிலயத்தின் விற்பனைப் பிரிவில் ரூபா 104446.00 பெறுமதியுடைய DOA இன் பிரசுரங்கள் மற்றும் CD க்கள் (முறையே 1356 மற்றும் 42) விற்பனை செய்யப்பட்டன.
- விவசாயிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற நெல் உற்பத்தி செயன்முறைகளுக்கு பசுந்தாட் பசளைகளை உள்ளகரீதியில் உற்பத்தி செய்து கொள்வதற்கு சணல் மற்றும் Sesbania rostrata விதைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

## 2014 ற்குரிய திட்டம்

### ஆராய்ச்சி

- 2 1/2, 3 , 3 1/2, 4-4 1/2 மற்றும் 5-6 மாத வயது நெல் வர்க்கங்களில் வர்க்க மேம்பாடு மற்றும் பெருக்கம்.
- 2 1/2, 3 , 3 1/2, 4-4 1/2 மற்றும் 5-6 மாத வயது நெல் வம்சாவழிகளில் கலப்பின விருத்தி மற்றும் தெரிவு.
- 2 1/2, 3 , 3 1/2, 4-4 1/2 மற்றும் 5-6 மாத வயது வகுப்புக்குரிய தொன்றுதொட்டுப் பாவனையில் உள்ள நெல் வம்சாவழிகளின் PYT மற்றும் MYT மதிப்பீடு.
- உயிர்ப்புள்ள மற்றும் உயிர்ப்பற்ற தகைப்புக்களின் சகிப்புத் தன்மை மற்றும் தரமான நெல் வர்க்க விருத்தக்குரிய பின்முகக் கலப்பு, குறியீட்டு உதவியாளர் தெரிவு மற்றும் விதை வளர்ப்பு.
- கலப்பின வீரிய இனவிருத்தியின் ஊடாக புதிய கலப்பினப் பிறப்பாக்க விருத்தி.
- தெரிவு செய்யப்பட்ட கலப்பின வம்சாவழிகளில் கரு விதை உற்பத்தி.
- தெரிவு செய்யப்பட்ட பாரம்பரிய நெல் வர்க்கங்களின் பெருக்கம் மற்றும் தூய்மையாக்கம்.
- பெருக்கத்தின் ஊடாக மூலவுயிருக்களின் பாதுகாப்பு.
- வெவ்வேறு இயல்புகளுக்காக பாரம்பரிய மற்றும் சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்களின் தேர்வு.
- முக்கிய நெற் பீடைகளின் நடத்தை மற்றும் பீடை நாசினிகளின் செயற்றிறன் மதிப்பீடு.
- நெற் பயிரில் ஏற்படுகின்ற நோய்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய முறைகளின் ஆய்வு.
- நெற் செய்கையிள் போது களைகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய பொருத்தமான முறைகளின் மதிப்பீடு.
- களை நெல் (Oryzae sative spontaneaa) ஆய்வு.
- தாழ் நிலங்களில் மானாவரி நெற் செய்கைக்குரிய பசளைப் பிரயோக நேரத்தை மதிப்பீடு செய்தல்.
- மானாவரி நெற்செய்கையின் போது நீர் கிடைக்கும் தன்மை மற்றும் அதனோடு தொடர்புடைய தொழில் நுட்பங்களின் ஆய்வு.
- மானாவரி நெற் செய்கைக்குரிய பயிர் தயார்ப்படுத்தல் மற்றும் மாதிரியிடல்.

### விதை உற்பத்தி

- சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்களில் இனவிருத்தியாளர் விதை உற்பத்தி.
- Bg 1165 - 6 எனும் ஏற்றுமதித் தரமுடைய நெல்வர்க்கத்தில் அடிப்படை விதை உற்பத்தி.
- பிரபல்யமான நெல் வர்க்கங்களில் வர்த்தக விதை நெல் உற்பத்தி.

### விசேட செயற்றிட்டங்கள்

சர்வதேச நிறுவனங்கள் மற்றும் NARP ஆகியவற்றின் நிதியுதவியுடன் பின்வரும் சிறிய அளவிலான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

- பல் - சூழல் பரிசோதனை.
- உலர் நெல் விதைப்பு நெற் செய்கைக்குரிய சிறந்த தொழில்நுட்பப் பொதியின் விருத்தி.
- இலங்கை மக்களின் முக்கிய உணவின் தன்னிறைவில் அதிகரிப்பை ஏற்ப்படுத்துவதற்காக நெல் உற்பத்தி தொழில்நுட்பங்களின் விருத்தி.

- கிறீன் சுப்பர் நெல்.
- ஆசியாவில் நெல் உற்பத்தி இடைவெளியை இல்லாமல் செய்தல்.
- நேரடி நெல் விதைப்புப் பிரதேசங்களில் நெல் முளைக்கும் காலங்களில் ஏற்படுகின்ற காற்று இன்றிய நிலமையைத் தாங்குகின்ற பரம்பரை அலகுகளை ஒன்று சேர்ப்பதன் மூலம் உற்பத்தியை அதிகரித்தல்.
- தாழ்நாட்டு ஈரவலயப் பிரதேசங்களில் நெல் உற்பத்தியை அதிகரித்தல்.
- உயிர்ப்பற்ற தகைப்புகளுக்கு எதிர்ப்புடைய நெல் வர்க்கங்களின் விருத்தி: வெள்ள நிலமை, உவர்த்தன்மை, வறட்சியில் இருந்து விடுபடல் / தாங்கி வளருதல், மற்றும் இரும்பு நஞ்சாக்கம் போன்ற தகைப்புக்கள்.
- இலங்கையின் ஈரவிதைப்பு நெல் வயல்களில் களைநெல்லின் முகாமைத்துவம்.
- குருநாகல் மாவட்டத்தில் உள்ள மானாவரி நெல் வயல்களில் சிறந்த நெல் உற்பத்திக்குரிய நீர்ப்பயன்பாட்டுக்கு ஏற்ப நீரின் கிடைப்புத் தன்மை தொடர்பான மதிப்பீடு.

## தொழில்நுட்பப் பரம்பல்

- DOA இன் அலுவர்கள், பல்கலைக்கழ மாணவர்கள், விவசாயக் கல்லூரி மாணவர்கள், விவசாயிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் போன்றோர்க்கு நெல் இனவிருத்தி, நெல் வர்க்கங்கள் மற்றும் விதை நெல் உற்பத்தி தொடர்பில் பயிற்சிகள்.

## நெல் ஆராய்ச்சி நிலையம் - அம்பலாந்தோட்டை

- மேம்படுத்திய சிவப்பு நிற அரிசி, உவர் நிலை சகிப்புத் தன்மை, குறுகிய கால முதிர்ச்சி, உயர் விளைச்சல் மற்றும் மிகவும் தரமுடைய தானிய தரத்தையுடைய நெல் வர்க்கங்களின் விருத்தியை முதன்மை நோக்கமாகக் கொண்டு அம்பலாந்தோட்டை நெல் ஆராய்ச்சி நிலையம் இயங்குகின்றது. அத்துடன் சிபாரிசு செய்யப்பட்டுள்ள 'At' வர்க்கங்களில் இனவிருத்தியாளர் விதை உற்பத்தி செய்வதையும் மேலதிக தலையாய கடமைகளாகக் கொண்டுள்ளது.

## முன்னேற்றம்

### ஆராய்ச்சி

#### நெல் வர்க்க மேம்பாடு

##### புதிய நெல் வர்க்கங்கள்

- **At 309:-** பொதுவான நெற் செய்கைக்குரியதும், நீண்ட, மெல்லிய, வெள்ளை நிற, மணமுடையதுமான அரிசியைக் கொண்ட 3 மாத வயது வர்க்கம் ஆகும். பிஸ்கட் மற்றும் அரிசி மாவைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்ற ஏனைய உற்பத்திகளுக்கு இது சிறந்ததொரு வர்க்கம் ஆகும். சரிந்து விழும் தன்மை அற்றதும், முக்கிய நோய் பீடைகளுக்க ஓரளவு எதிர்ப்புடையதும் 7.1 தொன் / ஹெக் என்னும் விளைச்சலைத் தருகின்ற வர்க்கமும் ஆகும்.
- **At 06 - 631 :-** சிறந்த சமைக்கும் தரம், சிறந்த தோற்றம் வெள்ளை நிறம் வாசனை மற்றும் சிறிய அரிசியையுடைய 3 1/2 மாத சம்பா நெல் வர்க்கம் ஆகும். இவ்வம்சாவழியானது DUS தெளிவாக்கத்திற்காக விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையினரிடம் ஒப்படைப்பட்டுள்ளது.
- **At 676:-** உயர் விளைச்சல், முக்கிய நோய் பீடைகளுக்கு எதிர்ப்புத் தன்மை மற்றும் வெள்ளை நிற அரிசியை உடைய நாடு வகை 3 மாத நெல் வர்க்கம் ஆகும். இவ்வம்சாவழியானது DUS தெளிவாக்கத்திற்காக விதை

அத்தாட்சிப்படுத்தல் சேவையினரிடம் ஒப்பக்கப்பட்டுள்ளது.

### மூன்று மாத வயது வகுப்பு

- நாற்பத்து எட்டு புதிய இனங்கலப்புகள் மேற்கொள்ளப்பட்டன. விரைவாக தனிப்படுத்துகைக்கு உட்படுகின்ற 31 சந்ததிகள் தெரிவு செய்யப்பட்டு பாராமரிக்கப்பட்டன. PYT பரிசோதனைக்கு 29 உயர்தர வழித்தோன்றல் வம்சாவழிகள் தெரிவு செய்யப்பட்டன. MYT பரிசோதனைக்காக 4 உயர்தர இனவிருத்தி வம்சாவழிகள் தெரிவு செய்யப்பட்டன. At 08 - 1283 At 10 - 1350, At 09 - 1024 மற்றும் At 09 - 898 ஆகியவை உன்னதமான வம்சாவழிகளாக அடையாளம் காணப்பட்டு NCVRT இல் மதிப்பீடு செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

### 3 1/2 மாத வயது வகுப்பு

- எண்பது இனங்கலப்புகள் இடம் பெற்றன. PYT யில் விளைச்சல் திறனைப் பரிசோதிப்பதற்காக 13 உன்னத வம்சாவழிகள் தெரிவு செய்யப்பட்டன. அத்துடன் PYT இல் இருந்து தெரிவு செய்யப்பட்ட 12 வம்சாவழிகள் MYT இல் மேலதிக மதிப்பீடு செய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டன.

## பயிராக்கவியல்

### ‘மாவீ’ (Mawee) ஐ நடுகை செய்வதற்குரிய காலம்

- மேம்படுத்திய “மாவீ” வர்க்கங்களை நடுகை செய்வதற்குரிய சிறந்த நேரம் ஆய்வுக்குட்ப்படுத்தப்பட்டது. Bg 38 மற்றும் Bg 745 ஆகிய “மாவீ” வர்க்கங்களை செய்கை பண்ணுவதற்கு பொருத்தமான காலமாக ஓகஸ்ட் தொடக்கம் செப்ரம்பர் இறுதி வரையுமான காலப் பகுதி கண்டறியப்பட்டது.

### N - வளமாக்கிகளுக்கு At 05 - 1382 வர்க்கத்தின் துலங்கல்

- புதிதாக விருத்தி செய்யப்பட்ட At 05 - 1382 வம்சாவழியானது 150 kg / ஹெக் என்ற அளவு வரையிலுமான N - பசளைப் பிரயோகத்தின் போது At 306 எனும் சோதனை வர்க்கத்துடன் குறிப்பிடத் தக்களவில் விளைச்சல் வேறுபாட்டைக் காண்பிக்கவில்லை.

### தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்கப் பரிசோதனை (NCRVT)

- மூன்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. நியம சோதனை வர்க்கங்களுடன் 15 புதிய வம்சாவழிகள் பரிசோதிக்கப்பட்டன. Bg 08 - 1258 (3 1/2 மாத வெள்ளை நாட்டரிசி வம்சாவழி) At - 08 - 1024 (3 1/2 மாத வெள்ளை நாட்டரிசி வம்சாவழி, Bg 08 - 1407 (3 1/2 மாத வெள்ளை அரிசி, சம்பா நெல் வம்சாவழி) மற்றும் Bg 08 - 1909 (4 மாத வெள்ளை நாட்டரிசி வம்சாவழி) ஆகியவை உன்னதமான வம்சாவழிகளாக இனங் காணப்பட்டன.

### வர்க்க இசைவாக்க பரீட்சிப்பு பரிசோதனைகள் (VATT)

- மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் தொன்று தொட்டுப் பாவனையில் உள்ள பின்வரும் வம்சாவழிகளின் இசைவாக்கத் தன்மையைப் பரிசோதிப்பதற்காக 16 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ் வம்சாவழிகள் வருமாறு At 09 - 861, At - 08 - 593, Ld - 8 - 6 - 7, At 08 - 1078, Bg 08 - 2398, At 08-617, Bg 05 - 110 மற்றும் Bg 11 - 139

என்பனவாகும். பரிசோதிக்கப்பட்ட வம்சாவழிகளில் At - 7 - 800 (3 மாத வம்சாவழி) Bg - 07 - 997 (4 1/2 மாத வம்சாவழி) மற்றும் Bg - 07 - 1350 (4 1/2 மாத வம்சாவழி) ஆகியன உயர் விளைச்சலைக் கொடுத்ததுடன், நியம சோதனை வர்க்கங்களிலும் பார்க்க அதிக இசைவாக்கத்தையும் கொண்டிருந்தன.

### தானியத் தரம் மற்றும் அறுவடைக்குப் பின்னான விடயங்கள்

- இரண்டு சிவப்பரிசி வர்க்கங்களின் முளைக்கவிடப்பட்ட அரிசியை அடிப்படைப் பொருளாகப் பாவித்து உடன் ரசக்கலவை ஒன்று பரிசோதித்தறியப்பட்டது. இரண்டு வர்க்கங்களில் இருந்தும் தயாரிக்கப்பட்ட இரு ரசக் கலவைகளும் ஏற்றுக் கொள்ளக்கூடியனவாக இனங்காணப்பட்ட துடன் அவை குறிப்பிடத்தக்க அளவுகளில் புரதம், கொழுப்பு, நார் மற்றும் கனிப்பொருட்கள் ஆகியவற்றையும் கொண்டிருந்தன. இந்த உற்பத்திகள் அலுமினியத்தாழில் அல்லது குறை அடர்த்தி பொலித்தீன் பைகளில் 3 மாத காலத்திற்கு பாதுகாப்பாகப் பேணி சேமிக்கப்பட முடியும்.

- சிவப்பரிசியை முளைக்க விடத் தேவையான நேரமானது 48 மணித்தியாலயங்களாக காணப்படுகின்றது. பிளாஸ்ரிக் தொட்டிகளில் சிவப்பரிசியை ஊறவிடும் போது முளைவிடுவதற்கு எடுக்கும் நேரமானது 12 மணித்தியாலயங்களிலும் குறைவாகக் காணப்படுகின்றது.

- நெல்லின் தானியத் திணிவு மற்றும் தர இயல்புகளில் LCC அடிப்படையிலான N - பிரயோகத்தின் தாக்கத்தை தீர்மானிப்பதற்கு ஓர் கற்கை மேற்கொள்ளப்பட்டது. LCC அடிப்படையிலான N - பிரயோகமானது தானியத் திணிவு, தானியத்தின் தரம் ஆகியவற்றில் LCC அடிப்படையிலான பசளை பிரயோகத்திற்கு சமமான அளவினதாகக் காணப்படுவது இக் கற்கை மூலம் தெளிவாகியது.

### தொழில்நுட்பப் பரம்பல்

- இரு பட்டப் படிப்பு கற்கை நெறி மாணவர்களின் இறுதி ஆண்டு ஆராய்ச்சி செயற்றிட்டங்கள் மேற்பார்வை செய்யப் பட்டன.

- விவசாயக் கல்லூரி மாணவர்களுக்குரிய பயிற்சி

- DOA விரிவாக்க அலுவலர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாதாந்த பயிர்ச் சிகிச்சை முகாம்களில் வளவாளர்களாக கலந்து கொண்டமை

- நிறுவனத்திற்கு வருகை தந்த பல்கலைகழக மாணவர்கள் DOA இன் தொழில்நுட்ப அலுவலர்கள், பாடசாலைச் சிறுவர்கள், மற்றும் விவசாயிகள் போன்றோருக்கு தகவல்கள் வழங்கியமை

### இனவிருத்தியாளர் விதை உற்பத்தி

- பின்வரும் அளவுகளில் இனவிருத்தியாளர் விதை உற்பத்தி செய்யப்பட்டது.

**அட்டவணை 1.4.4. 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட இனவிருத்தியாளர் விதை அளவு**

| வர்க்கம் | இனவிருத்தியாளர் விதை அளவு (Kg) | | |
|---|---|---|---|
| | பெரும் போகம் 2011 / 12 | சிறு போகம் 2012 | மொத்தம் |
| **3 மாதம்** | | | |
| At 306 | 40 | - | 40 |
| At 307 | 100 | 80 | 180 |
| At 308 | 60 | 80 | 140 |
| **3 ½ மாதம்** | | | |
| At 353 | 20 | 20 | 40 |
| At 362 | 320 | 220 | 540 |

**பங்கு பற்றிய பயிற்சிகள், மாநாடுகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள்**

- ஏழாவது சர்வதேச நெல் பிறப்புரிமைகள் ஒன்றுகூடல், 5 - 8 நொவம்பர் 2013, மனிலா, பிலிப்பைன்ஸ், IRRI

## 2014 ஆம் ஆண்டுக்குரிய திட்டம்

- 3 மற்றும் 3 1/2 மாத வயது வகுப்பு நெல் வம்சாவழிகளில் கலப்பினப் பிறப்பாக்கம் மற்றும் தெரிவு
- PYT மற்றும் MYT ஆகியவற்றில் தொன்றுதொட்டுப் பாவனையில் உள்ள 3 மற்றும் 3 1/2 மாத வயது வகுப்பு வம்சாவழிகளின் மதிப்பீடு
- தொன்றுதொட்டுப் பாவனையில் உள்ள 3 மற்றும் 3 1/2 மாத வயது வகுப்பு வம்சாவழிகளின் (உயர்தர பரம்பரைகள்) பெருக்கம்
- சிபாரிசு செய்யப்பட்டுள்ள நெல் வர்க்கங்களில் இனவிருத்தியாளர் விதை உற்பத்தி
- NCRVT மற்றும் VAT பரிசோதனைத் துண்டங்களை மேற்கொள்ளல்

## நெல் ஆராய்ச்சி நிலையம் - சம்மாந்துறை

- கிழக்கு மாகாணத்தில் நெல் உற்பத்தியுடன் தொடர்புடைய அறிவுசார் இடைவெளியை இனங்கண்டு அதற்குரிய தீர்வுகளை வழங்குவதனைப் பிரதான நோக்கமாகக் கொண்டு இந்நிலையம் இயங்குகின்றது. குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் புதிய நெல் உற்பத்தித் தொழில்நுட்பங்களை அறிமுகப் படுத்தி இப் பிரதேசத்தின் நெல் உற்பத்தியில் அதிகரிப்பை ஏற்படுத்தலாகும். அத்துடன் இந்நிலையமானது அடிப்படை விதை உற்பத்தியினை மேற்கொள்வதோடு NCRVT களப் பரிசோதனைகளிலும் ஈடுபடுகின்றது.

## முன்னேற்றம்

### ஆராய்ச்சி

#### வர்க்க மேம்பாடு

**தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்கப் பரிசோதனை (NCRVT)**

- நியம சோதனை வர்க்கத்துடன் 15 புதிய நெல் வம்சாவழிகள் பரிசோதிக்கப்பட்டன. Bg 08 - 1258, At 08- 1024, Bg 08 - 1407 மற்றும் Bg 08 -1909 ஆகியவை சிறந்த வம்சாவழிகளாக கண்டறியப்பட்டன.

**வர்க்க இசைவாக்க பரிசோதனை ~ களப் பரிசோதனை (VATT)**

- At - 09 - 861, At 08 - 593, Ld 8 - 9 -7, At 08 - 1078, Bg 08 - 2398, At 08 - 617, Bg 05 -110 மற்றும் Bg 11 -139 ஆகிய தொன்றுதொட்டுப் பாவனையில் உள்ள 8 புதிய வம்சாவழிகள் VATT நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்பட்டன. பரிசோதிக்கப்பட்ட வம்சாவழிகளில் At - 7 - 800 (3 1/2 மாத வம்சாவழி) Bg - 07 - 997 (4 1/2 மாத வம்சாவழி) மற்றும் Bg - 07 - 1350 (4 1/2 மாத வம்சாவழி) ஆகியன உயர் விளைச்சலைக் கொடுத்ததோடு, நியம சோதனை வர்க்கங்களுடன் ஒப்பிடுகையில் அதிக இசைவாக்கத்தையும் கொண்டிருந்தன.

#### அடிப்படை விதை உற்பத்தி

- Bg 357 நெல் வர்க்கத்தில் 328kg மற்றும் Bg 94 - 1 நெல் வர்க்கத்தில் 307.5kg அடிப்படை விதை உற்பத்தி செய்யப்பட்டு மல்வத்தை விதைப் பண்ணைக்கு வழங்கப்பட்டது.

## தொழில்நுட்பப் பரம்பல்

- 1245 விவசாயிகளுக்குரிய 13 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- விவசாயிகளுக்கு 2500 துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.
- நாற்றுக்களை வீசி விதைதத்தல், மற்றும் முளைக்க முன்னரான களை நாசினிப் பாவனை ஆகியன தொடர்பில் 29 செய்து காட்டல்கள் விவசாயிகளின் வயல்களில் மேற்கொள்ளப்பட்டன.
- வானொலி நிகழ்ச்சிகள் மூன்றில் பங்கு கொண்டமை.
- அம்பாறை மாவட்டத்தில் வினைத்திறனுடைய களை முகாமைத்துவம்
- நெல் செய்கையில் ஏற்படுகின்ற அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது
- கூட்டெரு உற்பத்தி மற்றும் பயன்பாடு

## 2014 ற்கான திட்டம்

- சிறந்த வம்சாவழிகளை இனங்காணப்பதற் குரிய தொகைக் குடித்தொகைத் தெரிவு
- NCRVT மற்றும் VAT பரிசோதனைகளை மேற்கொள்ளல்
- அடிப்படை விதை உற்பத்தி

## நெல் ஆராய்ச்சி நிலையம் - பரந்தன்

- இந்நிலையத்தின் பிரதான நோக்கமாகக் காணப்படுவது வடமாகாணத்தின் குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தின் நெற் செய்கையுடன் தொடர்புடைய ஆராய்ச்சித் தேவைகளை நிவர்த்தி செய்தல், மற்றும் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்து நெல் உற்பத்தியை அதிகரித்தல் என்பன ஆகும். அவை மட்டுன்றி தேசிய ஒருங்கிணைப்பு பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் மற்றும் இப்பிரதேச விவசாயிகளின் வயல் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காணுதல் ஆகியவற்றை மேற்கொள்ளுவதற்குரிய கடப்பாடுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

## முன்னேற்றம்

## ஆராய்ச்சி

### வர்க்க மேம்பாடு

#### தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்கப் பரிசோதனைகள் (NCRVT)

- நியம சோதனை நெல் வர்க்கத்துடன் 15 புதிய நெல் வம்சாவழிகள் பரிசோதிக்கப்பட்டன. Bg 08 - 1399, Bw 03 - 1198 மற்றும் Bg 08 -1909 ஆகிய வர்க்கங்கள் சிறந்தனவாகக் கண்டறியப் பட்டன.

### களை விஞ்ஞானம்

#### வடமாகாணப் பிரதேசங்களில் Cyperus iria களை மீது பல்வேறு களை நாசினிகளின் தாக்கம்

- மல்லாவி விவசாகளின் நெல் வயலில் Cyperus iria களையினை கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாகவுள்ளது. இதைக் கட்டுப்படுத்துவதற்காக பரீட்சிக்கப்பட்ட 7 களை நாசினிகளில் தயோபென்கார்ப் 40% + புறப்பனில் 20% களை நாசினி சூத்திரக் கலவையானது வினைத்திறனாகச் செயற்பட்டது.

#### நெற் செய்கையில் பயன்படுத்தப்படுகின்ற பொதுவான களை நாசினிகளின் மீள் மதிப்பீடு

- பதினைந்து களை நாசினிகள் பரிசோதிக்கப்பட்டன. பைரசோசல் பியுறொன் எதைல் (SIRIUS) ஆனது ஒடுங்கிய இலைக்

களைகளைக் கட்டுப்படுத்துவதில் நன்றாகச் செயற்பட்டது. அகன்ற இலைக் களைகளைக் கட்டுத்துவதில் கல்லிவர் மற்றும் பிறபிற் ஆகியன சிறப்பாகச் செயற்பட்டன. பைறோக்சி சல்பொன் புற்களைக் கட்டுப்படுத்துவதில் நன்றாகச் செயற்பட்டது. பைறைாக்சி சல்பொன், உக்ஸ்டிசோன் + புறப்பனில், உக்சிபியுநொபென் ஆகியன நெல் விளைச்சலில் ஏற்படும் இழப்பை குறிப்பிடத்தக்களவில் குறைந்தது.

### அடிப்படை விதை உற்பத்தி

- Bg 300 நெல் வர்க்கத்தில் 6150kg அடிப்படை விதை உற்பத்தி செய்யப்பட்டது.

### கலந்து கொண்ட பயிற்சிகள், மாநாடுகள்

ஆசிய செயற்றிட்டத்தில் நெல் விளைச்சல் இடைவெளியைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலான ஆரம்பத் திட்டமிடல் பயிற்சி பட்டறை 12 - 13 மார்ச் 2013, IRRI, பிலிப்பைன்ஸ்.

## 2014 ஆம் ஆண்டுக்குரிய திட்டம்

- வடமாகாணத்தில் உள்ள அழிவடைகின்ற நெற் செய்கை வர்க்கங்கள் மற்றும் உள்ளுர் இன பேதங்கள் ஆகியவற்றின் சேகரிப்பு மற்றும் தூய்மையாக்கம்.
- வடமாகாணத்தில் உள்ள அழிவடைகின்ற நெற் செய்கை வர்க்கங்கள் மற்றும் உள்ளுர் இன பேதங்கள் ஆகியவற்றின் தூய வம்சாவழித் தெரிவு
- இணைப்பு வர்க்கப் பரிசோதனை மற்றும் இசைவாக்கப் பரிசோதனை நிகழ்ச்சிகள்

## அலுவலர் பட்டியல்

### RRDI பத்தலகொடை

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பணிப்பாளர் | 01 |
| மேலதிக பணிப்பாளர் | 01 |
| பிரதி பணிப்பாளர் | 01 |
| ஆராய்ச்சி அலுவலர் | 20 |
| விவசாயப் பொருளியலாளர் | 01 |
| உதவி விவசாயப் பணிப்பாளர் | 01 |
| விவசாய உத்தியோக்தர் | 03 |
| விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர் | 01 |
| நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | 07 |
| விவசாய போதனாசிரியர் | 16 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 16 |
| ஆராய்ச்சி உப உதவியாளர் | 05 |
| நிருவாக உத்தியோகத்தர் | 01 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 13 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 07 |
| அலுவலக உதவியாளர் | 01 |
| உழவு இயந்திர இயக்குநர் | 02 |
| பண்ணை எழுவினைஞர் | 02 |
| தொழிநுட்பவியலாளர் | 01 |
| திருத்துனர் | 01 |
| தச்சன் | 01 |
| சாரரதி | 09 |
| பார ஊர்தி சுத்திகரிப்பாளர் | 01 |
| சுற்றுலா விடுதிக் காப்பாளர் | 02 |
| சமையலாளர் | 01 |
| காவலாளி | 11 |
| தொழிலாளி (நிரந்தரம்) | 44 |
| தொழிலாளி (அமையம்) | 98 |
| **மொத்தம்** | **267** |

## RRS அம்பலாந்தோட்டை

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| ஆராய்ச்சி அலுவலர் பொறுப்பதிகாரி | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 04 |
| விவசாயப் போதனாசிரியர் | 02 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 04 |
| ஆராய்ச்சி உப உதவியாளர் | 02 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 02 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| சாரதி | 02 |
| காவலாளி | 03 |
| உழவு இயந்திர இயக்குநர் | 01 |
| தொழிலாளி (நிரந்தரம்) | 14 |
| தொழிலாளி (அமையம்) | 20 |
| **மொத்தம்** | **56** |

## RRS பரந்தன்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| ஆராய்ச்சி அலுவலர் பொறுப்பதிகாரி | 01 |
| ஆராய்ச்சி அலுவலர் | 01 |
| ஆராய்ச்சி உப உதவியாளர் | 01 |
| உழவு இயந்திர இயக்குநர் | 01 |
| காவலாளி | 01 |
| நிரந்தர ஊழியர் | 01 |
| அமைய ஊழியர் | 06 |
| **மொத்தம்** | **12** |

## RRS சம்மாந்துறை

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| ஆராய்ச்சி அலுவலர் பொறுப்பதிகாரி | 01 |
| ஆராய்ச்சி அலுவலர் | 01 |
| விவசாயப் போதனாசிரியர் | 01 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 01 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 04 |
| தொழில்நுட்ப உதவியாளர் | 02 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 02 |
| KKS | 01 |
| சாரதி | 01 |
| உழவு இயந்திர இயக்குநர் | 01 |
| காவலாளி | 04 |
| நிரந்தர ஊழியர் | 02 |
| அமைய ஊழியர் | 07 |
| **மொத்தம்** | **28** |

## 1.4.1 பிராந்திய நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (RRRDC), போம்புவளை

போம்புவலையில் அமைந்துள்ள பிராந்திய நெல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் (RRRDC) மற்றும் லபுதுவை, பெந்தோட்டை ஆகிய தாழ்நாட்டு ஈரவலயப் பிரதேசங்களில் அமைந்துள்ள (LCWZ) அதன் இணை நிலையங்களும் நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தயில் ஈடுபடுகின்றன. போம்புவலை RRRDC ஆனது இரும்பு நஞ்சு தன்மையைத் தாங்கி வளரும் உயர் விளைச்சலை தருகின்ற சிவப்பு மற்றும் வெள்ளை நிற அரிசியையுடைய நெல் வர்க்கங்களின் விருத்தியில் கவனம் செலுத்தும்

அதேவேளை லபுதுவையில் அமைந்துள்ள (ARS) ஆனது சிவப்பு நிற, சிறிய உருளை வடிவ அரிசியையுடைய நெல் வர்க்க விருத்தியில் ஈடுபட்டு வருகின்றது. பெந்தோட்டையில் அமைந்துள்ள (ARS) ஆனது இப்பிரதேசங்களுக்குப் பொருத்தமான உவர்த்தன்மை மற்றும் வெள்ள நிலமை ஆகியவற்றைத் தாங்கி வளரக் கூடிய நெல் வர்க்கங்களின் விருத்தி மற்றும் தொழில்நுட்ப விருத்தி ஆகியவற்றில் பிரதானமாக கவனஞ் செலுத்துகின்றது.

### பாதீடு

**அட்டவணை 1.4.1.1: வருடாந்தப் பாதீடு- 2013 (ரூபா)**

| செலவுத்தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு% |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 4,574,800 | 4,574,800 | 100 |
| நடைமுறைச் செலவு | 9,535,000 | 8,043,627 | 93 |
| **செயற்றிட்டங்கள்** | | | |
| 1. விவசாயிகளின் வயல்களில் வினைத்திறனான பசளைப் பாவனை நுட்பங்களுக்குரிய இசைவாக்க பரிசோதனை | 255,000 | 254,674 | 99 |
| 2. வெள்ளம் மற்றும் இரும்பு நஞ்சாக்கம் ஆகியவற்றைத் தாங்கி வளரக்கூடிய நெல் வர்க்கங்களின் விருத்தி | 533,850 | 273,130 | 51 |
| 3. நெல் உற்பத்தி மேம்பாடு - LCWC | 2,500,000 | 2,499,963 | 99 |
| 4. நெற் செய்கையில் வெவ்வேறு வகையான திரவப் பசளைகளின் மதிப்பீடு | 212,000 | 150,000 | 71 |
| **மொத்தம்** | **17,610,650** | **15,796,194** | **90** |

## முன்னேற்றம்

### ஆராய்ச்சி

### வர்க்க மேம்பாடு

#### புதிதாகச் சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்கள்

- நடுத்தர உருளை வடிவ சிவப்பு நிறமுடைய அரிசியை உடைய 3½ மாத வயது தொகுதியைச் சேர்ந்த BW372 என அழைக்கப்படுகின்ற நெல் வர்க்கம் ஒன்று ஈரவலயப் பிரதேசங்களில் செய்கை பண்ணப்படு த்துவதற்காக விடுவிக்கப்பட்டுள்ளது. இதன் சராசரி விளைச்சல் 7.568 தொன்/ ஹெக் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- ஓர் புதிய உன்னதமான வம்சாவழி BW - 11 - 722 ஆனது NCRVT நிகழ்ச்சிகாக விதந்துரைக்கப்பட்டுள்ளது. இது 3½ மாத வயது தொகுதியைச் சேர்ந்த குறுகிய வெள்ளை நிற அரிசியை உடைய ஓர் நெல் வம்சாவழி ஆகும்.
- உருளை வடிவ வெள்ளை நிற தானியத்தையுடைய 3½ மாத வயதுத் தொகுதியைச் சேர்ந்த BW - 03 - 1198 எனும் வம்சாவழியானது NCRVT நிகழ்ச்சிக்காக பிரேரிக்கப்பட்டுள்ளது.
- 4 - 4½ மாத வயதுத் தொகுதியில் இருந்து 3 வம்சாவழிகள் MYT க்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.
- 3½ மாத வயதுத் தொகுதியில் இருந்து 18 வம்சாவழிகள் தெரிவு செய்யப்பட்டு PYT மற்றும் MYT ஆகியவற்றுக்காக வழங்கப் பட்டுள்ளன.
- மூன்று மாத மற்றும் 85 நாட்கள் வயதுத் தொகுதிகளில் இருந்து முறையே 3 மற்றும் 5 வம்சாவழிகள் MYT க்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

### நோய் முகாமைத்துவம்

- போம்புவலை, அம்லாந்தோட்டை மற்றும் லபுதுவை ஆகிய இடங்களில் நெல் வர்க்க மேம்பாட்டு நிகழ்ச்சியில் விருத்திச் செய்யப்பட்ட மொத்தமாக 90 வம்சாவழிகளை நெல் எரிபந்த நோய்க்கு எதிராகத் தேர்வுகுட்படுத்திய போது 45 வம்சாவழிகள் எதிர்புடையனவாகக் காணபட்டன.
- INGER நிகழ்ச்சியின் கீழ் IRRI இலிருந்து பெறப்பட்ட 70 நெல் வம்சாவழிகள் தேர்வுக்குட்படுத்தப்பட்ட போது அவற்றுள் 42 வம்சாவழிகள் நெல் எரிபந்த நோய்க்கு எதிர்புடையனவாக அடையாளம் காணப்பட்டன.

### பீடை முகாமைத்துவம்

- கபில நிறத் தாவரத் தத்தி (BPH), Nilapavate lugens இக்கு எதிரா மொத்தமாக 58 NCRVT பதிவுகள் பச்சை வீட்டு நிலமைகளின் கீழ் தேர்வுக்கு உட்படுத்திய போது 15 பதிவுகள் ஓரளவு எதிர்ப்புத் தன்மையைக் காட்டியதுடன் மேலும் 4 பதிவுகள் எதிர்ப்புத் தன்மை / ஓரளவு எதிர்ப்புத்தன்மையும் BPH ற்கு எதிராகக் காணப்பித்தன.
- போம்புவலையில் இருந்து பெறப்பட்ட 60 வம்சாவழிகள் மற்றும் INGER நிகழ்ச்சியின் கீழ் பெறப்பட்ட 54 வம்சாவழிகள் என மொத்தமாக 114 இனவிருத்தி வம்சாவழிகள் பச்சை வீட்டு நிலமைகளின் கீழ் BPH ற்கு எதிராகத் தேர்வுக்கு உட்படுத்தப்பட்டன. இது 2013 சிறுபோகத்தில் இடம் பெற்றது. இதன் போது 5 எதிர்புடைய வம்சாவழிகள், 14 எதிர்ப்பு / ஓரளவு எதிர்ப்புடையவை எனப் பெறுபேறுகள் கிடைத்தன.

- போம்புவலையில் 2013 / 2014 பெரும்போக காலத்தில் கொப்புள ஈ (GM), Orecolia oryzae எதிரான தேர்வு ஒன்று இடம் பெற்றது. இக்காலப் பகுதியில் நிலவிய குறைவான தொற்றுகை காரணமாக பரிசோதனை வெற்றிகரமாக அமையவில்லை. எனினும் 2013 சிறுபோகப் பெறுபேறுகள் எதிர்ப்புடைய 3 பதிவுகளையும் ஓரளவு எதிர்ப்புடைய 18 பதிவுகளையும் GM ற்கு எதிராகக் காணப்பித்தன.

## பயிராக்கவியல்

- பொக் மற்றும் அரைபொக் மண்ணில் நெற் செய்கையில் பூச்சியப் பண்படுத்தல் தொடர்பான கற்கை ஒன்று இடம் பெற்றது. தரிசுநில ஈரவலயங்களில் உள்ள பொக் மண்ணைக் கொண்ட கைவிடப்பட்ட நெல் வயல்களில் பூச்சியப் பண்படுத்தலை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும் என பரிசோதனை முடிவுகள் உறுதிப்படுத்தின. இது நிலம் பண்படுத்தலுக்கான செலவை பாரிய அளவில் குறைத்தது.

- வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்யப்பட்ட திரவ உயிர் வளமாக்கிகளின் தாக்கம் நெற் செய்கையில் பரிசோதிக்கப்பட்டது. விவசாயத் திணைக்களத்தின் பசளைச் சிபாரிசுகளுடன் ஒப்பிடும் போது மேற்படி கற்கையில் உயிர் வளமாக்கிகள் நெல் விளைச்சலில் எதுவித வினைத்திறனையும் காணப்பிக்கவில்லை

- ஈரவலயப் பிரதேசங்களில் NCVRT மற்றும் VAT நிகழ்ச்சிகள் தொடரப்பட்டன. இதன் போது NCVRT யின் 24 உன்னத வம்சாவழிகள் மதிப்பீடு செய்யப்பட்டன. VAT நிகழ்ச்சிகளில் களுத்துறை, கொழும்பு, கம்பஹா, மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் குறுகிய உருளை வடிவ அரிசியை உடைய 3½ மாத வம்சாவழி ஒன்று, நீண்ட மெல்லிய அரிசியை உடைய 3½ மாத வம்சாவழி இரண்டு, 3 மாத வம்சாவழிகள் 2 மற்றும் உவர் தன்மைக்கு சகிப்புடைய வம்சாவழிகளும் மதிப்பிடப்பட்டன.

## களை முகாமைத்துவம்

சிபாரிசு செய்யப்பட்ட களை நாசினிகள் மீள - மதிப்பீடு செய்யப்பட்டன. தயோபென்காப் 400g/l புறப்பனில் 200g / l EC ஆகியன சகல களைகளையும் கட்டுப்படுத்துவதில் தொடர்ந்தும் வினைத்திறனாகச் செயற்படுகின்றன. சைக்குளோ சல்பாமியுரோன் 10% WP மற்றும் பென்சல்பியூரோன் - மீதைல் 8.25% + மெற்சல்பிறோன் 1.75% ஆகியன அகன்ற மற்றும் ஒடுங்கிய இலைக் களைகளைக் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியன. பெரினக்சா புறப் - P - எதைல் + எதொக்சிசல்பியுரோன் 69 + 20g / l OD அனைத்துக் களைகளையும் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியது.

## மண் முகாமைத்துவம்

LCWZ நெல் வயல்களில் P இன் கரையும் தன்மையை அதிகரிக்கும் நோக்குடன் சீமைக்கிழுவை இலைகளுடன் எப்பாவெல பாறைப் பொசுப்பேற்று (ERP) வெவ்வேறான சேர்க்கைகளில் பரிசோதிக்கப்பட்டது. சீமைக்கீழுவை இலைகளுடன் ERP யானது பொசுபரசு வளமாக்கிகளுக்குப் பதிலாகப் பயன்படுத்த முடியும் என்பதைப் பரிசோதனை முடிவுகள் காண்ப்பித்தன. எவ்வாறாயினும் மேலதிக பரிசோதனைகள் முடிவை ஊர்ஜிதப் படுத்த மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அளவுக்கு அதிகமான பசளைப் பாவனையைக் குறைக்கும் நோக்குடன் போம்புவலை RRRDC இல் மண் பரிசோதனை நிகழ்ச்சி ஒன்று நடாத்தப்பட்டது. மொத்தமாக 561 மண் மாதிரிகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இவற்றுள் 527 ஆராய்ச்சி நிலையங்களில் இருந்தும், மிகுதி 34 விவசாயிகளிடமிருந்தும் பெறப்பட்டவை ஆகும்.

## தொழில் நுட்பப் பரம்பல்

- நெல் வயல்களில் தரைப் பண்படுத்தல் மற்றும் பசளைப் பிரயோகம் தொடர்பில் வானொலி நிகழ்ச்சிகள் ஆறு நடாத்தப்பட்டது.
- மூன்றாம் நிலை கல்வி பயிலும் மாணவர்கள் மூன்று பேர் மற்றும் 118 பங்குதாரர்கள் ஆகியோருக்கு நெற் செய்கை தொடர்பான பல்வேறு விடயங்களில் பயிற்சி வழங்கப்பட்டது.
- நிலையத்தின் மாதாந்த செயலமர்வு நிகழ்ச்சிகளின் கீழ் நிலைய அலுவலர்களால் 21 வெளிப்படுத்தல்கள் (Presentation) மேற்கொள்ளப் பட்டன.

## பயிற்சிகள்

- ஆசியப் பிராந்தியங்களில் இடம்பெயர் நோய் மற்றும் பூச்சிப் பீடைகளுக்குரிய Epidemeology தகவல் பரிமாற்றத் தொகுதிக் கட்டமைப்பு தொடர்பான AFACI செயற்றிட்ட சந்திப்பில் திருமதி GDSN சந்திரசேன கலந்து கொண்டார். இது வியன்றீன் லா ஓ PDR இல் ஒக்டோபர் 28 முதல் நொவம்பர் 01 ஆம் திகதி வரை இடம் பெற்றது.

## இனவிருத்தியாளர் விதை உற்பத்தி

2013 ஆண்டு காலப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட இனவிருத்தியாளர் விதையின் அளவுகள் அட்டவணை 1.4.1.2 இல் காட்டப்பட்டுள்ளது

**அட்டவணை 1.4.2.1 உற்பத்தி செய்யப்பட்ட இனவிருத்தியாளர் விதையின் அளவு – 2013**

| வர்க்கம் | உற்பத்தி செய்யப்பட்ட விதையின் அளவு (Kg) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | தொடர் நிகழ்ச்சி | | | நெல் உற்பத்தி மேம்பாட்டு செயற்றிட்டம் | | |
| | பெரும் போகம் 2012 / 13 | சிறு போகம் 2013 | மொத்தம் | பெரும் போகம் 2012 / 13 | சிறு போகம் 2013 | மொத்தம் |
| **3.5 மாதங்கள்** | | | | | | |
| Bw 364 | 41.0 | 41.0 | 82.0 | 450.0 | 366.0 | 816.0 |
| Bw 361 | 20.5 | 20.5 | 41.0 | 389.5 | 611.0 | 1000.5 |
| Bw 367 | 61.5 | 82.0 | 143.5 | 703.0 | 321.0 | 1024.0 |
| Bw 363 | 20.5 | 20.5 | 41.0 | 195.0 | 290.0 | 485.0 |
| Bw 267/3 | 20.5 | 10.0 | 30.5 | 297.0 | 291.0 | 588.0 |
| **3 மாதங்கள்** | | | | | | |
| Bw 272-6b | 20.5 | 20.5 | 41.0 | 307.0 | 210.0 | 517.0 |
| **மொத்தம்** | **184.5** | **194.5** | **379.0** | **2341.5** | **2089.0** | **4430.5** |

## விசேட கருத்திட்டங்களின் விபரம் - உள்ளூர்

### வெள்ளம் மற்றும் இரும்பு நஞ்சாக்கம் ஆகியவற்றுக்கு சகிப்புத் தன்மையுடைய நெல் வர்க்க விருத்தி நிகழ்ச்சி (NARP செயற்றிட்டம்)

செயற்கை மதிப்பீடு மற்றும் களத் தேர்வு ஆகியவற்றைத் தொடர்ந்ததாக பின்முகக் கலப்பின் மூலமாக இரும்பு நஞ்சாதலுக்கு சகிப்புத் தன்மையுடைய 18 நெல் இனவிருத்தி வம்சாவழிகள் உருவாக்கப்பட்டன.

செயற்கை மதிப்பீடு மற்றும் களத் தேர்வு ஆகியவற்றைத் தொடர்ந்ததாக பின்முகக் கலப்பின் மூலம் வெள்ள நிலமையைச் சகித்து வாழக்கூடிய 191 நெல் இனவிருத்தி வம்சாவழிகள் உருவாக்கப்பட்டன.

### விவசாயிகளின் வயல்களில் பசளைப் பாவனை வினைத்திறன் நுட்பம் தொடர்பிலான இசைவாக்கச் சோதனை ~ (NARP செயற்றிட்டம்)

நான்கு பண்ணையாளர்களின் வயல்களில் அவர்களது முகாமைத்துவத்தின் கீழ் புதிய பசளைச் சிபாரிசு ஒன்று பரிசோதிக்கப்பட்டது. இது 3 வெவ்வேறான மண் வகைகளில் இடம் பெற்றது. இது போம்புவலை RRRDC யிலும் மேற்கொள்ளப்பட்டது.

### LCWZ ற்குரிய நெல் உற்பத்தி மேம்பாடு

இத் திட்டத்தின் கீழ் ஆறு BW வர்க்கங்களில் விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டது. விதை நெல் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் மொத்தமாக 4430.5Kg (அத்திவார, பதிவுசெய்யப்பட்ட, அத்தாட்சிப்படுத்தப்பட்ட, மற்றும் வர்த்தக) விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டது. இவ்விதைகள் LCWZ இல் உள்ள அரச விதைப் பண்ணைகளுக்கும் சம்பந்தப்பட்ட ஏனையோருக்கும் பெருக்கத்திற்காக கையளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட விதைகளின் அளவுகள் மேலே உள்ள அட்டவணை 1.4.1.2 இல் தரப்பட்டுள்ளது.

## நெல் ஆராய்ச்சி நிலையம் ~ லபுதுவை

இலங்கையின் தாழ்நில ஈரவலயங்களில் உள்ள உயர் வளத்தினையுடைய கனிப்பொருள் மண்ணில் நெல் உற்பத்தியை மேம்படுத்துவதுடன் தொடர்புடைய தொழில்நுட்பம் மற்றும் சிவப்பு நிற அரிசியை உடைய நெல் வர்க்கம் ஆகியவற்றின் விருத்தி போன்வற்றுடன் லபுதுவை நெல் ஆராய்ச்சி நிலையம் ஈடுபாட்டினைக் கொண்டுள்ளது.

### வர்க்க மேம்பாட்டு நிகழ்ச்சி

#### புதிதாக சிபாரிசு செய்யப்பட்டுள்ள நெல் வர்க்கங்கள்

**Ld - 371** பொதுவான நெற் செய்கைக்காக விடுவிக்கப்பட்டுள்ள 3½ மாத வயதுடைய வெள்ளை நிற சம்பா வர்க்கமாகும். தாழ்நாட்டு ஈரவலயத்தில் இதன் விளைச்சல் 3 - 4 தொன் / ஹெக் ஆகவும் தாழ்நாட்டு உலர் மற்றும் இடைவலயங்களில் இதன் விளைச்சல் 5 - 6 தொன் / ஹெக் ஆகவும் காணப்படுகின்றது. கழுத்து எரிபந்தம் மற்றும் விதைகள் நிறமாற்றமடைதல் ஆகியவற்றுக்கு இவ்வர்க்கம் சகிப்புத் தன்மையுடையதுடன் எரிபந்தம் கொப்புளஈ, மற்றும் BPH ஆகியவற்றுக்கு ஓரளவான எதிர்ப்புத் தன்மையையும் கொண்டுள்ளது.

### இனவிருத்தி நிகழ்ச்சி

NCVRT நிகழ்ச்சியில் 2½ மாத வயதுடைய, சிவப்பு நிற அரிசியையுடைய Ld - 8 - 15 - 15 எனும் சம்பா வம்சாவழி பரிசோதிக்கப்பட்டது. வெள்ளை நிற அரிசியையுடைய 2½ மாத வயதுடைய நெல் வம்சாவழியானது [Ld 8 - 15 - 30] VAT நிகழ்ச்சியில் பரிசோதிக்கப்பட்டதுடன் 3½ மாத, சிவப்பு நிற அரிசியையுடைய சம்பா வம்சாவழி LSVAT இல் பரிசோதிக்கப்பட்டது. 15 வெற்றிகரமான கலப்புகள் இடம்பெற்றன. 236 உயர்தர இனவிருத்தி

வம்சாவழிகள் பராமரிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டன. புதிய தாவர வகையை மேம்படுத்தும் நோக்குடன் 9 கலப்புகளின் எச்சங்கள் தரமுயர்த்தப்பட்டன.

### பயிர்ப் பாதுகாப்பு

பக்ரீரிய வாடலுக்கு எதிர்புடைய / ஓரளவு எதிர்ப்புடைய IRRI இல் இருந்து பெறப்பட்ட 6 நெல் வம்சாவழிகள் தெரிவு செய்யப்பட்டன. தாழ்நாட்டு ஈரவலயத்திற்குரிய பிரதான பீடைகளை எதிர்வுகூறும் மாதிரி ஒன்றை விருத்தி செய்வதற்குரிய களப் பரிசோதனைகள் நிறைவடைந்துள்ளன. கற்கை முன்னேற்றகரமாகச் செல்கிறது. சிபாரிசு செய்யப்பட்ட 5 களை நாசினிகள் மீள மதிப்பீடு செய்யப்பட்டன. அத்துடன் தாழ் நாட்டு ஈரவலயப் பிரதேச நெல் வயல்களில் அகன்ற மற்றும் ஒடுங்கிய இலைக் களைகளை வினைத்திறனுடன் கட்டுப்படுத்தும் களை நாசினிகள் இனங்காணப்பட்டுள்ளன.

### பயிராக்கவியல்

பெரும்போக காலத்தில் ஏற்படுகின்ற மஞ்சள் நிறமாதல் மற்றும் கபில நிறப் புள்ளிகளின் தோற்றம் ஆகியவை பிரதான போசணை மூலகங்களின் சிறந்த முகாமைத்துவத்தின் மூலம் குறைக்கப்பட்டது. புதிய முறையில் அமைந்த பொலித்தீன் படையில் நாற்றுக்களை உருவாக்கும் முறையானது பரசூட் முறையுடன் ஒப்பிடக்கூடிய வகையில் அமைந்திருந்தது. அத்துடன் வாழை இலைகள் மற்றும் பகுதியாக எரிக்கப்பட்ட உமிக் கரி என்பன நாற்று மேடைக்குரிய மாற்றுப் படுக்கைப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டன.

### இனவிருத்தியாளர் விதை உற்பத்தி நிகழ்ச்சி

**அட்டவணை 1.4.1.3 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட இனவிருத்தியாளர் விதையின் அளவு**

| வர்க்கம் | இனவிருத்தியாளர் விதை அளவு (Kg) | | |
|---|---|---|---|
| | பெரும் போகம் 2012/13 | சிறு போகம் 2013 | மொத்தம் |
| **3 ½ மாதங்கள்** | | | |
| Ld 368 | 82.0 | 82.0 | 164.0 |
| Ld 365 | 41.0 | 41.0 | 82.0 |
| **4 மாதங்கள்** | | | |
| Ld 408 | 41.0 | 41.0 | 82.0 |
| **மொத்தம்** | **164.0** | **164.0** | **328.0** |

## நெல் ஆராய்ச்சி நிலையம்– பெந்தோட்டை

பெந்தோட்டை நெல் ஆராய்ச்சி நிலையத்தின் (RRS) மிக முக்கிய கடமை உவர்த் தன்மை மற்றும் வெள்ள நிலமையைச் சகித்து வளர்கின்ற நெல்வர்க்கங்களின் விருத்தி ஆகும்.

### வர்க்க மேம்பாட்டு நிகழ்ச்சி

வெள்ளப் பாதிப்பு ஏற்படக்கூடிய பிரதேசங்களில் வாழ்கின்ற விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக Bg 94 - 741 எனும் நெல்வர்க்க விதைகள் பெருக்கம் செய்யப்பட்டுள்ளது.

வெள்ள நிலமை சகிப்புத் தன்மைக்காக 130 நெல் எச்சங்கள் தேர்வு செய்யப்பட்டன. எந்தவொரு எச்சமும் சகிப்புத்தன்மையைக் கொண்டிருக்கவில்லை.

தீவுப் பகுதி உவர்த் தன்மைக்காக 32 INGER மாதிரிகள் களத் தேர்வுக்குட்படுத்தப்பட்டன.

### பயிராக்கவியல்

வெள்ள நிலமைகளின் கீழ் நெற் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கான சிறந்த முறை ஒன்றைக் கண்டறிவதற்குரிய பரிசோதனை ஒன்று இடம்

பெற்றது. முளைக்கவிடப்பட்ட / முளைகட்டிய நெல் விதைகளின் விதைத்தலானது வெற்றிகரமான பெற்பேற்றத் தந்தது.

வெள்ள நிலமைகளில் Bg 94 - 741 ஆனது ஏனைய உள்ளூர் வர்க்கங்களுடன் ஒப்பிடுகையில் சிறந்த பெறுபேற்றைக் கொடுத்தது.

LCWZ பிரதேசங்களில் உவர் மண்ணில் வெள்ள நிலமையைச் சகித்து வளரக்கூடிய பாரம்பரிய நெல் வர்க்கங்களை இனங் காண்பதற்குரிய அவதான ரீதியிலான பரிசோதனை ஒன்று இடம்பெற்றது. இது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது.

NCRVT நிகழ்ச்சிகள் 2½, 3, 3½ மாத வயதுடைய நெல் வகுப்புகளில் தொடரப்பட்டது

### மண் வள முகாமைத்துவம்

பொக் மண்ணில் பூச்சியப் பண்படுத்தல் நிலமையின் கீழ் நெற் பயிரின் போசணை உள்ளெடுத்தலை அறிவதற்குரிய பரிசோதனை ஒன்று 2013 சிறுபோக காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனை முடிவுகளின் படி பொக் மண்ணில் பூச்சியப் பண்படுத்தல் நடைமுறைகள் சாதகமான பெறுபேற்றைக் கொடுத்தது. எனினும் பெறுபெறுகளை உறுதிப் படுத்துவதற்கான பரிசோதனைகள் மேலும் தொடரப்படல் வேண்டும்.

### பூச்சியியல்

LCWZ பிரதேசங்களில் நெல் மடல் சிற்றுண்ணிகளின் தாக்கம் தொடர்பில் எதிர்வுகூறல் முறை ஒன்றை விருத்தி செய்வதற்கான இணைந்த பரிசோதனை ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. இது தொடரப்படுகின்றது.

## 2014 ற்கான திட்டம்

### ஆராய்ச்சி

- இரும்பு நஞ்சாக்கம் மற்றும் வெள்ள நிலமை தொடர்பிலான வர்க்க மேம்பாட்டு நிகழ்ச்சிகள்
- இலை எரிபந்த நோய்க்குரிய வர்க்கத் தேர்வு
- பிரதான நெல் வர்ககங்களில் வெவ்வேறு பீடை நாசினிகளின் செயற்றிறன் தொடர்பிலான மதிப்பீடு
- LCWZ பிரதேசங்களில் நெல் மடல் சிற்றுண்ணித் தாக்கம் பற்றிய எதிர்வு கூறல் தொகுதி ஒன்றின் விருத்தி, நெல் மூட்டுப் பூச்சியின் [Leptocorize oratorius] பாலியல் முதிர்ச்சி நேரத்தில் பயிர் சுரப்புகளின் தாக்கத்தைத் தீர்மானித்தல்
- NCVRT மற்றும் VAT ஆகிய நிகழ்ச்சிகள் வழமையான நிகழ்ச்சிகளாகத் தொடர்ப்படு கின்றன.
- பொக் மண்ணில் பூச்சியப் பண்படுத்தல் நிலமைகளின் கீழ் பொருத்தமான BW வர்க்கங்களை இனங்காணும் நிகழ்ச்சிகள் தொடரப்படுகின்றன. அத்துடன் விரைவாக நெல் மணிகள் உதிர்கின்ற BW நெல் வர்க்கங்களின் சிறந்த அறுவடை பருவத்திற்குரிய சுட்டிகளை கண்டறிதல்
- நெல்லில் களை முகாமைத்துவத்திற்குரிய களை நாசினிகளை மதிப்பிடல்
- நெல்லில் களை முகாமைத்துவத்திற்குரிய பயிராக்கவியல் முறையை மதிப்பிடல்
- LCWZ பிரதேசத்திற்குப் பொருத்தமான வளமாக்கி முகாமைத்துவ நுட்பத்தை விருத்தி செய்தல்
- இனவிருத்தியாளர் விதை உற்பத்தி

## அலுவலர் பட்டியல்

### RRRDC போம்புவலை

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) | 01 |
| ஆராய்ச்சி அலுவலர் | 07 |
| பண்ணை முகாமையாளர் | 01 |
| விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர் | 02 |
| நிகழ்ச்சி திட்ட உதவியாளர் | 06 |
| அபிவிருத்தி உதவியாளர் | 01 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 12 |
| விவசாயப் போதனாசிரியர் | 07 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 06 |
| களஞ்சிய காப்பாளர் | 01 |
| சாரதி | 03 |
| காவலாளி | 04 |
| சுற்றுலா விடுதிக் காப்பாளர் | 17 |
| சுத்திரிகரிப்பு தொழிலாளி | 01 |
| தொழிலாளி (அமையம்) | 31 |
| தொழிலாளிகள் (செயற்றிட்டம்) | 09 |
| **மொத்தம்** | **111** |

### RRS லபுதுவை

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| ஆராய்ச்சி அலுவலர் பொறுப்பதிகாரி | 01 |
| ஆராய்ச்சி அலுவலர் | 02 |
| விவசாயப் போதனாசிரியர் | 04 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 05 |
| நிகழ்ச்சி திட்ட உதவியாளர் | 01 |
| அபிவிருத்தி அலுவலர் | 02 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 |
| அரச முகாமைத்துவ சேவை உதவியாளர் | 02 |
| சாரதி | 02 |
| காவலாளி | 04 |
| உழவு இயந்திர இயக்குநர் | 01 |
| தொழிலாளி | 10 |
| தொழிலாளிகள் (அமையம்) | 09 |
| **மொத்தம்** | **43** |

### RRS பெந்தோட்டை

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| ஆராய்ச்சி அலுவலர் பொறுப்பதிகாரி | 01 |
| விவசாயப் போதனாசிரியர் | 03 |
| காவலாளி | 01 |
| களஞ்சியக் காப்பாளர் | 01 |
| தொழிலாளி | 08 |
| தொழிலாளி (அமையம்) | 06 |
| தொழிலாளிகள் (செயற்றிட்டம்) | 02 |
| **மொத்தம்** | **22** |

# 1.5 இயற்கைவள முகாமைத்துவ நிலையம் (NRMC), பேராதனை

தேசிய உற்பத்தித் திறனை பேண்தகு நிலையில் மேம்படுத்துவதற்கு நில, நீர் வளங்களை உச்சளவில் பயன்படுத்தவென இயற்கை வள முகாமைத்துவ நிலையம் (NRMC) பெரிதும் முயற்சிக்கின்றது. மட்காப்பு, நீர்நிலை முகாமைத்துவம், நிலப் பொருத்தப்பாடு தொடர்பான மதிப்பீடுகள், பயிர்க் கண்காணிப்பும் எதிர்வு கூறலும், விவசாய வானிலையும் காலநிலை மாற்றங்களும், உற்பத்தித்திறன் மேம்பாடு, மண் மற்றும் நீர்த் தரம், பண்ணையில் நீர்ப்பாசன முகாமைத்துவம் என்பன தொடர்பிலான ஆராய்ச்சிகள் பிரதான கருப்பொருள் பகுதிகளாக அமைகின்றன. நாட்டின் விவசாய – வானிலை அவதானிப்பு வலையமைப்பினை பேணல், மண் பாதுகாப்புச் சட்டத்தினை அமுல் படுத்தல், பங்குதாரர்களுக்கு தொடர்புடைய விடயங்களில் தொழிநுட்ப உதவிகளை வழங்குதல் மற்றும் பல்வேறுபட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங் களினுடைய சுற்றாடல் பாதிப்பு தொடர்பான மதிப்பீடுகள் என்பன இந்நிலையத்தின் ஏனைய பொறுப்புக்களாக அமைகின்றன.

## பாதீடு

**அட்டவணை 1.5.1: வருடாந்தப் பாதீடு – 2013 (ரூபா)**

| செலவுத்தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு% |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 6,430,000 | 3,323,579 | 52 |
| நடைமுறைச் செலவு | 3,349,970 | 3,157,913 | 94 |
| **திட்டங்கள்** | | | |
| மட்காப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் | 14,000,000 | 7,017,719 | 50 |
| NARP | 2,800,000 | 1,621,291 | 58 |
| CCAFS | 3,620,000 | 2,481,291 | 69 |
| AFACI – ALMSF – 1 – 7 | 564,150 | 463,572 | 82 |
| AFACI – ALMS – 8 | 600,975 | 402,769 | 67 |
| தாழ் நாட்டு ஈரவலய நெற் காணிகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்தல் | 150,000 | 103,325 | 69 |
| பிராந்திய மட்ட பயிர்ப் பொருத்தப்பாட்டு மதிப்பீடும், வரை படமாக்குதலும் - ஊவா மாகாணம் | 1,183,861 | 1,181,550 | 99 |
| **மொத்தம்** | **32,698,956** | **19,753,081** | **60** |

## முன்னேற்றம்

### ஆராய்ச்சி

**பிராந்திய மட்ட பயிர்ப் பொருத்தப்பாட்டு மதிப்பீடும் வரைபடமாக்குதலும் ~ ஊவா மாகாணம்.**

குறித்த பகுதிகளுக்குப் பொருத்தமான நில மற்றும் நீர் வள முகாமைத்துவ அணுகுமுறை களை விருத்தி செய்தல் மற்றும் நீண்ட கால பேண்தகு தன்மையை உறுதி செய்த வண்ணம் பிராந்திய மற்றும் உள்ளூர் மட்டங்களில் அவற்றை நடைமுறைப்படுத்தல் எனும் இலக்குகளைக் கொண்டு பிராந்திய மட்ட கற்கை

மேற்கொள்ளப்பட்டது. மண்ணரிமான அபாயத்தினை மாதிரிப்படுத்துவதற்கு புவியியல் தனித்துவ உள்ளீட்டு தரவுகளை பிரதி நிதித்துவம் செய்கின்ற மழை வீழ்ச்சி, மண், நிலச் சாய்வு மற்றும் நிலப்பாவனை ஆகியன பயன்படுத்தப்பட்டன. இவை Arc.Map GIS மென் பொருளினூடாக மதிப்பீடு செய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக கள அவதானிப்புடனான களத் தரவுச் சேகரிப்பு மூலம் களத் தரவுகளும் சேகரிக்கப் பட்டன. மண்ணரிமான அபாயத்தை இழிவாக்கவும் பயிருற்பத்தித் திறனை மேம்படுத்தவும் ஒவ்வொரு கமநல சேவைப் பிரிவுக்கும் (ASD) பொருத்தமான பயிர்கள் அல்லது பயிர்ச் செய்கைத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டன. இக்கற்கையிலிருந்து ஊவா மாகாணத்திலுள்ள 16 சதவீதமான நிலப் பரப்பு (1389 சதுர கிலோ மீற்றர்கள்) மண்ணரிமானத்தினால் மிகக் கடுமையாக சேதமடையக் கூடியதாகவுள்ளது. அத்துடன் இந்நிலப் பரப்பில் பெரும்பான்மையான பரப்பு (கிட்டத் தட்ட 879 சதுர கிலோ மீற்றர்கள் அல்லது 63 சதவீதம்) பதுளை மாவட்டத்தில் அமையப் பெற்றுள்ளது. இம்மாகாணத்துக்கென தயாரிக்கப்பட்ட மண்ணரிமான அபாய வரைபடம் பல்லாண்டு மற்றும் ஆண்டுத் தாவரங்களை வளர்ப்பதற்குப் பொருத்தமான பகுதிகளை அடையாளம் காணப் பயன்படுத்தப்பட்டதுடன் இப்பகுதியின் மண்ணரிமான இடரினை இழிவுபடுத்துவதற்கான பிராந்திய நிலப் பாவனை சிபாரிசு வரைபடமாக உருப்பெற்றது.

## இலங்கையில் அதீத காலநிலையின் நிலவுகை

அயன மண்டல பருவக் காற்றுக் காலநிலையைக் கொண்ட ஒரு தீவாக இருக்கும் அதேவேளை இலங்கையின் வெவ்வேறு பகுதிகளிலும் வெப்பநிலை, மழைவீழ்ச்சியில் காணப்படுகின்ற வேறுபாடுகள் காரணமாக ஒரு தொகுதி வேறுபட்ட காலநிலை நிபந்தனைகள் நிலவுகின்றன. இவற்றுள் சில அதீத காலநிலை நிபந்தனைகளும் ஏற்படுகின்றன. அதீத காலநிலை நிகழ்வுகளின் நிலவுகை தொடர்பாக அளவறி ரீதியான கால நிலைத் தரவுகளினை நோக்கும் போது, நீண்ட கால அடிப்படையில் மின்னல் தாக்கம், ரொர்நாடோ (Tornado) வகை கடுங்காற்று என்பன மிக அற்பமாகவே நிகழ்ந்துள்ளன. இக்கற்கையானது இலங்கையின் தெரிவு செய்யப்பட்ட சில இடங்களில் வெப்பநிலை, மழைவீழ்ச்சியின் தன்மையில் ஏதேனும் சாத்தியமான போக்குகள் உள்ளனவா எனக் கண்டறிவதில் அவதானம் செலுத்தியது. கனடா வானிலையியல் சேவை, காலநிலை ஆராய்ச்சிக் கிளையினால் விருத்தி செய்யப்பட்ட RclimDex எனும் மென்பொருளைப் பயன்படுத்தி நாடெங்கும் பரவியுள்ள 14 வானிலையியல் நிலையங்களிலிருந்து 1960ம் ஆண்டு தொடக்கம் 2007ம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் சேகரிக்கப்பட்ட நாளாந்த வெப்பநிலை, மழைவீழ்ச்சித் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. வெப்பநிலையின் போக்கினது பகுப்பாய்விலிருந்து பகல்நேர உயர் வெப்பநிலை மற்றும் இரவு நேர இழிவு வெப்பநிலை என்பன சில விதிவிலக்குடன் முறையே $0.01^{0}c$ மற்றும் $0.03^{0}c$ என்றளவில் ஆண்டு தோறும் அதிகரித்துச் செல்கின்றது. நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் குளிரான பகல்நேரம் மற்றும் குளிரான இரவு நேரம் நிலவும் நாட்களில் எண்ணிக்கை குறிப்பிட்டுக் கூறக்கூடியளவில் குறைந்து செல்வதையும் பெறுபேறுகள் தெளிவாகக் காட்டின. இதேவேளை சூடான பகல்நேரம் மற்றும் சூடான இரவு நேரங்களைக் கொண்ட நாட்களின் எண்ணிக்கை குறிப்பிட்டுக் கூறக்கூடியளவில் அதிகரித்துச் செல்லும் போக்கினையும் அவதானிக்கப்பட்டுள்ளது. இவையெல்லாமே இலங்கையின் வெப்பநிலை அதிகரிப்பினது போக்கினை மிகத் தெளிவாக சைகை செய்து நிற்கின்றன. எவ்வாறிருப்பினும் மழைவீழ்ச்சியினது கடும் போக்கினை அடையாளம் காணவென பயன்படுத்தப்பட்ட சுட்டிகள் எதுவுமே மாறுபாடுகள் இருக்கம் போக்கினை காட்டவில்லை.

## இலங்கையின எதிர்கால காலநிலை :- FCHM4 பொதுச் சுற்றோட்ட மாதிரி

## (GCM) யினுடைய கீழ்மட்ட இயங்கு நிலையூடான ஒரு அணுகுமுறை

IPCC இனுடைய $A_2$ மற்றும் $B_2$ செயன்முறைகளின் கீழ் ECHAM பொதுச் சுற்றோட்ட மாதிரி (GCM) மூலம் பிறப்பிக்கப்பட்ட காலநிலைத் தகவல்கள் PRECISE பிராந்திய காலநிலை மாதிரி (RCM) யில் உள்ளீடாக பயன்படுத்தப்பட்டு கிட்டத்தட்ட 50 கிலோ மீற்றர்கள் துலக்கத்தில் வெளிப்பாடுகள் பெறப்பட்டன. ஆதாரக் காலப்பகுதி 1961 – 1990 மற்றும் மூன்று எதிர்கால தவணைகள் 2010 – 2039 (2020கள்), 2040 – 2069 (2050கள்) மற்றும் 2070 – 2099 (2080கள்) என்பன கருத்திலெடுக்கப்பட்டு கற்பனையாக்கம் நிறைவேற்றப்பட்டது. ஆதாரக் காலப்பகுதிக் காலநிலைக்கு இணங்க மூன்று எதிர்காலத் தவணைகளுக்கும் எதிர்பார்க்கும் சராசரி ஆண்டு வெப்பநிலை மற்றும் மழைவீழ்ச்சிப் பெறுமானங்கள் கணித்துப் பெறப்பட்டன.

இக்கற்கையிலிருந்து $A_2$ செயன்முறையின் கீழ் 2080ம் ஆண்டளவில் இலங்கையில் வருடாந்த சராசரி வெப்பநிலை $2.5^0c$ மற்றும் $4.5^0c$ எனும் வீச்சால் அதிகரிக்கும் எனவும் $B_2$ செயன்முறையின் கீழ் சாத்தியமான வருடாந்த சராசரி வெப்பநிலை $2.5^0c$ மற்றும் $3.25^0c$ ஆகவிருக்கும் எனவும் தெளிவாகிறது. இவ்விரு எதிர்வு கூறல்களும் இந்நூற்றாண்டுக்கான IPCC பூகோள வெப்பநிலை மாற்றங்களுக்கான எதிர்வுகூறல்களுடன் இணைவாகவே செல்கின்றன.

இலங்கையின் எதிர்கால மழைவீழ்ச்சி தொடர்பில் இந்நூற்றாண்டில் இறுதியில் உலர் வலயம், வறண்ட வலயம், இடை மற்றும் ஈரவலயங்கள் ஈரலிப்பாகவும் மாறிவரும் என $A_2$ செயன் முறையின் எதிர்வுகூறலும், அதேவேளையில் $B_2$ செயன்முறையானது ஒரு சிக்கலான நிலைமையாக உலர் வலயம் மற்றும் மத்திய உலர் நிலங்கள் வறண்டதாக மாறுகையில் இலங்கையின் ஈரலிப்பான பகுதிகள் மேலும் ஈரலிப்பாக மாறும் எனவும் ஆனால் இது $A_2$ செயன்முறையுடன் ஒப்பிடுகையில் சற்று மந்தகதியில் நிகழும் எனவும் எதிர்வு கூறுகின்றது.

## இலங்கையின் மத்திய உயர்நிலப் பகுதிகளில் நேர் அதீத மழைவீழ்ச்சி அசாதாரணப் போக்கு காணப்படுகின்றதா?

இலங்கையின் மத்திய உயர் நிலப் பகுதிகளில் நேர் அதீத மழைவீழ்ச்சி அசாதாரணப் போக்கினுடைய பகுப்பாய்வின் பெறுபேறுகளை இக்கற்கை தெளிவுபடுத்தியது. இக்கற்கைக்கு நான்கு மாவட்டங்களில் பரவிக் காணப்பட்ட எட்டு மழைமானிகளினது 1960 – 2010 காலப் பகுதிக்குட்பட்ட நாளாந்த வாசிப்பினுடைய தரவுகள் பயன்படுத்தப்பட்டன. முறையே கடின, மிகக் கடின மழைவீழச்சி நிகழ்வுகளை தீர்மானிப்பதற்குரிய தாங்குதிறன் பெறுமானங்க ளாக ஒவ்வொரு நிலையத்திலிருந்தும் 1961 – 1990 காலப் பகுதிக்குட்பட்ட 95வது மற்றும் 99வது வீத நாளாந்த மழைவீழ்ச்சி நேரத் தொடர் பெறுமானங்கள் பயன்படுத்தப்பட்டன. இப்பகுப்பாய்விலிருந்து கடின மற்றும் மிகக் கடின மழைவீழச்சி நிகழ்வுகளின் குறித்துக் கூறக்கூடிய மாற்றங்கள் எதுவும் கடந்த இரு தசாப்தங்களான 1991 – 2010 காலப் பகுதியில் இலங்கையின் மத்திய உயர் நிலப் பகுதிகளில் இடம் பெற்றிருக்கவில்லை எனத் தெளிவாகியது. எவ்வாறாயிருப்பினும் 2006 – 2010 இடைலான ஐந்தாண்டு காலப்பகுதியில் விசேடமாக முதலாம் இடைப் பருவக்காற்று மழையின் (FIM) போது இவ்வாறான நிகழ்வுகளின் அதிகரித்த தோற்றப்பாடுகளின் சைகைகள் காணப்பட்டன. மத்திய உயர் நிலப் பகுதிகளில் நேர் அதீத மழைவீழ்ச்சியின் அசாதாரணப் போக்கு அதிகரித்துள்ளமை தெளிவின்றி இருப்பினும் மனித நடவடிக்கைகள், நிலப் பயன்பாட்டு மாற்றங்கள் மற்றும் நிலமுகாமைத்துவ நடவடிக்கைகளின் மாற்றங்கள் போன்ற பல்வேறு காரணிகளால் மத்திய உயர் நிலப்பகுதிகளில் எதிர்கால நிலச்

சீரழிவு தீவிரமடையாது என முடிவெடுப்பது அறிவீனமாகும்.

## உயர் பிரிவலு செய்மதி விம்பங்களின் அடிப்படையில் நெற் செய்கைப் பரப்பு மற்றும் விளைச்சலை எதிர்வு கூறல்

இலங்கையில் நெற்செய்கைப் பரப்பு மற்றும் விளைச்சல் என்பவற்றை நேர யதார்த்தத்துடன் எதிர்வு கூறும் தொகுதிகளை விருத்தி செய்யும் குறிக்கோளுடன் இவ்வாராய்ச்சிச் செயற்றிட்ட மானது தேசிய விவசாய ஆராய்ச்சி நிகழ்ச்சி (NARP) நிதியீட்டத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இந்நோக்கத்திற்கென உயர் மற்றும் மத்திம பிரிவலு செய்மதி விம்பங்கள் பூகோளத் தகவல் தொகுதியில் (GIS) பரீட்சிக்கப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தின் பெரும்பாலான பிரதேச செயலாளர் பிரிவுகளின் தற்போது கிடைக்கக்கூடியதாயுள்ள நெற்செய்கைப் பரப்பு வரைபடங்கள் (1 : 50,00 மற்றும் 1 : 10,000 அளவுத்திட்ட எண்மான தரைத்தோற்ற வரைபடத் தாள்கள்) இற்றைப்படுத்தப்பட்டன. உயர் பிரிவலு செய்மதி விம்பங்களுடன் எதிர்கொண்ட இடர்பாடுகளின் காரணமாக, இலவச கூகுள் GIS மென்பொருளான Quantum – GIS ஆனது நெற் செய்கைப் பரப்பின் இற்றைப்படுத்தலின் போது வெற்றிகரமாக இசைவாக்கப்படுத்தப்பட்டது. இவ்வாண்டில் அம்பாறை, பொலனறுவை மாவட்டங்கள், மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தின் பகுதிகள் என்பவற்றின் நெற்காணி வரைபடம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. வெவ்வேறு பாகுபாட்டு அணுகுமுறைகள் மூலம் கணித்துப் பெறப்பட்ட பதியத்தலாவை பிரதேச செயலாளர் பிரிவின் நெற்காணிகளின் விஸ்தீரணம் 30.7 சதுர கிலோ மீற்றர்கள் தொடர்க்கம் 17.9 சதுர கிலோ மீற்றர்கள் வரையில் வேறுபட்டுக் காணப்படுகையில் நேரடித் திரை எண்மான முறையில் கணித்துப் பெறப்பட்ட விஸ்தீரணம் 19.8 சதுர கிலோ மீற்றர்களாக அமைந்திருந்தது. இக்கற்கையில் பயன்படுத்தப்பட்ட பாகுபாட்டு அணுகுமுறைகள் இதே முறையினைப் பயன்படுத்தி ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மதிப்பீடு செய்யப்படும்.

## இலங்கையில் காலநிலை மாற்ற பாதிப்பு மதிப்பீடு மற்றும் பிராந்திய பயிர் விளைச்சல் எதிர்வு கூறல் என்பவற்றுக்கு கருவித் தொகுதி ஒன்றின் விருத்தி, மதிப்பீடு மற்றும் பிரயோகம்.

இச்செயற்றிட்டமானது காலநிலை மாற்ற விவசாயம் மற்றும் உணவுப் பாதுகாப்பு (CCAFS) நிகழ்ச்சி தெற்காசியாவின் CGAIR இனால் IWMI இனூடாக நிதியிட்டம் செய்யப்படுகின்றது.

இயற்கையான மற்றும் மாற்றியமைக்கப்பட்ட காலநிலை நிபந்தனைகளில் பயிரின் நிலையை கண்காணித்தலும் எதிர்வு கூறலும் இச் செயற்றிட்டத்தின் பிரதான நோக்கங்களாகும். இயற்கையான மற்றும் மாற்றியமைக்கப்பட்ட காலநிலை நிபந்தனைகளில் பயிரின் நிலையை கண்காணிக்கவும், எதிர்வு கூறவும் CRAFT எனும் கருவித் தொகுதி இயலுமை கொண்டதாய் அமைந்திருந்தது.

பாவனையாளர் நேய வடிவமைப்பில் பெரும்பாலான மண் மற்றும் தாவர தரவுகள் சேகரிக்கப்பட்டு ஒருங்கமைக்கப்பட்டன. பரீட்சார்ந்த கற்கை மாவட்டங்களின் (அம்பாறை மற்றும் பொலன்னறுவை) கடந்த பத்தாண்டுகளுக்குரிய காலநிலைத் தரவுகள் நாளாந்த அடிப்படையில் சேகரித்து ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன. அம்பாறை மற்றும் பொலநறுவை மாவட்டங்களின் பிரதானமாக நெற்செய்கை பண்ணப்படும் பிரதேச செயலாளர் பிரிவுகளின் பயிரிடும் திகதிகள் சேகரித் தெடுக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகளை CRAFT இற்கு இணக்கமுள்ள வடிவமைப்புக்கு மாற்றியமைக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. உரிய வடிவமைப்புடைய கோப்புக்கள் மூன்று வித்தியாசமான நிருவாக எல்லைகளுக்கான மட்டங்களில் விருத்தி செய்யப்பட்டுள்ளன. 9 மாகாணங்கள், 25 மாவட்டங்கள் 323 பிரதேச செயலாளர் பிரிவுகள்.

CRAFT கருவித் தொகுதியை பாவனைக்கென நிலை நிறுத்தலை (Installation) நிறைவு செய்ய முடியாமல் போனது. (வரைவுப் பதிப்பு – Draft Version). CRAFT மென்பொருளின் ஒரு புதிய பதிப்பு (Version) வெளியிடப்பட்டுள்ளதுடன். அம்மென் பொருளை நிலை நிறுத்துதல் (Install) மற்றும் தரவு முன் - பதப்படுத்தல் என்பனவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## பேண்தகு நில முகாமைத்துவத்திற்கான நிலச் சீரழிவு மதிப்பீடு (LADA)

ஆற்றுப் பள்ளதாக்கு, நீர் நிலைகள், உலர் நில சூழற்றொகுதிகள் என்பவற்றில் நிலச் சீரழிவின் பாதிப்பு, திவீரம், பரப்பு மற்றும் தன்மை ஆகியவற்றை மதிப்பிடவும் அளவிடவும் தேவையான முறைமைகளையும், கருவிகளையும் விருத்தி செய்யவென "தெற்காசியாவில் காலநிலை மாற்ற இசைவாக்கங்களுக்கும் பேண்தகு நிலமுகாமைத்துத்துக்கும் நிலச் சீரழிவு மதிப்பீடும் கண்காணித்தலும்" எனும் பிராந்திய செயற்றிட்டம் உணவு விவசாய தாபனத்தினால் (FAO) நிதியீட்டம் செய்யப்படுவதுடன் நான்கு செயற்றிட்ட நாடுகளான பங்களாதேஷ், பூட்டான், நேபாளம் மற்றும் இலங்கை ஆகியவற்றின் தொழிநுட்பக் குழுக்களையும் உள்ளடக்கியிருந்தது.

## வெவ்வேறு பயிர்களுக்குரிய பயிர் நீர்த்தேவைப்பாடு மற்றும் நீர்ப் பாவனை வினைத்திறன் என்பவற்றுக்கான தகவல் தொகுதியின் விருத்தி

வித்தியாசமான விவசாய சூழலியல் வலயங்களில் நீர்ப்பாசனத் தொகுதிகளுக்கென பயிர்களைத் தெரிவு செய்வதில் பயிர் நீர்த்தேவை தொடர்பான தரவுத்தளத்தின் விருத்தியும் அவற்றின் உற்பத்தித்திறன் தொடர்பான மதிப்பீடும் ஒரு முன்தேவைப்பாடாக உள்ளது. நெல், வயற் பயிர்கள், மரக்கறிகள், பழப்பயிர்கள் என்பன அவற்றின் பயிர் நீர்த்தேவை மற்றும் நீர்ப்பாவனை வினைத்திறன் என்பவற்றிற்கு மதிப்பீடு செய்யப்பட்டன. அதனுடன் வெவ்வேறு பயிர்களுக்கான பயிர் நீர்த்தேவை மற்றும் நீர்ப்பாவனை வினைத்திறன் என்பவற்றுக்கான தரவுத்தளமொன்றும் விருத்தி செய்யப்பட்டது.

நெற்பயிருக்கான நீர்தேவைப் பகுப்பாய்விலிருந்து, வித்தியாசமான வயது வகுப்புக்களிலின்றி, சிறுபோக செய்கையின் போதே பெருமளவு ஆவி - ஆவியுயிர்ப்பு இழப்பும், ஆழ ஊடுவடிதல் இழப்பும் வெவ்வேறு வகை நில வகுப்புக்களில் காணப்பட்டமை தெளிவாகியது. சிறு போகத்தின் போதான சராசரி ஆவியாதல் ஆவியீர்ப்பு இழப்பானது பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் (30-40%) அதிகமாக காணப்பட்டது. நீர்ப்பாவனை வினைத்திறன் (WUE) பகுப்பாய்விலிருந்து 2.5-3.5 மாத வயதுடைய வர்க்கங்களில் ஒரு அதிரிப்புப் போக்கு காணப்படுவது தெளிவாகியது. எவ்வாறாயினும் 3.5 மாதத்திலும் அதிக வயதுடைய நெல் வர்க்கங்கள் வெவ்வேறு வகையான நிலங்களில் WUE இல் ஒரு குறைந்து செல்லும் போக்கு அவதானிக்கப்பட்டது.

மேம்படுத்தப்பட்ட 3 மாத வயதுடைய வர்க்கங்கள், தாழ் நீர் வடிப்புடைய மண்ணில் உலர் மற்றும் இடை வலயங்களில் நீர்ப்பாசனத்தின் கீழ் பயிரிடப்பட்ட போது உயர் WUE பெறுமானங்களான 2.5Kg $m^{-3}$ha மற்றும் 1.48 Kg $m^{-3}$ha இனை முறையே பெரும் மற்றும் சிறு போகங்களின் போது காண்பித்தன.

வித்தியாசமான வயது வகுப்பு நெற்பயிரின் சராசரி விளைச்சல் தொடர்பான பகுப்பாய்விலிருந்து நான்கு மாத வயது வரை விளைச்சல் அதிகரித்துச் செல்லும் போக்கு காணப்பட்டது. 2.5 மாத வயது வகுப்புடன் ஒப்பிடுகையில் இது 40 சதவீத அதிகரிப்பாகும். நான்கு மாதங்களை விட அதிக வயதுடைய வர்க்கங்களில் சராசரி விளைச்சல் குறைந்து செல்லும் போக்கு காணப்பட்டது. 5- 6 மாத வயதுடைய வர்க்கத்தின் விளைச்சல் குறைவானது 4 மாத வயது வர்க்கத்துடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ 30 - 40 சதவீதமாக காணப்பட்டது.

## தாழ் நாட்டு ஈரவலய நெற் செய்கை நிலத்திற்கு தனித்துவமான பசளைச் சிபாரிசுகளின் விருத்தி

வெவ்வேறு வகையான தரைகளினது மண்ணிரசாயன இயல்புகளை பண்புப் படுத்துதலும், மண்ணிரசாயனப் பண்புகளைக் கருத்திற் கொண்டு பசளைச் சிபாரிசுகளை விருத்தி செய்தலும் இவ்வாராய்ச்சியினது குறிக்கோளாகும்.

கம்பகா, கொழும்பு மற்றும் கேகாலை மாவட்டங்களில் அடிப்படை வரைபடம் மற்றும் நில வகுப்புகளை உள்ளடக்கியதாக ஒரு களத் தரவுச் சேகரிப்பும் அதனுடன் இணைந்ததாக வித்தியாசமான தரைகளில் மண் மாதிரியெடுத்தலும் நடாத்தப்பட்டது. இச் செயற்றிட்டம் 2012ம் ஆண்டு தொடங்கப்பட்டதுடன் 2014ம் ஆண்டிலும் தொடரப்படும். இக்கற்கையிலிருந்து நில வகையை அடிப்படையாக கொண்ட பயிர் முகாமைத்துவ சிபாரிசுகளே இலங்கையின் ஈரவலயத்தில் யாய (Yaya) அணுகுமுறைக்கு மிகவும் பொருத்தப் பாடானது என்பது தெளிவாகியது.

## இலங்கையின் மத்திய உயர் நிலப் பகுதிகளில் பிரதான விவசாய நிலப் பாவனைகளில் மண்ணரிமானத்தின் நிலையை ஐசோடொப் (Isotope) நுட்பத்தினூடாக மதிப்பிடல்

மத்திய உயர் நிலப்பகுதிகளில் பிரதான விவசாய நிலப் பாவனைகளின் போதுள்ள மண்ணரிமான அளவினை மதிப்பிடலும், நிலப் பாவனை மட்டங்களிற்கேற்ப மண் பாதுகாப்பு வழிவகைகளை வழங்குதலும் இவ்வாராய்ச்சியினது குறிக்கோளாக அமைந்திருந்தது. டொலொஸ்பகே (dolosbage) மற்றும் கீல்பன்கந்துர (Heelpankandura) ஆகிய தெரிவு செய்யப்பட்ட இடங்களில் இந்நோக்கங்களிற்கென மண்ணரிமான மதிப்பீடு நடாத்தப்பட்டது. இப்பரிசோதனை 2012ம் ஆண்டு தொடங்கப்பட்டதுடன் 2015ம் ஆண்டு வரையிலும் தொடரப்படும். இக்கற்கைளிலிருந்து கடந்த நூறு ஆண்டுகளில் இடை நாட்டு தேயிலை செய்கை பண்ணப்படும் பகுதிகளில் மண்ணரிமான வீதம் 1.12 தொடக்கம் 29.29 தொன் / ஹெக்ரயர் / ஆண்டு என்றவாறு அமைந்திருந்தது என்பது புலனாகியது. இதிலிருந்து அமைவிடத்துக்கு தனித்துவமானதாக மண்ணரிமானம் காணப்படுவதோடு பொருத்தமான மட்காப்பு வழிமுறைகள் அமைவிடப் பண்புகளைக் கருத்தில் கொண்டே எடுக்கப்பட வேண்டும் என்பதும் தெளிவாகிறது.

## இலங்கையின் மத்திய உயர் நிலப் பகுதிகளிலுள்ள பிரதான நீர் நிலைகளின் நீர்த் தரத்தை கண்காணித்தல்

மத்திய உயர் நிலப்பகுதிகளில் பிரதான விவசாய நிலப் பாவனையின் போது பசளைப் பாவனை மற்றும் மண்ணரிமானத்தின் அளவு என்பவற்றை மதிப்பிடுவதே இவ்வாராய்ச்சியின் குறிக் கோளாகும். இந்நோக்கங்களுக்காக நீரின் தரம் தொடர்பான களத் தரவுச் சேகரிப்பு ஒன்று நிகழ்த்தப்பட்டது. இவ்வாராய்ச்சி 2012ம் ஆண்டில் தொடங்கப்பட்டதுடன் 2014ம் ஆண்டிலும் தொடரப்படும். கற்கை மேற்கொள்ளப்பட்ட 40 நீர் நிலைகளில் தென் பிராந்திய போக்கிலுள்ள நீர் நிலைகள் சிறந்த தரமுடைய நீரினை வழங்குகின்றன. இதற்கு எதிர்நிலையாக மத்திய உயர் நிலப்பகுதிகளின் கிழக்கு பிராந்திய போக்கிலுள்ள நீர் நிலைகளான மாரஸ்ஸன ஓயா, கிவுல்லிந்த நீர்நிலை, உமா ஓயா போன்றன ஒப்பீட்டளவில் குறைந்த தரமுடைய நீரினையே வழங்குகின்றன.

## விவசாயக் கிணற்றினை அடிப்படையாக கொண்டமைந்த பண்ணைகளுக்கு நில முகாமைத்துவ வழிகாட்டல்களின் விருத்தி

உயர் நிலங்களில் மழை நீர்ப் போசிப்புடன் விவசாயக் கிணற்றினை அடிப்படையாக கொண்டு

விருத்தியடைந்த சிறிய பண்ணைகள் நில முகாமைத்துவ தொழிநுட்பங்களை முழுமையாக இசைவாக்கப்படுத்தியிருக்கவில்லை. இதனால் மண்வளம் மற்றும் நீர்ப்பாசன வினைத்திறனை அதிகரிப்பதற்கான நில முகாமைத்துவ தொழிநுட்பங்களை விருத்தி செய்வதே இக்கற்கையின் குறிக்கோளாக அமைந்தது. 2013ம் ஆண்டில் ஒரு பூர்வாங்க கற்கை மேற்கொள்ளப்பட்டது. பெறுபேறுகளிலிருந்து, இப்பயிர்ச் செய்கைக் கோலத்தில் சேதனப் பசளைப் பிரயோகம் திருப்திகரமான மட்டத்தில் அமைந்திருக்கவில்லை. இதனால் இப்பிரதேசத்தில் விவசாயக் கிணறுகளின் அடிப்படையிலமைந்த பயிர்ச் செய்கைக்கு சேதனப் பசளைப் பிரயோகம் மிகவும் ஊக்குவிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். மேலும் நீர் மேலுயர்த்தும் கருவிகளின் பாவனைக்கென விவசாயிகள் விஞ்ஞான ரீதியான வழிகாட்டல்கள் எதனையும் பின்பற்றியிருக்க வில்லை, இதனால் பொருத்தமான நீர் மேலுயர்த்தும் கருவிகளின் தெரிவுக்கும் அறிமுகத்துக்கும் முறைமையியல் ஒன்று விருத்தி செய்யப்பட வேண்டும்.

## உலர் வலயத்தின் மழைநீர் போசிப்புடைய உயர் நிலங்களுக்கான பல் பயன்பாட்டு மண்பாதுகாப்பு அணைகளின் விருத்தி

மழை நீர்ப் போசிப்புடைய உயர் நிலங்களுக்கு அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட பண்ணை இயந்திரங்களின் பாவனையால் விவசாயிகள் மிக நெருக்கமாக அமைந்த சமவுயரக் கோட்டு மண் பாதுகாப்புக் கட்டமைப்புக்களை இசைவாக்கப் படுத்துவதில்லை. பல்லாண்டு மரங்களினை விசாலமான இடை வெளிகளுடன் உள்ளடக்கிய வண்ணம் சாதாரண சிபாரிசுக்கமைவான மண் அணைகளிலும் உயரமானதும் திறந்த மண் அணைத் தொகுதியைக் கொண்டதுமான மண் பாதுகாப்பு அணைகளின் விருத்தியே இவ்வாராய்ச்சியினது குறிக்கோளாக அமைந்தது. இதன் போது பரிகரிப்பு அணைகள் முள்முருக்கை, கட்டை முருங்கை, கறுவா, மாதுளை, சுண்டங் கத்தரி, சேர ஆகிய பல்லாண்டுத் தாவரங்களைக் கொண்டிருந்ததுடன் கட்டுப்பாட்டு பரிசோதனையாக இவ்வகை மரங்கள் எதனையும் கொண்டிராத அணைகளும் அமைக்கப்பட்டன. பெபேறுகளிலிருந்து முள்முருக்கை, கட்டை முருங்கை மற்றும் சுண்டங் கத்தரி நடப்பட்ட அணைகள் மரவளர்ச்சி பயிர் விளைச்சல் என்பவற்றில் சிறந்த செயலாற்றலைக் காட்டின. இவ்வாராய்ச்சி மேற்குறித்த மரங்களினை பல் பயன்பாட்டு மண் பாதுகாப்பு அணைகளின் விருத்திக்கென பயன்படுத்தும் சாத்திய வளத்தினை பரிந்துரை செய்கிறது.

## உலர் வலயத்தில் சிறிய குளங்களின் தொகுதியில் மண் உவராதலைப் பாதிக்கும் காரணிகளும் அதன் தற்போதைய நிலையும்.

இலங்கையில் உலர் வலயத்திற்குரிய வட -மேல் பகுதிகளிலுள்ள சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் தொகுதியில் மண் உவராதல் ஒரு பிரதான சூழல் சார் பிரச்சினையாகும். சிறிய நீர்ப்பாசன குளத் தொகுதிகளின்கீழ் உயர்ந்தளவில் மண் உவராதலானது நெல் விளைச்சலை எதிர்மறைத் திசையில் பாதிப்பதோடு விவசாயச் சமூகத்தின் சமூகப் - பொருளாதார நிலையினையும் சீரழிக்கிறது. இக்கற்கையானது குருணாகல் மாவட்டத்தின் தபுத்த கமநல கேந்திர நிலையப் பகுதியில் சியபலகமவெவவில் வேர் வலய ஆழத்தில் மண் உவராதலின் தனிச்சிறப்பான பரம்பலை கண்டறியவென நடாத்தப்பட்டது.

EM - 38 இனைப் பாவித்து உள்ளக நிலமைகளில் மின் கடத்தாறு அளவிடப்பட்டது EM - 38 என்பது உவராதலால் பாதிக்கப்பட்ட நெற் காணிகளின் மண் வரைப்படமாக்கல் பிரயோகமாகும். 12. 5 மீற்றர் x 12.5 மீற்றர் இடைவெளிகளில் அமையப்பெற்ற நிலையங்களில் முறையே 0 - 37.5 சதமமீற்றர் மற்றும் 0 - 75 சதம மீற்றர் ஆகிய ஆழங்களில் மின் கடத்தாறு அளவிடப்பட்டது. நீர்ப்பாசனத் தொகுதிகளின் கீழ் நெற் செய்கையிலீடுபடும் விவசாயிகளிடமிருந்து நேர் காணலினூடாக வரலாற்று, சமூக -

பொருளாதார மற்றும் விளைச்சல் தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டன.

இப்பிரதேசத்தில் மின் கடத்தாறு 1.00 - 5.46 ds/m ஆக காணப்பட்டமை கண்டறியப்பட்டது. முன் அந்தம் மற்றும் பின் அந்தப் பகுதியில் உவர்த்தன்மை குறைவாக அவதானிக்கப்பட்ட அதேவேளை இப்பிரதேச நடுப்பகுதியில் உவர்த்தன்மை சார்பளவில் உயர்வாயிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயிருப்பினும் 5% மான நிலப்பகுதியே உவர்த்தன்மையால் பாதிப்பட்டிருந்தது. ஏனைய பகுதியில் மின் கடத்தாறு 2 ds/m இலும் குறைவாக காணப்பட்டது. இது நெற்பயிரினால் சகித்துக் கொள்ளக்கூடிய மட்டமாகும். இத்திட்டத்தின் நீர்வடிகாலமைப்புத் தொகுதி மிகவும் தரக்குறைவாக அமைந்திருந்ததுடன் வடிப்புக்குரிய நீரானது நீர்ப்பாசனத்துக்கென மீளவும் பின் அந்தத்துக்குரிய நெற்காணிகளில் பயன்படுத்தப்பட்டது. விவசாயிகள் தமது நெல் விளைச்சல் குறைவாக இருப்பதாக முறைப்பாடு செய்கின்ற போதிலும் இது தனியே மண் உவராதல் காணரமாக ஏற்பட்டதென காரணப்படுத்த முடியாதுள்ளதுடன் ஏனைய காரணிகளான குறைந்த மண்வளம் மற்றும் நீர்ப்பாசன நீரின் தட்டுப்பாடு போன்றனவும் பாதிப்புச் செலுத்தியுள்ளன.

## வவுனியா மாவட்டத்தில் ஆழமற்ற நிலக்கீழ் நீரின் தரம் தொடர்பான கற்கை

ஆழமற்ற நிலக்கீழ் நீரின் தரத்தைக் கண்டறியவும் பிரத்தியேகமாக வவுனியா பிரதேச செயலாளர் பிரிவின் நீர் உவர்த்தன்மையைக் கண்டறியவுமென இக்கற்கை வடிவமைக்கப்பட்டது. முதற் படியாக வவுனியா பிரதேச செயலாளர் பிரிவின் நெளுக்குளம் கிராம செயலாளர் பிரிவில் நிலக்கீழ் நீரின் தரம் அளவிடப்பட்டது. இலங்கையின் உலர் வலயத்தில் பெரும்பான்மையான விவசாயிகளுக்கு மிகப் பெறுமதிமிக்க வளமாக அமைந்திருப்பது விவசாயக் கிணறுகளாகும். ஏனெனில் இதன் மூலம் பயிர் விளைச்சலானது பேண்தகு நிலையில் வைத்திருக்கப்படுகின்றது. இக்கற்கை யானது வவுனியா மாவட்டத்தின் பாலமைக்கல் கிராமத்தில் நிலக்கீழ் நீரின் நீர்ப்பாசனத்துக்கான பொருத்தப்பாட்டை மதிப்பிடவென நடாத்தப்பட்டது. மொத்தமாக 71 விவசாயக் கிணறுகள் இக்கற்கைக்கெனத் தெரிவு செய்யப்பட்டதுடன் ஒவ்வொரு கிணற்று நீரினதும் மின்கடத்துதிறன் (EC) மற்றும் அமிலகாரத் தன்மை (pH) என்பன முதன்மையான தர அளவுகோல்களாக அளவிடப்பட்டன. கரைந்துள்ள திண்மங்களின் மொத்தம் (TDS), களர்த்தன்மை, சோடியம் ($Na^{+}$) மக்னீசியம் ($Mg^{2+}$) கல்சியம் ($Ca^{2+}$) நைத்திரேற்று நைதரசன் ($NO_3^{-}$-N) மற்றும் வன்மைத் தன்மை என்பன விசேடமாக தெரிவு செய்யப்பட்ட 15 விவசாயக் கிணறுகளில் அளவிடப்பட்டன. 41 சதவீதமான கிணறுகள் 4 - 6 மீற்றருக்கிடைப்பட்ட ஆழத்துடனும், 42 சதவீதமான கிணறுகள் 6 - 8 மீற்றருக்கிடைப்பட்ட ஆழத்துடனும் அமைந்திருக்க எஞ்சியவை 8 மீற்றரிலும் அதிக ஆழமுடையன வாக காணப்பட்டன. 31 சதவீதமான கிணறுகளில் உலர் காலத்தின் முடிவில் (புரட்டாதி மாத இறுதியில்) 2 மீற்றர் ஆழத்திலும் அதிகமாக நீர் காணப்பட்டமை இப்பிரதேசத்தின் உயரளான நிலக்கீழ் நீரின் சாத்தியவளத்தைச் சுட்டிக் காட்டுகிறது. பெபேறுகளானது நீர்ப்பாசன நீரின் தரத்துக்குரிய FAO வின் தர நிர்ணயங்களுடன் ஒப்பிடப்பட்டதுடன் அதற்கிணங்க இவ் விவசாயக் கிணறுகள் பாகுபாடு செய்யப்பட்டன. சராசரி pH பெறுமானம் 7.1 தொடக்கம் 9.15 வரையில் காணப்பட்டதுடன் 75 சதவீதமான கிணறுகள் நீர்ப்பாசனத்துக்குப் பொருத்தமானவை 0.7 ds/m ஐ விட குறைவான மின்கடத்துத்திறனைக் கொண்டிருந்த 8 சதவீதமான கிணறுகள் நீர்ப்பாசனதுக்குப் பொருத்தமானவையாகவும் 0.7 - 3 ds/m இற்கு இடைப்பட்ட மின் கடத்துத்திறனைக் கொண்டிருந்த 76 சதவீதமான கிணறுகள் நீர்ப்பாசனத்துக்கு நடுத்தர அளவுப் பொருத்தமுடையனவாகவும், 0.4 - 6 ds/m எனும் வீச்சில் மின் கடத்துத்திறனைக் காட்டிய 16 சதவீதமான கிணறுகள் நீர்ப்பாசனத்துக்குப் பொருத்தமற்றவையாகவும் அமைந்திருந்தன. 450 மில்லி கிராம் / லீற்றர் எனுமளவிலும் குறைந்த

TDS ஐ ஒரேயொரு கிணறு, மாத்திரம் கொண்டிருந்தது ஏனைய எல்லாக் கிணறுகளும் 450 - 2000 மில்லி கிராம் / லீற்றர் எனுமளவில் TDS ஐக் கொண்டிருந்ததுடன் இவை நடுத்தரமான அளவில் நீர்ப்பாசனத்துக்குப் பொருத்தமானவை. களர்த்தன்மை 160 - 500 மில்லி கிராம் / லீற்றர் ஆக காணப்பட்டதுடன் பெரும்பான்மையான கிணறுகள் நீர்ப்பாசனத்துக்கு அனுமதிக்கப்படக் கூடியனவாக இருந்தன. நைத்திரேற்று நைதரசன் ($NO_3^-$-N) மற்றும் சோடியம் என்பவற்றினடிப் படையில் எல்லாக்கிணறுகளும் நீர்ப்பாசனத்துக்குப் பொருத்தமானவையாக அமைந்திருந்தன.

விதிவிலக்காக ஒரு கிணறு மாத்திரம் மிகக் கனமான நீர்ப்பாசன நீரைக் கொண்டிருந்ததுடன் ஏனைய பெரும்பாலான கிணறுகள் நீர்ப்பாசனத்துக்குப் பொருத்தமானவையாக காணப்பட்டன.

## தொழில்நுட்பப் பரம்பல்

### மண், நீர் பாதுகாப்பு, நில விருத்தி மற்றும் தொடர்புடைய விடயப் பரப்புக்களில் பயிற்சி

#### ஐந்து நாள் நிகழ்ச்சி:~

- மண்ணரிமான உறுத்துணர்ச்சி கூடிய பகுதிகளில் சேவையாற்றும் அலுவலர்களுக்கு மண் பாதுகாப்பு, நில விருத்தி, மண் பாதுகாப்புச் சட்டம் ஆகிய தலைப்புக்களில் ஐந்து நாள் பயிற்சி வழங்கப்பட்டது. பங்கேற்பு – 39 பேர்

#### மூன்று நாள் நிழ்ச்சிகள்:~

- வட மாகாண அலுவலர்கள், இரத்தினபுரி, மாத்தளை, நுவரெலியா, கேகாலை, பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்கு ஏழு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. ஒட்டு மொத்தமாக 250 அலுவலர்கள் மண் பாதுகாப்பும் நில விருத்தியும் மற்றும் மண் பாதுகாப்புச் சட்டம் எனும் தலைப்புக்களில் பயிற்சியளிக்கப் பட்டனர்.

#### இரண்டு நாள் நிகழ்ச்சிகள்:~

- நில அளவையியல் தொழிநுட்பங்கள் எனும் தலைப்பில் SGS லங்கா (தனியார்) வரையறுக்கப்பட்ட நிலையத்தின் அலுவலர்களுக்கான நிகழ்ச்சியொன்று – ஏழு பேர் பங்கேற்றனர்.

- மண் மற்றும் நீர் பாதுகாப்பு திட்டம் தயாரித்தல் எனும் தலைப்பில் தேசிய பயிலுனர் பயிற்சி மாணவர்களுக்கு நவயலத்தன்ன DTC யில் நிகழ்ச்சியொன்று – 24 பேர் பங்கேற்றனர்.

#### ஒரு நாள் நிகழ்ச்சிகள்:~

- கண்டி, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் மற்றும் மாவட்ட செயலக அலுவலர்களுக்கு மண் பாதுகாப்பும், மண் பாதுகாப்புச் சட்டம் தொடர்பில் விழிப்புணர்வும் எனும் தலைப்பிலான நிகழ்ச்சியொன்று – 65 பேர் பங்கேற்றனர்.

- புகையிலை கூட்டுத் தாபன அலுவலர்கள் மற்றும் புகையிலைச் செய்கைக்கு தெரிவு செய்யப்பட்ட விவசாயிகள் ஆகியோருக்கு மண் பாதுகாப்பு மற்றும் மண் பாதுகாப்புச் சட்டம் எனும் தலைப்பில் நான்கு நிகழ்ச்சிகள் - 240 பேர் பங்கேற்றனர்.

- கலகா மொறகென வித்தியாலயம், பிலிமத்தலாவ மகா வித்தியாலயம், பொல்காஸ்வத்த மகா வித்தியாலயம், தொலுவ மகா வித்தியாலயம் மற்றும் கெம்மாத்தகம நகரகிரி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு நீர் மற்றும் மண் பாதுகாப்பு எனும் தலைப்பிலமைந்த ஐந்து நிகழ்ச்சிகள் - 253 மாணவர்கள் மற்றும் 43 ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

- மேல் கொத்மலை நீர்நிலைப் பகுதிகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட வழிநடாத்தும்

தலைவர்களுக்கு மண் மற்றும் நீர்ப் பாதுகாப்பு எனும் தலைப்பிலமைந்த இரண்டு நிகழ்ச்சி – 54 பேர் பங்கேற்றனர்.

- பிபிலை, மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் புதிதாக பணிக்கமர்த்தப்பட்ட விவசாயப் போதனாசிரியர்களுக்கு மண் மற்றும் நீர்ப் பாதுகாப்பு எனும் தலைப்பில் நிகழ்ச்சியொன்று – 34 பேர் பங்கேற்றனர்.

- நுவரெலியாவில் “மூலிகைத் தாவரச் செய்கையில் மண் மற்றும் நீர்ப் பாதுகாப்பு” எனும் தலைப்பில் ஆயுர்வேத வைத்தியர்களுக்கான நிகழ்ச்சியொன்று – 22 பேர் பங்கேற்றனர்.

## நீர் மற்றும் மண் பாதுகாப்பு தொடர்பான பிரயோகச் செய்து காட்டல்கள்

- கன்னொறுவை மண் பாதுகாப்பு பிரயோகச் செய்து காட்டல் பகுதியில்
  - விஜயம் செய்த விவசாயிகள் குழுக்களின் மொத்த எண்ணிக்கை 145 (விவசாயிகள் - 5839, அலுவலர்கள் - 632, பிள்ளைகள் - 461)
  - விஜயம் மேற்கொண்ட ஏனைய குழுக்கள் - 922 (வயது வந்தோர் - 9370, பிள்ளைகள் - 2777)
  - பாடசாலைக் குழுக்கள் - 837 (ஆசிரியர், 6428, மாணவர்கள் 57749)
  - விசேட குழுக்கள் - 582
  - வெளிநாட்டவர்கள் - (வயது வந்தோர் - 118 பிள்ளகைள் 07)

- சீத்தாஎலிய, விவசாய ஆராய்ச்சி நிலைய மண் பாதுகாப்பு பிரயோக செய்து காட்டல் பகுதி –
  - விஜயம் செய்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் - 1140
  - விஜயம் செய்த விவசாயிகள் - 125
  - விஜயம் செய்த அலுவலர்கள் - 07

## பயிற்சிப் பட்டறைகள்

- “நீர் மற்றும் நீர் ஒருங்கிணைவும்” எனும் கருப்பொருளில் அமைந்த உலக நீர் தின பயிற்சிப் பட்டறை கன்னொறுவை சேவைக் கால பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. விவசாயத் திணைக்கள அலுவலர்கள், மாகாண விவசாயத் திணைக்கள அலுவலர்கள், மத்திய மாகாண ஆசிரியர்கள் உள்ளடங்கலாக 90 பேர் பங்கேற்றனர்.

- “நிலச் சீரழிவு மதிப்பீடும், தெற்காசியாவில் பேண்தகு நிலமுகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு இசைவாக்க மடைதல் என்பவற்றை கண்காணித்தலும்” எனும் FAO செயற்றிட்டத்தின் கீழ் 5 நாள் பிராந்தியப் பயிற்சிப் பட்டறைகள் 2 நடாத்தப்பட்டன. பூட்டான், பங்களாதேஷ், நேபாளம் மற்றும் பாங்கொக் இலுள்ள FAO பிராந்திய அலுவலகம் என்பவற்றிலிருந்து தலா மூன்று பங்கேற்பாளர்களும் சீன LADA குழாம் மற்றும் இலங்கையிலிருந்து 28 பங்கேற்பாளர்களும் இவ்விரு நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றினர்.

- இரு நாள் தேசிய பயிற்சிப்பட்டறைகள் 2 மேற்சொன்ன அதே செயற்றிட்டத்தின் கீழ் LADA - QM மென்பொருள் எனும் தலைப்பில் - விவசாயத் திணைக்களம், மாகாண விவசாயத் திணைக்களம், மகாவலி அதிகார சபை, நீர்ப்பாசனத் திணைக்களம், தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், விவசாய அமைச்சு, சுற்றாடல் அமைச்சு மற்றும் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றிலிருந்து 28 பங்கு பற்றுனர்களுக்கு LADA - QM மென்பொருள் தொழில் நுட்பத்தில் பயிற்சியளிக்கப்பட்டது.

### கண்காட்சிகள்

கீழ்வரும் கண்காட்சி நிகழ்வுகளின் போது இயற்கை வள முகாமைத்துவ நிலையத்தின் (NRMC) அலுவலர்கள் தொழிநுட்ப பரம்பல் நடவடிக்கைகளில் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

- தேசிய விவசாயிகள் வாரம் - வாரியப் பொல
- தொழிநுட்பக் கண்காட்சி – திஸ்ஸபுர மகா வித்தியாலயம்
- தொழிநுட்ப மற்றும் வர்த்தக கண்காட்சி – ரிவி சந்த வித்தியாலயம் - மாவனல்ல

### பதிப்புச் செய்யப்பட்ட பொருட்கள்

- மண் பாதுகாப்புக்குரிய விழிப்புணர்வுப் பதாதைகள்
  - சிங்களம் - (10,000 x 10)
  - தமிழ் - (2,500 x 07)
- மண் பாதுகாப்புச் சட்ட விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரம்
  - சிங்களம் - (10,000)
  - தமிழ்- (2,500)

### வானொலி நிகழ்ச்சிகள்

- மண்ணரிமாமும் விளைச்சல் குறைவில் அதன் பாதிப்புக்களும் எனும் தலைப்பில் தேசிய ஒலிபரப்புச் சேவை (சர பூமி), கந்துரட்ட சேவை, வயம்ப சேவை ஆகியவற்றில் மூன்று நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன. மண்ணரிமானம், மண் பாதுகாப்பும் மற்றும் மண் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தலும் ஆகிய தலைப்புக்கள் உள்ளடக்கபட்டடிருந்தன.

### தொழில்நுட்ப உதவிகள்

பல்வேறுபட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் தொழில்நுட்ப உதவியும் வல்லுனர் அறிவினையும் வழங்குவது இந்நிலையத்தின் பிரதான நடவடிக்கைகள் ஒன்றாகும். 2013ம் ஆண்டில் பின்வரும் தொழிநுட்ப உதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

- மூன்று பல்கலைகழக மாணவர்களுக்கு ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன.
- கொரன விவசாய ஆராய்ச்சிப் பண்ணையின் பயிர்ப் பொருத்தப்பாட்டு வரைபடம் தயாரித்தல்
- தியகமை, மகிந்த ராஜபக்ச சர்வதேச விளையாட்டுக் கட்டடத் தொகுதியில் மண் பாதுகாப்பு மற்றும் மழை நீர் முகாமைத்துவ திட்டம் தயாரிப்பு
- மகா இலுப்பள்ளம, வயற் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் அடிப்படை வரைபடம், சமவுயரக் கோட்டு வரைபடம், மண் பாதுகாப்பு மற்றும் மழை நீர் முகாமைத்துவ திட்டம் தயாரிப்பு.
- அம்பேபுஸ்ஸ பண்ணையின் (தலகொல்ல பிரிவு) 10 ஹெக்ரயர் விஸ்தீரணத்துக்கு வடிகாலமைப்பு தளவரைபடத் திட்டம் தயாரிப்பு.
- அம்பேபுஸ்ஸ பண்ணையில் சிறிய குளம் ஒன்றைத் தாபிப்பதற்கான அடிப்படை வரைபட தயாரிப்பும், நிர்மாண வேலைகளுக்கான தொழிநுட்ப வழிகாட்டல்களும்
- கீழ்வரும் மாகாண இடைப் பிரதேசங்களுக்கான மாகாண இடைப் பரப்பு வரைபடம் தயாரித்தல்
  - அனுராதபுரம்,
  - மொனராகலை
  - கண்டி
  - பொலநறுவை
- பல்லேகலை, பலகொல்ல திறந்த வெளி சிறைச்சாலை முகாமினுடைய சமவுயரக் கோட்டு வரைபட தயாரிப்பு

- மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு மண் முகாமைத்துவம் மற்றும் மழை நீர் முகாமைத்துவ திட்டம் தயாரித்தல்

- தலிஜ்ஜவில ஆராய்ச்சி நிலையத்தில் விதையுற்பத்திக்கென முன்மொழியப்பட்ட பரப்பினுடைய சமவுயரக்கோட்டு, வடிகாலமைப்பு மற்றும் மண் பாதுகாப்பு திட்டம் தயாரித்தல்

- விலங்கியல் திணைக்களத்தின் கோணபொல பண்ணையின் நிலப் பொருத்தப்பாட்டு அளவையியல் நிறைவு செய்யப்பட்டதுடன் அதற்கான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது

- விவசாயத் திணைக்களத்தின் பிரதான விவசாய நிறுவனங்களையும் நிலையங்களையும் சுட்டிக் காட்டும் இலங்கை வரைபடம் தயாரிப்பு

- மண் பாதுகாப்புக்குரிய பகுதிகளில் 100 பிரயோகச் செய்து காட்டல் துண்டங்களை தாபித்தல் (கண்டி, நுவரெலியா, மாத்தளை, இரத்தினபுரி மற்றும் பதுளை மாவட்டங்கள்)

- பட்டஅத்த விவசாய தொழிநுட்ப பூங்காவின் மண்ணரிமானத்திற்குட்படக் கூடிய பகுதிகளின் நீர் மற்றும் மண் பாதுகாப்புத் திட்டம் தயாரிப்பு

- நுகவெல மத்திய கல்லூரியில் மண் மற்றும் நீர்ப்பாதுகாப்புக்குரிய பிரயோகச் செய்து காட்டல் துண்டம் தயாரிப்பு.

- கேன்கல்ல மகா வித்தியாலத்தில் மண் மற்றும் நீர்ப்பாதுகாப்புக்குரிய துண்டம் தாபிப்பு

- மாவனல்ல ரிவிசத வித்தியாலத்தில் மண் மற்றும் நீர்ப்பாதுகாப்புக்குரிய பிரயோகச் செய்து காட்டல் துண்டம் தாபிப்பு

- ஹம்பாந்தோட்டை மாவட்டம், லுணுகம் வெகரவில் மண் மற்றும் நீர் பாதுகாப்பு முறைமைகளின் அளவெடுத்தல்களும் தாபிப்பும்.

- தலிஜ்ஜவெல விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சிக்குரிய களமொன்றில் நில விருத்திச் செயற்பாடுகள்

- ரகன்கல, விதையுற்பத்திப் பண்ணையில் நீர்ப்பாசனத்துக்கென நிலக் கீழ் நீரினை மேலுயர்த்துவதற்கான சாத்திய வளச் சோதனை நடாத்தப்பட்டு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது

## தொழிநுட்பக் குழுக்களை பிரதிநிதித்துவப் படுத்தல்

- பல்வேறுபட்ட தேசிய மற்றும் பிராந்திய ரீதியான அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கான சுற்றாடல் தடை நீக்கம் - அதாவது நிலம் துண்டுபோடுதல் மற்றும் சுற்றுலா விடுதி செயற்றிட்டங்கள் (40), கருங்கல் உடைக்கும் ஆலைகள் (40), சிறிய நீர் மின் வலுச் செயற்றிட்டங்கள் (42), மற்றும் மரங்கள் தறித்து வீழ்த்துதல் செயற்றிட்டங்கள் (100)

- முன்மொழியப்பட்ட “உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி” செயற்றிட்டத்திற்கான மதிப்பீட்டுக் குழு.

- பதுளை மாவட்டத்தில் முன் மொழியப்பட்ட “மொரன நீர் நிலை செயற்றிட்டத்தின்” தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு

- முன்மொழியப்பட்டுள்ள யான் ஓய நீர் நிலை செயற்றிட்டத்தின் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு

- முன்மொழியப்பட்டுள்ள மொறககந்தை செயற்றிட்டத்தின் தொழிநுட்ப மதிப்பீடு

- முன்மொழியப்பட்டுள்ள கெட்டம்பே சிறிய நீர்வலுச் செயற்றிட்டத்தினுடைய தொழிநுட்ப மதிப்பீடு

- முன்மொழியப்பட்டுள்ள பிபிலை கரும்புச் செய்கை செயற்றிட்டத்தினுடைய தொழிநுட்ப மதிப்பீடு

- முன்மொழியப்பட்டுள்ள LUPPD க்கான நிலப்பாவனைத் திட்டமடலுக்குரிய தொழிநுட்ப மதிப்பீடு

### மண் பாதுகாப்புச் சட்டம்

- கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் இவ்வாண்டு மண் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான நடவடிக்கைகள் முக்கியத்துவப்படுத்தப்பட்டு இவ்வாண்டுக்கென வேண்டுகோள் விடுக்கப் பட்டிருந்த நிதி ஒதுக்கீட்டுக்கு கிடைத்த வெளிப்பாடுகளுக்கு இணங்கவே மேற்கொள் ளப்பட்டது. நடவடிக்கைகள் யாவும் இரு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப் பட்டன. அவை முறையே சட்ட ஏற்பாடுகளும் அவற்றின் மேம்பாடுகளும் மற்றும் தொழிநுட்பப் பரம்பலும் விழிப்புணர்ச்சி ஏற்படுதலும் என்பனவாகும்.

### சட்ட ஏற்பாடுகளும் அவற்றின் மேம்பாடுகளும்

- நாட்டில் தற்போதுள்ள மண்ணரிமான மற்றும் நிலச் சீர்குலைவுப் பிரச்சினைகளை வெளிப்படுத்த மண் பாதுகாப்புச் சட்டம் (1951) மற்றும் திருத்தச் சட்டமூலம் (1996 ம் ஆண்டு 24 ம் இலக்கம்) என்பன போதுமானதாக இல்லை. எனவே நிலச் சீர்குலைவினை தடுகின்ற செயன்முறைகளை மிகப் பரந்தளவில் உள்ளடக்கிய சட்ட ஏற்பாடானது காலத்தின் தேவையாகும். இதனால் இந் நிலையமானது “மண் பாதுகாப்பு மற்றும் நிலச் சீர்குலைவை தடுத்தல் சட்டம்” எனும் புதிய சட்டத்தினை ஏற்கனவே அமைச்சரவைக்குச் சமர்பித்திருந்தது. அமைச்சரவை அதற்கான அனுமதியை வழங்கியதோடு முன்மொழியப்பட்ட புதிய சட்டத்தினை முன்னெடுக்கவும் அதிகாரமளித்துள்ளது.

### தொழில்நுட்பப் பரம்பலும் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தலும்

- மண் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் தொழிநுட்பப் பரப்பலும் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தலும் அடிப்படையாக மாகாண விவசாயத் திணைக்களத்தினால் மேற்கொள் ளப்படுகிறது. தற்போதுள்ள சூழ்நிலையில் இது மிகவும் இழிவளவில் காணப்படுகிறது. இதனால் இந்நிலையமானது மாகாண விவசாயத் திணைக்களத்தின் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் கட்டமைப்பினை விருத்தி செய்வதில் / இற்றைப்படுத்துவதில் உயர் கவனம் செலுத்துகின்றது. இதனால், மத்திய, ஊவா, சப்ரகமுவ மாகாண விவசாயத் திணைக்களங்களுக்கு கணினிகள். GPS உபகரணங்கள், வீதி தேடியறியும் உபகரணங்கள், டம்பி மட்ட உபகரணங்கள் என்பவற்றை வழங்கி வலுவளிக்கப்பட்டுள்ளன. அவசியமான உபகரணங்களை வழங்கி வேலையாற்றல் கொள்திறனை மேம்பாடு செய்யும் அதேவேளை இந்நிலையமானது செயற்பாடுகளின் வினைத்திறனை ஊக்குவிக் கவென செறிவான மனிதவள அபிவிருத்தி நடவடிக்கைகளையும் ஒழுங்கமைத்துள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மண் மற்றும் நீர் முகாமைத்துவ விடயதான அலுவலர் (SMO) கள் இருவர் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு மண் பாதுகாப்பினுடைய சட்ட மற்றும் தொழிநுட்ப விடயங்களில் பிரயோக வகுப்புக்களையும் உள்ளடக்கியதான செறிவான பயிற்சியும் வழங்கப்பட்டது. இதற்கமைவான 25 (SMO)கள் பயிற்றுவிக்க ப்பட்டனர். இதற்கு மேலதிகமாக மேற்குறித்த மாகாணங்களில் மண் பாதுகாப்புச் செயற்படுத்தப்படும் பகுதிகளில் சேவையாற்றும் விவசாயப் போதனாசிரியர்கள் (300பேர்) அனைவருக்கும் மண் மற்றும் நீர்ப்பாதுகாப்பு, சட்டத்தின் சட்ட ரீதியான ஏற்பாடு என்பவற்றில் பயிற்சியளிக்கப்பட்டது.

- மண் பாதுகாப்புச் சட்டத்தினுடைய சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த முன்னர் ஒவ்வொரு விவசாயப் போதனாசிரியர் பிரிவிலும் விவசாயிகளின் களங்களில் பொருத்தமான மண் பாதுகாப்பு நுட்பங்களின் பிரயோக ரீதியான முன்மாதிரிச் செய்துகாட்டல் துண்டங்களை தாபிக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. இந்நடவடிக்கைகள் மத்திய, ஊவா, சப்ரகமுவ மாகாண விவசாயத் திணைக்களங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. இதனடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளின் களங்களில் 100 பிரயோகச் செய்துகாட்டல் துண்டங்கள் மத்திய உயர்நிலப் பகுதிகளில் மேற்சொன்ன மாகாண விவசாயத் திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் தாபிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக சகல பங்குதாரர்கள், விவசாயிகள் என்போருக்கு உரிய சூழலில் 25 களத்தினங்களும் நடாத்தப்பட்டன.

- உலப்பனை, ரொசெல்ல, துன்கிந்த மற்றும் உனுவின்ன ஆகிய பகுதிகளில் பொதுமக்களிடம் மண் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த நான்கு விளம்பரப் பலகைகள் நடப்பட்டன.

- ஏற்கனவே தாபிக்கப்பட்டிருந்த மண் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு விளம்பர பலகைகள் பேணப்பட்டன. (ஆறு)

- புகையிரத நிலையங்கள் மற்றும் பிரதேச செயலாளர் காரியாலய வளாகங்களினுள் காட்சிப் படுத்தப்படவென தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் அமைந்த மண் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு விளம்பர பலகைகள் (6 அடி x 3அடி) விநியோகிக்கப் பட்டன.

### விவசாய - வானிலையியல் அவதானிப்பு வலையமைப்பு

- விவசாய – வானிலையியல் அவதானிப்பு நிலையங்கள் அவற்றுடன் இணைந்த 70 மழைமானி நிலையங்கள் என்பவற்றை உள்ளடக்கிய விவசாய – வானிலையியல் அவதானிப்பு வலையமைப்பு WMO தர நிர்ணயங்களுக்கு அமைவாக பேணப்பட்டன.

### தரவுத்தளத்தின் பேணுகை

பல்வேறுபட்ட வாடிக்கையாளர்களுக்கும் வழங்கவென விவசாய காலநிலை மண் மற்றும் நீர் வளங்கள் தொடர்பான தரவுத் தளம் சேகரிக்கப்பட்டு கணணி மயப்படுத்தப்பட்டு பேணப்படுகின்றது.

## 2014 இற்கான திட்டங்கள்

### ஆராய்ச்சி

- விவசாய உற்பத்தித்திறனை அதிகரிக்கவென விவசாய சூழலியல் பல்வகைமையினது சாத்தியவளத்தினை உபயோகத்திற்கு கொண்டு வரல்

- தாழ் நாட்டு ஈரவலய நெற் செய்கைக்கான தரைக்கு பிரத்தியேகமான உரப் பாவனைச் சிபாரிசுகளின் விருத்தி

- இலங்கையின் மத்திய உயர் நிலப் பகுதிகளிலுள்ள பிரதான நீர் நிலைகளின் நீர்த்தரம் தொடர்பில் கண்காணித்தல்

- சுற்றாடல் நியுக்கிலயிட்ஸ் இனைப் பயன்படுத்தி மத்திய உயர் நிலப்பகுதிகளின் மண்ணரிமானம் மண் அடையல் தரவுத் தளம் மற்றும் எண்மான வரைபடங்கள் என்பவற்றினது தயாரிப்பு

- விவசாயக் கிணறுகளின் அடிப்படையிலமைந்த பண்ணைகளுக்கான நில முகாமைத்துவத்துக்கான வழிகாட்டல்களினது விருத்தி

- செய்மதி விம்பங்களினைப் பயன்படுத்தி நெற் செய்கைப் பரப்பு மற்றும் விளைச்சலினை அம்பாறை, பொலநறுவை, அம்பாந்தோட்டை மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களுக்கு எதிர்வு கூறல்

- பொருத்தமான நில முகாமைத்துவத்திற்குரிய நிலச் சீரழிவு மதிப்பீடு (LADA)
- பிராந்திய பயிர் விளைச்சல் எதிர்வு கூறல் மற்றும் காலநிலை மாற்றப் பாதிப்புக்களின் மதிப்பீடு என்பவற்றுக்குரிய ஒரு கருவித் தொகுதியினுடைய விருத்தி, பிரயோகம் மற்றும் கணிப்பீடு
- இலங்கையில் கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் பயிர்ச் சிபாரிசுகளுக்கான எண்மான ஒன்று திரட்டல் தயாரிப்பு
- உலர் வலயத்தில் மழை நிர் போசிப்புடைய உயர் நிலங்களுக்கு பல் தொழிற்பாடுடைய மண் பாதுகாப்பு அணைக்கட்டுத் தொகுதியின் விருத்தி
- காலநிலை மாற்றத்திற்கு இசைவாக்கமடைய வென விவசாய வானிலையியல் தகவல்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி
- வவுனியா மாவட்டத்தில் ஆழமற்ற நிலக்கீழ் நீரின் தரம் தொடர்பான கற்கை
- மண் ஈரப்பதன் சேகரிப்பு மற்றும் நிலக்கீழ் நீரின் மீள் நிரம்பல் என்பவற்றில் மழை நீர்க் சேகரிப்பு முறைமைகளின் பாதிப்பு தொடர்பான கற்கை

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பணிப்பாளர் | 01 |
| மேலதிகப் பணிப்பாளர் (CUD) | 01 |
| பிரதிப் பணிப்பாளர் | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 08 |
| விவசாய உத்தியோகத்தர் | 03 |
| பாடவிதான அலுவலர் | 01 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 03 |
| விவசாயப் போதனாசிரியர் | 10 |
| நில அளவையாளர் | 04 |
| நிகழ்ச்சி திட்ட உதவியாளர் | 02 |
| அபிவிருத்தி அலுவலர் | 03 |
| ஆராய்ச்சி உப உதவியாளர் | 02 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 |
| முகாமைத்துவ உதவி சேவை | 05 |
| அலுவலக சிற்றூழிய உதவியாளர் | 01 |
| சாரதி | 07 |
| காவலாளி | 02 |
| தொழிலாளி | 02 |
| தொழிலாளிகள் (ஒப்பந்தம்) | 02 |
| **மொத்தம்** | **59** |

## 2.1 விதை அத்தாட்சிப்படுத்தல் மற்றும் தாவரப் பாதுகாப்பு நிலையம் (SCPPC), கன்னொறுவை

விதை அத்தாட்சிப்படுத்தல், தாவரப் பாதுகாப்பு நிலையத்தின் அடிப்படை நோக்கமாக தரமான விதை நடுகைப் பொருட்களிற்கு உத்தரவாதமளித்தல், சூழலில் முனைப்பான பொருளாதார ரீதியில் உயிர்ப்பான நடைமுறையில் சாத்தியமான பீடைக் கட்டுப்பாட்டு முறைகளை விவசாயிகளின் மட்டத்தில் ஊக்குவித்தல், தரமான பீடை நாசினிகள் மட்டும் பயன்படுத்தப்படுவதை கட்டுப்படுத்தல், உணவுப் பயிர்களிற்கான நாட்டின் பிறப்புரிமை மூல வளங்களை பாதுகாத்தலும் அவற்றின் பயன்பாட்டை ஊக்குவித்தலும் என்பவற்றின் ஊடாக விவசாயிகளுக்கு அத்தியவசிய சேவைகளை வழங்கல் அமைகின்றது.

விதை அத்தாட்சிப்படுத்தல் மற்றும் தாவர பாதுகாப்பு நிலையமானது (வி.அ.தா.பா.தி) விதை அத்தாட்சிப்படுத்தல் சேவைகள் (வி.அ.சே) தாவர பாதுகாப்புச் சேவைகள் (தா.பா.சே) பீடை நாசினிகளின் பதிவாளர் (பீ.ப) தாவர பிறப்புரமை மூல வள நிலையம் (தா.பி.மூ.நி) ஆகியவற்றின் மூலாதார முகாமைத்துவ நிலையமாக விளங்குகின்றது.

இது விவசாயத் திணைக்களத்தின் கீழுள்ள பின்வரும் சட்டங்கள் சம்பந்தமான ஒழுங்காக்கல் தொழிற்பாடுகளைக் கொண்டுள்ளது.

- உள்ளூர் விவசாயத்தை பாதுகாத்தலிற்கும், சூழலிற்கு மிகக் குறைந்த பாதிப்புடன் வினைத்திறனான பீடை முகாமைத்துவ வழிமுறைகளை மேம்படுத்தலிற்குமான 1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டம்.
- மனித ஆரோக்கியத்திற்கும், சூழலிற்கும் மிகக் குறைந்த சேதத்தைக் கொண்ட உயர்தரமான பீடைநாசினிகளை உறுதிப் படுத்துவதற்கான 1980 இன் இல 3 பீடை நாசினிகளின் கட்டுபாட்டுச் சட்டம்
- விதைக் கைத்தொழிலை பாதிக்ககக்கூடிய முறையற்ற நடவடிக்கைகளிலிருந்து விவசாயிகள் மற்றும் விதை கையாள்பவர் களை பாதுகாப்பதற்கான 2003 இன் இல 22 விதைச் சட்டம்

### ஒழுக்காக்கல் நடவடிக்கைகள்

- தென்னையில் வெலிகம (Weligama) வாடல் மேலும் பரவுவதை கட்டுப்படுத்தி, தடுப்பதற்கான 1999 இன் இல 35 தாவர பாதுகாப்புச் சட்டத்தை அமுல்ப்படுத்துவதற் கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.
- 1999 இன் இல 35 தாவரப் பாதுகாப்புச் சட்டத்திற்கான புதிய ஒழுங்குவிதிகளின் நகலானது கடந்த வருடத்தில் சட்ட வடிவமைப்புத் திணைக்களத்திடம் ஒப்படைக்கபப்ட்டு இவ்வொழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள சில சட்ட மற்றும் தொழில்நுட்ப விடயங்கள் பற்றி சட்ட வடிவமைப்பாளருடன் பல சுற்றுக்களில் கலந்தரையாடல்கள் நடாத்தப்பட்டன.
- விதைப் பிரிவுடன் சம்பந்தமான எல்லோருடனும் (Stakeholders) பல பயிற்சிப் பட்டறைகள், கூட்டங்கள், கலந்துரையாடல் களை நடாத்திய பின்னர் 2003 இன் இல 22 விதைச் சட்டத்தினை ரத்துச் செய்வதற்கான ஓர் இறுதியான பிரேரணை தயாரிக்கப் பட்டது. இத்திருத்தங்களாவன சிக்கலான சட்ட விடயங்களுடன் ஏதாவது முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காகவும், விவசாயிகள், விதை கையாளர்பவர்கள் போன்றவர்களின் இன்றைய நடைமுறைப் பிரச்சினைகளிற்கு முகம் கொடுப்பதற்

காகவும் தயாரிக்கப்பட்டன. இதன் தேவையானது நாட்டின் இன்றைய விவசாய அபிவிருத்தித் திட்டங்களிற்கு உதவுமுகமாக ஓர் புதிய சட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக எழுந்தது. பிரேரணையில் இறுதி நகலானது சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் தயாரிக்கப்பட்டு 2013 செப்டம்பர் இவ் விவசாய அமைச்சினூடாக அமைச்சர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## பாதீடு

**அட்டவணை 2.1.1 வருடாந்தப் பாதீடு 2013 (ரூ)**

| செலவுத் தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு% |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 4,582,000 | 3,620,024 | 79 |
| மீண்டுவரும் செலவு | 3,709,472 | 2,957,320 | 80 |
| **மொத்தம்** | **8,291,472** | **6,577,344** | **79** |

## முன்னேற்றம்

- கடந்த பல வருடங்களாக இறக்குமதி செய்யப்பட்ட எல்லா மரக்கறி விதைகள் மற்றும் பழ விதைகளை கண்டறிவதற்குப் பயன்படுத்தக்கூடிய ஒரு தகவல் மையம் விருத்தி செய்யப்பட்டது.

- தேசத்திற்கு மகுடம் விதைகளிற்கான நெல், மறுவயற்பயிர்கள், மற்றும் மரக்கறி விதைகளின் விதைப் பரிசோதனை தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

  இத்தகவல்கள் கொள்கை அமைப்பாளர்கள், விரிவாக்க உத்தியோகத்தர்கள் அதேபோல் ஆராய்ச்சியாளர்களிற்கு எதிர்காலத் திட்டமிடலிற்கு மிகவம் பெறுமதி வாய்ந்ததாக இருக்கும்.

### மரக்கறி மற்றும் பழ விதைகளின் இறக்குமதிக்கான தகவல் தளம்

மரக்கறி விதை இற்குமதிகளின் முக்கிய தகவல்களை இலகுவாக மீளப் பெற்றுக் கொள்வதங்கான ஓர் தேசிய தகவல் மையம் விருத்தி செய்யப்பட்ட வருகின்றது. கடந்த ஐந்து வருடங்களாக விநியோகிக்கப்பட்ட அனுமதிகள் மற்றும் துறைமுக, விமான நிலைய தாவர தடுப்புக் காப்பு பிரிவினூடாக விதை இறக்குமதிகளுக்கான உண்மையான விபரங்கள் தொடர்பான முழுத் தகவல்களையும் வழங்குவதற்கு இது வசதியளிக்கும். தேசிய தாவர தடுப்புக் காப்பு சேவையினால் 2013இல் எண்ணூற்றிருபது மரக்கறி விதை இறக்குமதிக்கான அனுமதிகள் விநியோகிக்கப் பட்டன. பின்வரும் அட்டவணையானது 2013இல் இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறி மற்றும் பழ விதைகளின் அளவுகளைக் குறிக்கின்றது.

**அட்டவணை 2.1.2 கடல் மற்றும் ஆகாய மார்க்கம் ஊடாக இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறி விதைகளின் மொத்த அளவு (2013)**

| பயிர் | அளவு kg | | |
|---|---|---|---|
| | துறைமுகம் | விமான நிலையம் | மொத்தம் |
| போஞ்சி | 130,690.00 | 4.50 | 130,994.50 |
| பீற்றூட் | 26,693.20 | 2,905.80 | 29,599.00 |
| பாகல் | 2,267.60 | 215.03 | 2,482.63 |
| பச்சை கோவா | 10.00 | 0.02 | 10.02 |
| கோவா | 1,060.24 | 724.93 | 1,785.17 |
| கரட் | 37,617.40 | 103.00 | 37,720.40 |
| பூக்கோவா | 148,98 | 76.07 | 225.05 |
| சீனக் கோவா | 20.00 | 15.00 | 35.00 |
| சீன பரட்டை கீரை | 172.00 | - | 172.00 |
| வெள்ளரி | 1,812.09 | 435.25 | 2,247.34 |
| கத்தரி | 385.32 | 76.95 | 462.27 |
| மிளகு / இனிப்பு மிளகு / குட மிளகாய் | 6,016.80 | 3.12 | 6,019.92 |
| மிளகாய் | 1,637.46 | 1,216.86 | 2,854.32 |
| நோக்கோல் | 5,938.50 | 1,185.00 | 7,123.50 |
| லீக்ஸ் | 7,290.90 | 699.75 | 7,990.65 |
| சலாது | 135.00 | - | 135.00 |
| பீர்க்கு | 4,689.19 | 452.20 | 4,141.39 |
| முருங்கை | - | 305.00 | 305.00 |
| வெண்டி | 27.00 | 6,471.06 | 6,468.06 |
| வெங்காயம் | 7,500 | 500.00 | 8,000.00 |
| சின்ன வெங்காயம் | 600 | - | 600 |
| பாக்சோய் | 25.00 | - | 25.00 |
| பூசணி | 10,666.11 | 1,110.44 | 11,776.55 |
| முள்ளங்கி | 21,238.94 | 515.02 | 21.753.96 |
| புடோல் | - | 100.00 | 100.000 |
| சீமைப் பூசணி | 10,323.72 | 350.00 | 11,673.72 |
| தக்காளி | 1,108.94 | 191.89 | 1,300.82 |
| கங்குன் | 905.59 | - | 905.59 |
| பயிற்றை | 5,310.00 | 250.30 | 5,360.30 |
| சுக்கினி | - | 0.50 | 0.50 |
| நீற்றுப் பூசணி | 0.12 | - | 0.12 |
| **மொத்தம்** | **285,352.10** | **17,961.69** | **303,313.77** |

**அட்டவணை 2.1.3 கடல் மற்றும் ஆகாய மார்க்கம் ஊடாக இறக்குமதி செய்யப்பட்ட பழ மற்றும் ஏனைய விதைகளின் மொத்த அளவு (2013)**

| பயிர் | அளவு kg | | |
|---|---|---|---|
| | துறைமுகம் | விமான நிலையம் | மொத்தம் |
| பப்பாசி | - | 12.98 | 12.98 |
| வத்தகை | 9,470.03 | 245.21 | 9,715.24 |
| விதை உருளைக் கிழங்கு | 1,450,421.00 | - | 1,450,421.00 |
| சோளம் | 1,654,155.85 | 6.03 | 1,654,161.88 |
| இனிப்புச் சோளம் | 62.00 | 54.00 | 116.00 |
| வெங்காயக் குமிழ் | 25,926.00 | - | 25,926.00 |
| புல்விதை | 8,475.00 | - | 8,475.00 |
| பூ விதைகள் | - | 87.90 | 87.90 |
| **மொத்தம்** | **3,148,509.88** | **406.12** | **3,148,916.00** |

## விதைக்கான ஓர் புதிய நேரடி இணையத்தள தகவல்மையம்

விவசாயத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலிற்கமைவாக விவசாயத் திணைக்கள விதை உற்பத்தி நிகழ்ச்சி மற்றும் இறக்குமதிகள் பற்றிய சகல முக்கிய விடயங்களையும் உள்ளடக்குமாறு ஓர் புதிய தகவல்மையம் விருத்தி செய்யப்பட்டு வருகின்றது. இதற்கான நிதியுதவியானது JICA மரக்கறி விதை நிகழ்ச்சித் திட்டத்தினால் வழங்கப்படும். பல பயிற்சிப் பட்டறைகள் இது தொடர்பானவர்களின் பங்கபற்றலுடன் நடாத்தப்பட்டன. இத்தகவல் மையத்தை விருத்தி செய்வதற்கான பிரதான பொறுப்பானது தகவல் மற்றும் தொடர்பாடல் மையத்தின் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## தாவர பாதுகாப்பிற்கான புதிய ஒழுங்கு விதிகள் 1999 இன் இல 35 ம் சட்டம்

1999 இன் இல 35 தாவர பாதுகாப்புச் சட்டத்திற்கான புதிய ஒழுங்கு விதிகள் சட்ட வடிவமைப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டு தற்போது இதன் இறுதிப் படியிலுள்ளது.

## ஏனைய தொழிற்பாடுகள்

### விதை சட்டம்

விதைகள் இறக்குமதிக்கான வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு பிரேரிக்கப்பட்ட விதை ஆய்வு கூடங்களிற்கான வடிவமைப்பு நியமங்களைக் கொண்ட தயாரிப்புகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இரண்டு குழுக்களாக கலந்துரையாடல்கள் அதனுடன் தொடர்புடைய விதை அத்தாட்சிப்படுத்தல் சேவைகள் உத்தியோகத்தர்கள், தாவர பிறப்புரிமை மூலவள நிலைய உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் நடாத்தப்பட்டு, விதை நடுகைப் பொருட்கள் சட்டம் தொடர்பாக பிரேரிக்கப்பட்ட ஒழுங்கவிதிகளை ஒழுங்குபடுத்துவதற்காக அதனுடன் தொடர்புடைய பிரிவுகளைச் சார்ந்த வளவாளர்களின் உதவியுடன் இரண்டு நாள் பயிற்சி பட்டறை ஒழுங்கமைக்கப்பட்டது.

### உத்தியோகத்தர்கள் தகவல் மைய விருத்தி

விதை அத்தாட்சிப்படுத்தல் மற்றும் தாவர பாதுகாப்பு நிலைய உத்தியோகத்தர்களின் தகவல்களை சேமிப்பதற்காகவும் மற்றும் உத்தியோகத்தர்களின் ஏதாவது தகவல்களை

இலகுவாக மீளப் பெற்றுக் கொள்வதற்காகவும் தகவல் மையம் விருத்தி செய்யப்பட்டது.

### கருத்தரங்குகள் / விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் / பயிற்சிகள்

MS Excel தொடர்பான கணணிப் பயிற்சி நிகழ்ச்சியானது, விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை, தாவர பாதுகாப்புச் சேவை, தாவர பிறப்புரிமை மூலவள நிலையம், பீடை நாசினி பதிவாளர் அலுவலகம், விதை அத்தாட்சிப்படுத்தல் மற்றும் தாவர பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றைச் சேர்ந்த 18 உத்தியோகத்தர்களிற்கு 2013 ஏப்ரல் மாதம் 8ம் மற்றும் 9ம் திகதிகளில் கன்னொறுவை சேவைக் காலப் பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள், பீடை நாசினி விநியோகிப்பாளர்கள், விவசாயத் திணைக்கள மற்றும் அரச நிறுவன மற்றும் தனியார் பிரிவைச் சார்ந்த ஏனைய தொடர்பான உத்தியோகத்தர்கள், விதை கையாள்பவர்கள், பல்கலைக்கழ மாணர்கள் மற்றும் பாடசாலைப் பிள்ளைகள் ஆகியோரிற்கு வேறுபட்ட இடங்களில் பல பயிற்சிப் பட்டறைகள், பயிற்சிகள், குழுக் கலந்துரையாடல்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆகியவை ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பட்டன. விதைச் சட்டம் மற்றும் தற்போதைய பிரச்சினைகள், தாவரப் பாதுகாப்பு விதை அத்தாட்சிப்படுத்தல் சேவைகளின் பங்கு விதை தூய்மையாக்கல் மற்றும் சேமிப்பு தொடர்பாக 16 இடங்களில் ஏறக்குறைய 1000 பேர் பயிற்றுவிக்கப்பட்டனர்.

“கந்துரறற சேவை” மற்றும் “வயம்ப சேவை” ஆகியவற்றில் விதைச் சட்டநடைமுறைப்படுத்தல், தாவரப் பாதுகாப்புச் சட்டத்தில் நடைமுறையிலுள்ள ஒழுங்கு விதிகள் மற்றும் விவசாயிகள் முகங்கொடுக்கும் நிகழ்காலப் பிரச்சினைகள் தொடர்பாக மூன்று நேரடி வானொலி நிகழ்ச்சிகள் (ஒவ்வொன்றும் ஒரு மணித்தியாலம்) நடாத்தப்பட்டன.

### நிரந்தர பயிர் சிகிச்சை நிகழ்ச்சி

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு தாவர பாதுகாப்புச் சேவைகளினால் ஒருங்கிணைக்கப்பட்ட உயிர்ப்பான பங்களிப்புகள் ஏற்படுத்தப்பட்டன. நாட்டின் பல பிரதேசங்களில் நடாத்தப்பட்ட பல தாவர சிகிச்சைகளில் வி.அ.தா.பா சேவையை சேர்ந்த ஓர் முக்கிய பயிற்றுவிப்பாளர் பங்குபற்றினார்.

### வெகுமதிகள்

விவசாய அபிவிருத்திக்கு மிகச் சிறந்த பங்களிப்பு வழங்கியமைக்காக அஸ்டா ASDA 2013 இன் சிறந்த பயிராக்கவியலாளராக டாக்டர் ஸி.எம்.டப்ளியூ சித்திரல் தீர்மானிக்கப்பட்டார்.

## 2014 இற்கான திட்டம்

- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) விவசாயத்தின் பங்கினை ஊக்குவிக்கும், விதைகள், தாவரங்கள், நடுகைப் பொருட்கள் மற்றும் வினைத்திறனான கையாளுகைக்கு வசதியளிப்பதற்கு, தொடர்பான ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்தல்
- பிரேரிக்கப்பட்ட விதை சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் நகலை தயாரித்தல்
- உயர்த் தரமான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களின் உற்பத்தியுடன் தொடர்புடைய பொருத்தமான திட்டங்கள் மற்றும் கொள்கை தீர்மானங்களை உருவாக்கல்
- நாட்டில் விதை வியாபாரத்தை விருத்தி செய்தல்
- நாட்டில் சிறந்த தரமான நடுகைப் பொருள் உற்பத்தியை விருத்தி செய்தல்
- தேசிய தாவர ஆரோக்கிய தொகுதியை பலப்படுத்தல்
- ஒழுங்காகல்லல் நடவடிக்கைகளை ஒன்றிணைத்தல்

- விவசாயத்தில் மிகவும் வினைத்திறனான மற்றும் பாதுகாப்பான பீடைக் கட்டுபாட்டு வழிமுறைகளை உருவாக்கல்

## அலுவலர் பட்டியல்

| **பதவி** | **எண்ணிக்கை** |
|---|---|
| பணிப்பாளர் | 01 |
| மேலதிக பணிப்பாளர் | 01 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 01 |
| விவசாய உத்தியோகத்தர் | 01 |
| நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் விவசாயம் | 01 |
| விவசாயப் போதனாசிரியர் | 01 |
| நிருவாக உத்தியோகத்தர் | 01 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| களஞ்சிய வேலையாளர் | 01 |
| காரியால சிற்றூழிய உதவியாளர் (KKS) | 02 |
| சாரதி | 04 |
| சுற்றுலா விடுதிக் காப்பாளர் | 01 |
| தொழிலாளி | 02 |
| தொழிலாளி (ஒப்பந்தம்) | 06 |
| **மொத்தம்** | **33** |

## 2.1.1 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை (ஞஊஞ)இ கன்னொறுவை

விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை (விஅசே), விவசாயிகளிற்கு கிடைக்கக்கூடிய விதைகள், நடுகைப்பொருட்களின் தரத்திற்கு உத்தரவார மளித்தல் சம்பந்தமான ஒழுங்காக்கல் தொழிற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

### பொறுப்புக்கள்:

- விதைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்
- அடிப்படை விதை மற்றும் நடுகைப் பொருட்களைப் பெருக்குவதற்கு முன்னர் அத்தாட்சிப்படுத்தல்
- நெல், மரக்கறிகள், மறுவயற்பயிர்கள் (பவப) மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவற்றின் வர்த்தக ரீதியான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களின் தரத்தை அத்தாட்சிப்படுத்தல்
- பழ மரங்களின் அத்தாட்சிப்படுத்தலும், பழ மர நாற்றுக்களின் பதிவும்
- நாடளாவிய ரீதியில் பொருத்தமான தாய்த் தாவரங்களைத் தெரிவு செய்தலும், பதிவு செய்தலும்
- உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட வித்துக்களின் முளைதிறன், வாழ்தகவு, தூய்மைத்தன்மை, ஈரப்பதன் ஆகியவற்றை ஆய்வு கூடத்தில் பரிசோதித்தல்
- இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட விதைகளின் தரத்தைப் பரிசோதிப்பதற்காக பின்னான கட்டுப்பாட்டு வளர்ப்புப் பரிசோதனை மேற்கொள்ளல்
- புதிய தாவர வர்க்கங்களை வெளியிடு வதற்கு முன்னர் தனித்துவத்தன்மை, சீரானதன்மை, நிலையான தன்மை (DUS) என்பவற்றிற்கான பரிசோதனைகளை மேற்கொள்ளல்
- விதைச் சுகாதாரப் பரிசோதனையை மேற்கொள்ளல்
- விதைச் சட்டத்திற்கமைவாக தரமான விதைகள், நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தல் பற்றி விதை உற்பத்தியாளர்கள், நாற்றுமேடை பராமரிப்பாளர், விதை பராமரிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர் களிற்கு பயிற்சியையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தல்
- பிரயோக விதை ஆராய்ச்சி நிகழ்வுகளை நடாத்துவதன் மூலம் தரமான விதை நடுகைப் பொருட்களின் உற்பத்தி சம்பந்தமான வயற் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தீர்வுகளை கண்டறிதல்
- இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறி விதைகளின் தர உத்தரவாதம்
- விதை அபிவிருத்தியும், தர மேம்பாட்டு தொழிற்பாடுகளும்
- தரவுத்தள முகாமைத்துவமும், கண்காணிப்பும்
- பழ நாற்றுமேடை பராமரிப்பாளர் விபரக்கொத்தினை வருடாந்தமும் விதை உற்பத்தியாளர் விபரக்கொத்தை பருவகாலங்களிலும் வெளியிடுதல்

## பாதீடு

வெவ்வேறு தலைப்புகளின் கீழும், நிகழ்ச்சித் திட்டங்களின் கீழும் பெறப்பட்ட ஒதுக்கீடுகளும், ஏற்பட்ட செலவுகளும் அட்டவணை 2.1.1.1 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1.1.1: வருடாந்தப் பாதீடு ~ 2013 (ரூ. மில்)**

| செலவுத்தலைப்பு | ஒதுக்கீடு | செலவினம் | செலவு% |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 10,23 | 7,93 | 78 |
| மீண்டுவரும் செலவு | 23.42 | 15.44* | 66 |
| **நிகழ்ச்சித் திட்டங்கள்** | | | |
| விதை வலிமைப்படுத்தல் மற்றும் விதைக் கைத்தொழில் அபிவிருத்தி | 100.00 | 91.00 | 91 |
| விதை சட்டம் | 2.000 | 19.20 | 96 |
| **மொத்தம்** | **153.65** | **133.57** | **87** |

- 0.76 ரூ மில் செலுத்தப்பட வேண்டும்.
- 7.2 ரூ. மில், சம்பளம் II/ நிதிப் பிரிவினால் செலவிடப்பட்டது.

## முன்னேற்றம்

### அடைவுகள்

- விதை உற்பத்திக்காக பயிரிடப்பட்ட 4907ha நெல், 1088ha மறுவயற்பயிர்கள், 315ha மரக்கறிகளும் பழங்களும் மற்றும் 88ha உருளைக்கிழங்கு ஆகியவற்றின் வயல் கண்காணிப்பு
- பன்னிரண்டாயிரத்து முந்நூற்று தொன்னூற்றொரு MT விதைநெல், 446 MT மறுவயற்பயிர் விதைகள், 69MT மரக்கறி விதைகள் மற்றும் 729MT விதை உருளைக் கிழங்கு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத் தும் 13003 விதை மாதிரிகளின் பரிசோதனை
- 2012 உடன் ஒப்பிடும்போது 2013இல் மறுவயற்பயிர்கள் மற்றும் மரக்கறிகளின் பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பளவு முறையே 30%, 35%, இனால் அதிகரிக்கப்பட்டது. நெல்லிற்கான பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பானது, ஒப்பந்த விதை நிகழ்ச்சி இடைநிறுத்தப்பட்டதால் குறைவடைந்தது சிறிய வெங்காய, பெரிய வெங்காய பயிர்ச் செய்கையாளர்கள் பிரதானமாக வடபகுதியிலுள்ளவர்கள் விதை உற்பத்தி நிகழ்ச்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். மரக்கறிகளிற்கான பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பளவு இவ்வாண்டு விரைவாக அதிகரித்தது.
- மறுவயற்ப்பயிர்கள், மரக்கறிகள் மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவற்றின் உற்பத்தியானது நிலப்பரப்பின் அதிகரிப்புடன் முறையே 35%, 50%, 14% இனால் அதிகரித்தபோதிலும் 2012 உடன் ஒப்பிடும் போது நெல்லின் பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பானது நன்கு குறைவடைந்தது ஆனால் விதைஉற்பத்தி 51% இனால் அதிகரித்துள்ளது. இது இலங்கையின்

தேசிய விதை நெல் தேவையின் 15.2%, ஐ பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

- அத்தாட்சிப்படுத்தப்பட்ட நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்யும் 335 பூங்கனியியல் நாற்றுமேடைகளின் பதிவு செய்தலும், கண்காணித்தலும் மற்றும் 8,72,472 ஒட்டப்பட்ட பழ மரங்களின் தரம் சுட்டியிடப்படப்படுவதன் மூலம் உறுதியாக்கப்பட்டது. 2012 உடன் ஒப்பிடும் போது பழ மரங்களின் அத்தாட்சிப்படுத்தல் 40% இனால் அதிகரிக்கப்பட்டது.

- இருபதொரு நெல், 40 மறுவயற்பயிர்கள், 12 மரக்கறி மற்றும் ஒரு வேர் மற்றும் கிழங்குப் பயிர் வர்க்கங்களின் மதிப்பீடு. தனித்துவத் தன்மை, சீரானதன்மை மற்றும் நிலையான தன்மை (DUS) பரிசோதனை நிகழ்ச்சியின் கீழ் உள்வாங்கப்பட்டது.

- கன்னொறுவை, சீதாஎலிய, மகாஇலுப்பள்ளம ஆகிய இடங்களில் அமைந்துள்ள பின்னான கட்டுப்பாட்டு வயல்களில் 1268 பின்னான கட்டுப்பாட்டு நெல், மறுவயற்ப்பயிர்கள், மரக்கறிகள் மற்றும் உருளைக்கிழங்கு மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன.

- விதை சட்டத்தின் கீழ் விதை கையாள்பவர்களின் 1141 மற்றும் 858 புதுப்பித்தல்களின் பதிவு.

- விதை சட்டத்தின் கீழ் வேறுபட்ட விதை மற்றும் நடுகைப் பொருட்கள் உற்பத்தியாளர்களினால் பயன்படுத்தப்பட்ட 572 சுட்டிகளிற்கு அங்கிகாரம் வழங்கல்

- விதை சட்ட நடவடிக்கைகள் பற்றி 2325 அரச, தனியார் பிரிவு உத்தியோகத்தர்கள், நாற்றுமேடை பராமரிப்பாளர்கள், விதையுற்பத்தி விவசாயிகள் மற்றும் விதை கையாள்பவர்களிற்கான பயிற்சி

- இரண்டாயிரத்து பன்னிரண்டு மேயிலிருந்து "அத்தாட்சிப்படுத்திய மரக்கறி விதைகளின் உற்பத்தி முறையின் ஊக்குவிப்பு" பற்றி ஐந்து வருட JICA நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. நான்கு விஅசே இன் பிராந்திய உத்தியோகத்தர்களும் மூன்று விதைப் பரிசோதனை ஆய்வு கூடங்களும் பிரதான அணியினராக பங்காற்றினர்

- புதிதாக நியமனம் வழங்கப்பட்ட இலங்கை விவாய சேவையை சேர்ந்த ஐந்து உத்தியோகத்தர்கள் விஅசே க்கு 2013 இல் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

- கரடியனாறு, லபுதுவ ஆகிய பிராந்திய அலுவலகங்கள், பத்தாத்த (Bataatha) விலுள்ள பின்னான கட்டுப்பாட்டு வயல், அலுத்தரம பரிசோதனை ஆய்வுக்கூடத்தி லுள்ள (STI) முளைக்க வைத்தல் அறை, கன்னொறுவை இலுள்ள இரட்டை விடுதி ஆகியவற்றின் நிர்மாண வேலைகள், விஅசே சேவைகளை வலிமைப்படுத்தல், விதை கைத்தொழில் அபிவிருத்தி ஆகிய நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 2013 இல் பூர்த்தியாக்கப் பட்டன.

- விஅசே இன் சகல பிரிவுகளிலுமுள்ள வாகனங்கள் மற்றும் கட்டடங்களிற்கான அத்தியாவசிய திருத்த வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டன.

- விதை பரிசோதனை ஆய்வுக் கூடங்களில் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளின் நிலையை விஅசே உத்தியோகத்தர்கள் இலகுவாக அறிந்து கொள்வதற்காக இணைய பிரயோகத்தை விருத்தி செய்தல்

## விதை நெல் அத்தாட்சிப்படுத்தல்

- இரண்டாயிரத்துபதின் மூன்றில் தனி விவசாயிகளும், விவசாயத் திணைக்கள பண்ணைகள், கூட்டுறவு சங்கங்கள், மாகாண சபைகள், கொவி ஜன கென்றா, மகாவலி அதிகாரசபை, நீர்ப்பாசனத் திணைக்களம், விவசாயிகள் அமைப்புக்கள், தனியார் கம்பனிகள், அரச சார்பற்ற அமைப்புகள் போன்ற பல அரச, தனியார் பிரிவு அமைப்புகள் அத்தாட்சிப்படுத்தப்பட்ட

விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சிகளிற்கு பதிவு செய்தன.

- விதை நெல் உற்பத்தி செய்வதற்கான பதிவு செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 4907ha ஆகவும் இதில் 76% பங்கானது தனியார் பிரிவிற்கானதாகவும் காணப்பட்டது. அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் உற்பத்தியின் வேறுபட்ட மூலங்கள் மற்றும் விதை வகுப்புகளிற்கான பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பு அட்டவணை 2.1.1.2 இல் தரப்பட்டுள்ளது. SPMDC (விதை நெல் சந்தைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி நிலையம்) இன் நெல்லிற்கான விதை நிகழ்ச்சி ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டதால் 2012 உடன் ஒப்பிடும் போது 2013 இல் நெல் விதை உற்பத்தியில் ஒரு பாரிய வீழ்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1.1.2: விதைநெல் உற்பத்தியின் கீழான நிலப்பரப்பளவு – (2012, மற்றும் 2013 இல்)**

| | | 2012 | | 2013 | | |
|---|---|---|---|---|---|---|
| **மூலம்** | **விதை வகுப்பு** | **பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பளவு (ha)** | **கண்காணிக்கப்பட்ட நிலப்பரப்பளவு (ha)** | **பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பளவு (ha)** | **கண்காணிக்கப்பட்ட நிலப்பரப்பளவு (ha)** | **ஏற்றுக் கொள்ள பட்ட வீதம்** |
| ஆராய்ச்சி நிலையங்கள் | இனவிருத்தி யாளருக்குரியது | 2.5 | 2.5 | 4.5 | 4.1 | 91 |
| அரச பண்ணைகள் | அடிப்படை I | 67 | 62 | 55.2 | 40.51 | 73 |
| | அடிப்படை II | | | 0.65 | 0.57 | 88 |
| | பதிவு செய்யப்பட்டது I | 770 | 653 | 697.47 | 609.41 | 87 |
| | பதிவு செய்யப்பட்டது II | | | 11.05 | 11.05 | 100 |
| | அத்தாட்சிப்படுத்தப்பட்டது I | 145 | 63 | 174.39 | 104.96 | 60 |
| | அத்தாட்சிப்படுத்தப்பட்டது II | 7 | 6 | 38.97 | 26.42 | 68 |
| ஒப்பந்த செய்கையாளர்கள் | அடிப்படை I | 4.6 | 3.5 | 9.11 | 9.11 | 100 |
| | பதிவு செய்யப்பட்டது I | 81 | 52 | 9.92 | 3.64 | 37 |
| | அத்தாட்சிப்படுத்தப்பட்டது I | 736.6 | 548 | 159.09 | 80.77 | 51 |
| | அத்தாட்சிப்படுத்தப்பட்டது II | 22 | 20 | 3.64 | 0.81 | 23 |
| தனியார் செய்கையாளர்கள் | பதிவு செய்யப்பட்டது I | 137 | 75 | 132.29 | 101.72 | 77 |
| | பதிவு செய்யப்பட்டது II | 13 | 8 | | | |
| | அத்தாட்சிப்படுத்தப்பட்டது I | 3734 | 3156 | 3265.79 | 2420.51 | 74 |
| | அத்தாட்சிப்படுத்தப்பட்டது II | 397 | 297 | 323.08 | 232.49 | 72 |
| | அத்தாட்சிப்படுத்தப்பட்டது III | | | 22.06 | 4.25 | 19 |
| **மொத்தம்** | | **6116.7** | **4946** | **4907.21** | **3650.32** | |

- இரண்டாயிரத்து பதின்மூன்றாம் ஆண்டில் மாதிரி எடுக்கப்பட்ட மொத்தமான 20391mt விதை நெல்லில் 13700mt விதைநெல்லின் தர நியமங்கள் ஆய்வுகூடப் பரிசோதனை மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது (அட்டவணை 2.1.1.3)

- ஒப்பந்த செய்கையாளர்களுடன் இணைந்த விவசாயத் திணைக்களப் பண்ணைகள் நிகழ்ச்சியானது 2741mt இனையும் தனியார் செய்கையாளர்கள் 10,959mt இனையும் உற்பத்தி செய்தன

**அட்டவணை 2.1.1.3: 2012 மற்றும் 2013 இல் பரிசோதிக்கப்பட்ட விதை நெல் அளவுகளும், ஏற்றுக்கொள்ளப்பட்ட நூற்று வீதமும்**

| | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|
| **மூலம்** | **பரிசோதிக்கப்பட்ட அளவு (mt)** | **ஏற்றுக்கொள்ள பட்டது (%)** | **பரிசோதிக்கப்பட்ட அளவு (mt)** | **ஏற்றுக்கொள்ள பட்டது (%)** |
| ஆராய்ச்சி நிலையங்கள் | 6.2 | 95 | 4.295 | 100 |
| அரச பண்ணைகள் | 2792 | 90 | 2665.0 | 94 |
| ஒப்பந்த செய்கையாளர்கள் | 1105 | 87 | 402.9 | 58 |
| தனியார் செய்கையாளர்கள் | 7443 | 75 | 17319.1 | 63 |
| **மொத்தம்** | **11346.2** | | **20391.3** | |

### மறுவயற்பயிர் (மவப) விதைகளின் அத்தாட்சிப்படுத்தல்

- மறுவயற்பயிர் விதை உற்பத்தியின் கீழ் பதிவு செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பான 1088ha இல் ஒப்பந்தச் செய்கையாளர்கள் 89% இனைக் கொண்டிருந்தனர். மவப விதை உற்பத்தி நிகழ்ச்சியில் சோளம், பயறு, நிலக்கடலை, எள்ளு, கௌபி, குரக்கன், உழுந்து, சோயாஅவரை, ஆகியன உள்ளடக்கப்பட்டிருந்தன. வெவ்வேறு விதை மூலங்கள் மற்றும் விதை வகுப்புக்கள் கீழ் விதை உற்பத்திக்காக பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பளவுகள் அட்டவணை 2.1.1.4 இல் தரப்பட்டுள்ளது.

இரண்டாயிரத்துப் பன்னிரண்டுடன் ஒப்பிடும் போது மறுவயற்பயிர்களின் விதை உற்பத்திக்காகப் பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பளவில் 30% அதிகரிப்பு காணப்பட்டது.

**அட்டவணை 2.1.1.4: மவப விதை உற்பத்திக்கான நிலப்பரப்பளவு 2012 மற்றும் 2013 இல்**

| | | 2012 | | 2013 | | |
|---|---|---|---|---|---|---|
| மூலம் | விதை வகுப்பு | பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பளவு (ha) | கண்காணிக்கப்பட்ட நிலப்பரப்பளவு (ha) | பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பளவு (ha) | கண்காணிக்கப்பட்ட நிலப்பரப்பளவு (ha) | ஏற்றுக் கொள்ள பட்ட வீதம் |
| ஆராய்ச்சி நிலையம் | இனவிருத்தியாளர்குரியது | 3.9 | 3.9 | 3.47 | 3.05 | 88 |
| | அடிப்படை | 26 | 19 | 14.53 | 7.63 | 53 |
| அரச | பதிவு செய்யப்பட்டது I | 58 | 24 | 32.7 | 20.66 | 63 |
| பண்ணைகள் | பதிவு செய்யப்பட்டது II | 3 | 3 | | | |
| | அத்தாட்சிப்படுத்தப்பட்டது I | 12 | 9.5 | 3.04 | 3.04 | 100 |
| | அத்தாட்சிப்படுத்தப்பட்டது II | 1 | 0.8 | 2.91 | 2.73 | 94 |
| | கலப்பினம் | 3.03 | 0.2 | 1.42 | 1.01 | 71 |
| | வர்த்தகம் | | | 1.82 | 1.82 | 100 |
| ஒப்பந்த | அடிப்படை | 5.3 | 3.5 | 3.4 | 1.98 | 58 |
| செய்கையாளர்கள் | பதிவு செய்யப்பட்டது I | 97.2 | 74.7 | 128.59 | 87.43 | 68 |
| | பதிவு செய்யப்பட்டது II | 6.2 | 6.2 | | | |
| | அத்தாட்சிப்படுத்தப்பட்டது I | 463 | 358 | 706.25 | 459.53 | 65 |
| | அத்தாட்சிப்படுத்தப்பட்டது II | 77.6 | 71.4 | 117.31 | 82.59 | 70 |
| | கலப்பினம் | | | 1.42 | 1.42 | 100 |
| | வர்த்தகம் I | | | 16.92 | 8.62 | 51 |
| | வர்த்தகம் II | | | 3.64 | 2.63 | 72 |
| தனியார் | அடிப்படை | 2.1 | 1.2 | | | |
| செய்கையாளர்கள் | பதிவு செய்யப்பட்டது I | 35.3 | 9 | | | |
| | அத்தாட்சிப்படுத்தப்பட்டது I | 38.2 | 24.8 | 38.87 | 38.5 | 99 |
| | அத்தாட்சிப்படுத்தப்பட்டது II | 2 | 1.4 | 0.4 | - | - |
| | வர்த்தகம் I | | | 11.48 | 5.71 | 50 |
| **மொத்தம்** | | **833.8** | **610.6** | **1088.17** | **728.35** | |

ஆண்டு 2013 இல் மொத்த மவப விதை உற்பத்தி 446mt ஆகவும் இதில் 94% உற்பத்தி அத்தாட்சிப்படுத்தப்பட்டும் இருந்தது. வேறுபட்ட மூலங்களிலிருந்து பெறப்பட்ட பரிசோதிக்கப்பட்ட அளவுகளும், ஏற்றுக்கொள்ளப்பட்ட நூற்று வீதங்களும் அட்டவணை 2.1.1.5 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1.1.5: 2012 மற்றும் 2013 இல் பரிசோதிக்கப்பட்ட மவப விதைகளின் அளவுகள்**

| | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|
| **மூலம்** | **பரிசோதிக்கப்பட்ட அளவு (mt)** | **ஏற்றுக்கொள்ள பட்டது (%)** | **பரிசோதிக்கப்பட்ட அளவு (mt)** | **ஏற்றுக்கொள்ள பட்டது (%)** |
| ஆராய்ச்சி நிலையங்கள் | 0.2 | 100 | 0.9 | 100 |
| அரச பண்ணைகள் | 35.5 | 88 | 27.0 | 85 |
| ஒப்பந்த செய்கையாளர்கள் | 289.6 | 95 | 408.2 | 76 |
| தனியார் செய்கையாளர்கள் | 4.8 | 77 | 11.5 | 100 |
| **மொத்தம்** | **330.1** | | **446.7** | |

### மரக்கறி விதை உற்பத்திக்கான அத்தாட்சிப்படுத்தல்

மரக்கறி விதை உற்பத்திக்கென பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பளவு 315ha இல் தனியார் மற்றும் ஒப்பந்தச் செய்கையாளர்களின் பங்களிப்பு 69.5% ஆகக் காணப்பட்டது. வேறுபட்ட மூலங்கள் மற்றும் விதை வகுப்புகளிலும் பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பளவு அட்டவணை 2.1.1.6 இல் தரப்பட்டுள்ளது. தக்காளி, வெண்டி, மிளகாய், சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம், புடோல், போஞ்சி, கத்தரி, பாகல், முள்ளங்கி, பீர்க்கு, கறிமிளகாய், பயற்றை, கெக்கரி, பூசணி, கீரை, மரக்கறி கௌபி, சிறகவரை, வத்தகை மற்றும் பப்பாசி, ஆகியவை விதை உற்பத்தி நிகழ்ச்சியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.1.1.6: வகுப்பு மற்றும் மூலம் ரீதியான மரக்கறி விதை உற்பத்திக்கான பரப்பளவின் சுருக்கம், 2012 மற்றும் 2013**

| | | 2012 | | 2013 | | |
|---|---|---|---|---|---|---|
| மூலம் | விதை வகுப்பு | பதிவு செய்யப்பட்ட நிலப் பரப்பளவு (ha) | கண்காணிக் கப்பட்ட நிலப் பரப்பளவு | பதிவு செய்யப்பட்ட நிலப் பரப்பளவு (ha) | கண்காணிக் கப்பட்ட நிலப் பரப்பளவு (ha) | ஏற்றுக் கொள்ளப் பட்டது (%) |
| ஆராய்ச்சி நிலையம் | இனவிருத்தி யாளர் | 1.5 | 1.5 | 1.34 | 1.14 | 85 |
| அரச பண்ணைகள் | அடிப்படை | 17 | 12 | 26.32 | 26.28 | 99 |
| | நியமம் I | 26.7 | 20.5 | 34.42 | 30.35 | 88 |
| | கலப்பினம் | 1.5 | 1.5 | 0.61 | 0.4 | 67 |
| ஒப்பந்த செய்கை யாளர்கள் | அடிப்படை | 3.8 | 2.7 | 1.14 | 1 | 87 |
| | நியமம் I | 43.7 | 35.4 | 142.82 | 112.16 | 79 |
| | நியமம் II | 1.6 | 0.9 | 12.98 | 9.74 | 75 |
| தனியார் செய்கை யாளர்கள் | நியமம் I | | | 92.89 | 58.82 | 64 |
| | நியமம் II | 40.3 | 33.8 | 2.53 | 1.92 | 76 |
| | வர்த்தக | | | 0.65 | 0.65 | 100 |
| **மொத்தம்** | | **136.1** | **108.3** | **315.7** | **242.5** | |

இவ்வாண்டில் 69mt மரக்கறிகள் அத்தாட்சிப்படுத்தப்பட்டது. வேறுபட்ட மூலங்களிலிருந்து பெறப்பட்ட பரிசோதிக்கப்பட்ட அளவுகளும், ஏற்றுக்கொள்ளப்பட்ட நூற்றுவீதமும் அட்டவணை 2.1.1.7 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1.1.7: 2012 மற்றும் 2013 இற்கான விதையுற்பத்தியினளவுகள்**

| | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|
| மூலம் | பரிசோதிக்கப்பட்ட அளவு (mt) | ஏற்றுக்கொள்ள பட்டது (%) | பரிசோதிக்கப்பட்ட அளவு (mt) | ஏற்றுக்கொள்ள பட்டது (%) |
| ஆராய்ச்சி நிலையங்கள் | 0.02 | 99 | 0.5 | 100 |
| அரச பண்ணைகள் | 8.4 | 92 | 6.0 | 95 |
| ஒப்பந்த செய்கையாளர்கள் | 26.4 | 98 | 32.4 | 94 |
| தனியார் செய்கையாளர்கள் | 8.7 | 84 | 30.1 | 80 |
| **மொத்தம்** | **43.52** | | **69.0** | |

## விதை உருளைக்கிழங்கு அத்தாட்சிப் படுத்தல்

வேறுபட்ட விதை உருளைக்கிழங்கு வகுப்புகளின் நிலப்பரப்பளவு அட்டவணை 2.1.1.8 இல் தரப்பட்டுள்ளது. விதை உருளைக்கிழங்கு பயிடப்பட்ட மொத்த நிலப்பரப்பரளவு 88ha ஆகக் காணப்பட்டதுடன் ஒரு பிரபல்யமான உருளைக்கிழங்கு வர்க்கத்தில் (கிறனோலா) மொத்தமாக 730mt விதை உருளைக்கிழங்கு அத்தாட்சிப்படுத்தப்பட்டது. முன் அடிப்படை வகுப்பிற்கான தனியார் விதை உருளைக்கிழங்கு உற்பத்தி நிகழ்ச்சியானது ஹேலீஸ் கம்பனி மற்றும் கல்பாலம பண்ணை (Galpalama) ஆகியவற்றால் இவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் இவ் விஷேட விதை உருளைக்கிழங்கு நிகழ்ச்சியின் கீழ் 3,19,500 மிகச் சிறிய முகிழ்கள் (mini tubers) பொலித்தீன் கூடாரத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டது.

**அட்டவணை 2.1.1.8: விதை உருளைக்கிழங்கு உற்பத்திக்கான நிலப்பரப்பளவு 2012, 2013 இல்**

| | | 2011 | | 2012 | |
|---|---|---|---|---|---|
| மூலம் | வகுப்பு | பதிவு செய்யப்பட்ட நிலப் பரப்பளவு (ha) | ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலப் பரப்பளவு | பதிவு செய்யப்பட்ட நிலப் பரப்பளவு (ha) | ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலப் பரப்பளவு (ha) |
| அரச பண்ணைகள் | முன் - அடிப்படை | 0.25 | 0.21 | 0.05 | 0.05 |
| | அடிப்படை | 52.46 | 48.0 | 36.1 | 36.1 |
| | அத்தாட்சிப் படுத்தப்பட்டது | 11.51 | 11.42 | 29.6 | 29.0 |
| தனியார் செய்கை யாளர்கள் | முன் - அடிப்படை | | | 0.04 | 0.04 |
| | அடிப்படை | | | 0.2 | 0.2 |
| | அத்தாட்சிப் படுத்தப்பட்டது | 22.06 | 22.06 | 22.9 | 22.9 |
| **மொத்தம்** | | **86.28** | **81.69** | **88.89** | **88.29** |

## விதைப் பரிசோதனை

பேராதனை, மஹாஇலுப்பள்ளம, அலுத்தறம, பத்தாத்த ஆகிய இடங்களிலுள்ள விவசாயத் திணைக்கள விதை பரிசோதனை ஆய்வு கூடங்களில் 13003 விதை மாதிரிகள் தர அத்தாட்சிப்படுத்தலிற்காக பரிசோதிக்கப்பட்டன.

## விதை ஆரோக்கிய பரிசோதனை பிரிவு

### முக்கிய நிகழ்வுகள்

- விதையிற் பிறந்த நோயாக்கியான *Colletrotrichum lindemuthianum* இனால் ஏற்படுத்தப்படுகின்ற அந்திரக்னோசு நோயினை அவரை வித்துக்களில் சுட்டிக் காட்டுவதற்கு கடதாசி துவாய் தொழில்நுட்பம் விருத்தி செய்யப்பட்டது.

- *Alternaria padwickii, Helminthosportum oryzae, மற்றும் Pyricularia oryzae* ஆகியவை நெல்லிற்கான விதையிற் பிறந்த நோயாக்கிகள் இம்மூன்று பங்கசுக்களும் பிரதானமாக வித்துறையிலும், சுற்றுக்கனியத்திலும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது.
- அநுராதப்புர பிரதேசத்திலிருந்து முறைப்பாடு இடப்பட்ட சோயாஅவரை வித்துக்களிலுள்ள ஊதா நிறக் கறையானது விதையில் பிறந்த பங்கசான *Cercospora kikuchii* இனால் ஏற்படுத்தப்பட்ட ஊதா விதை கறை நோயென அடையாளங் காணப்பட்டுள்ளது.

### ஆராய்ச்சி நிகழ்ச்சிகள்

- நெல்லில் முளைத்தலின் போது விதை நிறமாற்றத்திற்குள்ளாதல், நாற்று வீரியம் விதை ஆரோக்கியம் போன்றவற்றின் கணிப்பீடு
- சேமிக்கப்பட்ட மரக்கறி விதைகளில் விதையிற் பிறந்த நோயாக்கிகள் விதை ஆரோக்கியத்தில் ஏற்படுத்தும் பாதிப்பை கற்றல்
- நெல்லில் விதையிற் பிறந்த நோயாக்கிகளிற்கான விதை ஆரோக்கியக் கண்டறிதலின் விருத்தி
- நெல்லில் விதையிற் பிறந்த நோயாக்கி களை அழித்தொழித்தல் முறைகளின் பயன்பற்றி அறிதல்
- பிரதான பயிர்களில் விதையிற் பிறந்த நோயாக்கிகளை கண்டறிதல்

### விஷேட செயற்திட்டங்கள்

இடம் பெயரும் நோய்கள் மற்றும் பூச்சி பீடைகளிற்கான Epidemiology தகவல் பரிமாற்றத்தொகுதியினை அமைப்பதற்கான ஆசிய பிராந்திய (IPM), AFACI மற்றும் கொரிய கூட்டிணைவு

### நடுகைப் பொருட்களின் அத்தாட்சிப்படுத்தல்

அரச நாற்றுமேடைகளிலும், தனியார் நாற்று மேடைகளிலும் உற்பத்தி செய்யப்பட்ட மொத்தமாக 8,72,472 பழத்தாவரங்கள் அத்தாட்சிப்படுத்தப்பட்டு சுட்டியிடப்பட்டன. (அட்டவணை 2.1.1.9) இவை 2012ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 40% அதிகமாகும்.

**அட்டவணை 2.1.1.9: 2012 மற்றும் 2013 இல் கிளையொட்டப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட பழத் தாவரங்களின் எண்ணிக்கை**

| இனங்கள் | அத்தாட்சிப்படுத்தப்பட்ட தாவரங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | 2012 | 2013 |
| மா – ஒட்டப்பட்டது | 263745 | 4,14950 |
| றம்புட்டான் - ஒட்டப்பட்டது | 105640 | 1,35698 |
| தோடை - ஒட்டப்பட்டது | 236014 | 3,12075 |
| ஆனைக்கொய்யா | 7233 | 950 |
| தூரியான் | 1716 | 1271 |
| பலா | 7513 | 5368 |
| பேரை | | 2160 |
| **மொத்தம்** | **6,21,861** | **8,72,472** |

### நாற்றுமேடைகளைப் பதிவு செய்தல்

2013ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த நாற்றுமேடைகளின் எண்ணிக்கை 350

### தாய்த் தாவர அத்தாட்சிப்படுத்தல்

2013ம் ஆண்டிலும் மொத்த எண்ணிக்கையாக 346 மா, றம்புட்டான், சித்திரஸ் மற்றும் பலா தாய்த் தாவரங்கள் தெரிவு செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டன.

**அட்டவணை 2.1.1.10: 2012 மற்றும் 2013ம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட தாய்த் தாவரங்களின் எண்ணிக்கை**

| இனங்கள் | பதிவு செய்யப்பட்ட தாவரங்களின் எண்ணிக்கை 2012 | 2013 |
|---|---|---|
| மா – ஒட்டப்பட்டது | 242 | 08 |
| றம்புட்டான் - ஒட்டப்பட்டது | 43 | 269 |
| தோடை | 75 | 66 |
| பலா | 26 | 03 |
| **மொத்தம்** | **386** | **346** |

### பின்னான கட்டுப்பாட்டுப் பரிசோதனை

1268 விதை மாதிரிகளை மதிப்பிடுவதற்காக பின்னான கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இவை விவசாயத் திணைக்களம் அத்தாட்சிப்படுத்திய விதை மாதிரிகள், இறக்குமதி செய்யப்பட்ட வெவ்வேறு பயிர் வர்க்கங்கள் மற்றும் விதை உருளைக்கிழங்கு என்பவற்றை உள்ளடக்கு கின்றது. வெவ்வேறு பயிர் வகைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பின்னான கட்டுப்பாட்டுப் பரிசோதனைகளின் எண்ணிக்கை அட்டவணை 2.1.1.11 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1.1.11: பரிசோதிக்கப்பட்ட பின்னான கட்டுப்பாட்டு மாதிரிகளின் எண்ணிக்கை**

| பயிர் வகை | பரிசோதிக்கப்பட்ட தொகுதிகளின் எண்ணிக்கை |
|---|---|
| நெல் | 109 |
| மவப (OFC) | 317 |
| மரக்கறிகள் | 523 |
| உருளைக்கிழங்கு | 318 |
| பழங்கள் | 1 |
| **மொத்தம்** | **1268** |

## தனித்துவத்தன்மை, சீரானதன்மை மற்றும் நிலையானதன்மை (DUS) பரிசோதித்தல்

இருபத்தொரு நெல் வர்க்கங்கள் (ஏரி 676 I. d. 3 – 6-12, பிஜி – 3ஆர், ஏரி – 06-631, பொக்குரு சம்பா, எல்டி 1-5-15, சீஜசீ 3-1, பிஜி 5-15-31, பிஜி 4-2236, பிஜி 11-139, பிஜி 5-110, ஏரி 4-186 ஏரி 5-1382, பிடபிள்யூ 5 -1621, பிஜி 465, எல்டி 8-6-7 பிஜி - 4-91, சூதுரு, பிஜி 96-74, பிடபிள்யூ 452 ஏரி 7 – 800) கன்னொறுவையிலுள்ள பின்னான கட்டுப்பாட்டு வயலில் DUS இற்காகப் பரிசோதிக்கப்பட்டன. அத்துடன் 12 மரக்கறி வர்க்கங்கள், 40 மவப வர்க்கங்கள் மற்றும் 1 வேர் மற்றும் கிழங்கு பயிர் அகியவையும் பரிசோதிக்கப்பட்டன. கருதப்பட்ட வருடத்தில் 15 நெல், 8 மரக்கறிகள் மற்றும் 11 மவப ஆகியவற்றிற்கு DUS பரிசோதித்தல் பூர்த்தியாக்கப்பட்டது.

**அட்டவணை 2.1.1.12: மேற்கொள்ளப்பட்ட DUS பரிசோதனைகளின் எண்ணிக்கை**

| பயிர் வகை | மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை | பூர்த்தியாக்கப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| நெல் | 21 | 15 |
| மறுவயற்பயிர | 40 | 11 |
| மரக்கறிகள் | 12 | 8 |
| வேர்களும் கிழங்குகளும் | 1 | 1 |
| **மொத்தம்** | **74** | **36** |

## விதைச் சட்டத்தை அமுல்படுத்தல்

இந்நாட்டின் விவசாயத்தில் இன்றியமையாத பிரிவான நாட்டின் விதைக் கைத்தொழிற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய பிழையான பயிற்சிகளிலிருந்து விவசாயியையும், விதை பராமரிப்பாளர்களையும் பாதுகாக்கும் நோக்குடன 2003ம் ஆண்டின் (இல 22) விதை சட்டமானது 2008ம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. 2008ம் ஆண்டிலிருந்து விதைச் சட்டத்தின் கீழ் அண்ணளவாக 5700 விதை பராமரிப்பாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாண்டில் விதை சட்டத்தின் கீழ் 1141 விதை பராமரிப்பாளர்கள் பதிவசெய்யப்பட்டதுடன், 858 புதுப்பித்தல்களும் மேற்கொள்ளப்பட்டன. பதிவு செய்தல் மற்றும் பதிவுகளை புதுப்பித்தல் மூலம் சேகரிக்கப்பட்ட மொத்தப் பணத்தினளவு ரூ 1.127 மில் பன்னிரண்டு முறைப்பாடுகள் பெற்றுக் கொள்ளப்பட்டு, விசாரிக்கப்பட்டு விவசாயிகளைப் பாதுகாக்குமுகமாக சீர்ப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. விதை பராமரிப்பாளர்களின் கட்டட எல்லைக்குள் 773 எழுந்தமான கண்காணிப்புகள், தற்போதைய நிலையை மதிப்பிடுவதற்காகவும், விதை மற்றும் நடுகைப் பொருட்களின் சந்தைப்படுத்தலிற்கு முன்பாக சரியான கையாளுகை பற்றி ஆலோசனை வழங்குவதற்காகவும் மேற்கொள்ளப்பட்டன. விதை கைத்தொழில் சம்பந்தமான அனைவரது பங்குபற்றலுடனும் ஓர் புதிய விதைச் சட்டத்தை உருவாக்கவதற்காகவும் பழைய விதைச் சட்டத்தை ரத்துச் செய்வதற்காகவும் ஓர் பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டது. இறுதியில் புதிய பிரேரணையானது விவசாய அமைச்சிடம் மும்மொழிகளிலும் அமைச்சரவை கூட்டத்தில் வெளிப்படுத்துவதற்காகக் கையளிக்கப்பட்டது. அத்துடன் புதிய பிரேரணையானது விவசாயத் திணைக்கள இணையத்தளத்தில் பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பிரேரிக்கப்பட்ட விதை மற்றும் நடுகைப்

பொருட்களிற்கான சட்ட ஒழுங்கு விதிகளின் நகலை தயாரிப்பதற்கான சில பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன.

**அத்தாட்சிப்படுத்தப்பட்ட மரக்கறி விதை நிகழ்ச்சித்திட்டம் 2013 JICA வின் உற்பத்தி தொகுதியை ஊக்குவிப்பதன் மூலம் மரக்கறி உற்பத்தி பயிற்சி**

தரமான விளக்கங்களிலிருந்து மரக்கறி விதையுற்பத்தி மற்றும் அத்தாட்சிப்படுத்தல் பற்றி பொருத்தமான அறிவினை வழங்குதல் மற்றும் தொழில்நுட்பங்களை கற்ப்பிப்பதற்கு பயிற்சி நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன. இது வயலில் 'வேலைக்கான பயிற்சி" மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது. (அட்டவணை 2.1.1.13)

**அட்டவணை 2.1.1.13: மரக்கறி விதை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளிற்கான பங்குபற்றல்கள்**

| பயிற்சிகள் | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | அரச பிரிவு | தனியார் பிரிவு | மொத்தம் |
| விதை பரிசோதனைச் செயன்முறைகள் | 134 | - | 134 |
| வயற் கண்காணிப்பும் மாதிரி எடுத்தலும் | | | |
| 13 சிறுபோகம் | 176 | 111 | 287 |
| 13 / 14 பெரும்போகம் | 179 | 63 | 142 |
| விதை ஆரோக்கியம் | 01(வெளிநாட்டு) | - | 01 |

குண்டசாலை மற்றும் அளுத்தறம (2013 சிறுபோகம்) ஆகிய இடங்களில் JICA மற்றும் VSP மூலம் வயற் செயன்முறை பயிற்சிகள் நடாத்தப்பட்டன. நிக்கவரட்டிய பிரதேசம் இந்நிகழ்ச்சிகளுடன் 2013 / 14 பெரும்போகத்தில் இணைந்து கொண்டது. இதன் விளைவாக மரக்கறி விதை அத்தாட்சிப்படுத்தல் செயன்முறையானது மேம்படுத்தப்பட்டது. மேலும் 2013 ஓகஸ்டில் 69 நபர்களின் பங்குபற்றலுடன் விதை உற்பத்தி மற்றும் அத்தாட்சிப்படுத்தலின் அடிப்படைகள் பற்றி ஓர் கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

இரண்டாயிரத்து பதின்மூன்றாம் ஆண்டில் JICA இனால் ஆய்வுகூட உபகரணங்களும், ஆய்வுகூட இரசாயனப் பொருட்களும் பேராதனை, அளுத்தறம மற்றும் மகாஇலுப்பள்ளம ஆகிய இடங்களிலுள்ள விதைப் பரிசோதனை ஆய்வுகூடத்திற்காக பெற்றுக் கொள்ளப்பட்டன. (மொத்தப் பெறுமதி ஏறக்குறைய ரூ 6 மில்லியன்)

## ஆராய்ச்சியும், அபிவிருத்தியும்

பின்வரும் விடயங்களில் ஆராய்ச்சிக் கல்விகள் மேற்கொள்ளப்பட்டன.

1. பழத் தாவரங்களின் அத்தாட்சிப்படுத்தல் நிகழ்ச்சியில் நாளாந்த வயற்பிரச்சினைகளிற்கு விஞ்ஞான ரீதியான தீர்வுகளைக் கண்டறிதல்
2. வெண்டியின் விதை உற்பத்திக்கான சிறந்த அறுவடைக்கால வீச்சை தீர்மானித்தல்
3. முள்ளங்கி விதையின் விளைச்சல் மற்றும் தரம் ஆகிய கூறுகளில் Steckling பருமன் மற்றும் விதைத்தல் காலம் என்பவற்றின் பாதிப்பு

## பயிற்சி நிகழ்ச்சிகள்

தரமான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களின் உற்பத்தி பற்றி உத்தியோகத்தர்கள் மற்றும் விதை பாமரிப்பாளர்களது அறிவை மேம்படுத்த விதை அத்தாட்சிப்படுத்தல் சேவைகளில் பயிற்சி நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடாத்தப்பட்டது.

விதையுற்பத்தி விவசாயிகள் / நாற்றுமேடை வேலையாள், அரச பிரிவு உத்தியோகத்தர்கள், தனியார் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் விதை பராமரிப்பாளர்களிற்கு மொத்தமாக 1867 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

## வெளிநாட்டுப் பயிற்சி

JJCA வுடன் கூட்டாக ஜப்பானில் ஒரு உத்தியோகத்தர் விதை ஆரோக்கியப் பரிசோதனைக்காக பயிற்றுவிக்கப்பட்டார்.

## விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் தகவல் தள முகாமைத்துவத் தொகுதி

விதை அத்தாட்சிப்படுத்தல் சேவைகளின் பிராந்திய உத்தியோத்தர்களது மாதாந்த வேலைப்பளுவை பகுப்பாய்வு செய்வதற்கு MySOl மற்றும் ஜாவா (Java) தொகுதியிலிருந்து ஓர் புதிய PC அடிப்படையிலான தகவல்தளம் உருவாக்கப்பட்டது.

### 2014 இற்கான திட்டம்

- அத்தாட்சிப்படுத்திய விதைகள் மூலம் 30% தேசிய விதை நெல் தேவையை அடைவதற்காக விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையை வலுப்படுத்தல்
- விதை பொதியாக்கல், சேமித்தல் மற்றும் காலாவதித் திகதி பற்றி விதை பராமரிப்பாளர்கள் எதிர்கொண்ட அறுவடைக்குப் பின்னான பிரச்சினைகள் சம்பந்தமான விதை ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு விதை ஆராய்ச்சி அலகை விருத்தி செய்தல்
- பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவதற்காகவும், விதை அத்தாட்சிப்படுத்தல் நிகழ்ச்சி தொடர்பான தகவல் பரம்பலை மேம்படுத்தவதற்காகவும் மற்றும் எமது சேவையின் வினைத்திறனான மற்றும் இலகுவான தொடர்புகளை

ஏற்படுத்தவதற்காகவும் விதை அத்தாட்சிப்படுத்தல் சேவைகளின் இணையத்தளத்தை வடிவமைத்தல்

- விதைக் கைத்தொழிலிலுள்ள தவறான பயிற்சிகளை தவிர்த்து நாட்டில் உயர் தரமான விதைகள், நடுகைப் பொருட்களைக் கிடைக்கச் செய்வதற்காக அரச மற்றும் தனியார் பிரிவு விதை பராமரிப்பாளர்கள் மத்தியில் விதை உற்பத்திச் செயற்பாட்டை ஒழுங்காக்குவதற்கான விதை சட்டத்தை அமுல்படுத்தல்
- அனைத்து விதை பராமரிப்பாளர்களின் மத்தியிலும் விநியோகிப்பதற்காக தரமான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களின் உற்பத்தி பற்றி வழிகாட்டிகளைத் தயாரித்தல்
- ஒவ்வொரு பயிர்ச் செய்கை பருவகாலத்திலும் விதை உற்பத்தியாளர்கள் வழிகாட்டி, நடுகைப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் வழிகாட்டி என்பவற்றைத் தயாரித்தலும் விநியோகித்தலும்
- புதிதாக திருத்தப்பட்ட விதை சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளை முடிவாக்கி வெளிப்படுத்தல்
- குண்டசாலையிலுள்ள விதை அத்தாட்சிப்படுத்தல் சேவைகள் பிராந்திய அலுவலக கட்டட வேலைகளை பூர்த்தி செய்தல்.
- பரந்தனில் புதிய விதை பரிசோதிக்கும் ஆய்வுகூடம், அலுவலகத் தொகுதியையும், மாத்தறை மற்றும் யாழ்ப்பாணத்தில் விஅசே பிராந்திய அலுவலகத்தையும் நிர்மாணித்தல்
- இனவிருத்திக்கான விதைத் தொகுதியிலிருந்து, அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைத் தொகுதிவரை விதைத் தொகுதிகளை இனங்காணப்பதற்கான புதிய தகவல் தளத் தொகுதியை உருவாக்கல்
- எல்லா விஅசே அலகுகளையும் உத்தியோகத்தர்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் மூலம் வலிமைப்படுத்தல் அவசியமாகும்
- விதை ஆராய்ச்சிக்காக உயிர்தொழில்நுட்பவியல் அலகையும், விதை சுகாதாரப் பரிசோதனை அலகையும் ஸ்தாபித்தல்
- விஅசே, 23 பிராந்திய அலுவலகங்கள், நான்கு விதை பரிசோதித்தல் ஆய்வு கூடங்கள், நான்கு பின்னான கட்டுப்பாட்டு வயல்கள் போன்ற நாடளாவிய ரீதியில் பரவியுள்ள சிக்கலான நிர்வாகக் கட்டமைப்பாகக் காணப்படுவதுடன், விதை அத்தாட்சிப்படுத்தல், பழ மர அத்தாட்சிப்படுத்தல், விதைச் சட்டம் ஆகிய பெயர்களில் மூன்று பிரதான தேசிய நிகழ்ச்சிகளை கொண்டுள்ளது. இது பணிப்பாளர் / மேலதிக பணிப்பாளரினால் விவசாய பணிப்பாளர் நாயகத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் நிர்வாகம் மேற் கொள்ளப்படுவதற்காக மீள்கட்டமைக்கப்படல் வேண்டும்.

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பிரதிப் பணிப்பாளர் | 01 |
| உதவி விவசாயப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) | 03 |
| உதவி விவசாயப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | 14 |
| விவசாயக் கண்காணிப்பு அலுவலர் | 06 |
| நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் | 02 |
| பட்டதாரி பயிலுனர் | 03 |
| விவசாயப் போதனாசிரியர்கள் | 112 |
| ஆராய்ச்சி உதவியாளர்கள் | 01 |
| ஆராய்ச்சி உப உதவியாளர்கள் | 05 |
| பொது முகாமைத்துவ உதவியாளர்கள் | 09 |

| | |
|---|---|
| சாரதிகள் | 19 |
| மின்னியலாளர்கள் | 01 |
| காவலாளிகள் | 37 |
| தொழிலாளி | 48 |
| விதை தொழில்நுட்பவியலாளர்கள் | 10 |
| விதைத் தொழிலாளி | 30 |
| களஞ்சிய தொழிலாளி | 03 |
| சுற்றாலா விடுதி காப்பாளர் | 01 |
| உழவு இயந்திர இயக்குநர் | 03 |
| தொழில்நுட்பவியலாளர் | 03 |
| சுத்தப்படுத்தல் தொழிலாளி | 01 |
| **மொத்தம்** | **312** |

## 2.1.2 தாவரப் பாதுகாப்புச் சேவை (PPS), கன்னொறுவை

தாவரப் பாதுகாப்புச் சேவை முதன் முதலாக 1919ம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இதன் பிரதான நோக்கம் விவசாயத்தில் முக்கியத்துவமுடைய தாவரங்ளின் நலத்தினை உறுதிப்படுத்தவென சூழலியல் நேயமான, பொருளாதார பொருத்தப்பாட்டுடைய பிரயோக பீடை முகாமைத்துவ தொகுதிகளை மேம்படுத்தலாகும்.

தற்போதிருக்கின்ற பீடை முகாமைத்துவ நுட்பங்களைத் தரப்படுத்தல், நிரந்தர பயிர்ச் சிகிச்சை நிகழ்ச்சித் திட்டம் (PCCP) ஆக்கிரமிப்புக்குரிய வெளிநாட்டு நீரியல் களைகளின் கட்டுப்பாட்டுக்கென உயிரியல் கட்டுப்பாட்டு முகவர்களை வளர்த்தல், விடுவித்தல், சடுதியான நோய் பீடை நிலமைகளை கட்டுப்படுத்தல், தூமமாக்குதலினூடாக பெருமளவில் விதைச் சேமிப்புக்களில் பீடை முகாமைத்துவம், பீடை முகாமைத்துவம் மற்றும் பீடை நாசினிகளில் ஆராய்ச்சியிலீடுபடல் என்பவற்றோடு கள மட்டத்தில் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களை (IPM) நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல் ஆகியவற்றினூடாக எமது பிரதான செயற்பாடுகள் நிறைவு செய்யப்படுகின்றன. இவற்றுக்கு மேலதிகமாக விவசாயச் சூழலில் உள்ள நீரியல் களைகள், ஏனைய ஆக்கிரமிப்புக்குரிய தாவரங்கள் உள்ளடங்கலாக வேண்டத் தகாத தாவரங்களின் பாதிப்பினை இழிவாக்குதல், விவசாயிகள் மற்றும் அலுவலர்களுக்குப் பயிற்சியளித்தல், பரீட்சார்த்த மட்டத்தில் புதிய பீடை நாசினிகளை மதிப்பீடு செய்தல், தாவர நலத்தினை உறுதி செய்து கொள்ள சிபாரிசுக்கமைவான பீடை நாசினிகளின் தொடர்ச்சியான கொல்திறன் மதிப்பீடு என்பனவும் தாவரப் பாதுகாப்புச் சேவைக்கு குறித்தொதுக்கப்பட்ட முக்கியமான அதிகாரமுள்ள செயற்பாடுகள் ஆகும்.

1999ம் ஆண்டு 35ம் இலக்க பயிர் பாதுகாப்புச் சட்டத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நாட்டுக்குள் பயிர்ப் பாதுகாப்புக்குத் தேவையான எல்லா ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் விவசாயிகளின் களங்களில் பரீட்சார்ந்த மட்டத்தில் புதிய களை நாசினிகளை மதிப்பீடு செய்வதற்கூடாக 1981 ஆண்டு பீடை நாசினிகள் சட்டத்தில் குறித்த சில வறையறைகளை நடைமுறைப்படுத்துவதில் உதவுதல் என்பன மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளில் உள்ளடக்கப்படுகின்றன.

## பாதீடு

**அட்டவணை 2.1.2.1 வருடாந்தப் பாதீடு 2013 (ரூபாய்)**

| செலவுத்தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு% |
|---|---|---|---|
| மீண்டு வரும் செலவு | 2,039,840 | 1,902,172 | 93 |
| மூலதனச் செலவு | 2,150,000 | 1,524,140 | 71 |
| நிரந்தர பயிர்ச் சிகிச்சை நிகழ்ச்சித் திட்டம் (PCCP) | 500,000 | 471,103 | 94 |
| **மொத்தம்** | **4,689,840** | **3,897,415** | **83** |

## முன்னேற்றம்

### 1999ம் ஆண்டு 35ம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப் படுத்தல்

முன்னைய ஆண்டுகளில் நியமனம் வழங்கப்பட்டு இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் ஓய்வு பெற்ற அலுவலர்களின் வெற்றிடங்களை நிரப்பவென 64 அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் புதிதாக நியமனம் வழங்கப்பட்டனர். இந்த 65 பேர்களுள் 36 பேர் தென்னை வெலிகம வாடல் நோயினைக் கட்டுப்படுத்தவென நேரடியாக அப்பிரிவுக்கு நியமிக்கப்பட்டனர். இவ் 65 அலுவலர்களும்

- 1999ம் ஆண்டு 35ம் இலக்க தாவரப் பாதுகாப்பு சட்டத்தினது சட்ட ரீதியான பின்னணி
- களமட்டத்தில் தாவரப் பாதுகாப்பு சட்டத்தை நடைமுறைப்படுத்தல்
- இலங்கையில் தடுப்புக் காப்பு முக்கியத்துவமுடைய புதிய பீடைகள் என்பவற்றில் பயிற்சியளிக்கப்பட்டனர்.

### நிரந்தரப் பயிர்ச் சிகிச்சை நிழ்ச்சித் திட்டம் (PCCP)

விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் 2013ம் ஆண்டு பங்குனி மாத்திலிருந்து நிரந்தரப் பயிர்ச் சிகிச்சை நிகழ்ச்சியானது தாவரப் பாதுகாப்பு சேவையினரிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி திட்டமானது ஐக்கிய இராச்சியத்தின் விவசாய உயிரியல் விஞ்ஞானத்துக்கான சர்வதேச நிலையம் (CABI) மற்றும் விவசாயத் திணைக்களம் (DOA) என்பவற்றின் கூட்டிணைப்பு நிகழ்ச்சித் திட்டமாகும்.

PCCP இனை தாபித்து முகாமைத்துவம் செய்து தேவையான உள்ளுர்க் கொள்திறன்களை விருத்தி செய்வதனூடாக தேசிய தாவர நலத் தொகுதிகளை வலுவூட்டலே இந்நிகழ்ச்சியின் நோக்கமாகும். CABI யினுடனான பங்காளராகச் செயலாற்றுவதன் மூலம் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் பேண்தகு விவசாய நடவடிக்கைகளை மேன்மைப்படுத்தல், சிறிய மட்டத்தில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் மற்றும் உயிர்ப் பல்வகைமையைப் பாதுகாத்தல் என்பன அடையப்படும்.

பயிர்ச் சிகிச்சை நிலையங்களை முகாமைத்துவம் செய்கின்ற தேசியப் பங்காளர்களுடன் இணைந்து செயலாற்றுவதற்குரிய தேசிய பொறுப்பு வாய்ந்த நிறுவனம் (NRO) ஆக PPS ஆனது பொறுப்புக்களை அளிக்கப் பெற்றுள்ளது. PCCP இன் தேசிய ஒருங்கிணைப்பாளராக பிரதிப் பணிப்பாளர் (தாவரப் பாதுகாப்பு) கடமையாற்றுகின்றார்.

PCCP இன் நன்கு புலப்படுகின்ற சில செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சிரேஷ்ட மட்ட அலுவலர்கள் இருபது பேர், அலகுகள் 1,2,3 மற்றும் 4 இனூடாக கீழ்வரும் விடயங்களின் “தலைமைப் பயிற்றுவிப்பாளர்ளாக” பயிற்சியளிக்கப்பட்டனர்.

- எவ்வாறு ஒரு ”தாவர வைத்தியராக” உருவாவது
- தாவர நலம் தொடர்பான பிரச்சினைகளை முகாமைத்துவம் செய்தல்
- பச்சை மற்றும் மஞ்சள் நிரலில் ஒரு தொழிநுட்ப எழுத்தாளராக உருவாவது எவ்வாறு
- பயிர்ச் சிகிச்சைகளினது கண்காணிப்பும் மதிப்பீடும்

229 அலுவலர்களும் தாவர வைத்தியர்களாக பயிற்சியளிக்கப்பட்டதுடன் பத்து மாவட்டங்களில் 254 நிரந்தர பயிர்ச் சிகிச்சைகளும் தாபிக்கப்பட்டன (கண்டி, அநுராதபுரம், ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி, பொலநறுவை, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் வவுனியா) மேலதிகச் செயலாளர், விவசாயப் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள், மற்றும் விவசாய விரிவாக்கத் தொகுதியிலுள்ள மற்றைய எல்லாப் பிரதிப் பணிப்பாளர்களினதும் பங்கேற்புடன் கண்டி டொபாஷ் கொட்டலில் இந் நிரந்தரப் பயிர்ச் சிகிச்சை நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு மீளாய்வு மற்றும் முன்னோக்கிய வழித்தடப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

## ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம் (IPM) மற்றும் சிறந்த விவசாய நடவடிக்கைகள் (GAP) என்பவற்றின் மேன்மைப்படுத்தல்

பீடை நாசினி பாவனையை இழிவாக்குவதற்கும் இரசாயனமல்லாத பீடை முகாமைத்துவ தந்திரரோபாயங்களை மேம்படுத்துவதற்கு GAP மற்றும் IPM தொடர்பில் விரிவாக்க உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் சமூகம் ஆகியோரின் அறிவினை மேம்பாடு செய்யவென இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கைகளுக்கென மூன்று பிரதான பயிர்ப் பிரிவுகளைான நெல். மரக்கறிகள் மற்றும் இலை மரக்கறிகள் என்பன தெரிவு செய்யப்பட்டன.

## நெல்லுக்கான IPM /GAP நிகழ்ச்சித் திட்டம்

விரிவாக்க அலுவலர்களுக்கான 21 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. இதில் பல்வேறு இடங்களில் 680 அலுவலர்கள் பயிற்சியளிக்கப்பட்டனர். அனுராதபுரம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இரண்டு விவசாயிகளின் களப் பாடசாலைகள் (FFS) தாபிக்கப்பட்டன. ஒரு போகத்தில் 14 பயிற்சி நாட்களைக் கொண்ட போகத் தொடர் பயிற்சிகளை அடிப்படையாகக் கொண்ட மூன்று விவசாயிகளின் களப் பாடசாலைகள் (FFS) அமையப் பெற்றிருந்தன. விவசாயிகளின் கள நிபந்தனைகளின்கீழ் பிரயோகிக்கக்கூடிய வேறுபட்ட விதத்தில் அமைந்த சூழல் நேய பிரயோக நுட்பங்களை உள்ளடக்கிய பீடைக் குடித்தொகை முகாமைத்துவமும் பீடை நிலைகளை அவற்றின் ஒவ்வொரு வளர்ச்சிப் பருவத்திலும் அடையாளம் காணலும் இவற்றின் பிரதான நோக்கங்களாக அமைந்திருந்தன. அத்துடன் விவசாய சூழற்றொகுதிகளில் இயற்கை எதிரிகளை பாதுகாத்தல் மற்றும் பீடைக் குடித்தொகை மட்டத்தினை

சேதமட்டத்தின் கீழ் பேணல் என்பனவற்றிலும் கருத்தூன்றப்பட்டது.

### மரக்கறிகளுக்கான IPM / GAP நிகழ்ச்சி திட்டம்

மரக்கறிகளுக்கான செலவு குறைந்த சூழல் நேயமுள்ள, பிரயோகத்தன்மை வாய்ந்த IPM பொதிகளை விருத்தி செய்யவும் அவற்றை விவசாயிகள் மற்றும் விரிவாக்க உத்தியோகத்தர்களிடம் மேம்படுத்தவும் இது நடைமுறைப்படுத்தப்பட்டது. வெவ்வேறு பகுதிகளில் விரிவாக்க அலுவலர்களுக்கான பதினொரு பயிற்சிகள் நடாத்தப்பட்டு 58 அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டதுடன் விவசாயிகளுக்கான எட்டு பயிற்சிகள் ஒருங்கமைக்கப்பட்டு 658 விவசாயிகளும் பயிற்றுவிக்கப்பட்டனர். இத்தொழில்நுட்பத்தைப் பிரபல்யப்படுத்தவென இரண்டு வானொலி நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பப்பட்டன.

### இலைமரக்கறிகளுக்கான IPM / GAP நிகழ்ச்சி திட்டம்

PPS இன் போம்புவல பிரிவு ஒழுங்கு செய்திருந்த இந்நிகழ்ச்சித் திட்டம் பிரதானமாக தென்மாகாணத்தையே முன்னிலைப்படுத்தியிருந்தது. தொடர்புடைய 245 விவசாயிகள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

### களை நாசினிகளின் பரீட்சார்த்த மட்டத்திலான சோதனைகள்

ஆறு புதிய களை நாசினிகள் அவற்றின் உயிரியல் கொல்திறனை மதிப்பிடவென விவசாயிகளின் கள நிபந்தனைகளின் கீழ் சோதிக்கப்பட்டன. குறைந்த பிரயோக அளவு, இலக்கிற்கான பிரத்தியேகத் தன்மை என்பவற்றில் இவை ஏற்கனவே சிபாரிசிலுள்ள களை நாசினிகளைக் காட்டிலும் மிகச் சிறப்பான செயலாற்றலைக் காண்பித்தன. சிபாரிசுக்கமைவான நான்கு களை நாசினிகள் அவற்றின் கொல்திறன் மதிப்பீட்டுக்கென மீளவும் பரிசோதிக்கப்பட்டன.

### நீரியல் களைகளுக்கான உயிரியல் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்

உயிரியல் கட்டுப்பாட்டு முகவர்களான சேர்டோபேகஸ் சல்வீனியே (Cyrtobagous salviniae) வானது சல்சீனியா களைக்கும் நியோகீட்டினா புருச்சி (Neochetina bruichi) மற்றும் நியோகீடீனா ஐக்கோனியே (Neochetina eichhorniae) ஆகியன குளவாழை (Eichhornia crassipes) க்கும் PPS இனால் பேணப்பட்டன. அரசாங்க, தனியார், அரச சார்பற்ற நிறுவனங்களினால் முன்னரே விண்ணப்பிக்கப்பட்டிருந்த பகுதிகளுக்கு இவ்வுயிரியல் கட்டுப்பாட்டு முகவர்களின் அறிமுகப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்ட பகுதியிலும் பங்குதாரர்களுக்கு விடுவிக்கப்பட்ட உயிரியல் கட்டுப்பாட்டு முகவரினது வாழ்க்கை வட்டம் மற்றும் இலக்குக் களையுடனான இடைத்தாக்கம் தொடர்பில் உரிய விளக்கமளிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அம்பாறை, அனுராதபுரம், இரத்தினபுரி, பொலன்னறுவை, குருணாகல் மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் 14 தொற்றுதலடைந்த நீர் நிலைகளில் இவ்வுயிரியல் கட்டுப்பாட்டு முகவர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அம்பாறையில் நடைபெற்ற “தேசத்துக்கு மகுடம்” மற்றும் வாரியப்பொல வில் நடைபெற்ற “விவசாயிகள் வாரம்” கண்காட்சி நிகழ்வுகளின் போது மேற்சொன்ன களைகளின் உயிரியல் கட்டுப்பாடு தொடர்பான 100,000 வரையிலான துண்டுப் பிரசுரங்கள் பகிர்ந்நதளிக்கப்பட்டன.

### விவசாயத் திணைக்களத்தின் பண்ணைகளில் விதை களஞ்சியத்துக்கான தூமமாக்குதலின் போது தொழிநுட்ப உதவி

பின்வரும் அரச பண்ணைகளில் களஞ்சியப் பீடை கட்டுப்பாட்டுக்கென 898.4 மெற்றிக்தொன் விதைப் பதார்த்தங்கள் தூமமிடப்பட்டன. (அம்பலாந்தோட்டை, பெல்வெஹெர, பொலன்நறுவை, கந்தளாய் முருங்கன், கிளிநொச்சி, மகா இலுப்பள்ளமை, நிகவரெட்டிய,

அலுத்தரம) விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்தின் பண்ணைகளில் சேவையாற்றும் 140 அலுவலர்களுக்கு தூமமாக்கலின் வினைத்திறனை மேம்பாடு செய்யவென "களஞ்சியப் பீடை முகாமைத்துவம்" எனும் தலைப்பில் பயிற்சியளிக்கப்பட்டது. விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க காணி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு வீட்டுப் பீடைகளின் கட்டுப்பாடு எனும் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

### விவசாயத் திணைக்கள சுற்றுச் சூழல்களில் கறையான் முகாமைத்துவத்துக்கான தொழிநுட்ப வழிகாட்டல்

கறையான்களின் முகாமைத்துவம் எனும் தலைப்பில் மூன்று பயிற்சி நிகழ்ச்சிகள் கன்னொறுவை, மகா இலுப்பள்ளம மற்றும் அங்குணகொலபலஸ்ஸ ஆகிய இடங்களில் நடாத்தப்பட்டன. விவசாயத் திணைக்களத்தின் வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்த 140 அலுவலர்கள் பங்குபற்றினர்.

### நெல் வயல்களில் எலி முகாமைத்துவத்துக்கான தொழிநுட்ப வழிகாட்டல்

கண்டி மாவட்டத்திலுள்ள வயல்களில் எலிகளை முகாமைத்துவம் செய்யவென 20 விவசாயத் திணைக்கள அலுவலர்கள் மற்றும் 303 விவசாயிகள் பயிற்சியளிக்கப்பட்டனர்.

### ஆக்கிரமிப்புக்குரிய களைகளின் கட்டுபாட்டில் தொழிநுட்ப உதவி

ஆக்கிரமிப்புக்குரிய களைகளான பார்த்தீனியம் (Parthenium hetorphorus) அலிகேட்டர் (Atlternanthera philoxeroides) இராட்சத தொட்டாச் சிணுங்கி (Mimosa pigra) நாயுண்ணி (Lantana camara) மற்றும் அருணதேவி ஆகியவற்றின் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களில் பல பகுதிகளிலும் தொழிநுட்ப ரீதியாக உதவப்பட்டது. 2013ல் மிகவும் தெளிவான ஒரு சம்பவமாக 75 ஹெக்ரயர் பார்த்தீனியம் வடமாகாணத்தில் கட்டுப்படுதப்பட்டமை அமைகிறது. 300 பதாதைகளும் 1000 துண்டுப் பிரசுரங்களும் கண்காட்சிகளின் போது பகிர்ந்தளிக்கப்பட்டன.

### அபாயத்துக்குரிய விவசாயப் பீடைப் பிரச்சினைகளை முகாமைத்துவம் செய்ய தொழிநுட்ப வழிகாட்டல்

கேகாலை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் மஞ்சட் புள்ளி வெட்டுக்கிளி (Aularches miliaris) யினுடைய கட்டுப்பாட்டு நிகழ்சிகள் மூன்றிற்கு தொழிநுட்ப ரீதியாக வழிகாட்டப்பட்டது. வடமேல் மாகாணத்தில் கொய்யா வேர் முடிச்சு நெமற்றோடு மற்றும் பப்பாசி வெண் மூட்டுப் பூச்சி என்பவற்றின் முகாமைத்துவம் தொடர்பில் 150 விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

### பீடைக் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்

எல்லா மாவட்டங்களிலும் நெல்லில் பீடைத் தாக்கம் தொடர்பில் விரிவாக்க உத்தியோகத்தர் களிமிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டு வரைபு ரீதியான முன்வைத்தல் சாராம்சம் ஒன்று தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டது. பின்னர் அவர்கள் மத்தியில் அவை பகிர்ந்தளிக்கப் பட்டன. இதற்கு மேலதிகமாக வானொலிகளில் குறுந்தகவல்கள் மூலம் அடிக்கடி தற்போதுள்ள பீடை நிலவரம் தொடர்பில் ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

### மூலிகைப் பீடைநாசினிகளின் பாவனையை மேம்படுத்தல்

தொகுப்புக்குரிய பீடைநாசினிகளின் உயர்ந்தளவிலான பாவனைக்கு ஒரு மாற்றுவழியாக மூலிகைப் பீடை நாசினிகளின் பாவனையை மேம்படுத்துமுகமாக வெவ்வேறு மாவட்டங்களின் 1600 விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது.

### புனித வெள்ளரசு மரங்களினது நோய் / பீடைக் கட்டுப்பாடு

கறையான், பங்கசு நோய்கள் போன்ற நோய் பீடைகளிலிருந்து பாதுகாக்கவென பல்வேறு வரலாற்றுக் கோயில்களுக்கு சொந்தமான ஒன்பது மரங்கள் பரிகரிப்புச் செய்யப்பட்டன.

### கண்காட்சிகள்

அம்பாறையில் நடைபெற்ற தேசத்துக்கு மகுடம் மற்றும் வாரியப்பொலவில் நடைபெற்ற விவசாயிகள் வாரம் ஆகிய கண்காட்சிகளின் போது PPS இனால் சூழல் நேயமான பீடை முகாமைத்துவ தொழிநுட்பங்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் பொது மக்களுக்கு பிரயோக ரீதியாக செய்து காட்டப்பட்டன.

## 2014 ம் ஆண்டுக்கான திட்டம்

- 1999ம் ஆண்டு 35ம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்
- நிரந்தரப் பயிர்ச் சிகிச்சை நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்தல்
- நெல், மரக்கறிகள் மற்றும் இலை மரக்கறிகளுக்கு ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம் (IPM) மற்றும் சிறந்த விவசாய நடவடிக்கைகள் (GAP) என்பவற்றைப் பிரபல்யப்படுத்தல்
- களை நாசினிகளின் பரீட்சார்ந்த மட்ட பரிசோதிப்புக்கள்
- நீரியல் களைகளுக்கான உயிரியல் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்
- விவசாயத் திணைக்கள விதைக் களஞ்சியப் பண்ணைகளுக்கு தூமமிடலில் தொழிநுட்ப உதவி
- விவசாயத் திணைக்கள அலுவலகங்களின் சுற்றுச் சூழலில் கறையான்களை முகாமைத்துவம் செய்ய தொழிநுட்ப வழிகாட்டல்
- நெல் வயல்களில் எலிகளை முகாமைத்துவம் செய்ய தொழிநுட்ப வழிகாட்டல்
- ஆக்கிரமிப்புக்குரிய களைகளைக் கட்டுப்படுத்த தொழிநுட்ப வழிகாட்டல்கள்
- அபாயகரமான விவசாயப் பீடைப் பிரச்சனைகளை முகாமைத்துவம் செய்ய தொழிநுட்ப வழிகாட்டல்
- பீடைக் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்தல்
- மூலிகைப் பீடை நாசினிகளின் பாவனையை பிரபல்யப்படுத்தல்
- புனித அரச மரங்களின் நோய் பீடைக் கட்டுப்பாடு
- விவசாயக் கண்காட்சிகளில் உயிர்ப்பான பங்கேற்றல்

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பிரதிப் பணிப்பாளர் | 01 |
| ஆராய்ச்சி அலுவலர் | 02 |
| விவசாய உத்தியோகத்தர் | 04 |
| நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | 03 |
| விவசாயப் போதனாசிரியர் | 08 |
| பொது முகாமைத்துவ உதவியாளர் | 04 |
| சாரதி | 04 |
| தொழிலாளி | 05 |
| துப்பரவுத் தொழிலாளி | 01 |
| பார ஊர்தி நடத்துனர் | 01 |
| **மொத்தம்** | **33** |

## 2.1.3 பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலகம் (ROP) பேராதனை

பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலகத்தின் முக்கிய பொறுப்பு 1980 ஆண்டின் 33 ஆம் இலக்க பீடை நாசினிகள் தடுப்புச் சட்டத்தை அமுல்படுலதாகும். மனித சுகாதாரத்தையும் சுற்றாடலையும் பாதுகாக்கும் சேர்த்தி நோக்கங்களை அடையுமுகமாக பதிவு மற்றும் பின்பதிவுடன் தொடர்புடைய செயற்பாடுகள் குறிப்பிடத்தக்க வகையில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. பீடை நாசினி உற்பத்திகளின் தனித்துவமான அடையாளம் மற்றும் அவற்றின் பதிவுகள் ஆகியவற்றை கையகப்படுத்துவதன் மூலம் ஓர் புதிய பதிவு இலக்க முறை அறிமுகப்படுத்தப்பட்டு பதிவுகளின் சட்டச் செயன்முறைகள் ஓர் பலமான நிலைக்கு கொண்டு வரப்பட்டன. பீடை நாசினிகள் பதிவுச் சட்டத்தின் கீழ் பீடை நாசினிகளின் சட்டரீதியான பதிவுகள் வினைத்திறனாக நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் சட்டத்திற்குப் புறம்பான பீடை நாசினி உற்பத்திகளும் சந்தைகளில் பாரிய அளவில் அறிமுகப்படுத்தப்பட்டு பாவனையில் உள்ளன. கடந்த 10 வருடங்களாக ROP ஆனது சர்வதேச பாரம்பரியங்களுடன் இணைந்து கொண்டு கடுமையான நச்சுத் தன்மையுடைய பீடை நாசினிகளின் பாவனையை தடுத்து வருகின்றது. இதற்காக இது தொடர்பான அதிகாரிகளுடன் இணைந்து கடுமையான சட்ட திட்டங்களுடன் கூடிய பல்வேறு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக விவசாய சமூகத்தின் நன்மை கருதி அவர்களை பாரிய ஆபத்தில் இருந்து பாதுகாக்கும் நோக்குடன் 4 பீடை நாசினி உற்பத்திகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ROP இன் ஆய்வு கூடமானது பீடை நாசினிகளின் தரக் கட்டுப்பாடு அடங்கலாக பின்பதிவு மற்றும் கண்காணிப்பு செயற்பாடுகள் ஆகியவற்றில் முழு ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றது. இவ்வருடத்தில் இவ்வாய்வு கூடமானது குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தப்பட்டது. இதில் முக்கிய பகுப்பாய்வு உபகரணம் மற்றும் பீடை நாசினிகளின் தரநிர்ணய உபகரணங்கள் என்பவை அடங்கும். அத்துடன் முழு ஆய்வு கூடச் செயற் செயற்பாடுகளும் இலங்கை அதிகாரமளிப்பு சபையின் ஆலோசனையுடன் (ISO - 17025: 2005) ஆய்வுகூட அதிகாரத் தொகுதித் தேவைக்கு ஏற்பவும் சர்வதேச தர நிர்ணயத்திற்கு ஏற்பவும் தரமுயர்த்தப்பட்டுள்ளன.

நாள் கடந்த பாவனைக்கு உதவாத பீடை நாசினிகளின் இருப்பு குறிப்பிடத்தக்களவு காணப்படுவதோடு அவற்றை சூழல் நிலைபேறான தன்மைக்கேற்ப அகற்றுவதற்குரிய முயற்சி எடுக்க வேண்டிய தேவையும் காணப்படுகின்றது.

## பாதீடு

**அட்டவணை 2.1.3.1 வருடாந்தப் பாதீடு – 2013 (ரூபாய்)**

| செலவுத்தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு% | வருமானம் |
|---|---|---|---|---|
| மூலதனச் செலவு | 2,020,000 | 1,978,989 | 98 | |
| நடைமுறைச் செலவு | 2,960,000 | 2,703,463 | 91 | |
| பதிவு மற்றும் மீள் பதிவுக் கட்டணங்கள் | | | | 3,565,900 |
| வர்த்தகர் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கட்டணம் | | | | 719,400 |
| பீடைக் கட்டுப்பாட்டு சேவைப் பதிவு கட்டணங்கள் | | | | 140,000 |
| பீடைக் கட்டுப்பாட்டு சேவை மீள்ப்புதுப்பித்தல் கட்டணங்கள் | | | | 105,000 |
| **மொத்தம்** | **4,980,000** | **4,682,482** | **94** | **4,530,300** |

## முன்னேற்றம்

| வகை | துணைச் செயற்பாடுகள் | மொத்த வருடாந்த பௌதிக இலக்கு | அடைவுகள் வருட இறுதி வரை | % |
|---|---|---|---|---|
| 01. | தெரிவின் பின்னர் பதிவு விண்ணங்பங்களை ஏற்றுக் கொள்ளல் மற்றும் விண்ணப்ப இலக்கங்களை ஒதுக்கீடு செய்தல் | 150 | 99 | 66 |
| 02. | மூலப்பதிவு விண்ணப்பங்களின் மதிப்பீடு | 30 | 68 | 227 |
| 03. | மூன்றாம் நபர் பதிவு விண்ணப்பங்களின் மதிபபீடு | 140 | 149 | 106 |
| 04. | மீள்பதிவு விண்ணப்பங்களின் மதிபபீடு | 140 | 116 | 83 |
| 05. | உள்ளுர் பரிசோதனை தரவுகளின் மதிப்பீடு | 30 | 49 | 163 |
| 06. | இறக்குமதி அனுமதிகளை வழங்குதல் | 1400 | 1069 | 76 |
| 07. | பீடை நாசினி தரச் சான்றிதழ்களின் மதிப்பீடு | 1400 | 402 | 29 |
| 08. | அனுமதிக்குரிய விளக்கச் சுட்டிகளின் தெரிவு | 750 | 327 | 124 |
| 09. | அனுமதிக்குரிய விளம்பரப் பொருட்களை தெரிவு செய்தல் | 250 | 226 | 90 |
| 10. | தொழிற்சாலைகளைப் பரிசோதித்தல் | 12 | 4 | 33 |
| 11. | அனுமதி வழங்கப்பட்ட மீள பொதியிடல் வசதிகள் மற்றும் களஞ்சியசாலைகளைப் பரிசோதித்தல் | 02 | 0 | 0 |
| 12. | வீட்டுப் பாவனை பீடைத் தடுப்புப் பதார்த்தம் மற்றும் புகையூட்டல் அகங்களின் பரிசோதனையும் அத்தாட்சிப்படுத்தலும் | 30 | 13 | 43 |
| 13. | பீடைக் கட்டுப்பாட்டுச் சேவைகளின் பதிவு | 30 | 30 | 100 |
| 14. | காரணம் காட்ட வேண்டிய அடிப்படையில் தாவரத் தடுப்புக் காப்பு மற்றும் கப்பலில் இறக்க முன்பான | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பரிகரணத்திற்குரிய $CH_3Br$ பெறுவதற்கான அனுமதி | 60 | 126 | 210 |
| 15. | விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்குரிய பொருத்தத் தன்மைகான சோதனை அறிக்கையைப் பெறுவதற்காக MRI மற்றும் ITI ஆகியவற்றுக்கு மாதிரிகளை அனுப்புதல் | 25 | 17 | 68 |
| 16. | அனுமதி வழங்கப்பட்ட அடிப்படையில் மாதிரிகளுக்குரிய தரப் பகுப்பாய்வின் பொதி தடை நீக்கத்தை வழங்குதல் | 800 | 330 | 41 |
| 17. | விற்பனை நிலையங்களின் சோதனை | 140 | 138 | 99 |
| 18. | பீடை நாசினிகள், உயிர் கொல்லிகள் போன்றவற்றிக்குரிய திருத்தியமைக்கப்பட்ட வழிகாட்டிகளின் வெளியீடு மற்றும் புதிய பீடைநாசினி இறக்குமதியாளர்களுக்கான வழிகாட்டிகள் | 02 | 02 | 100 |
| 19. | ஊடக நிகழ்சசிகள் (TV/ வானொலி / அச்சு) | 12 | 08 | 67 |
| 20. | பயிற்சி / விவசாய இரசாயன விற்பனைகளுக்காக அத்தாட்சிப்படுத்தல் மற்றும் தொழில்நுட்ப உதவி | 750 | 565 | 75 |
| 21. | விழிப்புணர்வுக் கண்காட்சிகள் | 3 | 07 | 233 |
| 22. | வர்த்தகர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் | 15 | 23 | 153 |
| 23. | வர்த்தகர் பயிற்சி அத்தாட்சிப் பத்திரங்களின் வழங்கல் | 450 | 624 | 139 |
| 24. | வர்த்தகர் அத்தாட்சிப் பத்திரங்களின் வழங்கல் | 2000 | 1308 | 65 |
| 25. | கள முறைப்பாடுகள் | 06 | 15 | 250 |
| 26. | சட்ட ரீதியான முறைப்பாடுகள் | 04 | 01 | 25 |
| 27. | தொழில்நுட்ப ஆலோவனைக் குழுக் கூட்டம் | 06 | 06 | 100 |
| 28. | PeTAC முடிவுகளை அறிவிப்பதற்குரிய கைத்தொழில் பிரதிநிதிகளுடனான சந்திப்பு | 06 | 02 | 33 |
| 29. | பீடை நாசினி உபகுழு கூட்டம் (3உபகுழுக்கள்) | 18 | 11 | 61 |
| 30. | சூத்திரப் பகுப்பாய்வு | 800 | 914 | 114 |
| 31. | பீடை நாசினிகளிலுள்ள மாசுக்களுக்கான எழுந்தமான சோதனை | 12 | 05 | 42 |
| 32. | வெற்றுக் கொள்கலன்களை அகற்றுவது தொடர்பான அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்தல் நிகழ்ச்சிகள் | 02 | 02 | 100 |
| 33. | திணைக்களங்கள் மற்றும் திணைக்களங்களிடையே ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்களில் தொழில்நுட்ப வல்லுநர் / வளவாளர் / உறுப்பினராக கலந்து கொண்டமை / சேவை வழங்கியமை | 33 | 41 | 124 |
| 34. | ஏனைய நிறுவனங்களில் இருந்து கிடைத்த அழைப்புக்களுக்கு ஏற்ப வளவாளராகக் கலந்து கொண்டமை | 10 | 25 | 250 |
| 35. | இறக்குமதி புள்ளி விபரம் சேகரித்தல், ஒன்று சேர்த்தல் மற்றும் பரம்பல் (மத்திய வங்கி, பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சி நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் etc….) | 40 | 12 | 30 |
| 36. | கள ஆய்வு போன்ற ஏனைய செயற்பாடுகள் | 40 | 01 | 25 |

## பீடை நாசினிகளின் பதிவு

### பதிவுகளின் தன்மை

அறுபத்தி எட்டு பதிவு விண்ணப்பங்கள் 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிறைவேற்றப் பட்டுள்ளன. இச் செயற்பாட்டின் போது பதிவு கோரியோரால் சமர்பிக்கப்பட்டவற்றின் உரிய தகவல்களும், ஆவணங்களும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 2013ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்படி செயற்பாட்டின் ஊடாக ரூபாய் 3,565,900.00 வருமானமாகப் பெறப்பட்டுள்ளது. பீடை நாசினிகளைப் பதிவு செய்வதற்குரிய கட்டணத்தை அதிகரிப்பதற்குரிய முன் மொழிவு ஒன்று விவசாய அமைச்சின் ஊடாக சட்ட உருவாக்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பீடை நாசினிகள் கட்டுப்பாட்டுச் சட்ட இலக்கம் 33 (1980) ற்கு இணங்க பீடை நாசினிகள் பதிவாளர் இயற்கையில் நிலைத்து நிற்கும் தன்மையற்ற உயர்ப்பான ஆக்கக் கூறுகளையுடைய அனைத்துப் பீடை நாசினிகளையும், பீடை நாசினி உற்பத்திகளின் உள்ளடக்கங்களையும் கட்டாயமாகப் பதிதல் வேண்டும். தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள உற்பத்திகளை ஒத்த அல்லது அதற்கு கிட்டதட்ட ஒரே தன்மையைக் கொண்ட பீடை நாசினி சூத்திரங்களின் விண்ணப்பங்கள் மூலம் பதிவுக்ககுரியவர்களின் ஒத்தாசையுடன் பிரத்தியேகமாகப் பதியப்பட்டுள்ளது. இப்பதிவுச் செயற்பாடானது “மூன்றாம் நபர் பதிவு” என அழைக்கப் படுகின்றது. மேற்படிசெயன்முறையில் காணப்படுகின்ற சட்ட சொற்பிரயோகங்கள் காரணமாக மூன்றாம் நபர் பதிவுக்கரிய விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளுதல் 2013ஆம் ஆண்டு ஏப்ரலில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் அனைத்து விண்ணப்பங்களையும் மூலச் சமர்ப்பித்தல்களாக கருதுவதற்குரிய முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்களின் நம்பகத் தன்மையானது விண்ணப்பித்தவர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே பேணப்படுகின்றது. 2013 ஜுன் மாதத்தில் இருந்து உற்பத்திகளின் தனித்துவத்தை இலகுவாக அடையாளம் காணும் வகையில் ஒரு புதிய இலக்கமிடல் முறை அறிமுகப்படுத்தபட்டுள்ளது.

நுகர்வோரின் பாதுகாப்பு மற்றும் உற்பத்திகளின் செயற்றிறன் ஆகியவற்றுக்காக பீடை நாசினிகளின் தரம், பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் தனித்துவத் தன்மை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் அறிக்கைகள் அவற்றின் பதிவின் போது மதிப்பிடப்படுகின்றன. மேற்படி பதிவுச் சட்டத்தின் கீழ் தெளிவானதும், மூன்று மொழிகளிலும் உற்பத்தியின் விளக்கச் சுட்டிகளை கொண்டிருத்தலையும் மேலதிக சட்டத் தேவைகளாகக் கருதப்படுகின்றது. பீடை நாசினி கட்டுப்பாட்டுச் சட்ட திட்டங்களின் மேற்பார்வையின் ஊடாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து உற்பத்திகளும் முக்கிய தகவல்களைக் கொண்டிராமை மற்றும் வினைத்திறன் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான விடயங்களில் பெரும்பாலான சந்தர்ப்பங்களின் தவறாக வழிநடத்தும் தகவல்களைக் கொண்டிருந்தமையும் காணப்பட்டது. எனவே மனச் சாட்சியற்ற விற்பனையாளர்களின் நடவடிக்கைகள் காரணமாக சாதாரண பொது மக்கள் பாரதூரமான ஆபத்துக்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. பீடை நாசினி பதிவின் போது பீடை நாசினிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை பீடை நாசினிகள் பதிவாளர் நாயகம் எடுத்து வருகின்றார். பீடை நாசினிகளின் பதிவை எதிர்ப்பினைக் குறைக்கும் வகையில் மாற்றி அமைத்தல், முடிவெடுத்தல் மற்றும் நிபுணத்துவமடைதல் ஆகியவற்றில் பீடை நாசினிகளுடன் தொடர்புடைய அமைச்சுக்கள், நிறுவனங்களின் பரந்த அளவிலான பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளல் போன்றவற்றின் ஊடாக ஆலோசனைகள் பீடை நாசினிகளின் பதிவுக்கு முன்னர் பெறப்பட்டன. பீடை நாசினிகளின் Dermal பிரயோகமானது அழகு சாதனங்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையினால் (CDDA) ஆலோசனைக்குட் படுத்தப்பட்டன. அதேவேளை உணவுப் பொருட்களை பதப்படுத்தும் பிரிவுகளில் பயன்படுத்தப்படுகின்ற பீடை நாசினிகள் மற்றும்

மிருக வைத்திய துறையில் பயன்படுத்தப்படுகின்ற பீடை நாசினிகள் முறையே சுகாதார அமைச்சின் உணவு சீராக்கல் ஆணைக்குழு மற்றும் கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள அமைச்சின் மிருக வைத்திய மருந்துப் பொருட்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை (VCDA) ஆகியவற்றிலும் ஆலோசனைக்கு உட்படுத்தப் பட்டன.

Dermal பிரயோகத்திற்காக தயாரிக்கப்பட்ட சில பீடை நாசினிகள் சட்டத் தேவைக்கு ஏற்ப CDDA இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுடன் அத்தாட்சிப்படுத்திரமும் வழங்கப்பட்டுள்ளது. மிருக வைத்தியத் துறைக்குரிய மருந்துப் பொருட்கள் VDCA இன் கீழ் பிரத்தியேகமாகப் பதிவு செய்யப்பட்டு அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப் பட்டுள்ளது. பூர்த்தி செய்யப்பட வேண்டிய பதிவுத் திட்டங்கள் 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடை நாசினிக் கட்டுப்பாட்டு சட்டத் தேவைக்குரியவையாகக் கருதப்படவில்லை. மேலும் 2013 மே மாதம் பீடை நாசினி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் படி சட்டத் தேவைகளில் இருந்து விலகுவதற்குரிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. இச்சட்டமானது ஏற்றுமதி இறக்குமதித் திணைக்களம் மற்றும் ஏனைய தொடர்புடைய அதிகார சபைகள் ஆகியவற்றின் ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாடுகளின் கடுமையான சம்மதங்களின் ஆலோசனைக்கமைய இடம் பெற்றது.

## புதிய மூலக்கூறுகளின் உற்பத்தி மதிப்பீடு மற்றும் பதிவு

பாதுகாப்பான மற்றும் சூழல் நேயமுடைய பீடை நாசினிகள் அடையாளங் காணப்பட்டு மேம்படுத்தப்பட்டது. இது உள்ளூர் செய்து காட்டல்களுக்குரிய உற்பத்திகளின் முன் மதிப்பீட்டின் போது இடம் பெற்றது. இது சந்தைகளில் காணப்படுகின்ற தீங்கு விளைக்கக்கூடிய உற்பத்திகளை அகற்றுவதனை வசதிப் படுத்துவதற்குரிய வகையில் இடம் பெற்றது. இந்த வருடத்தில் 4 விவசாயச் சூத்திரங்கள் மதிப்பிடப்பட்டன. அத்துடன் ஒரு உற்பத்தியானது பின்வரும் பயிர் பீடை வகுப்புகளின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

புறுரறியபோல் 25% SC :- வாழையில் சிக்கிரோக்கா இலை புள்ளி நோய் மற்றும் சுக்கினியில் ஏற்படுகின்ற தூள் பூஞ்சணம் ஆகியவற்றுக்குரிய ஓர் பங்கசு நாசினி ஆகும்.

## அதிக ஆபத்துடைய பீடை நாசினிகளை அகற்றுதல்

பீடை நாசினிகள் தொழில்நுட்பம் மற்றும் ஆலோசனை சபை (PTAC) யின் ஆலோசனைக்கு ஏற்ப பாரம்பரியமான 4 பீடை நாசினிகளின் இறக்குமதியைத் தற்காலிகமாக இடைநிறுத்து வதற்குரிய சட்டவாக்க முடிவுகள் எடுக்கப்பட்டன. அப்பீடை நாசினிகளாவன குளோரிபைபொறில், கார்பைறில், கார்போபிபுரான் மற்றும் புறப்பனில் என்பன ஆகும். இவை மனித சுகாதாரத்திற்கு பாரிய தீங்கை ஏற்படுத்தக் கூடியன ஆகும். தற்போது நிலவுகின்ற அதிகளவான விளம்பரம் மற்றும் அதீத பாவனை ஆகியவற்றின் காரணமாக இவற்றின் நச்சுத்தன்மையின் அளவு தொடர்பில் மேற்படி முடிவை ஆலோசனைக் குழுவானது கவனத்தில் எடுத்துள்ளது.

## பீடை நாசினிகளின் சட்ட ரீதியற்ற இறக்குமதி மீது கடுமையான கண்காணிப்பு

அனைத்து இறக்குமதி வேண்டுகோள்களும் அனுப்பப்பட்ட பொருட்களின் அடிப்படையில் பீடை நாசினிகள் பதிவாளரினால் கட்டாயமாக முன் அனுமதி வழங்கப்படல் வேண்டும். நாட்டின் பாதுகாப்பு மற்றும் உற்பத்திகளின் அடைவு ஆகியவற்றுக்காக பீடை நாசினிகளின் பாதுகாப்பு தொடர்பில் நிரூபிக்கப்பட்ட அறிக்கைகள், தரம், செயற்றிறன் மற்றும் உற்பத்திகளின் தனித்துவம் என்பன பதிவின் போது மதிப்பிடப்படுகின்றன. சந்தைப்படுத்துவதற்கு முன்பு உற்பத்திகளின் பாதுகாப்பு மற்றும் பயன்பாடு தொடர்பில் நுகர்வோர் தெளிவு பெறும் வகையில் உற்பத்திகளில் இடப்படுகின்ற விளக்கச்சுட்டிகள்

தெளிவுடையதாகவும் சுருக்கத்தன்மை உடையதாகவும் மூன்று மொழிகளிலும் காணப்படுவதையும் உறுதி செய்தல் மேலதிக செயற்பாடுகள் ஆகும். பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலகமானது 2013 ஜுன் மாத காலப் பகுதியில் பின்வரும் மூன்று தொகுதிகளின் கீழ் பீடை நாசினிகளின் முழுமையான பட்டியலை வழங்கியது. அம்மூன்று வகையும் வருமாறு: பதிவு செய்யப்பட்ட பீடை நாசினிகள், தடை செய்யப்பட்ட பீடை நாசினிகள் மற்றும் கண்காணிப்புப் பட்டடியல் (Watch list) என அழைக்கப்படுகின்ற இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆனால் 2013 ஜுன் இல் உயிர்ப்பான பதிவு நிலையைக் கொண்டிராத பீடை நாசினிகள் என்பன ஆகும். ஏற்றுமதி மற்றும் இறக்கமதிச் செயன்முறைகளின் போது தேர்வு மற்றும் சுங்கப் பதிவு ஆகியவற்றை எளிதாக்கும் வகையில் இது ஏற்றுமதி மற்றும் இறக்கமதி கட்டுப்பாட்டு பகுதியினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## பீடை நாசினிகளின் மீள் பதிவு

உற்பத்தி ஒன்றின் பதிவானது மூன்று வருடங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகின்றது. அதன் பின்பு அவற்றின் புதிய நியமங்கள், கண்டுபிடிப்புக்கள் மற்றும் பாதுகாப்பு நிலவரம் ஆகியவற்றின் அடிப்படையில் அவை மீளவும் மதிப்பிடப்படுகின்றன. இந்நோக்கத்திற்காக இவ்வருடம் 116 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டன. இச் செயற் திட்டத்தின் மூலம் மொத்த வருமானமாக 580,000.00 ரூபாய் வருமானமாகப் பெறப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் புதிதாகப் பிறப்பிக்கப்பட்ட நச்சுத் தன்மை மற்றும் உற்பத்திகளின் தரப்பரிசோதனைகளின் உதவியுடன் உற்பத்திகளின் பாதுகாப்பு, தரம், மற்றும் அவற்றின் செயற்றிறன் தொடர்பில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**அட்டவணை 2.1.3.2 ~ 2013 ஆண்டு கால பகுதியில் பதிவுக்கு உட்படுத்தப்பட்ட பீடை நாசினிகளின் மதிப்பீட்டின் முழுமையான விபரம்**

| வகை | மீள்பதிவின் நிலை | எண்ணிக்கை |
|---|---|---|
| புதிய பீடை நாசினிகள் | மதிப்பீடு நிறைவேற்றம் | 10 |
| | வழங்கப்பட்ட பதிவு | 07 |
| பாரம்பரிய பீடைநாசினிகள் | மதிப்பீடு நிறைவேற்றம் | 64 |
| | பதிவு செய்யப்பட்ட மாற்று மூலங்கள் | 46 |
| | பதிவு செய்யப்பட்ட புதிய சூத்திரங்கள் | 02 |
| | விளக்கச் சுட்டி விரிவாக்கல் பதிவு | 07 |

## பகுப்பாய்வு ஆய்வுகூடத்தின் தொழிற்பாடுகள்.

பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலகத்தின் பகுப்பாய்வு ஆய்வு கூடமானது இலங்கையில் பீடை நாசினிகள் முகாமைத்துவத்தில் சம்மதிக்கப்பட்ட கண்காணிப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. 1980 ஆம் ஆண்டு சட்ட நோக்குடனான பீடை நாசினிகள் கட்டுப்பாட்டுச் சட்ட இலக்கம் 33 இன் (19.06.2003 திகதி அரச விசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 1293/ 21 இன் படி) அதிகாரத்தின் கீழ் உள்ள ஓர் ஆய்வு கூடம் ஆகும். அத்துடன் இது வெளி நிறுவனங்களுக்கும் தனது சேவையை வழங்கி வருகின்றது. உதாரணம் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்றவற்றின் வேண்டுகோள்களுக்கு ஏற்ப ஆகும். சர்வதேச ஆய்வுகூட நியமங்களின் அனுமதிகளை நோக்கிய அடிப்படையிலேயே ஆய்வு கூடத்தின் முகாமைத்துவ உறுதியாக்கல் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. ISO - 1705-2005 ஆய்வுகூட அனுமதியைப் பெறுவதற்காக இலங்கை அனுமதி

வழங்கும் சபையிடம் 2013 ஒக்ரோபரில் ஓர் விண்ணப்பம் ஒப்படைக்கப்பட்டது.

### பின்வரும் நோக்கங்களின் தேவை அடிப்படையிலான செயன்முறைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

- சோதனை முறை விருத்தி GC மற்றும் HPLC மூலம் முக்கிய பீடை நாசினிச் சூத்திரங்களை உறுதிப்படுத்துதல்
- GC மற்றும் GC-MS மூலம் குளோபைறிபொஸ் டயசினோன், மற்றும் ரிபறோ பெனோபொஸ் ஆகியவற்றின் மீதிகள் நீரில் காணப்படுவதற்குரிய பரிசோதனை. மரக்கறிகள் மற்றும் பழங்கள் ஆகியவற்றில் பீடை நாசினிகளின் மீதிகளின் இருக்கையைக் கண்ட வறிவதற்குரிய QuChERS முறைப் பரிசோதனை, GC மற்றும் HPLC முறை மூலம்
- பீடை நாசினி சூத்திரங்கள் மற்றும் சூழல் மாதிரிகள் ஆகியவற்றில் பார உலோகங்களின் இருக்கையைக் கண்டறிவதற்குரிய ICP-MS முறை மூலப் பரிசோதனை

### இவ்வருடத்தில் வெற்றிகரமான அம்சங்களைக் கொண்ட முக்கிய நிகழ்ச்சிகள்

- ஆய்வுகூடத்திற்குரிய உபகரணங்களையும் சாதனங்களையும் பெற்றுக் கொள்ளல்.

a. பார உலோகங்களைப் பகுப்பாய்வு செய்வதற்குரிய பிளாஸ்மாவோடு நெருங்கிப் பிணைந்துள்ள ஒளித்திருசியமானி (ICP-MS)
b. மையநீக்கல் உபகரணம்
c. ஒளித் திருசிய மானி
d. சயனைட் பகுப்பாய்வுக்குரிய மின்வாய்க ளுடன் கூடிய கடத்து திறன் மானி
e. ஈரப்பதன் மானி
f. உயர் இழிவு வெப்பமானிகள்

- GC மற்றும் HPLC ஆகிய முறைகளைப் பயன்படுத்தி பின்வரும் பீடை நாசினிகளுக்குரிய பீடை நாசினிச் சூத்திரப் பகுப்பாய்வு

a. குளோபைறிபொஸ்
b. கார்போபியுரான்
c. கிளைப்போசற்
d. பிஸ்பைறிபக் - சோடியம்
e. குளோரோதலோனில்
f. காபோசல்பான்

- பௌதீக மற்றும் இரசாயன இயல்புகளுக்காக பீடை நாசினிச் சூத்திரங்களின் பகுப்பாய்வு

a. இமல்சன் (Emulsion) உறுதித் தன்மை
b. உறுதித் தன்மை வடிவமைப்பு
c. ஈரமாகும் தன்மை(Wettability)
d. pH
e. அடர்த்தி / சாரடர்த்தி

### கள அமுலாக்கம்

பீடை நாசினி விநியோகஸ்த்தர்களை அத்தாட்சிப்படுத்தல் திட்டத்தினை அமுல் படுத்துவதற்கு மாகாண, மாகாண இடைப் பிரதேச மற்றும் மகாவலி அதிகாரசபை கள அமுலாக்கல் அதிகாரிகளுடன் இணைந்து பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலகம் உரிய நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. இத்திட்டத்தின் மூலம் 719,000.00 ரூபாய் வருமானமாகக் கிடைத்தது. இவ்வருடம் பீடை நாசினி விநியோகஸ்த்தர்களுக்குரிய 23 பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டன. அத்துடன் கலந்து கொண்ட 624 பேர் அத்தாட்சிப்படுத்தப்பட்டனர்.

### இறக்குமதி அனுமதிகள்

எமது நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்படுகின்ற பீடை நாசினிகள் 1980 ஆண்டின் 33ம் இலக்க பீடை நாசினிகள் கட்டுப்பாட்டு சட்டவாக்கத்துடன் தொடர்ர்டையதாகக் காணப்படுகின்றது. பீடை நாசினிகளை 3 மாத காலத்திற்குச் செல்லுபடியாகும்படி வழங்குகின்றார். சரியான மூலங்களின் இருந்து பெற்றுக் கொள்ளுதல், உரிய தரநிர்ணயங்களைக் கொண்டிருத்தல்,

அதிகளவில் இறக்குமதி செய்யப்படுவதைத் தடுத்தல் போன்றவற்றின் அடிப்படையில் நிறுவனங்களின் இறக்குமதி வேண்டுகோளுக்கு ஏற்ப இவ்வனுமதியானது பீடை நாசினி இறக்குமதிக்கு வழங்கப்படுகின்றது. மேற்படி நோக்கங்களை நிறைவேற்றும் அடிப்படையில் இவ்வருட காலப்பகுதியில் இறக்குமதியாளர் களால் சமர்பிக்கப்பட்ட 402 தர அத்தாட்சிப் பத்திரங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு இறக்குமதிக்கு முன்னரான அனுமதிகள் வழங்கப்பட்டன.

### விளக்கச் சுட்டிகள் மற்றும் விளம்பரப் பொருட்களைத் தேர்வு செய்தல்

விளக்கச்சுட்டிகளின் அனுமதிச் செயற்பாடானது இறுதிப் பயன்பாட்டாளர்களுக்கு உரிய தகவல்களைப் பரப்புவதற்கு மிகவும் உதவி புரிகின்றது. விளக்கச் சுட்டிகளின் உள்ளடக்கத்தை தரமுடையதாக மேம்படுத்தும் வகையில் அனைத்து விவசாயப் பீடை நாசினிகளுக்குமான விளக்கச் சுட்டி உருவாக்கத்திற்கு இச்செயற்பாடானது உதவி புரிகின்றது. இந்த வருட காலப் பகுதியில் 325ற்கும் அதிகமான விளக்கச் சுட்டிகள் மற்றும் 225 விளம்பரப் பதார்த்தங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இலங்கையில் பீடை நாசினிகளின் சந்தைகளில் வர்த்தக கொள்கைகளுக்கு ஏற்ப விளக்கச் சுட்டிகளின் அனுமதி வழங்கலில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்தும் குறிப்பிடத்தக்களவில் சிறப்பாக அமைந்திருந்தன.

### பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

பீடை நாசினிகளுடன் தொடர்புடைய வானொலி மற்றும் அச்சு ஊடக நிகழ்ச்சிகள் மூலம் பொதுமக்களுக்குரிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பல்வேறு நிகழ்வுகளின் போது மேற்கொள்ளப்பட்டன. விசேடமாக பீடை நாசினிகள் விற்பனை நிலையங்களுக்குரிய நபர்களை வேலைக்கு அமர்த்துவதில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய முறைகளாக இவை அமைந்திருந்தன.

### விவசாய இரசாயனங்களின் விற்பனைகள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக் குரிய பயிற்சி நிகழ்ச்சிகள் (ASTA)

தேசிய தொழில் பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA) யுடன் இணைந்து தேவையான பயிற்சிகளை நாடு முழுவதும் தொடர்வதற்காக விவசாய அமைச்சிடமிருந்து 2.13 மில்லியன் ரூபாய்கள் 2013 ஆம் வருட காலப் பகுதியில் அன்பளிப்பாகப் பெறப்பட்டது. கம்பகா, களுத்துறை, மொனராகலை, பதுளை, மாத்தளை, நுவரெலியா, காலி, கேகாலை, புத்தளம், மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் அடங்கலாக DOA மற்றும் NAITA ஆகியவற்றின் பிராந்திய அலுவலகங் களில் பயிற்சி வழங்குவதற்கு 2013 ஆண்டு காலப் பகுதியில் 8115 விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைகள் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். ஏற்கனவே சேர்த்துக் கொள்ளப்பட்ட 250 பேர் பயிற்சி நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நிறைவு செய்து இவ்வாண்டு வெளியேறிய அதேவேளை 565 புதிய விண்ணப்பதாரிகளுக்குரிய பயிற்சி நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

## விசேட நிகழ்ச்சிகள்

### கொறித்துண்ணி கொல்லிகளின் ஆபத்தைக் குறைத்தல்

கொறித்து உண்ணும் பிராணிகளைக் கொல்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற இரசாயனப் பதார்த்தங்கள் இயற்கையாகவே மனிதர்கள் அடங்கலாக இலக்கு அற்ற விலங்குகளில் மிகவும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்த வல்லன. கொறித்துண்ணி கொல்லிகளை சந்தைப்படுத்தல் மற்றும் பயன்படுத்தல் ஆகியவற்றின் போது தற்செயலாகத் திறந்து விடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற ஆபத்துக்களை போதுமான நடவடிக்கைகள் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம். இரண்டாவது சந்ததியில் ஏற்படுகின்ற உறைதல் எதிர்ப்புத் தன்மையுடன் தொடர்புடைய ஆபத்துக்களைக் கண்டறிவதன்

மூலம் பின்வரும் ஆபத்தைக் குறைக்கும் நடவடிக்கைகள் 2013ஆம் ஆண்டின் இறுதியில் சம்மதிக்கப்பட்டபடி அறிமுகப்படுத்தப்பட்டது.

- அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள நிலையங்களுக்கு மாத்திரம் விற்பனை மற்றும் விநியோகம் ஆகியவற்றை மட்டுப்படுத்தல்
- வீட்டுப் பாவனை மற்றும் அவற்றின் மிக அருகாமையில் உள்ளவற்றின் பாவனைக்கான இடை நிலையங்களின் தேவை
- அதிர்ச்சியைத் தாங்கும் பொதியாகக்ல்
- வெறுக்கத்தக்க பொருட்களின் கட்டாயச் சேர்க்கை

### பீடை நாசினிகளின் கொண்டு செல்கையைக் கட்டுப்படுத்துவதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகள்

1994 ஆண்டின் 06 ஆம் இலக்க திருத்தியமைக்கப்பட்டதும், 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடை நாசினிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் பீடை நாசினிகளின் கொண்டு செல்லல் ஆனது தலையாய கட்டாயமான செயற்பாடாக அடையாளம் காணப்பட்டுள்ளது. பீடை நாசினிகளின் கொண்டு செல்லலின் போது அதிகளவிலான பாதிப்புக்கள் காணப்படுவதற் குரிய சான்றுகள் காணப்படுகின்றது. அதேவேளை எமது நாடானது ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மேற்படி செயற்பாட்டுடன் தொடர்புடைய நடவடிக்கைகளிலும் சட்ட ரீதியான நடைமுறைகளிலும் பின் தங்கிய நிலையில் காணப்படுகின்றது. பீடை நாசினிகளின் கொண்டு செல்லலின் போது ஏற்படுகின்ற பாதகமான நிலமைகளைக் கவனத்திற் கொண்டு, போதுமான சட்டத்திட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை முன்மொழியும் நோக்கில் 2013ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பீடை நாசினிகள் தொழில்நுட்பம் மற்றும் ஆலோசனைக் குழுவின்கீழ் உப குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

### சுற்றாடல் அமுலாக்கல் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தல்

நாட்டின் மூன்று மாவட்டங்களைச் சேர்த்த (அனுராதபுரம், பொலநறுவை மற்றும் மாத்தளை) பொலிஸ் நிலையங்களில் சுற்றாடல் பிரிவில் கடமை புரியும் நிலையப் பொறுப்பதிகாரிகள் 55 பேருக்கு விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறை ஒன்றை பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலகம் ஒழுங்கு செய்தது. விற்பனை மற்றும் பயன்பாடு மூலமாக பீடை நாசினிகளால் சூழல் மாசடதலைக் குறைக்கும் நோக்குடன் இது இடம் பெற்றது. சட்டத்துடன் தொடர்புடைய குற்றச் செயல்களைப் புரிகின்றவர்களை கண்டறிவதற்கு தற்போது இந்த அலுவலகத்தில் காணப்படுகின்ற மனித வளமானது மிகவும் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றது. மேலும் தற்போது காணப்படுகின்ற சுற்றாடல் மாசுபடலானது மிகவும் தீவிரமாக காணப்படுவது பீடை நாசினிகளால்தான் ஏற்படுகின்றது என்பது உறுதியாகக் கூறக்கூடியதாகவுள்ளது. பிராந்திய அமுலாக்கல் நிகழ்ச்சிகளை வலுவாக்கி அதன் பிராந்திய அமுலாக்கல் அணியுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் செயற்பாடுகள் பலமுடையனவாக்கப்படலாம். பரிசோதனைகளை யும் ஆய்வுகளையும் தந்திரோபாய ரீதியலான இலக்காகக்குவதற்கு ஏற்ற நிலையில் ஆய்வாளர்கள் உள்ளனர் என்பதை நம்ப முடிகின்றது. அத்துடன் மேற்படி சட்டத்தின் கீழ் பிராந்திய அமுலாக்கல் அலுவலர்களுக்கு (i.e அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள்) சிறந்த ஒருங்கிணைப்பை வழங்குதல் மற்றும் அமுலாக்கல் செயற்பாடுகளை வினைத் திறனுடன் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றையும் செய்ய முடிகின்றது. சுற்றாடல் மற்றும் மீள் புதுப்பித்தல் சக்தி அமைச்சானது பயிற்சி பட்டறைக்கு தேவையான நிதி வசதிகளை வழங்கி பயிற்சிப் பட்டறைகள் சிறப்புடன் இடம் பெறுவதற்குரிய வசதிகளை ஏற்படுத்தியது.

### சட்டத்திற்குப் புறம்பான பீடை நாசினி விற்பனையுடன் தொடர்புடைய பிராந்திய விற்பனை நிலையங்களின் சோதனை

1980 ஆண்டு 33 ஆம் இலக்க பீடை நாசினிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் படி செல்லுபடியான அனுமதிப் பத்திரப் பதிவைப் பெற்றிராத நாட்டில் உள்ள அனைத்து உற்பத்திகள், சூத்திரங்கள், விற்பனை, மற்றும் பாவனைகள் அனைத்திற்கும் தடை விதிக்கப்படுகின்றது. அண்மைக் கால களச் சோதனைகளின் விளைவாக பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலகத்தின் அலுவலர்களால் சந்தையில் காணப்படுகின்ற சட்ட ரீதியற்ற பீடை நாசினிகள் அதிகளவில் கண்டறியப்பட்டுள்ளன.

சந்தைத் தகவல்களின் மூலம் சட்ட ரீதியற்ற பீடை நாசினி உற்பத்தியாளர்களின் நடவடிக்கைகளை முடக்குவதற்கு மேற்கொள்ளப் பட்ட அண்மைக் கால முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. சட்ட ரீதியாகப் பதிவு செய்யப்பட்டுள்ள பீடை நாசினிகளை ஒத்த போலியான பீடை நாசினிகளைக் கண்டறிவதில் பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலர்கள் கூடிய கவனம் எடுக்கின்றனர்.

கடந்த வருடங்கள் அடங்கலாக குறிப்பிடதக்க அளவில் அமுலாக்கம் செய்யப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குரிய உதாரணங்கள்:

- வெல்லவாயப் பிரதேசத்தில் உள்ள பீடை நாசினி விற்பளைனயாளர் ஒருவர் மொஸ்பிலான் (acetamiprit) எனப்படுகின்ற சட்ட ரீதியிலான உற்பத்தி ஒன்று விற்பனை செய்வது கண்டறியப்பட்டது. இது 2013 செப்ரம்பரில் இடம் பெற்றது. இது தொடர்பிலான மேலதிக ஆய்வுகள் இடம் பெற்ற வண்ணமுள்ளன.

- ஒக்ரோபர் 2013 இல் சட்ட ரீதியலான பீடை நாசினியான றவுண்டப் (கிளைபோசற்) இனை ஒத்த போலியான பீடை நாசினி ஒன்றின் விநியோகஸ்த்தர் ஒருவர் நுவரெலியா நீதிமன்றத்தினால் குற்றவாளியாக இனங்காணப்பட்டு தண்டப் பணமாக 50,000.00 ரூபாவைச் செலுத்தனார். மேற்படி குற்றப் புலனாய் வானது திம்புலபத்தன பொலிசாருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது.

- குளியாப்பிட்டியவைச் சேர்ந்த சட்டரீதியற்ற பீடை நாசினிகளை விற்பனை செய்த வியாபாரி ஒருவர் குளியாப்பிட்டிய நீதிமன்றத்தினால் குற்றவாளி என அடையாளம் காணப்பட்டு அவரிடமிருந்து குற்றப் பணமாக 1.000,000.00 ரூபாய் அறவிடப்பட்டது.

### சட்ட ரீதியற்ற பீடை நாசினிகளின் மீதான எச்சரிக்கை

பல்லிகள், எலிகள், கரப்பான் பூச்சிகள், எறும்புகள், வீட்டு ஈக்கள், போன்றவற்றுடன் தொடர்புடைய வீட்டுப் பாவனைப் பீடை நாசினிகளுடன் தொடர்புடையனவாகவே பெரும்பாலான சட்ட ரீதியற்ற பீடை நாசினிகள் காணப்படுகின்றன. அத்துடன் அவற்றுள் சில முக்கிய விவசாயப் பீடைகளுடனும் தொடர்புடையனவாக உள்ளன. மேற்படி சட்ட ரீதியற்ற பீடை நாசினி உற்பத்தியாளர்களின் பொதுவான இயல்புகளாவன: தங்களது உன்னதமான அடையாளம், முகவரி, மற்றும் தொடர்பாடல் தகவல்களை வெளிப்படையாக வெளியிடுவதைத் தவிர்த்தல், முறையான புலனாய்வுகளுக்கு தடங்கல்களை ஏற்படுத்துதல் என்பன ஆகும். பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலகத்தின் உத்தியோகத்தர்களினால் நாட்டின் சில பாகங்களில் அமைந்துள்ள விற்பனை நிலையங்களில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புலன் ஆய்வுகளின் படி இவ் வியாபாரத்தின் உண்மையான அளவு கண்டுபிடிக்கப்பட்டது.

அவர்களது சட்டரீதியற்ற செயற்பாடுகள் உற்பத்தி, இறக்குமதி, விற்பனை மற்றும் விநியோகம் ஆகியவற்றுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படாது பொது மக்களை குறிப்பாக சிறுவர்களை நஞ்சூட்டலின் ஆபத்து நிலைக்குத் தள்ளுதல் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். உயிர்ப்பான உள்ளடக்கங்களின்

(ai) தகவல்களின் பற்றாக்குறை கசிவுத் தடையுள்ள பொதியிடல் குறைபாடு, முற்பாதுகாப்பு தொடர்பிலான தகவல்களின் பற்றாக்குறை, மற்றும் வைத்திய ஆலோசனைகள் என்பன இச் சட்டரீதியற்ற உற்பத்திகள் கொண்டுள்ள நுகர்வோர் மீதான ஆபத்தான விடயங்கள் ஆகும். அத்துடன் விளக்கச்சுட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளவை தவிர்ந்த ஏனைய பதார்த்தங்கள் இருப்பதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றது. பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலகமானது சட்டதீரியற்ற பீடை நாசினிகளை விற்பனை செய்யும் மொத்த விற்பனை நிலையங்கள் மீது தொடர்ச்சியான பரிசோதனைகளை மேற்கொண்டு தேவை ஏற்படும் போது உரிய சட்ட நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. 2013 மே மாதத்தில் பீடை நாசினிகளின் விற்பனையில் ஈடுபடுவோரால் விற்பனை செய்யப்படுகின்ற சட்ட ரீதியற்ற பீடை நாசினிகள் மற்றும் போலிப் பீடை நாசினிகள் தொடர்பில் ஓர் பாரிய விளம்பரத்தை / விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒரு சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்டது.

### உபயோகிக்க முடியாத பீடை நாசினி இருப்பினை உரிய முறையில் அகற்றுவதற்கான நடவடிக்கைகளின் ஆரம்பம்

சில பிராந்தியங்களில் உள்ள விவசாயத் திணைக்கள நிலையங்களில் காணப்படுகின்ற பாவனைக்கு உதவாத பீடை நாசினிகள் மற்றும் ஆய்வுகூட இரசாயனங்கள் ஆகியவற்றை அகற்றுவதற்குரிய வேண்டுதல்கள் 2012 மார்ச் இல் பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலகத்தினால் பெறப்பட்டன. அவ்வேண்டுதல்களில் மொத்தமாக 1.083kg திண்ம மற்றும் 508l திரவ பீடை நாசினிகள் / இரசாயனப் பதார்த்தங்கள் அடங்கியிருந்தன. அனுராதபுரம் நாச்சதுவையில் உள்ள சுகாதாரத் திணைக்கள பிராந்திய நிலைய களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்த நாட் சென்ற தொழில்நுட்ப மலத்தியன் இருப்பு தொகுதி ஒன்று 2013 ஜுலை மாதத்தில் பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலகத்தினால் அகற்றப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் மூலம் மனித சுகாதாரத்திற்குரிய ஆபத்து குறைக்கப்பட்டதுடன் சூழலுக்கும் நன்மை கிடைத்தது. Plant chem. (pvt) Ltd. இனைச் சேர்ந்த பயிற்றப்படட ஆளணியினர் இவற்றை பாதுகாப்பான மற்றும் உரிய முறையில் சேகரித்து அகற்றும் வரை ஏற்படக்கூடிய அழிவுகளில் இருந்து பாதுகாப்பதற்குரிய உதவிகளை வழங்கினர். மேலும் பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் mis Holcim Geo Cycle நிறுவனத்தருடன் சேர்ந்து காலங் கடந்த பீடை நாசினிகளை சூழல் நேய முறையில் அகற்றுவதற்குரிய முறையான நடவடிக்கைகளைத் தொடரவுள்ளனர்.

## 2014 ற்கான திட்டம்

### பீடை நாசினிகள் பதிவு

- தெரிவின் பின்னர் பதிவு செய்தலுக்காக 150 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல் மற்றும் உறுப்பினர்களுக்கு விண்ணப்பங்களை வழங்குதல்.
- மூலப்பதிவு விண்ணப்பங்கள் 30 இன் மதிப்பீடு / விபரத் தொகுப்பு ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப.
- 140 மூன்றாம் நபர் பதிவு விண்ணப்பங்களை மதிப்பீடு செய்தல்.
- 140 மீள் பதிவு விண்ணப்பங்களை மதிப்பீடு செய்தல்.
- அனுமதிக்காக 280 பதிவு அத்தாட்சிப் பத்திரங்களை தயார்படுத்தல்.
- உப குழுவுக்காக 30 தரவுகளின் மதிப்பீடு மற்றும் தயார்ப்படுத்தல்
- 1400 இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை ROP இன் அனுமதிக்காக தயார்ப்படுத்தல்.
- 1400 இறக்குமதி அனுமதிகளை வழங்குதல்.

- 1500 பீடை நாசினி தர அத்தாட்சிப் பத்திரங்களை மதிப்பீடு செய்தல்.
- 250 விளம்பரப் பொருட்களை அனுமதிக்காகத் தேர்வு செய்தல்.
- 12 தொழிற்சாலைகளை சோதனை செய்தல்.
- அனுமதி வழங்கப்பட்ட 12 மீள் பொதி செய்தல் வசதிகள் மற்றும் களஞ்சிய சாலைகளை சோதனை செய்தல்.
- புகையூட்டலுக்கான 30 இடங்கள் மற்றும் வீட்டுப் பாவனை பீடை நாசினி அத்தாட்சிப்பத்திரம் வழங்குதல்.
- 30 பீடைக் கட்டுப்பாட்டுச் சேவைகளைப் பதிவு செய்தல்.
- காரணம் காட்ட வேண்டிய அடிப்படையில் 30 தடுப்புக் காப்பு மற்றும் கப்பலில் இருந்து இறக்குவதற்கு முன்னர் $CH_3Br$ ஐப் பெறுவதற்குரிய பதிவு.
- 140 விற்பனை நிலையங்களை சோதனை செய்தல்.
- விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்குரிய பொருத்தத் தன்மை பற்றி அறிவதற்குரிய அறிக்கைகளைப் பெறுவதற்கு MRI மற்றும் ITI ஆகிய இடங்களுக்கு மாதிரிகளை துரிதமாக அனுப்புதல்.
- அனுப்பப்பட்ட பொருட்களின் அடிப்படையில் மாதிரிகளின் தரப் பகுப்பாய்வின் அடிப்படையிலும் 800 பொதியிடல் தெளிவாக்கத்திற்குரிய அனுமதி வழங்கல்.
- ஊடக நிகழ்ச்சிகள்
    - தொலைக்காட்சி - 02
    - வானொலி - 06
    - அச்சு ஊடகம் - 04
- 25 விவசாய இரசாயன விற்பனைகள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக் குரிய பயிற்சி / அத்தாட்சிப்பத்திரம் வழங்கல்.
- 24 விழிப்புணர்வுக் கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல்.
- 02 விழிப்பணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- 2000 விநியோகஸ்தர்களுக்கு அத்தாட்சிப் பத்திரங்களை வழங்குதல்.
- 06 கள முறைப்பாடுகளைப் கையாளுதல்.
- 04 தொழில்நுட்ப ஆலோசனை குழுக் கூட்டங்களை நடாத்துதல்.
- PeTAC முடிவுகளை அறிவிக்கும் முகமாக கைத்தொழில் பிரிதி நிதிகளுடனான 06 கூட்டங்களை நடாத்துதல்.
- மூன்று உபகுழுக்களுடன் பீடை நாசினிகளில் உப குழு கூட்டங்கள் 18 இனை நடாத்துதல்.
- 800 சூத்திரங்களின் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுதல்.
- பீடை நாசினிகளில் காணப்படுகின்ற தூய்மையின்மையினை எழுந்தமானமாகச் சோதனை செய்வதற்குரிய 12 செயற்பாடுகள்.
- பார உலோகங்கள் அடங்கலாக பீடை நாசினிகளில் காணப்படுகின்ற மாசுக்களின் ஆபத்துத் தன்மை பற்றிய மதிப்பீடு.
- சூழலில் காணப்படுகின்ற இலக்கு இல்லாத உயிரினங்கள் மீது பீடை நாசினிகள் தாக்கம்.
- பீடை நாசினிகளின் எதிர்ப்புத் தன்மை விருத்தியின் கண்காணிப்பு தொடர்பிலான நிகழ்ச்சிகள்.
- மரக்கறிகள் மற்றும் பழங்களில் தேங்கி நிற்கின்ற பீடை நாசினிகளின் அளவினை உறுதி செய்வதற்குரிய ஒழுங்கமைப்பு திட்டமொன்றை உருவாக்குதல்.
- வீட்டுப் பாவனை பீடை நாசினிகளின் களப் பாவனை வினைத்திறனை கண்டறிவதற் குரிய மதிப்பீடு.

- வெற்றுக் கொள்கலன்களை அகற்றுவதற் குரிய 02 நிகழ்ச்சிகளின் அபிவிருத்தி மற்றும் அமுலாக்கம்.

- திணைக்களங்களினுள் மற்றும் திணைக்கள ங்களுக்கிடையே ஒழுங்கமைக்கப்பட்ட 27 கூட்டங்களில் / தொழில்நுட்ப / வளவாளர்களாக / உறுப்பினர்ராக / வல்லுனர்களாக கலந்து கொண்டு சேவை வழங்குதல்.

- ஏனைய நிறுவனங்களில் இருந்து கிடைத்த 10 அழைப்பிதல்களுக்கு ஏற்ப வளவாளர்களாகக் கலந்து கொண்டமை.

- 40 இறக்குமதிப் புள்ளி விபரங்களின் (மத்திய வங்கி, பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சியாளர்கள், அரச நிறுவனங்கள் etc…) சேகரிப்பு, ஒன்று சேர்ப்பு மற்றும் பரம்பல்.

- 02 பீடை நாசினிகள், உயிர் நாசினிகள் ஆகியவற்றின் மீள வடிவமைக்கப்பட்ட வழிகாட்டிகளின் பதிவுகளை வெளியிடல்.

  பீடை நாசினி இறக்குமதிக்காக புதிதாக இணைந்து கொள்வோரும் இதில் அடங்குகின்றனர்.

- ஏனைய செயற்பாடுகள் (கள ஆய்வுகள் போன்றன்) - 04

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பீடை நாசினி பதிவாளர் | 01 |
| ஆராய்ச்சி அலுவலர் | 05 |
| விவசாயப் உத்தியோகத்தர் | 04 |
| விவசாயப் போதனாசிரியர் | 06 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 05 |
| விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர் | 02 |
| திட்ட உதவியாளர் (விவசாயம்) | 02 |
| ஆராய்ச்சி உப உதவியாளர் | 01 |
| பொது முகாமைத்துவ உதவியாளர் | 05 |
| சாரதி | 03 |
| காவலாளி | 02 |
| ஒப்பந்த ஊழியர் | 02 |
| அலுவலக உதவியாளர் | 01 |
| தொழிலாளி | 02 |
| **மொத்தம்** | **35** |

## 2.1.4 தாவரப் பிறப்புரிமை மூலவள நிலையம் (PGRC), கன்னொறுவை

தாவரப் பிறப்புரிமை மூலவள நிலையமானது நிகழ்கால மற்றும் எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதி நாட்டினுள் காணப்படுகின்ற உணவுப் பயிர்களின் பிறப்புரிமை மூலவளங்களைப் பாதுகாப்பதும் அவற்றின் பாவனையை தரமுயர்த்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்பாடுகளையும் அமுல் படுத்துவதற்குரிய பொறுப்பை தன்னகத்தே கொண்டுள்ளது. இவற்றை அடைவதற்காக PGRC ஆனது உணவுப் பயிர்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய இனங்கள் பற்றிய பிறப்பரிமைப் பல்வகைமை தொடர்பிலான ஆய்வுகளை மெற்கொண்டு அவற்றைச் சேகரித்தல், அறிமுகப்படுத்துதல், பாதுகாத்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் ஆவணப் படுத்துதல் போன்றவற்றை மேற்கொள்கின்றது. PGRC இன் இவ்வருடத்திற்குரிய தேடியறிதல் செயற்பாடானது நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மாவட்டங்களிலும் மகாவலி செயற்றிட்டப் பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்டு குறித்த இலக்குகளை நிறைவேற்றியது. களத் தேடியறிதல் மூலமாக மொத்தமாக 767 மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. PGRC இன் பிறப்புரிமை வங்கியானது 13,188 மூலவுயிருருக் குலவகைகளை பாதுகாத்து வைத்துள்ளது. ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் விவசாயிகளிடத்தில் மேற்படி மூலவுயிருருக் களின் பாவனையை அதிகரித்துள்ளது.

### பாதீடு

**அட்டவணை 2.1.4.1 வருடாந்தப் பாதீடு – 2013 (ரூபா)**

| செலவுத்தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு% |
|---|---|---|---|
| நடைமுறைச் செலவு | 13,321,134 | 12,322,005 | 92 |
| மூலதனச் செலவு | 3,345,000 | 3,070,197 | 92 |
| **கருத்திட்டங்கள்** | | | |
| ஆசிய உணவு மற்றும் விவசாய கூட்டமைப்பு ஆரம்பிப்பு (AFACI) | 1,300,000 | 822,739 | 63 |
| தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டம் (NARP) | 586,900 | 586,900 | 100 |
| **மொத்தம்** | **18,553,033** | **16,801,840** | **91** |

## முன்னேற்றம்

### மூலவுயிருருக்களைத் தேடியறிதல் மற்றும் சேகரித்தல்

தாவரப் பிறப்புரிமை மூலவள நிலைத்தின் தேடியறியும் பிரிவானது நாட்டின் வெவ்வேறு மாவட்டங்களில் இருந்து (குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மாவட்டங்களில்) தாவரப் பிறப்புரிமை மூலவளங்களைச் சேகரிப்பதில் குறிப்பிட்ட இலக்கை எய்தது. இப்பரிவானது களுத்துறை, வவுனியா, மட்டக்களப்பு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் ஐந்து தேடியறிதல் பணிகளை 2013 ஆம் ஆண்டில் மேற்கொண்டிருந்தது (அட்டவணை 2.4.1.2)

**அட்டவணை 2.1.4.2 களுத்துறை, வவுனியா, மட்டக்களப்பு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து சேரிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை**

| பயிர் வகை | மாவட்டங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | களுத்துறை | வவுனியா | மட்டக்களப்பு | கிளிநொச்சி |
| நெல் | 05 | 06 | 12 | 11 |
| கொள்ளு | 02 | 20 | 03 | 16 |
| மரக்கறி | 44 | 35 | 61 | 60 |
| தானிய அவரைகள் | - | 15 | - | 06 |
| எண்ணெய் பயிர்கள் | - | 06 | 01 | 08 |
| சுவை சரக்குப் பயிர்கள் | 14 | 04 | 06 | 16 |
| கிழங்குப் பயிர்கள் | 09 | 02 | 07 | 07 |
| பழப்பயிர்கள் | 01 | - | 08 | 08 |
| **மொத்தம்** | **75** | **88** | **98** | **132** |

இவற்றை விட மகாவலி அதிகாரச் சபையின் வேண்டுகோளுக்கு இசைவாக விசேட மூலவுயிருருச் சேகரிப்பு நிகழ்ச்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. மொறகாகந்த மற்றும் களுகங்கை ஆகிய செயற்றிட்டப் பிரதேசங்களில் இருந்து வெவ்வேறு பயிர்களுக்குரிய மூலவுயிருருக்கள் சேகரிக்கப்பட்டன. (அட்டவணை 2.1.4.3)

**அட்டவணை 2.1.4.3 மொரக்காகந்தை, களுகங்கை மற்றும் மகாவலி தொகுதி ~ C ஆகிய செயற்றிட்ட பிரதேசங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை**

| பயிர் வகை | மகாவலி அதிகாரசபை செயற்றிட்ட பிரதேசங்களில் இருந்து சேகரிப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | மகாவலி தொகுதி - C | மொறகாகந்த | களுகங்கை |
| நெல் | 11 | 01 | 09 |
| கொள்ளு | 47 | 08 | 25 |
| மரக்கறி | 84 | 26 | 72 |
| தானிய அவரைகள் | 15 | 04 | 10 |
| எண்ணெய் பயிர்கள் | 10 | 11 | 04 |
| சுவைசரக்குப் பயிர்கள் | 05 | - | 06 |
| கிழங்குப் பயிர்கள் | 05 | - | 03 |
| பழப்பயிர்கள் | - | - | 02 |
| ஏனையவைகள் | - | 06 | 10 |
| **மொத்தம்** | **177** | **56** | **141** |

## ஆராய்ச்சி நிலையங்களில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பயிர்களுக்குரிய மூலவுயிருரு

பத்தலகொட நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் இருந்தும், மகாஇலுப்பள்ளம வயற்பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் இருந்தும் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நெல் மற்றும் வெண்டிப் பயிர்களின் 28 விதை மாதிரிகள் பெறப்பட்டன. மதிப்பீட்டு அலகினால் கலப்புகள் மேற்கொள்ளப் பட்ட வெண்டி விதை மாதிரிகள் 55 2013 ஆம் ஆண்டில் பெறப்பட்டன.

## விதைப் பொருட்களின் பாதுகாப்பு

பரம்பரையலகு வங்கியில் 2013 ஆம் ஆண்டுப் பகுதியில் 208 புதிய குலவகைகளைப் பேணிப் பாதுகாக்க எங்களால் முடிந்தது. 2013 ஆம் ஆண்டு இறுதி வரையில் பரம்பரை அலகு வங்கியின் மொத்தக் கையிருப்புகளின் எண்ணிக்கை 13,188 ஆகும். (அட்டவணை 2.1.4.4)

**அட்டவணை 2.1.4.4 பரம்பரை அலகு வங்கியில் பேணிப் பாதுகாக்கப்பட்டுள்ளவற்றின் விபரம்**

| பயிர் வகை | குலவகைகளின் எண்ணிக்கை |
|---|---|
| நெல்லும் தொடர்புடைய இனங்களும் | 4560 |
| ஏனைய தானியப் பயிர்களும் தொடர்புடைய இனங்களும் | 1670 |
| தானிய அவரைகள் | 2088 |
| அவரைக்குரிய மரக்கறிகள் | 1408 |
| சொளனேசிய மரக்கறிகளும், சுவை சரக்குகளும் தொடர்புடைய இனங்களும் | 1245 |
| பூசணி மரக்கறிகள் | 795 |
| பிறக்கேசிய மரக்கறிகள் | 31 |

| | |
|---|---|
| அல்யம்ஸ் | 20 |
| ஏனைய மரக்கறிகள் | 378 |
| இலை மரக்கறிகள் | 170 |
| கிழங்குப் பயிர்கள் | 09 |
| கடுகு மற்றும் தொடர்புடைய இனங்கள் | 124 |
| எண்ணெய்ப் பயிர்கள் | 434 |
| நார்ப் பயிர்கள் | 66 |
| மருத்துவப் பயிர்கள் | 27 |
| பழங்கள் | 163 |
| **மொத்தம்** | **13,188** |

### மூலவுயிருருக்களின் பகிர்ந்தளிப்பு

உள்ளுர் ஆராய்ச்சி நிறுவனங்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பல்கலைகழகங்கள் ஆகியவற்றின் வேண்டுகோளுக்கிணங்க பல்வேறு பயிர் வகைகளின் 1160 குலவகைகள் இவ்வருட காலப் பகுதியில் பகிர்ந்தளிக்கப்பட்டன.

### விதைகளின் நடத்தை தொடர்பிலான ஆய்வு

பரம்பரை அலகு வங்கியில் 1987 - 2007 ஆண்டு காலப் பகுதிகளில் சிறந்த சேகரிப்பு மூலம் பாதுகாக்கப்பட்ட சோளம் மற்றும் வெண்டி ஆகிய பயிர்களின் குலவகைகளின் வாழ்தகவை கண்காணிப்பதற்கான தொடர் பரிசோதனை ஒன்று நடாத்தப்பட்டது. இதன் போது 375 வெண்டி மாதிரிகளும், 532 சோள மாதிரிகளும் பரிசோதிக்கப்பட்டன. மேற்படி சிறந்த சேகரிப்புகளின் வெண்டி மற்றும் சோள குலவகைகளின் வாழ்தகவில் எதுவிதமான குறைவும் காணப்பிக்கப்படவில்லை.

### மூலவுயிருருக்களின் பெருக்கம்

பின்வரும் பயிர்களின் மூலவுயிருருக்கள் பேணிப் பாதுகாக்கப்படுவதற்காகப் பெருக்கமடையச் செய்யப்பட்டன. நெல் (33 குலவகைகள்), சோளம் (03 குலவகைகள்), குரக்கன் (02 குலவகைகள்), இறுங்கு (02 குலவகைகள்), சிறுசாமை (02 குலவகைகள்), தினை (02 குலவகைகள்), பொது அவரை (07 குலவகைகள்), நீளப் பயற்றை (07 குலவகைகள்), சிறகவரை (02 குலவகைகள்), ஜக் பீன் (01 குலவகை), வாள் அவரை (01 குலவகை), தக்காளி (28 குலவகைகள்), கத்தரி 112 குலவகைகள்), பீர்க்கு (21 குலவகைகள்), நாடை (05 குலவகைகள்), புடோல் (01 குலவகை), வெண்டி (105 குலவகைகள்), கீரை (22 குலவகைகள்), அலங்கா (03 குலவகைகள்),

### இயல்பாக்கம் மற்றும் மதிப்பீடு

தொண்ணுற்றொன்பது வெண்டி, 18 மிளகாய் மற்றும் 61 கொள்ளு குலவகைகள் இயல்பாக்கம் செய்ததன் விளைவாக வெண்டி மற்றும் மிளகாய் ஆகிய பயிர்களின் சிறந்த சில குலவகைகள் அடையாளங் காணப்பட்டன. பல்வேறு சின்ன வெங்காயங்களின் 23 குலவகைகள் பெருக்கமடையச் செய்யப்பட்டு மதிப்பீட்டுக்காக அரலகன்வில RARDC யிடம் ஒப்படைக்கப்பட்டது.

விவசாயிகளின் வயல்களில் இருந்து சேகரிக்கப்பட்ட வாழையின் குலவகைகள் 25 இயல்பாக்கம் செய்யப்பட்டன. இதிலிருந்து சிறந்த குலவகை சீனிக் கதலி ஒன்று அடையாளம் காணப்பட்டது.

## உயிர்த் தொழில்நுட்பவியல்

### வறட்சியைத் தாங்கும் தன்மைக்கான நெல் குலவகைகளின் தோற்ற அமைப்பு மற்றும் மூலகூற்று இயல்பாக்கம்

PGRC இல் பாதுகாக்கப்பட்ட நெல் குலவகை களில் இருந்து தெரிவு செய்யப்பட்டவற்றைப் பயன்படுத்தி வறட்சியைத் தாங்கும் தன்மைக்குரிய தோற்ற அமைப்பு மற்றும் மூலக்கூற்று இயல்பாக்கம் இடம் பெற்றது.

தெரிவு செய்யப்பட்ட 48 குலவகைகள் தோற்ற அமைப்பு ரீதியில் இயல்பாக்கம் செய்யப்பட்டதுடன் மிகவும் சிறந்த வகையில் வறட்சியுடன் தொடர்புடைய மேல் தள மற்றும் கீழ் தள இயல்புகள் சில குலவகைகளில் அவதானிக்கப்பட்டன. வறட்சியுடன் இணைந்த இயல்புகளை அடையாளம் காணப்பதற்குரிய மூலக்கூற்று இயல்பாக்கமானது SSR குறிப்படுத்தி களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

### கிறனோலா வர்க்கத்தின் வெவ்வேறு உருளைக்கிழங்கு விதை தொகுதிகளில் பிறப்புரிமையியல் மாறல்களை அடையாளம் காணுதல்

கிறனோலா வர்க்கத்தின் வெவ்வேறு உருளைக்கிழங்கு விதைத் தொகுதிகளில் DNA மட்ட மாறல்கள் RAPD முதன்மைகளைப் பயன்படுத்தி மெற்கொள்ளப்பட்டது. இதன் போது கிறனோலா சூழல் குடித்தொகை வகைகளிடையே உயர் அளவிலான பல்லுருத் தோற்றம் அவதானிக்கப்பட்டது. மேற்படி ஆய்வுகளின் அடிப்படையில் இந்த சூழல் - குடித்தொகைகளை நான்கு கொத்தணிகளாக வகைப்படுத்த முடியும் என்பது சாத்தியமானது. நாட்டில் நடுகைப் பண்ணப்பட்ட கிறனோலா குடித்தொகைகளிடையே பிறப்புரிமையியல் மாறல்கள் காணப்படுவதை இது காட்டுகின்றது.

### கலப்பின மரக்கறி உருளைக்கிழங்கு வர்க்கங்களில் பிறப்புரிமை தூய்மையாக்கல் பரிசோதனை

கலப்பின உருளைக்கிங்கு வர்க்கமான “பற்றீரியாவின்” தூய்மையை இனங்காணப்பதற்கு 2 SSR குறிப்படுத்திகள் விருத்தி செய்யப்பட்டன.

### வெளிநாடு மற்றும் உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட உள்ளகக் கலப்பின சோள வழித் தோன்றல்களிடையிலான பிறப்புரிமை தொடர்பு பற்றிய கற்கை

உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் விருத்தி செய்யப்பட்ட வழித்தோன்றல்கள் அடங்கலாக 23 சோள உள்ளகக் கலப்பின வழித்தோன்றல்களைப் பயன்படுத்தி மூலக்கூற்று இயல்பாக்கம் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஆய்வுகளின் அடிப்படையில் பரிசோதிக்கப்பட்ட உள்ளகக் கலப்பின வழித் தோன்றல்களுக்குள்ளே அதிக பிறப்புரிமையில் வேறுபாடு காணப்படுகின்றது. சிறந்த செயலாற்றுகையுடைய சோளக் கலப்பினங்களை விருத்தி செய்வதற்குரிய சிறந்த பெற்றோரை தெரிவு செய்வதற்கு இக்கற்கையின் போது பெறப்பட்ட பிறப்புரிமையியல் தகவல்கள் உதவியாக அமையும்.

### வாழை, உருளைக்கிழங்கு, வத்தாளை மற்றும் இராசவள்ளி இனங்களில் ஆய்வுகூட மற்றும் தாவர வீட்டு நிலமைகளில் PGR பாதுகாப்பு

ஆய்வுகூட மற்றும் தாவர வீட்டு நிலமைகளில் இராசவள்ளி இனங்களின் 70 குலவகைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆய்வுகூட நிலமைகளில் 109 வத்தாளைக் கிழங்கு குலவகைகள் மற்றும் சாடிகளில் இடப்பட்டு தாவர வீட்டு நிலமைகளில் உள்ள 114 குலவகைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆய்வுகூட நிலமைகளில் 15 உருளைக்கிழங்கு குலவகைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

### வாழையின் ஆய்வுகூட சேமிக்குரிய அதிக கொண்டு செல்லல் காலத்தை இனங்காணல்

ஆய்வுகூட நிலமைகளின் கீழ் உள்ளூர் வாழைக் குலவகைகளுக்குரிய சிறந்த கொண்டு செல்லல் காலத்தைக் கண்டறிவதற்காக இக்கற்கை மேற்கொள்ளப்பட்டது. ஆய்வுகூட பாதுகாப்பு ஊடகங்களைப் பயன்படுத்தி 9 வேறுபட்ட சேர்க்கைகளின் கீழ் வாழைக் குலவகைகள் 3 (றதம்பல, அம்பன், புளத்திசி) பரிசோதனைக்குட் படுத்தப்பட்டுள்ளன. மேற்படி பரிசோதனை முன்னேற்றமாக உள்ளது,

### தாவர கரு மூலங்கள் (PGR) தகவல் முகாமைத்துவத் தொகுதி

நெல், சோளம், குரக்கன், தினை, இறுங்கு, கௌபி பாசிப்பயறு, உழுந்து, சோயாவரை,

துவரை, நிலக்கடலை, அவரை, சிறகவரை, நீளப்பயற்றை, கத்தரி, தக்காளி, கறிமிளகாய், வெண்டி, பூசணி, புடோல், பாகற்காய், கீரை, பீர்க்கு, கடுகு மற்றும் எள்ளு என்பன அடங்கலாக 25 பயிர்களின் இயல்பாக்கத் தகவல்கள் மற்றும் 13,109 குலவகைகளின் கடவுச்சீட்டுத் தரவுகள் ஆகியவற்றைத் தற்போது எமது தரவுத் தளம் கொண்டுள்ளது.

### பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

இந்நிலையத்தின் தேடியறியும் பிரிவானது விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்தி வருகிறது. பாடசாலை ஆசிரியர்கள், பல்கலைகழக விரிவுரையாளர்கள், விவசாயிகள் மற்றும் அரச அலுவலர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பயிற்சிக் குழுக்களின் அறிவை விருத்தி செய்வதை பிரதான நோக்காகக் கொண்டு இந்நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இவற்றுள் பெரும்பாலானவை ஒரு நாள் நிகழ்ச்சிகளாக அமைந்தன. அதேவேளை பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் டிப்ளோமா மாணவர்களுக்காக ஒரு மாதம் தொடக்கம் ஆறு மாதம் வரையிலான கட்டுறுப் பயிற்சி நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (அட்டவணை 2.1.4.5)

**அட்டவணை 2.1.4.5 பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை**

| பயிற்சி குழு | பயிலுநர்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாடசாலைகள் | 3508 |
| பல்கலைக்கழகங்கள் | 1012 |
| விவசாயக் கல்லூரிகள் | 303 |
| ஆசிரியர்கள் | 152 |
| விவசாயிகள் | 306 |
| ஏனையோர் (SLAS, வனவளம் வெளிநாட்டவர் etc…) | 1304 |
| **மொத்தம்** | **6585** |

### 2014 ற்கான திட்டம்

- பாரம்பரிய வர்க்கங்கள், சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கங்கள், ஏனைய கருமூல தொகுதிகள் மற்றும் வனப் பயிர் தொடர்பான தாவரக் கருமூல வளங்களின் தேடியறிதல் மற்றும் சேகரிப்பு.
- தாவரக் கருமூலவளங்களின் பேணிப் பாதுகாத்தல் தொடர்பிலான செயற்பாடுகளைத் தொடர்தல்.
    - வத்தாளை, உருளைக்கிழங்கு மற்றும் வாழை போன்றவற்றை ஆய்வு கூட மற்றும் தாவர வீட்டு நிலமைகளில் பேணிப் பாதுகாத்தலும் பராமரித்தலும்.
    - சேகரிப்பு நடத்தை தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.
- தாவரக் கருமூலவளங்களை இயல்புபடுத்து தல், மதிப்பீடு செய்தல் மற்றும் பெருக்கம்.
- வீட்டுத் தோட்டத்திற்குப் பொருத்தமான பயிர்களின் வழித்தோன்றல்ககளை தெரிவு செய்தல்.
- வறட்சியைத் தாங்கும் தன்மைகளையுடைய நெல்லின் குலவகைகளின் மூலக்கூற்று மற்றும் தோற்ற அமைப்பு இயல்பாக்கம்.
    - பராமரிய நெல் வர்க்கமான சுவந்தல் குலவகைகளின் மூலக்கூற்று மற்றும் தோற்ற அமைப்பு இயல்பாக்கம்.
- மஞ்சள் மொசக் வைரஸ் நோய்க்கு எதிர்ப்புடைய பரம்பரை அலகுகளைக் கொண்ட காட்டு வெண்டி வர்க்கங்களை அடையாளப்படுத்துதல்.
- வெளிநாட்டு மற்றும் உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட உள்ளகக் கலப்பின விருத்தி வம்சாவழிகளிடையே காணப்படுகின்ற பிறப்புரிமையியல் தொடர்பு பற்றிய கற்கை.
- “மா” வில் கலப்பினப் பிறப்பாக்கம் தொடர்பிலான பரிசோதனை.

- மெதுவான வளர்ச்சிச் தூண்டல் மூலம் ஆய்வுகூட பாதுகாப்பு வாழைகளில் நீண்ட தொழிற்பாடற்ற காலத்தை இனங்காணுதல்.
- இராசள்ளியில் ஆய்வகூட நிலமைகளில் முகிழ்களின் உருவாக்கத்திற்கான உத்தம நிலமைகளை இனங்காணல்.
- தரவு முகாமைத்துவ தொகுதியின் மேம்பாடு மற்றும் பராமரிப்பு.
- தேசிய தகவல் பரிமாற்றப் பொறிமுறையின் பராமரிப்பு.
- தாவரக் கருமூலவளங்களின் பகிர்ந்தளிப்பு.
- PGR பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பிரதிப் பணிப்பாளர் | 01 |
| ஆராய்ச்சி அலுவலர் | 08 |
| விவசாயப் போதனாசிரியர் | 03 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 04 |
| நிகழ்ச்சி திட்ட உதவியாளர் | 02 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 02 |
| ஆராய்ச்சி உப உதவியாளர் | 04 |
| பொது முகாமைத்துவ உதவியாளர் | 07 |
| களஞ்சிய அலுவலர் | 01 |
| சாரதி | 04 |
| பார ஊர்தி சுத்தமாக்குபவர் | 01 |
| உழவு இயந்திர இயக்குநர் | 01 |
| மின்னியலாளர் | 03 |
| காவலாளி | 05 |
| தொழிலாளி | 16 |
| தொழிலாளி (ஒப்பந்த அடிப்படை) | 22 |
| **மொத்தம்** | **85** |

# 2.2 தேசிய தாவரத் தடுப்புக்காப்புச் சேவை (ஞேளு)இ கட்டுநாயக்க

நாட்டில் விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழிற்றுறைகளின் அபிவிருத்திக்கு பீடைகளற்ற தாவரங்கள் மற்றும் தாவரப் பொருட்களின் ஏற்றுமதி, இறக்குமதியினை வசதிப்படுத்துவதற்கு இலங்கையில் தேசிய தாவர தடுப்புக் காப்புச் சேவைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இதனை அடைந்து கொள்ள, ஆராய்ச்சி மற்றும் சேவையுடன் தொடர்புடைய தடுப்புக் காப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய தாவர தடுப்புக் காப்புச் சேவையின் (NPQS) முக்கிய நடவடிக்கைகளாக தாவரச் சுகாதாரச் சான்றிதழ் வழங்குதல், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் தாவரங்கள் மற்றும் தாவரப் பொருட்களின் கண்காணிப்பும் பரிகரிப்பும், தடுத்து வைக்கப்பட்டுள்ள மாதிரிகளின் பரிசோதனைகள், ஆர்வமுடைய குழுக்களுக்குப் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஊடாக தாவரப் தடுப்புக் காப்பினுடைய அனைத்துத் தோற்றப்பாடுகள் தொடர்பிலும் அறிவினைப் பரம்பலடையச் செய்தல் என்பன அமைகின்றன. மேலும் NPQS தன் நடவடிக்கைகளை தேசிய ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைகழகங்கள், விவசாயத் திணைக்களத்தின் நிறுவனங்கள் மற்றும் நிலையங்கள் என்பவற்றுடன் இணைந்து செயலாற்றுகின்றது.

## பாதீடு

மீண்டு வரும், மூலதன மற்றும் செயற்றிட்டங்கள் என்பவற்றுக்குரிய ஒதுக்கீடுகள், மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் என்பன அட்டவணை 2.2.1 இல் வழங்கப்படுகின்றது.

**அட்டவணை 2.2.1 வருடாந்தப் பாதீடு, 2013 (ரூபாவில்)**

| செலவுத்தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு% |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 7,033,000 | 3,696,354 | 53 |
| நடைமுறைச் செலவு | 8,974,000 | 8,142,538 | 91 |
| NARP திட்டம் | 2,620,700 | 2,493,308 | 95 |
| **மொத்தம்** | **18,648,025** | **14,332,200** | **77** |

## முன்னேற்றம்

### தாவர தடுப்புக் காப்பு நடவடிக்கைகள்

தாவர தடுப்புக் காப்பு நடவடிக்கைகள் பிரிவினால் 2013ம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் அட்டவணை 2.2.2 இல் நிரப்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.2.2 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்**

| நடவடிக்கைகள் | அடைவுகள் |
|---|---|
| இடைத்தங்கல்களின் பதிவு | 346 |
| இடைத்தங்கல்களின் எண்ணிக்கை | 326 |
| பரீட்சிப்புக்களின் பதிவு | 1444 |
| நுழைவு முனைகளுக்கு அனுப்பப்பட்ட பரீட்சிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை | 1375 |
| தென்னந்தும்பு பொருட்களின் பரீட்சிப்பு பதிவுகள் | 503 |
| தென்னந்தும்பு பொருட்களின் பரீட்சிப்பு அறிக்கைகள் | 492 |
| பரீட்சிப்புக்கென கையளிக்கப்பட்ட மாதிரிகளின் பதிவு | 19 |
| தாவரச் சுகாதார சான்றிதழ்கள் வழங்கல் | 06 |
| அழிக்கப்பட்ட கேள்விகளுக்குள்ளான பொருட் தொகுதிகளின் எண்ணிக்கை | 953 |
| வழங்கப்பட்ட இறக்குமதி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 3292 |

தாவர தடுப்புக் காப்பு நடவடிக்கைகளுடன் தொடர்பான செயற்பாடுகள் மாத்திரமன்றி இப்பிரிவு, தாவர தடுப்புக் காப்பு நடவடிக்கை களும் செயல் முறைகளும் தொடர்பான 14 பயிற்சி நிகழ்ச்சிகளையும் ஒழுங்கமைத்து நடாத்தியுள்ளது.

### பூச்சியியல்

#### ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்குரிய பொருட் தொகுதிகளில் நோயாக்கிகளுக்கான சோதனை

#### ஏற்றுமதி

- 12339 ஏற்றுமதிக்குரிய இலை அலங்காரத் தாவர மாதிரிகள், 16 இலை அலங்காரத் தாவரங்களை ஏற்றுமதி செய்யும் நாற்று மேடைகளிலிருந்து சேகரிக்கப்பட்டு தாவர ஒட்டுண்ணி நெமற்றோடுகளுக்காக பரீட்சிக்கப்பட்டன. 532 மாதிரிகள் தாவர ஒட்டுண்ணி நெமற்றோடுகளின் தாக்கத்திற்குட்பட்டிருந்தமை அடையாளம் காணப்பட்டன.
- 18498 ஏற்றுமதிக்குரிய தென்னந்தும்பு மாதிரிகள் பூச்சிப் பீடைகள் சிற்றுண்ணிக்கள் என்பவற்றிற்கென சோதனையிடப்பட்டன. எதுவித தொற்றுக்களும் பதிவு செய்யப்படவில்லை.
- 26 ஏனைய விசேட மாதிரிகள் இலையலங்காரத் தாவர ஏற்றுமதியிலீடுபடும் நாற்று மேடையாளர்களினால் கையளிக்கப்பட்டதுடன் அவை அவர்களினது பீடைக் கண்காணிப்பு நிகழ்ச்சிகளை வசதிப்படுத்துவதற்கென பூச்சிப் பீடைகள் தாவர ஒட்டுண்ணி நெமற்றோடு என்பவற்றிக்கென பரிசோதிக்கப்பட்டன.

### இறக்குமதிகள்

- இறக்குமதி செய்யப்பட்ட 33 விதை உருளைக் கிழங்குத் தொகுதிகள் துறைமுகத்தில் வைத்து பரிசோதிக்கப் பட்டன. இவற்றின் மாதிரிகளானது சேகரிக்கப்பட்டு பூச்சிப் பீடைகளுக்காகவும் ஒட்டுண்ணி நெமற்றோடுகளுக்காகவும் பரிசோதிக்கப்பட்டன. எந்தவொன்றிலும் தொற்றுதல் இருப்பதாக பதிவு செய்யப்படவில்லை.

- கலப்பினச் சோளம், நிலக்கடலை, மரமுந்திரிகைப் பருப்பு, ஸ்பக்னம் பீட் பாசி, வெங்காயக் குமிழ்கள், நொதிக்கப்பட்ட கொக்கோ விதைகள் உள்ளடங்கலாக இறக்குமதி செய்யப்பட்ட 255 தாவரப் பொருட்களானது பூச்சிப் பீடைகள், சிற்றுண்ணிகள் மற்றும் தாவர ஒட்டுண்ணி நெமற்றோடு என்பவற்றுக்காக சோதிக்கப்பட்டன. இவற்றுள் 08 மாதிரிகள் பொதுவான களஞ்சியப் பீடைகளினால் தொற்றுதலடைந்து காணப்பட்டன. இந்தோனேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாக்கு மாதிரிகள் Cryptolestess இனங்களினால் தொற்றலடைந்து காணப்பட்டன.

### பயிற்சிகள்

- பல்கலைக்கழகங்கள், தொழிநுட்பக் கல்லூரிகள், பாடசாலைகள் என்பவற்றின் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் பூச்சியியல் பிரிவினால் பயிற்சியளிக்கப் பட்டனர். ஏற்றுமதிக்குரிய இலை அலங்காரத் தாவர நாற்றுமேடைகளின் அலுவலர்களுக்கு பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

## நோயியல்

### ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட் தொகுதிகளின் மீது நோயாக்கிகளுக்கான சோதனை

### ஏற்றுமதிக்குரிய பொருட்தொகுதிகள்

#### இலை அலங்காரத் தாவரங்கள்

ஏற்றுமதிக்குரிய இலை அலங்காரத் தாவர மாதிரிகள் 11138 சோதிக்கப்பட்டன. அவற்றுள் பின்வரும் நோயாக்கிகள் காணப்பட்டன. Mucor இனங்கள், Aspergillus இனங்கள், Colletrotrichum இனங்கள், Macrophomina இனங்கள், Penicillium இனங்கள், Rhizopus இனங்கள், Xanthomonas இனங்கள், Erwinia இனங்கள் Pestalosia, Curvularia இனங்கள் Entero beator cloea மற்றும் Entero beator Canerogenus என்பன

#### தென்னம் தும்பு

ஏற்றுமதிக்குரிய 114 தென்னந்தும்பு மாதிரிகள் தென்னந்தும்பு தொழிற்சாலைகளிலிருந்து சேகரிக்கப்பட்டு நோயாக்கிகளுக்கென சோதிக்கப்பட்டன. இவற்றுள் Mucor இனங்கள், Asporgillus இனங்கள், Rhizopus இனங்கள் Thalaviopsis paradoxa ஆகிய நோயாக்கிகள் இம்மாதிரிகளுள் காணப்பட்டன.

இவற்றுள் Thalaviopsis pradoxa வானது தடுப்புக் காப்பு முக்கியத்துவமடைய ஒரு பீடையாக கருதப்படுகின்றது.

#### இழைய வளர்ப்புத் தாவரங்கள்

115 பரீட்சிப்புக்களின் போது 1,139, 331 தாவரங்கள் சோதனையிடப்பட்டன. பரீட்சிப்புக்களின் போது தொற்றல்களை கொண்டிருந்த கொள்கலன் மறுக்கப்பட்டதுடன் இவ்வுற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு அவசியமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதன் பின்னர்

தொற்றல்களின் அளவு குறிப்பிடத்தக் களவு குறைக்கப்பட்டிருந்தன.

## இறக்குமதிக்குரிய பொருட் தொகுதிகள்

### விதை உருளைக் கிழங்கு

விதை உருளைக் கிழங்கு மாதிரிகள் 80 சோதனையிடப்பட்டிருந்தன அவற்றுள் பின்வரும் நோய்கள் காணப்பட்டன. வெள்ளிப் பொருக்கு, பொதுப் பொருக்கு, மென்னழுகல், கருந்தோல் நோய், வலைப் பொருக்கு மற்றும் உலர் அழுகல் என்பனவாகும். தடுப்புக் காப்புச் செய்யப்பட வேண்டிய எந்தவொரு நோயாக்கியும் இருக்கவில்லை மாதிரிகளில் காணப்பட்ட ஏனைய நோயாக்கிகள் Geotricum Candidium Colletrotridum altramentarium மற்றும் Curvularia இனங்கள் என்பனவாகும்.

### விதை மற்றும் ஏனைய நடுகைப் பொருட்கள்

276 மாதிரிகள் சோதனையிடப்பட்டதுடன் தடுப்புக் காப்புச் செய்யப்பட வேண்டிய எந்தவொரு நோயாக்கியும் காணப்படவில்லை

### ஒப்படைக்கப்பட்ட மாதிரிகளின் சோதனை

06 மாதிரிகள் சோதனையிடப்பட்டதுடன் பொறுப்பு வாய்ந்த பகுதியினருக்கு ஆலோசனைகள் கண்டறிதல்கள் வழங்கப்பட்டன.

### பயிற்சிகள்

ஏழு பயிற்சி நிகழ்ச்சிகளும் இரண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன. 43 கீழ்நிலைப் பட்டதாரிகளும், டிப்ளோமா மாணவர்களும் மேற்பார்வை செய்யப்பட்டனர். செய்யப்பட்டனர்.

### ஆராய்ச்சி நிகழ்ச்சிகள்

- விதை உருளைக் கிழங்கில் Ralstonia Solanacearum இனுடைய மூலக்கூற்றை அடையாளம் காணல் (E.F.Smith) மற்றும் Dreceana Sandreana வின் தொற்றலேற்பட்ட இலையில் மூலக்கூற்றியல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கக் காரணியை கண்டறிதல் பொருத்தமான கட்டுப்பாட்டு முறைகளைக் கண்டறிதல் ஆகிய ஆராய்ச்சி நிகழ்ச்சிகள் நடாத்தப் பட்டன.
- Dreceana Sandreana வில் எண்ணெய்த் தன்மையான இலைப்புள்ளியை ஏற்படுத்தும் உருவாக்க காரணியை கண்டறிந்து அதற்கான கட்டுப்பாட்டு முறைகளை அடையாளம் காணல்
- Cordyline Fruticosa glauca வில் தண்டழுகலுக்குரிய ஆக்கக் காரணியை அடையாளம் காணல்
- ELISA நுட்பத்தினைப் பயன்படுத்தி சோளக் கோட்டு வைரசு, சோளம் வரி வைரசு, சோளம் குறள் சித்திரவடிவ வைரசு என்பவற்றினை கண்டறிதல்: 53 மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டன. எந்தவொரு வைரசும் கண்டறியபடவில்லை
- பாய்மவியல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்கில் உருளைக் கிழங்கு வைரசு A, M மற்றும் S ஆகியவற்றை கண்டறிதல் - 73 மாதிரிகள் சோதனையிடப்பட்டன எந்தவொரு வைரசும் கண்டறியப்படவில்லை

## களை விஞ்ஞானம்

### ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்குரிய பொருட் தொகுதிகளில் நோயாக்கிகளுக்கான சோதனை

### ஏற்றுமதிகள்

ஏற்றுமதிக்குரிய 74 கொக்கோ பீட் பொருட் தொகுதிகளில் மாதிரிகள் சோதனையிடப்பட்டன. அவற்றுள் 17 உயிருள்ள விதைக் கலப்புள்ளவையாகவும், 109 மணல் கலப்புள்ளவையாகவும் காணப்பட்டன.

### இறக்குமதிகள்

97 மரக்கறிப் பொருட் தொகுதிகளின் மாதிரிகள் களை விதைகளின் பிரசன்னத்திற்கென சோதனையிடப்பட்டன. அவற்றுள் நற்சீரகத்தினுடைய 04 தொகுதிகள், வெங்காய விதைகளின் 02 தொகுதிகள், கரட் விதையின் 04 தொகுதி மற்றும் மல்லியின் ஒரு தொகுதி என்பன களைவிதைகளின் கலப்படமுள்ளவை யாக காணப்பட்டன. பின்வருவன அவற்றுள் தடுப்புக் காப்பு முக்கியத்துவமுடையவாக காணப்பட்டன. Euphorbia dentate, Sorghum halpens, Convululus arvensis, Chenapodium album, Polygonum இனங்கள் மற்றும். Rumex இனங்கள்

### பயிற்சிகள் trainings

பல்கலைகழகங்கள், தொழிநுட்பக் கல்லூரிகள், பாடசாலைகள் என்பனவற்றின் பெருந்தொகுதி மாணவர்கள் களை விஞ்ஞானப் பிரிவினரால் பயிற்சியளிக்கப்பட்டனர்.

### ஆராய்ச்சி நிகழ்ச்சிகள்

கொக்கோ பீட் உற்பத்தியில் உயிருள்ள விதைகளின் இருக்கையைக் கண்டறிவதற்கான பரிசோதனைகள் நடாத்தபட்டபன. (சர்வதேச தரமுடைய சோதனைச் செயன்முறை) இதன் வளர்ப்புச் சோதனை நிறைவு பெற சுமார் ஒரு மாத காலம் தேவையாய் கருந்தது. கொக்கோ பீட் உற்பத்திப் பொருட்களில் காணப்பட்ட விதைகளின் உறங்கு நிலையை நீக்க பல வித பரிகரிப்புக்கள் சோதித்துப் பார்க்கப்பட்டன. இவ்வுறங்கு நிலையைக் கலைக்க சுடுநீர்ப் பரிகரணத்தினால் (80 -90 பாகை செல்சியஸ்) இயலுமாயிருந்தது. இதன் மூலம் வளர்ப்புச் சோதனைகளுக்குத் தேயையாயிருந்த காலத்தினை 10 - 15 நாட்களினால் குறைக்கக் கூடியதாய் இருந்தது.

பின் தடுப்புக்காப்பு கற்கை :- **Fallopia Convolvulus** இலங்கையில் காணப்படாத ஒரு நச்சுக் களையாகும். இக்களையின் வளர்ச்சி அளவு கோல்கள் மற்றும் சூழலியல் (அலிலோபதி விளைவு மற்றும் போட்டி) என்பன கற்றறியபட்டதுடன் இதற்கான இறுதி அறிக்கை பின்னர் தயாரிக்கப்படும்.

### உசாத்துணைச் சேகரிப்புக்களைப் பேணல்

- 04 புதிய களை இனங்கள் சேகரிக்கப்பட்டு, பதப்படுத்தப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டன.
- புதிய வகை 15 களை விதைகள் சேகரிக்கப்பட்டு பதப்படுத்தப்பட்டன.

### பரிகரிப்புத் தொழிநுட்பம்

### வர்த்தக ரீதியான தூமமாக்கல்

**அட்டவணை 2.2..3 2013ம் ஆண்டில் கட்டுநாயக்க NPQS இல் வர்த்தக ரீதியான தூமமாக்கல் செயற்பாடுகள்.**

| பதார்த்த வகை | தூமாக்கல் எண்ணிக்கை |
|---|---|
| தென்னந்தும்பு மற்றும் தும்பு உற்பத்திகள் | 16 |
| மரம் மற்றும் மரத்திலான பொருட்கள் | 12 |
| பூக்கள் | 04 |
| சுவைச் சரக்குகள் | 01 |
| பழங்கள் | 02 |
| ஏனையவை (Cotton Calamus) | 07 |
| தாவரங்கள் (ஸ்ரொபரி) | 01 |
| வெட்டு இலைகள் | 01 |
| **மொத்தம்** | **44** |

### தடுப்புக் காப்பு பரிகரிப்புக்களின் மேற்பார்வை

ஏற்றுமதியாளர்களினது வேண்டுகோளுக்கிணங்க 281 மரத்தாலான பொதி செய் பொருட்கள், ஏனைய தாவரங்கள் மற்றும் தாவர உற்பத்திகள் மீது தனியார் தூமமிடுபவர்களினால் தூமமாக்கல் மேற்க்கொள்ளப்பட்டது. சான்றிதழ் வழங்கும் நோக்கங்களுக்கென இவை பரிகரிப்புத் தொழிநுட்பப் பிரிவினது அலுவலர்களினால் மேற்பார்வை செய்யப்பட்டது. அவுஸ்திரேலிய தூமமாக்கல் உறுதிப்படுத்தல் தொகுதியுடன்

இணைந்து கொள்ளவென பங்குனி மற்றும் புரட்டாதி 2013ல் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டன.

## 2014ம் ஆண்டுக்கான திட்டம்

- ஏற்றுமதிக்குரிய தரத்திலான தாவரங்கள் மற்றும் தாவர உற்பத்திகளின் மேம்பாடு
- இறக்குமதியாகும் விதை உருளைக்கிழங்கினது தரத்தினை நிச்சயப்படுத்தல்
- இறக்குமதியாகும் தாவரங்கள் மற்றும் தாவரப் பொருட்களின் தரத்தினை நிச்சயப்படுத்தல்
- இறக்குமதியாகும் விதைகள், பழங்கள் மற்றும் மரக்கறிகளின் தரத்தினை நிச்சயப்படுத்தல்
- தாவரச் சுகாதாரத் தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்யாத இறக்குமதிகளை தவிர்த்தல்
- உள்நுழைவுக்குப் பின்னரான தடுப்புக் காப்பு
- ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்குரிய தாவரங்கள் மற்றும் தாவர உற்பத்திப் பொருட்கள் மீது காணப்படுகின்ற பீடைகளை முற்றாக அழிப்பதற்கென பரிகரிப்புக்கள்
- உசாத்துணைக்குரிய சேகரிப்புக்களைப் பேணல்
- பங்குதாரர்களுக்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்
- தடுப்புக் காப்புடன் தொடர்பான ஆராய்ச்சிகள்
- தாவர நாற்றுமேடைகளின் பதிவு பரிகரிப்பு வழங்குநர்களிடம் கிடைக்கக்கூடியதாயுள்ள வசதிகளை மதிப்பிடல்
- தாவரச் சுகாதாரச் சான்றிதழ் வழங்குதல்
- இறக்குமதிக்குரிய அனுமதிப் பத்திரம் வழங்குதல் (தாவரங்கள் மற்றும் தாவர உற்பத்திகளுக்கான)

## அலுவலர் பட்டியல்

### (NPQS) கட்டுநாயக்க

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| மேலதிகப் பணிப்பாளர் | 01 |
| ஆராய்ச்சிஅலுவலர் | 05 |
| விவசாய உத்தியோகத்தர் | 02 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 |
| விவசாயக் கண்காணிப்பு அலுவலர் | 02 |
| நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | 05 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 06 |
| அபிவிருத்தி அலுவலர் | 02 |
| விவசாயப் போதனாசிரியர் | 15 |
| விதை தொழிநுட்பவியளாா் | 01 |
| தொழிநுட்ப உதவியாளர் | 01 |
| ஆய்வுகூட உப உதவியாளர் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | 06 |
| சாரதி | 05 |
| மின்னியலாளர் | 01 |
| காரியாலய சிறு உதவியாளர் | 02 |
| தொழிலாளி | 04 |
| தொழிலாளி ஒப்பந்தம் | 07 |
| காவலாளி | 06 |
| **மொத்தம்** | **73** |

### PQS (துறைமுகம்)

| நிரல் | எண்ணிக்கை |
|---|---|
| ஆராய்ச்சி பொறுப்பதிகாரி | 01 |
| விவசாய உத்தியோகத்தர் | 04 |
| விவசாய கண்காணிப்பு அலுவலர் | 03 |
| நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | 01 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 06 |
| விவசாயப் போதனாசிரியர் | 11 |
| முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| தொழிலாளி (நிரந்தரம்) | 01 |
| **மொத்தம்** | **28** |

### PQS (விமான நிலையம்)

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| விவசாயப் பொறுப்பதிகாரி | 01 |
| விவசாய உத்தியோகத்தர் | 01 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 02 |
| விவசாயப் போதனாசிரியர் | 13 |
| முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| தொழிலாளி | 02 |
| **மொத்தம்** | **20** |

### PSQ (கன்னொறுவை)

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| நிலையப் பொறுப்பதிகாரி | 01 |
| தொழிலாளி | 01 |
| **மொத்தம்** | **02** |

## 2.3 விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையம் (SPMDC), பேராதனை

விதை மற்றும் நடுகைப் பொருளின் உயர் தரமானது, விளைச்சலை அதிகரிப்பதற்கும் விளைபொருளின் தரத்தினை உயர்த்துவதற்கும் அலகிற்கான உற்பத்திச் செலவினைக் குறைப்பதற்கும் மிக முக்கியமானதாகும். விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையமானது வித்துக்களையும் நடுகைப் பொருட்களையும் வினைத்திறனாகவும் செயற்திறனுடனும் தயாரித்து நாடுமுழுவதிலும் விநியோகிப்பதிலும் சந்தைப்படுத்துவதிலும் பிரதான பங்கினை வகிக்கின்றது. அந்த வகையில் உள்ளூரில் சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்கள், மறுவயற்பயிர்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு போன்றவற்றின் அடிப்படை விதைகளையும் தரமான மரக்கறிகள், பழங்களுக்கான நடுகைப் பொருட்களையும் தயாரித்து விநியோகிப்பதிலும் சந்தைப்படுத்துவதிலும் இந்நிலையம் பிரதான சவால்களை எதிர்நோக்குகின்றது. SPMDC ன் கீழ் 30 விதையுற்பத்தி பண்ணைகள் இயங்குகின்றன. இப்பணைகளில் மேற்கூறப்பட்ட பயிர்களுக்கான அடிப்படை விதைகள், மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நடுகைப் பொருள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இருப்பினும் நெல், மறுவயற்பயிர்களுக்கான அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகளும் மரக்கறிப் பயிர்களுக்கான நியம விதைகளும் ஒப்பந்த அடிப்படையில் செய்கை பண்ணுவோரால் நாடளாவிய ரீதியில் பரந்துள்ள 13 பிராந்திய உதவி விவசாயப் பணிப்பாளர்களின் கீழ் உற்பத்தி செய்யப்படுகின்றது. தற்போது SPMDC ஆனது தனது தொழிற்பாடுகளை மேற்கூறப்பட்டவாறு பிராந்திய ரீதியில் பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) மூலம் மேற்கொள்கின்றது. இந்த பிரதி விவசாயப் பணிப்பாளர்கள், பணிப்பாளர் SPMDC, மேலதிக பணிப்பாளர் (நெல்லும் மறுவயற்ப்பயிர்களும்), மேலதிகப் பணிப்பாளர் (மரக்கறிகளும் நடுகைப் பொருட்களும்), மேலதிக பணிப்பாளர் (உருளைக் கிழங்கு), மற்றும் தலைமைப்பீட பிரதிப் பணிப்பாளர்கள் உதவி விவசாயப் பணிப்பாளர்களின் வழிநடத்தலிலும் கண்காணிப்பின் கீழும் கடமைகளை மேற்கொள்கின்றனர். SPMDC ன் பணிக்கூற்று யாதெனில் இலங்கையிலுள்ள விவசாய சமூகத்திற்கு தரம் உறுதிப்படுத்தப்பட்ட விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை போட்டி விலையில் வழங்குதல் ஆகும். அத்துடன் அரச பண்ணைகளில் அடிப்படை மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அல்லது நியம விதைகளை அத்தாட்சிப்படுத்தப்பட்ட நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தல், அடிப்படை விதைகளை விதையுற்பத்தியார்களுக்கு விநியோகித்தல் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகளை ஒப்பந்த அடிப்படையில் வளர்ப்போரின் மூலம் பெருக்கி வர்த்தக உற்பத்தியாளர்களுக்கு விநியோகித்தல், அரச பண்ணைகளை முகாமைத்துவம் செய்தல், விதையுற்பத்தியின் அபிவிருத்தியும் ஒருங்கிணைப்பும், விதையின் தாங்கல் தொகுதியை (buffer stock) பேணுதல், விதை மற்றும் நடுகைப் பொருள் வழங்கலை ஒருங்கிணைத்தல் போன்றவை SPMDC ன் பிரதான தொழிற்பாடுகளாகும்.

### நோக்கங்கள்

- அடிப்படை மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை மற்றும் நடுகைப் பொருட்களின் உற்பத்தியை, பதப்படுத்தலை, களஞ்சியப்படுத்தலை விநியோகத்தினை உறுதிப்படுத்தல்
- அரச மற்றும் தனியார் துறையில் விதை மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தியை, அபிவிருந்த்தி செய்வதற்கான தொழிநுட்ப உதவிகள் மற்றும் ஆதரவுகளை வழங்கல்
- விதை நடுகைப்பொருள் உற்பத்தியாளர் களுக்கு தேவையான பயிற்சிக்குரிய

வசதிகளையும் தகவல்களையும் எல்லா வழிகளிலும் வழங்குதல்

- நாட்டின் விதை மற்றும் நடுகைப் பொருள் பாதுகாப்பினைப் பெற்றுக் கொள்ளல்

## பாதீடு

**அட்டவணை 2.3.1: வருடாந்தப் பாதீடு ~ 2013 (மில்லியன் ரூபாய்கள்)**

| செலவுத்தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு% |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 65.775 | 44.70 | 68 |
| மீண்டுவரும் செலவு | 79.8 | 157.6 | 197 |
| விதையுற்பத்தித் திட்டம் | 250 | 223.47 | 89 |
| (JAICA) | 29.4 | 13.6 | 46 |
| துரித விதைப் பண்ணை அபிவிருத்தி திட்டம் | 200.0 | 193.81 | 97 |
| **மொத்தம்** | **624.98** | **633.18** | |

## முன்னேற்றம்

### விதைநெல்லின் உற்பத்தியும், வழங்கலும்

**அரச பண்ணைகளின் 2013ம் ஆண்டில் அடிப்படை விதை நெல் உற்பத்தி மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் உற்பத்தி**

10 அரச விதையுற்பத்திப் பண்ணைகளில் 25 சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்களின் அத்திவார விதைகள் (FSP) பதிவுசெய்யப்பட்ட விதைகள் (RSP) உற்பத்தி செய்யப்பட்டன. அத்திவார விதை நெல் உற்பத்திக்கு வேண்டிய இனவிருத்தியாளர் விதைகள் பத்தலகொடவி லுள்ள நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (RRDI), மற்றும் இதன் உப நிலையங்களான பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (RARDC), போம்புவெல விவசாய ஆராய்ச்சி நிலையம் (RRS), லபுதுவ அம்பலாந்தோட்ட விலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையம் (ARS) ஆகியவற்றால் வழங்கப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட விதை நெல்லானது அத்திவார விதைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும். அத்துடன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல்லானது பதிவு செய்யப்பட்ட விதை நெல்லிலிருந்தும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல்லிலிருந்து நுகர்விற்கான நெல்லும் உற்பத்தி செய்யப்படுகின்றது.

2013ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட விதை நெல் உற்பத்தியானது ஏறத்தாழ 122.156 புசல்கள் ஆகும். இது தேசிய ரீதியிலான தேவையின் 25% ஆகும். (400,00 புசல்கள்) இருப்பினும் RSP உற்பத்தியானது (122,156

புசல்கள்) நாட்டின் தேசிய CSP தேவையின் 76% னை (4,864,000 புசல்கள்) உற்பத்தி செய்வதற்குப் போதுமானதாகும்.

அத்திவார (FSP) விதை நெல் உற்பத்தியானது 7844 புசல்கள் இது தேசிய தேவையினை (4000 புசல்கள்) விஞ்சியமை குறிப்பிடத்தக்கது. மேலும் 11,154 புசல்கள் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் (CSP) உற்பத்தி செய்யப்பட்டிருகிறது இது FSP னதும் RSP னதும் தரம் குறைக்கப்பட்ட நெல்லாகும்.

அட்டவணை 2.3.2: பண்ணைவாரியான விதை நெல்லுற்பத்தியானது 2012 / 2013 பெருபோகம், 2013 சிறுபோகம் ஆகியவற்றிக்குத் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.3.2: 2013ம் ஆண்டில் அரச விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட விதை நெல் உற்பத்தி**

| பண்ணை | 2012/2013 பெரும்போகம் | | | 2013 சிறுபோகம் | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | FSP | RSP | CSP | FSP | RSP | CSP | FSP | RSP | CSP |
| அளுத்தறம | 4.182 | 72.98 | 5.92 | 9.84 | 95.65 | 14.74 | 14.02 | 168.63 | 20.66 |
| மல்வத்த | 4.82 | 87.88 | 8.53 | 12.92 | 169.43 | 75.32 | 17.74 | 257.31 | 83.85 |
| பொலனறுவை | 13.71 | 331.61 | 0 | 12.81 | 348.00 | 0 | 26.52 | 679.61 | 0 |
| பட்டாத்தை | 2.53 | 60.84 | 13.97 | 0 | 38.34 | 18.27 | 2.58 | 99.18 | 32.24 |
| அம்பலான்தோட்டை | 3.34 | 84.46 | 4.78 | 3.22 | 57.11 | 0 | 6.56 | 141.57 | 4.78 |
| மகாஇலுப்பள்ளம | 33.89 | 349.18 | 56.92 | 24.33 | 213.28 | 18.35 | 58.22 | 562.46 | 75.27 |
| குண்டசாலை | 6.36 | 169.29 | 0.08 | 17.63 | 222.52 | 4.08 | 23.99 | 391.81 | 4.16 |
| முருங்கன் | 3.16 | 57.60 | 11.30 | 0 | 0 | 0 | 3.16 | 57.60 | 11.30 |
| பரந்தன் | 4.88 | 69.99 | 10.95 | 3.14 | 24.17 | 22.79 | 8.02 | 94.16 | 33.74 |
| கரடியனாறு | 0 | 17.12 | 9.72 | 0 | 34.75 | 22.92 | 0 | 51.87 | 32.64 |
| **மொத்தம் (தொன்)** | **76.92** | **1300.95** | **122.17** | **83.89** | **1203.25** | **176.47** | **160.81** | **2504.25** | **298.64** |
| **மொத்தம் (புசல்)** | **3752** | **63461** | **5960** | **4092** | **58** | **695 5194** | **7844** | **122156** | **11154** |

இருப்பினும் SPMDC ஆனது அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல்லினை கடந்த காலங்களில் ஒப்பந்த அடிப்படையிலான உற்பத்தி திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்தது. 2013ம் ஆண்டில் CSP உற்பத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட வில்லை. காரணம் விவசாய அமைச்சினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கிணங்க வாகும்.

## விதை நெல் விநியோகம்

அட்டவணை 2.3.3. ல் விதை நெல்லுற்பத்திக்கு SPMDC னால் விநியோகிக்கப்பட்ட விதை நெல் மற்றும் 2013ம் ஆண்டில் வர்த்தக ரீதியான பயிர்ச் செய்கையும் தரப்பட்டுள்ளது.

இனவிருத்தியாளர் விதையில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட அத்திவார விதைகள் பதிவு செய்யப்பட்ட விதை நெல்லுற்பத்திக்கு முந்தைய போகத்தில் பயன்படுத்தப்பட்டது. பதிவு செய்யப்பட்ட விதை நெல்லும் சிறியளவிலான அத்திவார விதை நெல்லும் அத்தாட்சிப்படுத்தப் பட்ட விதை நெல்லுற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டது. அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகள் பிரதானமாக தனியார் துறை கம்பனிகளால் விவசாய அமைப்புக்களால் தனிபட்ட விவசாயிகளால் சில மகாவலி மற்றும் மாகாண அமைப்பிலுள்ள விவசாயப் பண்ணைகளால் உற்பத்தி செய்யப்படுகின்றது. 2013ம் ஆண்டு மொத்த பதிவு செய்யப்பட்ட விதை நெல் வழங்கலானது 2215.92. மெ.தொ (108.094 புசல்கள்) அத்துடன் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல்லானது 320.63 மெ.தொ (15.640 புசல்கள்) ஆகும்.

**அட்டவணை 2.3.3: 2013ம் ஆண்டில் DOA னால் விநியோகிக்கப்பட்ட விதை நெல் (மெ.தொன்)**

| பருவ காலம் | நிகழ்ச்சித் திட்டம் | அத்தி வார விதை | பதிவு செய்யப் பட்டது | மொத்தம் | அத்தாட் சிப்படுத்த பட்டது | மொத்தம் (தொன்) | மொத்தம் (புசல்) |
|---|---|---|---|---|---|---|---|
| 2013 சிறுபோகம் | பண்ணை | 25.91 | 5.35 | 31.26 | 0.57 | 31.83 | 1553 |
| | ஒப்பந்த அடிப்படை | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | தனியார் | 3.67 | 290.0 | 293.67 | 11.42 | 305.09 | 14882 |
| | விரிவாக்கம் | 5.95 | 641.28 | 647.23 | 72.88 | 720.11 | 35127 |
| | **மொத்தம்(மெ.தொ)** | **35.53** | **936.63** | **972.16** | **84.87** | **1057.03** | |
| | **மொத்தம் (புசல்)** | **1733** | **45689** | **47422** | **4140** | | **51562** |
| 2013/14 காலபோகம் | பண்ணை | 34.5 | 3.94 | 38.44 | 0.94 | 39.38 | 1921 |
| | ஒப்பந்த அடிப்படை | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | தனியார் | 8.53 | 391.51 | 328.04 | 5.55 | 333.59 | 16273 |
| | விரிவாக்கம் | 17.55 | 955.84 | 973.39 | 229.27 | 1202.66 | 58666 |
| | **மொத்தம்(மெ.தொ)** | **60.58** | **1279.29** | **1339.87** | **235.76** | **1575.63** | |
| | **மொத்தம் (புசல்)** | **2955** | **62404** | **65359** | **11500** | | **76859** |
| 2013 ல் வழங்கிய அளவு | பண்ணை | 60.41 | 9.29 | 69.70 | 1.51 | 71.21 | 3474 |
| | ஒப்பந்த அடிப்படை | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | தனியார் | 12.20 | 609.51 | 921.71 | 16.97 | 638.68 | 31155 |
| | விரிவாக்கம் | 23.50 | 1597.12 | 1620.62 | 302.15 | 1922.77 | 93793 |
| | **மொத்தம்(மெ.தொ)** | **96.11** | **2215.92** | **2312.03** | **320.63** | **2632.66** | |
| | **மொத்தம் (புசல்)** | **4688** | **108094** | **112782** | **15640** | | **128422** |

## மறுவயற்பயிர் விதைகளின் உற்பத்தியும் விநியோகமும்

பன்னிரண்டு வகையான மறுவயற்பயிர்களுக்குரிய முப்பத்து மூன்று வர்க்கங்கள் நான்கு விதை வகுப்புக்களை உள்ளடக்கி உற்பத்தி செய்யப்பட்டது. (அத்தவார விதை, பதிவு செய்யப்பட்ட விதை, அத்தாட்சிப்படுத்தப விதை மற்றும் வர்த்தக விதை) மொத்த உற்பத்தியானது 615 மெ.தொன்கள். இது 2012ம்

ஆண்டுடன் (514 மெ.தொ) ஒப்பிடும் போது 20% உயர்வானது

### அடிப்படை விதை (அத்திவார விதை, பதிவு செய்யப்பட்ட விதை) உற்பத்தி

இவ்வருடம் அடிப்படை விதையுற்பத்தியானது (அத்திவார விதை, பதிவு செய்யப்பட்ட விதை) 99.816Kg ஆகும். இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 41% அதிகமாகும். (70,750Kg) அடிப்படை விதையுற்பத்தியானது பயறு, சோயாஅவரை, நிலக்கடலை போன்ற பயிர்களின் விதைகளுக்கு எழுந்த உயர் கேள்வி காரணமாக அதிகரிக்கப்பட்டது. இதனால் மறுவயற்பயிர்களின் உற்பத்தித் திட்டம் விரைவுபடுத்தப்பட்டது. சோள விதையுற்பத்தி குறைவாகக் காணப்பட்டது. காரணம் இதற்குரிய தாங்கல் இருப்பு குறைவாகக் காணப்பட்டமையாகும். அட்டவணை 2.3.4 ல் இவ்வருடம் அரச பண்ணைகளால் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த அத்திவாரவிதைகளும் அரச பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பதிவு செய்யப்பட்ட விதைகளின் மொத்தத் தொகையையும் தரப்பட்டுள்ளது.

### அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை உற்பத்தி

அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகள் பிரதானமாக ஒப்பந்த அடிப்படையிலான கலப்பின விதையான சம்பத் சோள இனம் அரச விதையுற்பத்திப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டது. (மகா இலுப்பள்ளமை, அளுத்தறம, பட்டாத்த) மொத்தமாக உற்பத்தி செய்யப்பட்ட அத்தாட்சிப்படுத்தப்பட்ட நெல்லானது 515mt ஆகும். இது 2012ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 16% அதிகரிப்பாகும். (அட்டவணை 2.3.5) இது பிரதானமாக இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த அடிப்படையிலான பயறு, சோயா அவரை, சோளம் (OPV) விதை உற்பத்திகளினாலாகும். அரச விதையுற்பத்திப் பண்ணைகளிலும் ஆராய்ச்சி நிலையங்களிலும் பசுந்தாட் பசளைக்குரிய தாவரமாக பயன்படுத்துவதற்கு அதிகளவு சணல் வர்த்தக ரீதியான வித்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

### மறுவயற்பயிர்களின் வித்துக்களின் விநியோகம்

அட்டவணை 2.3.6.ல் 2013ம் ஆண்டு விநியோகிக்கப்பட்ட அடிப்படை வித்துக்களின் (அத்திவார விதை, பதிவு செய்யப்பட்ட) அளவுகள் தரப்பட்டுள்ளது. மொத்தமாக 2013ல் விநியோகிக்கப்பட்ட மறுவயற்பயிர்களின் வித்துக்களின் அளவு 470.62 மெ.தொன்கள் ஆகும். இது சென்ற ஆண்டுடன் ஒப்பிடும் போது 14.7% குறைவாகும். (551.64 மெ.தொ) இதற்குப் பிரதான காரணம் சோளம், சோயா அவரைமற்றும் பயறுக்கான கேள்வி குறைவாக இருந்ததுடன் நிலக்கடலை, கௌபி வித்துக்களுக்கான வழங்கல் குறைவாக இருந்தமையும் ஆகும்.

## அட்டவணை 2.3.4: 2013ம் ஆண்டில் மறுவயற்பயிர்களுக்கான அடிப்படை விதை உற்பத்தி (kg)

| பயிர் | அடிப்படை விதைப் பண்ணை | | | விதைப் பண்ணை | | | பதிவு செய்யப்பட்ட விதை ஒப்பந்த அடிப்படையிலான திட்டம் | | | உப மொத்த | அடிப்படை உற்பத்தி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012/ 13 பெரு போகம் | 2013 சிறு போகம் | மொத்தம் | 2012/ 13 பெரு போகம் | 2013 சிறு போகம் | மொத்தம் | 2012/ 13 பெரு போகம் | 2013 சிறு போகம் | மொத்தம் | | |
| உழுந்து | 1498 | 922 | 2420 | 511 | 997 | 1508 | 953 | 5938 | 6891 | 8399 | 10819 |
| மிளகாய் வித்து | 165 | 443 | 607 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 607 |
| கௌபி | 289 | 0 | 289 | 3675 | 2262 | 5937 | 1015 | 1865 | 2880 | 8817 | 9106 |
| எள்ளு | 0 | 15 | 15 | 0 | 103 | 103 | 57 | 410 | 467 | 570 | 585 |
| பயறு | 522 | 822 | 1344 | 275 | 1358 | 1633 | 648 | 40099 | 40747 | 42380 | 43723 |
| நிலக்கடலை | 1739 | 85 | 1824 | 351 | 4675 | 5026 | 237 | 0 | 237 | 5262 | 7086 |
| குரக்கன் | 350 | 601 | 951 | 1559 | 1026 | 2584 | 228 | 274 | 502 | 3086 | 4037 |
| சோளம்(OPV)* வித்துக்கள் | 1436 | 0 | 1436 | 1275 | 2854 | 4129 | 3905 | 1263 | 5168 | 9297 | 10733 |
| சோயாஅவரை | 200 | 0 | 200 | 420 | 859 | 1279 | 0 | 11642 | 11642 | 12921 | 13121 |
| **மொத்தம்** | **6198** | **2887** | **9086** | **8066** | **14132** | **22198** | **7043** | **61489** | **68532** | **90731** | **99816** |

(OPV)* திறந்த மகரந்தச் சேர்க்கை அடையும் வர்க்கங்கள்

## அட்டவணை 2.3.5: 2013ம் ஆண்டில் அரச விதைப் பண்ணைகளில் ஒப்பந்த அடிப்படையில் வளர்ப்போரால் உற்பத்தி செய்யப்பட்ட அத்தாட்சிப்படுத்தப்பட்ட OFC விதைகள் (Kg)

| பயிர்கள் | விதைப் பண்ணைகள் 2012/ 13 பெரும் போகம் Ct/St/F1 | Com | மொத்தம் | 2013 சிறுபோகம் Ct/St/F1 | Com | மொத்தம் | உப மொத்தம் | ஒப்பந்த அடிப்படையிலான திட்டம் 2012/ 13 பெரும் போகம் Ct/St/F1 | Com | மொத்தம் | 2013 சிறுபோகம் Ct/St/F1 | Com | மொத்தம் | உபமொத்தம் | முழு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உழுந்து | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 25411 | 1159 | 26570 | 18437 | 1507 | 19944 | 46514 | 46514 |
| மிளகாய் வித்து | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 3070 | 0 | 3070 | 5319 | 0 | 5319 | 8389 | 8389 |
| கௌபி | 0 | 0 | 0 | 181 | 0 | 181 | 181 | 3375 | 365 | 3740 | 14812 | 3095 | 17907 | 21647 | 21828 |
| எள்ளு | 161 | 0 | 161 | 0 | 0 | 0 | 161 | 669 | 108 | 777 | 1411 | 547 | 1958 | 2735 | 2896 |
| பயறு | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 9217 | 1811 | 11028 | 123464 | 40749 | 164213 | 175241 | 175241 |
| நிலக்கடலை | 85 | 0 | 85 | 782 | 9680 | 1750 | 1835 | 11281 | 13613 | 24894 | 27722 | 33077 | 60799 | 85693 | 87528 |
| குரக்கன் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1377 | 56 | 1433 | 456 | 0 | 456 | 1889 | 1889 |
| சோளம் (OPV)* வித்துக்கள் | 858 | 0 | 858 | 539 | 0 | 539 | 1397 | 65515 | 2565 | 68080 | 16245 | 3249 | 19494 | 87574 | 88971 |
| சோளம் (சம்பத்) வித்து | 4154 | 0 | 4154 | 537 | 0 | 537 | 4691 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 4691 |
| சோயாஅவரை | 0 | 0 | 0 | 265 | 0 | 265 | 265 | 3958 | 284 | 4242 | 43938 | 24946 | 68884 | 73126 | 73391 |
| சணல் | 0 | 17 | 17 | 0 | 4067 | 4067 | 4084 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 4084 |
| **மொத்தம்** | **5258** | **17** | **5275** | **2304** | **5035** | **7339** | **12614** | **122873** | **19961** | **143834** | **2 51804** | **107170** | **358974** | **502808** | **515422** |

ct – அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகள் st - நியம விதைகள் $F_1$ - $F_1$ விதைகள்

com – வர்த்தக விதைகள்

## அட்டவணை 2.3.6: 2013ம் ஆண்டு விநியோகிக்கப்பட்ட OFC வித்துக்கள் (kg)

| பயிர் | 2013 சிறுபோகம் (kg) Ct/St | | | | | | 2013 / 14 பெரும் போகம் (kg) Ct/St | | | | | | 2013ம் ஆண்டு (kg) Ct/St | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Br. | Fd/Ba | Rg | $F_1$ | Cm | மொத்தம் | Br. | Fd/Ba | Rg | f1 | Cm | மொத்தம் | Br. | Fd/Ba | Rg | f1 | Cm | மொத்தம் |
| உழுந்து | 75 | 335 | 1247 | 15268 | 4357 | 21282 | 43 | 123 | 3085 | 25648 | 1637 | 30526 | 119 | 458 | 4332 | 40916 | 5994 | 51818 |
| மிளகாய் | 2 | 158 | 0 | 162 | 1999 | 2321 | 3 | 308 | 0 | 912 | 2945 | 4168 | 5 | 466 | 0 | 1074 | 4944 | 6489 |
| கௌபி | 0 | 526 | 4876 | 4462 | 203 | 10067 | 42 | 315 | 1908 | 8182 | 1692 | 12139 | 42 | 841 | 6784 | 12644 | 1895 | 22206 |
| எள் | 20 | 35 | 312 | 690 | 213 | 1288 | 0 | 5 | 199 | 2684 | 454 | 3342 | 20 | 40 | 511 | 3374 | 685 | 4630 |
| பயறு | 84 | 1446 | 5762 | 9934 | 6119 | 23345 | 65 | 176 | 24761 | 126059 | 19720 | 170780 | 149 | 1622 | 30523 | 135993 | 25839 | 194125 |
| நிலக்கடலை | 168 | 581 | 285 | 7903 | 15269 | 24205 | 97 | 693 | 1820 | 28547 | 47575 | 78731 | 265 | 127391 | 2105 | 36450 | 62843 | 102936 |
| குரக்கன் | 9 | 61 | 678 | 237 | 177 | 1162 | 4 | 30 | 2526 | 1427 | 272 | 4259 | 13 | 1475 | 3204 | 1664 | 449 | 5421 |
| சோளம் (OPV)* | 50 | 887 | 6892 | 716 | 0 | 8545 | 206 | 588 | 5247 | 33422 | 0 | 39462 | 256 | 0 | 12139 | 34138 | 0 | 48007 |
| (கலப்பினம்) | 0 | 0 | 0 | 274 | 0 | 274 | 0 | 0 | 0 | 1070 | 0 | 1070 | 0 | 872 | 0 | 1344 | 0 | 1344 |
| சோயாஅவரை | 80 | 596 | 556 | 2617 | 3735 | 7584 | 172 | 276 | 4590 | 16494 | 4011 | 25542 | 252 | 0 | 5146 | 19111 | 7746 | 33126 |
| சணல் | 0 | 3 | 0 | 0 | 0 | 3 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 3 |
| பெரிய வெங்காயம் | 0 | 0 | 0 | 0 | 308 | 308 | 0 | 0 | 0 | 0 | 216 | 216 | 0 | 0 | 0 | 0 | 524 | 524 |
| **மொத்தம்** | **488** | **4627** | **20608** | **42263** | **32398** | **100383** | **632** | **2512** | **44136** | **244445** | **78521** | **370245** | **1119** | **7140** | **64744** | **286708** | **110919** | **470628** |

Br - இனவிருத்தியாளர் விதை fd - அத்திவார விதை Ba - அடிப்படை விதை Rg - பதிவு செய்யப்பட்ட விதை

## மரக்கறி வித்துக்களின் உற்பத்தியும் வழங்கலும்

### அடிப்படை வித்துக்களின் உற்பத்தி

நாட்டில் 18 மரக்கறிப் பயிர்களுக்கான விவசாயத் திணைக்களத்தின் 55 சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கங்கள் காணப்படுகின்றன. பதினொரு அரச விதையுற்பத்திப் பண்ணைகளில் சில வர்க்கங்களுக்குரிய அடிப்படை வித்துக்களின் உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டன. (அட்டவணை 2.3.7) 2013ம் ஆண்டில் உற்பத்தி அளவிலும் (6213.70kg) குறைவாகும். இது பிரதானமான போஞ்சியில் குறைந்த உற்பத்தியிலாகும்.

**அட்டவணை 2.3.7: 2013ல் அரச பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட அடிப்படை மரக்கறி வித்துக்கள்**

| பயிர் | உற்பத்தி செய்யப்பட்ட அளவு (kg) | | |
|---|---|---|---|
| | 2012 / 13 பெரும்போகம் | 2013 சிறுபோகம் | மொத்தம் |
| போஞ்சி | 1897.0 | 590.0 | 2487.0 |
| பாகற்காய் | 43.3 | 43.7 | 87.0 |
| கத்தரிக்காய் | 0 | 37.3 | 37.3 |
| புஷிட்டாவோ | 423.1 | 45.0 | 468.1 |
| பயற்றை | 357.5 | 191.0 | 548.5 |
| வெண்டி | 0 | 139.1 | 139.1 |
| புடோல் | 79.1 | 95.0 | 174.1 |
| சிறகவரை | 124.0 | 49.2 | 173.2 |
| தக்காளி | 41.3 | 65.5 | 106.8 |
| முளைக்கீரை | 172.0 | 0 | 172.0 |
| பீர்க்கு | 0 | 3.6 | 3.6 |
| கெக்கரி | 19.1 | 86.1 | 105.2 |
| வத்தகை | 1.2 | 0 | 1.2 |
| முள்ளங்கி | 300.0 | 0 | 300.0 |
| **மொத்தம்** | **3157.6** | **1345.5** | **4503.1** |

### நியம மரக்கறி விதையுற்பத்தி (Standard Vegetable Seed Production)

நியம விதையுற்பத்தியில் அரச மற்றும் தனியார் துறையினர் ஈடுபடுகின்றனர். அட்டவணை 2.3.8ல் SPMDC கீழ் இயங்கும் அரச பண்ணைகளாலும் ஒப்பந்த அடிப்படையிலான வளர்ப்போரினாலும் உற்பத்தி செய்யப்பட்ட அளவு தரப்பட்டுள்ளது. 2013ம் ஆண்டிற்கான மொத்த உற்பத்தி முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 50% உயர்வாக இருந்தது. (42,809.3kg. இது அடிப்படை விதையுற்பத்திக் கான எதிரான நிலையாகும். இவ்வகையான உயர் உற்பத்தியானது பிரதானமாக பாகற்காய், புசிடாவோ அவரை, பயற்றை, புடோல் சிறகவரை, முள்ளங்கி, கெக்கரி வித்துக்கள் ஒப்பந்த அடிப்படையிலான உற்பத்தித் திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்டமையாகும்.

**அட்டவணை 2.3.8: 2013ல் விவசாயத் திணைக்களத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட நியம மரக்கறி விதை (kg)**

| பயிர் | பண்ணை நிகழ்ச்சிகள் | | | ஒப்பந்த அடிப்படையிலான நிகழ்ச்சிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2012/13 பெரும் போகம் | 2013 சிறு போகம் | மொத் தம் | 2012/13 பெரும் போகம் | 2013 சிறு போகம் | மொத் தம் | முழு மொத்தம் |
| போஞ்சி | 0 | 0 | 0 | 18626.5 | 96.0 | 18722.5 | 18722.5 |
| பாகல் | 51.9 | 126.9 | 178.8 | 2257.4 | 4616.0 | 6873.4 | 7052.2 |
| கத்தரி | 97.8 | 42.0 | 139.8 | 0 | 84.1 | 84.1 | 223.9 |
| புஷிடாவோ | 412.3 | 228.3 | 640.6 | 1776.0 | 6851.7 | 8627.7 | 9268.3 |
| கறிமிளகாய் | 70.8 | 108.6 | 179.4 | 1.3 | 0 | 1.3 | 180.7 |
| கெக்கரி | 40.6 | 0 | 40.6 | 381.1 | 548.9 | 930.0 | 970.6 |
| பீர்க்கு | 248.0 | 55.1 | 303.1 | 959.1 | 0 | 959.1 | 1262.0 |
| பயற்றை | 164.8 | 117.2 | 282.0 | 8418.2 | 1847.1 | 10265.3 | 10547.3 |
| வெண்டி | 642.0 | 0 | 642.0 | 2459.0 | 0 | 2469.0 | 3101.0 |
| புடோல் | 247.7 | 200 | 447.7 | 78.9 | 2413.4 | 296.2 | 4758.1 |
| தக்காளி | 123.0 | 188.0 | 311.0 | 78.9 | 190.2 | 296.01 | 580.1 |
| சிறகவரை | 1030.0 | 191.0 | 1221.0 | 1996.2 | 2065.5 | 4061.7 | 5282.7 |
| முளைக்கீரை | 541.3 | 0 | 541.3 | 0 | 0 | 0 | 541.3 |
| முள்ளங்கி | 100.0 | 0 | 100.0 | 1779.0 | 0 | 1779.0 | 1879.0 |
| பசளி | 25.6 | 0 | 25.6 | 0 | 0 | 0 | 0 |
| **மொத்தம்** | **3795.8** | **1257.1** | **5052.9** | **40629.7** | **18712.9** | **59342.6** | **64395.5** |

## கலப்பின மரக்கறி விதையுற்பத்தி

விதைப் பண்ணையில் ஒரு கத்தரி வர்க்கத்தினதும் இரண்டு தக்காளி வர்க்கத்தினதும் $F_1$ கலப்பின வித்துக்கள் வெற்றிகரமாக உற்பத்தி செய்யப்பட்டது. இது (அட்டவணை 2.3.9 ல் தரப்பட்டுள்ளது. கத்தரியானது குண்டசாலை, அம்பேபுச, அளுத்தறம போன்ற பண்ணைகளிலும் தக்காளி குண்டசாலைப் பண்ணையில் மாத்திரமும் உற்பத்தி செய்யப்படுகின்றது. மேற்கூறப்பட்ட பயிர்களுக்குமான $F_1$ விதை உற்பத்தியானது 2012ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மிகக் குறைவானதாகும்.

**அட்டவணை 2.3.9: 2013ல் ஆண்டில் அரச விதையுற்பத்தி பண்ணைகளில்உற்பத்தி செய்யப்பட்ட கலப்பின மரக்கறி வித்துக்கள் (kg)**

| பயிர் | 2012/ 13 பெரும் போகம் | 2013 சிறுபோகம் | மொத்தம் |
|---|---|---|---|
| தக்காளி | 1.5 | 2.3 | 3.8 |
| கத்தரி | 21.18 | 15.0 | 36.18 |
| **மொத்தம்** | **22.68** | **17.3** | **39.98** |

## மரக்கறி விதைகளின் விநியோகம்

மரக்கறி வித்துக்கள் DOAன் விற்பனை நிலையங்களினூடாக விநியோகிகப்பட்டது. அத்துடன் பதிவு செய்யப்பட்ட வழங்குநர் வலையமைப்பின் ஊடாகவும் விநியோகிக்கப் பட்டது. இவ்வகையான விநியோகஸ்தர்களுள் கமநல சேவைகள் நிலையங்கள் (ASCS) கூட்டுறவுச் சமூகங்கள், விவசாயிகள் கழகங்கள், மாகாண விவசாயத் திணைக்களங்கள், மற்றும் பதிவு செய்யப்பட்ட தனியார் விதை விற்பனையாளர்களால், DOA யினால் விநியோகிக்கப்பட்ட மரக்கறி விதைகள் அட்டவணை 2.3.10 ல் தரப்பட்டுள்ளது.

2012ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013ல் நியம விதைகளின் வழங்கல் மிகக் குறைவாகும். 2013ல் அடிப்படை விதைகளின் வழங்கல் 2012 உடன் ஒப்பிடும் போது சிறிதளவு குறைவாகும். எனினும் 2013ல் மொத்தவழங்கலானது 2012 உடன் ஒப்பிடும் போது குறைவானது.

**அட்டவணை 2.3.10: 2013ம் ஆண்டு விவசாயத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட மரக்கறி வித்துக்கள் (kg)**

| பயிர்கள் | அடிப்படை விதை | | | நியம விதை | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2013 சிறு போகம் | 2013 / 14 பெரும் | மொத்தம் போகம் | 2013 சிறு போகம் | 2013 / 14 பெரும் போகம் | மொத்தம் | முழு மொத்தம் |
| போஞ்சி | 74.3 | 80.8 | 155.1 | 4242.6 | 2981.4 | 7224.0 | 7379.1 |
| பாகல் | 122.8 | 357.94 | 480.7 | 128.6 | 1974.1 | 2102.7 | 2583.4 |
| கத்தரி | 4.713 | 3.585 | 8.3 | 87.06 | 410.56 | 497.6 | 505.9 |
| புஷிடாவோ | 370.3 | 80.9 | 451.2 | 210.2 | 744.15 | 954.4 | 1405.6 |
| கறிமிளகாய் | 3.74 | 1.0 | 4.7 | 79.6 | 154.13 | 233.7 | 238.5 |
| கெக்கரி | 12.4 | 1.2 | 13.6 | 36.65 | 20.88 | 57.5 | 71.1 |
| பீர்க்கு | 28.8 | 200.25 | 229.1 | 30.6 | 1020.75 | 1051.4 | 1280.4 |
| பயிற்றை | 146.2 | 61.0 | 207.2 | 671.0 | 3620.85 | 4291.9 | 4499.0 |
| வெண்டி | 200.65 | 168.195 | 368.8 | 705.9 | 2645.75 | 3351.7 | 3720.5 |
| சுண்டக்காய் | 0.005 | 0 | 0 | 0 | 1.5 | 1.5 | 1.5 |
| முள்ளங்கி | 5.14 | 126.5 | 131.6 | 60.0 | 510.45 | 570.5 | 702.1 |
| புடோல் | 60.4 | 40.2 | 100.6 | 195.2 | 476.85 | 672.1 | 772.7 |
| பசளி | 1.4 | 0.95 | 2.4 | 38.1 | 73.05 | 111.2 | 113.5 |
| வத்தகை | 0 | 0 | 0 | 41.5 | 11.6 | 53.1 | 53.1 |
| தக்காளி | 8.425 | 71.44 | 79.9 | 45.72 | 752.73 | 798.5 | 878.3 |
| சிறகவரை | 201.2 | 158.2 | 359.4 | 74.6 | 520.15 | 594.8 | 954.2 |
| முளைக்கீரை | 100.26 | 9.2 | 109.5 | 31.0 | 61.05 | 92.1 | 201.5 |
| **மொத்தம்** | **1340.8** | **1361.31** | **2702.1** | **6678.3** | **15979.95** | **22658.3** | **25360.3** |

## திவிநெகும நிகழ்ச்சித் திட்டத்திற்கு வழங்கிய வீட்டுத் தோட்டத்திற்குரிய மரக்கறி வித்துக்களின் பொதிகள்

2013ம் ஆண்டில் திவிநெகும திட்டத்தின கீழ் 1.2 மில்லியன்களுக்கு மேற்பட்ட 06 பயிர்வகைகள் கொண்ட பொதிகள் வழங்கப்பட்டன.

## விதை உருளைக்கிழங்கின் உற்பத்தியும் விநியோகமும்

2012/13 காலபோகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட முன் அடிப்படை (Go) அடிப்படை ($G_1$, $G_2$, $G_3$) மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட Granola உருளைக் கிழங்கு வர்க்கத்தின் வித்துக்கள் முறையே 0.155 மெ.தொ, 32.065 மெ.தொ 52.86 மெ.தொ ஆகும். 2013 சிறுபோகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட முன் அடிப்படை, மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட Granola வர்க்கத்தின் வித்துக்கள் முறையே 1.507 மெ.தொ, 253.726 மெ.தொ 131.415 மெ.தொ, ஆகும். ஆனால் உற்பத்தி செய்யப்பட்ட இலக்கு எய்தப்படவில்லை காரணம் எதிர்பார்க்கப்படாத கடும் மழை 2012/13 பெரும்போகத்திலும் 2013 சிறுபோகத்திலும் நிலவியமையாகும். 2013ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த விதை உருளைக் கிழங்கு 471.728 மெ.தொன்கள் (அட்டவணை 2.3.11)

**அட்டவணை 2.3.11: 2013ல் Granola வர்க்கத்தின் முன் அடிப்படை, அடிப்படை மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வித்துக்கள் (மெ. தொன்கள்)**

| பருவ காலம் | முன் அடிப்படை | அடிப்படை | அத்தாட் படுத்தப் பட்ட | மொத்தம் |
|---|---|---|---|---|
| பெரும் போகம் | | | | |
| 2012 / 13 | 0.155 | 32.065 | 52.860 | 85.080 |
| சிறுபோகம் | | | | |
| 2013 | 1.507 | 253.726 | 131.415 | 386.648 |
| **மொத்தம்** | **1.662** | **285.791** | **184.275** | **471.728** |

2013ம் ஆண்டு விதையுற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்ட விதை உருளைக் கிழங்கு 391.3 மெ. தொன்கள் ஆகும். (அதாவது 164.7 மெ.தொன்கள் 2013 சிறுபோகத்திலும் 228.4 மெ.தொன்கள் 2012 / 2013 பெரும் போகத்திலும் ஆகும்)

### நடுகைப் பொருள் உற்பத்தியும் வழங்கலும்

2013ல் உற்பத்தி செய்து வழங்கப்பட்ட நடுகைப் பொருட்கள் பண்ணை முற்பணக் கணக்கின் கீழ் நடுகைப் பொருள் உற்பத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. DOA ன் 20 பண்ணைகளில் தரமான நடுகைப் பொருள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தில் ஒட்டுத் தாவரங்கள், வேர்விட்ட தண்டுத் துண்டங்கள், நாற்றுக்கள், பழமரங்கன்றுகளின் உறிஞ்சிகள் மற்றும் வேறு சில தாவரங்களும் உற்பத்தி செய்யப்பட்டன. 2012ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது (547,019) இவ்வருடம் மொத்த உற்பத்தியானது 40% அதிகரிப்பைக் காண்பித்தது. அதாவது 768,045 கன்றுகள் இருப்பினும் இதனுள் குள்ளமான முருங்கை நாற்றுக்கள் 261,313 உள்ளடக்கப்படுகின்றது. இவ்வினம் திவிநெகும திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. ஒட்டு பழக் கன்றுகளின் வகையினுள் 17 பழக்கன்று வகைகள் உற்பத்தி செய்யப்பட்டன. மொத்தமாக 344941 கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. இது 2012ம் ஆண்டுடன் (311, 066) ஒப்பிடும் போது 10.8% அதிகம். மொத்தமாக வழங்கப்பட்ட நடுகைப் பொருட்கள் 599,999 ஆகும். இது சென்ற ஆண்டுடன் (230,895) ஒப்பிடும் போது 160% உயர்வானது அத்துடன் 2012ம் ஆண்டுடன் ஒப்பிடும் பொது (42%) 2013ம் ஆண்டில் 78% மான வழங்கல் அவதானிக்கப்பட்டது.

**அட்டவணை 2.3.12 2013ல் விவசாயத் திணைக்களத்தினால் உற்பத்தி செய்து வழங்கப்பட்ட நடுகைப் பொருட்கள்**

| பயிர்கள் | உற்பத்தி | வழங்கல் |
|---|---|---|
| **ஒட்டுக் கன்றுகள்** | | |
| ஆனைக்கொய்யா | 10012 | 9212 |
| Belifruit | 2715 | 1333 |
| டூரியன் | 9753 | 6183 |
| விளாம்பழம் | 1721 | 1827 |
| பலா | 12221 | 8102 |
| உக்கரச | 1139 | 567 |
| தேசி | 3028 | 1957 |
| மா | 147705 | 87766 |
| மன்டரின் | 13522 | 8528 |
| ஜம்பு | 3244 | 1386 |
| தோடை | 69852 | 47166 |
| ரம்புட்டான் | 50550 | 38834 |
| சீமைஇலுப்பை | 1646 | 1704 |
| ஸ்டார்பழம் | 4358 | 4542 |
| மங்குஸ்தான் | 232 | 52 |
| பேரிக்காய் | 4768 | 4667 |
| அப்பிள் | 149 | 133 |
| தரமுயர்வான தாவரங்கள் | 2164 | 1937 |
| ஏனையவை | 6162 | 4020 |
| **உப மொத்தம்** | **344941** | **229916** |
| **வேர் தண்டுத் துண்டம்** | | |
| திராட்சை | 390 | 376 |
| ஜம்பு | 2021 | 2323 |
| மாதுளை | 704 | 491 |
| லெமனி | 1582 | 1199 |
| டிரகன் பழம் | 2713 | 1718 |
| கிரனடில்லா | 200 | 177 |
| மிளகு | 3765 | 3755 |

| பயிர்கள் | உற்பத்தி | வினியோகம் |
|---|---|---|
| தரமுயர்வான தாவரங்கள் | 6 | 4 |
| ஏனையவை | 10388 | 9836 |
| **மொத்தம்** | **21769** | **19879** |
| **நாற்றுக்கள்** | | |
| அம்பரெல்லா | 6765 | 7394 |
| ஸ்டார் பழம் | 1257 | 750 |
| பப்பாசி | 9650 | 6348 |
| மாதுளை | 31586 | 24822 |
| கொய்யா | 7060 | 6763 |
| அகத்தி | 3534 | 2875 |
| முருங்கை | 261313 | 161313 |
| கறிவேப்பிலை | 95 | 84 |
| தேசி | 27506 | 15407 |
| நெல்லி | 390 | 331 |
| அன்னமுன்னா | 3855 | 2227 |
| கொடித்தோடை | 3307 | 4331 |
| தோடை | 10000 | 500 |
| தரமுயர்த்தப்பட்ட தாவரங்கள் | 1 | 1 |
| ஏனையவை | 15589 | 13801 |
| **மொத்தம்** | **381908** | **346947** |
| **உறிஞ்சிகள்** | | |
| வாழை | 1427 | 1457 |
| அன்னாசி | 18000 | 1800 |
| **மொத்தம்** | **768045** | **599999** |
| **மரக்கறி (காய்கள்)** | **17733** | **14117** |

## முன்னேற்றக் கணக்கின் செயலாற்றுகை

விவசாயப் பண்ணைகளின் பராமரிப்புக்குரிய 2013 ஆம் ஆண்டின் முற்பணக் கணக்கின் விதை விற்பனை மூலம் பெறப்பட்ட மொத்த வருமானம் ரூ 424,160,945.00 ஆகவும் ஏற்பட்ட மொத்த செலவு ரூ 413,984,763.00 ஆகவும் காணப்பட்டது. இதன்படி செலவின் மீதான மேலதிக வருமானம் ரூ 10,176,182.00 ஆகக் காணப்பட்டதுடன் மொத்த லாபமாக ரூ 138,315,003.00 பெறப்பட்டது. தேறிய இலாபம் ரூ 7,899,390.00 ஆகும். மேற்படி செலவு விபரம் அட்டவணை 2.3.13 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.3.13: 2013ல் ஆண்டில் முன்னேற்றக் கணக்கின் செயற்றிறன்**

| பண்ணை | இலாபம் / நட்டம் ரூ |
|---|---|
| அளுத்தரம | -6,269,957 |
| அம்பலாந்தோட்டை | 3,521,201 |
| அம்பேபுஸ்ஸ | 563,119 |
| பத்தாத்தை | -583,337 |
| கந்தபொல | 8,506,046 |
| கந்தளாய் | 12,133,285 |
| கரடியனாறு | -13,115,232 |
| குண்டசாலை | 6,411,842 |
| மகா இலுப்பள்ளம | 4,960,038 |
| மல்வத்தை | 5,434,585 |
| மீப்பிலமான | 2,593,324 |
| மீதெனிய | -2,782,333 |
| முருங்கன் | 374,838 |
| பரந்தன் | 4,521,213 |
| பீதுருதாலகால | 16,900,889 |
| பொலன்னறுவை | 19,170,824 |
| ரகன்கல | 3,626,805 |
| சீதாஎலிய | 13,980,511 |
| உடரல்ல | 12,664,226 |
| ஏனையவை (விற்பனை நிலையங்கள் / DD அலுவலகம்) | 45,602,526 |
| **மொத்தம்** | **138,315,000** |

## 2014ம் ஆண்டிற்கான திட்டம்

- பண்ணை அபிவிருத்தியின் கீழ் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை தொடர்தல், அதாவது நில அபிவிருத்தி, நீர்ப்பாசன வசதிகளின் அபிவிருத்தி, இயந்திரங்களின் கிடைக்கும் தன்மையை அதிகரித்தல், பண்ணை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், தட்டையான கற்களால் அமைக்கப்பட்ட பாதைகளை உருவாக்கல் போன்றவற்றின் மூலம் விதையுற்பத்திப் பண்ணையில் உற்பத்தித் திறனை அதிகரித்தல் மற்றும் அடிப்படை விதையுற்பத்திை
- ய மேம்படுத்தல்
- ஒப்பந்த அடிப்படையில் விதையுற்பத்தியை வலுப்படுத்தலும் நெல், மறுவயற்பயிர்கள், மரக்கறி போன்றவற்றின் அத்தாட்சிப்படுத்தப் பட்ட விதையுற்பத்தியை அதிகரித்தலாகும்
- 2014ம் ஆண்டு திவி நெகும தேசிய திட்டத்திற்கு வேண்டிய மரக்கறி வித்துப் பொதிகள் மற்றும் நடுகைப் பொருட்களின் வழங்கலின் 50% ஐ பங்களிப்புச் செய்தல்
- வித்துக்களின் வினியோகத்தினை புதிய விற்பனை நிலையம் ஒன்றினை திறந்து வைப்பதன் மூலம் மேம்படுத்தல்
- வித்துக்களின் பொதியாக்கத்தினை மேம்படுத்தல்

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| விவசாய உத்தியோகத்தர் | 38 |
| கணக்காய்வாளர் | 01 |
| விவசாயப் போதனாசிரியர் | 136 |
| பண்ணை இயந்திரப் போதனாசிரியர் | 01 |
| தொழிநுட்ப உதவியாளர் | 12 |
| விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர் | 02 |
| நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | 03 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 02 |
| முகாமைத்துவ உதவியாளர் | 82 |
| பண்ணை எழுதுவிளைஞர் | 30 |
| சாரதி | 30 |
| உழவு இயந்திர இயக்குனர் | 66 |
| பொறிதிருத்துனர் | 33 |
| மின்னியலாளர் | 02 |
| இயந்திர இயக்குனர் | 03 |
| மேசன் | 01 |
| தச்சன் | 03 |
| தாவர ஒட்டு வேலை செய்பவர் | 32 |
| தங்குமிட பராமரிப்பாளர் | 06 |
| KKS | 07 |
| களஞ்சிய உதவியாளர் | 24 |
| காவலாளி | 147 |
| பாரவூர்தி பராமரிப்பாளர் | 10 |
| விசேட களஞ்சிய பணியாளர்கள் | 01 |
| சுத்திகரிப்புத் தொழிலாளர் | 03 |
| தொழிலாளர் (தரம் III) | 304 |
| **மொத்தம்** | **977** |

## 2.4 சமூக பொருளாதார திட்டமிடல் நிலையம் (SEPC), பேராதனை

விவசாய கொள்கைகளை வகுப்பதிலும், ஆராய்ச்சி அபிவிருத்தித் திட்டமிடலிலும் சமூக, பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்வதிலும் விவசாயக் கொள்கைகளை பகுப்பாய்தலிலும் விவசாயத் திணைக்களத்திற்கும் விவசாய அமைச்சிற்கும் உதவுகின்ற ஓர் பிரதான ஆலோசனை உறுப்பாக சமூக பொருளாதார திட்டமிடல் நிலையம் தொழிற்படுகிறது. விவசாய புள்ளிவிபரத் தகவல்களைத் தொகுப்பதற்காக புள்ளி விபரவியல் அலகொன்றையும் இந்நிலையம் பேணி வருகின்றது. அத்துடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகள் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் விவசாயத் திணைக் களத்தின் கருத்திட்டங்களின் செயற்பாடு களையும் இந்நிலையம் ஒருங்கிணைத்து வருகிறது. 2013ம் ஆண்டில் சமூக பொருளாதார மற்றும் கொள்கை பகுப்பாய்வுகள் விவசாய அபிவிருத்தித் திட்டங்களின் பொருளாதார மற்றும் உள்ளீடுகளில் முதலீடு செய்வதற்கான கொள்கைகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டிருந்தன. ஆராய்ச்சி விடய அட்டவணைகளை இனங்கண்டு முன்னுரிமைப் படுத்துவதன் மூலம் விவசாயத் திணைக்களத்தின் பல்வேறுபட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை ஒரே போக்கில் செலுத்துவதிலும் உணவுத் தட்டுப்பாட்டுடன் அக்கறையான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு குறிப்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொருளாதார சூழல் நிலைமைகளின் மாற்றங்களுக்கமைய கொள்கை வகுப்பாளர்கள் உபாயமார்க்கங்களை விருத்தி செய்வதில் வழிகாட்டலிலும் இந்நிலையம் பங்களிப்புச் செய்கின்றது. மாவட்ட மற்றும் போக அடிப்படையில் சகல பிரதான உணவுப் பயிர்களின் செலவு மற்றும் வருமானங்களின் மீதான ஓர் தரவு அடிப்படையைக் கட்டியெழுப்புவதற்கான விசாலமான திட்டம் தொடரப்பட்டது.

### பாதீடு

மூலதனம், மீண்டுவரும் செலவினம் மற்றும் திட்டங்களின் கீழ் விசேட பாதீட்டு ஒதுக்கீடுகளும் செலவினங்களும் அட்டவணை 2.4.1 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.4.1: வருடாந்த பாதீடு ~2013 (ரூபாய்கள்)**

| செலவுத்தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு% |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 2,439,500 | 2,202,838 | 90 |
| மீண்டுவரும் செலவு | 2,247,378 | 4,170,873 | 98 |
| NARP- SEPC ஆராய்ச்சி | 1,331,600 | 1,265,855 | 95 |
| NARP ஆராய்ச்சி உத்தியோகத்தர் களின் ஆற்றலைக் கட்டியெழுப்புதல் | 1,960,300 | 0 | 0 |
| **மொத்தம்** | **8,018,478** | **9,978,778** | **77** |

### சமூக பொருளாதார ஆய்வு

பதின்மூன்று சமூக பொருளாதார ஆராய்ச்சி ஆய்வுகளுள் ஏழு ஆய்வுகள் பூர்த்தியாக்கப் பட்டன, ஒரு ஆய்வு கைவிடப்பட்டது, மற்றும் எஞ்சிய ஐந்து ஆய்வுகள் 2014ம் ஆண்டில் தொடரப்படும். இலங்கையில் காலநிலை மாற்றத்தால் நெல் உற்பத்தியின் பாதிப்புக்கள், காலநிலை மாற்றத்தை விவசாயிகள் உணர்ந்து அதற்கமைய நடத்தல், தாழ் நாட்டு ஈரவலயத்திற்கான சமூக பொருளாதார ஆய்வு, இலங்கையில் நெல் தொழில்நுட்பங்களை விவசாயிகள் ஏற்றுக் கொள்ளும் தன்மை, உணவுப் பயிர் உற்பத்தியின் மீது வன ஜீவராசிகளின் ஆபத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் 2011 / 2012 பெரும் போகத்திற்கும் 2012 சிறு போகத்திற்குமான உற்பத்திச் செலவு பற்றிய ஆய்வுகள் ஆகியன பூர்த்தியாக்கப்பட்ட சமூக பொருளாதார ஆய்வுகளாகும்.

### பயிர் உற்பத்தியின் செலவு மற்றும் வருமானம்

போகங்களுக்கான உற்பத்தியில் செலவைப் பிரசுரிக்கும் கிரமமான திட்டம் தொடரப்பட்டது. நெல் மற்றும் உப உணவுப் பயிர்கள், வேர் மற்றும் கிழங்குப் பயிர்கள் மற்றும் மரக்கறிப் பயிர்களுக்கான 2011 / 2012 பெரும்போக மற்றும் 2012 சிறுபோக செலவு மற்றும் வருமான ஆய்வுகள் பிரசுரிக்கப்பட்டன. 2012 / 2013 பெரும்போக ஆய்வுகளுக்கான வெளிக்கள தரவு சேகரிப்பும் தரவு அட்டவணைப்படுத்தலும் 2013 சிறுபோக ஆய்வுக்கான வெளிக்கள தரவு சேகரிப்பு 85% உம் பூர்த்தியாக்கப்பட்டன. நெல், மரக்கறிப் பயிர்கள் மற்றும் மறு வயற் பயிர்களுக்கான சராசரி விளைச்சல், மொத்த மற்றும் நிகர வருமானங்கள், மொத்த மற்றும் அலகு உற்பத்திச் செலவு, பண்ணை வாயில் விலைகள் மற்றும் தொடர்பான தகவல்கள் இப் பிரசுரங்களில் உள்ளடக்கப்படுகின்றன. இத்தரவுகள் பயிர் உற்பத்தியில் தீர்மானங்கள் எடுக்கும் போதும் பண்ணை மட்டங்களில் சந்தைப்படுத்தும் போதும் அத்துடன் தேசிய மட்டத்தில் கொள்கை வகுப்பதிலும் மற்றும் கொள்கையின் தாக்கங்களை பகுப்பாய்வு செய்வதற்கும் பயனுள்ளவையாக அமைகின்றன. 2013 சிறுபோகம் மற்றும் 2013/14 பெரும் போகங்களுக்கான மாகாண மட்ட ஆய்வுகளின் அறிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டன.

### தாழ் நாட்டு ஈரவலயத்தில் சமூக பொருளாதார ஆய்வு

தற்போது நெற் செய்கை பண்ணப்படும் பரப்பளவு மற்றும் சராசரி விளைச்சல் ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்வதற்கும் தாழ் நாட்டு ஈரவலயத்தில் நெல் உற்பத்தியின் ஒப்பீட்டு அனுகூலத்தை மதிப்பீடு செய்வதற்குமான தாழ் நாட்டு ஈரவலய உற்பத்தித்திறன் ஊக்குவிப்புத் திட்டத்தின் அடித்தள தரவு சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. உலர் மற்றும் இடைவலயத்தில் சராசரி விளைச்சல்களும் உற்பத்தியும் அதிக நிலைபேறாக உள்ளதென முடிவுகள் வெளிப்படுத்தின. ஈரவலயத்தில் உள்நாட்டு மூலவள செலவு (Domestic Resource cost) குணகங்கள் 1.01 (மாத்தறை) இலிருந்து 1.26 (கொழும்பு) வரை வேறுபடுதல் நெல் உற்பத்தியில் மிதமான ஒப்பீட்டு பிரதிகூலத்தைக் காண்பிக்கின்றது.

### குருநாகல் மாவட்டத்தில் காலநிலை மாற்றத்தை விவசாயிகள் உணரும் தன்மையும் அதற்கமைவாக நடத்தலும்.

விவசாய உற்பத்தியில் செல்வாக்கு செலுத்தும் ஓர் பிரதான காரணி காலநிலையாகும். இதன் மாற்றங்கள் உணவுப் பாதுகாப்பைப் பெருமளவில் பாதுகாப்பதுடன் சிறிய அளவில் செய்கை பண்ணும் விவசாயிகளைக் கடுமையாகப் பாதிக்கின்றது. ஆகவே பண்ணை வருமானம், விவசாயிகளின் விழிப்புணர்வு, அமைவாக நடக்கும் தெரிவுகள் மற்றும் அமைவாக நடப்பதற்காக தீர்மானிப்பவர்களும் தடைகளும் ஆகியவற்றின் மீது காலநிலை

மாற்றத்தின் பாதிப்புகளை ஆராய்வதற்காக குருணாகல் மாவட்டத்தில் அதிக பாதிப்புக்குள்ளாகும் மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஓர் ஆய்வு 2013 ஆம் ஆண்டு சித்திரை மாதம் மேற்கொள்ளப்பட்டது. இப் பிரதேசங்களில் 97% ஆன விவசாயிகள் பிரதான காலநிலை அனர்த்தமாக வரட்சியினால் பாதிக்கப்படுவதாக முடிவுகள் குறிப்பிட்டன. மேலும் 44% மான விவசாய வருமானம் ஒவ்வொரு போகத்திலும் வரட்சி காரணமாக இழக்கப்படுகின்றது.

## விவசாயக் கொள்கை பகுப்பாய்வு

இவ்வருடத்தில் ஐந்து விவசாய கொள்கை பகுப்பாய்வு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் நெற் செய்கையின் மொத்த உற்பத்தி சிதைவு, இலங்கையில் நெற் செய்கையின் செறிவாக்கமும் பல்லினப் படுத்தலும், விவசாய திணைக்களத்தின் விதை அத்தாட்சிப்படுத்தும் தொகுதி மீதான ஆய்வு, விவசாய திணைக்களத்தினால் வழங்கப்படும் விதைகளின் செலவு அடிப்படையான விலை மதிப்பீடு மற்றும் இலங்கையில் சோளச் செய்கையில் ஆராய்ச்சி முதலீட்டின் பொருளாதார தாக்கம் ஆகிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அந்த ஐந்து ஆய்வுகளும் முடிவு பெறும் இறுதி நிலையில் உள்ளன.

## இலங்கையில் வெங்காய உப பிரிவின் வர்த்தக தாராளமயமாக்கல்

இலங்கையில் வெங்காய உப பிரிவின் மீது வர்த்தக தாராளமயமாக்கலின் பாதிப்பை ஆராய்வதற்காக ஆய்வொன்று மேற்கொள்ளப் பட்டது. 2000ம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு காலப் பகுதிகளின் துணையான தரவுகள் இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டன. பெரிய வெங்காய மற்றும் சின்ன வெங்காய உற்பத்தியாளர்களுக்காக நேரடி பாதுகாப்பையும் ஒப்பீட்டு அனுகூலத்தையும் முடிவுகள் குறிப்பிட்டன. வர்த்தக தாராளமயமாக்கலின் மொத்த நன்மையான பாதிப்புக்களாக பெரிய வெங்காயத்திற்கு ரூ 16 மில்லியனும் சின்ன வெங்காயத்திற்கு ரூ 870 மில்லியனுமாக மதிப்பிடப்பட்டது.

## நெல்லின் உற்பத்தி வினைத்திறனும் பண்ணை இலாபமும்

நெல்லின் உற்பத்தி வினைத்திறனை அதிகரித்தல் எவ்வாறு அதன் பண்ணை இலாபத்தைப் பாதிக்கின்றது என்பதை பகுப்பாய்வு செய்வதற்காக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. 2008 / 2009 பெரும்போகம் மற்றும் 2009 சிறுபோகங்களுக்காக நீர்ப்பாசனத்தின் கீழும் (அம்பாறை, அநுராதபுரம், அம்பாந்தோட்டை மற்றும் பொலநறுவை மாவட்டங்கள்), மழை வீழ்ச்சியின் கீழும் (கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்கள்) தொடர்பான தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. தொழில்நுட்ப வினைத்திறனை அதிகரிப்பதன் மூலம் 23% - 32% ஆலும் தொழில்நுட்ப மற்றும் ஒதுக்கீட்டு வினைத்திறனின்மைகளை நீக்குவதன் மூலம் 30% - 64% ஆலும் பண்ணை இலாபங்களை நீர்ப்பாசனத்தின் கீழ் அதிகரிக்கலாமென இவ்வாய்வு குறிப்பிடுகிறது. மழைவீழ்ச்சியின் கீழ் தொழில்நுட்ப வினைத்திறனின்மைகளை நீக்குவதன் மூலம் ரூ 11.900 / ஏக் - ரூ 16,200 / ஏக் இலாபத்தையும் தொழில்நுட்ப மற்றும் ஒதுக்கீட்டு வினைத்திறனின்மைகளை நீக்குவதன் மூலம் ரூ 21,300-ரூ 26,850 ஏக் / இலாபத்தையும் அதிகரிக்க முடியும்.

## இலங்கையில் செத்தல் மிளகாய் உற்பத்தி தொடர்பான ஓர் பகுப்பாய்வு

இலங்கை செத்தல் மிளகாய் உற்பத்தியில் தன்னிறைவடையும் எதிர்ப்பார்பிற்கான சாத்தியக்கூற்றை பரீட்சிப்பதற்காக ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 1995 இலிருந்து 2011 வரையிலான காலப் பகுதியில் செத்தல் மிளகாய்க்கான சில்லறை விலை ரூ 385 /கி.கி இலிருந்து ரூ 203 / கி.கி ஆகக் குறைவடைந்த துடன் தேசிய விளைச்சல் 0.7 தொ / ஹெ இலிருந்து 0.92 தொ / ஹெ ஆக அதிகரித்ததாக

ஆய்வு முடிவுகள் குறிப்பிட்டன. இலங்கை செத்தல் மிளகாய் உற்பத்தியில் அடைவதற்கு உற்பத்தி மட்டங்களை அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது.

## உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் ஆய்வுகள்

நான்கு உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் ஆய்வுகள் சீத்தா எலியவிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் உருளைக் கிழங்கு விதை உற்பத்தித் திட்டத்தின் மதிப்பீடு, சோள உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் நிலை பற்றிய ஆய்வு, மகா இலுப்பள்ளம மற்றும் குண்டசாலை விதைப் பண்ணைகளின் உற்பத்தி மற்றும் இலாபகரம் மீதான ஆய்வு, இலங்கையில் கடந்த இரு தசாப்தங்களாக நெல் சந்தைப்படுத்தல் தொடர்பான ஆய்வு ஆகிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றுள் மூன்று ஆய்வுகள் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்படும் நிலையிலும் ஒன்று தரவுகள் சேகரிக்கப்படும் நிலையிலும் உள்ளன.

### நுவரெலியாவில் விவசாயிகள் மட்டத்திலான முறையற்ற விதை உருளைக்கிழங்கு உற்பத்தித் திட்டத்தின் மதிப்பீடு

சீத்தாஎலியவிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்திலிருந்து சிறு உருளைக் கிழங்குகளைப் பெறும் விவசாயிகளின் முறைப்படியற்ற விதை உருளைக் கிழங்கு உற்பத்தி திட்டத்தை மதிப்பீடு செய்வதை பொதுவான நோக்கமாகக் கொண்டு நுவரெலியா மாவட்டத்தில் 2012 சிறுபோகத்திலும் 2012 / 13 பெரும் போகத்திலும் 72 விவசாயிகளிடம் வெளிக்கள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. $G_2$ வை செய்கை பண்ணுவதற்காக எஞ்சுகின்ற $G_1$ விதை விகிதம் 35% ஆகும். எனவே மிகச் சில விவசாயிகளே $G_0$ விலிருந்து நுகர்வு உருளைக் கிழங்கு வரையிலான முழுமையான சுற்றை மேற்கொள்கின்றனர். $G_0$, $G_1$ மற்றும் $G_2$ க்களின் விகிதங்கள் முறையே 1:4, 1:7 மற்றும் 1:10 ஆகும். 80% ஆன விவசாயிகள் தன்னிறைவடைவதற்கான இலக்கை

பயிற்சிகளில் பங்குபற்றிய போதிலும் 50% இற்கும் குறைவான விவசாயிகள் அதாவது 15 பேரில் நால்வர் மட்டுமே சிபாரிசு செய்யப்பட்ட பிரதான நடவடிக்கைகளைப் பயன்படுத்து கின்றனர். போதுமான அளவு விரிவாக்க சேவைகள் இன்மை, விவசாயிகள் அதிக தூரம் பிரயாணம் செய்ய வேண்டியிருத்தல், சரியான நேரத்திற்கு உருளைக் கிழங்குகள் வழங்கப்படாமை, போதுமான அளவு புதிய தொழில்நுட்பங்களின்மை மற்றும் உருளைக் கிழங்கிற்காக முறைப்படியான சந்தைப்படுத்தல் வசதியின்மை போன்றவை இத்திட்டத்தின் பிரதான குறைபாடுகளாகும்.

## விவசாயத் தரவு முகாமைத்துவம்

திட்டமிடுதலிலும் ஆராய்ச்சி வேலைகளிலும் உதவுவதற்காக விவசாயத் திணைக்களத்திற்கும் விவசாயத் திணைக்களத்திற்கு வெளியேயுள்ள வாடிக்கையாளர்களுக்கும் SEPC தொடச்சியாக தரவுகளை வழங்கியுள்ளது.

## AgStat - 2013

உணவுப் பயிர்த் துறையின் முக்கிய தகவல்கள் தொடர்பான விவசாய புள்ளிவிபரவியலை உள்ளடக்கிய கையேடாகிய AgStat 2013 இல் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டது. பாகம் x ஆனது சமூக பொருளாதாரத் தரவு, நிலப் பயன்பாட்டு வகைகள், விஸ்தீரணமும் உற்பத்தியும், இறக்குமதியும் ஏற்றுமதியும், தனி மனிதனுக்கு கிடைக்கும் தன்மை, மொத்த மற்றும் சில்லறை விலைகள் போன்ற அநேக தகவல்களை உள்ளடக்கியுள்ளது. இந்த புள்ளிவிபரவியல் தகவல்கள் ஆராய்ச்சி யாளர்கள், கொள்கை திட்டமிடுவர்கள், மாணவர்கள், கல்வி சார்ந்தவர்கள், நிர்வாகிகள், விவசாயிகள் ஆகியோரால் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன.

## பயிர் எதிர்வு கூறல்

பயிர் எதிர்வு கூறலானது நெல், மறுவயற்பயிர்கள், மரக்கறிப் பயிர்களின் பயிர்ச் செய்கை மீதான தற்போதைய நிலைமை, உற்பத்தியினை எதிர்வு கூறல், உற்பத்தியின் பிரதேச பகிர்ந்தளிப்பு, அறுவடைக் காலங்கள், அதீத காலநிலை மற்றும் நோய் பீடைகள் நிலவும் தன்மை தொடர்பான தகவல்களை வழங்கும் SEPC யின் ஓர் மாதாந்த பிரசுரமாகும். பன்னிரெண்டு பயிர் எதிர்வு கூறல் அறிக்கைகள் இவ்வருடத்தில் தயாரிக்கப்பட்டன.

## கருத்திட்டம் திட்டமிடல், தயாரித்தல் மற்றும் ஒருங்கிணைப்பு

விவசாய திணைக்களத்தின் பல்வேறு நிறுவனங்கள் / நிலையங்களிலிருந்து SEPC செயற்திட்ட பிரேரணைகளைச் சேகரித்து திறைசேரியின் பரிசீலனைக்காக விவசாய அமைச்சிடம் (MOA) சமர்ப்பித்தது. ஒழுக்காற்று வேலைக் குழுக்கள், தேசிய விவசாய ஆராய்ச்சி, விவசாய திணைக்களத்தின் திட்டம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமுல்படுத்துதல் ஆகியவற்றை SEPC தொடர்ந்து ஒருங்கிணைத்து வந்துள்ளது.

## தயாரிக்கப்பட்ட திட்டங்கள்

- மறுவயற்பயிர் உற்பத்தித் திட்டம்

2013 - 2015 காலப் பகுதிகளில் மறுவயற் பயிர்களுக்கான உற்பத்தித் திட்டத்தின் உருவாக்கலில் **SEPC** பிரதானமாக ஈடுபட்டது. இவ்வுற்பத்தித் திட்டத்தின் கீழ் 2013 சிறுபோகம் மற்றும் 2013 / 14 பெரும் போகங்களுக்காக பிரதேச மற்றும் விதைத் தேவைகள் இனங்காணப்பட்டன.

## மனித வளங்கள் கிடைக்கும் தன்மையும் அபிவிருத்தியும்

நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளருக்கான பதிற் கடமைகளை மேற்கொள்வதற்காக Dr. R.M ஹேரத், சிரேஷ்ட விவசாய பொருளியலாளர் நியமிக்கப்பட்டார். திரு. S. மாதங்கவீர விவசாய பொருளியலாளர் உதவியாளரும் திரு N.L. சுதிரா, நிகழ்ச்சித் திட்ட உதவியாளரும் விவசாயப் பொருளியலாளர்களாகப் பதவியுயர்த்தப்பட்டார்கள். திருமதி I.U. சிவிரத்ன விவசாய பொருளியலாளர் உதவியாளர் தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். ஒரு விவசாய பொருளியலாளரும் மூன்று விவசாய பொருளியலாளர் உதவியாளர்களும் இவ்வருடத் தினுள் ஓய்வு பெற்றார்கள். இரண்டு விவசாய பொருளியலாளர் வெளிநாட்டில் கல்வி கற்பதற்காகவும் தொழில் புரிவதற்காகவும் விடுமுறை எடுத்தனர். SEPC தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்காக உற்பத்திச் செலவு ஆய்வுகள் தொடர்பில் உற்பத்தித் - திறனை அதிகரிப்பதற்கான ஓர் பயிற்சிப் பட்டறையை SEPC கன்னொறுவை சேவைக் காலப் பயிற்சி நிலையத்தில் 2013 ஆம் ஆண்டு ஆடி மாதம் 8ம், 9ம் திகதிகளில் ஒழுங்கமைத்தது.

### 2014 க்கான திட்டம்

- பிரதான உணவுப் பயிர்களுக்காக உற்பத்திச் செலவு ஆய்வுகள்.
- சோயா அவரை உற்பத்தியின் நிலைமை பற்றிய பகுப்பாய்வு.
- இலங்கையில் நெல் தொழில்நுட்பங்கள் பகுதி - II இன் பரம்பலும் நடைமுறைப் படுத்தப்படுத்தலும்.
- APSIM மாதிரிகளைப் பயன்படுத்தி ஈர வலயத்துக்காக இலாபகரமான பண்ணைத் தொகுதி மாதிரியமைத்தல்.
- இணையதளத்தை அடிப்படையாகக் கொண்ட பயிர் எதிர்வு கூறலை விருத்தி செய்தல்.
- நெல்லிற்கான புதிய பசளைச் சிபார்சை மதிப்பீடு செய்தல்.
- குண்டசாலை விதைப் பண்ணையின் உற்பத்தி மற்றும் இலாபகரம் மீதான ஆய்வு.

- அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பெரிய வெங்காய உற்பத்தியின் மதிப்பீட்டு ஆய்வு.
- பயிர் எதிர்வு கூறல்.
- நடைமுறை விவசாய தகவல்களைக் கொண்டிருக்கும் கையேட்டைப் பூரணப்படுத்தல் - Agstat .
- NARP செயற்றிட்டங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் ஒழுக்காற்று வேலைக் குழுக்கள் என்பவற்றை ஒழுங்கிணைத்தல்.
- செயற்றிட்டம் / செயற்றிட்ட பிரேரணை களைத் தயாரித்தலும் கையாள்தலும் வழிப்படுத்தலும்.
- பழக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் மதிப்பீடு.
- JICA மரக்கறி விதை செயற்திட்ட கண்காணித்தலும் மதிப்பீடும் மற்றும் COP பகுப்பாய்வு.

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பணிப்பாளர் | 01 |
| மேலதிக பணிப்பாளர் | 01 |
| பிரதிப் பணிப்பாளர் | 01 |
| விவசாய பொருளியலாளர் | 14 |
| விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர் | 01 |
| பொருளியலாளர் உதவியாளர் | 11 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 03 |
| விவசாயப் போதனாசிரியர் | 02 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் சேவை | 07 |
| சாரதி | 05 |
| ஊழியர் | 03 |
| KKS | 01 |
| **மொத்தம்** | **51** |

## 3.1 விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிலையம் (ETC), பேராதனை

விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிலையத்தின் இலக்கு என்பது விவசாய சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதுடன் நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதுடன் உணவுப் பயிர் துறையில் அதிகூடிய உற்பத்தித் திறனை அடைதல் என்பதுமாகும். நிலையத்தின் நடவடிக்கைகள் நான்கு பிரதான பரப்புகளாகச் கருத்தூன்றப்படுகின்றன. அவை விரிவாக்கம், பயிற்சி, விவசாயக் கல்வி மற்றும் பரீட்சை என்பனவாகும். நிலையத்தின் நோக்கங்களை அடைவதற்கு பின்வரும் நடவடிக்கைகள் உரிய அலகுகளால் மேற்கொள்ளப்படுகின்றன.

- ஆறு மாகாண இடைப்பிரதேச அலகுகளால் மேற்கொள்ளப்படுகின்ற பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழான நேரடி விரிவாக்க நிகழ்ச்சி மாகாணம் மற்றும் மகாவலிப் பிரதேசத்துடனான கூட்டு விரிவாக்க நிகழ்ச்சித் திட்டம்

- மூன்று சேவைக்கால பயிற்சி நிறுவனங்கள், நான்கு மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையங்கள் மற்றும் பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி நிலையம் என்பவற்றில் விரிவாக்க அலுவலர்கள், விவசாயிகள் வியாபார முயற்சியாண்மை யாளர்கள் மற்றும் ஏனையோரிற்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்

- விவசாயததில் இரண்டு வருட டிப்ளோமா பாடநெறியை குண்டசாலை, அங்குணுகொல பெலஸ்ஸ, பெல்வெஹர, வவுனியா,கரபிஞ்ச ஆகிய விவசாயக் கல்லூரிகளில் பாடசாலைகளில் நடாத்துதல்

- இளம் விவசாயிகள் கழக (YFC) நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

- பிந்துனுவெவ தேனீ வளர்ப்பு அலகில் தேனீ வளர்ப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

- தாவரப் போசணை மற்றும் சேதன விவசாய அலகினால் சூழல் நேய விவசாய நிகழ்ச்சியை நாட்டில் பிரபல்யப்படுத்தல்

- விவசாய வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சி, மறுவயற்பயிர்கள் அபிவிருத்தி நிகழ்ச்சி, நுண் நீர்ப்பாசனமும் பாதுகாப்பான விவசாயமும் மற்றும் பெண்கள் விவசாய விரிவாக்க நிகழ்ச்சி என்பவற்றை மேற்கொள்ளல்

- பூங்கனியியல் பயிர்கள் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம், பிபிலையில் பூங்கனியியல் பயிர்கள் அபிவிருத்தி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

- லபுதுவ, அனுராதபுரம் மற்றும் வாரியப்பொல ஆகிய இடங்களில் உள்ள விசேட பயிற்சி நிலையங்களில் விவசாயிகள், அலுவலர்கள், பாடசாலையிலிருந்து விலகியோர், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனைய பொது மக்கள் போன்றோரிக்காக குறுகிய கால தொழில்சார் விவசாயப் பயிற்சிப் பாடநெறியை நடாத்துதல்

## பாதீடு

**அட்டவணை 3.1.1: ஆண்டுப் பாதீடு –2013 (ரூபாய்கள் மில்லியன்)**

| செலவுத்தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு% |
|---|---|---|---|
| மூலதன செலவு | 54.08 | 33.18 | 61 |
| மீண்டுவரும் செலவு | 142.62 | 133.87 | 94 |
| **விசேட மூலதனக் கருத்திட்டங்கள்** | | | |
| விவசாயத் திணைக்கள தலைப்பின் கீழ் பயிற்சி மற்றும் ஆளுமை விருத்தி | 17.20 | 17.20 | 100 |
| விவசாயப் பயிற்சிப் பண்ணை | 17.50 | 16.20 | 93 |
| **அமைச்சுத் தலைப்பின் கீழான நிதி** | | | |
| அரிசி ஏற்றுமதி வலயம் | 5.13 | 3.42 | 67 |
| பிரபல்யமான பாரம்பரிய மரக்கறி விதைகளின் கிடைப்பனவை அதிகரித்தல் | 3.00 | 2.68 | 89 |
| உள்ளூர் பொருத்தபாடான GAP நிகழ்ச்சித் திட்ட அபிவிருத்தி | 1.31 | 0.59 | 45 |
| உணவு பதனிடல் நிலையத்தை அமைத்தல் மற்றும் உணவு பதனிடல் தனியார் துறையினரை ஊக்குவித்தல் என்பவற்றினூடாக கிராமிய விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்தல் | 2.00 | 0.16 | 08 |
| மேம்பட்ட மனித போசாக்கு மற்றும் சுகவாழ்வு என்பவற்றிக்காக உயிர்ப் பல்வகைமையை நெறிப்படுத்தலும் நிலைபேறான பாவனையும் (BFN கருத்திட்டம்) | 2.00 | 0.04 | 02 |
| **மொத்தம்** | **244.84** | **207.34** | **85** |

## செயற்பாட்டு முன்னேற்றம்

### விசேட கருத்திட்டங்கள்

#### பயிற்சி மற்றும் திறன் விருத்தி

இவ்விசேட கருத்திட்டமானது விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களின் திறன் மற்றும் ஆற்றல் என்பவற்றை விருத்தி செய்யும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இக்கருத்திட்டத்தின் கீழ் 44 உள்ளூர் பயிற்சி நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 12 வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்காக அலுவலர்கள் உதவியளிக்கப் பட்டார்கள். இதற்கு மேலதிகமாக விவசாயத் திணைக்களத்தின் மூன்று அலுவர்கள் பட்டப் பின் படிப்பிற்காக நிதியுதவி அளிக்கப்பட்டார்கள். விவசாய உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி உதவியாளர்கள் 78 பேருக்கு இறுதிப் பரீட்சை நடாத்தப்பட்டது. இக்கருத்திட்டத்தின் கீழ் விதை அத்தாட்சிப்படுத்தல் சேவைப் பிரிவால் புதிதாக நியமிக்கப்பட்ட விவசாயப் போதனாசிரியர்களிற்கு பயிர்ச் சிகிச்சை முகாம் அறிமுகப்படுத்தப்பட்டது.

#### விவசாயப் பயிற்சிப் பண்ணைக் காணி அபிவிருத்தி

இக்கருத்திட்டத்தின்கீழ் ஐந்து விவசாய டிப்ளோமா கற்கை நெறி விவசாயக் கல்லூரிகள். மூன்று சேவைக்கால பயிற்சி நிறுவனங்கள், பண்ணை இயந்திரப் பயிற்சி நிலையம். விசேட பயிற்சி நிலையங்களான வாரியப்பொல மற்றும் லபுதுவ, மற்றும் பூங்கனியியல் பயிர்ப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் - பிபிலை என்பவற்றின் பண்ணைக் காணிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

பயிர்ச் செய்கை மற்றும் பராமரிப்பு, பயிர்ச் செய்கைக்கான வளைவுகள் மற்றும் பந்தல்கள் என்பவற்றின் நிர்மாணம் மற்றும் திருத்தங்கள், பண்ணை விலங்குகளின் பராமரிப்பு, பண்ணை உபகரணங்கள் / பொறிகளின் கொள்வனவு, வேலி மற்றும் பண்ணை வீதிகள் அபிவிருத்தி போன்ற நடவடிக்கைகள் இக்கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

#### அரிசி ஏற்றுமதி வலயக் கருத்திட்டம்

இக்கருத்திட்டமானது மகாவலி வலயம் C மற்றும் B என்பவற்றில் அரிசி ஏற்றுமதிக் கருத்திட்டத்திற்கான உயர் தரமுடைய விதை நெல்லை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் 2013ம் ஆண்டு காலப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இக்கருத்திட்டத்தின் கீழ் நெல் வர்க்கங்களான BG 11/65 (பாஸ்மதிவகை) மற்றும் பாரம்பரிய வர்க்கங்களான சுவந்தல் மற்றும் பச்சைப்பெருமாள் என்பன பயிர் செய்யப்பட்டதுடன் விதை நெல், பரசூட் தட்டுக்கள், மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல்கள் என்பவற்றை விவசாயத் திணைக்களம் வழங்கியதன் மூலம் இக்கருத்திட்டமானது உதவியளிக்கப்பட்டது. விதை நெல் உற்பத்திக்காக பயிர் செய்யப்பட்ட மொத்த விஸ்தீரணமானது 80 கெக்டராக இருந்தது.

#### பிரபல்யமான பாரம்பரிய மரக்கறி விதைகளின் கிடைப்பனவை அதிகரித்தல்

இக்கருத்திட்டத்தின் கீழ் விவசாயத் திணைக்களத்தின் 16 பயிற்சி நிலையங்கள் பாரம்பரிய மரக்கறி விதை உற்பத்திக்காக நிதி வழங்கப்பட்டன. பின்வரும் அளவுகளில் 2013ம் ஆண்டு காலப்பகுதியில் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

**அட்டவணை 3.1.2 உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி விதை அளவுகள்**

| மரக்கறி வகைகள் | உற்பத்தி அளவு (கி.கி) |
|---|---|
| தக்காளி | 716 |
| சுண்டங்கத்தரி | 7.07 |
| கத்தரி | 13.2 |
| வட்டுக்கத்தரி | 46.21 |
| பூசணி | 16.15 |
| வெண்டி | 31.0 |
| கெக்கரி | 198.0 |
| பயற்றை | 19.25 |
| பாகல் | 23.0 |

பாரம்பரிய மரக்கறி விதைகளின் கிடைப்பனவை அடையும் நோக்கத்தில் ஐந்துவகையான மரக்கறி விதைகளைக் கொண்ட பொதிகள் விவசாயிகள் மத்தியில் வீட்டுத் தோட்ட மட்டத்தில் உற்பத்தி செய்வதற்காக விநியோகிக்க எதிர்ப்பார்க்கப்பட்டது.

### மனித ஊட்டச்சத்து மேம்பாட்டிற்கும் சுகவாழ்வுக்குமான உயிர்ப் பல்வகைமைப் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான பயன்பாடு என்பவற்றை பிரதான வழிப்படுத்தல் (BFN கருத்திட்டம்)

இக்கருத்திட்டத்தின் பிரதான நோக்கமானது தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் (கம்பளை, குருநாகல் மாவட்டத்தின் ஓர் பகுதி, உடுதும்பர, கண்டி மாவட்டத்தின் ஒரு பகுதி, அம்பதென்ன, இரத்தினபுரி மாவட்டத்தின் ஒரு பகுதி) பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்குவதுடன் ஓர் சந்தைச் சங்கிலித் தொடர்பை உருவாக்குதல் என்பதாக இருந்தது.

2013ம் ஆண்டு காலப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களிற்கு கருத்திட்டம் திட்டமிடப்படுவதற்காக விஜயம் மேற்கொள்ளப் பட்டதுடன் வீட்டுத் தோட்டம், மற்றும் உணவுப் போசணை என்பவற்றில் பயிற்சி நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் கொழும்பில் ஓர் விற்பனை நிலையம் நிறுவுவதற்கான மதிப்பீடு செய்யப்பட்டு நிறைவு செய்யப்பட்டது.

### உணவு பதனிடல் நிலையத்தை நிறுவுதல் மற்றும் உணவு பதனிடலில் தனியார் துறையை ஊக்குவித்தல் என்பவற்றின் மூலம் கிராமிய விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்தல்

இக்கருத்திட்டத்தின் பிரதான நோக்கம் உணவு பதனிடலில் பண்ணைப் பெண் தொழில் முயற்சியாளர்களிற்கான பயிற்சியுடன் அவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கு உதவுதல் என்பதாக இருந்தது. இக்கருத்திட்டமானது நுவரெலியா, மாத்தளை, குருநாகல், புத்தளம், மொனராகலை, மட்டக்களப்பு, கம்பகா, காலி, அம்பாந்தோட்டை, அம்பாறை மற்றும் அனைத்து மாகாண இடைப்பிரதேசங்கள் ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டது.

2013ம் ஆண்டு காலப் பகுதியில் உணவு பதனிடல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்முயற்சியாண்மை விருத்தி என்பவற்றில் எட்டுப் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. அத்துடன் 101 பயனானிகள் தெரிவு செய்யப்பட்டனர். வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கு உதவியாக அமையும். உபகரணங்கள் அடையாளங்காணப்பட்டதுடன் வேலைகள் நடைபெற்று வருகின்றன. மொத்த ஒதுக்கீடான ரூபா 2 மில்லியனில் ரூபா 0.16 மில்லியன் தொழில் பயிற்சியாளர்களிற்கு உபகரணங்கள் வழங்குவதற்காக ஒதுக்கிடப்பட்டுள்ளது.

இவ்வருடத்தில் இக்கருத்திட்டத்தின் மொத்த செலவீனம் ரூபா 0.101 மில்லியனாக இருந்தது.

### மாகாண இடைப் பிரதேசங்களின் விரிவாக்க நடவடிக்கைகள்

பெரிய நீர்ப்பாசனத் திட்டப் பிரதேசங்களின் கீழ் வருகின்ற ஆறு மாகாண இடைப் பிரதேசங்கள் (IP) ஆனது மத்திய விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கமும் பயிற்சிக்குமான மத்திய நிலையத்தின் அதிகாரத்தின் கீழ் உள்ளது. அம்பாறை, அநுராதபுரம், அம்பாந்தோட்டை, மொனராகலை, பொலநறுவை, மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களின் பகுதிகள் மாகாண இடைப் பிரதேசங்களாக குறிக்கப்படுகின்றன.

மாகாண இடைப் பிரதேசங்களில் 2013 / 2014 பெரும்போக மற்றும் 2013 சிறுபோக காலப் பகுதியில் நெற் பயிர் செய்யப்பட்ட மொத்த விஸ்தீரணம் முறையே 1,81,560 கெக்கடர் மற்றும் 1,37,955 கெக்கடர் எனக் காணப்பட்டது. பயிர் செய்யப்பட்ட விஸ்தீரனமானது 2012 சிறுபோகத்துடன் ஒப்பிடுகையில் 2013 சிறுபோகத்தில் 13,260 கெக்டர் அதிகரிப்பைக் காட்டியது.

இவ்வருட காலப் பகுதியில் மறுவயற்பயிர்ச் செய்கையின் விஸ்தீரணத்தை அதிகரிப்பதற்காக விசேட கவனம் செலுத்தப்பட்டது. பிரதானமாக பெரிய வெங்காயம், சிறிய வெங்காயம், சோளம், பயறு, நிலக்கடலை, எள்ளு, கௌபி, சோயாஅவரை, மிளகாய், குரக்கன், மற்றும் உழுந்து என்பன ஆறு மாகாண இடைப் பிரதேசங்களில் பயிரிடப்பட்டன. மறுவயற் பயிர்களின் கீழுள்ள பயிர் செய்யப்பட்ட மொத்த விஸ்தீரணமானது 2012 / 2013 பெரும்போகத்தில் 35,607 கெக்டராகவும் 2013 சிறுபோகத்தில் 16,407 கெக்டராகவும் இருந்தது. 2011 / 2012 பெரும்போகம் மற்றும் 2012 சிறுபோகம் என்பவற்றுடன் ஒப்பிடுகையில் பயிர்ச் செய்கை விஸ்தீரணமானது 2012 / 2013 பெரும்போகத்தில் 10,204 கெக்டரிலும் 2013 சிறுபோகத்தில் 4702 கெக்டரிலும் அதிகரித்திருந்தது. மறுவயற்பயிர் களின் மூன்றாம் போகப் பயிர்ச் செய்கையானது மறுவயற் பயிர்ச் செய்கை விஸ்தீரணத்தை அதிகரிப்பதற்கு உதவியிருந்தது.

ஒவ்வொரு மாகாண இடைப் பிரதேசத்தினதும் குறிப்பான தகவல்கள் மற்றும் செயற்பாடுகள் என்பன கீழே தரப்படுகின்றன.

### மாகாண இடைப் பிரதேசம் – அம்பாந்தோட்டை

மாகாண இடைப் பிரதேசம் அம்பாந்தோட்டை யானது பெரிய நீர்ப்பாசனத்தின் கீழான 15,000 கெக்டர், சிறிய நீர்ப்பாசனத்தின் கீழான 1400 கெக்டர், மற்றும் மழைவீழ்ச்சியின் கீழான 50 கெக்டர் நெற் செய்கை விஸ்தீரணங்களை உள்ளடக்குகிறது. லுனுகம்வெகர, ரிதியாகம, மற்றும் சமனலவெவ என்பன பயிர்ச் செய்கைக்கான நீர்ப்பாசன வசதிகளை வழங்குகின்ற பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆகும். இரண்டு பிரதான பயிர்ச் செய்கைப் போகங்களான பெரும்போகம் மற்றும் சிறுபோகம் என்பவற்றடன் இரு பிரதான போகங்களிற்கு இடையேயான மூன்றாம் போகம் என்பதிலும் மேற்குறிப்பிடப்பட்ட மூன்று நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழும் பயிரிடப்படுகின்றன. அம்பாந்தோட்டை மாகாண இடைப் பிரதேசமானது வளவ மற்றும் கிரிந்திஓயா எனப் பெயரிடப்படுகின்ற இரு பிரிவுகளை உள்ளடக்கு கிறது. விவசாய விரிவாக்க நடவடிக்கைகளானது இவ்விரண்டு பிரிவுகளை உள்ளடக்குகின்ற இருமாவட்டங்களான அம்பாந்தோட்டை மற்றும் இரத்தினபுரி ஆகியவற்றின் விரிவாக்க அலுவலர்களின் ஆதரவுடன் மேற்கொள்ளப் படுகிறது. இவ்விரண்டு விவசாயப் பிரிவுகளும் 06 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கு கின்றன. அவையாவன அம்பலாந்தோட்டை, அம்பாந்தோட்டை, திசமகாராம, லுனுகம்வெகர, சூரியவெவ மற்றும் பலாங்கொட என்பனவாகும். விரிவாக்க நடவடிக்கைகள் 07 கமநல சேவைகள் பிரிவில் மேற்கொள்ளப்படுவதுடன் செயற்பாட்டுப் பிரதேசங்கள் அம்பலாந்தோட்டை, லுனம, படகிரிய, வீரவில, கோடாகண்டிய, பெரலிகெல மற்றும் கல்தோட்டை என்பனவாகும். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையமானது

(DATC) கிரிந்திஓயா விவசாயப் பிரிவில் 25 நபர்களிற்கான தங்குமிட வசதியைக் கொண்டதாக அமைந்துள்ளது.

### 2012 / 2013 பெரும்போகம் மற்றும் 2013 சிறுபோகம் ஆகிய காலப் பகுதிகளின் அடைவுகள்

#### நெல்

நெற் செய்கையின் கீழான விஸ்தீரணமானது தாழ்நிலங்களில் வாழை மற்றும் மறுவயற்பயிர்களின் அதிகரிப்பினால் குறைவடைந்துள்ளது. மேலும் 2012 / 2013 பெரும்போகத்தில் இரண்டு தடவைகள் ஏற்பட்ட வெள்ள நிலைமையினால் நெற் பயிர்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டன. சராசரி விளைவானது அண்ணளவாக 7.1 மெ.தொ / கெக்டராகக் காணப்பட்டது.

நெற் பயிர்ச் செய்கையின் பிரதான இடர்பாடாக மிகையான களை நாசினிகளின் பாவனை காணப்பட்டது. நெற்பயிர்ச் செய்கையில் களை நாசினிப் பிரயோகத்தைக் குறைப்பதற்காக நாற்று நடும் கருவியை அறிமுகப்படுத்தும் பொருட்டு இரண்டு விவரணப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் கூட்டிணைந்து நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஓர் விசேட கருத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. பொருளாதார உதவிகள் 680 கெக்டர் நெற் செய்கைக்காக அமைச்சினால் வழங்கப்பட்டதுடன் தொழில்நுட்ப வழிகாட்டலானது விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டது. விதை நெல், படங்கு போன்ற பல்வேறு உள்ளீட்டுப் பொருட்கள் விவசாயிகள் குழுவினருக்கு வழங்கப்பட்டது. ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம் (IPM) மற்றும் ஒருங்கிணைந்த தாவர போசணைத் தொகுதி போன்ற எண்ணக்கருக்கள் மற்றும் பொருத்தமான தரைப்பண்படுத்தல் தொழில்நுட்பம் என்பன மேற்படி கண்டப் பயிர்ச் செய்கையில் (Yaya) ஓர் தொகுதியாகப் (package) பயன்படுத்தப்பட்டது.

#### பயறின் மூன்றாம் போகப் பயிர்ச் செய்கை

மட்டுப்படுத்தப்பட்ட நிலப்பரப்பினுள் விளைவை அதிகரிப்பதற்கான சவால்களுள் நெல் வயல்களில் மூன்றாம் போகப் பயறுச் செய்கை என்பது வெற்றி பெறுகின்ற ஒன்றாகக் காணப்பட்டது. 2013ம் ஆண்டில் 4703 கெக்டரில் பயிரிடப்பட்டது. அண்ணளவாக 1600 கெக்கடர் பெரும்போகத்தின் பின்னரும் மீதமான விஸ்திரணம் சிறுபோகத்தின் பின்னருமாக பயிர் செய்யப்பட்டது. இவ்விஸ்தீரணங்களில் இருந்து விவசாயிகள் 3540 மெ.தொ பயறை உற்பத்தி செய்ததுடன் பதிவு செய்யப்பட்ட வருமானமாக அண்ணளவாக ரூபாய் 780 மில்லியன் இருந்தது. விதை மற்றும் படங்கு போன்ற பல்வேறு உள்ளீட்டு உதவிகள் விவசாயிகள் குழுவினருக்கு வழங்கப்பட்டதுடன் தொழில்நுட்ப உதவியானது விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டது. ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ (IPM) தொழில்நுட்பமும் அறிமுகப்படுத்தப்பட்டது. விதையானது விவசாயிகளின் 50% பங்களிப்புடன் விவசாயத் திணைக்களத்தாலும் விவசாய அமைச்சினாலும் வழங்கப்பட்டது.

பெரும் போக முடிவைத் தொடர்ந்து உடனடியாகவே அம்பலாந்தோட்டை கமநல சேவைப் பிரிவில் 1600 கெக்டரிலான பயிர்ச் செய்கையானது ஓர் விசேட மூன்றாம் போக பயிர்ச் செய்கை நிகழ்ச்சியாக அறிமுகஞ் செய்யப்பட்டது. உற்பத்தியானது 1000 மெ.தொ ஆக இருந்ததுடன் இதன் பெறுமதியானது ரூபாய் 225 மில்லியனாக இருந்தது. பிளென்ரி பூட் கம்பனியுடன் 358 கெக்டரிற்கான முற்கூட்டிய விற்பனை ஒப்பந்தம் (Forward sale agreement) கைச்சாத்திடப்பட்டது. முன்னய எதிர்பார்ப்பான 800 கெக்டர் பயிர்ச் செய்கையானது லுனுகம்வெகர இன் வலது கரைப் பகுதியின் பிந்திய சிறுபோகத்தால் குறைக்கப்பட்டது.

#### போகம் அல்லாத காலத்து பெரிய வெங்காயப் பயிர்ச் செய்கை

நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் உற்பத்தி இல்லாத காலமான ஏப்ரல் தொடக்கம் யூலை

வரையான காலப்பகுதியில் அறுவடையை இலக்குவைத்து பெரும்போகத்தில் பயிர் செய்வதன் மூலம் பெரிய வெங்காயப் பயிர்ச் செய்கை விஸ்தீரணத்தை அதிகரிக்கும் பல முயற்சிகள் 2010ம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வந்தது.

பதினொரு கெக்டர் பயிர்ச் செய்கை பெரும்போகத்தில் செய்யப்பட்டதுடன் சிறுபோகத்தில் 4.35 கெக்டரும் பயிர்ச் செய்கை மேற்க்கொள்ளப்பட்டது பெரும்போகத்தில் ஏற்பட்ட வெள்ள நிலைமையினால் பல வயல்கள் பாதிக்கப்பட்டதுடன் சில 10-12 மெ.தொ / கெக்டர் விளைவுடன் முடிவுறுத்தப்பட்டன. போகம் அல்லாத காலப் பயிர்ச் செய்கையிலிருந்து மொத்தம் 60 மெ.தொ உற்பத்தி பெறப்பட்டது. 2014ம் ஆண்டில் பரப்பளவை 300 கெக்டர் வரை அதிகரப்பதற்காக 2013ம் ஆண்டு சிறுபோகத்தில் அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் மட்டத்திலான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

### குரக்கன் உற்பத்தி

அண்ணளவாக 400 மெ.தொ குரக்கன் உற்பத்தியானது 2012 / 2013 பெரும்போக குரக்கன் பயிர்ச் செய்கையிலிருந்து பெறப்பட்டது. மா சேர்ந்த "பரிமாறத் தாயார்" உணவுகளை தயாரிப்பதற்காக விவசாயிகள் ஊக்குவிக்கப் பட்டார்கள் "ஓசாத" வர்க்கம் பயிர் செய்யப்பட்டதுடன் விதை உற்பத்திக்காக விவசாயிகள் ஊக்குவிக்கப்பட்டனர்.

### சிறிய வெங்காய விதை உற்பத்தி

இந்நிகழ்ச்சித் திட்டமானது 16 விவசாயிகளுடன் அமுல்ப்படுத்தப்பட்டுடன் 13.8 கி.கி விதை மற்றும் 1546 கி.கி குமிழ்கள் என்பன உற்பத்தி செய்யப்பட்டன. இத்திட்டமானது விவசாயிகளை உண்மை விதையைப் பாவிப்பதற்கும் போகத்திற்குப் புறம்பான பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்குமாக ஆரம்பிக்கப்பட்டது. விதை உற்பத்தி என்பதற்கு அப்பால் 22.6 கெக்டர் சிறிய வெங்காயப் பயிர்ச் செய்கை 2013 சிறுபோகத்தில் மேற்கொள்ளப்பட்டது. வசந்த நிலைப்படுத்தப்பட்ட வேதாளன் குமிழ்கள் இலவசமாக வழங்கபப்ட்டதுடன் வலை மற்றும் பொலித்தீன் என்பன 50% மான விவசாயிகளின் பங்களிப்புடன் வழங்கப்பட்டன.

### பழங்கள் மற்றும் மரக்கறிகள்

மரக்கறிப் பயிர்ச் செய்கைக்காக IPM எண்ணக்கரு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் விவசாயத் திணைக்களத்தின் பயிர்ப் பாதுகாப்புச் சேவையின் ஒத்துழைப்புடன் தொழில்நுட்ப ரீதியான விழிப்புணர்வு நிகழ்ச்சியும் மேற்கொள்ளப்பட்டது. பெரிய நீர்ப்பாசனப் பிரதேசத்தில் செறிவு முறைப் பயிர்ச் செய்கையுடனான வாழைச் செய்கையின் விஸ்தீரண அதிகரிப்பு முன்னிலையாக இருந்தது.

### சேதனப் பசளை உற்பத்தி செய்தலையும் பாவனையையும் ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம்

இத்திட்டத்திற்காக ரூபா 24.875 மில்லியன் ஒதுக்கப்பட்டதுடன் கூட்டெரு தயாரிப்பதற்காக பொலித்தீன், ஓர் முள்ளுமண்வெட்டி, 25கி.கி எப்பாவலை பாறை பொஸ்பேற் (ERP) என்பன தெரிவு செய்யப்பட்ட 10,000 விவசாயிகளிற்கு மானியமாக வழங்கப்பட்டன. அவர்கள் 17,000 மெ.தொ கூட்டெருவை உற்பத்தி செய்ததுடன் தங்கள் பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தினர். ஓர் தேசியமட்ட வயல்விழா கௌரவ விவசாய அமைச்சர் மகிந்த ஜாப்பா அபேய வர்த்தன அவர்களின் பங்குபற்றுதலுடன் மேற்கொள்ளப்பட்டது.

### மாகாண இடைப் பிரதேசம் – கண்டி

மாகாண இடைப் பிரதேசம் - கண்டியானது கண்டி, மாத்தளை, மற்றும் பதுளை ஆகிய மூன்று மாவட்டங்களில் ஐந்து பிரதேச செயலக பிரிவுகளான மினிப்பே, வில்கமுவ, கந்தக்கெட்டிய, நெதீமலியத்தை, மகியங்கனை என்பவற்றை உள்ளடக்குகிறது. இம்மாகாண இடைப் பிரதேசமானது 11,737 கெக்டர் பெரிய நீர்ப்பாசனத் தாழ் நிலத்தையும் 7403 கெக்டர் மேட்டு நிலத்தையும் 22,397 விவசாயக்

குடும்பங்களுடன் கொண்டுள்ளது. இப் பிரதேச மானது ஆறு நீர்ப்பாசன திட்டங்களைக் கொண்டுள்ளது. விவசாயிகள் பெரும்போகம் மற்றும் சிறுபோகம் என்பவற்றில் நெற்செய்கையை தாழ்நிலங்களில் பாரிய விஸ்தீரணத்தில் மேற்கொள்ளுவதுடன் மறுவயற்பயிர் செய்கை விஸ்தீரணமானது சிறு போகத்தில் அதிகரித்திருந்தது. விவசாயிகள் ஏனையவர்களை விட வெள்ளை நிற நீண்ட நெல் வர்க்கங்களையே பயிரிடுவதில் ஆர்வம் காட்டினார்கள். சோளம், நிலக்கடலை, பயறு மற்றும் மிளகாய் என்பன இருபோகங்களிலும் கூடிய பரப்பளவில் பயிரிடப்படுகின்ற மறுவயற்பயிர்களாகும்.

## 2012/ 2013 பெரும் போகம்

2012/ 2013 பெரும்போக காலத்தில் நெற் செய்கை இலக்கு 13,487 கெக்டராக இருந்தது. இது பெரிய நீர்ப்பாசனத்தின் கீழான 11,737 கெக்டர் பயிர்ச் செய்கையையும் மழைவீழ்ச்சியின் கீழான 1750 கெக்டர் பயிர்ச் செய்கையையும் உள்ளடக்குகிறது. இவ்விலக்கின் பெரிய நீர்ப்பாசனத்தின் கீழும் மழை வீழ்ச்சியின் கீழும் பயிர் செய்யப்பட்ட விஸ்தீரணங்கள் முறையே 11,668 கெக்டர் மற்றும் 1854 கெக்டர் என்பனவாக இருந்தன. இது மழைவீழ்ச்சியின் கீழான பயிர்ச் செய்கை விஸ்தீரணமானது இலக்கிடப்பட்ட விஸ்தீரணத்திலும் அதிகமாக உள்ளதைக் காட்டுகிறது. பெறப்பட்ட விளைவு பெரிய நீர்ப்பாசனத்தின் கீழ் பயிர் செய்யப்பட்ட 11,737 கெக்டர் விஸ்தீரணத்திலிருந்து 4.8 மெ.தொ / கெக்டர் சராசரி விளைச்சலும் மழைவீழ்ச்சியின் கீழான விஸ்தீரணத்தின் சராசரி விளைவான 3 மெ.தொ / கெக்டர் உடனுமாக 56,337.6 மெ.தொ ஆக இருந்தது. சந்தை விலையின்படி நெல்லின் வர்த்தக மதிப்பானது ரூபா 1980.7 மில்லியனாக இருந்தது. இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட நெல் உற்பத்தியானது தேசிய உற்பத்தியில் 2.35% பங்களிப்பை வழங்கியிருந்தது.

மறுவயற்பயிர்களின் பயிர்ச் செய்கையின் கீழ் 343 கெக்டர் பயிர்ச் செய்கையில் இருந்து 2058 மெ.தொ சோளம் அறுவடை செய்யப்பட்டது. இச்சோள உற்பத்தியின் வர்த்தகப் பெறுமதியானது ரூபா 61.7 மில்லியனாக இருந்தது. நிலக்கடலையின் விஸ்தீரணம் 53.5 கெக்டர் என்பதுடன் உற்பத்தியின் பெறுமதி ரூபா 10.43 மில்லியன். பச்சை மிளகாய் உற்பத்திக்காக 58 கெக்டர் மிளகாய் பயிர் செய்யப்பட்டது.

## விசேட நிகழ்ச்சித் திட்டம்

பெரிய வெங்காய விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டமானது 1/10 கெக்டர் பரப்பளவில் 1200 கி.கி தாய்க்குமிழ்களைக் கொண்டு அமுல்படுத்தப்பட்டது. கனமழையின் காரணமாக எதிர்பார்த்த இலக்கை அடைய முடியவில்லை. எவ்வாறோ 54 கி.கி பெரிய வெங்காய விதை உற்பத்தி செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சிதிட்டத்தின் நோக்கமானது பெரிய வெங்காயச் செய்கையாளர்களிற்கு சுய விதை உற்பத்தி முறையினை அறிமுகப்படுத்துவதாக இருந்தது.

## 2013 சிறுபோகம்

பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழான சிறுபோக நெற்செய்கை இலக்கானது 6599 கெக்டராக இருந்தது. ஆனால் பயிரிடப்பட்ட விஸ்தீரணம் 8510 கெக்டராகவும் இலக்கிட்ட விஸ்தீரணத்தை மிஞ்சியதாகவும் இருந்தது. நெல் உற்பத்தியானது 5 மெ.தொ / கெக்டர் சராசரி விளைவுடன் 42,550 மெ.தொன்னாக இருந்தது. இவ்வுற்பத்தியின் வர்த்தகப் பெறுமதி ரூபா 1361.6 மில்லியனாகும். சோளப் பயிர் செய்கை விஸ்தீரணம் 2456 கெக்டர் என்பதுடன் உற்பத்தி 15,964 மெ.தொ ஆக இருந்தது. இதன் வர்த்தகப் பெறுமதி ரூபா 511 மில்லியனாக இருந்தது. நிலக்கடலையின் பயிர்ச் செய்கை விஸ்தீரணம் 130 கெக்டராக இருந்ததுடன் 195 மெ.தொ விளைவு பெறப்பட்டது. மிளகாய் மற்றும் கௌபி என்பவற்றின் பயிர்ச் செய்கை விஸ்தீரணங்கள் முறையே 24 கெக்டர் மற்றும் 7 கெக்டர் என்பனவாக இருந்தன.

10 கெக்டர் பெரிய வெங்காயச் செய்கையிலிருந்து சராசரி விளைவாக 17.5

மெ.தொ / கெக்டர் பதிவு செய்யப்பட்டது. 2013 சிறுபோக காலத்தில் பயறுப் பயிர் செய்கை ஒன்றிற்கு 1500 கி.கி ஆக இருந்ததுடன் அதன் சந்தை விலை கிலோ கிராம் ஒன்றிற்கு ரூபா 220.00 ஆக இருந்தது. விவசாயிகள் பயறுப் பயிர் செய்கையில் இருந்து அதிக வருமானத்தைப் பெற்றனர். பயறின் கேள்வியை பூர்த்தி செய்வதற்காகவும் மற்றைய மாவட்டங்களில் முன்றாம் போகப் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்காகவும் ஓர் விதை உற்பத்தி நிகழ்ச்சிதிட்டமானது 100 கெக்டர் பரப்பளவில் கசலக்க மாகாண இடைப் பிரதேசத்தில் அமுல்ப்படுத்தப்பட்டது. கசலக்க மாகாண இடைப் பிரதேசத்தில் விவசாயிகளால் வர்த்தக மற்றும் சிபார்சு செய்யப்பட்ட விதைகள் என இரண்டும் உற்பத்தி செய்யப்பட்டன. விவசாயிகள் வர்த்தக விதை உற்பத்தியில் இருந்து கெக்டர் ஒன்றிற்கு இலாபமாக ரூபா 162500 ஐயும் சிபார்சு செய்யப்பட்ட விதை உற்பத்தியில் இருந்து ரூபா 300,00 ஐயும் பெற்றுக் கொண்டனர்.

### விசேட கருத்திட்டத்தின் கீழான அடைவுகள்

- போகமல்லாத பெரிய வெங்காய விவரணத்துண்டம் 106 விவசாயிகளுடன் 5.2 கெக்டர் பரப்பளவில் ஸ்தாபிக்கப்பட்டது. சராசரி விளைவு 15 மெ.தொ / கெக்டராக இருந்தது. அத்துடன் கிலோவுக்கான சந்தை விலை ரூபா 80 ஆக இருக்கையில் கெட்டரிற்கான இலாபமானது ரூபா 875,000 ஆக இருந்தது.
- கந்தக்கெட்டிய பிரதேசத்தில் 276 விவசாயிகளுடன் அண்ணளவாக 80 கெக்டர் பயறுப் பயிர்ச் செய்கை விவரணத்துண்டம் அமைக்கப்பட்டதுடன் 85 மெ.தொ அறுவடை செய்யப்பட்டது. சராசரி விளைவு 1062.5 கி.கி / கெக்டர் ஆக இருந்ததுடன் விவசாயிகள் இலாபமாக ரூபா 17 மில்லியனைப் பெற்றனர்.
- விவசாயிகள் வியாபாரப் பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஐந்து விவசாயிகள் குழுவினர் (80 பேர்) பயிற்றுவிக்கப்பட்டனர். தற்போது 38 அங்கத்தவர்கள் விதை நெல் உற்பத்தி, நிலக்கடலை விதை உற்பத்தி, காளான் பயிர்ச் செய்கை மற்றும் கோழி வளர்ப்புப் போன்ற பல்வேறுப்பட்ட வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.
- கந்தகெட்டிய பிரதேசத்தில் 60 விவசாயிகளுடன் 0.3 கெக்டர் பரப்பளவில் பெரிய வெங்காய சுய விதை உற்பத்தித் திட்டமொன்று நிறுவப்பட்டுள்ளது. திட்டத்திலிருந்து 3600 கி.கி தாய்க் குமிழ்கள் வழங்கப்பட்டுள்ளன.
- சேதனப் பசளை உற்பத்தி மற்றும் பாவனையின் கீழ் கருத்திட்ட ஊக்குவிப்பு நிகழ்ச்சியானது 3450 விவசாயிகளுடன் மேற்கொள்ளப்பட்டதுடன் அவர்கள் 6900 மெ.தொ கூட்டெருவை உற்பத்தி செய்தனர்.

### மாகாண இடைப் பிரதேசம் – அம்பாறை

பிரதி விவசாயப் பணிப்பாளர் (மாகாண இடைப் பிரதேசம்) அலுவலகம், அம்பாறையானது நான்கு விவசாய நிர்வாகப் பிரிவுகளை உள்ளடக்குகிறது. அவையாவன உகண, தமண, அட்டாளைச்சேனை மற்றும் சம்மாந்துறை என்பனவாகும். இவ் நான்கு பிரிவுகளும் 25 கமநல சேவை நிலையங்களையும், 85 விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளையும், 16 பிரதேச செயலர் பிரிவுகளையும் 430 கிராம சேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்குகின்றன.

அம்பாறை மாவட்டத்தின் பிரதான நீர்ப்பாசன மூலம் என்பது இங்கினியாகலவில் உள்ள சேனநாயக்கா சமுத்திரமாகும். இது 770,000 ஏக்கர் அடி கொள்ளவைக் கொண்டுள்ளதுடன் கல்லோயா இடதுபுற மற்றும் வலதுபுற குடியிருப்புகளில் 10 சிறிய குளங்களிற்கு நீரை வழங்குகிறது. இதற்கு மேலதிகமாக அங்கு 13 ஏனைய சிறிய குளங்கள் உள்ளதுடன் இது

அம்பாறை மாவட்டத்தில் நெற்பயிர் செய்கைக்கு பலமாக ஆதரவளிக்கிறது.

மிளகாய் மற்றும் நிலக்கடலை உற்பத்திக்காக 2013ம் ஆண்டு காலப்பகுதியில் மாகாண இடைப் பிரதேசம் - அம்பாறையில் விவசாய அமைச்சினால் நிதியுதவியளிக்கப்பட்ட நான்கு விசேட கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. பழக் கிராமங்கள் மற்றும் பாரம்பரிய நெல் (thirasara yaya) என்பனவும் அமைக்கப்பட்டன. மேலும் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் நிதியளிக்கப்பட்ட “கல்லோயா உதயம்” எனும் கருத்திட்டம் மாகாண இடைப் பிரதேசத்தில் அமுல்ப்படுத்தப்பட்டது.

### மாகாண இடைப் பிரதேசம் ~ மொனராகலை

மொனராகலையின் மாகாண இடைப் பிரதேசமானது சியம்பலாண்டுவ, ஒக்கம்பிட்டிய, எதிமலை மற்றும் தெலுல்ல ஆகிய கமநல சேவை நிலையப் பிரிவுகளை உள்ளடக்குகிறது. முத்துக்கண்டிய, எதிமலை, கொட்டியாகல, சதாதிஸ்ஸ, கந்தபானகல ஆகிய குளங்கள் மற்றும் கும்புக்கன் ஓயா, அமுண ஆகியன மொனராகலை இடைப் பிரதேசத்தின் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களாகும். பெரிய, சிறிய மற்றும் மழை வீழ்ச்சியின் கீழான மொத்த நெற் செய்கைப் பரப்பளவு 16,476 கெக்டராகும். பிரதான பயிர்ச் செய்கைப் பயிராக நெல் இருப்பதுடன் இரண்டாவது பிரதான பயிராக சோளம் காணப்படுகிறது. 2012 / 2013 பெரும் போகத்தில் மொனராகலை இடைப் பிரதேசத்தில் செய்கை பண்ணப்பட்ட நெற் செய்கை விஸ்தீரணம் 16,585 கெக்டராக இருந்ததுடன் இது தேசிய நெல் உற்பத்திக்கு 66,073 மெ.தொ ஐ பங்களிப்புச் செய்தது.

வழமையான தொழில்நுட்ப நிகழ்ச்சிகளிற்குப் புறம்பாக 2013ம் ஆண்டு காலப்பகுதியில் அமுல்ப்படுத்தப்பட்ட விசேட நிகழ்ச்சிகளின் அடைவுகள் பின்வருமாறு

### தரமான விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 28 கெக்டர் பரப்பளவில் 36 விவசாயிகளைக் கொண்டு சிபார்சு செய்யப்பட்ட விதை உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டது. மொத்த விளைவு 28.5 மெ.தொ ஆக இருந்தது. இதற்கு மேலதிகமாக சுய விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டமானது 90 விவசாயிகளுடன் 35 கெக்டர் பரப்பளவில் அமுல்ப்படுத்தப்பட்டது. அவர்கள் 112 மெ.தொ விதை நெல்லை உற்பத்தி செய்தார்கள்.

### மறுவயற்பயிர் நிகழ்ச்சித் திட்டம்

2012/ 2013 பெரும்போக காலப்பகுதியில் போகமற்ற பெரிய வெங்காயப் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டம் 2.75 கெக்டர் பரப்பளவில் மாகாண இடைப் பிரதேசத்தில் அமுல்ப்படுத்தப் பட்டது. விதை, பொலித்தீன் மற்றும் இரசாயனங்கள் என்பன அவ்விவசாயிகளிற்கு வழங்கப்பட்டன. சராசரி விளைவு 4838 கி.கி / கெக்டர் ஆக இருந்தது அவதானிக்கப்பட்டது. இப்பிரதேசத்தில் பெரிய வெங்காயமானது வெற்றிகரமாகப் பயிர் செய்யப்பட்ட முடியும் என்பதை இது வெளிப்படுத்தியது.

இதற்கு மேலதிகமாக மிளகாய் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டமும் அமுல்ப்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டமானது விவசாய அமைச்சினால் நிதியளிக்கப்பட்டதுடன் மாவட்டச் செயலகத்தினால் 375 கெக்டர் மொத்த விஸ்தீரணத்திற்குமான 375 கி.கி விதை வழங்கியதன் மூலம் உதவியளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய உற்பத்திக்கான பங்களிப்பானது 1875 மெ.தொ மிளகாயாக இருந்தது. ஒடுங்கிய இலை நோயினை மிளகாயில் கட்டுப்படுத்துவதற்காக பூச்சிப் பாதுகாப்பு வலையினால் மறைப்பிடப்பட்ட பொதிப் பயிர்ச் செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நடவடிக்கைகளின்கீழ் சாதாரண நடவடிக்கை களை விட விளைவு உயர்வாக இருந்ததுடன் நோய் தாக்கமும் குறைவாக இருந்தது அவதானிக்கப்பட்டது. விவசாயிகள் மூலதன

ரீதியாக விதை, படங்கு என்பவற்றுடன் குரக்கன் மற்றும் உழுந்து என்பவற்றின் பதப்படுத்தலிற்கான அரைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டதன் மூலம் உதவியளிக்கப்பட்டனர்.

### மாகாண இடைப் பிரதேசம் – அநுராதபுரம்

மாகாண இடைப் பிரதேசம் அநுராதபுரமானது அநுராதபுரம், குருநாகல், மாத்தளை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் 12 பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை உள்ளடக்குகிறது. இது 35 விவசாய போதனாசிரியர் பிரிவுகளையும் 175 கிராம சேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்குகிறது. 2013ம் ஆண்டு காலப்பகுதியில் வழமையான தொழில்நுட்ப நிகழ்ச்சிகளிற்குப் புறம்பாக அமுல்ப்படுத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருமாறு

### விசேட அடைவுகள்

#### இடைப் போகப் பயறுப் பயிர்ச் செய்கை

இடைப் போகப் பயறுப் பயிர்ச் செய்கையானது 2013 சிறுபோகம் மற்றும் 2013 / 2014 பெரும்போகம் என்பவற்றிற்கு இடையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் பயிர் செய்யப்பட்ட மொத்தப் பரப்பளவானது 873 கெக்டராக இருந்தது. பிரதான பயிர்ச் செய்கைப் பிரதேசங்கள் ராஜங்கனை, உஸ்கல - சியம்பலங்கமுவ, நுவரவெல மற்றும் வகலகட ஆகிய பிரதான நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் வருகின்றன. சராசரியாகப் பெறப்பட்ட விளைவு 80கி.கி / கெக்டராக இருந்தது. அறுவடையின் சந்தை விலை அண்ணளவாக ரூபா 200.00 - 220.00 / கி.கி ஆக இருந்தது. இது விவசாயிக ளிற்கு நல்ல இலாபத்தைக் கொடுத்தது. சந்தைத் தொடர்பும் பிரதி விவசாயப் பணிப்பாளரால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

#### மறுவயற்பயிர் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்

மறுவயற்ப் பயிர்களின் இறக்குமதியைக் குறைக்கும் பொருட்டு விவசாய அமைச்சின் நிதியுதவியுடன் விசேட நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இது பிரதானமாக சோயா அவரை, மிளகாய், மற்றும் எள்ளு என்பவற்றில் கருத்தூன்றப்பட்டது. பயிரிடப்பட்ட சோயஅவரை, மிளகாய் மற்றும் எள்ளு என்பவற்றின் பரப்பளவுகள் சிறுபோகத்தில் முறையே 3078 கெக்டர், 441 கெக்டர், மற்றும் 3681 கெக்டர் என்பனவாக இருந்தது. முன்னைய சிறுபோகத்துடன் ஒப்பிடுகையில் பரப்பளவுகளின் அதிகரிப்பு 1408 கெக்டர் 56 கெக்டர் மற்றும் 1520 கெக்டர் என்பனவாக இருந்தன.

#### நெல்லில் பரசூட் முறையிலான பயிர்ச் செய்கை

2012 / 2013 பெரும்போகம் மற்றும் 2013 சிறுபோகம் என்பவற்றில் 2400 கெக்டர் பரப்பளவு நெல் நிலமானது பரசூட் முறையைப் பயன்படுத்தி பயிர் செய்யப்பட்டது. விவசாயிகள் இம்முறையினைப் பயன்படுத்தியதன் மூலம் பல நன்மைகளைப் பெற்றனர். அவையாவன உற்பத்திச் செலவுக் குறைப்பு, விளைவு அதிகரிப்பு, இலாப அதிகரிப்பு, விதை நெல் தேவைக் குறைப்பு, களைக் கட்டுப்பாடு போன்றனவாகும்.

#### விவசாயிகள் வியாபாரப் பாடசாலை நிகழ்ச்சித் திட்டம்

அநுராதபுரம் மாகாண இடைப் பிரதேசத்தில் இந்நிகழ்ச்சித் திட்டமானது ஓர் பரீட்சார்த்த நிகழ்ச்சித் திட்டமாக அமுல்படுத்தப்பட்டது. விவசாயிகள் பயிற்றுவிக்கப்பட்டதுடன் அவர்களு டைய எதிர்காலப் பயன்பாட்டிற்காக தற்கால விவசாய முறையானது வியாபார முயற்சியாக மீளமைப்புச் செய்யப்படுவதற்காக வியாபாரத் திட்டம் உருவாக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டமானது உணவு விவாய ஸ்தாபனத்தின் நிதியளிப்புடன் 5 விவசாயிகளைக் கொண்டு 5 விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் மட்டும் அமுல்படுத்தப்பட்டது.

## மாகாண இடைப் பிரதேசம் – பொலநறுவை

மாகாண இடைப் பிரதேசம் பொலநறுவையானது மூன்று உதவி விவசாயப் பணிப்பாளர் பிரிவுகளையும் எட்டு கமநல சேவைகள் நிலையப் பிரிவுகளையும், முப்பத்தைந்து விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளையும் உள்ளடக்குகிறது. இப்பிரதேசமானது மதிரிகிரிய, கிங்குறாகொட, இலங்காபுரம், தம்மன்கடுவை, மற்றும் எலகர எனப் பெயரிடப்படும் ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்குகிறது. பொலநறுவை மாகாண இடைப் பிரதேச மொத்த நிலப்பரப்பளவு 96,000 கெக்டராக இருப்பதுடன் இது 46,092 விவசாய குடும்பங்களை உள்ளடக்குகிறது. இப்பிரதேசத் தின் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களாவன பராக்கிரம சமுத்திரம், கவுடுல்ல, மின்னேறியா மற்றும் கிரிதலை என்பனவாகும். நெல் இப்பிரதேசத்தின் பிரதான உள்ளூர்ப் பயிர் என்பதுடன் பெரிய வெங்காயம், நிலக்கடலை சோளம் என்பன கூடிய பரப்பளவில் செய்கை பண்ணப்படுகின்ற மறுவயற் பயிர்களாக இருக்கின்றன.

## விசேட அடைவுகள்

- தேசிய உற்பத்திக்கான இப்பிரதேசத்தின் நெல் உற்பத்தியின் பங்களிப்பானது 2.35% ஆக இருந்தது. 2012 / 2013 பெரும் போகத்தில் நெல் உற்பத்தியானது 127,800 மெ.தொ என்பதுடன் 2013 சிறுபோகத்தில் 165, 517 மெ.தொ ஆக இருந்தது. இது தேசிய நெல் உற்பத்தியின் 6% ஆக இருந்ததுடன் முன்னைய வருட உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 4.6% அதிகரித்திருகிறது. இப்பிரதேசத்தில் வளர்க்கப்படுகின்ற மிகவும் பிரபல்யமான நெல் வர்க்கம் BG 352 என்பதுடன் BG 366 மற்றும் BG 300 வர்க்கங்களும் கூடியளவு பரப்பளவில் பயிரிடப்படுகின்றன. குறித்த ஆண்டுக் காலப்பகுதியில் விவசாய விரிவாக்க நடவடிக்கைகளான ICM ஜாய, பரசூட் ஜாய, இயந்திரமயமாக்கல் ஜாய, மற்றும் விவரணச் செய்கைளான IPNS, இலை நிறப்பட்டியலின் (Leaf colour chart) பாவனை என்பன நெல்லின் சராசரி விளைவை 6 மெ.தொ / கெக்டராக அதிகரிப் பதற்காக கையாளப்பட்டன. அண்ணளவாக 1850 பயிற்சி வகுப்புக்கள் 74 வயல் விழாக்கள் மற்றும் 76 பயிர் சிகிச்சை முகாம்கள் என்பன கால பேகம் பூராகவும் நடாத்தப்பட்டன.

- பெரிய வெங்காயம் (151 கெக்டர்) மற்றும் நிலக்கடலை (283 கெக்டர்) என்பன மாகாண இடைப் பிரதேசத்தில் அதிகரித்து வரும் மறுவயற் பயிர்களாகும். அப்பயிர்களின் பயிர்ச் செய்கை பரப்பளவு முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 7% மற்றும் 6% முறையே அதிகரித்துள்ளது. 2013 சிறுபோகத்தில் 71 கெக்டர் சோயா அவரைப் பயிர்ச் செய்கை மற்றும் 180 கெக்டர் மூன்றாம் போகப் பயறுப் பயிர்ச் செய்கை என்பன ஆரம்பிக்கப்பட்டன. சிறிய வெங்காயம், கௌப்பி, பயறு மற்றும் உழுந்து என்பவற்றின் பயிர்ச் செய்கைப் பரப்பளவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்திருந்த அதேவேளை எஞ்சிய மறுவயற்பயிர்களில் பயிர்ச் செய்கைப் பரப்பளவு குறைவடைந்திருந்தது. மூன்று பெரிய வெங்காய சேமிப்பறைகள் (10மெ.தொ) மற்றும் நூறு பெரிய வெங்காய சேமிப்புத் தட்டுகள் என்பன விவசாயிகளிற்கு 2012 / 2013 பெரும்போகத்தில் விநியோகம் செய்யப்பட்டிருந்தது. இரு போகங்களிலும் 879 பயிற்சி வகுப்புகள், மற்றும் 42 வயல் விழாக்கள் என்பன நடாத்தப்பட்டன.

- மாகாண இடைப் பிரதேசத்தில் வாழைச் செய்கைப் பரப்பளவில் ஓர் தொடர்ச்சியான அதிகரிப்பு காணப்பட்டது. 328 கெக்டர் வாழை, 438 கெக்டர் மா, 58 கெக்டர் பப்பாசி மற்றும் 130 கெக்டர் தேசி என்பன வர்த்தகரீதியாகவோ அல்லது குடியிருப்பு மட்டத்திலேயோ செய்கை பண்ணப்பட்டு வருகிறது. தாழ்நில மரக்கறிப் பயிர்கள்

இப்பிரதேசத்தில் அதிகம் பயிரிடப்பட்டு வருவதுடன் அவற்றில் 103 கெக்டர் பூசணி 106 கெக்டர் வெண்டி, 116 கெக்டர் பயற்றை, என்பன வருடம் பூராகவும் செய்கை பண்ணப்பட்டு வருகின்றன. பழ பயிர்ச் செய்கையில் மொத்தமாக 56 பயிற்சி வகுப்புகளும் 10 வயல் விழாக்களும், மரக்கறி பயிர்ச் செய்கையில் 136 பயிற்சி வகுப்புக்களும் 2 வயல் விழாக்களும் இரு போகங்களிலும் நடாத்தப்பட்டன.

- விவசாயிகள் வியாபாரப் பாடசாலைக் கருத்திட்டமானது மாகாண இடைப் பிரதேசத்தில் அமுல்ப்படுத்தப்பட்டு வருவதுடன் இது பயிற்றப்பட்ட விவசாயப் போதனாசிரியர்களால் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டது. 456 அங்கத்தவர்களைக் கொண்ட 25 பெண்கள் விவசாய அமைப்புகள் சிறப்பாக அமைக்கப் பட்டுள்ளன. மொத்தம் 148 பயிற்சி வகுப்புக்கள் உணவும் போசணையும், உள்ளூர் உணவு மேம்பாடு, சமயலறை முகாமைத்துவம் மற்றும் வியாபார முயற்சியாண்மை போன்ற விடயங்களில் மேற்கொள்ளப்பட்டன. சமூகங்களிடையே உள்ளூர் உணவு மேம்பாடு எனும் நோக்கத்துடன் பதினொரு “இலைக் கஞ்சி” உற்பத்திக் கொட்டகைகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் விவசாயத்தை அதிகரிப்பதற்காக மூன்று மின் நீர் பம்பிகள் 22 (இரண்டு சில்லு உழவு இயந்திரத்துடன் இணைந்து இயங்கும்) நீர்ப்பம்பிகள், பரசூட் தட்டுகள் என்பன 55 கெக்டரிற்காக PSDG யால் விநியோகிக்கப்பட்டன.

## சேவைக் கால பயிற்சி நிறுவனம் ~ கன்னொறுவை

சேவைக் கால பயிற்சி நிறுவனம் - கன்னொறுவையானது தேசிய மட்டத்தில் உள்ள பிரதான விவசாயப் பயிற்சி நிறுவனமாகும். இது விவசாயத் திணைக்கள அலுவலர்கள், வியாபார முயற்சியாண்மையாளர்கள், விவசாயிகள் மற்றும் ஏனைய விவசாய அலுவலர்கள் போன்றோரின் அறிவு, திறன் மற்றும் மனோபாவம் என்பவற்றை விருத்தி செய்வதற்கு பொறுப்பாக உள்ளது. 2013ம் ஆண்டு காலப்பகுதியில் மொத்தம் 149 பயிற்சி நிகழ்ச்சிகள் (13,460 மனித நாட்கள்) மேற்கொள்ளப்பட்டன. இதில் 102 அலுவலர்களிற்காகவும் (10,685 மனித நாட்கள்) 18 விவசாயிகளிற்காகவும் (969 மனித நாட்கள்) 29 வயற்பயிற்சிகளும் (1806 மனித நாட்கள்) அடங்கும். மேலும் 94 வரையிலான பயிற்சிப் பட்டறைகள் / கருத்தரங்குகள் / கூட்டங்கள் கலந்துரையாடல்கள் (10594 மனித நாட்கள்) என்பனவும் நடாத்தப்பட்டன.

## சேவைக் காலப் பயிற்சி நிறுவனம் ~ அங்குணகொலபெலஸ்ஸ

இது தென் மாகாணத்தில் அமைந்துள்ள ஓர் விவசாயத்திணைக்களத்தின் பிரதான விவசாயப் பயிற்சி நிறுவனமாகும். இந்நிறுவனமானது அலுவலர்கள், வியாபார முயற்சியாண்மை யாளர்கள், விவசாயிகள் மற்றும் ஏனைய அலுவலர்கள் போன்றோரின் அறிவு, திறன், மனோபாவம் என்பவற்றை விருத்தி செய்வதற்கு பொறுப்பாக உள்ளது. இந்நிறுவனமானது சேவைக் காலப் பயிற்சியினை காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்கள் மற்றும் அம்பாந்தோட்டை மாகாண இடைப் பிரதேசம் என்பவற்றில் உள்ள மேற்படி குழுவினருக்கு வழங்குகிறது.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் மொத்தம் 75 பயிற்சி நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் (7528 மனித நாட்கள்) 58 பயிற்சிகள் அலுவலர்களிற்காகவும் (2174 மனித நாட்கள்) 4 பயிற்சிகள் விவசாயிகளிற்கானதும் (174 மனித நாட்கள்) 01 களப் பயிற்சியையும் (35 மனித நாட்கள்) 12 வெளிக்களப் பயிற்சி நடவடிக்கைகளையும் (5145 மனித நாட்கள்) உள்ளடக்குகிறது. அத்துடன் 07 பயிற்சிப் பட்டறைகள் / கருத்தரங்குகள் / கூட்டங்கள் கலந்துரையாடல்கள் (491 மனித நாட்கள்) என்பனவும் நடாத்தப்பட்டன.

### சேவைக் காலப் பயிற்சி நிறுவனம் ~ கன்சயபலம, அறலகன்வில

இந்நிறுவனமானது மகாவலி B துண்டத்தில் உள்ளதுடன் இலங்கை மகாவலி அதிகார சபையின் விரிவாக்க அலுவலர்களிற்கான பயிற்சிகளை நடாத்துகிறது. அதே நேரம் விவசாயத் திணைக்களம் ஏனைய அரச மற்றும் அரசு சாரா நிறுவன அலுவலர்களிற்குப் பயிற்சியினை நடாத்துகிறது. அதற்குப் புறம்பாக மகாவலித்துண்டங்கள் B, C, D, G அதேபோன்று அம்பாறை மற்றும் பொலநறுவை மாகாண இடைப் பிதேசங்கள் என்பவற்றின் விவசாயிகள் மற்றும் வியாபார முயற்சியாண்மையாளர்கள் ஆகியோர் இந்நிறுவனத்தினால் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

2013ம் ஆண்டில் 60 வரையிலான பயிற்சி நிகழ்ச்சிகள் (1956 மனித நாட்கள்) நடாத்தப்பட்டன. இவற்றுள் 16 நிகழ்ச்சிகள் (571 மனித நாட்கள்)அலுவலர்களிற்கானதாகவும் 15 நிகழ்ச்சிகள் (385 மனித நாட்கள்) விவசாயிகளிற்கானதாகவும் அத்துடன் 29 களப் பயிற்சி (1000 மனித நாட்கள்) என்பனவும் நடாத்தப்பட்டன. இந்நிறுவனமானது பண்ணை அபிவிருத்தி மற்றும் காணி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான பண்ணை அபிவிருத்தியின் மூலம் பலப்படுத்தப்பட்டது.

மேலதிகமாக பாரம்பரிய மரக்கறி விதை உற்பத்தி எனும் விசேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாரம்பரிய மரக்கறி விதைகள் இந்நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்டன.

### பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி மத்திய நிலையம் (FMTC)

பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி மத்திய நிலையம் (FMTC) ஆனது தேசிய மட்டத்தில் உள்ள ஒரேயொரு பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி மத்திய நிலையம் என்பதுடன் இது அநுராதபுரத்தில் அமையப் பெற்றுள்ளது. இதன் பிரதான கடப்பாடுகள் பின்வரும் விடயங்களில் கருத்தூன்றப்படுகிறது.

### இயக்குதலும் பராமரித்தலுமான பாடநெறி

- நான்கு சில்லு உழவு இயந்திரத்தினை இயக்குதலும் பராமரிப்பும் 10 நாட்கள்
- இரண்டு சில்லு உழவு இயந்திரத்தினை இயக்குதலும் பராமரிப்பும் 05 நாட்கள்
- தெளிகருவிகள் இயக்குதலும் பராமரிப்பு - 02 நாட்கள்
- அறுவடை மற்றும் சூடடித்தல் இயந்திரங்களின் இயக்குதலும் பராமரிப்பும் - 02 நாட்கள்
- கூட்டு அறுவடை இயந்திரத்தின் இயக்குதலும் பராமரிப்பும் - 02 நாட்கள்

### பழுது பார்த்தல் பாடநெறி

- இரண்டு சில்லு உழவு இயந்திரத்தின் (K75) பழுதுபார்த்தல் - 05 நாட்கள்
- நீர் இறைக்கும் இயந்திரத்தின் பழுதுபார்த்தல் - 05 நாட்கள்
- தெளிகருவி பழுதுபார்த்தல் - 05 நாட்கள்

2013ம் ஆண்டு காலப்பகுதியில் (FMTC) ஆனது 61 பயிற்சி நிகழ்ச்சிகளை (6097 மனித நாட்கள்) நடாத்தியதுடன் இது 13 நிகழ்ச்சிகளை அலுவலர்களிற்காகவும் (781 மனித நாட்கள்) 15 நிகழ்ச்சிகளை விவசாயிகளிற்காகவும் (746 மனித நாட்கள்) 30 நிகழ்ச்சிகளை பல்கலைகழகங்கள், பாடசாலைகள், தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் விவசாயக் கல்லூரிகள் என்பவற்றின் மாணவர்களிற்காகவும் (3525 மனித நாட்கள்) உள்ளடக்கியது.

மேலதிகமாக FMTC ஆனது கள நில விரிவாக்க அலுவலர்களிற்கு பண்ணை இயந்திரமயமாக்கல் தொடர்பான விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வேண்டிய ஆதரவினை வழங்குகிறது. இதற்கு அப்பாற்பட்டு FMTC ஆனது தேவையான நிறுவனங்களிற்கு பண்ணை இயந்திரமயமாக்கலில் ஆலோசனைகளை வழங்குகிறது.

வருடத்திற்கான விசேட அடைவாக AP 400 நெல் நாற்று நடும் கருவியின் செயற்பாட்டை மதிப்பீடு செய்வதற்காக பிரதி விவசாயப் பணிப்பாளர், அநுராதபுரம் அவர்களின் உதவியுடன் ரம்பாவ மற்றும் சிரவஸ்திபுரம் ஆகிய பகுதிகளில் விவசாயிகளின் வயல்களில் பரீட்சார்ந்த நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அண்ணளவாக 16% மற்றும் 9% விளைவு அதிகரிப்புகள் முறையே 30cm x 14cm மற்றும் 30cm x 22cm ஆகிய பயிர் இடைவெளிகளில் பாரம்பரிய வீசி விதைப்புடன் ஒப்பிடுகையில் பெறப்பட்டன.

### இலங்கை விவசாய கல்லூரி – அநுராதபுரம்

இக்கல்லூரியானது 1994ம் ஆண்டு மே மாதம் 2ம் திகதி இரண்டு வருட டிப்ளோமா பாடநெறியை வழங்கும் ஓர் பயிற்சி நிறுவனமாக நிறுவப்பட்டது. அதன் பிற்பாடு 2002ம் ஆண்டு இக்கல்லூரியானது விசேட பயிற்சி நிறுவனமாக மாற்றப்பட்டதுடன் திணைக்கள அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் பாடசாலைப் பிள்ளைகளிற்கு அதிக எண்ணிக்கையான குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சிகளை வழங்கியது.

விவசாயக் கல்லூரியானது 2013ம் ஆண்டு மகாவலி கள உதவியாளர்கள் 37 பேருக்கு ஒரு வருட விவசாய செயன்முறைச் சான்றிதழ் பாடநெறியை வழங்கியது. இதற்கு மேலதிகமாக வீட்டுத் தோட்டத்தில் ஓர் நாள் பயிற்சி நிகழ்ச்சி (பாடசாலைப் பிள்ளைகள் / விவசாயிகள்) நெற் செய்கை மற்றும் நில அலங்காரம் (விவசாயிகளிற்கு) என்பன குறுகிய காலப் பயிற்சியாக மேற்கொள்ளப்பட்டன.

### இலங்கை விவசாயக் கல்லூரி – வாரியபொல

இலங்கை விவசாயக் கல்லூரி வாரியப்பொல ஆனது 1994 ம் ஆண்டு விவசாயத்தில் ஆர்வமுடைய இளையோரிற்கு இரண்டு வருட டிப்ளோமா பாடநெறியை வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டது. எவ்வாறோ 2003ம் ஆண்டிலிருந்து நிறுவனத்தில் வளப்பற்றாகுறையினால் டிப்ளோமா பாடநெறி மேற்கொள்ளப்படவில்லை. அதன் பிற்பாடு விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களிற்கு (ARPA) ஒரு வருட பயிற்சி வகுப்பு 2005இல் இருந்து 2012 வரை நடாத்தப்பட்டது.

2013 இல் நிறுவனத்தின் பெயரானது விசேட விவசாயப் பயிற்சி நிலையம் என மாற்றப்பட்டது. இப்பயிற்சி நிலையமானது தற்போது விவசாயத் திணைக்களம் ஏனைய அரச நிறுவனங்கள், என்பவற்றின் அலுவலர்களிற்கும் விவசாயிகளிற்கும் பயிற்சியினை நடாத்துகிறது. விசேடமாக கூட்டிணைந்த பயிற்சிகளை ஏற்பாடு செய்தலும் நடாத்துதலும் வடமேல் மாகாண விவசாயத் திணைக்களத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டன. வீட்டுத் தோட்டம் மற்றும் ஏனைய விவரணங்கள் புதிய தொழில்நுட்பங்களை வழங்கும் நோக்குடன் பராமரிக்கப்பட்டன. வருடத்தின் விசேட அடைவாக "விவசாயிகள் வாரம்" 2013ம் ஆண்டு யூலை மாதம் 06ம் திகதி தொடக்கம் 10ம் திகதி வரை வெற்றிகரமாகக் கொண்டாடப்பட்டது.

### இலங்கை விவசாயக் கல்லூரி – லபுதுவ

இலங்கை விவசாயக் கல்லூரி - லபுதுவ 1994ம் ஆண்டு விவசாயத்தில் டிப்ளோமா பாட நெறியை வழங்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு 2000ம் ஆண்டு வரை தொடர்ந்து பின்னர் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் இணைக்கப்பட்ட விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களிற்காக ஒரு வருட செயன்முறை விவசாயப் பயிற்சி அறிமுகப்படுத்தப்பட்டது.

2013ம் ஆண்டிற்கான விசேட அடைவாக விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களிற்கான இறுதிப் பரீட்சை பெப்ரவரி மற்றும் ஒக்டோபர் 2013 களில் நடாத்தப்பட்டது. அத்தோடு பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஏனைய பலர் நிறுவனத்தின் விவரண துண்டங்களிற்கு வருகை தந்தனர். மேலதிகமாக விவசாயிகள் அலுவலர்கள், மற்றும் பொது மக்கள்

என்பவர்களிற்காக குறுகிய காலப் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

### பூங்கனியியல் பயிர்கள் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள், பிபிலை

பூங்கனியியல் பயிர்கள் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01ம் திகதி விவசாயக் கல்லூரி பிபிலை மற்றும் HORDI இன் பிபிலை ஆராய்ச்சிப் பண்ணை என்பவற்றின் கூட்டிணைவால் நிறுவப்பட்டது. நிறுவனமானது மொனராகலை மாவட்டத்தின் பிபிலை பிரதேச செயலர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் பிரதான நோக்கங்களாவன

- புதிய பூங்கனியியல் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தலும் இலாபகரமான வர்த்தக மாதிரிப் பண்ணையாக பராமரித்தலும்
- புதிய தொழில்நுட்பத்துடன் வேறுபட்ட பழமரங்களை பெரிய அளவில் உற்பத்தி செய்தல்
- குளோன் பாதுகாப்பு
- அரச அலுவலர்கள், NGO அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் மாணவர்கள் (பாடசாலை / பல்கலைக்கழகங்கள்) போன்றோருக்காக புதிய தொழில்நுட்பத்துடனான பயிற்சி நிகழ்ச்சிகளை முன்னெடுத்தல்
- பயிற்சி அடிப்படையிலான விவரணத் துண்டங்களை அமைத்தலும் பராமரித்தலும்
- புதிய சிபாரிசுகளில் களப் பரிசோதனை
- தகவல் தொழில்நுட்பத்திற்குரிய நிறுவனமாகத் தொழிற்படல்.

  நிறுவனமானது பின்வரும் விடயங்களில் பயிற்சிகளை வழங்குகிறது.

- ஒட்டப்பட்ட பழமரங்கன்றுகள் உற்பத்தி
- நீர்ப்பாசனமும் நீர் முகாமைத்துவமும்
- வர்த்தகப் பழப்பயிர்ச் செய்கையும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பமும்
- தேனீ வளர்ப்பு
- சேதன விவசாயம்
- தரை அலங்காரமும் மலரியலும்
- காளான் உற்பத்தி
- பாதுகாப்பான விவசாயம்
- மரமுந்திரிகை உற்பத்தி

### விசேட அடைவுகள்

காணி அபிவிருத்தி விசேட கருத்திட்டத்தின் கீழ் அண்ணளவாக 2000 வாழைக் குட்டிகள் (கப்பல்) தாபிக்கப்பட்டதுடன் 480$m^2$ அளவுடைய பொலித்தீன் கூடாரமும் புனரமைக்கப்பட்டது.

பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 7.6 கெக்டர் நெல் பயிர் செய்யப்பட்டதுடன் 50 மெ.தொ நெல் அறுவடை செய்யப்பட்டது. இதில் 15 மெ.தொ விதை நெல்லாக விற்பனை செய்யப்பட்டதுடன் எஞ்சியது குண்டசாலை விவசாயக் கல்லூரிக்கு மாணவர்களின் நுகர்விற்காக விநியோகிக்கப்பட்டது.

மேலதிகமாக 0.5 கெக்டர் கொடித் தோடை மற்றும் 1.5 கெக்டர் தோடைப் பயிர்ச் செய்கை தாபிக்கப்பட்டன. மாதுளை மற்றும் நாரத்தை கொய்யா என்பவற்றிக்கான தாய்த்தாவரப் பழத் தோட்டமும் தாபிக்கப்பட்டது. மண் பாதுகாப்பிற்காக விவரணப் பண்ணையில் கல்வேலிகள் அமைக்கப்பட்டன. (100 சதுர அடி)

வர்த்தக ரீதியான பழ மரக் கன்றுகள் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் உற்பத்தி நிலையத்தினால் பழமரக் கன்றுகள் உற்பத்திக்காக நிதி வழங்கப்பட்டது. மொத்தம் 62,000 பழ மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் அக்கன்றுகளில் இருந்து பெற்ற இலாபம் ரூபாய் 1,793,483 ஆக இருந்தது. 2013ம் ஆண்டு மரக்கறி விற்பனை மற்றும் பழப்பயிர் உற்பத்தி என்பவற்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 2257,

473 ஆக இருந்தது. மேலும் இவ்வலகானது 2013ம் ஆண்டில் விவசாய சேவை அலுவலர்கள் (80 மனித நாட்கள்) திணைக்கள தாவர ஒட்டுநர்கள் (1060 மனித நாட்கள்) பல்கலைக்கழக மாணவர்கள் (150 மனித நாட்கள்) விவசாயிகள் (250 மனித நாட்கள்) தாவர நாற்றுமேடை அபிவிருத்தி உதவியாளர்கள் (NVQ மட்டம் - 3 - 500 மனித நாட்கள்) மற்றும் ஏனையோர் (768 மனித நாட்கள்) ஆகியோரிற்கு பயிற்சி வகுப்புக்களை நடாத்தியது.

### மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் – வீரவில

மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையமானது (DATC) தாழ்நில உலர் வலயத்தில் ($DL_5$ - $DL_{1b}$) இல் அமைந்துள்ளது. இந்நிலையமானது 1986 இல் லுனுகம்வெகர மனித குடியிருப்பு கருத்திட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. இந்நிலையத்தின் நோக்கம் விவசாய சமூகத்தினர், பாடசாலைப் பிள்ளைகள் அதேபோன்று மத்திய விவசாயத் திணைக்கள மற்றும் மாகாண விவசாயத் திணைக்கள அலுவலர்கள் ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றிற்கு கற்பித்தல் மற்றும் விவசாய அறிவை உயர்த்துதல் என்பனவாக உள்ளது.

2013ம் ஆண்டில் இப்பயிற்சி நிலையம் விவசாயிகளிற்கான 30 பயிற்சிகள் (1121 மனித நாட்கள்) அலுவலர்களிற்கான பயிற்சிகள் 07 (171 மனித நாட்கள்) மற்றும் 04 பயிற்சிப் பட்டறைகள் (96 மனித நாட்கள்) என்பவற்றை நடாத்தியது.

### மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் – வாவின்ன

மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் - வாவின்ன அம்பாறை மாவட்டத்தில் ஓர் தெங்குச் செய்கை குடியிருப்பில் அமையப் பெற்றுள்ளது. இந்நிலையமானது விவசாயிகள், அலுவலர்கள் பாடசாலைப் பிள்ளைகள் மற்றும் ஏனையோரிற்காக விவசாய அறிவுசார் பயிற்சிகளை வழங்குகிறது.

2013ம் ஆண்டு காலப்பகுதியில் மொத்தம் 66 பயிற்சி நிகழ்ச்சிகள் (2939 மனித நாட்கள்) இந்நிலையத்தால் மேற்கொள்ளப்பட்டன. இது அலுவலர்களிற்கான 25 பயிற்சிகளையும் (1490 மனித நாட்கள்) விவசாயிகளிற்கான 11 பயிற்சிகளையும் (361 மனித நாட்கள்) 30 ஏனைய பயிற்சிகளையும் (1088 மனித நாட்கள்) உள்ளடக்குகிறது. அத்துடன் 12 பயிற்சிப் பட்டறைகள் (144 மனித நாட்கள்) வெவ்வேறு விடயங்களில் நடாத்தப்பட்டது.

### மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் – பொலன்னறுவை

பொலன்னறுவை மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையமானது தம்மன்கடுவை பிரதேச செயலகப் பிரிவில் கதுருவெலை நகரில் அமைக்கப்பட்டுள்ளது. அவ்வலகு ஓர் மாதிரிப் பண்ணையாக உள்ளதுடன் 4.5 ஏக்கர் பரப்பளவில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது. மாதிரிப் பண்ணையானது நெல், மறுவயற்பயிர்கள், மரக்கறி, பழம் மற்றும் ஏனைய பயிர்களைக் (தென்னை) கொண்டுள்ளது. இது விவசாயிகளிற்கு தொழில் நுட்ப அறிவு மற்றும் ஒவ்வொரு பயிர்களினதும் பயிர்ச் செய்கை முறைகள் என்பவற்றை வழங்குகிறது. மேலும் மாதிரி வீட்டுத் தோட்டம் தேனீவளர்ப்பு மற்றும் காளான் பயிர்ச் செய்கை என்பவற்றிலும் அறிவை வழங்குகிறது.

2013ம் ஆண்டு காலப்பகுதியில் மொத்தம் 33 பயிற்சி நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் (503 மனித நாட்கள்) இது அலுவலர்களிற்கான 12 பயிற்சிகளையும் (482 மனித நாட்கள்) 12 விவசாயிளிற்கான 14 பயிற்சிகளையும் (171 மனித நாட்கள்) மற்றும் விவசாயிகளிற்கான 07 வெளிக்களப் பயிற்சிகளையும் (103 மனித நாட்கள்) உள்ளடக்குகிறது. அவற்றிற்கு அப்பால் “ராஜரட்டை விவசாயத்தை நோக்கி” எனும் கண்காட்சி 2013.09.06 தொடக்கம் 2013.09.10 வரையான காலப்பகுதியில் இந்நிலையத்தில் நடாத்தப்பட்டது.

## மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் ~ பாலமுனை

மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் பலாமுனையானது UNDP யினால் 2007 செப்டெம்பர் 23ம் திகதி விவசாயத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது. இந்நிலையத்தின் நோக்கமானது விவசாயிகள், தொடர்புடைய விவசாய அலுவலர்கள் ஆசிரியர்கள், பாடசாலைப் பிள்ளைகள், சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் இப்பிரதேசத்தில் விவசாயப் பண்ணை அபிவிருத்தியை மேற்கொள்கின்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் போன்றோரிற்கு பாட ரீதியான மற்றும் செய்முறை ரீதியான விவசாய தொழில்நுட்ப பயிற்சியினைத் தமிழ்மொழியில் வழங்குவது என்பதாக அமைகிறது.

2013ம் ஆண்டு காலப் பகுதியில் மொத்தம் 33 பயிற்சி நிகழ்ச்சிகள் (1193 மனித நாட்கள்) நடாத்தப்பட்டதுடன் இது அலுவலர்களிற்கான 14 பயிற்சிகளையும் (474 மனித நாட்கள்) விவசாயிகளிற்கான 06 பயிற்சிகளையும் (203 மனித நாட்கள்) வயற் பயிற்சிகள் 03ஐயும் (82 மனித நாட்கள்) பாடசாலை மாணவர்களிற்கான 04 பயிற்சிகளையும் (102 மனித நாட்கள்) மற்றும் ஏனையோரிற்கான 05 பயிற்சிகளையும் (228 மனித நாட்கள்) உள்ளடக்கியது.

## பெண்கள் விவசாய விரிவாக்க நிகழ்ச்சி (WAE)

பெண்கள் விவசாய விரிவாக்க நிகழ்ச்சியின் பணிக்கூற்றானது “குடும்ப அலகின் வாழ்க்கைத் தரம் மற்றும் போசணை மட்டம் என்பவற்றை விருத்தி செய்வதனூடாக விவசாய அபிவிருத்தியில் பெண்களிற்கான பங்களிப்பை அதிகரித்தல்” என்பதாகும். இந்நிகழ்ச்சியின் நோக்கமானது சிறந்த வீட்டுச் சூழலை விருத்தி செய்வதுடன் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை பெண்களை மையப்படுத்தி குடும்ப மட்டத்தில் ஆரம்பித்தல் என்பதாகும். WAE நிகழ்ச்சியானது ஒவ்வோர் விவசாய நிர்வாக மாவட்டத்திலும் பிரதிப் பணிப்பாளர் (விரிவாக்கம்) அவர்களின் அலுவலகத்தில் இணைக்கப்பட்டுள்ள WAE அலுவலர்களால் அடிமட்டத்தில் அமுல்ப்படுத்தப்படுகிறது.

## விரிவாக்க நடவடிக்கைகள்

2013ம் ஆண்டு காலப்பகுதியில் 36 மாவட்ட விரிவாக்க உத்தியோகத்தர்கள் பெண்கள் விவசாய விரிவாக்க நிகழ்ச்சியில் பயிற்றுவிக்கப்பட்டனர். அண்ணளவாக 403 விவசாய வியாபார முயற்சியாண்மையாளர்கள் உணவும் போசாக்கும் என்பதிலும் வியாபார முயற்சியாண்மை விருத்தி என்பதிலும் பயிற்றுவிக்கப்பட்டனர். மேலும் 131 பெண்கள் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 1043 குடும்பங்கள் வீட்டுத் தோட்டம் மற்றும் சமயலறை முன்னேற்றம் என்பவற்றினூடாக விருத்தி செய்யப்பட்டன. அத்துடன் வேறு விரிவாக்க நிகழ்ச்சி பெண்கள் விவசாய விரிவாக்கத்தில் நடாத்தப்பட்டு 08 கட்டுரைகள், 03 தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், 04 வானொலி நிகழ்ச்சிகள், 25 வயல் விழாக்கள் மற்றும் 06 கல்விச் சுற்றுலாக்கள் என்பன மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலும் 11 கண்காட்சிகளில் கண்காட்சிக் கூடங்கள் நடாத்தப்பட்டன.

இவ்வலகினால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய விசேட நடவடிக்கைகள்

- உள்ளுர் உணவு ஊக்குவிப்பு நிகழ்ச்சியின் கீழ் பெண்கள் விவசாய வியாபார முயற்சியாண்மையாளர்களின் பங்களிப்புடன் அம்பாறை மாவட்டத்தில் நடாத்தப்பட்ட தேசத்திற்கு மகுடம் கண்காட்சி - 2013 இல் நான்கு விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டன.

- ஓர் புதிய வியாபார முயற்சியாண்மைக் குழுவினர் (26 அங்கத்தவர்கள்) பயிற்றுவிக் கப்பட்டதுடன் A- பூங்கா கன்னொறுவையில் உள்ள மூலிகைப் பான விற்பனை நிலையத்தில் இணைந்து அவர்களுடைய உள்ளுர் உணவுகளை விற்பனை செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

- அம்பாந்தோட்டை, பட்டாத்தவில் அமைந்துள்ள "சமல் ராஜபக்ச" பூங்காவில் உள்ளூர் உணவுகளிற்காக இன்னொரு விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

  மேலதிகமாக பின்வரும் இரண்டு விசேட கருத்திட்டங்கள் இவ்வலகினால் அமுல்ப்படுத்தப்பட்டன.

- கிராமிய விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு தனியார் துறையினரை உணவு பதனிடலில் ஊக்கப்படுத்துவதற்காக உணவு பதனிடல் பயிற்சி நிலையங்களை அமைத்தல்

- முன்னேற்றகரமான மனித போசணை மற்றும் நல்வாழ்வு என்பவற்றிற்காக உயிர்ப்பல் வகைமைப் பாதுகாப்பை பிரதான வழிப்படுத்தலும் நிலைபேறான பயன்பாடும்

### விவசாய வியாபார அபிவிருத்தி மற்றும் தகவற் சேவைகள்

விவசாய வியாபார அபிவிருத்தி மற்றும் தகவற் சேவை (AgEDIS) இன் பிரதான கடமை என்பது விவசாயத் திணைக்களத்தின் வேலை வரையறைக்குள் வருகின்ற விவசாய அடிப்படையிலான வியாபாரங்களை ஊக்குவிப் பதில் உதவுதல் என்பதாகும். இந்நிறுவனமானது தற்போது அவற்றை நிறைவு செய்துள்ள வழிமுறைகளாவன.

- பொருத்தப்பாடான வியாபார முயற்சியாண் மையாளருக்கு விவசாய வியாபாரம் தொடர்பான குறுகிய கால விழிப்புணர்வு மற்றும் திறன் விருத்தி பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்

- நிபுணர்கள் குழுவினால் விவசாயச் சொத்துடமையாளர்கள் மற்றும் முதலீட்டா ளர்கள் ஆகியோரிற்கு பண்ணை இடத்திலேயே தொழில்நுட்ப ஆலோசனை களை வழங்குதல்

- வியாபார முயற்சியாண்மையாளர்களிற்கு தேவைப்படுகின்ற தொழில்நுட்பத் தகவல்கள் மற்றும் தரவுகளை வழங்குவதுடன் அவர்களை பொருத்தமான பங்காளர்களுடன் தொடர்புபடுத்தல்

- நம்பகத் தன்மையுள்ள உள்ளீடுகள் மற்றும் சேவைகளை விவசாயிகளிற்கு வழங்குவதற் காக விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்பக் கூட்டிணைவுடன் விவசாய சேவை நிலையங்களை நிறுவுதல் (குருசி சேவா பியச)

- FAO TCP 3302 முன்னோடி கருத்திட்டத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதரவுடன் "விவசாயிகள் வியாபாரப் பாடசாலை" (FBS) அணுகுமுறையை அறிமுகப்படுத்தல் மற்றும் தொடர்புடைய பயிற்சிகளை நடாத்துதல் என்பவற்றின் மூலம் விவசாயிகளின் வியாபார முயற்சியாண்மைத் திறனை விருத்தி செய்வதற்கு மாவட்ட விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்களிற்கு ஆதரவளித்தல்

### விசேட அடைவுகள்

- விவசாய வியாபாரம் தொடர்பான 10 பயிற்சி நிகழ்ச்சிகள் 266 பயிலுநர்களிற்காக நடாத்தப்பட்டது.

- தனோவிற்ற, கேவடிவல்ல, தம்புள்ளை மற்றும் பொதுகெர ஆகிய இடங்களில் நான்கு புதிய விவசாய சேவை நிலையங்கள் அமைக்கப்பட்டன. அதேவேளை இரண்டு தொழில்நுட்பப் பயிற்சிகள் 47 விவசாய சேவை நிலைய முகாமையாளர்களிற்காக அடிப்படை விவசாய வியாபார முகாமைத்துவம் என்பதில் நடாத்தப்பட்டது.

- பன்னிரெண்டு மாவட்டங்களில் இருந்து 170 விரிவாக்க அலுவலர்கள் "பண்ணை வியாபாரப் பாடசாலை" (FBS) என்பதில் பயிற்றுவிப்பாளர்களாக பயிற்றுவிக்கப்பட்டார்கள். பயிற்றப்பட்ட அலுவலர்கள் 101 "பண்ணை வியாபாரப் பாடசாலைகளை" 2013ம் ஆண்டு

அவர்களது மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளிற்காக நடாத்தினார்கள்.

### தேனீ அபிவிருத்தி அலகு, பிந்துனுவெவ, பண்டாரவலை

தேனீ வளர்ப்பு அபிவிருத்தி அலகானது தேனீ வளர்ப்பின் அபிவிருத்தி மற்றும் விரிவாக்கம் என்பவற்றை விவசாயிகள் மத்தியில் மேற்கொள்வதில் பொறுப்பாகவுள்ளது. நவீன விவசாயத் தொழில்நுட்பங்களை பரம்பலடையச் செய்யும் பொருட்டு பின்வரும் சலுகைகள் இவ் அலகினால் வழங்கப்படுகிறது.

- விவசாயிகள், அலுவலர்கள், மாணவர்கள் மற்றும் ஏனைய ஆர்வமுடையயோர்களை பயிற்றுவித்தல்
- தேனீ வளர்ப்பு உபகரணங்களை உற்பத்தி செய்தல்
- தேனீ வளர்ப்பு உபகரணங்கள் உற்பத்தி செய்வோரை பயிற்றுவித்தல் மற்றும் பதிவு செய்தலுடன் சிபார்சு செய்தல்
- தேனீ வளர்ப்புக் கருத்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களிற்கு தொழில்நுட்ப உதவியளித்தல்
- ஆய்வு நடவடிக்கைகள்

குறித்த ஆண்டு காலப்பகுதியில் தேனீ வளர்ப்பில் 18 பயிற்சி நிகழ்ச்சிகள் அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் போன்றோருக்காக நடாத்தப்பட்ட துடன் 2 பயிற்சி நிகழ்ச்சிகள் தேனீ வளர்ப்பு உபகரணங்களின் உற்பத்தி என்பதிலும் நடாத்தப்பட்டன.

மேலும் இவ்வலகானது 367 கி.கி தேன் 240 தேனீக் குடியிருப்புக்கள் 320 தேனீப் பெட்டிகள், 150 புகையூட்டிகள் 175 அடைகாப்புச் சட்டங்கள் 197 தேன் சட்டங்கள் 775 இராணிப் பாதுகாப்புத் தகடுகள் என்பவற்றை உற்பத்தி செய்தது.

மேலும் ஆதிவாசி மக்களிற்கு நவீன தேனீ வளர்ப்பு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதற் காக கென்னனிகல எனும் இடத்தில் தேனீ வளர்ப்புக் கிராமம் அமைக்கப்பட்டது.

இவ்வாண்டு காலப்பகுதியில் பயிற்றுநர்களிற்கான பயிற்சியுடன் தேனீ வளர்ப்பு பயிற்றுநர்களாக விவசாயப் போதனாசிரியர்களை ஓர் குழுவாக அமைகின்ற நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

### இளம் விவசாயிகள் கழகம் (YFC)

இளம் விவசாயிகள் கழகங்கள் என்பன இளம் விவசாயிகள் கழக அமைப்பின் கிராம மட்டத்தில் உள்ள நிறுவனங்களாகும். இளம் விவசாயிகள் கழக அமைப்பின் ஏனைய உறுப்புக்களாவன மாவட்ட மட்ட ஆலோசனைக் குழு, மாகாண மட்ட ஆலோசனைக் குழு மற்றும் தேசிய மட்ட சம்மேளனம் என்பனவாகும். அங்கத்தவர்களின் பங்களிப்புடன் வேறுப்பட்ட மட்டங்களில் பொருத்தப்படான நடவடிக்கைகளைத் திட்டமிடுவதும் நடைமுறைப்படுத்துவதும் இக் குழுக்களாகும்.

அண்ணளவாக ஆயிரக்கணக்கான இளம் விவசாயிகள் கழகங்கள் உருவாக்கப்பட்டுள்ள துடன் அவற்றில் மூன்றில் ஒரு பங்கு தலைமைப் பீடத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2013ம் ஆண்டு காலப்பகுதியில் விவசாய விரிவாக்கத்திற்காக இளம் விவசாயிகள் சந்ததியின் பங்களிப்பை உருவாக்குவதற்காக நாடளாவிய ரீதியில் நிகழ்ச்சிகள் நடாத்தப் பட்டன.

மொத்தம் 09 பயிற்சி நிகழ்ச்சிகள் அலுவலர்களுக்காகவும் 45 பயிற்சி நிகழ்ச்சிகள் YFC அங்கத்தவர்களுக்காகவும் நடாத்தப்பட்டன. இளம் விவசாயிகள் கழகத்தினால் 85 கலாசார நிகழ்ச்சிகள் 78 சமய நிகழ்ச்சிகள் 30 கல்வி நிகழ்ச்சிகள் 27 சமூக நிகழ்ச்சிகள் என்பன நடாத்தப்பட்டன.

மேலதிகமாக, இளம் விவசாயிகளிற்காக பிரதானமாக நடாத்தப்பட்ட 18 வினாவிடைப் போட்டிகளிற்காக உதவிகள் வழங்கப்பட்டன.

## நீர் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பான விவசாயத்துக்கான அலகு

நீர்முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பான விவசாயத்துக்கான அலகானது பின்வரும் விடயங்களில் தொழில்நுட்ப உருவாக்கம் மற்றும் விவசாயத் திணைக்கள தொழில்நுட்ப அலுவலர்களிற்கும் விவசாயிகள் சமூகத்திற்கும் அவற்றைப் பரப்புதல் என்பவற்றைக் கையாள்கிறது.

- நீர்ப்பாசனமும் நீர்ப்பாசன முகாமைத்துவமும்
- நுண் நீர்ப்பாசன முகாமைத்தவமும் பசளைப் பாசனமும்
- கட்டுப்பாட்டுச் சூழல் விவசாயம் (பாதுகாப்பான விவசாயம் - பொலதிதீன் கூடாரம், மழைப் பாதுகாப்புக் கொட்டகைகள் வலை இல்லங்கள்)
- ஆண்டு மற்றும் பல்லாண்டுப் பயிர்களிற்கான வர்த்தக விவசாயம் (வர்த்தகப் பண்ணைக்கான முன்கூட்டிய திட்டமிடல்)
- முன்னேற்றகரமான நாற்றுமேடைப் பரிபாலனம்

சிறிய மற்றும் பெரிய அளவிலான பண்ணைகளை அமைப்பதற்குத் தேவைப்படும் தொழில் நுட்ப அறிவினை பரப்புவதும் இவ்வலகின் ஓர் பிரதான பங்காகும்.

### அடைவுகள்

- விவசாயிகள் மற்றும் அலுவலர்களிற்காக நீர் முகாமைத்துவமும் பாதுகாப்புான விவசாயமும் என்பதில் தொழில்நுட்ப அறிவைப் பரப்புவதற்காக பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன.
- JICA வினால் நிதியளிக்கப்பட்ட கருத்திட்டத்தின்கீழ் குண்டசாலை விதை உற்பத்திப் பண்ணையில் 5 ஏக்கரில் அமைக்கப்பட்ட பாதுகாப்பான இல்லம் மற்றும் சொட்டு நீர்ப்பாசனத் தொகுதி என்பவற்றிற்காக தொழில் நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன. இதற்கு அப்பால் ஏனைய அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் துறை நிறுவனங்களிற்கு நுண் நீர்ப்பாசனத் தொகுதியை வடிவமைப்பதற்கும் மதிப்பீட்டை செய்வதற்குமான தொழில் நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.
- பாதுகாப்பான விவசாய தொழில்நுட்பம் மற்றும் நீர்ப்பாசன முகாமைத்துவம் என்பவற்றின் கீழான மொத்த நில அளவைக் கண்டறிவதற்கான களமதிப்பீட்டின் தொடர்ச்சியும் முன்னைய வருடத்தில் விநியோபிக்கப்பட்ட நுண் நீர்ப்பாசனத் தொகுதிகளின் செயற்பாட்டைக் கண்டறிதலும்.

## திட்டமிடல் மற்றும் செயற்பாட்டுக் கண்காணிப்பு அலகு

திட்டமிடல் மற்றும் செயற்பாட்டுக் கண்காணிப்பு அலகின் பிரதான கடப்பாடு என்பது ETC யினது அனைத்து நிதி மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளிற்கான செயற்திட்டங்களைத் தயாரித்தலும் அந்நடவடிக்கைகளைக் கண்காணித்தலும் என்பனவாகும்.

2013ம் ஆண்டு காலப்பகுதியில் ETC யின் அனைத்து உப அலகுகள் மற்றும் நிலையங்கள் என்பவற்றின் செயற்றிட்டங்கள் இவ்வலகினால் தயாரிக்கப்பட்டது. மூலதனம் மீண்டுவரும் செலவு மற்றும் விசேட கருத்திட்டங்களின் ஒதுக்கீடு மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகள் என்பவற்றின் மாதாந்த முன்னேற்ற அறிக்கை தயாரித்தலும் இவ்வலகினால் மேற்கொள்ளப்பட்டது. இவ்வலகானது விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த அறிக்கை, மத்திய வங்கி அறிக்கை, பாராளுமன்ற பாதீடு பற்றிய பேச்சு என்பவற்றிற்கான தகவல்களை வழங்குதலுடன் உரிய முகவர்களிற்கு தகவல்களைப் பரப்புவதிலும் ஈடுபட்டது. வருடாந்த பாதீட்டிற்குக் கையளிக்கப்பதற்காகப் பெறப்பட்ட முன்மொழிவுகளும் இவ்வலகினால் தொகுக்கப் பட்டது. மேலும் விவசாயத் திணைக்களத்தின் இணையத்தளத்தில்

விரிவாக்கமும் பயிற்சிக்குமான நிலையத்துடன் தொடர்பான தகவல்கள் புதுப்பிக்கப்பட்டன.

### விவசாயக் கல்வி மற்றும் பரீட்சை அலகு

கல்வி மற்றும் பரீட்சை அலகானது கல்வி, பரீட்சை மற்றும் பாடவிதான அபிவிருத்தி எனப்படும் மூன்று உப அலகுகளை கொண்டுள்ளது. குண்டசாலை, பல்வெகர, அங்குணகொலபெலஸ்ஸ, வவுனியா மற்றும் கரப்பிஞ்ச ஆகிய இடங்களில் உள்ள இலங்கை விவசாயக் கல்லூரிகள் உபபிரிவான கல்வியின் கீழ் செயற்படுகின்றன. முன்னர் மேற்படி பாடசாலைகளால் வழங்கப்பட்ட டிப்ளோமா பாடநெறியானது 2013ம் ஆண்டிலிருந்து "விவசாய உற்பத்தி மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றில் தேசிய டிப்ளோமா" எனத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. 2013ம் ஆண்டு இறுதிவரை மேற்படி பாடசாலைகளில் ஐந்நூற்று பதின்மூன்று மாணவர்கள் விவசாய உற்பத்தி மற்றும் தொழில் நுட்பம் என்பவற்றில் தேசிய டிப்ளோமா பாடநெறியிகளைப் பின்பற்றி வருகின்றனர்.

பரீட்சை உப அலகானது வருடாந்தம் விவசாயத் திணைக்கள அலுவலர்களிற்கான பல பரீட்சைகளை நடாத்துகிறது. 2013ம் ஆண்டு இறுதியில் பதினைந்து திணைக்களப் பரீட்சைகள் மற்றும் வினைத்திறன் தடைகாண் பரீட்சைகள் நடாத்தப்பட்டதுடன் 910 பரீட்சார்த்திகள் இப்பரீட்சைகளிற்குத் தோற்றியிருந்தார்கள்.

சாரதி பதவிக்கான ஆட்சேர்ப்புக்கான பரீட்சை - 2012, பண்ணை எழுதுனர் பதவி தரம் 111 இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்திய - 2012 / 2013, தொழில் நுட்ப உதவியாளர் (ஆராய்ச்சி / விரிவாக்கம்) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 என்பன நடாத்தப்பட்டதுடன் சொல்லபப்பட்ட பரீட்சைகளிற்கு முறையே 1641, 5058 மற்றும் 1292 விண்ணப்பதாரிகள் 2013ம் ஆண்டு காலப்பகுதியில் தோற்றினார்கள்

மேலும் 2014 - 2016 ம் கல்வியாண்டிற்கு இலங்கை விவசாயப் பாடசாலைகளிற்கு அனுமதிப்பதற்கான பரீட்சை நடாத்தப்பட்டதுடன் மொத்தம் 2428 விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றினார்கள். கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு 2005ம் ஆண்டில் இணைத்தும் கொள்ளப்பட்ட விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களிற்கான (ARPA) ஓராண்டுச் செயல்முறை நிகழ்ச்சியின் பரீட்சை நடாத்தப்பட்டது.

பாடவிதான அபிவிருத்தி அலகும் பல்வகை குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. செயற்றிறன் அடிப்படையிலான பயிற்சிக்கான (CBT) பாடவிதான அபிவிருத்திக்கான தொழில்நுட்ப ரீதியான உதவியானது முற்றிலுமாக தொழில்கல்வி ஆணைக்குழுவிற்கு இவ்வலகினால் வழங்கப்பட்டது. மேலதிகமாக ஓர் புதிய செயற்றின் அடிப்படையிலான பயிற்சிக்கான பாடவிதானம் விவசாயக் கல்லூரி முறையினுள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. செயன்றிறன் அடிப்படையிலான பயிற்சிக்கான பயிற்சித் திட்டம் மற்றும் கற்பித்தல் திட்டம் என்பவற்றுடன் விவசாயக் கல்லூரி விரிவுரையாளர்களை ஒருங்கிணைத்தல் ஆகிய முக்கிய நடவடிக்கைகள் இவ்வலகினால் 2013ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

**வெவ்வேறு விவசாயப் பாடசாலைகளில் 2013ம் ஆண்டு கல்விகற்ற மாணவர்களின் எண்ணிக்கை அட்டவணையில் தரப்படுகிறது.**

| விவசாய பாடசாலை | வருடம் | மொழிமூலம் | | | | | | உப மொத்தம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சிங்களம் | | தமிழ் | | ஆங்கிலம் | | | |
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | | |
| குண்டசாலை | 1ம | 45 | 23 | 20 | 07 | 20 | 12 | 127 | 229 |
| அங்குணகொல | 2ம | 29 | 31 | 09 | 08 | 08 | 17 | 102 | |
| பெலஸ்ஸ | 1ம | 31 | 21 | | | | | 52 | 89 |
| | 2ம | 26 | 11 | | | | | 37 | |
| பல்வெகர | 1ம | 41 | 15 | | | | | 56 | 107 |
| | 2ம | 40 | 11 | 22 | 08 | | | 51 | |
| வவுனியா | 1ம | | | 16 | 18 | | | 30 | 64 |
| | 2ம | | | | | | | 34 | |
| கரப்பிஞ்ச | 1ம | | | | | | | | 24 |
| | 2ம | 24 | | | | | | 24 | |
| **மொத்தம்** | | **236** | **112** | **67** | **41** | **28** | **29** | **513** | **513** |

### விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களிற்கான ஒரு வருட செய்முறை விவசாயப் பயிற்சி நெறி

இப்பயிற்சி நெறியின் இலக்குக் குழு கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ள விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் (ARPA) எனும் உத்தியோகத்தர்கள் ஆகும். இப் பயிற்சி நெறியானது எட்டுப் பயிற்சி நிலையங்களில் 2005ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் எல்லா ARPA அலுவலர்களும் பாடநெறியைப் பூர்த்தி செய்யும் வரை தொடர்வதற்கு எதிர்ப்பார்க்கப்படுகிறது. 676 பேரைக் கொண்ட முதலாவது ARPA குழுவினர் பயிற்சி நெறியினை 2006ம் ஆண்டில் நிறைவு செய்தனர். 246 பேரைக் கொண்ட ARPA இன் இரண்டாவது குழுவினர் பயிற்சியினை 2008 இல் நிறைவு செய்தனர். 278 பேரைக் கொண்ட ARPA இன் மூன்றாவது குழுவினர் பயிற்சியினை 2011 இல் நிறைவு செய்தனர். 2013 மார்ச்சில் 2012 / 13 அணிமாணவர்கள் 68 பேருக்கும் முன்னைய ஆண்டின் மீள் பரீட்சார்த்திகள் 42 பேருக்குமான இறுதிப் பரீட்சை நடாத்தப்பட்டது. 2013ம் ஆண்டில் 99 ARPA யினர் தமது பயிற்சியினை பூர்த்தி செய்தனர்.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்து வேண்டுகோள் இல்லாத நிலையில் இப்பயிற்சியானது 2013ம் ஆண்டில் தொடரப்படவில்லை

### சேதன விவசாயம் மற்றும் தாவரப் போசணை முகாமைத்துவ அலகு

இவ்வலகினால் 2013ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான நடவடிக்கைகளான ஏற்றுமதிக்கான அரிசி உற்பத்தி நிகழ்ச்சி, ஏற்றுமதிக்காக பாரம்பரிய அரிசி வர்க்கங்களை பிரபல்யப்படுத்தல் மற்றும் சூழல் நேய விவசாயத்தை பிரபல்யப்படுத்தல் என்பனவாக இருந்தன. சூழல் நேய விவசாயத்தைப் பிரபல்யப்படுத்தும் நோக்கத்துடன் நாடளாவிய ரீதியில் சேதனக் கிராமங்கள் எனும் நிகழ்ச்சி அமுல்ப்படுத்தப்பட்டு வருகிறது.

### அடைவுகள்

80 கெக்டர் விதை நெல்லிற்கான பயிர்ச் செய்கைக்காக தொழில்நுட்ப மற்றும் நிதியுதவி வழங்கல்

05 நாட்கள் நிகழ்ச்சியாக "தேசிய விவசாயிகள் வாரம்" ஏற்பாடு செய்தலும் அமுலப்படுத்தலும்

புதிய விவசாய தொழில்நுட்பங்களைப் பரம்பலடையச் செய்வதற்கான நான்கு பயிற்சிப் பட்டறைகள் ஏற்பாடு செய்தலும் அமுலப்படுத்தலும்

VAT நிகழ்ச்சியினை விருத்தி செய்வதற்காக மூன்று பயிற்சிப் பட்டறையை ஏற்பாடு செய்தல்

விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிலையத்தினால் அமுலப்படுத்தப்பட்ட விரிவாக்க நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்

மேலும் மண் பரிசோதனைக்காக தேசிய மட்டத்திலான ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட துடன் வாழ்தகவு பரீட்சிக்கப்பட்ட விதை உற்பத்தி இவ்வலகினால் மேற்கொள்ளப்பட்டது.

## 2014ம் ஆண்டிற்கான நிகழ்ச்சித் திட்டம்

### ஆறு மாகாண இடைப் பிரதேசங்களில் விவசாய விரிவாக்க நிகழ்ச்சிகள்

- 2015ம் ஆண்டிற்கான கருத்தூன்றல் என்பது நாட்டின் உணவுப் பாதுகாப்பை நிச்சயப்படுத்துவதற்கு மாகாண இடைப் பிரதேசங்களில் பிரதான பயிராக வளர்க்கப்படுகின்ற நெல்லின் உற்பத்தித் திறனை அதிகரிப்பது என்பதாக அமையும். இவ்விலக்கை அடைவதற்காக தொழில்நுட்ப நடவடிக்கைகள் மற்றும் பிரச்சார நிகழ்ச்சிகள் என்பவை பயிர்ச் செய்கைப் போகத்தில் பெரிய நீர்ப்பாசனத் திட்டம் சிறிய நீர்ப்பாசனத் திட்டம் மற்றும் மழைவீழ்ச்சி என்பவற்றின் கீழான நிலைமைகளில் அமுலப்படுத்தப்படும். தரமான விதை நெல் உற்பத்தி சமூகத்தில் உற்பத்தி செய்யப்படுவதற்கு கருதப்படுகிறது.
- இறக்குமதியை குறைப்பதற்கும் அந்நிய செலாவணியை சேமிப்பதற்கும் உரிய தீர்வாக மறுவயற்பயிர்களின் போகமல்லாத பயிர்ச் செய்கை, மூன்றாம் போகப் பயிர்ச் செய்கை என்பன முக்கியத்துவப் படுத்தப்படும். பெரிய வெங்காய மற்றும் மிளகாய் பயிர்ச் செய்கை என்பவற்றின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் என்பவற்றை அதிகரிப்பதற்காக நாடளாவிய ரீதியிலான விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலப்படுத்தப்படும். பரப்பளவு உற்பத்தி என்பவற்றை அதிகரிப்பதோடு தரமான விதையை உற்பத்தி செய்வதற்காக விரிவாக்க நடவடிக்கைகள் அமுலப்படுத்தப் படும்.
- புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் விவசாயச் சூழலியற் பொருத்தப்பாடான பழவர்க்கங்களை அறிமுகப்படுத்தல் என்பவற்றின் ஊடாக பழ உற்பத்தி அதிகரிக்கப்படும். ஒவ்வோர் மாகாண இடைப் பிரதேசத்திலும் பொருத்தப்பாடான முறையில் மரக்கறி உற்பத்தி அதிகரிக்கப்படும்.

### விவசாயப் பாடசாலைகளில் விவசாயக் கல்வி நிகழ்ச்சித் திட்டம்

- ஐந்து விவசாயப் பாடசாலைகளிலும் இரண்டு வருட விவசாய டிப்ளோமா நிகழ்ச்சி திட்டத்தை நடாத்துதல்
- அண்ணளவாக 248 டிப்ளொமா பட்டதாரிகள் சித்தியடைந்து வெளியேறுவதுடன் பாடநெறி க்காக புதிய அணி உள்வாங்கப்படும்.

அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோரிற்காக மூன்று சேவைக்காலப் பயிற்சி நிறுவனங்கள், நான்கு மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையங்கள், பண்ணை இயந்திரமயமாக்கற் பயிற்சி மத்திய நிலையம் மற்றும் தேனீ வளர்ப்பு அபிவிருத்தி அலகு என்பவற்றில் விவசாயப் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

நான்கு விசேட பயிற்சி நிலையங்களான வாரியப்பொல, லபுதுவ, அநுராதபுரம் மற்றும் பூங்கனியியல் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் பிபிலை என்பவற்றில் குறுகிய கால விவசாயப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். உண்ணத்தக்க தரை அலங்காரம் மற்றும் நகர்ப்புற விவசாயம் என்பவற்றில் ஓர் விசேட சான்றிதழ் பயிற்சி நெறியினை விவசாயப் பாடசாலை லபுதுவவில் 2014ம் ஆண்டிலிருந்து ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டு வருகிறது. இது பாடசாலையை விட்டு விலகிய வயது 18 - 35 வரையுள்ளவர்களிற்கு வழங்கப்படும். அத்துடன் பூங்கனியியல் பயிர்கள் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம், பிபிலையில் 2014ம் ஆண்டில் 10 கெக்டர் பரப்பளவுடைய மா பயிர்ச் செய்கையானது மீள் இளமையூட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### பின்வரும் பரீட்சைகள் 2014ம் ஆண்டின் பரீட்சை நாட்காட்டிக்கமைய நடாத்தப்படும்.

- இரண்டு வருட டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்தின் பரீட்சை
- விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களிற்கான ஒரு வருட பயிற்சி நிகழ்ச்சியின் மீள் பரீட்சை
- விவசாயத் திணைக்கள அலுவலர் களிற்கான திணைக்களப் பரீட்சை
- விவசாயக் கல்லூரிகளுக்கு பயிலுநர்களை உள்ளீர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை
- விவசாயத் திணைக்கள அலுவலர்களிற்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை
- விவசாயக் கல்லூரிகளுக்குத் தெரிவு செய்யப்படுகின்ற அலுவலர்களிற்கு புலமைப் பரிசில்கள் வழங்குவதற்கான பரீட்சை
- இளம் விவசாயிகள் கழக அங்கத்தவர்களிற்காக விநாடி வினா நிகழ்ச்சி மற்றும் ஏனைய பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்

### பெண்கள் விவசாய விரிவாக்க நிகழ்ச்சித் திட்டம்

- விவசாயத் திணைக்கள அலுவலர்கள், கன்னொறுவையில் உள்ள விற்பனை நிலையங்களிற்கான வியாபார முயற்சியாண்மையாளர் மற்றும் தலைமைக் காரியாலயம், தொழில்நுட்பபூங்கா என்பவற்றின் பயிற்சி
- களமட்டத்திலான உள்ளூர் உணவு விவரணத்தை நடமாடும். உணவு விவரண அலகினால் நடாத்துதல்
- பயிற்சி உதவி உபகரணங்கள் கையேடுகள் மற்றும் புரட்டும் தாள்கள் (filip chart) என்பவற்றைத் தாயரித்தல்
- வருமானம் ஈட்டல் மற்றும் வியாபார முயற்சியாண்மை விருத்தி என்பவற்றில் உணவு ஆராய்ச்சி நிறுவனத்துடன் ஒன்றிணைந்த கருத்திட்டம்
- வானொலி, தொலைகாட்சி மற்றும் கண்காட்சி என்பவற்றினூடாக தொழில்நுட்பப் பரம்பல்
- விவசாயத் திணைக்கள தலைமைக் காரியாலய முன்றலில் உள்ளூர் உணவுகளைச் சந்தைப்படுத்தும் புதிய விற்பனை நிலையங்களை நிறுவுதல் (ஹெல போஜன் அலெவி பியச)

### விவசாய வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

- அம்பாந்தோட்டை, மற்றும் அம்பாறை ஆகிய மாகாண இடைப் பிரதேசங்களிற்கும் அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, கம்பகா ஆகிய மாகாணப் பிரதேசங்களிற்கும் 'FBS' ஐ அறிமுகப்படுத்தல். இந்நிகழ்ச்சித் திட்டம் ஏலவே அறிமுகப்படுத்தப்பட்ட ஏனைய அனைத்துப் பிரதேசங்களிலும் அமுலப்படுத்தப்படும்.

- இணைய அடிப்படையிலான சந்தைப்படுத்தற் தகவல்களைப் புதுப்பிப்பதற்கும் ஏனைய தொடர்புடைய நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கும் மாவட்ட விவசாய வியாபார அபிவிருத்தி அலகை நிறுவுதல்
- பொது மற்றும் தனியார் பங்காளர் நிகழ்ச்சியை அமுல்ப்படுத்தல், பேராதனைப் பல்கலைக்கழக வியாபார காப்பாளர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய முகவர்களுடன் இணைத்தல்
- விவசாய சேவை நிலையங்கள் (குருசி சேவா பியச) நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்ப்படுத்துவதுடன் காணப்படுகின்ற விவசாய முறைமையுடன் தொடர்புபடுத்தல்
- மேற்கொள்ளப்படவுள்ள சாத்தியப்பாடான நுண் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய கற்கை தனி மற்றும் குழு விவசாயிகளிற்காக அறிமுகப்படுத்தப்படும். விவசாயிகளை வலுப்படுத்துவதற்காக கடன் வசதி மற்றும் சேமிப்பு என்பவற்றை அதிகரிப்பதற்கு மேலான நடவடிக்கைகளை அமுல்ப்படுத்தல்
- இடைத் தரகர்களின் தலையீடுகளைக் குறைப்பதற்காக உழவர் சந்தைகளை நிறுவுதல். இச்சந்தைகளை நிறுவுவதன் மற்றைய நோக்கங்களவன / குறைந்த செலவில் சந்தைப்படுத்தல், இலகுவான வருமான அதிகரிப்பு முறைகளை அறிமுகப்படுத்துதல். மற்றும் உள்ளூர்ப் பொருட்களிற்கு முன்னுரிமை வழங்குதல் என்பனவாகும்.
- நடுத்தர மற்றும் பெரிய அளவிலான வர்த்தக ரீதியான பண்ணை அபிவிருத்தியின் கீழ் ஆலோசனைச் சேவைகள் வழங்கப்படும்.

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பணிப்பாளர் | 01 |
| மேலதிக பணிப்பாளர் | 02 |
| பிரதிப் பணிப்பாளர் | 08 |
| உதவிப் பணிப்பாளர் | 39 |
| விவசாய உத்தியோகத்தர் | 07 |
| விரிவுரையாளர் | 44 |
| பாடவிதான வல்லுனர் | 01 |
| விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர் | 14 |
| நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | 26 |
| பட்டதாரிப் பயிலுநர் | 05 |
| விவசாயப் போதனாசிரியர் | 233 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 02 |
| பண்ணை இயந்திர போதனாசிரியர் | 01 |
| தொழில்நுட்ப அலுவலர் | 01 |
| வாகன திருத்துநர் | 01 |
| தேனீ வளர்ப்பாளர் | 05 |
| ஒட்டு வேலையாளர் | 04 |
| தச்சு வேலையாளர் | 04 |
| இயந்திரப் பராமரிப்பாளர் | 02 |
| இயந்திர இயக்குநர் | 03 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 02 |
| முகாமைத்துவ உதவியாளர் | 94 |
| மொழிப் பெயர்ப்பாளர் (ஆங்கிலம்) | 01 |
| களஞ்சிய உதவியாளர் | 09 |
| பண்ணை எழுதுநர் | 03 |
| அலுவலக உதவியாளர் | 11 |
| கால்நடை மேற்பார்வையாளர் | 03 |
| சமையற்காரர் | 18 |
| காவலாளி | 73 |
| சுத்திகரிப்பு தொழிலாளர் | 08 |
| சாரதி | 35 |
| பாரவூர்தி காப்பாளர் | 01 |
| புல்வெட்டி இயக்குநர் | 11 |
| நீர்ப்பம்பி இயக்குநர் | 01 |
| தொழிலாளர் | 187 |
| சுற்றுலா விடுதிக் காப்பாளர் | 02 |
| அச்சுக் கோர்வையாளர் | 01 |
| ஒப்பந்தத் தொழிலாளர் | 189 |
| **மொத்தம்** | **1052** |

## 3.2 தகவல் மற்றும் தொடர்பாடல் நிலையம் (ICC), பேராதனை

இந்நிலையத்தின் தொலை நோக்கு யாதெனில் தேசிய வெற்றிக்கு சிறப்பான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பெற்றுக்கொள்வதாகும். இந்நிலையத்தின் பணிக்கூற்று யாதெனில் விவசாயத்தில் உணவுப் பயிர்ப் பகுதியை வினைத்திறனாகவும் செய்திறனாகவும் மாற்றுவதற்கும் விவசாயத் திணைக்களத்தினை இலகுவாக அணுகுவதற்கும், பெருமளவு பிரஜைகளை மையமாகக் கொண்ட சேவையை உருவாக்குவதற்கும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களுக்கு இசைவாக்கமடைத லாகும்.

புதிய தகவல் தொடர்பாடல் நிலையம் 1ம் திகதி மார்ச் மாதம் 2012ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்நிலையத்தினால் முன்னெடுக்கப்படும் தொழிற்பாடுகள் இந்நிலையத்தின் இலக்கு களையும் நோக்கங்களையும் கொண்டமை ந்துள்ளது. அவையாவன, சேகரித்தல், ஒன்று சேர்த்தல் மற்றும் விவசாய தகவல்களை இலத்திரனியல் ஊடகங்கள், அச்சுப்பதிப்புக்கள் மூலம் பரப்புதல், அத்துடன் விவசாய கண்காட்சிகளை நடாத்துதல் மற்றும் விவசாய தொழில்நுட்ப பூங்காகக்கள் என்பனவும் இதனுள் உள்வாங்கப்படும். இந்நிலையத்தின் கீழ் பண்ணை ஒலிபரப்பு நிலையம், கட்புல செவிப்புல நிலையம், விவசாய பிரசுரிப்பு நிலையம், கன்னொறுவையில் உள்ள விவசாயத் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் பத்தாத்தையில் உள்ள விவசாயத் தொழில்நுட்பப் பூங்கா என்பன அடங்கும்

தேசிய விவசாய தகவல் மற்றும் தொடர்பாடல் நிலையத்திற்கான கட்டட நிர்மாணப் பணிகள் கன்னொறுவையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிர்மாணப்பணி அரச கொள்கையான மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது.

## பாதீடு

அட்டவணை 3.2.1ல் வெவ்வேறு செலவுத்தலைப்புகளின் கீழ் இடம் பெற்ற ஒதுக்கீடுகளும் செலவினங்களும் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.2.1: வருடாந்தப் பாதீடு – 2013 (ரூபா)**

| செலவுத்தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு% |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 27,256,327 | 22,856,236 | 84 |
| மீண்டுவரும் செலவு | 46,526,530 | 40,852,761 | 88 |
| **நிகழ்ச்சித் திட்டங்கள்** | | | |
| ஊடக நிகழ்ச்சிகள் | 20,000,000 | 19,765,219 | 99 |
| பூங்கா | 4,500,000 | 4,166,645 | 93 |
| தேசத்திற்கு மகுடம் - 2013 | 17,000,000 | 17,000,000 | 100 |
| தேசத்திற்கு மகுடம் - 2014 | 5,000,000 | 4,965,443 | 99 |
| பயிர் எதிர்வு கூறல் | 1,900,000 | 1,875,000 | 99 |
| **மொத்தம்** | **122,182,857** | **111,481,305** | **91** |

## முன்னேற்றம்

### கட்புல செவிப்புல நிலையம் (AVC)

இது தகவல் மற்றும் தொடர்பாடல் நிலையத்தின் கீழ் உள்ளடக்கப்படுகின்ற விவசாயத் திணைக்களத்தின் பிரதான தகவல் மற்றும் தொடர்பாடல் அலகு. இவ்வலகின் பிரதான கடப்பாடு யாதெனில் விவசாயத் திணைக்களத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகும். ஆகவே இந்நிலையம் பல்வேறுபட்ட அறிவுறுத்தல் ஆதாரங்களைத் தயாரிப்பதுடன் இலங்கையின் விவசாய அபிவிருத்திக்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களின் முன்னணியாகவும் திகழ்கின்றது. இதன் தொழிற்பாடுகள் வருமாறு

- கிழமைக்கு இரண்டு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்குகின்றது. ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு தேசிய தொலைகாட்சியில் "கொவிபிமட்ட அருணலு" என்ற நிகழ்ச்சியையும் வெள்ளிக் கிழமைகளில் மாலை 6.15 மணிக்கு "மிஹிகத டினுவோ" என்ற நிகழ்ச்சியையும் வழங்கி வருகின்றது.

- விவசாயப் பிரசுரங்கள், கையேடுகள், சுவரொட்டிகள், பதாதைகள் போன்றவற்றை வடிவமைத்து உற்பத்தி செய்தல்
- கன்னொறுவையில் பத்தாதையிலும் அமைந்துள்ள விவசாய தொழில்நுட்ப பூங்காவினை முகாமைத்துவம் செய்தல்
- விவசாயிகள் வாரம், தேசத்தின் மகுடம் போன்ற கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல்
- இலவசத் தொலைபேசி விவசாய ஆலோசனைச் சேவை (1920) யினை வழங்கல்
- விவசாயத் திணைக்களத்தின் இணையத் தளம் புதிய விடயங்களுடன் பேணுதல் அதாவது www.agridept.gov.lk, விக்கிகொவிய இணையத்தளம் www.goviya.lk இலங்கையின் நெல் அறிவுக் களஞ்சியம்.
- வெவ்வேறு பாடவிதானங்களுக்கும் பயிர்களுக்குமான பல்லூடக இறுவட்டுக் களைத் தயாரித்து வழங்கல்
- பூச்சிய விரிவாக்க செயற்திட்டம் மற்றும் AgMIS விவசாயி தகவல் தளம்
- கட்புல செவிப்புல கற்பித்தல் ஆதாரங்கள் சம்பந்தமான பயிற்சி வழங்கலும் தொழில்நுட்ப விளக்கமளித்தலும்.

## முன்னேற்றம்

### பயிற்சி

16 பயிற்சி நெறிகள்

### கட்புலக் கலையுடன் தொடர்புடைய தொடர்பாடல்

தொழில்நுட்ப பிரசுரங்கள் - 07

கையேடுகள் - 63

சுவரொட்டிகள் - 357

அழைப்பிதழ்கள் / வாழ்த்து அட்டைகள் /விளக்க சுட்டிகள் /ஒட்டுப் பெயர்ப் பலகைகள் / 2083

பதாதைகள் - 55

### படப்பிடிப்பு / ஒளிப்படம்

“மிகிகத டினுவோ” – 51

“கொவிபிமட அருணலு” – 46

ஏனைய நிகழ்ச்சிகள் - 19

தொலைக்காட்சித் தொடர்கள் - 01

பிரதி செய்யப்பட்ட ஒளிப்பதிவு நிகழ்ச்சிகள் - 264

எண்மான படிப்பிடிப்பு (Digital photography) – 13,650

### தகவல் தொழில்நுட்பம்

IMM இறுவட்டு றொம்கள் (CD Roms) - 04

இணையத்தளத்தினை புதிய விடயங்களுடன் பேணுதல் (விவசாய திணைக்களம் / விக்கிகொவியா / RKB / குருஷி லங்கா போர்டல் / AFACI - ATUIN) இதன் மொத்த எண்ணிக்கை - 797

வன்பொருள், மென்பொருள் பேணுதல் - 873

கொவி சகண சரண ஆலோசனைச் சேவை

கையாளப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை – 37,663

Skype படப்பிடிப்பு அழைப்புக்கள் 75

### கண்காட்சிகள்

(தேசத்திற்கு மகுடம், கொவி சத்திய, CHOGM) - 04

### விவசாயத் தொழில்நுட்ப பூங்கா ~ கன்னொறுவை

வருகை தந்தோரின் எண்ணிக்கை (பாடசாலை மாணவர்கள்) - 60, 921

வருகை தந்த முதியவர்கள் - 25, 157

வருமானம் - 854,880.00

### விவசாய பிரசுர அலகு

விவசாய பிரசுர அலகு விவசாயத் திணைக்களத்தின் பிரசுரங்களைப் பிரசுரிப்பதிலும் அதனை விநியோகித்து வெளிக்கத்தில் விரிவாக்க நடடிக்கைகளுக்கு உறுதுணையாக வுள்ளது. இவ்வலகின் கீழ் விவசாய அச்சகமும் தகவல் நிலையமும் உள்ளடக்கப்படுகின்றது. விவசாயப் பிரசுரிப்பலகானது விவசாயத் திணைக்களத்தின் முழுமையான அச்சுப்பதிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் விவசாய அமைச்சின் அச்சுப் பதிப்புத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கும் பொறுப்பாகவுள்ளது. இந்நிலையம் அச்சிடப்பட்ட பிரசுரங்களை விற்பனை செய்வதிலும் இலவச விநியோகங்களை மேற்கொள்வதற்கும் பொறுப்பாகவுள்ளது. இந்நிலையம் ஏறத்தாழ 2.6 மில்லியன் ரூபாவை பிரசுரங்களை இறுவட்டுக்களை விற்பனை செய்யும் நிலையங்களிலிருந்து பெறுகின்றது.

### முன்னேற்றம்

2013ம் ஆண்டு காலப்பகுதியில் இந்நிலையத்தினால் 21 புதிய பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளது. 13 புத்தகங்கள் மீள் பதிக்கப்பட்டன. இதனுடன் ஏனைய நிலையங்களின் 15 புதிய வெளியீடுகளும் வெளியிடப்பட்டன.

**அட்டவணை : 3.2.2 மீள் பதிக்கப்பட்டவற்றின் விபரம் பிரசுரங்கள்**

| பிரசுரங்களின் பெயர் | பிரதிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1. ஆண்டு பயிராக வாழை (சிங்களம்) | 5,025 |
| 2. வேம்பு பீடை நாசினியாக (சிங்களம்) | 1,525 |
| 3. பப்பாசி (சிங்களம்) | 500 |
| 4. தேனீ வளர்ப்பு (சிங்களம்) | 1000 |
| 5. மா (சிங்களம்) | 2500 |
| 6. அன்னாசிச் செய்கை (சிங்களம்) | 2000 |
| 7. IPM மரக்கறி செய்கையில் (சிங்களம்) | 2000 |
| 8. வாழை உறுஞ்சிகளை உற்பத்தி செய்தல் (சிங்களம்) | 2010 |
| 9. மரக்கறிப் பயிர்ச் செய்கை (சிங்களம்) | 6000 |
| 10. மிளகாய் (சிங்களம்) | 1750 |
| 11. சேதனப் பசளை (தமிழ்) | 500 |
| 12. சேதனப் பசளை (சிங்களம்) | 5000 |
| 13. மிளகாய் (தமிழ்) | 150 |

**அட்டவணை 3.2.3 பிரசுரங்களின் விற்பனை (ரூபா)**

| விற்பனை நிலையம் | வருமானம் |
|---|---|
| இல 01: கலகா சந்தி | 1,246,487.00 |
| இல: 02 கன்னொறுவை | 1,300,002.00 |

### அட்டவணை : 3.2.4 2013ல் வெளியிடப்பட்ட புதிய புத்தகங்கள்

| புத்தகங்களின் பெயர் | பிரதிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1. றம்புட்டான் (சிங்களம்) | 3000 |
| 2. கமநுட்பம் மலர் 14 இல: 1-2 (தமிழ்) | 500 |
| 3. கமநுட்பம் மலர் 14 இல: 3-4 (தமிழ்) | 500 |
| 4. கமநுட்பம் மலர் 14 இல: 3-4 (சிங்களம்) | 5000 |
| 5. மறுவயற் பயிர்களில் பீடைகளும் சிற்றுண்ணிகளும் (சிங்களம்) | 3160 |
| 6. மறுவயற் பயிர்களில் பீடைகளும் சிற்றுண்ணிகளும் (தமிழ்) | 1000 |
| 7. பருப்பு வகைகளின் உற்பத்தி (சிங்களம்) | 500 |
| 8. பருப்பு வகைகளின் உற்பத்தி (தமிழ்) | 250 |
| 9. ஒட்டுதல் (அரும்பொட்டு, கிளையொட்டு (சிங்களம்) | 2500 |
| 10. ஒட்டுதல் (அரும்பொட்டு, கிளையொட்டு (தமிழ்) | 1000 |
| 11. கொவிகம் சங்கரவ மலர் 43 இல: 03 | 5000 |
| 12. கொவிகம் சங்கரவ மலர் 44 இல: 01 | 5000 |
| 13. கொவிகம் சங்கரவ மலர் 44 இல: 02 | 5000 |
| 14. பொலித்தீன் கூடாரங்களில் உற்பத்தி (சிங்களம்) | 5000 |
| 15. விவசாயத் திணைக்களத்தின் 100 ஆண்டுகள் (ஆங்கிலம்) | 500 |
| 16. அரிசியை அடிப்டையாகக் கொண்ட உற்பத்திகள் (தமிழ்) | 1500 |
| 17. கமநுட்பம் மலர் 15 இல: 1-4 (சிங்களம்) | 4000 |
| 18. கமநுட்பம் மலர் 15 இல: 1-4 (தமிழ்) | 500 |
| 19. மடக்கைப் புத்தகங்களும் தினக்குறிப்பேடுகளும் | 5500 |
| 20. கமத்தொழில் விளக்கம் மலர் 51 இல 01 | 1000 |
| 21. கமத்தொழில் விளக்கம் மலர் 51 இல 02 | 1000 |

### அட்டவணை : 3.2.5 2013ல் பிரசுரிக்கப்பட்ட ஏனைய தேவைகளுக்குரிய பிரசுரங்கள்

| பிரசுரங்களின் பெயர் | பிரதிகளின் எண்ணிக்கை |
|---|---|
| **SEPC** | |
| பயிர் உற்பத்திகளுக்கான பாதீடு 2012 (ஆ) | 700 |
| உற்பத்தித் திட்டம் (மரக்கறிகள் மற்றும் பழங்கள்) (சி) | 100 |
| உற்பத்திச் செலவு - 2011 சிறுபோகம் (ஆ) | 206 |
| உற்பத்திச் செலவு - 2011 பெரும்போகம் (ஆ) | 210 |
| மறுவயற் பயிர்கள் (ஆ) | 202 |
| மறுவயற் பயிர்கள் (ஆ) | 202 |
| **MOA** | |
| பயிர் உற்பத்தத் திட்டம் 2012/ 13 (ஆ) | 300 |
| **DOA** | |
| Tropical Agriculturist (ஆ) | 700 |
| வருடாந்த செயற்றிறன் அறிக்கை (ஆ) | 100 |
| வருடாந்த செயற்றிறன் அறிக்கை (2011, 2012) (த) | 100 |

| | |
|---|---|
| வருடாந்த செயற்றிறன் அறிக்கை (2011, 2012) (சி) | 200 |
| புதிய பயிர் வர்க்கங்கள் (ஆ) | 750 |
| **AgEDIS** | |
| விவசாயிகள் வர்த்தகப் பாடசாலை (சி) | 3000 |
| **EXT & Tr** | |
| தொழில்நுட்ப கையேடுகள் (சி) | 160 |
| கையேடுகள் | 60,000 |
| **SCS** | |
| நாற்றுமேடைப் பராமரிப்பாளர்களுக்கான பெயர்ப் பட்டியல் | 3025 |
| **RRDI** | |
| நெல்லிற்கான புதிய பசளைச் சிபாரிசு (த) | 3000 |

### அட்டவணை 3.2.6 ஏனைய அச்சிடப்பட்ட பிரதிகளின் சுருக்கம்

| வெளியீடுகளின் வகை | பிரதிகளின் எண்ணிக்கை |
|---|---|
| கையேடுகள் | 366,087 |
| கடிதங்கள் | 18,195 |
| தகவல் கையேடுகள் | 4,450 |
| பற்றுச் சீட்டுப் புத்தகங்கள் | 212 |
| படிவங்கள் | 210,576 |
| கோவை உறைகள் | 10,833 |
| SCS புத்தகங்கள் | 7,536 |
| விருந்தினர் அட்டைகள் | 3,530 |
| அத்தாட்சிப் பத்திரங்கள் | 5,500 |
| அழைப்பிதழ்கள் | 4,901 |
| பயிர் சிகிச்சைப் புத்தகங்கள் | 1,084 |
| சுவரொட்டிகள் | 99,850 |
| வினாப் பத்திரங்கள் | 2,250 |
| பயிர் எதிர்வுகூறல் நிகழ்ச்சிப் புத்தகம் | 25,000 |
| பயிர் எதிர்வுகூறல் நிகழ்ச்சித் திட்டப் படிவங்கள் | 175,000 |
| மாணவர் பதிவேடுகள் | 600 |
| கணக்காய்வாளர் அறிக்கைகள் | 100 |
| பாராளுமன்ற சட்டங்கள் | 100 |
| வித்து விளக்கச் சுட்டிகள் | 2,400,000 |
| திவிநெகுமவிற்கான வித்து விளக்கச் சுட்டிகள் | 1,000,000 |

## பண்ணை ஒலிபரப்புச் சேவை (FBS)

விவசாயத் திணைக்களத்தின் பண்ணை ஒலிபரப்புச் சேவையானது விவசாய வானொலி நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கல், விவசாய தகவல்கள் சமூகத்தின் மத்தியில் பரப்பப்பட்டு அவர்களது அறிவு விருத்தி செய்யப்படுவதுடன் மனப்பாங்கினையும் விரும்பத்தக்க வகையில் மாற்றல் போற்ற சேவைகளை முன்னெடுக்கின்றது.

1. விவசாயிகள் மத்தியில் புதிய உற்பத்தித் திறன் மிக்க விவசாயச் செயன்முறை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
2. விவசாயத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினை கள் அவற்றிற்கான வினைத்திறனான தீர்வு என்பன பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
3. விவசாயமானது இலாபத்துடன் கூடிய வருமானத்தை ஈட்டித்தரும் தொழில் என்பது பற்றிய ஆர்வத்தை தூண்டுதல்.
4. விவசாயம் சம்பந்தமாக விவசாயிகள் மத்தியில் சாதகமான மனப்பாங்கை விருத்தி செய்தல்.
5. விவசாய சமூகம் மத்தியில் வெவ்வேறு விவசாயச் செயன்முறைகள் காரணமாக எழும் பாதகமான விளைவுகள் பற்றியும், சூழல் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

   விவசாயம் சார்ந்த நிறுவனங்களால் அறிமுகப்படுத்தப்படும் விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட கொள்கைகளையும் தந்திரோ பாயங்களையும் பற்றிய நோக்குகளை, எண்ணங்களை விவசாயிகளுக்கு வழங்கல்

6. வீட்டுத் தோட்டச் செயன்முறையை நாட்டிலுள்ள சகல வீடுகளிலும் ஊக்குவித்தல். இதனால் உணவுப் பாதுகாப்பை போஷணையை இரசாயனங்கள் அற்ற உணவுப் பதார்த்தங்களை பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்துதல்.
7. விவசாயத்தை கவர்ச்சிகரமான தொழிலாக இந்நாட்டின் இளைஞர், யுவதிகள் மத்தியில் உருவாக்குதல்

பிரதான பண்ணை ஒலிபரப்பு அலகு நாரஹேன்பிட்ட கொழும்பில் அமைந்துள்ளது. இதனுடைய உப அலகுகள் அனுராதபுரம், கண்டி. மாத்தளை போன்ற இடங்களில் அமைந்துள்ளது. இச்சேவை சிங்களம், தமிழ் மொழிமூலங்களில் வானொலி நிகழ்ச்சிகளை வெவ்வேறு வானொலி அலைவரிசையின் ஊடாக ஒலிபரப்பி வருகின்றது. அனேக வானொலி நிகழ்ச்சிகள் "சந்தியா சேவையின்" ஊடாக ஒலிபரப்பக்கூடியதாக அமைந்தது. விசேடமாக இச்சேவை சிங்கள தேசிய சேவையின் ஊடாக இடம் பெறுகின்றது.

இளம் விவசாயிகள் கழக வினாவிடை நிகழ்ச்சியானது விவசாய அமைச்சு, இலங்கை ஒலிபரப்பு கூட்டுத் தாபனம் என்பவற்றால் இணைக்கப்படுகின்றது. இலங்கை பூராகவும் வானொலி நிகழ்ச்சிகளை செவிமடுப்போர் இணைந்து "கேட்போர் கழகம்" எனும் அமைப்பினை உருவாக்கியுள்ளனர். இவர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சிகள் வேலைப் பட்டறைகள் பண்ணை விஜயங்கள் வழங்கியதன் மூலம் வானொலி நிகழ்ச்சிகளை பிரபல்யப்படுத்துவதற்கும் அதன் மூலம் பின்னூட்டலை பெற்றுக் கொள்ளவும் முடியும்.

2014ம் ஆண்டு குருஷி FM வானொலி இணையத்தளம் (www.krushifm.lk பரீட்சார்த்தமாக நேரடி வானொலி அலைவரிசையை விஸ்தரிப்பதற்கு முனைந்து வருகின்றது.

### முன்னேற்றம்

**அட்டவணை 3.2.7 2013ம் ஆண்டில் கேட்போர் கழக பயிற்சி நிகழ்ச்சிகளும் பயிற்சிப் பட்டறையும்**

| அலகு | பயிற்சிகளின் எண்ணிக்கையும் பயிற்சிப்பட்டறையும் | |
|---|---|---|
| | இலக்கு | முன்னேற்றம் |
| கொழும்பு | 06 | 06 |
| கண்டி | 06 | 17 |
| அனுராதபுரம் | - | - |
| மாத்தறை | 07 | 06 |

2013ல் பண்ணை ஒலிபரப்பு அலகினால் மோற்கொள்ளப்பட்ட ஏனைய சேவைகள் வருமாறு

- வெகுஜன முறைகளை ஒருங்கிணைத்தலும் வயல் விழாக்களில் அறிவித்தல்களை மேற்கொள்லும், பயிற்சிகளும் நிகழ்ச்சிகளும் - 08
- விற்பனை நிலையங்கள் / கண்காட்சிகள் - 05
- கண்காட்சிகளில் பொதுமக்கள் முன்னிலையில் உரையாற்றல் தொகுதியை கையாள்தல்
- இலவச ஆலோசனைச் சேவை தொலைபேசியினூடாக - 667

## அட்டவணை 3.2.8: 2013ம் ஆண்டு ஒலிபரப்புச் செய்யப்பட்ட வானொலி நிகழ்ச்சிகள்

| நாள் | நேரம் | வானொலி நிகழ்ச்சி | வடிவம் | தயாரிப்பு நிலையம் | அலைவரிசை |
|---|---|---|---|---|---|
| திங்கள் | 09.00 - 10.00<br>18.45 - 19.00<br>19.00 - 19.09<br>19.10 - 19.16<br>19.16 - 19.30 | கொவிதடை பயல்<br>கொவி ஜெடரா<br>ரன்கெத அட்டரா<br>சனச<br>கொவிசரச | நேரடி உரையாடல்<br>சஞ்சிகை நிகழ்ச்சி<br>சஞ்சிகை நிகழ்ச்சி<br>தற்போதைய<br>விவசாயத் தகவல்கள்<br>சஞ்சிகை நிகழ்ச்சி | கொழும்பு<br>கொழும்பு<br>அனுராதபுரம்<br>மாத்தறை<br>கொழும்பு | FM 91.7 / 91.9<br>FM 91.7 / 91.9*<br>FM 91.7 / 91.9<br>FM 91.7 / 91.9<br>FM 91.7 / 91.9 |
| புதன் | 18.45 - 19.00<br>19.00 - 19.10<br>19.10 - 19.20<br>19.23 - 19.30<br>19.00 - 19.30 | சர பூமி<br>சாருகேதா<br>லியசரணியா<br>திரசர<br>குறிஞ்சி மலர்கள் | சஞ்சிகை நிகழ்ச்சி<br>சஞ்சிகை நிகழ்ச்சி<br>சஞ்சிகை நிகழ்ச்சி<br>சூழல்நேய பயிர்ச் செய்கை நடவடிக்கை<br>சஞ்சிகை நிகழ்ச்சி | கொழும்பு<br>அனுராதபுரம்<br>கொழும்பு<br>மாத்தறை<br>கண்டி | FM 91.7 / 91.9<br>FM 91.7 / 91.9*<br>FM 91.7 / 91.9<br>FM 91.7 / 91.9*<br>FM |
| வியாழன் | 08.30 - 09.30<br>இறுதி வியாழன்<br>09. 00 - 10.00<br>18.35 - 19.30 | ருகுணு கேவத்த<br>கொவிஜன மதல | நேரடி நிகழ்ச்சி<br>நேரடி உரையாடல் | மாத்தறை<br>கொழும்பு | FM 107.3 / 107.5<br>FM 107.3 / 107.5 |
| வெள்ளி | 07.00 - 08.00<br>08.00 - 09.00<br>19.00 - 19.15<br>19.15 - 19.30<br>19.00 - 19.15 | வீட்டுத் தோட்டம்<br>அஸ்வன்ன<br>குருஷி சாரிகா<br>பெண் வண்டு<br>முகடுகள் | நேரடி உரையாடல்<br>நேரடி உரையாடல்<br>சஞ்சிகை நிகழ்ச்சி<br>நாடகம்<br>நாடகம் | கொழும்பு<br>கண்டி<br>கண்டி<br>மாத்தறை<br>கண்டி | FM<br>FM<br>FM 91.7 / 91.9*<br>FM 91.7 / 91.9*<br>FM |
| சனி | 06.45 - 07.00<br>08.00 - 08.15<br>18.35 - 18.45<br>18.45 - 19.00<br>19.00 - 19.30<br>19.30 - 20.00<br>19.30 - 19.45<br>20.15 - 20.30 | குருஷி சாரிகா<br>கொவிபிம<br>செயிலமா<br>கதமல்லா<br>கொறடுவ<br>துணத்தா<br>வண்ண மாருதம்<br>உழவர் இல்லம் | சஞ்சிகை நிகழ்ச்சி<br>சஞ்சிகை நிகழ்ச்சி<br>பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சி<br>சஞ்சிகை நிகழ்ச்சி<br>சஞ்சிகை நிகழ்ச்சி<br>கலந்துரையாடல்<br>சஞ்சிகை நிகழ்ச்சி<br>சஞ்சிகை நிகழ்ச்சி | கண்டி<br>கண்டி<br>கொழும்பு<br>மாத்தறை<br>கொழும்பு<br>அனுராதபுரம்<br>கொழும்பு<br>கொழும்பு | FM<br>FM<br>FM 91.7 / 91.9*<br>FM 91.7 / 91.9*<br>FM 91.7 / 91.9*<br>FM 104.4 / 1.5.7<br>FM<br>FM |
| ஞாயிறு | 09.45 - 10.00 | பொடறிய மங்கட | சஞ்சிகை நிகழ்ச்சி | கண்டி | FM 107.3 / 107.5 |

*சந்தியா சேவையில் ஒலி பரப்பப்படும்

**அட்டவணை: 3.2.9 2013ல் ஒலிபரப்பப்பட்ட வானொலி நிகழ்ச்சிகள்**

| அலகு | வானொலி நிகழ்ச்சி | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|---|
| கொழும்பு | கொவிதடை பயக் | 52 | 47 |
| | கொவி கெதர | 52 | 48 |
| | கொவிசர | 52 | 39 |
| | சர பூமி | 49 | 44 |
| | கொறடுவ | 52 | 50 |
| | செய்லம | 52 | 49 |
| | கொவி ஜனமடல | 40 | 42 |
| | லிய சரணியா | 52 | 39 |
| | வீட்டுத் தோட்டம் | 52 | 43 |
| | உழவர் இல்லம் | 52 | 28 |
| | வண்ணமாருதம் | 52 | 41 |
| கண்டி | அஸ்வென்ன | 52 | 48 |
| | கொவிபிம | 52 | 51 |
| | கலவிட | 120 | 120 |
| | குருஷி சாரிகா | 41 | 35 |
| | அத்தம | 120 | 120 |
| | குறிஞ்சி மலர் | 52 | 52 |
| | முகடுகள் | 52 | 51 |
| | போடரியா மங்கட | 52 | 51 |
| | கொவிஜன மடல | 04 | 03 |
| | வயம்ப யெவட்ட (1மணி) | 12 | 10 |
| | வயம்ப யெவட்ட (1/2 மணி) | 40 | 40 |
| | குறும் செய்திகள் | 1000 | 988 |
| அனுராதபுரம் | கெத்பிம | 52 | 50 |
| | ரன்கேத அட்டர | 43 | 40 |
| | துணத்த | 52 | 48 |
| | கொவி ஜன மடல | 04 | 03 |
| மாத்தறை | றுகுணு கேவத்த | 50 | 50 |
| | றுகுணு பீம - கொவிடத்தை | 26 | 22 |
| | அஸ்வட்டும | 77 | 77 |
| | சலுபவிய | 09 | 09 |
| | திரசர | 43 | 40 |
| | கடமல்ல | 51 | 50 |
| | ஹதடிய | 07 | 07 |
| | சனச | 42 | 40 |
| | கொவிடதட ஏப்சவிய | 504 | 504 |
| | பெண் வண்டு | 42 | 38 |

## விவசாய தொழில்நுட்பப் பூங்கா – பத்தாத்தை

இப்பூங்காவின் பிரதான நோக்கம் யாதெனில் விவசாயத்தில் ஈடுபடும் வெவ்வேறு மக்களின், விவசாயிகளின், பல்கலைக்கழக மாணவர்களின், முயற்சியாளர்களின் திறனை கட்டியெழுப்பு வதாகும். பாடசாலை மாணவர்களே பிரதான இலக்குக் குழு ஆவார்கள். சிறந்த செயன்முறை அறிவுடன் கூடிய விவசாய விஞ்ஞானத்தைக் கற்பதற்கு இவர்களுக்கு அரிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது.

இப்பூங்காவானது விவசாயிகள், பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமல்லாது பொது மக்களுக்கும் விவசாயத்தை கற்பதற்கு ஓர் சொர்க்கமாகக் கருதப்படுகின்றது. அத்துடன் விவசாயச் சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதனை இன்னொரு பரிமாணமாகக் கொண்டுள்ளது. ஒரே மாதிரியான விற்பனை நிலையமானது இலங்கைக்கு வருகைதரும் உல்லாப்பயணிகளை உற்சாகப்படுத்துவதற்கு சிறந்த இடமாகும். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்கள், காட்டு விலங்கினங்கள், மணல், கடல், போன்ற இடங்கள் தவிர இலங்கையில் உல்லாசத் துறையை விருத்தி செய்வதற்கு புதிய உபாயமாகும்.

ஆகவே பத்தாத்தை விவசாய ஆர்வலர்களின் சொர்க்கமாகக் கருதப்படுகின்றது. கோடைகால குடில்கள், மேலிருந்து அவதானிக்கக்கூடிய ஏரி, வயல்கள், பழமரத் தோட்டங்கள் போன்றவை பொதுவானவை. இவை இயற்கை அழகின் உண்மைத் தன்மையை எடுத்துக் காட்டும்.

பத்தாத்தை பூங்கா வெவ்வேறான முன்மாதிரிச் செய்கைகளைக் கொண்டது. அவையாவன நெல் வயல்கள், இலை மரக்கறித் தோட்டம், பழ மரங்கள் நிறைந்த பகுதி, நுகர்ச்சி குறைந்த பழங்களின் தோட்டம் மூலிகைத் தோட்டம், சேனைப் பயிர்ச் செய்கை, வாசனைத் திரவியங்களின் தோட்டம், வாழைத் தோட்டம் போன்றவையுடன் உண்ணக்கூடிய பயிர்களால் ஆன நில அலங்காரம் மேலும் அழகூட்டுவதாக அமைகின்றது. வேலைப் பகிர்வினை ஊழியர் பகிர்வினை எடுத்துக் காட்டும் வகையிலமைந்த நுளை வாயிலில் அமைந்த இரண்டு வில்வடிவிலான கைகள் அமைந்துள்ளது.

இப்பூங்காவில் வேறுபட்ட காய்கறிகள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது. அத்துடன் உயிர்ப்பூட்டமான விவசாய பல்வகைமை, உயிர்ப்பூட்டமான விவசாய பயிர் நூதனசாலை என்பன மகிழ்ச்சியான சூழலை ஆக்கிநிற்கின்றது. இவை தற்போது உண்ணக் கூடிய பயிர்களால் ஆன நில அலங்காரம் என அழைக்கப்படுகின்றது. பாதையில் இரு மருங்கும் டிறகன் தாவரங்களால் எல்லைப்படுத்தப் பட்டிருக்கின்றது. இத்தாவரம் உலர் காலநிலை நிலமைகளுக்கு மிகப்பொருத்தமானது. இது கள்ளித் தாவர குடும்பத்தைச் சேர்ந்தது. இதன் பழம் உண்ணக்கூடிய மிகவும் விலை கூடியதாகவும் இலங்கையில் கருதப்படுகின்றது. வருகை தருவோர், பார்வையாளர்களுக்கு இது உயர் பெறுமதி வாய்ந்த பயிர் பற்றிய செய்தியை வழங்குகின்றது.

இப்பூங்காவின் ஏனைய முக்கியத்துவம் யாதெனில் விவசாயக் கல்விக்கு வேண்டிய வசதிகளை வழங்குவதாகும். ஏறக்குறைய 15 உதவியாளர்கள் இப்பூங்காவில் கடமை யாற்றுகின்றனர். இவர்கள் வருகை தருவோரை நெறிப்படுத்துகின்றனர். உலகிலுள்ள ஏனைய சாதாரண பூங்காக்களைப் போலல்லாது உதவியாளர்களின் சேவை விவசாயிகளை பாடசாலை மாணவர்களை பொது மக்களை பூங்காவின் ஒவ்வொரு பகுதி சம்மந்தமான விழிப்புணர்வை ஊட்டுவதாக அமைகின்றது.

இன்னுமொரு முக்கிய வசதி யாதெனில் சுய விளக்கப் பலகைகள் மூன்று மொழிகளிலும் அதாவது சிங்களம், தமிழ், ஆங்கிலத்தில் தொழில்நுட்பத் தகவல்களை வழங்கி நிற்கின்றது.

## முன்னேற்றம்

**அட்டவணை 3.2.10: 2013ல் நிதி முன்னேற்றம்**

| விபரணம் | வருமானம் (ரூபா) |
|---|---|
| பாடசாலை மாணவர்கள் | 69,705.00 |
| ஏனைய மாணவர்கள் | 34,180.00 |
| முதியோர் | 426,820.00 |
| உல்லாசப்பயணச் சிறுவர்கள் | 600.00 |
| முதிய உல்லாசப் பயணிகள் | 26,800.00 |
| வாகன தரிப்பிட கட்டணம் | 47,880.00 |
| கேட்போர் கூடம் | 3,000.00 |
| பண்ணை உற்பத்திகள் | 168,360.00 |
| **மொத்தம்** | **777,345.00** |

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பணிப்பாளர் | 01 |
| மேலதிக பணிப்பாளர் | 01 |
| பிரதி விவசாயப் பணிப்பாளர் | 02 |
| உதவி விவசாயப் பணிப்பாளர் | 03 |
| பாடவிதான வல்லுனர்கள் | 01 |
| விவசாய உத்தியோகத்தர் | 08 |
| விரிவுரையாளர்கள் | 02 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 14 |
| தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01 |
| நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | 03 |
| வெகுஜன தொடர்பு சேவை உதவியாளர் | 03 |
| கட்புல செவிப்புல உதவியாளர் | 03 |
| வரைபட கலைஞர் | 02 |
| விவசாய போதனாசிரியர் | 46 |
| முகாமைத்துவ உதவியாளர் | 14 |
| கட்புல, செவிப்புல தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 01 |
| படப்பிடிப்பாளர் | 01 |
| அச்சு புத்தக கோர்வையாளர் | 01 |
| இயந்திர திருத்துனர்கள் | 04 |
| அச்சீட்டு உதவியாளர் | 02 |
| பண்ணை எழுது வினைஞர் | 02 |
| அலுவலக வேலை உதவியாளர் | 01 |
| சாரதிகள் | 17 |
| உழவு இயந்திர சாரதி | 02 |
| சினிமா இயக்குநர் | 01 |
| ஒளிப்படப் பிடிப்பாளர் | 01 |
| ஒளிப்பட செவ்வையாக்குனர் | 02 |
| ஒளிப்பட செவ்வையாக்கல் உதவியாளர் | 01 |
| ஒளிப்பட ஒளி உதவியாளர் | 01 |
| ஒலிப் பதிவாளர் | 02 |
| கண்காட்சி உதவியாளர் | 01 |
| களஞ்சிய உதவியாளர் | 04 |
| காவலாளி | 30 |
| பாரவூர்தி நடத்துனர் | 01 |
| தச்சு வேலை செய்பவர் | 01 |
| உலோக ஒட்டு வேலை செய்பவர் | 01 |
| மின்சார வேலை செய்பவர் | 01 |
| மின்சார வேலை உதவியாளர் | 01 |
| தொழில்நுட்பவியலாளர் | 02 |
| இயந்திர திருத்துனர் | 01 |
| வர்ணம் தீட்டுபவர் | 01 |
| கூலித் தொழிலாளர் (நிரந்தரம்) | 19 |
| கூலித் தொழிலாளர் (ஒப்பந்த அடிப்படை) | 191 |
| **மொத்தம்** | **399** |

# 4.1 நிர்வாகப் பிரிவு பேராதனை

அரசாங்க அலுவலர்களின் தாபன விடயங்களுடன் தொடர்புடைய வெற்றிடங்களை நிரப்புதவதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளல், மூலப்பிரமாணங்களிற்கு அமைய விண்ணப்பங்களைக் கோரல், சம்பந்தப்பட்ட எழுத்துப் பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சையை நடாத்தல், நியமனஞ் செய்வதற்கு மிகப் பொருத்தமான விண்ணப்பத்தாரியை தெரிவு செய்தல், நியமனஞ் செய்தல், பதவி உயர்வுகள், வினைத்திறன்கான் பரீட்சைகள், ஒழுக்காற்று விடயங்கள் ஆகியவற்றோடு தொடர்புடைய தொழிலாற்றுகைகளும், அரசாங்கத்தினதும், திணைக்களத்தினதும் கொள்கைகள் சம்பந்தப்பட்ட தொடர்பாடல்களுமே நிர்வாகப் பிரிவின் பங்களிப்பு என சுருக்கமாக வரைவிலக்கணஞ் செய்ய முடியும். நிர்வாக விடயங்கள் தொடர்பில் அரச சேவைகள் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம், பாராளுமன்ற மதியுரைஞர் குழு, பல்வேறு முறைப்பாடுகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர், அமைச்சுகள், திணைக்களங்கள் போன்ற ஏனைய நிறுவனங்களுடனும் நிர்வாகப் பிரிவு தொடர்பாடல்களைப் பேணி வருகின்றது. விவசாய அமைச்சின் வழிகாட்டல்களிற்கமைய இந்த அனைத்து நடைமுறைகளினதும் ஒருங்கிணைப்புப் பணிகளை நிர்வாகப் பிரிவு மேற்கொண்டு வருகின்றது.

## பாதீடு

மூலதனம், மீண்டு வரும் செலவீனங்கள் ஆகியவற்றின் கீழ் பெறப்பட்ட ஒதுக்கீடுகள், செலவுகள் ஆகியன அட்டவணை 4.1.1 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.1.1: வருடாந்தப் பாதீடு ~ 2013 (ரூபா)**

| செலவுத் தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு % |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 11,149,004 | 10,137,338 | 91 |
| மீண்டு வரும் செலவு | 17,830,567 | 15,995,518 | 90 |
| **மொத்தம்** | **28,979,571** | **26,132,856** | **90** |

## முன்னேற்றங்கள்

### நியமனங்கள்

விவசாயத் திணைக்களத்தின் வரலாற்றில் 2013 இலேயே அதிக எண்ணிக்கையானோர் நியமனஞ் செய்யப்பட்டனர். இது பல வருட காலமாக நிலவி வந்த அலுவலர்களிற்கான பற்றாக்குறைவைப் குப்பிடத்தக்களவில் போக்குவதற்கு வழிகோலியது. நியமனஞ் செய்யப்பட்டவர்களின் விபரங்கள் அட்டவணை 4.1.2 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.1.2: 2013 இல் நியமனஞ் செய்யப்பட்டோர்.**

| பதவி | நியமனஞ் செய்யப்பட்டோரின் எண்ணிக்கை |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் | 01 |
| மேலதிக பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி) | 01 |
| மேலதிக பணிப்பாளர் நாயகம் (ஆராய்ச்சி) | 01 |
| மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிருவாகம்) | 01 |
| விவசாய அலுவலர்கள் | 91 |
| ஆராய்ச்சி அலுவலர்கள் | 17 |
| விரிவுரையாளர்கள் | 11 |
| விவசாயப் பொருளியலாளர்கள் | 03 |
| தொழில் நுட்ப உதவியாளர்கள் | 07 |
| சாரதிகள் | 100 |
| தொழில்நுட்பவியலாளர்கள் | 19 |
| எந்திரவினைஞர்கள் | 09 |
| ஒப்படச் செவ்வையாக்குநர் | 02 |
| இயந்திர கைவினைஞர் | 12 |
| அச்சு இயந்திர இயக்குனர் | 01 |
| ஒலிப்பதிவாளர் | 02 |
| வீடியோ / நிழற்படப் பிடிப்பு உதவியாளர்கள் | 02 |
| மேசைப் பணியாளர்கள் | 04 |
| செய்துகாட்டல் உதவியாளர்கள் | 02 |
| ஒளிப்பட உதவியாளர்கள் | 02 |
| ஒளிப்பட ஒளியமைப்பாளர் / மின் உதவியாளர்கள் | 04 |
| தேனீ பராமரிப்பாளர்கள் | 07 |
| சமையற்காரர்கள் | 13 |
| காவலாளிகள் | 29 |
| தாவர ஒட்டுநர்கள் | 02 |
| தொழில்நுட்ப உதவியாளர்கள் | 89 |
| ஆராய்ச்சி உப உதவியாளர்கள் | 13 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 01 |
| பண்ணை எழுதுவினைஞர்கள் | 46 |
| **இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நியமனஞ் செய்யப்பட்டோர்** | |
| அபிவிருத்தி உதவியாளர் | 209 |
| **மொத்தம்** | **858** |

## பதவி உயர்வுகள்

**அட்டவணை 4.1.3: 2013 இல் பதவி உயர்வு பெற்றோர்**

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| இலங்கை விவசாயச் சேவை II/I | 03 |
| இலங்கை விவசாயச் சேவை தரம் I | 04 |
| விவசாயப் போதனாசிரியர்கள் (விசேட) I/II | 18 |
| பொருளியல் உதவியாளர்கள் | 03 |
| **இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் பதவி உயர்த்தப்பட்டோர்** | |
| சாரதிகள் II அ/ I | 10 |

## தரங்களிற்கு உள்ளீர்க்கப்பட்டோர்

தொழிலாளர்கள் - 200

## சேவையிலிருந்து ஓய்வு பெற்றோர்

**அட்டவணை 4.1.4: 2013 இல் ஓய்வு பெற்றோர்**

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| இலங்கை விவசாயச் சேவை | 14 |
| இலங்கை கணக்காளர் சேவை | 01 |
| விவசாயப் போதனாசிரியர்கள் | 27 |
| விவசாயப் போதனாசிரியர்கள் (விசேட) | 03 |
| ஆராய்ச்சி அலுவலர்கள் | 12 |
| ஆராய்ச்சி உதவியாளர்கள் | 04 |
| ஆராய்ச்சி உப உதவியாளர்கள் | 05 |
| அச்சுக் கோர்ப்பாளர் | 01 |
| விரிவுரையாளர்கள் | 03 |
| பாட விதான விசேடத்துனர் | 02 |
| பொது முகாமைத்துவ உதவியாளர்கள் (அதி சிறப்பு தரம்) | 01 |
| பொருளியல் உதவியாளர் | 02 |
| பொது முகாமைத்துவ உதவியாளர்கள் | 27 |
| பண்ணை எழுதுவினைஞர்கள் | 01 |
| சாரதி | 08 |
| மின்னியலாளர் | 01 |
| களஞ்சிய உதவியாளர் | 01 |
| எந்திரவினைஞர் | 01 |
| தகர ஒட்டுநர் | 01 |
| உழவு இயந்திர இயக்குநர் | 01 |
| இயந்திரக் கைவினைஞர் | 01 |
| பிறப்பாக்கி இயக்குநர் | 02 |
| மேசன் | 01 |
| பொருத்துநர் | 01 |
| தச்சர் | 01 |
| விசேட களஞ்சிய தொழிலாளர்கள் | 02 |
| காவலாளிகள் | 15 |
| தொழிலாளர்கள் | 66 |
| துப்பரவு செய்யும் தொழிலாளர்கள் | 05 |
| மேலாளர் | 01 |
| சமையற்காரார்கள் | 01 |
| தாவர ஒட்டுநர் | 01 |
| விசேட தொழிலாளர்கள் | 01 |
| சுற்றுலா விடுதிப் பராமரிப்பாளர்கள் | 01 |

## பணியிலுள்ள போதே இறந்தவர்கள்

**அட்டவணை 4.1.5: 2013 இல் பணியாற்றும் போதே இறந்தவர்கள்**

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| விவசாயப் போதனாசிரியர் | 01 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 01 |
| உழவு இயந்திர இயக்குனர் | 01 |
| தாவர ஒட்டுநர் | 01 |
| சுற்றுலா விடுதிக் காப்பாளர் | 01 |

## ஏனைய பதவிகளிற்கு விடுவிக்கப்பட்ட அலுவலர்கள்

| | |
|---|---|
| விவசாய அலுவலர் | 01 |
| பொருளாதார உதவியாளர்கள் | 02 |
| உழவு இயந்திர இயக்குநர்கள் | 02 |
| காவலாளிகள் | 03 |

## பதவி நீக்கப்பட்டோர்

| | |
|---|---|
| சுற்றுலா விடுதிக் காப்பாளர்கள் | 02 |
| காவலாளிகள் | 22 |
| விவசாயப் போதனாசிரியர் | 01 |

பொருளியல் உதவியாளர் 01

### பதவியிலிருந்து இராஜினாமாச் செய்தோர்

விவசாயப் போதனாசிரியர்கள் 23

ஆராய்ச்சி உதவியாளர்கள் 14

பண்ணை இயந்திர போதனாசிரியர்கள்02

### மாகாண சபைகளிற்கு விடுவிக்கப்பட்ட அலுவலர்கள்

விவசாயப் போதனாசிரியர்கள் 07

ஆராய்ச்சி உதவியாளர்கள் 04

வேலைப் பரிசோதகர் 01

நிகழ்ச்சி உதவியாளர் 01

## ஒழுக்காற்று விசாரணைகள்

**அட்டவணை 4.1.6: 2013 இல் மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று விசாரணைகள்**

| வகை | 2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நிலைவையிலிருந்த விசாரணைகளின் எண்ணிக்கை | 2013 இல் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை | 2013 இல் பூர்த்தி செய்யப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை | 2013.12.31 அன்றுள்ளவாறு நிலுவையிலுள்ள விசாரணைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| முறைசார் ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பக் கண்டு பிடிப்புகள் | 38 | 28 | 25 | 41 |
| அரசாங்க / உள்ளக கணக்காய்வு | 19 | 13 | 08 | 24 |
| முறைப்பாடுகளின் விசாரணை | 43 | 50 | 14 | 79 |
| **மொத்தம்** | **100** | **91** | **47** | **144** |

**அட்டவணை 4.1.7: 2013 இல் மேற்கொள்ளப்பட்ட 104 வது நிதிப்பிரமாணங்கள் விசாரணை**

| 2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நிலைவையிலிருந்த விசாரணைகளின் எண்ணிக்கை | 2013 இல் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை | 2013 இல் பூர்த்தி செய்யப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை | 2013.12.31 அன்றுள்ளவாறு நிலுவையிலுள்ள விசாரணைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 486 | 185 | 135 | 536 |

## வழங்கப்பட்ட கடன்களின் தொகையும், சம்பள முற்பணங்களின் வகைகளும்

**அட்டவணை 4.1.8: கடன்கள் மற்றும் சம்பள முற்பணங்களின் விபரங்கள்**

| கடன்களின் வகை | அனுமதிக்கப்பட்ட செலவுச் சான்றுகளின் எண்ணிக்கை | செலுத்தப்பட்டத் தொகை (ரூபா |
|---|---|---|
| இடர் கடன் | 1128 | 124,138,283 |
| துவிச்சக்கர | 31 | 186,000 |
| சொத்துக்கள் | 65 | 76,052,260 |

### அக்ரஹாரா காப்புறுதித் திட்டம்

- வைத்தியசாலை செலவுகளையும், மூக்குக் கண்ணாடிகளிற்கான செலவுகளையும் ஈடு செய்வதற்காகச் சமர்பிக்கப்பட்ட செலவுச் சான்றுகளின் எண்ணிக்கை - 1050
- பற்றுச்சீட்டுக்களின் மொத்த பெறுமதி ரூபா 10,045,432.00
- சமர்பிக்கப்பட்ட விபத்து உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை - 06
- சிபாரிசு செய்யப்பட்டு N.I.T.F இற்குச் சமர்பிக்கப்பட்ட விபத்து உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை - 06
- இயற்கையான இழப்புகளிற்காக சமர்பிக்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை - 12
- இயற்கையான இழப்பீட்டு கோரிக்கைகளின் பெறுமானம் ரூபா 1,200,000.00

### பட்டப்பின் கற்கைகளிற்காக வெளிநாடு சென்றோர்

Ph.D - 01 (ஆராய்ச்சி அலுவலர்)

### பாதுகாப்பு வைப்புகள்

- ஓய்வு பெற்ற பின்னர் விடுவிக்கப்பட்ட பாதுகாப்பு வைப்புகளின் எண்ணிக்கை - 100
- விடுவிக்கப்பட்ட தொகை ரூ 2,796,073.80
- அரசாங்க கணக்கில் வரவு வைக்கப்பட்டத் தொகை ரூபா - 4, 822,713.00

### ஓய்வூதியம்

ஓய்வூதியப் பிரிவினால் பெற்றுக் கொள்ளப்பட்டக் கோப்பகளின் எண்ணிக்கை பின்வருமாறு.

- ஓய்வூதியக் கொடுப்பணவுகள் - 235
- மரணப் பணிக்கொடை - 11
- கருணைத் தொகை - 29
- முன்னைய பணிக்குத் திரும்பியமைக்கான கொடுப்பணவுகள் - 50
- சிறு தொகை பற்றுச் சீட்டுக்களுக்காக விடுவிக்கப்பட்டவை - 07

### பட்டப்பின் கற்கைகளைப் பூர்த்தி செய்த பின்னர் நாடு திரும்பிய அலுவலர்களின் எண்ணிக்கை

**முதுமானி (M.Sc.) பட்டம்**

பிரதிப் பணிப்பாளர் 01

**முதுதத்துமானி (M.Phil.) பட்டம்**

ஆராய்ச்சி அலுவலர் 01

**கலாநிதி (Ph.D) பட்டம்**

பிரதிப் பணிப்பாளர்கள் 01

ஆராய்ச்சி அலுவலர்கள் 03

## உள்நாட்டில் கல்வி பயில விடுவிக்கப்பட்ட அலுவலர்கள்

**கலாநிதி (Ph.D) பட்டம்**

விவசாய அலுவலர்கள் 08

**முதுதத்துமானி (M.Phil.) பட்டம்**

ஆராய்ச்சி அலுவலர் 09

**முதுமானி (M.Sc.) பட்டம்**

கணக்காளர் 01

பொறிமுறை பொறியியலாளர் 01

ஆராய்ச்சி அலுவலர்கள் 02

விவசாய அலுவலர் 01

விரிவுரையாளர்கள் 03

**MBA பட்டம்**

கணக்காளர் 01

**விஞ்ஞானமானி (B.Sc.) பட்டம்**

விவசாயப் போதனாசிரியர்கள் 10

**டிப்ளோமா பாடநெறிகள்**

நிர்வாக அலுவலர்கள் 02

சிரேஷ்ட நூலகர் 01

## உள்நாட்டில் பட்டப் படிப்பினை பூர்த்தி செய்த அலுவலர்கள்

**முதுமானி (M.Sc.) பட்டம்**

பிரதிப் பணிப்பாளர் 01

விரிவுரையாளர் 01

**விஞ்ஞானமானி (B.Sc.) பட்டம்**

விவசாயப் போதனாசிரியர்கள் 10

## பயிற்சிகள், பட்டறைகள், மாநாடுகள் என்பனவற்றிற்காக மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு விஜயங்கள்

**அட்டவணை 4.1.9: 2013 இல் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு விஜயங்கள்**

| பதவி | எண். |
|---|---|
| விவசாயப் பணிப்பாளர் நாயகம் | 03 |
| மேலதிக விவசாயப் பணிப்பாளர் நாயகம் | 02 |
| பணிப்பாளர்கள் | 18 |
| பிரதான பொறியியலாளர் | 02 |
| பிரதான கணக்காளர் | 01 |
| மாவட்ட விவசாயப் பணிப்பாளாகள் | 04 |
| பீடைநாசினிகள் பதிவாளர் | 02 |
| கணக்காளர்கள் | 06 |
| மேலதிகப் பணிப்பாளர்கள் | 17 |
| பிரதிப் பணிப்பாளர்கள் | 25 |
| உதவி விவசாயப் பணிப்பாளர்கள் | 05 |
| பிரிவுத் தலைவர்கள் | 01 |
| பொறியியலாளர்கள் | 05 |
| ஆராய்ச்சி அலுவலர்கள் | 58 |
| விவசாயப் பொருளியலாளர்கள் | 06 |
| விரிவுரையாளர் | 02 |
| விவசாய அலுவலர்கள் | 04 |
| நிர்வாக அலுவலர் | 01 |
| விவசாயப் போதனாசிரியர்கள் | 43 |
| விவசாயக் கண்காணிப்பு அலுவலர்கள் | 02 |
| நிகழ்ச்சி உதவியாளர்கள் | 02 |
| ஆராய்ச்சி உதவியாளர்கள் | 02 |
| வரவு செலவு உதவியாளர் | 01 |
| நிதி உதவியாளர் | 01 |
| பொதுமுகாமைத்துவ உதவியாளர் | 01 |
| பண்ணை இயந்திரவியல் போதனாசிரியர்கள் | 01 |

| | |
|---|---|
| கட்புல, செவிப்புல உதவியாளர்கள் | 02 |
| மின்னிலியலாளர் | 01 |
| சினிமா இயக்குனர் | 01 |
| தொழிலாளர்கள் | 02 |

## உள்நாட்டுப் பயிற்சிகள்

**அட்டவணை 4.1.10: 2013 இல் நடாத்தப்பட்ட உள்நாட்டுப் பயிற்சிகள்**

| பயிற்சிகள் | பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|
| களஞ்சிய காப்பாளர்களிற்கான பயிற்சி (களஞ்சிய பணிகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களிற்கானது) | 46 |
| பொது முகாமைத்துவ உதவியாளர்களிற்கான ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சிகள் | 117 |
| பொது முகாமைத்துவ உதவியாளர்களிற்கான ஓய்வூதிய கோவைகளை இற்றைப்படுத்து வதற்கான பயிற்சிப் பட்டறை | 137 |
| பொது முகாமைத்துவ உதவியாளர்களிற்கான நிதிப்பிரமானங்கள் 104 விசாரணைகளை மேற்கொள்வதற்கான பயிற்சி | 134 |
| பொது முகாமைத்துவ உதவியாளர்களிற்கான தரவுத் தள பகுப்பாய்வு (நான்கு படிகள்) | 80 |

## உள்நாட்டு மாநாடுகளில் பங்குபற்றிய அலுவலர்கள்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் நடாத்தப்பட்டப் பயிற்சிகள்

- நிறைவேற்று தரம் சாராத அலுவலர்களினால் சமர்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை - 783
- பயிற்சிகளிற்கு சமுகமளித்த நிறைவேற்று தரம் சாராத அலுவலர்களின் எண்ணிக்கை - 10
- நிறைவேற்று தர அலுவலர்களினால் சமர்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை - 25
- பயிற்சிகளிற்கு சமூகமளித்த நிறைவேற்று தர அலுவலர்களின் எண்ணிக்கை - 10

## மீள அறவிடப்பட்ட தொகை

ஏற்கனவே சேவையிலுள்ள அலுவலர்கள் ஒப்பந்தங்களை மீறியமையால் 2013 இல் அரசாங்கத்தினால் அறவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா 145,289.00 ஆகும்.

ஓய்வு பெற்ற அலுவலர்கள் ஒப்பந்தங்களை மீறியமையால் 2013 இல் அரசாங்கத்தினால் அறவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா 2,062,664.44 ஆகும்.

## அலுவலர் பட்டியல்

| பதவி | அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் | 01 |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) | 01 |
| பணிப்பாளர் (நிர்வாகம்) | 01 |
| பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) | 01 |
| உதவி பணிப்பாளர்கள் (நிர்வாகம்) | 02 |
| நிர்வாக அலுவலர்கள் | 06 |
| மொழி பெயர்ப்பாளர்கள் | 03 |
| சட்ட உதவியாளர்கள் | 02 |
| நிர்வாக அலுவலர்கள் | 17 |
| பொது முகாமைத்துவ உதவியாளர்கள் | 86 |
| அலுவலக உதவியாளர்கள் | 21 |
| சாரதிகள் | 08 |
| காவலாளிகள் | 06 |
| சுத்திகரிப்பாளர்கள் | 02 |
| பயிற்சி பெறாத தொழிலாளர்கள் | 20 |
| **மொத்தம்** | **177** |

## 4.2 பொறியியல் பிரிவு – பேராதனை

விவசாயத் திணைக்களத்தின் இலக்குகளை அடைவதற்காக எவ்விதமான காலதாமதமும் இன்றி உடனடியாக தரமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதே பொறியியற் பிரிவின் பிரதான நோக்கமாகும். விவசாயத் திணைக்களத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பொறியியற் பிரிவின் பணிகளை இலகுவாக்க பண்ணை இயந்திர மயமாக்கல் ஆராய்ச்சி நிலையமும், நான்கு பிராந்திய வேலைத்தளங்களும் உள்ளன. பொறியியற் பிரிவின் பிரதான அலுவலகம் பேராதனையில் அமைந்துள்ளதோடு, பண்ணை இயந்திர மயமாக்கல் ஆராய்ச்சி நிலையம் மஹா இலுப்பள்ளமையில் உள்ளது. பொறியியற் பிரிவின் பிரதான பணிகளை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்:

- மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்
    - குடிசார் பொறியியல் நிர்மாணங்கள்
    - இயந்திரங்கள், வாகனங்கள், காரியாலய உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்
- உட்கட்டமைப்பு வசதிகளைப் பராமரித்தல்
    - கட்டிடங்களும், கட்டமைப்புகளும்
    - வாகனங்ககளும், இயந்திரங்களும்
    - அலுவலக உபகரணங்கள்
- பண்ணை இயந்திர மயமாக்கல் ஆராய்ச்சிப் பணிகள்
- ஏனைய சேவைகள்
    - குண்டசாலையில் குடி நீர் விநியோகத் தொகுதியை இயக்குதலும், பராமரித்தலும்
    - விவசாயத் திணைக்களத்தின் அனைத்துப் பிரிவிற்கும் பொறியியல் தொடர்பான ஆலோசனைகளை வழங்கல்
- வாகனத் திருத்துமிடங்கள், சேவை நிலையங்கள், வழங்குநர்கள் ஆகியோரின் பட்டியல்களைத் தயாரித்தல்

இப்பிரிவின் சேவைகளை மேம்படுத்தவும், விரிவுபடுத்தவும் நான்கு இடங்களில் (குண்டசாலை, சீத்தாஎலிய, பொலன்னறுவை, அங்குணகொல பெலஸ்ஸ) பிராந்திய வேலைத்தளங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இவ்வேலைத்தளங்களில் மேற்கொள்ளப்படும் பிரதான பணிகள் வாகனங்களையும், பண்ணை இயந்திரங்களையும் திருத்துவதும், அவற்றைப் பராமரிப்பதும் ஆகும். இத்துடன் குடிசார் பொறியியல் தேவைகளைப் பயனுறுதியாக நிறைவேற்றுவதற்கு வசதியாக மூன்று இடங்களில் பொறியியல் உதவியாளர்களும் கடமையாற்றுகின்றனர்.

## பாதீடு

2013 இல் மூலதனம், மீண்டு வரும் செலவீனம் அகியவற்றிற்கு ஒதுக்கப்பட்ட தொகைகளும், செலவிடப்பட்ட தொகைகளும் அட்டவணை 4.2.1 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.2.1: வருடாந்தப் பாதீடு ~ 2013 (ரூபா)**

| செலவுத் தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு % |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 4,221.000 | 3.366,951 | 80 |
| மீண்டு வரும் செலவு | 10,243,180 | 9,576,077 | 93 |
| **மொத்தம்** | **14,464,180** | **12,943,028** | **89** |

## முன்னேற்றங்கள்

### குடிசார் பொறியியல் வேலைகளின் முன்னேற்றங்கள்

இவ்வருட காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டப் பணிகளை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்:

- இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட புதிய நிர்மாணங்களும், திருத்த வேலைகளும் - இது உத்தேச மதிப்பீடுகளைத் தயாரித்தல், கேள்வி முகாமைத்துவமும், ஒப்பந்தங்களை வழங்கல், வேலைகளை மேற்பார்வை செய்தல், கொடுப்பனவுகளை அனுமதித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- ஏனைய பிரிவுகளினால் பணிகளை மேற்கொள்வதற்காக உத்தேச மதிப்பீடுகளை தயாரித்தல் - மனித வலுவிற்கு, விசேடமாக தொழில்நுட்ப அலுவலர்களின் பற்றாக்குறை நிலவுவதன் காரணமாக பணிப்பாளர்களின் வேண்டுகோளிற்கிணங்க உத்தேச மதிப்பீடுகள் மாத்திரமே பொறியியற் பிரிவினால் தயாரிக்கப்படும்.

2013 இல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட குடிசார் பொறியியற் பணிகளின் விபரங்கள் சாராம்சமாக அட்டவணை 4.2.2 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.2.2: 2013 இல் மேற்கொள்ளப்பட்ட குடிசார் வேலைகளின் சாராம்சம்**

| செயற்பாடு | பெறப்பட்ட வேண்டுகோள்களின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட மொத்தப் பணிகள் |
|---|---|---|
| புதிய நிர்மாணங்கள் | 147 | |
| திருத்தப் பணிகள் | 302 | |
| அனுப்பப்பட்ட மதிப்பீடுகள் | | 233 |
| கோரப்பட்ட கேள்விகள் | | 0 |
| சிறு திருத்த வேலைகளும், பராமரிப்பும் | | 250 |
| தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் | | 339 |

**அட்டவணை 4.2.3: மீளாய்வு செய்யப்படும் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட குடிசார் பொறியியல் வேலைகளின் பெறுமதி (பிரிவுகளின் அடிப்படையில் சாராம்சமாகத் தரப்பட்டுள்ளது)**

| பிரிவு / விபரங்கள் | பணிகளின் எண்ணிக்கை (ரூபா) | வழங்கப்பட்ட பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| நிர்வாகம் | 07 | 6,430,639.10 |
| நிதி | 02 | 540,883.00 |
| நெ.ஆ.அ.நி | 01 | 757,150.00 |
| வி.அ.தா.பா | 13 | 4,852,395.50 |
| விரிவாக்கமும், பயிற்சியும் | 14 | 19,246,734.00 |
| ச.பொ.தி.நி | 04 | 1,295,310.00 |
| பூ.ஆ.அ.நி | 08 | 7,957,165.63 |
| வி.ந.அ.நி | 25 | 27,148,389.95 |
| இ.வ.மு.நி | 02 | 2,564,834.41 |
| வ.ப.ஆ.அ.நி | 01 | 875,532.00 |
| பொறியியல் | 07 | 5,684,840.10 |
| ப.ப.ஆ.அ.நி | 03 | 1,472,175.00 |
| த.தொ.நி | - | 0.00 |
| **மொத்தம்** | **87** | **78,826,048.69** |

## பொறிமுறை, மின்சார பொறியியல் பணிகளின் முன்னேற்றம்

2013 இல் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு:

- **கொள்முதல் வேலைகள்**
    - பழுது பார்த்தல் நிலையங்கள் மற்றும் சேவை நிலையங்களைப் பதிவு செய்தல்
    - வழங்குநர்களைப் பதிவு செய்தல்
- **வாகன திருத்தப் பணிகளும், பராமரிப்பும் 2013**

பொறியியற் பிரிவின் பல்வேறு பிரிவுகளினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் சாராம்சம் அட்டவணை 4.2.3 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.2.3: மேற்கொள்ளப்பட்டத் திருத்தப் பணிகளும், வழங்கப்பட்ட சிபாரிசுகளும்**

| வேலைத்தளத்தின் அமைவிடம் | பெரும் திருத்த வேலைகள் | சிறிய திருத்த வேலைகள் | சிபாரிசுகள் | தொடரும் வேலைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| குண்டசாலை | 06 | 90 | 8 | - | 104 |
| பிரதான அலுவலகம் | 30 | 421 | 451 | 03 | 905 |
| பொலன்னறுவை | 03 | 59 | 88 | - | 150 |
| அங்குணகொலபெலஸ்ஸ | 13 | 130 | 170 | - | 313 |
| சீத்தாஎலிய | 15 | 139 | 140 | 01 | 295 |
| **மொத்தம்** | **67** | **839** | **857** | **04** | **1767** |

- **இயந்திரங்களையும், உபகரணங்களையும் கொள்வனவு செய்தல்**

விவசாயத் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளிற்காக பொறியியற் பிரிவினால் கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களின் மொத்தப் பெறுமதிகள் அட்டவணை 4.2.4 இல் தரப்பட்டுள்ளன

**அட்டவணை 4.2.4: 2013 இல் பொறியியற் பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி**

| பிரிவு | மொத்தம் (ரூபா) |
|---|---|
| பொறியியற் பிரிவு | 741,202 |
| நிர்வாகப் பிரிவு | 924,472 |
| நிதிப் பிரிவு | 1,433,616 |
| விரிவாக்கல், பயிற்சிப் பிரிவு | 4,649,789 |
| சமூகப் பொருளாதார, திட்டமிடல் நிலையம் | 363,310 |
| விதைகள், நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம் | 16,673,949 |
| இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையம் | 1,439,712 |
| பூங்கனியியல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் | 3,692,412 |
| விதை அத்தாட்சிப்படுத்தல் மற்றும் தாவரப் பாதுகாப்பு நிலையம் | 1,285,488 |
| வயற் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் | 7,462,942 |
| நெல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் | 3,392,826 |
| முன்னேற்றக் கண்காணிப்பு, மதிப்பீட்டுப் பிரிவு | 232,072 |
| தகவல், தொடர்பாடல் நிலையம் | 850,894 |
| மேலதிக விவசாயப் பணிப்பாளர் நாயகம் | 510,489 |
| “அஸ்டா” அலுவலகம் | 174,302 |
| தேசிய தாவத் தடுப்புக் காப்புச் சேவை | 343,288 |
| பழப்பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் | 3,327,130 |
| **மொத்தம்** | **39,553,879** |

**அட்டவணை 4.2.5: 2013 இல் கொள்வனவு செய்யப்பட்டப் பொருட்களின் தொகை**

| பொருள் | தொகை |
|---|---|
| மேசைக் கணணி | 47 |
| மடி கணணி | 33 |
| லேசர் அச்சுப்பொறி | 50 |
| புள்ளி அச்சுப்பொறி | 04 |
| திருத்தப்பட்ட கணணிகள் | 74 |
| எண்மான நிழற் படப்பிரதி இயந்திரங்கள் | 20 |
| UPS | 145 |
| எண்மான படக்கருவிகள் | 52 |
| ஊர்வான் (Rider) | 05 |
| சுழல் கலப்பை | 09 |
| விரல் வருடி இயந்திரம் | 15 |
| சங்கிலி வாள் | 33 |
| நடமாடும் ஒலிபெருக்கித் தொகுதி | 01 |
| தோளிற் சுமக்கும் தெளிகருவிகள் | 121 |
| சாலிடல் கலப்பை | 02 |
| சிறு பண்படுத்தி | 04 |
| பல்ஊடக ஒளிப்படக்கருவி | 16 |
| தொலைநகல் இயந்திரம் | 10 |
| எண்மான பிரதிபண்ணி | 05 |
| புல் வெட்டி | 24 |
| நான்கு சக்கர உழவு இயந்திரம் | 08 |
| நீர் இறைக்கும் இயந்திரம் | 05 |
| Tablet PC | 03 |
| வண்ண அச்சுப் பொறி | 04 |
| முட்கலப்பை | 05 |
| விதை, பசளை இடும் கருவி | 02 |
| **மொத்தம்** | **697** |

**அட்டவணை 4.2.6: பொறியியற் பிரிவினால் கையாளப்பட்ட மூலதனப் பணிகளின் மொத்தப் பெறுமதி**

| பணி | பெறுமதி |
|---|---|
| குடிசார்நிர்மாணப் பணிகள் | 78,826,048.69 |
| உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் | 39,553,878.65 |
| டயர்களின் கொள்வனவு | 223,200,00 |
| **மொத்தம்** | **118,379,927.34** |

## குண்டசாலை நீர் விநியோகத் தொகுதி

இத்திட்டத்தில் சுமார் 200,000 கலன் நீர் நாளாந்தம் மஹாவலி நதியிலிருந்து இறைக்கப்படுகின்றது. நீர் இறைக்கும் நிலையம் நாளாந்தம் 18 மணித்தியாலங்கள் வேலை செய்கின்றது. இது சராசரியாக 60Kw மின்வலுவை நுகர்கின்றது. இந் நீர் விவசாயத் திணைக்களத்தின் கீழுள்ள பல்வேறு நிறுவனங்களிற்கும், விவசாயத் திணைக்களம் அல்லாத இடங்களுக்கும் விநியோகிக்கப்படுகின்றது. குளோரினேற்றம் செய்யப்பட்ட நீர் குடி நீராகவும், ஏனைய வீட்டுத் தேவைகளிற்கும் வருடம் முழுவதும் வழங்கப்படுகின்றது. குளோரினேற்றம் செய்யப்படாத நீர் விவசாய பண்ணைக்காக வறட்சியான காலத்தில் தேவைக்கமைய ஏரிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றது.

## ஏனைய சேவைகள்

விவசாயத் திணைக்களத்தின் பல்வேறு நிறுவனங்களிற்கும், நிலையங்களிற்கும், அலகுகளிற்கும் அவசியமான கட்டிட நிர்மாணங்களிற்கும், திருத்த வேலைகளிற்குமான உத்தேச மதிப்பீடுகளைத் தயாரித்தல், பணிகளை மேற்பார்வை செய்தல், வாகனங்கள், உபகரணங்கள், இயந்திரங்கள் ஆகியவற்றைத் திருத்தம் செய்வதற்கான உத்தேச மதிப்பீடுகளை கூர்ந்தாராய்ந்து, சிபாரிசுகளை வழங்கல் ஆகியவற்றை பொறியியற் பிரிவு மேற்கொண்டு வருகின்றது.

## பொறியியற் பிரிவின் அலுவலர்கள்

பயிற்றுவிக்கப்பட்ட தொழில்நுட்ப அலுவலர்களிற கான பற்றாக்குறைவு இப்பிரிவில் காணப்படுவதால் இதன் பணியாற்றும் கொள்ளளவு, பயனுறுதி, செயலாற்றுத்திறன் என்பன மிக அதிகளவிற் பாதிக்கப்பட்டுள்ளன. தொழில்நுட்ப அலுவலர்களிற் கான பதவியணிகளில் பல வெற்றிடங்கள் இப்பிரிவில் காணப்படுகின்றன. இத்தடைகளின் காரணமாக புதிய குடிசார் பொறியியல் வேலைகளையும், குன்டசாலை நீர் விநியோகத் திட்டத்தின் பராமரிப்புகளையும் மேற்கொள்வதில் பெரும் நெருக்கடிகள் காணப்படுகின்றன. தற்போது இப்பிரிவின் குடிசார் பொறியியல் அலகில் பொறியியல் உதவியாளர்கள், கட்டிட மேற்பார்வையாளர்கள், வரைபடக் கலைஞர்கள் ஆகியோர் போதிய எண்ணிக்கையில் இல்லை.

## அலுவலர்களின் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பிரதான பொறியியலாளர் | 01 |
| பொறிமுறை பொறியியலாளர் | 02 |
| குடிசார் பொறியியலாளர் | 02 |
| மின்சாரப் பொறியியலாளர் | 01 |
| பொறியியல் உதவியாளர்கள் | 08 |
| நிர்வாக அலுவலர்கள் | 02 |
| பொது முகாமைத்துவ உதவியாளர்கள் | 13 |
| அபிவிருத்தி அலுவலர்கள் | 05 |
| சாரதிகள் | 06 |
| இயந்திரக் கைவினைஞர்கள் | 18 |
| மின்னியலாளர்கள் | 03 |
| தச்சர்கள் | 02 |
| மேசன் | 02 |
| தொழில்நுட்பவியலாளர்கள் | 07 |
| எந்திரவினைஞர்கள் | 05 |
| களஞ்சிய தொழிலாளர்கள் | 03 |
| காரியாலய அலுவலர் | 01 |
| காவலாளிகள் | 08 |
| தொழிலாளிகள் | 10 |
| **மொத்தம்** | **99** |

## 4.2.1 பண்ணை இயந்திரமயமாக்கல் ஆராய்ச்சி நிலையம் (குஆசஊ)இ மகாஇலுப்பள்ளம

பண்ணை இயந்திரமயமாக்கல் ஆராய்ச்சி நிலையமானது (FMRC) அனுராதபுர நகரில் இருந்து 35km தூரத்தில் அமைந்துள்ள விவசாயக் கூட்டுத் தொகுதியில் அமையப் பெற்றுள்ளது. பண்ணை இயந்திரமயமாக்கலுடன் தொடர்புடைய தொழில் நுட்பங்களை இலங்கையில் அறிமுகப்படுத்துவதன் ஊடாக விவசாயத்தில் உற்பத்திச் செலவைக் குறைத்தல், விவசாய உற்பத்திகளின் அளவை அதிகரித்தல், தரம் மிகுந்த உற்பத்திகளைப் பெறுதல் மற்றும் உற்பத்தித் திறனை விருத்தி செய்தல் போன்றவற்றை நிறைவேற்றும் நோக்குடன் FMRC ஆனது நிறுவப்பட்டுள்ளது.

இலங்கையில் வெவ்வேறு பிரதேசங்களில் நிலவுகின்ற சமூக பொருளாதார மற்றும் கள நிலமைகளுடன் பொருத்தக்கூடிய வினைத்திறனுடைய விவசாய இயந்திர மயமாக்கல் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதே FMRC இன் முக்கிய நோக்கமாகும். FMRC யினால் நிறைவேற்றப்படுகின்ற செயற்பாடுகள் வருமாறு:-

- வேறுபட்ட விவசாயச் சூழல் தொகுதிகளில் நிலவுகின்ற தடைகளுக்கு உகந்த இயந்திரமயமாக்கல் தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் அடையாளங் காணல்
- கட்டமைப்பு, தொழிற்பாடு, பாதுகாப்பு, சமூக மற்றும் பொருளாதார காரணிகளுக்கு ஏற்புடைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைத் தெரிவு செய்தலும் பரிசோதித்தலும்
- உள்ளூர் நிலமைகளுக்குப் பொருத்தமான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் அபிவிருத்தி, மாற்றங்களை ஏற்படுத்துதல் மற்றும் இசைவாக்கம் செய்தல்.
- தெரிவு செய்யப்பட்ட உபகரணங்களுக்கான தொழில்நுட்ப வரைபுகள், பரிசோதனை அறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல் கையேடுகள் ஆகியவற்றின் உருவாக்கம்.
- பொருத்தமான விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உற்பத்தி தொடர்பில் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு தொழில்நுட்பங்களை வழங்குதலும் அவர்களது உற்பத்தித் திறனை அதிகரித்தலும்.
- விவசாய இயந்திரமயமாக்கல் மற்றும் தொழில்நுட்பங்கள் போன்றவற்றை விவசாயிகளிடையேயும் ஏனைய பாவனையாளர்களிடையேயும் பிரபல்யப்படுத் தும் முகமாக விவசாய விரிவாக்கல் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு உதவி புரிதல்.

இந்நிறுவனமானது பின்வரும் பிரிவுகளை உள்ளடக்குகின்றது

1. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு
2. பரிசோதனை மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு
3. விவசாய மற்றும் கைத்தொழில் விரிவாக்கல் பிரிவு
4. பண்ணை இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைப் பிரிவு
5. நிர்வாகப் பிரிவு

## பாதீடு

அட்டவணை 4.2.1.1 இல் 2013 ஆண்டு நிதி ஒதுக்கீடுகள் செலவுகள் தொடர்பான விபரம் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.2.1.1 வருடாந்தப் பாதீடு ~ 2013 (ரூபாய்)**

| செலவுத் தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவுவீதம் |
|---|---|---|---|
| நடைமுறைச் செலவு | 8,160,371 | 7,703,659 | 94 |
| மூலதனச் செலவு | 3,616,000 | 3,537,021 | 98 |
| **மொத்தம்** | **11,776,371** | **11,240,680** | **95** |

## முன்னேற்றம்

### பசளை பிரயோகிப்பானுடன் கூடிய நான்கு சக்கர உழவு இயந்திரத்துடன் பொருத்தப்பட்டுள்ள உட்புகுத்தி நடுகை உபகரணம்

நான்கு சக்கர உழவு இயந்திரத்துடன் பொருத்தப்பட்டுள்ள மேற்படி உட்புகுத்தி நடுகை உபகரணத்துடன் விதைத்தலின் போது பசளையிடக் கூடிய பசளை பிரயோகிக்கும் தொகுதியின் அறிமுகப்படுத்தலானது சோளச் செய்கையில் மனிதவலுத் தேவை, எரிபொருள் செலவு மற்றும் நேரம் ஆகியவற்றைக் குறைப்பதில் கவனம் செலுத்துகின்றது.

### இரண்டு சக்கர இயந்திர சுழல் இணைப்பு விதைகருவி நடை வகை

இரண்டு சக்கர இயந்திரத்துடன் மேற்படி சூழல் விதை கருவியைப் பொருத்துவதன் மூலம் விதையிடல் மற்றும் தூர்வையாக்கல் ஆகிய இரு செயற்பாடுகளையும் ஒருமித்த செய்ய முடியும். அக்கருவியின் அறிமுகமானது மேட்டுநிலப் பயிர்ச் செய்கையில் நேரத்தை மீதப்படுத்துவது மட்டுமன்றி எரிபொருள் மற்றும் மனிதவலுத் தேவை ஆகியவற்றையும் குறைக்கின்றது. சோளம், சோயா, பாசிப்பயறு, உழுந்து மற்றும் கௌபீ ஆகிய பயிர்ச் செய்கையில் பாவிக்க முடியும்.

### இரண்டு சக்கர இயந்திர சுழல் இணைப்பு விதைகருவி. மிதிக்கும் வகை

இரண்டு சக்கர உழவு இயந்திரத்துடன் மேற்படி சுழல் விதை கருவியைப் பொருத்துவதன் மூலம் விதையிடல் மற்றும் தூர்வையாக்கல் ஆகிய இரு செயற்பாடுகளையும் ஒரே நேரத்தில் மேற்கொள்ள முடியும். இக்கருவியின் அறிமுகமானது மேட்டுநிலப் பயிர்ச் செய்கையில் நேரத்தை மீதப்படுத்துவதுடன் எரிபொருள் மற்றும் மனிதவலுத் தேவையும் குறைக்கின்றது.

### நான்கு சக்கர இயந்திர சுழல் இணைப்பு விதைகருவி

நான்கு சக்கர உழவு இயந்திரத்துடன் மேற்படி சுழல் விதை கருவியைப் பொருத்துவதன் மூலம் விதை நடுகை மற்றும் தூர்வையாக்கல் ஆகிய இரு செயற்பாடுகளையும் ஒரே நேரத்தில் மேற்கொள்ள முடியும். இது பெரிய அளவில் செய்கை பண்ணும் விவசாயிகளுக்கு மிகவும் பொருத்தமானது ஆகும். இக்கருவியின் அறிமுகமானது மேட்டுநிலப் பயிர்ச் செய்கையில் நேரத்தை மீதப்படுத்தி எரிபொருள் மற்றும் மனிதவலுத் தேவையும் குறைக்க உதவுகின்றது.

### குரக்கன் சூடடித்தல் மற்றும் கோதகற்றும் இயந்திரம்

குரக்கன் சூடடித்தல் மற்றும் கோதகற்றும் செயற்பாடுகளில் நடைமுறையில் இருக்கின்ற மனித செயன்முறைக்குப் பதிலாக மின் மோட்டாரின் மூலம் இயங்கக்கூடிய சூடடித்தல்

மற்றும் கோதகற்றும் இயந்திரத்தின் அறிமுகமானது நேரம், எரிபொருள் மற்றும் மனிதவலு ஆகியவற்றை மீதப்படுத்த உதவுகின்றது.

### நான்கு சக்கர உழவு இயந்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ள அச்சோட்ட நீர் இறைக்கும் இயந்திரம்

பெரிய அளவில் செய்கை பண்ணும் விவசாயிகளைக் கவனத்திற் கொண்டு தற்போது காணப்படுகின்ற இயந்திரத்தின் வெளியேற்றல் கொள்ளளவை அதிகரித்தல் ஆகும்.

### விவசாய மற்றும் கைத்தொழில் விரிவாக்கம்

2013ஆம் ஆண்டில் இடம் பெற்ற தேசத்திற்கு மகுடம், விவசாயிகள் வாரம் மற்றும் TECNNO - 2013 ஆகியவற்றில் துடிப்புடன் பங்கு பற்றியமை. சோளம் மற்றும் OFC இயந்திரமயமாக்கல் பொதிகள் தொடர்பிலான TV நிகழ்ச்சிகளை ஒளி, ஒலி பரப்பியமை. நெல் மற்றும் சோளச் செய்கை தொடர்பிலான களச் செய்து காட்டல்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப் பட்டமை

**அட்டவணை 4.2.2.2, 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம் பெற்ற விரிவாக்கல் நிகழ்ச்சிகள்**

| நிகழ்ச்சியின் வகை | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை |
|---|---|
| கள செய்து காட்டல்கள் | 28 |
| TV நிகழ்ச்சிகள் | 03 |
| வானொலி நிகழ்ச்சிகள் | 01 |
| கண்காட்சிகள் | 05 |
| உள்ளகப் பயிற்சிகள் | 09 |

### பரிசோதனை மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு

உள்ளூரில் உற்பத்திச் செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட விவசாய இயந்திரங்களைப் பரிசோதித்து மதிப்பீடு செய்கின்ற இலங்கையில் ஒரே ஒரு அரச நிறுவனம் FMRC ஆகும். இந்நிறுவனத்தால் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பரிசோதிக்கப்பட்ட இயந்திரங்களின் விபரம் வருமாறு

**அட்டவணை 4.2.1.3, 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பரிசோதிக்கப்பட்ட இயந்திரங்கள்**

| இயந்திரத்தின் வகை | பெற்றுக் கொள்ளப்பட்ட இயந்திரங்கள் எண்ணிக்கை | பரிசோதனை அறிக்கை வழங்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| நான்கு சக்கர உழவு இயந்திரங்கள் | 4 | 4 |
| இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் | 1 | 1 |
| வலுத் தெளி கருவிகள் | - | 3 |
| கைத் தெளி கருவிகள் | 2 | 1 |
| நடுகை உபகரணம் | 1 | 1 |
| சூடடிக்கும் உபகரணம் | - | 1 |
| இணைந்த அரிவி வெட்டும் கருவி | - | 1 |
| மண்வெட்டி | 1 | 2 |
| முட்கலப்பை | - | 1 |
| சுழல் கலப்பை | 3 | 1 |
| நாற்று நடும் கருவி | 1 | - |
| வலு களை கட்டும் கருவி | 1 | - |
| **மொத்தம்** | **14** | **17** |

### பண்ணை இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பிரிவு

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் சிபாரிசுகள், பழுதுபார்த்தல் மற்றும் சுத்தப்படுத்தி சீர்ப்படுத்தல்கள் இடம் பெற்றன.

**அட்டவணை 4.2.2.4 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம் பழுது பார்த்தல் மற்றும் சுத்தப்படுத்திச் சீராக்கல்கள்**

| செயற்பாடு | எண்ணிக்கை |
|---|---|
| பழுது பார்த்தல்கள் | |
| இயந்திரம் | 06 |
| கீயர் பெட்டி | 08 |
| ஏனையவை | 51 |
| சிபாரிசுகளை | 174 |
| சுத்தப்படுத்தி சீராக்கல் | 18 |

### அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பிரதிப் பணிப்பாளர் | 01 |
| பொறியியல் பொறியியலாளர் | 03 |
| பொதுமுகாமைத்துவ உதவியாளர் | 02 |
| விவசாயப் போதனாசிரியர் | 02 |
| சாரதி | 04 |
| களஞ்சியசாலையாளர் | 01 |
| உழவு இயந்திர இயக்குநர் | 02 |
| வேளைத்தள உதவியாளர் | 01 |
| இயந்திரம் பழுதுபார்ப்பவர் | 03 |
| இயந்திர வல்லுநர் | 03 |
| தொழில்நுட்பவியலாளர் | 04 |
| தகர ஓட்டுநர் | 01 |
| தகட்டுத் தொழிலாளி | 01 |
| கொல்லன் | 01 |
| தச்சன் | 01 |
| காவலாளி | 03 |
| திறனற்ற தொழிலாளி | 07 |
| அமைய ஊழியர் | 29 |
| **மொத்தம்** | **71** |

## 4.3 நிதிப் பிரிவு பேராதனை

நிதிப் பிரிவின் பிரதான நோக்கமாவது விவசாயத் திணைக்களத்தின் நோக்கங்களை அடையும் பொருட்டு வினைத்திறனான நிதி முகாமைத்துவத் தொகுதியினை ஸ்தாபித்த லும் நடைமுறைப்படுத்தலும் ஆகும். நிதிப் பிரிவின் தொழிற்பாடுகளாவன

- வருடாந்த வருமான மற்றும் செலவின மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.
- வங்கிக் கணக்குகளைப் பேணல்
- திணைக்கள, அமைச்சின் கொடுப்பனவுகளை ஒதுக்கீடு செய்தல்.
- திணைக்களத்தின் வருவாயை வசூலித்தலும் கணக்கீடு செய்தலும்
- எல்லா வகையான மூலதன மற்றும் மீண்டுவரும் செலவினங்களை வகுத்தல் இதில் தனிநபர் வருமானம் உள்ளடக்கப் படும்.
- உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- நிதி தொடர்பான முன்னேற்ற அறிக்கை களைத் தயாரித்தலும் மதிப்பீடு செய்தலும்
- உள்ளூர், வெளியூர், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் நிதி நடவடிக்கை களை இணைத்தல்
- வெளிநாட்டுக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்
- பண்ணை முற்பணக் கணக்கீட்டு நடவடிக்கைகளை அமுல்ப்படுத்தல்
- இறுதிக் கணக்கினை ஒதுக்கீடு மற்றும் வருமானக் கணக்கு உள்ளடங்கலாகத் தயாரித்தல்
- வருடாந்த பொருட் கணக்கீட்டு ஆய்வுகளை மேற்கொள்ளல்
- தொழிலாளர்களுக்கான கடன் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்
- கணினிப் பிரயோகம், நிதி முகாமைத்துவம் மற்றும் களஞ்சிய முகாமைத்துவம் சம்பந்தமாகப் பயிற்சி வழங்கல்

## முன்னேற்றம்

### மூலதனச் செலவினம்

**அட்டணை 4:3:1: 2013ம் ஆண்டு காலப்பகுதிக்குரிய மூலதனச் செலவீனம்**

| செயற் திட்டம் | செயற்திட்ட விபரணம் | மீள்பரீசிலிக்கப் பட்ட மதிப்பீடு (ரூபா.மில்) | செலவு (ரூபா.மில்) | முன்னேற்ற ம் % |
|---|---|---|---|---|
| 285-1-1 | நிர்வாகமும் ஸ்தாபிப்பு சேவையும் | 34.460 | 27.897 | 81 |
| 285-2-2 | விவசாய ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் | 466.638 | 334.569 | 72 |
| 285-2-3 | விவசாய விரிவாக்கமும் பயிற்சியும் | 321.462 | 225.393 | 70 |
| 285-2-4 | விதை அத்தாட்சிப்படுத்தலும் பயிர்ப்பாதுகாப்பும | 710.000 | 555.617 | 78 |
| | **மொத்தம்** | **1,532.560** | **1,143.476** | **75** |

2013ம் ஆண்டில் மூலதன செயற்திட்டத்தில் எதிர்ப்பார்க்கப்பட்ட நிதி முன்னேற்றம் எய்தப்படவில்லை. காரணம் கட்டு நிதியின் பற்றாக்குறை ஆகும்.

### மீண்டுவரும் செலவீனம்

**அட்டவணை 4.3.2: 2013ம் ஆண்ல் மீண்டுவரும் செலவீனம்**

| செயற்திட்டம் | செயற்திட்ட விபரணம் | மீள்பரிசீலிக்கப்பட்ட மதிப்பீடு (ரூபா.மில்) | செலவு (ரூபா.மில்) | முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| 285-1-1 | நிர்வாகமும் ஸ்தாபிப்பு சேவையும் | 290.149 | 289.825 | 99 |
| 285-2-2 | விவசாய ஆராச்சியும் அபிவிருத்தியும் | 854.602 | 854.371 | 99 |
| 285-2-3 | விவசாய விரிவாக்கமும் பயிற்சியும் | 626.914 | 626.338 | 99 |
| 285-2-4 | விதை அத்தாட்சிப்படுத் தலும் பயிர்ப் பாதுகாப்பும் | 496.040 | 495.643 | 99 |
| | **மொத்தம்** | **2,267.704** | **2,266.176** | **99** |

## முற்பணக் கணக்கின் தொழிற்பாடுகளை கையாள்தல்

**அட்டவணை 4.3.3: 2013ம் ஆண்டிற்கான முற்பணக் கணக்கின் தொழிற்பாடுகள்**

| விபரம் | அனுமதியளிக்கும் எல்லை மீள் பரிசீலிக்கப்பட்டது (ரூபா.மில்) | சரியான தொகை (ரூபா.மில்) |
|---|---|---|
| **1. விவசாயப் பண்ணையைப் பராமரித்தல்** | | |
| அதிகூடிய செலவு எல்லை | 416.000 | 413.170 |
| அதிகுறைந்த வருமான எல்லை | 416.000 | 422.781 |
| **2. பொதுச் சேவையாளர்களின் முன்னேற்றக் கணக்கு** | | |
| அதிகூடிய செலவு எல்லை | 185.000 | 110.691 |
| குறைந்த வருமான எல்லை | 135.000 | 159.005 |

2013ல் கணக்காய்வாளர் நாயகத்தினால் 2012ம் ஆண்டிற்குரிய கணக்குகள் அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் கணக்காள்வாளர் நாயகம் தனது கருத்தினை பண்ணை முற்பணக் கணக்கு சார்பாக முன்வைத்துள்ளார். 28502 விவசாயத் திணைக்களத்தின் 31.12.2013 முற்பணக் கணக்கு நடவடிக்கைகளின் நிதி நிலவரமானது பின்வருமாறு அமைந்தது. நிதிக்கூற்றின் பிரகாரம் அவ்வருடத்திற்கான நிதி நடவடிக்கைகள் 31.12.2012ல் முடிவுறுத்தப்படும். இதனை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையிலும் காணப்பிக்க முடியும். விதிவிலக்காக 2.2" பந்தியில் கூறப்பட்டவாறும் அமையும். இது விவசாயத் திணைக்களத்தின் எந்தவொரு முற்பணக் கணக்கு நடவடிக்கையில் எப்போதும் பெற்றுக் கொள்ளப்படுவதொன்றாகும்.

அத்துடன் கணக்காய்வாளர் நாயகம் பின்வரும் அவதானிப்புகளையும் முன்வைத்தார். அதாவது விவசாயத் திணைக்களத்தின் வருமானம் மற்றும் பொருத்தப்பாடு சார்பாகவும் கவனம் செலுத்தி யுள்ளார். இதன் பிரகாரம் திணைக்களத்தின் வருமானக் கணக்கு மற்றும் பொருத்தப்பாட்டுக் கணக்கு இரண்டு மேற்பட்ட திட்டங்களைக் கொண்ட கூற்று என்பன 31.12.2012ல் உள்ளவாறான நிதிப் பதிவேடுகள், புத்தகங்கள் என்பவற்றிற்கமைய தயாரிக்கப் பட்டது. விதிவிலக்காக பொதுவான அவதானிப்படிவம் (a) தொடக்கம் (g) வரை உள்ளதும் பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களும் உள்ளடக்கப்படவில்லை

முதலாவது தடவையாக விவசாயத் திணைக்களம் சிறந்த அவதானிப்பை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சேகரிக்கப்பட்ட வருவாய்

**அட்டவணை 4.3.4: 2013ம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருவாய்**

| வருவாய் தலைப்பு | வகை | உண்மையான பெறுகைகள் (மில்லியன் ரூபா) |
|---|---|---|
| 20-02-02-99 | கடனுக்கான வட்டி | 13.928 |
| 20-03-99-00 | ஏனைய பெறுகைகள் | 99.454 |
| 20-02-01-01 | வாடகையும் ஏனையவையும் | 19.295 |
| 20-03-02-18 | திணைக்கள விற்பனையும் ஏனைய கட்டணங்களும் | 181.639 |
| 20-04-01-00 | விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டம் (W & O.) | 62.422 |
| 20-06-02-00 | மூலதன பொறுப்புக்களின் விற்பனை | 8.123 |
| **மொத்தம்** | | **344.861** |

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக் கை |
|---|---|
| பிரதம கணக்காளர் | 01 |
| பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | 01 |
| பிரதிப் பணிப்பாளர் (நிதி) | 03 |
| உதவிப் பணிப்பாளர் (நிதி) | 04 |
| பாதீட்டு உதவியாளர் | 02 |
| மொழி பெயர்ப்பாளர் | 01 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 20 |
| முகாமைத்துவ உதவியாளர் | 87 |
| K.K.S | 13 |
| சாரதிகள் | 05 |
| திறனற்ற ஊழியர் | 10 |
| **மொத்தம்** | **147** |

## 4.4 முன்னேற்றக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலகு (PMEU), பேராதனை

PMEU ன் பிரதான பொறுப்பு யாதெனில் விவசாயத் திணைக்களத்தின் கீழ் உள்வாங்கப்படும் அனைத்து நிறுவனங்களினதும் நிலையங்களினதும் செயற்பாடுகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கண்காணித்து மதிப்பீடு செய்வததாகும். பொறுப்பாகவுள்ளது. இதற்கு மேலதிகமாக வருடாந்த செயலாற்றல் அறிக்கையைத் தயார் செய்தல், வருடாந்த நிறைவேற்று அறிக்கையைத் தயார் செய்தல், மாதாந்த முன்னேற்ற அறிக்கையைத் தயார் செய்தல், மற்றும் ஏனைய தொடர்புடைய அறிக்கைகளைத் தயார் செய்து விவசாய அமைச்சிற்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் வழங்குவதற்குப் பொறுப்பாகவுள்ளது. முன்னேற்ற வெளிப்பாட்டுக் கூட்டங்கள் PMEU னாலேயே ஒழுங்கு செய்யப்படுகின்றன. இதனால் விவசாயத் திணைக்களத்தின் தொழிற்பாடுகளை ஓர் ஒழுங்கு முறையில் கொண்டு நடத்தக்கூடியதாகவுள்ளது.

### பாதீடு

**அட்டவணை 4.4.1: வருடாந்தப் பாதீடு – 2013 (ரூபா)**

| செலவுத் தலைப்பு | ஒதுக்கீடு | செலவு | செலவு% |
|---|---|---|---|
| மூலதன செலவு | 1,850,000 | 922,783 | 50 |
| மீண்டுவரும் செலவு | 1,934,150 | 1,679,406 | 87 |
| **மொத்தம்** | **3,784,150** | **2,602,189** | **69** |

### முன்னேற்றம்

#### செயல் திட்டங்களின் தொகுப்பு

2013ம் ஆண்டிற்கான செயல்திட்டம் பின்வரும் தலைப்புகளின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது.

- மூலதனச் செலவு
- மீண்டு வரும் செலவீனம்
- விவசாயத் திணைக்களத்தினூடாக முதலீடு செய்யப்படும் விசேட கருத்திட்டங்கள்
- விவசாய அமைச்சினூடாக முதலீடு செய்யப்படும் விசேட கருத்திட்டங்கள்
- விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டங்கள்
- விவசாயத் திணைக்களத்தின் கேள்வி கோரல் திட்டம்.

#### மூலதனம் மற்றும் மீண்டுவரும் செலவின முன்னேற்றக் கண்காணிப்பு

2013ம் ஆண்டில் மூலதன மற்றும் மீண்டுவரும் செலவினத்திற்குரிய நிதி முன்னேற்றம் மற்றும் பௌதிக முன்னேற்றம் கண்காணிக்கப்பட்டது. மாதாந்த முன்னேற்ற அறிக்கையானது மூலதன மற்றும் மீண்டுவரும் செலவினத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு விவசாய அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.4.2: 2013ம் ஆண்டில் விவசாயத் திணைக்களத்தின் முன்னேற்ற அறிக்கைச் சுருக்கம்**

| செலவுத் தலைப்பு | ஒதுக்கீடு (மில். ரூபா) | செலவு (மில்.. ரூபா) | செலவு% |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | 550 | 374 | 68 |
| மீண்டுவரும் செலவு | 2267 | 2266 | 100 |
| விவசாயத் திணைக்களத்தின் கீழ் உள்ளடக்கப்படும் கருத்திட்டங்கள் | 982 | 796 | 81 |
| விவசாய அமைச்சின் கீழ் உள்ள கருத்திட்டம் | 81 | 65 | 79 |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் | 97 | 92 | 95 |
| சுற்றாடல் மற்றும் சக்திவள அமைச்சின் கீழ் | 0.069 | 0.058 | 84 |
| **மொத்தம்** | **3977** | **3593** | **90** |

## விஷேட திட்டங்களுக்கான முன்னேற்றக் கண்காணிப்பு

### விவசாயத் திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் கீழான விஷேட திட்டங்கள்

விவசாயத் திணைக்களத்தின் செலவுத் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்படும் 14 விஷேட கருத்திட்டங்கள் கண்காணிக்கப்படுவதுடன் மாதாந்த அறிக்கைகள் அதாவது பௌதிக மற்றும் நிதி முன்னேற்றம் உள்ளடங்கலாக தயாரித்து விவசாய அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அட்டவணை இல 4.4.3. விசேட திட்டங்களின் நிதி முன்னேற்ற அறிக்கை தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.4.3: 2013 ல் விவசாயத் திணைக்கள செலவினத் தலைப்பின் கீழ் உள்ளடக்கப்பட்ட விசேட திட்டங்களின் முன்னேற்றம் (மில்லியன் ரூபாய்)**

| கருத்திட்டம் | நிறுவனம் | நிதி ஒதுக்கு | மீளமைக் கப்பட்ட ஒதுக்கீடு | செலவு | செலவு% |
|---|---|---|---|---|---|
| 1. விதையுற்பத்தியும் கொள்வனவும் திட்டம் | SPMDC | 250.00 | 297.99 | 223.31 | 75 |
| 2. விதையுற்பத்திப் பண்ணைகளின் துரித அபிவிருத்தி திட்டம் | SPMDC | 200.00 | 157.01 | 96.57 | 62 |
| 3. உட்கட்டமைப்பு அபிவிருத்தி | RRDI/ | 75.00 | 72.94 | 54.28 | 74 |
| 4. புதிய கலப்பினங்களினதும் திறந்த மகரந்தச் சேர்க்கையடையும் மறுவயற்பயிர்களினது அபிவிருத்தி | FCRDI/MI | 100.00 | 85.80 | 44.24 | 52 |
| 5. 100 பழ உற்பத்திக் கிராமங்களை நிறுவுதல் | FCRDC | 30.00 | 30.00 | 29.76 | 99 |
| 6. இழைய வளர்ப்பு மூலம் முக்கியமான தாவரங்களின் தரமான நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தல் | HORDI/ | 30.00 | 30.00 | 29.17 | 97 |
| 7. பிரபல்யமான பாரம்பரிய மரக்கறி வித்துக்களின் கிடைக்கும் தன்மையை அதிகரித்தல் | HORDI/ | 05.00 | 5.00 | 4.38 | 88 |
| 8. மண் பாதுகாப்புச் சட்டத்தினை அமுல்ப்படுத்தல் | NRMC | 14.00 | 14.00 | 6.99 | 50 |
| 9. விதைச் சட்டத்தினை அமுப்படுத்துவதன் மூலம் தரமான விதை மற்றும் நடுகைப் பொருட்களை ஸ்தாபித்தல் | SCPPC/ SCS | 20.00 | 20.00 | 16.80 | 84 |
| 10. விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையினை உறுதிப்படுத்தல் | SCPPC/ SCS | 100.00 | 100.00 | 91.99 | 92 |
| 11. விவசாய இரசாயனங்களால் சூழலுக்கு மனிதனுக்கும் ஏற்படும் பாதகமான விளைவுகளைக் குறைத்தல் | SCPPC | 40.00 | 40.00 | 0.82 | 2 |
| 12. ஊடக நிகழ்ச்சிகள் | ICC | 20.00 | 20.00 | 19.08 | 95 |
| 13. SOA ல் நில அபிவிருத்தி | DOA | 61.00 | 61.31 | 44.58 | 73 |
| 14. பயிற்சியும் கொள்ளளவு விருத்தியும் | ETC/ICC | 20.06 | 27.77 | 26.79 | 96 |
| 15. ஆய்வுகூட நிர்மாணம் | FMRC-MI | 5.00 | 5.00 | 0.11 | 2 |
| 16. NARP திட்டங்கள் | DOA | 60.00 | 54.45 | 49.45 | 91 |
| 17. பண்டாரவலவில் ஆராய்ச்சி அலுவலகமும் ஆய்வுகூடமும் | HORDI | 25.00 | 25.00 | 0 | 0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 18. | விவசாய தொழில்நுட்பவியல் பூங்கா | ICC | 4.50 | 4.50 | 4.17 | 93 |
| 19. | கட்புல, செவிப்புல நிலையத்திற்குரிய புதிய கட்டட நிர்மாணம் | ICC | 125.00 | 125.00 | 106.60 | 85 |
| 20. | பல்வெகர விவசாயப் பாடசாலைக்கான புதிய விடுதி நிர்மாணம் | ETC | 50.00 | 50.00 | 0 | 0 |
| 21. | விவசாயப் பாடசாலைகளின் அபிவிருத்தி | ETC | 100.00 | 2.06 | 2.06 | 100 |
| 22. | சிறிய அளவிலான திட்டங்கள் | DOA | 10.00 | 22.85 | 22.85 | 100 |
| | **மொத்தம்** | | **1,345.10** | **1,250.68** | **874** | **70** |

### அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படும் விஷேட கருத்திட்டங்கள்

விவசாயத் திணைக்களமானது விவசாய அமைச்சு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கக்கூடிய சக்தி அமைச்சிடமிருந்தும் வெவ்வேறு திடடங்களுக்கு நிதியைப் பெற்றுக் கொள்கிறது. இத்திட்டங்களின் நிதி முன்னேற்றமானது முறையே அட்டவணை 4.4.4, 4.4.5, 4.4.6 ல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.4.4: விவசாய அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படும் விசேட திட்டங்களின் முன்னேற்றம்**

| கருத்திட்டம் | நிதி ஒதுக்கு மில் ரூபா. | செலவு மில் ரூபா | செலவு% |
|---|---|---|---|
| 1. தயகமவிலுள்ள மகிந்த ராஜபக்ச விளையாட்டரங்கில் சூழல் நேய சூழற்றொகுதியினை அபிவிருத்தி செய்தல் | 10.00 | 4.70 | 47 |
| 2. சிறிய வெங்காய உற்பத்தியில் கள ஒருங்கிணைப்பிற்கான செலவு | 0.10 | 0.09 | 99 |
| 3. 2013ல் விசேட அபிவிருத்தித் திட்டம் | 0.05 | 0.05 | 100 |
| 4. இரண்டு நாட்கள் பருவகாலக் கூட்டம் - மே 2013 | 0.29 | 0 | 0 |
| 5. வீரப்பன்ன பண்ணையிலிருந்து பெற்ற பழப் பயிர்களுக்குரிய பணக் கொடுப்பனவு | 0.01 | 0 | 0 |
| 6. காலியில் இளம் விவசாய முயற்சியாளர்களுக்கான நிகழ்ச்சி | 0.10 | 0.10 | 100 |
| 7. தேசத்திற்கு மகுடம் - 2013ல் நில அபிவிருத்தி | 17.00 | 16.99 | 100 |
| 8. இன்கிரியாவில் முதிய குடிமக்களுக்கான பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சி | 0.80 | 0.44 | 56 |
| 9. உருளைக்கிழங்கு நுகர்வினை அதிகரிக்கும் நிகழ்ச்சித்திட்டம் | 19.50 | 18.35 | 94 |

| | | | |
|---|---|---|---|
| 10. 2013 தேசத்திற்கு மகுடம் - பழப்பயிர் உற்பத்தியினை விருத்தி செய்தலும் அபிவிருத்தியும் | 0.50 | 0.49 | 99 |
| 11. 2013 தேசத்திற்கு மகுடம் இலைமரக்கறிகள் மற்றும் வேர்க் கிழங்குகளின் உற்பத்தி | 0.55 | 0.37 | 68 |
| 12. தேசத்திற்கு மகுடம் 2013ல் மாக்கந்துறை பிராந்திய விவசாய ஆராய்ச்சி | 1.12 | 0 | 0 |
| 13. தேசத்திற்கு மகுடம் 2014 மாகாண இடைப் பிரதேசம் - அனுராதபுரம் | 0.28 | 0 | 0 |
| 14. 2014 தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சியில் நில அபிவிருத்தி | 5.00 | 4.49 | 90 |
| 15. சேதனப் பசளை உற்பத்தியும் பாவனையும் | 5.95 | 5.38 | 90 |
| 16. தகவல் சேகரிப்பும் மாதிரிப் படிவங்களின் அச்சுப் பதிப்பும் | 1.90 | 1.87 | 99 |
| 17. சின்ன வெங்காய விதையுற்பத்தி | 5.00 | 4.95 | 99 |
| 18. அரிசி ஏற்றுமதித் திட்டம் | 5.13 | 0.62 | 12 |
| 19. பரந்தன், முருங்கனில் விதையுற்பத்திப் பண்ணைத் திட்டம் | 6.92 | 5.08 | 73 |
| 20. பரந்தன், முருங்கனில் விதையுற்பத்திப் பண்ணைத் திட்டம் | 1.05 | 0.51 | 48 |
| 21. அலுவலர்களுக்கான கண்காய்வு மற்றும் நிதி சம்பந்தமான விழிப்புணர்வுத் திட்டம் | 0.07 | 0.02 | 31 |
| **மொத்தம்** | **81.30** | **64.51** | **79** |

**அட்டவணை 4.4.5: பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழான விசேட திட்டங்களின் முன்னேற்றம்**

| கருத்திட்டம் | ஒதுக்கீடு மில் ரூபா. | செலவு மில் ரூபா | செலவு% |
|---|---|---|---|
| 1. திவிநெகும திட்டத்தின் கீழ் பயிலுனர்களுக்கான விவசாயம் சார்ந்த விழிப்புணர்வு திட்டம் | 0.099 | 0.099 | 100 |
| 2. நிதி அமைச்சின் அலுவலர்களுக்கு கட்டை முருங்கை கன்றுகளின் விநியோகம் | 0.112 | 0.112 | 100 |
| 3. திவிநெகுமத் திட்டத்தில் அவத்தை 05ல் கட்டை முருங்கை கன்றுகளின் விநியோகம் | 97.326 | 92.418 | 95 |
| 4. 2012ம் ஆண்டிற்கான பற்றுச்சீட்டுக்களுக்குரிய கொடுப்பனவு | 0.083 | 0.082 | 99 |
| **மொத்தம்** | **97.620** | **97.711** | **95** |

**அட்டவணை 4.4.6: சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கக்கூடிய வளங்கள் அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழுள்ள விசேட திட்டங்களின் முன்னேற்றம்**

| கருத்திட்டம் | ஒதுக்கீடு மில் ரூபா. | செலவு மில் ரூபா | செலவு% |
|---|---|---|---|
| 1. பீடைநாசினிகளின் பாவனையின் பின்னர் அதனை அகற்றுவது சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்ச்சியினை பொலீசாருக்கு வழங்கல் | 0.069 | 0.058 | 84 |

## விவசாயத் திணைக்களத்தின் அடைவுகள் (Achievements)

2013ம் ஆண்டில் விவசாயத் திணைக்களத்தின் அடைவுகள் சம்பந்தமான தொகுப்புக்கள் விவசாய அமைச்சிற்கும் மத்திய வங்கிக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இம்முன்னேற்ற அறிக்கை யானது பாதீட்டு உரைக்கான முன்னோடியாக இருப்பதுடன் மத்திய ஆண்டறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டது.

## வருடாந்த செயலாற்றல் அறிக்கை

விவசாயத் திணைக்களத்தின் 2012 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயற்திறன் மதிப்பீட்டறிக்கையானது தயார் செய்யப்பட்டு பாராளுமன்றம், தொடர்புடைய அமைச்சுக்கள், பல்கலைக்கழங்கள், நூலகங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

## ஏனைய அறிக்கைகள்

“மஹிந்த சிந்தனையின் கீழ் உள்ளடக்கப்படும் செயற்பாடுகளுக்குரிய முன்னேற்ற அறிக்கைகளினதும் செயற்திட்டங்களுக்குமான மதிப்பீடு செய்யப்பட்ட தொகையானது 50 மில்லியன் ரூபாவை விஞ்சியிருந்தபடியால் இவை விவசாய அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## மனித வள கிடைப்பனவு

இவ்வலகின் வேலைத்திட்டத்தினை முன்னெடுப்பதற்கு திரு H.M ரணதுங்க பண்டார முதுநிலை விரிவுரையாளர் இவ்வலகின் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இவ்வருடத்தினுள் மூன்று அபிவிருத்தி அலுவலர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். ஒரு நிகழ்ச்சித்திட்ட உதவியாளரும் ஒரு அபிவிருத்தி அலுவலரும் நிதிப்பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## 2014ம் ஆண்டிற்கான திட்டம்

- விவசாயத் திணைக்களத்தின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான செயற்திட்டம் தயார் செய்தல்
- விசேட திட்டங்களுக்கான மூலதன, மீண்டுவரும் செலவினத்திற்கான முன்னேற்ற த்தினை கண்காணித்தல்.
- மாதாந்த பௌதிக மற்றும் நிதி சம்பந்தமான முன்னேற்ற வெளிக்கொணர்வுக் கூட்டங் களை நடாத்தல்
- விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையினைத் தொகுத்தல்.
- மத்திய வங்கி ஆண்டறிக்கைக்கும் பாதீட்டு உரையாடலுக்குமான தகவல்களை வழங்குதல்.
- 50 மில்லியன் ரூபாய்களுக்கு அதிகமான நிகழ்ச்சித் திட்டங்களுக்கான முன்னேற்ற அறிக்கைகளைத் தொகுத்தல்

## அலுவலர் பட்டியல்

| பதவி | எண்ணிக்கை |
|---|---|
| பிரதிப்பணிப்பாளர் | 02 |
| மொழி பெயர்ப்பாளர் | 02 |
| நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | 02 |
| விவசாயப் போதனாசிரியர் | 01 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 03 |
| முகாமைத்துவ உதவியாளர் | 02 |
| சாரதி | 03 |
| K.K.S | 01 |
| ஊழியர்கள் | 03 |
| காவலாளி | 02 |
| **மொத்தம்** | **18** |

# 5.காலநிலை அறிக்கை

இலங்கையின் பல்வேறு விவசாயச் சுற்றாடல் வலயங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 12 விவசாய - வானிலை அவதான நிலையங்க ளிலிருந்து 2012/2013 கால போகத்திலும் (செப்ரெம்பர் - பெப்ரவரி), 2013 சிறு போகத்திலும் (மார்ச் - ஆகஸ்ட்) சேகரிக்கப்பட்ட வானிலைத் தரவுகள் இந்த அறிக்கையில் சாராம்சமாகத் தரப்பட்டுள்ளன. விவசாயத் திணைக்களத்தின், இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலைய காலநிலையியற் பிரிவினால் இவ்வறிக்கை தொகுக்கப்பட்டது.

இரண்டு போகங்களினதும் மொத்த மழை வீழ்ச்சி அட்டவணை 5.1 இல் தரப்பட்டுள்ளது. 12 நிலையங்களிற்குமான மாதாந்த மழைவீழ்ச்சி, 10 வருட காலத்திற்கான சராசரி மழை வீழ்ச்சி, என்பன முறையே அட்டவணை 5.2, 5.3 என்பனவற்றிற் தரப்பட்டுள்ளன. ஏனைய முக்கிய விவசாய - வானிலை நியமங்களான அழுத்த ஆவி ஆவியுயிர்ப்பு (திறந்த ஆவியாதற் தட்டிலிருந்து மதிப்பிடப்பட்டது), வெப்பநிலை, சாரீரப்பதன், பிரகாசமான சூரிய வெளிச்சம் கிடைத்த மணித்தியாலங்கள், காற்றின் வேகம் என்பன முறையே அட்டவணைகள் 5.4, 5.5. 5.6, 5.7, 5.8 ஆகியனவற்றிற் தரப்பட்டுள்ளன.

பொதுவாக நாட்டின் அனைத்துப் பிராந்தியங்களிலும் 2012/2013 கால போக மழை வீழ்ச்சி எதிர்பார்த்ததை விட அதிகமாகவே காணப்பட்டது. இம்மழை வீழ்ச்சி பருவ காலம் முழுவதும் பரந்து காணப்பட்டது. 2013 சிறு போக மழை வீழ்ச்சியானது வழமையான போக்கினை அண்மித்துக் காணப்பட்டது.

## தாழ்நாட்டு ஈரவலயம்

### பேராதனை (WL1b)

இப்பிராந்தியத்தின் நீண்ட கால சராசரியான 1,542 மி.மீ மழைவீழ்ச்சியுடன் ஒப்படும் போது 2012 / 2013 கால போகத்தின் போது இப்பிரதேசத்தின் மொத்த மழை வீழ்ச்சியில் 14% அதிகரிப்பு ஏற்பட்டது. நவம்பர், ஜனவரி மாதங்களைத் தவிர இப்பருவத்தின் ஏனைய மாதங்களில் அதிகளவான மழை பெய்தமையே இதற்கான காரணமாகும். ஜனவரி தவிர்ந்த ஏனைய மாதங்களில் குறிப்பிட்ட மாதங்களின் மாதாந்த மொத்த அழுத்த ஆவி ஆவியுயிர்ப்புப் பெறுமானங்களை விட மழை வீழ்ச்சி அதிகமானதாகவே காணப்பட்டது.

2013 சிறுபோகத்தின் போது பதிவு செய்யப்பட்ட எதிர்மறையான இயல்பு திறண் பருவ மழைவீழ்ச்சி 9% மாத்திரமேயாகும். இது பிரதானமாக ஏப்ரல், ஆகஸ்ட் மாதங்களில் அம்மாதங்களின் நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் போது குறைவான மழை பெய்தமையால் ஏற்பட்டது. இதன் விளைவாக ஆகஸ்ட் மாதத்தின் அழுத்த ஆவி மொத்த ஆவியுயிர்ப்பு மாதத்தின் மொத்த மழை வீழ்ச்சியை விட அதிகமானதாகக் காணப்பட்டது. எனினும் இப்பருவகாலத்தின் ஏனைய மாதங்களில் மொத்த அழுத்த ஆவி ஆவியுயிர்ப்பு அவ்வவ் மாதங்களின் மொத்த மழை வீழ்ச்சியை விட அதிகளவில் குறைவாகவேக் காணப்பட்டது. எனவே இப்பிராந்தியத்தில் செய்கை பண்ணிய மேட்டு நிலப் பயிர்களிற்கு குறைந்தளவான நீர் பற்றாக்குறைவே ஏற்பட்டது.

## மத்திய நாட்டு ஈரவலயம்

### பேராதனை (WM2b)

2012 / 2013 காலபோகத்தின் மொத்த மழைவீழ்ச்சி சுமார் 1,848 மி.மீ ஆகும். இது நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் போது 80 வீத அதிகரிப்பாகும். இந்த சாதகமான இயல்புப் பிறழ்வுப் போக்கிற்கான காரணம் செப்ரெம்பர், நவம்பர் மாதங்களைத் தவிர போகத்தின் ஏனைய அனைத்து மாதங்களிலும் வழமையை விட அதிகளவான மழை பெய்தமையே ஆகும். வழமையாக உலர் மாதங்களாக விளங்கும் ஜனவரி, பெப்ரவரியில் வழமையை விட 150

வீதம் அதிகளவான மழை பெய்தது. இதன் விளைவாக அறுவடைக்குப் பிந்திய இழப்புகள் அதிகரித்து, பயிர்களில் அதிகளவான விளைச்சல் இழப்பு ஏற்பட்டிருக்கலாம். இந்நிலைமை இப்பிராந்தியத்தில் பூக்கள் உருவாவதை இல்லாமற் செய்திருக்கலாம்.

மே முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் வழமையை விட அதிகளவான மழை பெய்தமையால் 2013 சிறுபோகத்தில் நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் போது 37% அதிகளவான மழை பெய்தது. பருவங்களிற்கு இடைப்பட்ட முதலாவது பருவ காலத்தில் நீண்ட கால சராசரியை விட குறைவான மழை பெய்த போதிலும் கூட, இக்காலப் பகுதியில் பெய்த மழை அழுத்த ஆவி ஆவியுயிர்ப்புத் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானதாயிருந்தது. கடந்த கால காலநிலைப் பதிவுகளை மேலோட்டமாக ஆராய்ந்த போது கடந்த இரண்டு வருடங்களிலும் சிறுபோகம் விவசாய அடிப்படையில் உலர்வாகக் காணப்பட்டது. எனவே நன்கு ஸ்தாபிக்கப்பட்ட தென் மேல் பருவப் பெயர்ச்சிக் காற்று வீசியமையால் 2013 சிறு போகத்தில் இப்பிராந்தியத்தில் வழமையான காலநிலைப் போக்குக் காணப்பட்டது. இப்போகத்தில் ஒவ்வொரு மாதத்திலும் பெறப்பட்ட மழைவீழ்ச்சி அழுத்த ஆவி ஆவியுயிப்பினை விட அதிகமானதாகவேக் காணப்பட்டது.

## மலை நாட்டு ஈரவலயம்

### சீத்தா எலிய ($WU_3$)

2012 / 2013 காலபோகத்தின் போது இப்பிராந்தியத்தின் பருவ கால திறண் மழை வீழ்ச்சி சுமார் 1,590 mm ஆகும். இது அதன் நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் போது சுமார் 42% அதிகமானதாகும். இதற்கு மத்திய மலைநாட்டில் ஒக்ரோபர் முதல் பெப்ரவரி வரையான காலப்பகுதியில் வழமையை விட அதிகளவான மழை பெய்தமையே காரணமாகும். பெப்ரவரியில் மொத்த மாதாந்த மழை வீழ்ச்சி அதன் நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் போது 200% அதிகமானதாகும். போகத்தின் ஒவ்வொரு மாதத்திலும் பெய்த மழையை விட அழுத்த ஆவி ஆவியுயிர்ப்பு கால போகத்தில் குறைவாகவே காணப்பட்டது. இப்பருவத்தின் போது நிலவிய உயர் வெப்பநிலை $15^0$c செ.கி தொடக்கம் $23^0$c வரையான வீச்சிற் காணப்பட்டது. இதேவேளை இழிவு வெப்பநிலை $6^0$c செ.கி முதல் $15^0$c வரையான வீச்சிற் காணப்பட்டது.

சிறு போகத்தில் $WU_3$ இப்பிராந்தியத்தில் 1,279 mm மழை பெய்தது. இது நீண்ட கால சராசரியை விட 64% அதிகரிப்பாகும். போகத்தின் ஒவ்வொரு மாதத்திலும் விசேடமாக ஜுன் முதல் ஆகஸ்ட் வரையான காலப் பகுதியில் தென் மேல் பருவப் பெயர்ச்சிக் காற்றின் அளவிற்கதிகமான செயற்பாட்டினால் சராசரியை விட அதிகளவான மழை பெய்தமையே இச்சாதகமான இயல்புப் பிறழ்விற்கான காரணமாகும். ஒவ்வொரு போகத்திலும் பெய்த மழை வீழ்ச்சி குறிப்பிட்ட மாதத்தின் வாய்ப்பான ஆவியாதலை விட அதிகமானதாவேக் காணப்பட்டது. இப்பருவ காலத்தின் உயர் வெப்பநிலை $16^0$c முதல் $24^0$c செ.கி வரையான வீச்சிற் காணப்பட்டதோடு, இழிவு வெப்பநிலை $7^0$c முதல் $15^0$c செ.கி வரையான வீச்சிற் காணப்பட்டது.

## தாழ் நாட்டு இடை வலயம்

### பத்தலகொடை ($IL_{1a}$)

2012 / 2013 காலபோகத்தின் போது இப்பிராந்தியத்தில் பதிவு செய்யப்பட்ட மொத்த மழை வீழ்ச்சியான 1,558 mm நீண்ட கால சராசரி மழை வீழ்ச்சியுடன் ஒப்பிடும் போது 44% அதிகரிப்பாகும். ஒக்ரோபர், டிசம்பர், ஜனவரி ஆகிய மாதங்களில் சராசரி மழை வீழ்ச்சியை விட அதிகளவான மழை பெய்தமையே மேற்குறிப்பிட்ட அதிகரிப்பிற்கான காரணமாகும். டிசம்பர், ஜனவரி மாதங்களில் மொத்த மழை வீழ்ச்சியில் ஏற்பட்ட அதிகரிப்பு முறையே 200%, 170% ஆகும். இப்போகம் முழுவதிலும் நீர்ப் பற்றாக்குறைவு மிக அரிதாகவே ஏற்பட்டது.

நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் போது இப்பிராந்தியத்தில் சிறு போகத்தில் 17% அதிகளவான மழை பெய்தது. மார்ச், மே, ஜூன் மாதங்களில் மழை சிறப்பாகப் பெய்தமையால் இப்போகம் வெற்றிகரமான ஒன்றாகக் காணப்பட்டது. இவ்வாறானதொரு நிகழ்வு இப்பிராந்தியத்தில் அண்மைக் காலங்களில் ஏற்படவில்லை.

### மொனராகலை ($IL_{1c}$)

நாட்டின் ஈரமான பிரதேசங்களிற்கு முரணாக இப்பிராந்தியத்தில் நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் போது 2012 / 2013 கால போகத்தில் மொத்தப் பருவ கால மழை வீழ்ச்சி 5% குறைவாகவேக் காணப்பட்டது. செப்ரெம்பர் முதல் டிசம்பர் வரையான காலப் பகுதியில் வழமையை விட குறைந்தளவான மழை பெய்தமையே இதற்கான பிரதான காரணியாகும். எனினும் செப்ரெம்பரைத் தவிர போகத்தின் ஒவ்வொரு மாதத்திலும் அழுத்த ஆவி ஆவியுயிர்ப்பானது, மழை வீழ்ச்சியை விட அதிகளவிற் குறைந்தே காணப்பட்டது. இது மேட்டு நிலப் பயிர்ச்செய்கைக்கு சாதமான மண் ஈரப்பதனை உறுதி செய்தது.

2013 சிறு போகத்தில் பெய்த மொத்த மழை வீழ்ச்சியின் அளவு 571 mm ஆகும். இது அதன் நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் போது 8 வீத குறைவாகும். ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் குறைந்த மழை பெய்தமையே இக்குறைவிற்கான பிரதான காரணியாகும். வளி மண்டலத்தின் ஆவியுயிர்ப்புத் தேவையை விட அதிகளவு குறைவான மழையே ஜூன், ஜூலை மாதங்களில் பெய்தது.

## மத்திய நாட்டு இடை வலயம்

### குண்டசாலை (IM3a)

இப்பிராந்தியத்தின் நீண்ட கால சராசரியான 869 மி. மீ உடன் ஒப்பிடும் போது 2012 / 2013 காலபோகத்தின் போது மொத்த பருவகால மழை வீழ்ச்சியில் 83% அதிகரிப்புக் காணப்பட்டது. செப்ரெம்பரைத் தவிர போகத்தின் அனைத்து மாதங்களிலும் வழமையை விட அதிகளவான மழை பெய்தமையே இந்த சாதகமான இயல்புப் பிறிழ்விற்கான காரணமாகும். ஒக்ரோபர் மாதத்தில் மாத்திரம் 200 வீதம் அதிகளவான மழை பெய்தது.

சிறுபோகத்தின் மொத்த மழை வீழ்ச்சி 897 mm ஆகும். நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் போது இது 56% அதிகரிப்பாகும். இப்போகத்தில் ஏப்ரலில் மாத்திரமே சாதகமான இயல்புப் பிறழ்வு காணப்படவில்லை. மே, ஜூன் மாதங்களின் நீண்ட கால சராசரியான 81 mm, 72 mm உடன் ஒப்பிடும் போது முறையே 70%, 200% அதிகரிப்புக் காணப்பட்டது. எனினும் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் அழுத்த ஆவி ஆவியுயிர்ப்பு மொத்த மழைவீழ்ச்சியை விட அதிகளவானதாகக் காணப்பட்டது.

## மலை நாட்டு இடை வலயம்

### பண்டாரவளை ($IU_{3c}$)

மத்திய மலைநாட்டின் ஏனைய பாகங்களைப் போன்றே இப்பிராந்தியத்திலும் நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் போது 2012 / 2013 காலபோக மழைவீழ்ச்சியின் அளவில் 49% அதிகரிப்புக் காணப்பட்டது. பருவகால மழை வீழ்ச்சிப் பரம்பல் பாரம்பரிய விவசாய நடவடிக் கைகளிற்குச் சாதகமாகக் காணப்பட்டது. செப்ரெம்பரைத் தவிர்ந்த ஏனைய மாதங்களில் வழமையை விட அதிகளவான மழை பெய்தது. அழுத்த ஆவி ஆவியுயிர்ப்பு மழை வீழ்ச்சியை விடக் குறைவாகவேக் காணப்பட்டது. இப்போகத்தின் போது உயர் வெப்பநிலை $19^0c$ தொடக்கம் $29^0c$ வரையான வீச்சில் காணப்பட்டது.

2013 சிறுபோத்தின் மொத்த மழை வீழ்ச்சியானது அதன் நீண்ட கால சராசரியான 661 mm ஐ விட 8% குறைவாகவேக் காணப்பட்டது. மார்ச், ஏப்ரல் மாதங்களில் பருவங்களிற்கு இடைப்பட்ட

முதலாவது பருவப் பெயர்ச்சிக் காலத்தில் குறைந்தளவான மழை பெய்தமையே மேற்குறிப்பிட்ட எதிர் மறையான இயல்பு பிறழ்விற்கான காரணமாகும். எனினும் சம்பந்தப்பட்ட மாதங்களில் மொத்த ஆவியுயிர்ப்புப் பெறுமானம் அம்மாதங்களின் மொத்த மழை வீழ்ச்சியை விடக் குறைவாகவேக் காணப்பட்டது. இப்போகத்தின் போது உயர் வெப்பநிலை $22^0c$ தொடக்கம் $30^0c$ வரையான வீச்சில் காணப்பட்டது. இழிவு வெப்பநிலை $13^0c$ தொடக்கம் $20^0c$ வரையான வீச்சில் காணப்பட்டது.

## உலர் வலயம்

### மஹாஇலுப்பள்ளம ($DL_{1b}$)

$DL_{1b}$ விவசாயக் காலநிலை வலயத்தின் வட - மத்திய பாகத்தின் காலபோக மொத்த மழை வீழ்ச்சி 1,372 mm ஆகக் காணப்பட்டது. இது எதிர்பார்த்த அளவை விட 34 வீதம் அதிகமானதாகும். கால போகத்தில் செப்ரெம்பர், நவம்பர் மாதங்களைத் தவிர பெரும்பாலான ஏனைய அனைத்து மாதங்களிலும் சாதகமான இயல்புப் பிறழ்வு காணப்பட்டமையே இவ்வாறு மொத்த மழை வீழ்ச்சி அதிகரித்தமைக்கான பிரதான காரணியாகும். செப்ரெம்பரைத் தவிர போகத்தின் ஏனைய அனைத்து மாதங்களிலும் அழுத்த ஆவி ஆவியுயிர்ப்பு மாதாந்த மழை வீழ்ச்சியை விடக் குறைந்த அளவிலேயே காணப்பட்டது.

சிறு போகத்தின் நீண்ட கால சராசரியான 402 mm ஒப்பிடும் போது பருவ காலத்தின் மொத்த மழை வீழ்ச்சியில் 5 வீத குறைவு காணப்பட்டது. ஏப்ரல் முதல் ஜுன் வரையான காலப் பகுதியில் வழமையான மழையை விட குறைந்தளவில் மழை பெய்தமையே இதற்கான பிரதான காரணியாகும். மாதாந்த மொத்த அழுத்த ஆவி ஆவியுயிர்ப்புப் பெறுமானம், மழை வீழ்ச்சியை விட அதிகமானதாக ஏப்ரல் முதல் ஜுலை வரை காணப்பட்டது. எனவே மேலதிக நீர்ப்பாசனம் இல்லாது பயிரிடப்பட்ட மேட்டு நிலப் பயிர்கள் நீர்ப் பற்றாக்குறைவினால் பாதிக்கப்பட்டிருக்கும்.

### அங்குணகொலபெலஸ்ஸ ($DL_{1b}$)

உலர் வலயத்தின் ஏனைய பாகங்களைப் போலவே 2012/2013 கால போக மழையானது, $DL_{1b}$ விவசாயக் காலநிலை வலயத்தின் தென் பகுதியில் மொத்த பருவகால மழை வீழ்ச்சி அதன் நீண்ட கால சராசரியான 780 mm உடன் ஒப்பிடும் போது சுமார் 71 வீதம் அதிகமானதாகும். இந்த சாதகமான இயல்புப் பிறழ்விற்கான காரணம் போகத்தின் ஒவ்வொரு மாதத்திலும் வழமையை விட அதிகளவான மழை, சிறந்த முறையில் பரவலாகப் பெய்தமை ஆகும். இதேவேளை ஒவ்வொரு மாதத்திலும் திறண் அழுத்த ஆவி மொத்த ஆவியுயிர்ப்பு, மழை வீழ்ச்சியை விடக் குறைவாகவேக் காணப்பட்டது. இது மானாவாரி மேட்டு நிலங்களிற் கூட எவ்விதமான தகைப்பும் இல்லாத பயிர்ச்செய்கையை உறுதி செய்யக் கூடியதாயிருந்தது.

இப்பிராந்தியத்தில் சிறு போகத்தின் மொத்த மழை வீழ்ச்சியானது நீண்ட கால சராசரியான 480 mm இற்கு ஏறத்தாழ சமனானதாக இருந்தது. பாரம்பரியமாகவே உலர் மாதமாகக் காணப்படும் ஆகஸ்டில் வழமையை விடக் குறைவான மழை பெய்தமையால் மிகக் குறைவான ஏறத்தாழ 6 வீதம் குறைவாகக் காணப்பட்டது. மார்ச், மே ஆகிய மாதங்களைத் தவிர அழுத்த ஆவி ஆவியுயிர்ப்பு இப்போகத்தில் ஒவ்வொரு மாதத்திலும் பெறப்பட்ட மொத்த மழை வீழ்ச்சியை விடக் குறைவாகவேக் காணப்பட்டது. இதனால் மானாவாரி மேட்டு நிலப் பயிர்களிற்கு மேலதிக நீர்ப்பாசனம் செய்யாத வேளையில் அவற்றின் வளர்ச்சிப் பருவத்தின் போது மண் ஈரப்பதன் பற்றாக் குறைவினால் பாதிக்கப்பட்டன.

### அரலகன்விலை ($DL_{2b}$)

உலர் வலயத்தின் கிழக்குப் பிராந்தியம் 2012 / 2013 கால போகத்தின் போது குறிப்பிட்டுச் சொல்லக் கூடியளவு அதிக மழையைப் பெற்றுக்

கொண்டது. இப்போகத்தின் மொத்த மழை வீழ்ச்சி 2,334 mm ஆகும். இது நீண்ட கால சராசரி மழை வீழ்ச்சியுடன் ஒப்பிடும் போது 48% சாதகமான இயல்புப் பிறழ்வாகும். இதற்கான பிரதான காரணம் செப்ரெம்பர், நவம்பர் மாதங்களைத் தவிர போகத்தின் ஒவ்வொரு மாதத்திலும் வழமையை விட அதிகளவான மழை பெய்தமையே ஆகும். செப்ரெம்பரைத் தவிர இப்போகத்தின் ஒவ்வொரு மாதத்திலும் வளிமண்டலத்தின் ஆவியுயிர்ப்புத் தேவை மொத்த மழை வீழ்ச்சியை விடக் குறைவாகவேக் காணப்பட்டது. எனவே மேட்டு நிலங்களில் செய்கைபண்ணிய பயிர்களில் மண் ஈரப்பதன் பற்றாக்குறைவு அரிதாகவே ஏற்பட்டது.

பொதுவாக இப்பிராந்தியத்தில் சிறுபோகம் ஓரளவு உலர்வாகவேக் காணப்படுவதோடு, இதன் நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் போது பருவ கால மொத்த மழை வீழ்ச்சியில் சுமார் 10% குறைவு காணப்பட்டது. ஜுன் மாதத்தில் இப்பிராந்தியத்தில் மழை பெய்யவில்லை. இது சிறுபோகத்திற்குரிய ஒரு பண்பாகும். இப்பிராந்தியத்தில் பொதுவாக சிறுபோகம் காணப்படுவதில்லை. இது தற்போதைய சிறுபோகத்திற்கும் பொருத்தம் ஆகும்.

## வீரவிலை (DL$_5$)

காலபோகத்தின் போது பதிவு செய்யப்பட்ட மொத்த பருவ கால மழை வீழ்ச்சி 1,232 mm ஆகும். இது இதன் நீண்ட கால சராசரியான 815 mm உடன் ஒப்பிடும் போது சுமார் 50% அதிகரிப்பாகும். நவம்பரைத் தவிர ஏனைய அனைத்து மாதங்களிலும் மழை வீழ்ச்சியானது சிறப்பாகப் பரந்து காணப்பட்டது. மேலும் இப்போகத்தின் மொத்த அழுத்த ஆவி ஆவியுயிர்ப்பானது, பருவத்தின் குறிப்பிட்ட மாதங்களின் மொத்த மழை வீழ்ச்சியை விட அதிகளவிற் குறைந்ததாகவேக் காணப்பட்டது. இதன் பயனாக மேட்டு நிலப் பயிர்கள் நீர்ப் பற்றாக்குறைவினால் பாதிக்கப்படாதிருப்பதை உறுதி செய்யக் கூடியதாயிருந்தது.

சிறுபோகத்தில் மொத்த மழை வீழ்ச்சி 392 mm ஆகும். இது அதன் நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் போது 22% அதிகரிப்பாகும். ஏப்ரலைத் தவிர ஏனைய ஒவ்வொரு மாதத்திலும் வழமையை விட அதிகளவான மழையைப் பெற்றுக் கொண்டாலும், 100 mm அல்லது அதனை விட அதிகளவான மழை பதிவு செய்யப்படவில்லை. இதுவே ஈர மாதமாக வகைப்படுத்துவதற்கான எல்லைப் பெறுமானம் ஆகும். மார்ச், மே ஆகியவற்றைத் தவிர போகத்தின் ஒவ்வொரு மாதத்திலும் ஆவியுயிர்ப்பானது, மொத்த மழை வீழ்ச்சியை விட அதிகளவானதாகக் காணப்பட்டது. போகம் முழுவதிலும் செறிவான கதிர் வீச்சு, அதிக வேகமான காற்று ஆகியவற்றுடன் உயர் வெப்பநிலை வீச்சு நிலவியது. மேலும் நாட்டின் உலர் பாகமாகக் காணப்படுவதனால், இப்பிராந்தியத்திற்கு வருடத்தின் இக்காலப் பகுதியில் இது ஒரு விதிவிலக்கான காலநிலை அல்ல

**அட்டவணை 5.1: 2012 / 2013 காலபோகம், 2013 சிறுபோகம் ஆகியவற்றின் மொத்த மழைவீழ்ச்சி (mm)**

| விவசாய வானிலை நிலையம் | விவசாய சூழலியல் வலயம் | காலபோகம் 2011/2012 செப். - பெப். | கால போகம் பத்து வருட சராசரி (2002-2011) | சிறு போகம் 2012 மார். - ஆக. | சிறு போகம் பத்து வருட சராசரி (2002-2011) |
|---|---|---|---|---|---|
| போம்புவளை | $WL_{1b}$ | 1722.0 | 1510.2 | 1433.5 | 1569.3 |
| பேராதனை | $WM_{2b}$ | 1847.9 | 1025.4 | 1341.0 | 978.0 |
| சீத்தா எலிய | $WU_3$ | 1589.9 | 1121.8 | 1278.9 | 778.3 |
| பத்தலகொடை | $IL_{1a}$ | 1558.5 | 1080.9 | 883.0 | 753.3 |
| மாக்கந்துறை | $IL_{1a}$ | 1412.9 | 1086.1 | 1158.6 | 966.8 |
| மொனராகலை | $IL_{1c}$ | 1280.0 | 1343.7 | 570.8 | 623.4 |
| குண்டசாலை | $IM_{3a}$ | 1590.5 | 869.3 | 897.4 | 574.1 |
| பண்டாரவளை | $IU_{3c}$ | 1623.1 | 1087.7 | 612.4 | 661.0 |
| மஹாஇலுப்பள்ளம | $DL_{1b}$ | 1371.7 | 1026.3 | 381.8 | 401.8 |
| அங்குணகொலபெலஸ்ஸ | $DL_{1b}$ | 1335.1 | 780.0 | 455.7 | 487.8 |
| அரலகன்விலை | $DL_{2b}$ | 2333.4 | 1572.2 | 383.3 | 420.1 |
| வீரவிலை | $DL_5$ | 1232.0 | 815.2 | 392.5 | 322.0 |

### அட்டவணை 5.2: மாதாந்த மொத்த மழை வீழ்ச்சி 2012 / 2013 (mm)

| விவசாய வானிலை நிலையம் | 2012 | | | 2013 | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | செப் | ஒக் | நவ | டிச | ஜன | பெப் | மார் | ஏப் | மே | ஜீன் | ஜீலை | ஆக |
| போம்புவளை | 427.9 | 528.7 | 325.5 | 217.9 | 36.5 | 185.5 | 211.6 | 155.6 | 467.8 | 302.9 | 231.1 | 64.5 |
| பேராதனை | 21.8 | 764.5 | 269.7 | 381.1 | 254.6 | 156.2 | 165.5 | 287.4 | 200.8 | 347.3 | 165.9 | 174.1 |
| சீத்தா எலிய | 68.2 | 440.9 | 271.2 | 391.0 | 235.7 | 182.9 | 162.0 | 170.1 | 171.9 | 378.7 | 233.7 | 162.5 |
| பத்தலகொடை | 21.6 | 410.1 | 249.0 | 545.8 | 235.7 | 96.3 | 148.8 | 138.6 | 321.0 | 154.5 | 72.7 | 47.4 |
| மாக்கந்துறை | 60.3 | 698.5 | 240.7 | 268.2 | 76.3 | 68.9 | 220.7 | 95.1 | 335.1 | 338.4 | 77.6 | 91.7 |
| மொனராகலை | 80.0 | 247.1 | 332.9 | 221.7 | 277.6 | 120.7 | 130.6 | 176.3 | 95.1 | 7.4 | 43.3 | 118.1 |
| குண்டசாலை | 22.4 | 563.6 | 262.9 | 375.5 | 267.4 | 98.7 | 132.3 | 163.5 | 137.7 | 214.3 | 78.6 | 171.0 |
| பண்டாரவளை | 79.7 | 470.8 | 314.5 | 321.8 | 261.6 | 174.7 | 102.3 | 182.6 | 135.3 | 54.9 | 70.8 | 66.5 |
| மஹாஇலுப்பள்ளம | 14.7 | 551.9 | 162.3 | 373.1 | 188.7 | 81.0 | 165.0 | 36.4 | 30.0 | 9.1 | 32.2 | 109.1 |
| அங்குணகொலபெலஸ்ஸ | 99.3 | 315.7 | 369.1 | 254.7 | 164.2 | 132.1 | 112.2 | 87.2 | 146.6 | 64.5 | 41.3 | 3.9 |
| அரலகன்விலை | 13.2 | 532.5 | 325.2 | 742.7 | 501.2 | 218.6 | 142.2 | 38.8 | 101.9 | 0.0 | 64.2 | 36.2 |
| வீரவிலை | 47.6 | 326.7 | 241.8 | 371.2 | 129.2 | 115.5 | 82.5 | 22.5 | 181.0 | 37.9 | 25.5 | 43.1 |

**அட்டவணை 5.3: மாதாந்த சராசரி மழை வீழ்ச்சி (mm) இல் (2002 – 2011)**

| விவசாய வானிலை நிலையம் | மாதம் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | செப் | ஒக் | நவ | டிச | ஜன | பெப் | மார் | ஏப் | மே | ஜீன் | ஜீலை | ஆக |
| போம்புவளை | 267.9 | 450.4 | 389.8 | 206.2 | 98.5 | 83.8 | 167.8 | 297.1 | 436.3 | 269.9 | 194.8 | 203.3 |
| பேராதனை | 127.0 | 255.5 | 308.1 | 172.4 | 96.1 | 61.5 | 167.5 | 292.9 | 124.0 | 142.8 | 137.1 | 113.8 |
| சீத்தா எலிய | 125.1 | 252.0 | 280.9 | 216.9 | 178.7 | 62.6 | 130.1 | 169.9 | 153.5 | 123.5 | 107.2 | 94.1 |
| பத்தலகொடை | 107.9 | 327.1 | 313.6 | 179.3 | 88.4 | 57.4 | 136.1 | 258.6 | 113.3 | 94.1 | 77.7 | 73.6 |
| மாக்கந்துறை | 159.5 | 388.0 | 299.5 | 113.4 | 64.6 | 49.6 | 152.6 | 235.6 | 220.2 | 172.7 | 92.1 | 93.7 |
| மொனராகலை | 114.4 | 310.3 | 395.4 | 269.5 | 180.5 | 79.6 | 116.5 | 257.9 | 106.7 | 23.1 | 41.4 | 77.9 |
| குண்டசாலை | 75.9 | 182.5 | 249.7 | 177.6 | 107.7 | 72.0 | 117.5 | 178.6 | 80.7 | 72.2 | 58.1 | 66.9 |
| பண்டாரவளை | 110.9 | 289.6 | 288.2 | 202.0 | 127.7 | 67.2 | 150.6 | 221.6 | 135.0 | 47.9 | 46.3 | 59.6 |
| மஹாஇலுப்பள்ளம | 91.4 | 269.0 | 295.6 | 189.7 | 104.5 | 70.6 | 101.5 | 182.9 | 57.9 | 10.6 | 21.2 | 27.7 |
| அங்குணகொலபெலஸ்ஸ | 89.1 | 152.2 | 251.4 | 153.0 | 79.1 | 45.3 | 103.0 | 120.7 | 102.3 | 47.1 | 47.9 | 66.8 |
| அரலகன்விலை | 53.9 | 274.7 | 405.0 | 409.5 | 289.6 | 151.0 | 97.8 | 136.3 | 73.4 | 20.4 | 33.3 | 59.1 |
| வீரவிலை | 41.6 | 162.0 | 289.5 | 174.1 | 95.3 | 48.3 | 75.3 | 131.9 | 50.0 | 13.1 | 17.0 | 34.6 |

**அட்டவணை 5.4: மாதாந்த அழுத்த ஆவி ஆவியுயிர்ப்பு (mm) ~ 2012/13**

| விவசாய வானிலை நிலையம் | 2012 | | | | 2013 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | செப் | ஒக் | நவ | டிச | ஜன | பெப் | மார் | ஏப் | மே | ஜூன் | ஜூலை | ஆக |
| போம்புவளை | 76.8 | 79.4 | 74.4 | 64.5 | 71.9 | 73.9 | 84.3 | 88.8 | 76.9 | 69.6 | 71.9 | 69.4 |
| பேராதனை | 76.8 | 76.9 | 52.8 | 62.0 | 81.8 | 73.9 | 79.4 | 81.6 | 69.4 | 55.2 | 57.0 | 71.9 |
| சீத்தா எலிய | 52.8 | 37.2 | 36.0 | 52.1 | 52.1 | 42.6 | 62.0 | 64.8 | 32.2 | 14.4 | 24.8 | 54.6 |
